புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-௵ ஜூலை ௴ 31௳ [ந. 157

பிரஸங்கம் CLVII.

முஸோலினியின் வெளியேற்றம்.

சரணடைவதா, அல்லது அழிந்து விடுவதா, என்பதை இதாலி யோஜித்து முடிவு செய்யவேண்டும்.

இதாலிய புதிய அரசாங்கத்துக்கு மிஸ்ட்டர் சர்ச்சில் எச்சரிக்கை.

நாசத்தை உண்டாக்கும் இந்த யுத்தத்தில் முக்கிய குற்றவாளிகளாக உள்ள ஒருவரது வீழ்ச்சியைப் பற்றிய தகவலைகேட்டு சபையோர் திருப்தியடைந்திருப்பர். முஸோலினி நெடுங்காலம் இதாலிய மக்கள் மீது கடுமையான முறையில் ஆட்சிசெய்து வந்தார். அவரது ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது. இது இதாலியின் வாழ்க்கையில் ஒரு சகாப்த முடிவைக் காட்டுகிறது என்பதற்கு ஐயமில்லை. பாஸிஸ்ட் முறையின் மூலாதார புருஷர் விழுந்து விட்டார்.

நான் ஜோஸியம்கூற முயலவில்லை. ஆனால் இதற்குள்ளாக பாஸிஸ்ட் முறை என்ற கட்டடம் விழுந்திராவிட்டாலும அது அடியோடு விழுந்து தரைமட்டமாவது அசாத்திய மில்லை என்று தோன்றுகிறது.

ஜனங்களின் தற்காப்பு.

ஒரு கட்சியின் சர்வாதிகார ஆட்சி முறை ரகசியப் போலீஸ் உதவியைக்கொண்டு நடைபெறுகிறது. அது எல்லாப்பதவிகளையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கிறது. மாஜிஸ்திரேட்டுகளும், கோர்ட்டுகளும் நிர்வாகிகளது ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். அக்கம் பக்கத்து வீட்டாரே ஸர்க்காருக்கு துப்புக்கூறுகிறவர்களாக இருந்து வருகின்றனர். இத்தகைய ஆட்சிமுறை நெடுங்காலம் நீடித்து அமுலில் இருந்தால் பாமர ஜனங்களுக்கு தங்களது தேசத்தின் கதி நிர்ணயத்தில், எவ்வித பங்குமில்லாமல் போகின்றது. அதிகாரவர்க்கத்தினருடன் கலந்திருந்தாலொழிய அவர்களுக்குச் சுயேச்சையான அந்தஸ்து எதுவுமில்லாமல் போகிறது. இதாலிய மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள இந்த ஒரு சாக்கைத்தான் சொல்லாமென்றுதான் நினைக்கிறேன். ஆனால், தனது சுயேச்சையையும் இயற்கை உரிமைகளையும் கை நழுவவிடும் எந்த மக்களுக்கும் இது நியாயமான பாதுகாப்பாகாது.

இவ்வளவு காலமாக இதாலிய மக்களைப் பிடித்துக்கொண்டிருந்த பிரமையை யுத்த அதிர்ச்சி போக்கிவிட்டது. 20 வருஷ காலமாக இதாலிய மக்கள் சரீரம் மட்டுமின்றி அவர்கள் மனமும் அடிமைப்பட்டிருந்தது.

இதனால் நாம் இதாலியில் பெரும் மாறுதல்கள் ஏற்படுமென்று நியாயமாக எதிர் பார்க்கலாம். இந்த மாறுதல்கள் எந்த ஸ்வரூபங்கொள்ளுமென்பதையாவது அல்லது இதாலியிலுள்ள ஜெர்மன் படைகளை அது எப்படி பாதித்துக் கட்டுப்படுத்துமென்பதைடாவது இதற்குள் முன்னறிந்து கூறமுடியாது.

இதாலிக்குப் பெரும் நஷ்டம்.

முஸோலினியின் தவறுலும், குற்றத்தாலும் இதாலிய மக்களுக்குப் பெரும் கஷ்டநஷ்டமேற்பட்டிருக்கிறது. 1940 வருஷம் மே மாதத்தில் வீழ்ந்துகொண்டிருந்த பிரான்ஸை முதுகில் கத்தியால் குத்துவதும் அழிந்து நாசமுற்று வருவதாக முஸோலினியால் உண்மையாகவே நம்பப்பட்ட பிரிடனுக்குச் சொந்தமான மத்தியதரைக்கடல பிரதேசங்களைப் பறித்துக்கொள்ள முன்னேறுவதும் மிக்க சுலபமானதாகவும், பத்திரமானதாகவும் தோன்றியது. இதேமாதிரி சிறிய கிரீஸ் ராஜ்யத்தின்மீது விழுந்து அதனைப் பிடித்துக்கொள்ளுவது சுலபமும், பத்திரமும் வாய்ந்த காரியமாகத் தோன்றியது.

ஆனால் யுத்தப்போக்கு மாறுதலடைந்து விட்டது.

பிரிடிஷ், அமெரிக்கப்படைகள் பல கஷ்டங்களைக் கடந்து வட ஆபிரிக்காவிலுள்ள இதாலியின் ஆபிரிக்க சாம்ராஜ்யத்தை வசப்படுத்திக்கொண்டுவிட்டன. அவை ஸிஸிலியில் பெரும்பாகத்தை வசப்படுத்திக்கொண்டுவிட்டன. அவை தற்போது ஏராளமான விமானப்படை பலத்துடனும், நீரிலும், நிலத்திலும், நூதனஆயுத சாதனங்களுடன் செய்யக்கூடியஎண்ணிருந்த படைகளுடனும் இதாலிக்குள் புகுவதற்கு அதன் வாயலில் நின்றுகொண்டிருக்கின்றன.

இந்தச் சிறந்த படைகள் இதாலிக்கு என்ன அளிக்கக்கூடியவை? இதாலிய மக்கள் விரும்பினால் இவை அவர்களை யுத்தக் கஷ்டங்களிலிருந்தும் அடிமைத் தனத்திலிருந்தும் விடுவிக்கும். சொற்ப இடைகாலத்திற்குப் பிறகு இதாலிக்கு மீட்கப்பட்ட புதிய ஐரோப்பாவில் ஒரு கௌரவமான ஸ்தானமிருக்கும்படி செய்யும். பாலர்மோ என்ற நேர்த்தியான நகரின் தெருக்களில் யுனைடெட் ஸ்டேட்ஸ் துருப்புகள் நுழைந்தபோது நிகழ்ந்த காட்சிகளை நான் அறிந்து எனக்கு வரும் விவரவான தகவல்களைப் பரிசீலித்தபோது ஜெர்மன் ஆதிக்கத்திலிருந்துவிடுதலையடைவதும், முற்றிலும் வீணான நாசங்களுக்குள்ளாகாமல் தப்பிக்கொள்ளுவதும், பழைய ஜனநாயக, பார்லிமெண்டரி ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொள்ளுவதுமே இதாலிய மக்களது முக்கியமான விருப்பமென்பது எனக்குச் சந்தேகமற விளங்கியது.

இந்த விருப்பங்களில் அவர்கள் சித்தி பெறலாம். இவற்றைப் பெறுவதா, இல்லையா என்பதை முடிவுசெய்ய வேண்டியவர்கள் அவர்களே யாவார்கள்.

பர்த்தி வழி என்ன.

இவ்வழியில்லாவிட்டால் அவர்கள் பின்பற்றக்கூடிய பர்த்திவழி வேறென்ன இருக்கிறது? ஜெர்மானியர் இதாலியைப் போர்க்களமாக்கவும், இதாலியரின் கஷ்டங்களின் மூலம் ஜெர்மனியிலிருந்து யுத்தத்தையும் அதனால் ஏற்படும் கஷ்டங்களையும் எவ்வளவு காலத்திற்குத் தள்ளிவிட முடியுமோ அவ்வளவு காலம் தள்ளிவிடவும் விரும்புகின்றனர். இது அவர்களது இயற்கையான விருப்பமாம்.

ஜெர்மானியர் இஷ்டப்படி நடக்குமாறு விட்டுவிடுவதென்று இதாலிய ஸர்க்காரும் மக்களும் முடிவு செய்தால் நமக்கு வேறெதுவும் செய்ய வழியில்லாமல்போகிறது. அப்போது நாம் இதாலி மீது சகல திக்குகளிலிருந்தும் விடாமல் போர் நடத்துவோம் (கரகோஷம்).

அதாவது வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், கடலிலிருந்தும், ஆகாயத்திலிருந்தும் தீவிரமாகப் போர் புரிவோம். நீரிலும், நிலத்திலும் சென்று போர் புரியக்கூடிய படைகளை இறக்கி கடுமையாகத் தாக்க முயலுவோம்.

இம்மாதிரி செய்யும்படி நேசதேசத்தலைவர்களுக்கெல்லாம் ஆக்ஞை பிறப்பித்திருக்கிறோம். (கரகோஷம்).

இனியும் ஜெர்மன் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்து வருவதென்று இதாலிய ஸர்க்காரும், இதாலிய மக்களும் முடிவுசெய்தால் அது யுத்தப் போக்கை வெகுவாக பாதிக்காது. அது யுத்தத்தின் இறுதியான முடிவையும் எவ்விதத்திலும் மாற்றாது. இதனால் ஒரே ஒரு பலனே ஏற்படும். அதென்னவெனில் அடுத்த சில மாதங்களில் இதாலி கடுமையாகத் தாக்கி அழிக்கப்படும்.

எனக்குப் புதிய இதாலிய ஸர்க்காரைப்பற்றி எதுவும் தெரியாது. அதுபற்றி நான் அபிப்பிராய மெதுவும் தெரிவிக்கமாட்டேன். ஆனால் இதாலிய மக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் மிக்க முக்கியமான முடிவைச் செய்யவேண்டியவர்களாக இருப்பது வெளிப்படை.

ஈவிரக்கமற்ற யுத்தம் நடைபெறுகையிலேயே இதாலிய மக்கள் இந்த முடிவைச்செய்ய வேண்டுமென்பதில் நான் ஆவலுள்ளவனாக இருக்கிறேன் (கரகோஷம்). இவர்கள் முடிவுக்கு வரச் சிறிது காலமாகும். இதற்கு இடைக்கால கட்டங்கள் பல ஏற்படக்கூடும். ஒரு தேசத்தின் அரசாங்கத்தின் தன்மையிலும் மனப்போக்கிலும் பெரும் மாறுதல் ஏற்படுகையில் அடுத்தடுத்துப் பல மாறுதல்கள் ஏற்படுவது அனுபவத்தில் கண்டறிந்த விஷயமாகும்.

இதாலிய கவர்ன்மெண்டார் இதுவரை எங்களை அணுகவில்லை. இதனால் நாங்கள் இதாலி நெடுகவுள்ள ராணுவ முக்கியம் வாய்ந்த இடங்களை எவ்வளவு பலமாகத் தாக்க முடியுமோ, அவ்வளவு பலமாகத் தாக்கவேண்டுமென்பதற்காகச் செய்த முடிவுகளைத் தவிர வேறு புதிய முடிவு எதையும் செய்யவேண்டிய அவசியமேற்படவில்லை (கரகோஷம்).

ஆனால் நான் எச்சரிக்கையாக ஒரு வார்த்தை கூறவேண்டும். இதாலியில் என்ன நடக்கப்போகிறதென்பது எங்களுக்குத் தெரியாது. முஸோலினி போய்விட்ட படியாலும், பாஸிஸ்டு அதிகாரம் மீண்டும் தலைதூக்க முடியாதபடி முறிக்கப்பட்டுவிட்டதாலும் இதாலிய மக்களுடன் பொதுமுடிவைச் செய்வதற்கான வழியில்லாமல் செய்துகொள்வது முட்டாள்தனமாக இருக்கும். இதாலியில் வெண்ணெய் திரண்டு வரும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

தவிர்க்கப்படவேண்டிய நிலைமை.

இதாலிய அரசாங்கமும், அதன் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும் சாதனங்களும் குலைந்து போகும்படியான முறையில் மீட்கப்போகும் பிரிடிஷ், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸர்க்கார்கள் நடப்பது பெரிய தவறாக இருக்கும்.

நாம் இதாலியில் குழப்பத்தையும், அராஜகத்தையும் உண்டாக்கிப் பேச அதிகாரிகள் எவருமே இல்லாதபடி செய்ய முயலவில்லை.

அவ்வாறு செய்தால் நாம் இதாலி முழுவதையும் ஒவ்வொரு மைலாகப் பிடித்து வசப்படுத்திக்கொள்ள வேண்டிய பாரம் நமது படைகளுக்கு ஏற்படுமாறு செய்வோம். நமது துருப்புகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு படையாக சரண்புகும்படி செய்ய நேரிடும். நமக்கு ஏராளமாகப் படைகளை நிறுத்தி இதாலியைப் பாதுகாத்து நிர்வகிக்கும் பெரும்வேலை ஏற்படும். இதற்காக ஏராளமாக நமது சக்தியையும் காலத்தையும் செலவிடவேண்டியிருக்கும்.

ஜெர்மானியர் செய்த தவறை நாம் செய்யக்கூடாது. ஜெர்மானியர் பல நாடுகளில், ஏராளமான மக்களை அடக்கிவைத்து இக்கஷ்ட காலத்தில் அவர்களது போஷிப்புக்கும், க்ஷேமத்திற்கும் தங்களை ஜவாப்தாரியாகச் செய்துகொண்டிருக்கின்றனர். அம்மாதிரியான முறையைக் கையாண்டால் நாம் இதாலிய மக்களுக்குள் விடுதலை உணர்ச்சியை உண்டாக்காமல் நம்மிடமும், நமது வேலைகளிடமும் அதிருப்தி ஏற்படும்படி செய்தவர்களாவோம். இதாலி விஷயத்தில் கொலைஞர் படைகளுக்கும், பந்தோபஸ்து முகாம்களுக்கும் அடிகோலும் வழியில் செல்ல விரும்பவில்லை. தங்களைத் தாங்களே தாங்கிக்கொள்ளவேண்டிய ஏராளமான மக்களை நமது தோள்களில் தாங்கிச்செல்ல நான் விரும்பவில்லை.

இதாலியர்கள் யோசனை செய்யட்டும்.

இதாலியரை சிறிது காலம் உழலுமாறு சும்மா விட்டுவிட்டு அவர்களது கஷ்டங்களை நமது முக்கிய விரோதியான ஜெர்மனியுடன் நாம் நடத்தும் போருக்காகக் கேட்டும் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களைப் பெறும்வரையில் பெருக்கிக் கொண்டே போகவேண்டும். இதுதான் நான் ஏகாதிபத்தியத்திற்கும் நேசநாட்டினருக்குக் கூறும் யோசனையாகும். ஜெர்மனியே நமது பிரதான விரோதி, இதாலி நமது பிரதான நிரபராதியல்ல.

இதாலியின் நலத்தையும் நேசதேசங்களது நலத்தையும் உத்தேசித்து இதாலி துண்டு துண்டாகச் சரணடையும்படி விடாமல் பூரணமாக நிபந்தனையின்றி சரணடையும்படி செய்யப்படவேண்டும் (கரகோஷம்). இவ்வாறு செய்ய முடியுமா, முடியாதா என்பதை நான் சொல்ல முடியாது. ஆனால் என்னென்ன சக்திகள் வேலை செய்கின்றன என்பதை அறியாத இந்நாட்டு மக்களும் சரி, மற்றவர்களும் சரி, நமது ராணுவத்தின் வேலையையும் சேதங்களையும் அதிகப்படுத்தி உலகின் துன்பங்களை நீடிக்கக்கூடிய காரியம் எதையும் சொல்லாமலும், எழுதாமலும் அடக்கமாக இருக்கவேண்டும்.

யுத்தத்தில் இதாலியின் ஸ்திதி என்ன? இதாலியின் சக்தி ஜெர்மனியின் சக்தியில் ஒரு பங்குதான்.

ஜெர்மன் அக்கிரமம் எல்லாப் பக்கங்களிலும் தாக்கப்பட்டு வருகிறது.

ருஷ்யாவில் நாம் இதுவரை நிலத்தில் கண்டிராத பெரிய போர்கள் ருஷ்யாவில் நடைபெறுகின்றன. ஜூலையில் ஜெர்மன் ராணுவத்திற்குச் சேதம் அதிகம். அதிகமான விமானங்கள் ஜெர்மன் நகரங்களை விடாமல் தகர்க்கின்றன. அடிமைப்பட்ட நாடுகளில் எல்லாம் (ஜெர்மனிக்கு விரோதமாக) கலகம் கிளம்புகிறது.

நார்வே முதல், கிரீட் வரை கொடுமைகள் படுகொலைகள் பழிச்செயல்கள் மூலம் ஜெர்மன் ஆட்சி பராமரிக்கப்படுகிறது. ஜெர்மனி ஸப்மரீன்கள் மூலம் யுத்தப்போக்கை மாற்ற முடியுமென நம்பியது. ஆனால் அந்த நம்பிக்கை அதன் ஸப்மரீன்களைப்போல் துரிதமாக மூழ்கிவருகிறது (சிரிப்பும், கரகோஷமும்.) இதாலிய நிகழ்ச்சிகளால் நாஸி கக்ஷியின் மனோபாவம் நாஸிகளின் ஸர்க்காரின் மனோபாவமும் கலக்க முறும். முதலாவது சர்வாதிகாரியின் அழிவு பாக்கியுள்ள சர்வாதிகாரிகளுக்கு நேரவிருக்கும் அழிவைகாட்டும் சூசகமேயாகும்.

வருங்காலத்தில் மகத்தான முயற்சிகள் செய்யவேண்டும்.

இன்னும் ஜெர்மன் பலம் பிரமாதமாக இருக்கிறது. 3 ருஷ்யத் தாக்குதல்களால் படு சேதப்படுத்தப்பட்டபோதிலும் ஜெர்மன் படைகள் குலையாமல் அப்படியே இருக்கின்றன.

ஆகிலும், நமக்குக் கிடைத்திருக்கும் அல்பமான வெற்றிகளைக்கண்டு நாம் அதிகமாக நம்பிக்கையை அடைந்து நமக்கு முன்னுலுள்ள மகத்தான காரியங்களை மறந்துவிடக்கூடாது. நாம் ஏராளமான முயற்சிகளைச் செய்யவேண்டும். கஷ்ட நிஷ்டூரங்களையும், வறுமையையும் அனுபவித்து முன்வரவேண்டும்.

ஹிட்லரிடம் மட்டும் அவர் சொற்படி நடக்கக்கூடிய 300 டிவிஷன்படை இருக்கிறது. இதல்லாமல் அவரைச் சேர்ந்த நாட்டுப்படைகளிருக்கின்றன.

ஹிட்லரது படைகளில் முக்கால் பாகமுள்ளவை துரிதமாக இயங்கக்கூடியவை. அவற்றில் பெரும்பாலர் நாம் ஆயுத சாதனமுள்ளவை. ஸிஸிலியில் தற்சமயம் இவற்றில் சிலவற்றுடன் போராடுகிறோம். அவைப் பாதுகாப்புக்கு ஏற்றவிடங்களில் எவ்வளவு பிடிவாதமாக எதிர்க்கின்றன என்பது தெரிகிறது.

ஜெர்மன் மத்திய ஸர்க்கார், ஜெர்மன் வாழ்க்கையை சகல அம்சங்களிலும் கட்டுப்பாடு செய்து வருகின்றனர். 12 தேசங்களது பலத்தை ஜெர்மனி சுரண்டிக்கொள்ள முடியும். அவர்களுக்கு நல்ல விளைச்சலும் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. ஐரோப்பாவை அடக்கி வைத்திருக்கும் இந்த நாஸி யுத்த யந்திரத்தை நாம் பூரணமாக அழிக்கத் தீர்மானித்திருக்கிறோம். அந்நோக்கத்துடன் இதாலிய விவகாரங்களைக் கவனித்து நடத்தவேண்டும்.

நிகழ்ச்சிகளால் நமது முறையும், தந்திரமும் சரியானவை என்று நிரூபனமாகியிருக்கிறது. வரும் சில மாதங்கள் இதனை இன்னும் நன்கு ருஜுப்பிக்கும் என்பதை சபையோருக்கு விளக்கிக்காட்டும் தருணத்தை எதிர் பார்க்கிறேன். தீர்க்காலோசனையுடன் தவறுகளை நாம் தவிர்க்கவேண்டும். சரிவர நடவடிக்கைகளை நடத்தாமல் நமது காரியத்தை நாம் கெடுத்துக் கொள்ளக்கூடாது. நமது லக்ஷியத்தை அடைய நாம் விடாமுயற்சி செய்வோமாக.

ஜெர்மன் முன்னேற்றம் குலைந்துவிட்டது.

ஸ்டாலின் விடுத்த செய்தி, ஜூலை, 24.

நேற்றையதினம் ஓரலுக்குத் தெற்கிலிருந்தும், பெயலோகிராடுக்கு வடக்கிலிருந்தும் குர்ஸ்க்கை நோக்கி ஜெர்மானியர்கள் இந்த மாதத்தில் முன்னேறித் தாக்குதல் செய்ததை நமது துருப்புகள் வெற்றிகரமாகக் குலைத்துவிட்டார்கள். ஜூலை மாதம் 7-ம் தேதி காலையில் ஜெர்மானியர்கள் ஏராளமான டாங்கிகளுடனும், காலாட் படையுடனும், விமானப்படைகளுடனும் ஓரல்-குர்ஸ்கு பிரதேசத்திலும், பெயலோகிராட்க் குர்ஸ்க் பிரதேசத்திலும் தாக்க ஆரம்பித்தார்கள். ஓரல்-குர்ஸ்க் பகுதியில் ஜெர்மானியர்கள் 7 டாங்கி டிவிஷன்களையும், 2 கவசம்பூண்ட மோட்டார் படைகளையும், 11 காலாட்படை டிவிஷன்களையும் உபயோகித்தார்கள். பெயலோகிராட்-குர்ஸ்க் பகுதியில் 10 டாங்கு டிவிஷன்களையும், ஒரு மோட்டார் படையையும் 7 காலாட்படை டிவிஷன்களையும் ஈடுபடுத்தினார்கள். மொத்தமாக 17 டாங்கி டிவிஷன்களும், 3 கவசம்பூண்ட மோட்டார் படைகளும், 18 ஜெர்மன் காலாட்படை டிவிஷன்களும் நம்மைத் தாக்க ஆரம்பித்தன.

போர்முனையின் குறுகலான பிரதேசத்தில் இவைகளை ஒன்று சேர்த்து, வடக்கேயிருந்தும், தெற்கேயிருந்தும், குர்ஸ்க்கை நோக்கி பலமான தாக்குதல்செய்து, நமது அரண்களைப் பிளந்து, குர்ஸ்க் முன்னணி பிரதேசத்திலுள்ள நம்முடைய துருப்புகளை நிர்மூலமாக்கிவிடுவதென்று ஜெர்மனி திட்டம் போட்டிருந்தது.

ஜெர்மன் முன்னேற்ற வேகத்தைத் தடுக்க நமது துருப்புகள் தயாராகயிருந்தன. அத்துடன் பதில் தாக்குதல் செய்வதற்கும் நமது துருப்புகள் தயாராகயிருந்தன.

எதிரி துறத்தியடிக்கப்பட்டான்.

ஏராளமான மனிதர்களையும், முஸ்தீப்புகளையும் இழந்தபின் எதிரி நம்முடைய படை வரிசைகளைப் பிளந்து ஓரல்-குர்ஸ்க் பகுதியில் 9 கிலோமீடர்களும் (5½ மைல்கள்), பெயலோகிராட்-குர்ஸ்க் பகுதியில் 35 கிலோமீடர்களும் (22 மைல்கள்) முன்னேறினன். கோரமான சண்டைகளில் நமது துருப்புகள் ஜெர்மனியின் சிலாக்கியமான துருப்புகளைச் சின்னாபின்னப் படுத்திவிட்டன. பிறகு ஊக்கத்துடன் நமது படைகள் பதில் தாக்குதல்செய்து, எதிரியைத் துறத்தியடித்து, ஜுலை 5-ம் தேதியன்று நம்மிடமிருந்த ஸ்தானங்களை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டதுடன், எதிரியின் ஸ்தானங்களை ஊடுருவிச்சென்று ஓரல் பகுதியில் 15 அல்லது 25 கிலோமீடர்கள் (9½ முதல் 15½ மைல்கள்) முன்னேறியிருக்கின்றன.

ஜெர்மன் முன்னேற்றத்தைக் குலைப்பதற்காக நடைபெற்ற யுத்தங்களில், நமது துருப்புகளின் தீரமும், விடாமுயற்சியும், ஊக்கமும் பீரங்கிப்படைகள், சட்டி பீரங்கிப்படைகள், டாங்கி ஓட்டுகிறவர்கள், விமானிகள் உள்பட எல்லாவகைத் துருப்புகள், அவைகளின் ஆபீஸர்களின் வீரமும் நன்கு வெளியாகிவிட்டன.

இவ்விதமாக ஜெர்மனியின் வேனிர்கால முன்னேற்ற யுத்தம் பயன்படவில்லை. வேனிர்கால யுத்தத்தில் ஜெர்மானியர்கள் வெற்றிபெற்று விடுவார்களென்றும், ருஷ்யப் படைகள் பின்வாங்கி ஓடத்தான்வேண்டுமென்றும் இதுவரையில் சொல்லிவந்த கதையானது பிசகென்று ருஜுவாகிவிட்டது.

ஜுலை 5-ம் தேதிமுதல் ஜுலை 23-ம் தேதிவரையில் நடைபெற்ற யுத்தத்தில் எதிரிக்கு பின்கண்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 70,000 ஆபீஸர்களும், மனிதர்களும் மடிந்து விட்டார்கள். 2,900 டாங்கிகளும், 115 தானைச் சுடும் பீரங்கிகளும், 844 யுத்தகள பீரங்கிகளும், 1,392 விமானங்களும், 5,000 லாரிகளும் பழுதுபட்டன; அல்லது நாசமாகி விட்டன.

வார யுத்தச் செய்திகள்.

24—7—43-லிருந்து 30—7—43-வரை.

ஸிஸிலி.—சென்ற வாரத்தில் தலைநகரமான பாலர்மோவின் சரணாகதிக்குப் பிறகு, மார்ஸாலா, ட்ரபானி, டெர்மினி, வெட்ரானோ, ஸெபோலா என்ற கிழக்குக் கரையிலுள்ள நகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் விழுந்துவிட்டன. அச்சுநாட்டுத் துருப்புகள் ஒரு முக்கோணத்துக்குள் அடைபட்டிருக்கிறார்கள். அதன் உச்சி பாகம் மெஸ்ஸினா. அதன் அடி பாகத்தில் மேற்கே ஸெபாலோவும் கிழக்கே கடானியாவுமிருக்கின்றன. மேற்குப் பகுதியில் அமெரிக்கர்கள் சாவதானமாக முன்னேறுகிறார்கள். மத்தியமுனையில் கனேடியர்கள் சொல்பமாக முன்னேறி வருகிறார்கள். கடானியாவுக்குத் தெற்கில் மேற்குப் பக்கத்தில் பீரங்கிப் போர்கள் நடைபெறுகின்றன. ஸிஸிலியைக் காலி செய்வதற்கு முற்போக்காக எதிரி கடானியாவிலுள்ள விமான தளங்களிலுள்ள சாமான் குவியல்களையும் இதர சாமான்களையும் நாசம் செய்துவருகிறான்.

வடக்கு ஸிஸிலியிலுள்ள துறைமுகங்களும், இருப்புப் பாதைகளும், ரஸ்தாக்களும் தவிடுபொடி செய்யப்படுகின்றன. ஸார்டினியா, கார்ஸிகா, எல்பாவிலிருந்து ஆரம்பித்து, மத்திய, தெற்கு இதாலி வழியாக அயோனியன் கடலுக்கும் கிரீஸுக்கும் செல்லக்கூடிய ஒரு வளைவு கோட்டின் பரப்பில் விமானத் தாக்குதல் இடைவிடாது நடைபெறுகிறது.

கிரீட்டிலுள்ள எதிரியின் துருப்புகளையும் யுத்த முஸ்தீப்புகளையும் நமது விமானங்கள் பலமாகத் தாக்கின. ஐபாராபெட்ராவிலும் ஹெராக்ளியானிலுமுள்ள தொழிற்சாலைகளின் பேரில் குண்டுகள் விழுந்தன.

ருஷ்யா.—இவ்வருஷத்திய ஜெர்மன் வேனிற் கால முன்னேற்ற யுத்தம் குலைந்துவிட்டது. ஜூலை 5-ம் தேதிக்கும், ஜூலை 23-ம் தேதிக்கும் இடையே எதிரிக்கு பின் குறிக்கப்பட்ட நஷ்டம் உண்டாகிவிட்டது. 70,000 மனிதர்கள் உயிர் துறந்தார்கள். 2,900 டாங்கிகளும், 115 தானுகச்சுடும் பீரங்கிகளும், 844 யுத்த தள பீரங்கிகளும், 1,392 விமானங்களும், 5,000 லாரிகளும் நஷ்டமாகின அல்லது பழுதுபட்டன.

சென்ற வாரத்தில் மெல்லெனஸ்க் வீழ்ச்சிபெற்றது. இந்த வாரத்தில் போல்காவ் விழுந்துவிட்டது. இவைகளைப் பிடித்தபின் ஓரலிலிருக்கும் ஜெர்மானியரின் நிலைமை மோசமாகிவிட்டது. 8 டிவிஷன் ருஷ்யப் படைகள் ஓரலை நோக்கிக் குவிந்துவருகின்றன. ஒரு பகுதி மட்டும் பிடிபடவேண்டியிருக்கிறது. மழை பலமாக வர்ஷிக்கும்பொழுதும் கூட ருஷ்யர்கள் இரண்டு ரஸ்தாக்கள் மார்க்கமாகவும், மூன்று இருப்புப் பாதைகள் வழியாகவும் மூன்று நதிப் பள்ளத்தாக்குகள் மார்க்கமாகவும் ஏராளமான சிறியதும் பெரியதுமான சில்லரைச் சண்டைகளைப் போட்டுக்கொண்டே முன்னேறி வருகிறார்கள். போல்காவுக்குக் கீழே ஓகாவுக்கும் நூகருக்கும் நடுவிலுள்ள 25 மைல்களுள்ள பிரதேசம்தான் இப்பொழுது முக்கியமான போர் தளம்.

விமானத் தாக்குதல்.—இந்த வாரத்தில் பலமான விமானத் தாக்குதல் ஜெர்மனியில் நீர்மூழ்கிகள் கட்டும் தொழிற்சாலையான ஹாம்பர்க்கில் செய்யப்பட்டது. இந்த நகரத்தில் 10,000 ஏக்கரா விஸ்தீர்ணமுள்ள தொழிற்சாலையும் கப்பல்கள் நடமாடுவதற்கு 22 மைல்கள் நீளமுள்ள கப்பல் துறைகளும், 10 மைல்கள் நீளமுள்ள கப்பல் தளங்களும் சாமான் இறங்கும் துறைகளுமிருக்கின்றன. 48 மணி நேரத்திற்குள் இங்கு 5 தடவை தாக்குதல் செய்யப்பட்டது. ஜூலை 24-ம் தேதி இரவில் 50 நிமிஷ நேரம் ஏற்பட்ட விமானத் தாக்குதலில் 2,300 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் வீசப்பட்டன. கரையிலிருந்த தற்காப்புகள் தவிடுபொடியாகிச் சிதறிவிட்டன. தெருக்களில் உடைந்த கண்ணாடித் தூள்கள் ஏராளமாகயிருந்தன. வெடிகுண்டுகளால் ஏராளமான குழிகள் தோண்டப்பட்டு விட்டன. வீடுகளிலிருந்த உத்திரங்கள் தெருக்களில் எரிந்துகொண்டிருந்தன. ஹாம்பர்க்கின் முக்கியமான ரஸ்தாவான நீபர்பான் இருந்த இடம் தெரியவில்லை. இதை வள, நார்வேயிலுள்ள ஹெரோயாவும், டிராண்ட்ஹீமும், பெல்ஜியத்திலுள்ள கோர்ட்ரேயும், ஹாலந்திலுள்ள வோர்ன்ஸ் டிபெக்கும் குண்டுவீச்சுக்குட்பட்டன.

பஸிபிக் யுத்தம்.—அமெரிக்கத் தரைப்படைகள் முண்டா விமான தளத்துக்கு 2,100 கெஜ தூரத்திற்குள் வந்துவிட்டன. ஜூலை 26-ம் தேதியன்று நேசதேச விமானங்கள் முண்டாவை பலமாகத் தாக்கின. 200 விமானங்கள் சென்று 186 டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகளைப் பொழிந்தன. ஜப்பானிய பீரங்கிகளில் பெரும் பாகம் நொருங்கிவிட்டன. நாஸ்ஸர் விரிகுடாவிலிறங்கிய அமெரிக்கப் படைகள் தம்பூ விரிகுடாவுக்கு முன்னேறி விட்டன. தம்பு மலைக்குத் தென்மேற்கிலுள்ள கோமிபாடம் பிரதேசத்தில் நாம்லூ பிராந்தியத்தில் ஜப்பானியர்கள் செய்த எல்லாவித தாக்குதல்களும் தவிர்க்கப்பட்டன. ஜூலை 27-ம் தேதியன்று நெதர்லாந்து இந்தீஸிலுள்ள ஜப்பானிய முக்கிய தளமான ஸொரபாயாவை நமது விமானங்கள் திடீரென்று தாக்கின. எண்ணெயைச் சுத்தி செய்யும் ஸ்தாபனங்களிலும் சாமான் கிட்டங்கிகளிலும், கப்பற்தளங்களிலும் குண்டுகள் நேராக விழுந்தன. அன்று பூயினுக்கு சாமான்களையும் முஸ்தீப்புகளையும் ஏற்றிச் சென்ற 9,000 டன் எடைமானமுள்ள ஒரு ஜப்பானிய விமானம் தாங்கிக்கப்பல் போகன்வில்லிக்கருகில் மூழ்கடிக்கப்பட்டது.

ஜூலை மாதம் 24-ம் தேதியன்று வேக் தீவை நமது விமானங்கள் தாக்கியபொழுது 30 எதிரி விமானங்கள் குறுக்கிட்டன. அவைகளில் 9 ஸீரோ விமானங்கள் நாசமாகிவிட்டன. 4 அநேகமாக நாசமடைந்திருக்கும். 5 பழுதுபட்டது.

ஜூலை மாதம் 25-ம் தேதியன்று கிஸ்காவிலுள்ள ஜப்பானிய முஸ்தீப்பு வைப்பு ஸ்தானங்களை நமது விமானங்கள் 10 தடவை தாக்கின. வடக்கு ஹெட்டிலும், சிறிய கிஸ்காவிலுமுள்ள முக்கிய முகாம்கள் நொருக்கப்பட்டன.

சைனா—யாங்ட்ஸே நதியில் யோயாங்குக்குச் சமீபத்தில் அமெரிக்க யுத்த விமானங்கள் இரண்டு ஜப்பானிய நீராவிக் கப்பல்களையும், ஒரு பெரிய படகையும், 3 ரயில்வே இஞ்ஜின்களையும் நாசம் செய்தன.

பூகியன் மாகாணத்தில் ஹூவாங்கன் தீவை சீன வெடி விமானங்கள் தாக்கின. ஹைபாங்கு, ஹாங்கே டன்கர்க், செங்காஞ்சன் முதலிய இடங்களிலுள்ள துறைமுகங்களையும் கப்பல்களையும் அவைகள் நாசமாக்கிவிட்டன.

ஜூலை 24-ம் தேதியன்று 100 ஜப்பானிய வெடி விமானங்கள் குவாங்ஸியிலும், ஹூனானிலுமுள்ள இரண்டு அமெரிக்க முன்னணி தளங்களைத் தாக்க முயன்றன. லக்ஷியத்துக்குப் போகுமுன்னரே அவைகள் வெடி குண்டுகளைத் தள்ளிவிட்டு ஓடிப்போகும்படியாக நேர்ந்தது.

எதிரிக்கு 10 ஸீரோ விமானங்களும், 6 வெடி விமானங்களும் நஷ்டம். 12 ஸீரோக்களும், 3 வெடி விமானங்களும் நாசமாகியிருக்கக்கூடும். 6 ஸீரோக்களும், 3 வெடி விமானங்களும் பழுதாகிவிட்டன.

ஜப்பானியர்கள் தெற்கு ஷான்ஸி மாகாணத்திலுள்ள மஞ்சள் நதிக்கரையிலுள்ள யாங்க்செங்கிலிருந்து ஸியெவிலை நோக்கி தெற்கு முகமாக புதிய தாக்குதல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

பர்மா.—அரக்கானில் ரோந்து நடவடிக்கை நடைபெற்றபொழுது, சில நாட்களுக்குமுன் பிரிடிஷ் துருப்புகள் ஒரு பெரிய ஜப்பானியப் படையை மாஙக்டாவுக்கருகில் எதிர்த்து ஏராளமான சேதம் விளைவித்தன. பருவகாலத்தின் பயனாக அதிக மழை பெய்தபோதிலும் நேசதேச விமானத் தாக்குதல் குறைவுபடவில்லை. இந்த வாரத்தில் கீழ்க்கண்ட இடங்கள் தாக்கப்பட்டன.

ஆலன், ஸேபா, ஸாகாங், டாங்கப், அக்யாப், நாம்டு சுரங்கங்கள், காதா, ஸம்பராபம், மோகாங், பனுகு, காங, லாலா, ஸெடான், ஸோப்ஸுப், ஹண்டர் விரிகுடா, காலிமியோ, பாக்டா, பகோடா முனை, ஸாகேயிங், ஸம்டா, பூங்கியன் ஸுப்.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

19—7—43. (திங்கட்கிழமை)

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தாக்குதல்கள்.——வடக்கு பிரான்ஸ் (Northern France).

எதிரிக் கப்பல்கள்.—டச்சுக் கடற்கரை (Dutch coast).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

இதாலியின் தலைநகரான ரோம் (Rome); டெஸிமோமன்னு (Decimomannu) விமான நிலயம்.—ஸார்டீனியா (Sardinia).

போக்குவரத்துகள்—ஸிஸிலியிலுள்ள ரெண்டாஸோ (Randazzo).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—இதாலி (Italy).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள வைபோ வேலன்ஷியா (Vibo Valentia), அக்குயினோ (Aquino).

ருஷ்யா (Russia).

(117 அச்சு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன.)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரிச் சைனியங்கள்.—நியூஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகோ (Bairoko) பிரதேசம்.

கடல் விமான தளம்.—சாந்தா இஸபெல் தீவிலுள்ள ரகாதாபே (Rekata bay).

விமான நிலயங்கள்.—பொகன்வில்லித் தீவிலுள்ள காஹிலி (Kahili), பல்லாலி (Ballale).

சேனை, தளவாடங்கள் தயர்செய்து கொடுக்கு மிடங்கள்.—நியூ கினியாவிலுள்ள பின்ஸ்சாபன் (Finschhafen).

பாலம்.—நியூ கினியிலுள்ள ஸாலமூவா (Salamaua) விற்கருகில்.

எதிரி தளம்—ஸெலபஸிலுள்ள மக்காஸர் (Macassar).

ஷுவோலி (Shuoli) பாலம்.—யுன்னன் (Yunnan) எல்லைக்கருகில்;

பர்மாவிலுள்ள ஸம்பிரபம் (Sumprabum).

ஸப்ளைக் குவியல்கள்.—பர்மாவிலுள்ள காவ்னன் (Kawnan), கட்ராங்யாங் (Kadrangyang).

ரஸ்தாப்பாலம்.—ஸொப்ஷுப் (Nsopzup).

எதிரி போக்குவரத்துகள், துருப்புகள்.—பர்மாவிலுள்ள அரக்கான் (Arakan).

படகுகள்.—பர்மாவிலுள்ள சின்ட்வின் (Chindwin); ஐராவதி (Irrawaddy).

பர்மாவிலுள்ள ராதிடாங் (Rathedaung), மின்பியா (Minbya).

20—7—43 (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—வேவுபார்த்தல்—பெல்ஜியம் (Belgium).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

போக்குவரத்து ஸ்தலம்.—ஸிஸிலியிலுள்ள ரெண்டோஸோ (Randazzo).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துக்கள்,—ஸிஸிலி (Sicily).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள குரோடோன் (Crotone).

ரயில்வே போக்குவரத்துக்குள்—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

விமான நிலயம்.—குரோஸ்ஸெட்டோ (Grossetto).

வேவுபார்த்தல்.—நேசதேசக் கப்பல்கள் (4 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

ருஷ்யா (Russia).

ரயில்வே ஜங்ஷன்கள்.—ஓரல் (Orel), லோசோவாயா (Lozovaya), கிராம்ஸ்காயா (Kramskaya).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்

தூரக்கிழக்கு (Far East).

ராணுவ நிலயங்கள்.—டிமோரிலுள்ள கோபாங் (Koepang), டிமோரிலுள்ள டில்லி (Dilli).

சாமானிறங்குமிடங்கள்.—டிமோரிலுள்ள லாடெம் (Lautem).

நாசகாரி.—டச்சு நியூ கினியிலுள்ள ஸொராங் (Sorong).

எதிரி ஆக்கிரமித்த பிரதேசங்கள்.—நியூ கினியிலுள்ள லோகல் (Logul) கிராமம்.

விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள கோமியாதம் (Komiatum), அலக்ஸல்க்ராபன் (Alexischhafen).

எதிரிக் துவியல்கள்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madang).

விமான நிலயங்கள்.—பொகன்வில்லியிலுள்ள காஹிலி (Kahili), பல்லாலி (Ballale).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

எதிரிக் கடற்படை—ஸாலமன்ஸிலுள்ள வெல்லா குடா (Vella gulf), (1 க்ரூயிஸரும், 2 நாசகாரிகளும் மூழ்கடிக்கப்பட்டன).

ரயில்வேப் பாலம்—பர்மாவிலுள்ள மித்னி (Myitnge), பர்மாவிலுள்ள மு (Mu) நதி.

ரயில்வேப் பாலம்—படகுகள்—பர்மாவிலுள்ள ஐராவதி.

சாமான் ஏற்றும் ரயில்வே வண்டிகள்—பர்மாவிலுள்ள அளகப்பா (Alagappa).

எதிரி சைனியங்கள்—பர்மாவிலுள்ள கியாயுக்ப்யூ (Kyaukpyu), டாங்குப் (Taungup) காலிமியோ (Kalemyo), பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab), பர்மாவிலுள்ள ஸம்ப்ரபம் (Sumprabum), நெல் அரைக்கும் இயந்திரசாலை, பர்மாவிலுள்ள மொகாங் (Mogaung).

ஸப்ளைக் துவியல்கள்—பர்மாவிலுள்ள மனஹாங (Manahkang) லாஸா (Laza) ஸெடான் (Sedan).

21—7—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகலிலும், இரவிலும் எதிரிகளின்மேல் நடத்திய நேசதேச நடவடிக்கையைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தா, ரயில் போக்கு வரத்துக்கள்.—ஸிஸிலி (Sicily) தெற்கு இதாலி (South Italy).

வேவுபார்த்தல்.—நேசதேசக்கப்பல்கள்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).

ஜப்பானியச் சைனியங்கள்.—பெய்ரோகோ (Bairoko) துறைமுகம்.

விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள மடாங் (Madang), பின்ஸ்சாபன் (Finschhafen).

ஜப்பானியப் படகுகள்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

விமான நிலயங்கள்.—நியூ கினியிலுள்ள ரபால் (Rabaul), கிளஸ்டர் முனை (Cape Gloucester), டிமோரிலுள்ள பென்போய் (Penfoei).

டச்சு நியூகினியிலுள்ள காகெனு (Kaukenau).

நாட்டுச்சுரங்கங்கள்.—பர்மாவிலுள்ள லாஷியோ (Lashio) விற்கருகில்.

சிறிய படகுகள்.—பர்மாவிலுள்ள காதா (Katha)விற்கு அருகில்.

ரயில்வேப் பாலம்.—பர்மாவிலுள்ள நாம்தி (Namti).

பர்மாவிலுள்ள ஸம்ப்ரபம் (Sumprabum).

பாலம்.—பர்மாவிலுள்ள ஸொப்ஷுப் (Nsopzup).

22—7—43. (வியாழக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—வேவுபார்த்தல்—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—இதாலியிலுள்ள போகியா (Foggia), பட்டா பாக்ளியா (Batta-Paglia), ஸாலர்னோ (Salerno).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள கபோடிசினோ (Capodichino).

எதிரிப் போக்குவரத்துக்கள்.—ஸார்டீனியா (Sardinia).

விமான நிலயங்கள்.—இதாலியிலுள்ள பிராக்டிகல் டிமேர் (Pratical di mare) குரோடோன் (Crotone).

கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily)யின் வடகரை.

ருஷ்யா (Russia).

(112 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச்சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கடற்படை தளம்.—ஜாவாவிலுள்ள ஸொராபாயா (Sourabaya).

ஜப்பானியர் கைக்கொண்டிருந்த கிராமங்கள்.—ஸெலாருத்தீவு (Selaru).

நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
3 ஜப்பானிய சண்டைக் கப்பல்கள்.—பொகெய்ன்வில்லி ஜல சந்தியில்.
5 ஜப்பானியப் பாலங்கள்.—நியூ கினியிலுள்ள சியோ (Sio) விற்கருகில்.
புசந்தி.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).
எல்லிஸ்த்தீவிலுள்ள பூனபூதி (Funafuti).
ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
படகுகள்.—பர்மாவிலுள்ள புரோமிற்கும் (Prome) ஸிப்யுபின்னிற்கும் (Zibyubin) இடையில்.
ஸ்பூளப் படகுகள்.—பர்மாவிலுள்ள ஹண்டர்ஸ் குடா (Hunter's Bay).
எதிரி கிராமங்கள்.—பர்மாவிலுள்ள காலிமியோ (Kalemyo) பிரதேசம்.
பர்மாவிலுள்ள பாக்டா (Pauktaw).

23—7—43 (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—சுரங்கவேடி பாவுதல்—எதிரி ஜலப் பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தாப்போக்குவரத்துகள்.—ஸிஸிலி (Sicily).
படகுகள்.—ஸிஸிலியின் வடகரை.
விமான நிலயம்.—ரெஜியோடி கலாபிரியா (Reggiodi Calabria).

ருஷ்யா (Russia).

(43 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய பீரங்கி ஸ்தாபனங்கள்.—நியூ ஜார்ஜியா (New Georgia).
நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
4 ஜப்பானியப் படகுகள்.—வில்லா குடா (Villa gulf).
கிராமம்.—டிமோர் (Timor).
விமான நிலயம்.—க்ளஸ்டர் முனை (Gape Gloucester); விட்டியாஸ் ஜலஸந்தியில் ரூக் தீவு (Rooke Island); ஹூவான்குடா (Huon Gulf); நியூ கினியிலுள்ள பொகடி டிம் (Bogadi Dim), ஸெய்டாக் (Saidok).
ஏற்றிறக்குமதிப் பிரதேசங்கள்.—நியூ கினியிலுள்ள பின்ஸ்சாபென் (Finschhafen); நியூ கினியிலுள்ள லே (Lae), ஸலாமூவா (Salamaua).
எதிரி படகுகள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab); பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).
எதிரிப் படை ஸ்தாபனங்கள்.—கிரீட் (Crete).

24—7—43. (சனிக்கிழமை).

ஜெர்மன் ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—அலுமினியம்—நார்வேயிலுள்ள (Haroya).
சரிபார்க்குமிடங்கள்.—நார்வேயிலுள்ள டிராண்ட்ஜெம் (Trondjhem).
இரவு.—ஸப்மரீன் தளம்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள போலோன் (Bologne).
இலக்குகள்.—இதாலியிலுள்ள மாரிடி கடான்ஸரோ (Marinadi Catanzaro), மரினு டி பாவோலா (Marina Di Paola).
படகுப்போக்குவரத்து முடிவு.—இதாலியிலுள்ள ஸான்கியோவன்னி (San Giovanni).
இதாலியத் துறைமுகம்.—லெக்ஹான் (Leghorn).
துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள மிலாஸ்ஸோ (Milazzo).
போக்கு வரத்துக்கள்.—ஸிஸிலி (Sicily).
கப்பல்கள், படகுகள்.—ஸிஸிலி (Sicily)யின் வடகரை.

ருஷ்யா (Russia).

(56 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள்.—மத்திய பஸிபிக்கிலுள்ள வேக் தீவு (Wake Island).
விமான நிலயம்.—டிமோரிலுள்ள புயூலோரோ (Fuiloro); டிமோரிலுள்ள அலூடெம் (Alutem).
யுத்த தளவாடக் குவியல்கள்.—டிமோரிலுள்ள டில்லி (Dili).
கடல் விமான தளம்.—ஆரோத்தீவிலுள்ள டாபர் பேயனி (Taber faine).
எதிரி படகுகள்.—நியூ பிரிடன் (New Britain).
விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள லே (Lae).
நியூ ஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகோ (Bairoko) துறைமுகம்.
பர்மாவிலுள்ள ஸம்ப்ரபம் (Sumprabum).
பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

25—7—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—கடல் படை தளம்—ஜெர்மனியிலுள்ள கியல் (Kiel).
ஸப்மரீன் தளம்.—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).
விமானத் தொழிற்சாலைகள்.—ராஸ்டாக் (Rostock).

கடல் விமான தளம்.-விஸ்ட்ரோ (Wustrow).
விமானத் தொழிற்சாலை.—ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).
விமான நிலயம்.—ஹாலந்திலுள்ள வூயென்ஸ்ட்ரெட்ச் (Woensdrecht), பெல்ஜியத்திலுள்ள கோர்ட்ராய் (Courtrai).
ஸ்டீல் தொழிற்சாலை.—ஜெர்மனியிலுள்ள எஸ்ஸென் (Essen).
இலக்குகள்.—ஜெர்மனியிலுள்ள கொலோன் (Cologne), ஹாம்பர்க் (Hamburg).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமானச் சண்டைகள்.-மெஸ்ஸினு (Messina). (26 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—மாரினுடிபாக்ளா (Marinadipacla).
துறைமுகம்.—மிலாஸ்ஸோ (Milazzo).
எதிரிக் கப்பல்கள்.—டிரேனியன் (Tyrrhennian) கடல்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—முண்டா (Munda).
ஜப்பானியக் கப்பல்கள்.—ஸாலமன்ஸிலுள்ள பூகா (Buka).
போகன்வில்லி (Bougainville). (7 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska), சிறிய கிஸ்கா (Little Kiska).
ஜப்பானிய ஸப்ளை ஸ்தலங்கள்.—பர்மாவிலுள்ள கியாக்டா (Kyauktaw).
வேவு பார்த்தல்.—ஐராவதி (Irrawaddy), அரக்கான்கரை (Arakan).
சேனை, யுத்தத் தளவாடங்கள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள மாண்டலேக்கருகிலுள்ள செகய்ங் (Sagaing).
எதிரி தளம்.—பர்மாவிலுள்ள மொகாங் (Mogaung).
ரஸ்தாப் பாலம்.—பர்மாவிலுள்ள டியாங்குப் (Tiangup).
ஜப்பானியத் தலைமைக் காரியாலயம் —பர்மாவிலுள்ள சும்தா (Sumta).
ராணுவ நிலயங்கள்.—பர்மாவிலுள்ள காதா (Katha)விற்கு 80 மைல்கள் வடக்கில்.

பரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

20—7—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள ரேண்டோவா (Rendova).

21—7—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain),

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பெனுபெனு (Bena-Bena) பிரதேசம்.

22—7—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

வேவு பார்த்தல்.—ஸோவியத் பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள புலோலோ (Bulolo).

23—7—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள ரேண்டோவாத் (Rendova) தீவு.

24—7—43 (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

ரெண்டோவாத் (Rendova) தீவு.

25—7—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினியிலுள்ள பெனு பெனு (Bena-Bena) பிரதேசம்.

26—7—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

2 இடங்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East-Anglia).
தேம்ஸ் நதி முகத்துவாரம் (Thames estuary).
(1 அச்சு விமானம் நாசமாக்கப்பட்டது.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஓரல் (Orel). (57 ஜெர்மன் விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

தூரக்கிழக்கு (Far East).

ரெண்டோவாத் தீவு (Rendova). (8 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 4 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

யுத்தக் குறிப்புகள்.

முஸோலினியின் வெளியேற்றம். முஸோலினி ராஜீனாமா செய்துவிட்டான். 21 வருஷங்களாக அவர் நடத்திய யதேச்சாதிகாரம் முடிந்துவிட்டது. ராஜீய வியவகாரங்களை அவர் விட்டுவிட்டதால் அவர் இனிமேல், கௌரவமில்லாமலும், இதாலி, ஸர்வ உலகத்தின் சாபத்துடனும் மறைந்துவிடுவான். அதற்குக் காரணம் அவன் இதாலியின் கௌரவத்தைப் பிறர் கையில் காட்டிக்கொடுத்துவிட்டான். இதாலிய சாம்ராஜ்யத்தை அழித்து விட்டான். உலக சமாதானத்தையும் சின்னாபின்னம் செய்துவிட்டான். அவன் துரோக முறைகளைக் கையாண்டு வந்தான். ஆல்பேனியா, பிரான்ஸ், கிரீஸ் முதலிய இடங்களில் அவனுடைய நடவடிக்கைகளை கவனித்தால் இது நன்கு புலப்படும். லிபியாவிலும், அபிஸீனியாவிலும் அவன் ஏராளமான கொடுமைகளை விளைவித்திருக்கிறான். கலகக்காரனும் கொடுங்கோல் அரசனுமான முஸோலினி மறைந்தானென்பதில் நாம் சந்தோஷப்படுகிறோம். அவனுக்குத் தகுந்த கதி ஏற்பட்டிருக்கிறது. அக்கிரமக்காரர்கள் மறைந்த விதம் முஸோலினியும் சென்று விட்டான். போலி ஸீஸர் மறைந்தான்.

வி வி வி வி வி

குற்றவாளி, பைத்தியம் பிடித்தவன். சமீபத்தில் கிடைத்த தகவல் பிரகாரம் தப்பித்து ஓடப்பார்த்தபொழுது முஸோலினியைக் கைதி செய்து அவனுடைய வீட்டிலேயே அவனை அடைத்துவிட்டார்களாம். மற்றொரு ரிபோர்ட்டின் பிரகாரம் அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதாம். ஹிஸ்டீரியா வியாதிவந்து விட்டதாம். சிறிக்க ஆரம்பித்தால் அவன் சீக்கிரத்தில் முடிப்பதில்லையாம். இது சரிதான். உலகத்திலுள்ள இந்த அக்கிரமக்காரனுக்குப் பயித்தியங்களிருக்கும் இடம்தான் சரியான வாசஸ்தலம். அந்த இடத்திலும் அவன் நிலைபெற்றிருக்க முடியுமாவென்று சந்தேகம் தோன்றுகிறது. அவனைச் சித்திரவதை செய்யாவிட்டாலும், ஹிட்லருக்கு அடுத்தபடியாக உள்ள யுத்தக் குற்றவாளியும் சர்வதேசக்கொள்ளைக்காரனுமான இவனை நேசதேசங்கள் பரிசீலனைசெய்து சிக்ஷிப்பார்களென்பது நிச்சயம்.

வெகுநாட்களாகவே முஸோலினியின் ஆதிக்கம் குலைந்துவிட்டது. இதாலிய தேச மக்களுக்கு அவனிடமிருந்த மதிப்பும், ஏமாற்றமும் மறைந்துவிட்டன. கடைசி பிரயத்தனமாக, இவ்வருஷ ஆரம்பத்தில் அரசாங்கத்தின் பலவிதமான அலுவல்களின் நிர்வாகத்தையும் தானே வகிக்க ஆரம்பித்து அயல்நாட்டு மந்திரிபதவியையும் அவன் ஏற்றுக்கொண்டான். பாஸிஸ்டு கக்ஷியை சுத்திசெய்து கார்லோ ஸ்கோர்ஸா என்பனை காரியதரிசியாக நியமித்துக்கொண்டான். ஆகிலும் சீர்கேட்டை ஒரு நடவடிக்கையும் நிவர்த்திக்க முடியவில்லை. பொது அபிப்பிராயத்தை சம்பாதித்துக்கொள்ளுவதற்காக ருஷ்யப் போர்முனையிலிருந்து இதாலிய டிவிஷன்களை வாபஸ் பெற்று இதாலிக்குக் கொண்டுவந்தான். அதன் பிறகு வட ஆபிரிக்காவில் இதாலிக்குப் பெரும் தோல்வி கிடைத்தது. அப்பொழுதும் ஜனங்களுக்கு நம்பிக்கை உண்டாகும்படி அவன் பேசிவந்தான். ஆபிரிக்கா போய்விட்டாலும், போகட்டும் ஆகிலும் ஸிஸிலி ஒரு பெரிய கற்கோட்டை. அது நேசதேச படையெடுப்பைத் தடுத்துவிடும் என்று சொல்லி வந்தான். நேசதேசப்படைகள் ஸிஸிலியில் இறங்கி வேகமாக முன்னேறிய பின்னும் ரோம் வெடிகுண்டுகளுக்கிலக்கானபொழுதும், இவன் கடைசித் தடவையாக ஹிட்லரை இதாலியில் ஏதோ ஒரு இடத்தில் சந்தித்துப்பேசினான். பேச்சுகள் திருப்திகரமாக முடிவடையாமல் முறிந்துபோயின. ஹிட்லர் இதாலியின் உதவிக்குத் துருப்புகள் அனுப்ப மறுத்துவிட்டானோ அல்லது முஸோலினி அதைத்தன்னால் காப்பாற்றமுடியாதென்று சொன்னதானோ காரணம் புலப்படவில்லை. நெருக்கடி உண்டாகிவிட்டதென்பது நிச்சயம்.

மார்ஷல் தங்கிய விக்டர் எமானுவல் அரசரின் உத்தரவின் பிரகாரம் படாக்ளியோ அதிகாரம் வகிக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முஸோலினி நீக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமை முதல் ரோம் ஒலிபரப்பில் பாஸிஸ்டு யுத்தத்தின்படி வருஷக்கணக்கைச் சொல்லுவது நின்று போய்விட்டது. பாஸிஸ்டு கீதத்துக்குப் பதிலாக இதாலிய தேசீய கீதம் பாடப்படுகிறது. இதாலியில் பாஸிஸ்டு கொள்கையைச் சேர்ந்த எல்லா சின்னங்களும் அகற்றப்பட்டுவிட்டன. பாஸிஸ்டு கக்ஷியையச் சேர்ந்த ராணுவம் இதாலிய சேனையுடன் சேர்க்கப்பட்டுவிட்டது. பாஸிஸ்டு கக்ஷியை படாக்ளியோவின் உத்தரவுப்படி கலைக்கப்பட்டுவிட்டது.

முஸோலினி வெளியேறியதிலிருந்து அச்சுநாடுகளின் முறிவையும் இது சூசிப்பிக்கலாம். அச்சு என்பது ஹிட்லருக்கும், முஸோலினிக்குமுள்ள தனிப்பட்ட சம்பந்தங்களை ஒட்டி ஏற்பட்டது.

முஸோலினியின் வெளியேற்றம் யுத்தப்போக்கையும் பாதிக்கக்கூடும். இதைப்பற்றி நாம் ஒன்றும் ஊகித்துச் சொல்ல முடியாது. சில நாட்களுக்குள் இதாலி சரணடைந்து விடுமென்று மேஜர் லா கார்டியா நினைக்கிறான். ராய்டர் எழுதியிருக்கும் வாஷிங்டனின் ராணுவ அப்ஸர்வரின் அபிப்பிராயம்தான் சிறந்ததாகத் தோன்றுகிறது. அவர் சொல்லுவதாவது.

"இதாலியில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் பலமான மாறுதல்கள் ஏற்படுமென்று தோன்றுகிறது. முஸோலினியின் திட்டங்களை நடத்துவதற்கும், பலமான தற்காப்புகளை அமைப்பதற்காக ஜனங்களைத் திரட்டுவதற்கும் மன்னர் முன் வந்திருக்கிறாரென்று நான் நம்பவில்லை. யுத்தத்தை நிறுத்துவதற்கு இதாலி இப்பொழுது முற்போக்கான நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறது. இதாலியில் ஜெர்மன் துருப்புகள் ஏராளமாக இப்பொழுது இல்லை. இதாலியர்கள் சமாதானம் செய்து கொள்ளவேண்டுமானால் இப்பொழுது அது நடைபெறக்கூடும். ஜெர்மனிக்கு விரோதமாயிருந்தாலும், முஸோலினி வெளியேறி விட்டதாலும், பாஸிஸ்டு அமுல் பலஹீனமடைந்து விட்டதாலும் இதுதான் சமாதானம் செய்து கொள்ளுவதற்கு நல்ல தருணம்."

ஆகிலும் நிலைமை தெளிவாகயில்லாதபடியால் ஒன்றும் சொல்லமுடியாது. பிரசுரிக்கப்பட்ட செய்திகளில் எமானுவல் மன்னர் "யுத்தகளமென்றும்," படாக்ளியோ "யுத்தத்தை மேல்நடத்தவேண்டும்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஜெர்மன் துருப்புகள் ஸிஸிலியிலிருக்கின்றன. ஸிஸிலியைக் காலிசெய்வதற்குமுன் சாமான் கிட்டங்கிகளை ஜெர்மானியர் அழித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. ஸிஸிலியில் யுத்தம் நடைபெற்று வருகிறது. இதாலியின் வாக்குறுதியைச் சிறிதுகாலம் வரையில் அது காப்பாற்றிவருவதற்காக பேடிஜமாக யுத்தம் நடைபெறுகிறது.

மிஸ்டர் சர்ச்சில் சொல்லுகிறபடி நேசதேசத்தாரின் கடமை ஸ்பஷ்டமானது. பாஸிஸ்டு நிர்வாகமும், ஆயுதம்பூண்ட படைகளும் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டும். முஸோலினி துறத்தியடிக்கப்பட்டான். ஆகிலும், இதாலியில் ஜெர்மானியர்களிருந்து வருகிறார்கள். இதாலியிலிருக்கும் ஜெர்மானியர்களை ஒருவர்கூட இல்லாமல் வதைத்து, கைதிசெய்து அல்லது துறத்தியடிக்கும் வரையிலும், இதாலிய நிர்வாகம் நேசதேசத்தார்கள் சொல்லுகிறபடி கௌரவமாக சரண்புகுந்து விடாதவரையிலும் நேசதேசப்படைகளின் வேலையும் இதாலிய மக்களின் கோரிக்கையும் முடிவடையாது. நமது புத்திமதியை இதாலியர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் இதாலியை நொருக்கி தீக்கிரையாக்கிவிடுவோம். சரணடையும்படியாக கட்டாயப்படுத்திவிடுவோம்.

நேசநாடுகள் ஸ்பஷ்டமாக தங்களுடைய புத்திமதியை அறிவித்துவிட்டார்கள். ஸிஸிலியில் உண்டாகியிருக்கும் புயல்காற்று இதாலியிலும் பரவி அதை நாசமாக்குமுன் இதாலியர்கள் ஆலோசனை செய்து சரியான முடிவுக்கு வரும்படியாக ஆண்டவன் அருள் புரிவாராக. இதாலியின் சரித்திரமும், மதமும் சிறந்தவை. பிரிடிஷ் சாம்ராஜ்யம் நிலைபெறுமுன் இதாலியில் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் தலைநகரமிருந்தது. ஐரோப்பிய நாகரீகத்துக்கு மூலாதாரம் இங்குதானிருந்தது. இப்பொழுது ரோமன்காதலிக் பெரிய பாதிரியாரும் இதாலியில்தான் வசித்துவருகிறார்.

சென்றவாரத்தில் ஸிஸிலியின், தலைநகரமும், ராஜீய, கலைஞான, வியாபார ஸ்தலமுமான பாலர்மோ விழுந்துவிட்டதென்று இதில் எழுதியிருந்தோம். அது மிகவும் கேவலமாக சரணடைந்தது. அங்கிருந்த கருஞ்சட்டைப் படையினர் ஒருவர்கூட எதிர்க்கவில்லை. நேசதேசத்தாக்குதல் ஆரம்பிக்கும்முன்பே இதாலிய ஆபீஸர்கள் நீராவிப்படகில் ஏறிக்கொண்டு துரிதமாக ஓடிவிட்டார்கள்.

பாலர்மோவின் வீழ்ச்சிக்குப்பின் மார்ஸாலா, டெர்மினி, மேற்குக்கரை ஓரத்திலுள்ள வெட்ரானோ என்ற இடங்கள் பிடிபட்டுவிட்டன. ஏற்கனவே கைதிசெய்யப்பட்ட துருப்புகளின் மொத்தம் 79,000.

கடானியா சமவெளியில் டிட்டைனோ நதியின் வடக்குக்கரையில் ஜெர்மானியர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். போர்முனையானது கடற்கரையிலிருந்து டிரோனியன் கடற்கரை வரையில் பரவியிருக்கிறது. நேசநாடுகள் தங்களுடைய ஸ்தானங்களை விஸ்தாரப்படுத்திக்கொண்டு, கடானியாவைச் சுற்றி கோரமான சண்டையை நடத்திவருகிறார்கள். எதிரியின் முயற்சிகள் பலிக்கவில்லை. ஆகிலும் எதிரி பின்வாங்கும் மார்க்கமான மெஸ்ஸினாவை பிரிடிஷ் கடற்படை காபந்து செய்துவருகிறது. அமெரிக்கப்படைகள் வடக்குக்கரையோரமாக வரும் இருப்புப்பாதையைத் துண்டித்துவிட்டு மெஸ்ஸினாவை நோக்கி முன்னேறுகிறார்கள். கனடியர்கள் எட்னாமலையின் தற்காப்பைத் தகர்த்து வருகிறார்கள்.

ஐரோப்பாவையும், இதாலியின் எல்லைப்புறங்களையும் நேசதேசங்கள் இதேசமயத்தில் தாக்கிவருகிறார்கள். கார்ஸிகாவிலிருந்தும் எல்பாவிலிருந்தும், மத்திய, தெற்கு இதாலி, அயோனியன் கடல் வழியாக கிரீஸின் மேற்குக்கடற்கரை வரையிலுள்ள 600 மைல்கள் கொண்ட பிரதேசங்களை நேசதேச விமானங்கள் நொருக்கிவருகின்றன. முக்கியமாக பிரஸ்ஸா, அக்விணோ, காட்ரோன், மிலாஸோ, லெவ்லாந்து முதலிய இடங்கள் தாக்கப்படுகின்றன.

வி வி வி வி வி

உண்மையும், கட்டுக்கதையும். ரோமை சமீபத்தில் வெடிவிமானங்கள் தாக்குதல் செய்ததைப்பற்றி அச்சுநாடுகளிடம் அதிக பரபரப்பு உண்டாகியிருக்கிறது. இத்தாக்குதல்; கலைஞானத்தையும், மதஸ்தாபனத்தையும் அழிப்பதற்காகச் செய்யப்பட்ட முயற்சியென்று பகிரங்கம்செய்ய எதிரி ஒலிபரப்புகள் பலமாக கூக்குரல் செய்துவருகின்றன. ரோமாபுரியின் கௌரவத்தை நேசநாடுகள் நன்றாயறிவார்கள். போப்பாண்டவரிருக்கும் பிரதேசத்தை ·பூஜ்யமான ஸ்தலமென்றும் அவர்கள் மதித்து வருகிறார்கள். ரோம் என்பது மூன்று நகரங்கள் கொண்டது. போப்பாண்டவருக்குமிடம். இதாலியின் ராஜீயத் தலைநகரம், இதாலியின் இருப்புப்பாதை மத்யஸ்தலம், ரோம் என்பது மதசம்பந்தமான புனிதமான நகரமட்டுமல்ல, ராணுவ முக்யத்வமும் யுத்த தளவாட உற்பத்திசாலைகளும், போக்குவரவு மத்யஸ்தாபனமும் உள்ள நகரம். இதன் வழியாகத்தான் ஸிஸிலிக்கு ஸப்ளைகள் அனுப்பப்படுகின்றன. ஆகையால் ராணுவ அவசியத்தைக்கொண்டு தான் ரோமை வெடிவிமானங்கள் தாக்கின. கூடியவரையில் தாக்குதல் சாவதானமாகவே நடத்தப்பட்டது. விட்டோரியாவிலுள்ள ரயில்வே இஞ்ஜின்கள் நிற்குமிடங்களைத்தான் விமானங்கள் ஜாக்கிரதையாகத் தாக்கின. ஸால்லொரன் ஸோவின் பாஸிலிகாவைத் தவிர மற்ற இடங்களுக்கு நாசம் ஏற்பட்டதென்று எதிரிகூட சுட்டிக்காட்டமுடியவில்லை. ரோமில் 400 மாதாக் கோவில்களிருக்கின்றன. இதுவரையில் நேசதேசத்தாரைச் சேர்ந்த 13,895 மாதாக்கோயில்களையும், இதர மத ஸ்தாபனங்களையும் அழித்திருக்கும் எதிரி, ஆக்ஷேபனை செய்வது பொருத்தமாகாது. புனிதமான நகரத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற நல்ல எண்ணம் எதிரிக்கு இருந்தால் ரோம் ரக்ஷணைக்குட்படாத பிரதேசமென்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கலாம்.

வி வி வி வி வி

மசண்டையும், சூரிய அஸ்தமனமும். முஸோலினி மறைந்துவிட்டான். ஹிட்லருக்கு மசண்டை சமயம் வந்துவிட்டது. இருள் மூடப்போகிறது. ரோமில் குண்டுவீச்சு ஏற்பட்டபொழுது முஸோலினி அங்கில்லை. வடக்கு இதாலியில் ஹிட்லருடன் சம்பாஷணை செய்துகொண்டிருந்தான். அதன் நடவடிக்கைகள் ரகசியமானவை. ப்ரென்னர்கணவாயில் இரு சர்வாதிகாரிகளும், ஆடம்பரத்துடனும் ஸந்நாகத்துடனும் சந்தித்துப் பேசியகாலம் போய்விட்டது. ஹிட்லர் முஸோலினியை பெர்கஸ்காடனுக்கு வரவழைத்து சம்பாஷணை செய்த தோரணையும் போய்விட்டது. ஹிட்லர் தன்னுடைய மாளிகையைவிட்டு தெற்கே வந்தார். முஸோலினி வடக்கேசென்று இருவரும் சந்தித்துப் பேசினார்கள். ஆகிலும், ஒருவருக்கொருவர் யாதொரு ஒத்தாசையும் செய்ய முடியவில்லை. நிலைமையை இருவரும் நன்றாய் பரிசீலனை செய்தார்கள். நிலைமையைக் கூடமாக மதித்திருப்பதில் பிரயோஜனமில்லை. பிறகு இருவரும் பிரிந்துவிட்டார்கள். முஸோலினி தன் அதிகாரத்தைத் துறந்துவிட்டான். கிழக்குப் போர்முனையிலுள்ள சேனாதிபத்யத்தை ஏற்றுக் கொள்ள ஹிட்லர் சென்றுவிட்டான். சென்ற தடவை இரு சர்வாதிகாரிகளும் கூடிப் பேசியபின் டேனிஸ் விழுந்தது. இந்தச் சந்திப்புக்குப்பின் இதாலியின் வீழ்ச்சி ஏற்படலாம்.

வி வி வி வி வி

திசை தெரியாமல் திண்டாடுகிறான். ஹிட்லரின் வருங்கால கதி கோரமாயிருக்கிறது. தன்னுடைய கூட்டாளியின் வீழ்ச்சியைக் கேட்டு ஹிட்லர் விமான மூலமாக அவசரமாக பெர்லினுக்கு வந்துவிட்டானாம். பெர்லின் நகரத்திலும், நெருக்கடியான நிலைமை ஏற்படும்போல் தோன்றுகிறது. ஹிட்லர் இன்னும் ஏராளமாகப் பிரயாணம் செய்யவேண்டிவரும். எல்லா திக்குகளிலும், ஆக்கிரமிப்பு நாடுகள் ஆக்ஷிக்குட்பட்ட நாடுகளின் தலை நகரங்களுக்கும் சென்று, அவர்களைக் கெஞ்சிக் கேட்டும், உத்சாகப்படுத்தியும், வேண்டிக்கொண்டும் இன்னும் பலவிதமான காரியங்களையும் அவன் செய்யவேண்டிவரும். அவன் ஸோபயாவுக்கும், புகாரஸ்டுக்கும், ப்ராகுக்கும், புடாபஸ்டுக்கும், வியன்னாவுக்கும் செல்லவேண்டிவரும். ஸிஸிலியின் நடவடிக்கை புலப்பட்டுவிட்டது.

வி வி வி வி வி

'ஸ்வதந்திர ஜெர்மனி.' மாஸ்கோவில் ஜெர்மானியர்கள் கொண்ட "ப்ரீ ஜெர்மனி" என்று பெயர் வழங்கிய தேசீய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியில் ஜெர்மன் யுத்தக் கைதிகளும், ஜெர்மன்

மந்திரி சபையின் அங்கத்தினர்களும், வர்த்தக சங்க மெம்பர்களும் சேர்ந்திருக்கிறார்கள். கமிட்டியார்கள் ஜெர்மன் பாஷையில் ஒரு பத்திரிகையும், துண்டுபிரசுரங்களும் வெளியிட்டு, அவைகள் ஜெர்மனியில் ஏராளமாகப் படிக்கப்படுகின்றன. அது ஒரு விளம்பரத்தையும் விடுத்திருக்கிறது. அதாவது. "ஜெர்மனியின் அதோகதிக்கு ஹிட்லர்தான் காரணம். ஜெர்மனியின் வீழ்ச்சி நெருங்கிவிட்டது. ஒருவரும் ஹிட்லருடன் சமாதானம் செய்துகொள்ள மாட்டார்கள். ஆகையால், இப்பொழுதே தேசிய ஜெர்மன் நிர்வாகத்தை அமைத்துவிட வேண்டும். ஜெர்மன் மக்களை யுத்தத்திலிருந்து விடுவிப்பதற்கு இந்த நிர்வாகம்தான் அவசியம். அவ்விதம் ஏற்பட்ட அரசாங்கம் உடன் காலத்திலேயே ராணுவ நடவடிக்கைகளை நிறுத்திவிடவேண்டும், துருப்புகளை ஜெர்மனியின் எல்லைச் சரகத்துக்குத் திருப்பி அழைத்து விடவேண்டும். அதன்பின் சமாதானப் பேச்சுகளையும் துவக்கவேண்டும்.

வி வி வி வி வி

ஆக்கிரமிப்பு ஐரோப்பிய நாடுகள் : யூகோஸ்லாவியா. ரோமல் கிரீஸுக்குச் சென்றிருக்கிறார். ஸோபியாவில் பெரிய கலவரங்கள் உண்டாகிவிட்டன. ராணுவப் படைகளின் நடமாட்டம் ஏற்பட்டிருக்கிறது. மாஸிடோனியாவுக்கும் கிரேஸுக்கும் உதவிப்படைகள் ஏராளமாக அனுப்பப்படுகின்றன. கிழக்கு, மத்திய பாஸினியாவில் பலமான சண்டை நடைபெறுகிறதாம். மாண்டினீக்ரோவிலிருந்து வந்த சேனையானது அநேக முக்கியமான நகரங்களைப் பிடித்துவிட்டது. கிளாடாஞ்சும் விளாஸெமிகாவும் பிடிபட்டுவிட்டன. ஒரு வருஷத்தில் குரோஷியாவில் 250 ரெயில் வண்டித் தொடர்கள் உடைக்கப்பட்டன. ஸெர்பியாவில் ஜெனரல் மகிலோ விஷியிடமுள்ள துருப்புகள் செட்னிக் குயிஸ்லிங்குகளின் அழைப்பைப் புறக்கணித்து விட்டனர். நேசதேசப் படையெடுப்புக்குச் சாதகமாக யூகோஸ்லாவியாவில் எதிர்ப்பு முறைகள் நடைபெற்று வருகின்றன. ஜூலை மீ 22-ம் தேதியன்று பிரிடிஷ் விமானப்படையின் இன்ஸ்பெக்டர் ஜெனரலான, ஸர் பிலிப் ஜோபர்ட்டிலா பெர்டா என்பவர் பின்வருமாறு ஒலிபரப்பினார். "இதாலியைப் படையெடுப்பதிலிருந்து சௌகரியங்கள் உண்டாகிவிடும். இதாலியை நேச நாடுகள் படையெடுத்து மெதுவாக ஆல்பஸ் மலைவரையில் முன்னேறும் வரையில் அவர்களை இழுக்கடித்து விட்டால் ஜெர்மானியர்களுக்குத் திருப்தியளிக்கும். இவ்விதமாக காலஹரணம் செய்து எதிரிகளை சோர்வடையும்படி செய்துவிடலாமென்று ஜெர்மானியர்கள் நம்பியிருக்கிறார்கள். நேசதேசத்தாருக்கு வேறு திட்டங்களிருக்கின்றன." ஸ்லோவேனியாவிலுள்ள பொதுமக்கள் கக்ஷியின் தலைவரும், யூகோஸ்லாவிய நிர்வாகத்தின் உதவி பிரதம மந்திரியுமான டாக்டர் மிகோ கிரக் என்பவர் பின்வருமாறு அறிக்கை விடுத்திருக்கிறார்.

"முஸோலினியின் வீழ்ச்சியைக் கண்டு ஒவ்வொரு ஸ்லோவேயனும் மகிழ்ச்சியடைவார்கள். நிரபராதியான ஒருவன் 25 வருஷங்களாக காராகிருகத்தில் அடைக்கப்பட்டு, இப்பொழுது அவனுடைய நடவடிக்கையை பரிசீலனை செய்யும் சமயம் வந்துவிட்டதென்றும் அதின் மூலமாக தான் நிரபராதி என்று ருஜுச் செய்து தன்னுடைய ஸ்வதந்திரத்தைப் பெற்றுவிடலாமென்று சந்தோஷப்படுபவனைப்போல ஸ்லோவேனியர்களும் ஆனந்தப்படுகிறார்கள்.

"இதாலிய மக்களுக்கு முஸோலினி சர்வாதிகாரியாகயிருந்திருக்கலாம். யூகோஸ்லாவியர்களுக்கு, விசேஷமாக ஸ்லோவேனியர்கள் சம்பந்தப்பட்டமட்டில், அவன் கொடுங்கோல் மன்னன், கொலை பாதகன், கொடுந்துன்பமும் அக்கிரமும் உருவாக வந்தவன். இந்த யுத்தத்தில் மட்டும் பாஸிஸ்ட் கக்ஷிக்காரார்கள் ஸ்லோவேனியாவிலுள்ள 176 கிராமங்களை அழித்திருக்கிறார்கள். 1,962 பிணையாளிகளை வதைத்திருக்கிறார்கள். ஸ்லோவேனியர்கள் பழிக்குப்பழி வாங்கியிருக்கிறார்கள். முஸோலினியும் பாஸிஸமும் அழிந்த பிறகு அவர்கள் உயிர் தப்பிவிட்டார்களென்பதில் அவர்கள் பெருமை பாராட்டுகிறார்கள். இப்பொழுது நாங்கள் நேசதேசங்களின் கோஷ்டியின் முன்வந்துவிட்டோம். கொடுமையினின்றும் விடுதலை பெறுவதற்கும், நாகரீகம் படைத்த ஒவ்வொரு தேசத்துக்கும் உரித்ததான ஸ்வய நிர்ணய உரிமையை அடைவதற்கும் நாம் சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கொடுங்கோல் மன்னன் மறைந்துவிட்டான். ஸ்லோவேனிய மக்களுக்கு ஏற்பட்ட துயரம் நிரந்தரமாக ஒழிந்து விடுமென்று நாங்கள் நம்புகிறோம்."

வி வி வி வி வி

கிரீட். ஜூலை 4-ம் தேதி ஹெராக்ளியானை நேசதேசங்கள் தாக்கியதிலிருந்து மகத்தான சம்பவங்கள் நேரிட்டுவிட்டன. கிரீட் பூராவிலும் இரவு நடமாட்டத் தடை உத்தரவு பிறந்துவிட்டது. சினிமாப் படக் கொட்டகைகள் மூடப்பட்டுவிட்டன. 50 கிரீட் ஜனங்கள், நேச நாடுகளுக்கு உதவியளித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள். கிரீட்டின் ராணுவ கவர்னரான

ஜெனரல் ப்ரானரையும் அவருடைய வேலைக்காரர்களையும் கூடிய சீக்கிரத்தில் யுத்தக் குற்றவாளிகளாக மதித்து சிக்ஷித்து விடுவோமென்று நேசநாடுகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி

பிரான்ஸ். பிரான்ஸிலுள்ள ஜெர்மன் துருப்புகளைத் தாக்கும் நடவடிக்கைகள் அதிகரித்துவிட்டன. பாரிஸ்ஸில் லாரிகளில் செல்லும் துருப்புகளையும், மாலுமிகளையும் கைத் துப்பாக்கிகளைக்கொண்டு தாக்கிவருகிறார்கள். காரில் ஏறிக்கொண்டிருந்த ஒரு ஜெர்மானிய ஜெனரல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வி வி வி வி வி

அல்பேனியா. அல்பேனியாவிலுள்ள முக்கியமான இடங்கள் கொரில்லாப் படைத் தலைவர்கள் வசமாகிவிட்டன. அல்பேனியாவைப் பாதுகாக்க ஹங்கேரியத் துருப்புகளை அனுப்பும்படி ஹிட்லர் வேண்டிக்கொண்டு விட்டான்.

அல்பேனியாவில் 50 கொரில்லாப் படைகளிருக்கின்றன. தெற்கு அல்பேனியாவில் தொரபலில் நடைபெற்ற போரில் கொரில்லாப்படைகள் இதாலியர்களை முறியடித்து விட்டன. கொராவாடியை இதாலியர்கள் திருப்பித்தாக்கினபொழுது அவர்களுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டது. அல்பேனியர்களைச் சமாதானப் படுத்த இதாலியர்கள் செய்த பிரயத்தனமும் வீணாகி விட்டது. முதலாவதாக ஜனங்கள் துவேஷித்த இதாலிய வைஸ்ராயான ஜாகோமினி வேலையிலிருந்து நீக்கப்பட்டார். பிறகு நிர்வாகத்தில் மாறுதல்களும் திருத்திய அமைப்பும் செய்யப்பட்டன. ஆகிலும், யூகோஸ்லாவிய கொரில்லாச் சண்டை பலமடைந்தது. அபிஸீனியா சக்ரவர்த்தி பட்டத்தையிழந்துவிட்ட எமானுவல் மன்னர் கூடிய சீக்கிரத்தில் அல்பேனிய மன்னர் என்ற பட்டத்தையும் இழந்து விடுவார். நியூஸ் கிரானிகள் பத்திரிகையில் பின்கண்ட ஒரு செய்தியை அல்பேனிய அரசரான ஸாக் என்பவர் எழுதியிருக்கிறார்.

"பாஸிஸ்டு அரசாங்கத்தார் கையாண்டுவந்த சாம்ராஜ்யக்கொள்கையின் காரணத்தினால்தான் முஸோலினியின் வீழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. அல்பேனியர்கள் நேசநாடுகளுடன் கலந்து நின்று ஸ்வதந்திரத்தையும் நியாய மார்க்கத்தையும் ஸ்தாபிக்கச் சண்டைசெய்யும் நேசநாட்டுத் துருப்புகளுக்கு ஒத்தாசை செய்யத்தயாராகயிருக்கின்றார்கள்."

வி வி வி வி வி

கோடைகால ஜெர்மன் முன்னேற்ற யுத்தம். மார்ஷல் ஸ்டாலின் உத்தியோக முறையில் வெளியிட்ட அறிக்கையிலிருந்து ஜூலை 5-ம் தேதி ஆரம்பமான ஜெர்மானியரின் வேனிற்கால யுத்தம் ஜூலை 23-ம் தேதியன்று முற்றிலும் குலைந்துவிட்டதென்று தெரியவருகிறது. ஜூலை 5-முதல் ஜூலை 23 வரையில் நடைபெற்ற யுத்தத்தில் எதிரிக்குப் பின்கண்ட நஷ்டங்கள் ஏற்பட்டு விட்டன. 70,000 ஆபீஸர்களும், மனிதர்களும் இறந்து விட்டார்கள். 2,900 டாங்கிகளும், 115 தானாகச்சுடும் பீரங்கிகளும், 844 பெரிய பீரங்கிகளும், 1,392 விமானங்களும், 5,000-க்கு மேற்போன லாரிகளும் நாசமாகிவிட்டன அல்லது பழுதுபட்டன.

ஓரலிலிருந்து ஜெர்மானியர்களை துரத்தியடிப்பதற்காக ருஷ்யப்படை ஓரலைச்சுற்றி வளைத்து வருகிறது. இந்த வளையம் பிரயான்ஸக்—ஓரல் இருப்புப்பாதையை அடையும் பொழுது சுற்றிவரும் வளையம் பூர்த்தியாகிவிடும். ஓரல் ஒரு முக்கியமான கேந்திர ஸ்தலம். எதிரி தற்காப்பு முறையிலிருந்தாலும் சரி, அல்லது வருங்காலத்தில் முன்னேற்ற யுத்தம் ஆரம்பித்தாலும் சரி, ஓரல் விழுந்துவிட்டால் எதிரிக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

கிழக்குப் போர்முனையில் ஜெர்மன் வேனிற்கால முன்னேற்ற யுத்தம் வெற்றிகரமாக முடிந்துவிடுமென்ற உறுதி போய்விட்டது. ருஷ்யர்கள் வேனிற்கால முன்னேற்ற யுத்தத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து விடுவார்களென்ற ஹேஷ்யமும் புலப்படுகிறது. ஓரலில் ருஷ்ய முன்னேற்றம் முற்போக்கான நடவடிக்கையாகயிருக்கலாம். ருஷ்யப் படையினர் மும்மரமாக வேலைசெய்து வருகின்றார்கள்.

வி வி வி வி வி

யூ படகுகள் அழிக்கப்படுகின்றன. ஜூலை மாதம் 10-ம் தேதியன்று பெர்லின் ஒலிபரப்பில் நடைபெற்ற பிரசங்கத்தின் சில குறிப்புகளை இங்கு பிரசுரிக்கிறோம். "நீர்மூழ்கிகளின் யுத்தம்" என்ற தலையங்கத்தின் கீழ் உதவி கடற்தளபதி லூயட் ஸௌ பேசிய பிரசங்கத்தின் சில அம்சங்கள் இங்கு கூறப்படுகின்றன. நீர்மூழ்கிகளை

எதிர்க்கும் தற்காப்பு முறைகள் பலப்பட்டுவிட்ட படியால், நீர்மூழ்கிகள் தளத்தைவிட்டுப் புறப்பட்டுத் திரும்பிவரும் வரையில் இடைவிடாது கோரமான யுத்தம் செய்யவேண்டியிருக்கின்றன. முதலில் கடலிலுள்ள எதிரியின் ரோந்துப் படைகளை சமாளிக்கவேண்டும். கடற்கரையை ஒட்டியுள்ள பிரதேசத்திலுள்ள எதிரியின் விமான தற்காப்பை சாமாளிக்க வேண்டும். அதற்காக நீர்மூழ்கிகள் தண்ணீருக்குள் மூழ்கினால் அதன் வேகம் குறைந்து விடுகிறது. அவ்விதம் செய்யாவிட்டால் பீரங்கியின் குண்டுகளுக்கும், வெடிகுண்டுகளுக்கும் இலக்காகவேண்டியிருக்கிறது.

இந்தப் பிராந்தியத்தை நீர்மூழ்கிகள் பத்திரமாகக் கடந்துவிட்டால் எதிரியின் துணைக் காவல் கப்பல்களைத் தேடவேண்டிய மகத்தான வேலையிலீடுபடவேண்டி யிருக்கிறது ராணுவ அதிகாரிகளுக்கும் இது சிரமசாத்யமான வேலை. நீர்மூழ்கியின் திருஷ்டி கோசரம் நாசகாரிகளும் விமானங்களும் துணையாகயுள்ள எதிரியின் சாமான் கப்பல்களின் திருஷ்டியை விட எட்டுமடங்கு குறைவானது.

துணைக்காவல் சப்பல் கூட்டத்தைக் கண்டுபிடித்த பின்னும் மேலே சொல்லிய வெளிப் பக்கத்துத் தற்காப்புகளை அவைகள் சமாளிக்கவேண்டும், அல்லது அவைகளுக்குப் போக்குக் காட்டவேண்டும், அல்லது அவைகளை ஊடுருவிச்சென்று கப்பல்களை நேர்முகமாகவோ அல்லது விலாப்பக்கங்களிலோ தாக்க வசதியான ஸ்தானங்களை அடையவேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு நீர்மூழ்கி அடிக்கடி தண்ணீருக்குள் மூழ்கும்படி நேரிட்டு அதன் வேகம் குறைவு படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு துணைக்காவல் கப்பல்கள் பழுதுபடாமல் நீர்மூழ்கிகளைத் தாண்டிச் செல்ல சௌகரியமேற்படுகிறது. தாக்குவதற்கு மறுபடியும் சௌகரியமான ஸ்தானத்தை அடைவதற்கு எதிரியின் துணைக்காவல் கப்பல்களின் கண்ணுக்குட்படாமல் நீர்மூழ்கி அதிவேகமாகச் செல்லவேண்டும். இந்த நடவடிக்கைகளுக்குப்பின் திரும்பி நீர்மூழ்கி தளத்துக்குவரும்பொழுது மறுபடி கடற்கரையோரமாக உள்ள எதிரியின் ரோந்துப் படைகளுடன் போர்புரியவேண்டும்.

வேடனை ஒருவர் வேட்டையாடுவதுபோல் தோன்றுகிறது. ஹிட்லர் டம்பமாகப் பீத்திக்கொண்டதும் கடைசியான யுத்த தந்திரமுமான யூ-படகுகள், நமது கப்பல்களைத் தாக்குவதைவிட தன்னைக்காப்பாற்றிக்கொள்ளும் முறைகளில்தான் அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

வி வி வி வி வி

கூட்டுறவும், யுத்தமும். யுத்த சிரமத்தினால் இந்தியாவில் ஏற்பட்ட அபிவிருத்தி முறைகளில் ஐக்கிய சங்கங்களும் மகத்தான சேவைசெய்ய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இதுவரையில் திருப்திகரமாக வேலை செய்துவந்த ஐக்கிய சங்கங்கள், லேவாதேவி செய்துவந்த முறைகளுடன், உற்பத்தி, பங்கீடு, செலவிடுவது போன்ற வேலைகளிலும் ஈடுபடலாம். ஐரோப்பிய, அமெரிக்க சங்கங்களின் நடவடிக்கைகளையொட்டி இவைகள்தான் ஐக்கிய சங்கங்களின் முக்கிய அலுவல்களாகும். இந்திய நிர்வாகத்தின் மார்க்கெட்டிங் ஆபீஸர் சொல்லுகிறபடி "ஐக்கிய வியாபாரம் விருத்தியடைந்தால் உற்பத்தி செய்கிறவருக்கு விற்பனைத் தொகையின் பெரும்பாகம் தாராளமாகப் போய்ச்சேரும்" என்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய சங்கங்கள் லேவாதேவி செய்யும் வேலையைச் செய்வதுடன், தன்னுடைய வேலையை விருத்திசெய்யவேண்டும். அவ்விதம் செய்தால் உற்பத்தி செய்கிறவர்களும், சங்கத்திலிருந்து கடன் வாங்குவார்கள். சாமான் வாங்குகிறவர்கள் சங்கத்தில் சாமான் கொள்முதல் செய்வார்கள். அவசியமானால் சங்கங்கள் சொந்தத்தில், கடைகளையும், கிட்டங்கிகளையும் ஏற்பாடுசெய்து வியாபாரம் நடத்தலாம். சாமான் உற்பத்தி செய்கிறவர்கள் பணத்தையும் அல்லது உற்பத்திக்குவேண்டிய மூலப்பொருள்களையும் கடன் வாங்கிக்கொள்ளலாம். சாமான் வாங்குகிறவர்கள் சாமான்களுக்குப் பதிலாக பணத்தையோ அல்லது உற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருள்களையோ கொடுத்துவிடலாம். இந்தச் சங்கங்கள் விலைவாசி கட்டுப்பாடு ஏற்பாட்டுடன் தொடர்பு வைத்துக்கொள்ளலாம். வட இந்தியாவில் கரும்பு உற்பத்தி செய்கிறவர்களுக்கும், சக்கரை காய்ச்சும் தொழிற்சாலைகளுக்கும் தொடர்பு வைத்திருக்கும் சங்கங்களிருக்கின்றன. ஆபிரிக்காவிலுள்ள சங்கங்கள் மெம்பர்களுக்காக கோதுமையை அறைத்துக்கொடுக்கின்றன. இவ்விதமாக சங்கங்கள் அபிவிருத்தியடைவதற்கு பல முறைகளிருக்கின்றன. ஆகிலும் ஒரு எச்சரிக்கை. இந்தத் துணிவுகரமான நடவடிக்கைகளைச் சிறப்பாகயுள்ள சங்கங்களும் நம்பிக்கை உள்ள வேலைக்காரர்களைக்கொண்டு நடத்தினால்தான் பிரயோஜனப்படும். லேவாதேவியைப்போல் வியாபாரம், நடத்துவதும், உற்பத்தி செய்வதும் மிகவும் கஷ்டசாத்தியமான காரியங்கள். விசேஷமான பயிற்சியும் முன் ஜாக்கிரதையும் அவசியமானவை. ஆனால், முயற்சி இனிது முடிவடைந்தால் தேசத்துக்குப் பொருளாதார முறையில் புத்துயிர் உண்டாகும். கஷ்டமாயிருக்கும் சமயத்தில் சாமான்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த உபயோகமுள்ளதாகயிருக்கும்.

புதுக்கோட்டையில் யுத்த முயற்சிகள். அதிகமாக உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்தல், அல்லது அநியாய லாபம் சம்பாதித்தல் இவைகளைப் பற்றி நம்பத்தகுந்த தகவல்களைக் கொடுக்கும் நபருக்கு ரூ. 10-க்கு மேற்படாத வெகுமதி கொடுப்பதாகவும் அதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் பொருள் ஒதுக்கி வைத்திருப்பதாகவும் புதுக்கோட்டையில் அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். தனிப்பட்ட நபர்களுக்கு இந்த வெகுமதித் தொகை அதிகரிக்கப்படும். 10 ரூபாய்க்கு மேற்படாத வெகுமதி வழங்கும் உரிமை போலீஸ் சூபரின் டென்டெண்ட் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய ஸமஸ்தான தொழிலாளர்கள் பகுதிகள்.

24—7—43-ம் தேதியன்று புதுக்கோட்டை ஸமஸ்தானம் புதுக்கோட்டை டவுன் ஹாலில் இந்திய ஸமஸ்தான தொழிலாளர்களின் பிரதம லியாஸான் ஆபீஸரான மிஸ்ட்டர் வாக்கர் செய்த பிரசங்கம்.

சென்ற நான்கு வருஷங்களாக புதுக்கோட்டை ஸமஸ்தானம் யுத்த முயற்சிகளில் செய்து வரும் நடவடிக்கைகளைக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். தொழிலாளர் சம்பந்தமான நடவடிக்கைகளில் எனக்கு அதிக அனுபவமுண்டு. தொழிலாளர்கள் எவ்வகையில் பிரசாரம் செய்வது, யுத்த முயற்சிகளில் ஈடுபடுவது என்ற இரு பிரச்னைகள் தொழிலாளிகள் முன் நிற்கின்றன. இவைகளை எவ்விதம் நடைபெறும்படி செய்வதென்று அவர்கள் ஆலோசனை செய்துவருகிறார்கள். புதுக்கோட்டை ஸமஸ்தானம் இதை நடைமுறையில் அனுஷ்டித்துக் காட்டிவிட்டது. புதுக்கோட்டை தேசிய யுத்த முன்னணி நிலயத்தார் பிரசுரிக்கும் சிறந்த பத்திரிகையைத் தென் இந்தியாவிலுள்ள எல்லா தொழில் ஸ்தாபனங்களும் படித்துவருகிறார்கள்.

தொழிலாளர்கள் பகுதி.

தொழிலாளர் பகுதியென்னவென்று இப்பொழுது கூறுவோம். 1942-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஜப்பானியரின் தாக்குதல் பலமாகயிருந்தபொழுது, இந்தியாவில் ஏராளமான தற்காப்பு வேலைகளைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்த வேலைகளுக்குத் தொழிலாளர்களும் ஏராளமாகத் தேவையாகயிருந்தது. ஜெனரல் தலைமை காரியாலயத்தைச் சேர்ந்த குவார்ட்டர் மாஸ்ட்டர் ஜெனரல் வைஸ்ராயைச் சந்தித்து அப்பொழுது டில்லியில் மகாநாடு நடத்திக்கொண்டிருந்த ஸமஸ்தான மன்னர்களைக் கலந்து, அவர்கள் தொழிலாளர்களைத் திரட்டி அனுப்ப உதவிசெய்வார்களாவென்று கேட்டுத் தெரிவிக்குமாறு வைஸ்ராயை வேண்டிக்கொண்டார். ஸமஸ்தான மன்னர்கள் ஒப்புக்கொண்டார்கள். இதிலிருந்துதான் இந்திய ஸமஸ்தான தொழிலாளர் பகுதிகள் உண்டாகின. இந்தியாவின் பல பாகங்களிலுள்ள இந்திய ஸமஸ்தானங்கள் அவர்களாலியன்ற அளவு ஆட்களை அனுப்பினார்கள். தென் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் மிகவும் சிலாக்கியமானவர்கள். இவர்கள் பெரும்பாலும் கொச்சி, திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்தவர்கள். இந்த ஸமஸ்தானங்களிலிருந்து இன்னும் அநேகர்களை அனுப்புமாறு வேண்டப்பட்டது. தொழிலாளர்களின் தேவை அதிகமாகிவிட்டது. புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைவிடப் பெரியதும், ஆனால் சிறிய ஸமஸ்தானமுமான கொச்சின் ஸமஸ்தானம் சென்ற 15 மாதங்களுக்குள் 850 நபர்கள்கொண்ட 50 பகுதிகளை அஸ்ஸாமுக்கும், 8 பகுதிகளை ஸிலோனுக்கும் அனுப்பியிருக்கிறது. திருவாங்கூரிலிருந்து 6 பகுதிகள் சென்றிருக்கின்றன. இன்னும் நான்கு பகுதிகளும் செல்லக்கூடும்.

ஒரு பகுதியின் அமைப்பு.

ஒரு பகுதியில் 800 பேர்களிருக்கிறார்கள். இவர்களுக்குத் தென் இந்தியா தொழிலாளி ஒருவர் தலைமை அதிகாரி. அவருக்கு அடுத்த அதிகாரி ஸமஸ்தானத்தைச் சேர்ந்தவர். அவரிடம் ஸூபர்வைஸர்களும், ஒரு குவார்ட்டர் மாஸ்டரும் இருக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியும் 25 தொழிலாளர்கள்கொண்ட சிறிய கூட்டமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவருண்டு. ஒவ்வொரு பகுதியிலும் சமையல்காரர்களும், போலீஸ்காரர்களும், ஆஸ்பத்திரியும், டாக்டரும், கம்பவுண்டரும், நான்கு ஆண் நர்ஸுகளும்,

போதுமான மருந்து வசதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பகுதியும் தனிப்பட்ட முறையில் சகல வசதிகளையும் பெற்றிருப்பதால் எந்த இடத்திற்கும் அவைகளை நொடிப்பொழுதில் கொண்டுபோகக்கூடும்.

அவர்களின் சுகாதாரம், க்ஷேமம்.

தொழிலாளர் பகுதியின் க்ஷேமத்தை, நானும், என்னைச் சேர்ந்த ஸமஸ்தான ஆபீஸர்களும் கவனித்துவருகிறோம். என்னுடன் இந்திய ஆபீஸர்களும் வேலை செய்துவருகிறார்கள். இவர்களைத் தவிர கல்கத்தா, மணிபூர், மற்ற இரண்டு இடங்களில் தொழிலாளர்களை அனுப்புவதற்காகக் குமாஸ்தாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களைத் தவிர அநேக ஸமஸ்தானங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மொழி பெயர்க்கும் உத்தியோகஸ்தர்கள் அநேகர் இருக்கிறார்கள். இவர்கள் ராணுவ ஆஸ்பத்திரியில் வேலை செய்துவருகிறார்கள். தொழிலாளர்களின் தேக ஆரோக்கியத்தைத் தெரிந்துகொண்டு, ராணுவ டாக்டர்களிடம் அதை மொழிபெயர்த்து அறிவித்துவிடுவார்கள். அவர்கள் மலையாளம், தமிழ், ஹிந்துஸ்தானி முதலிய பாஷைகளைப் பேசுகிறார்கள். இம்மாதிரியான அநேகரை நியமிப்பதற்கு எனக்கு அதிகாரமுண்டு. தேவையானவர்களை நியமிப்பதிலும் நான் தயங்குவதில்லை.

கூலி ஒருவன் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டால் அவனுக்கு அடையாளச் சீட்டு கொடுக்கப்படும். அந்தச் சீட்டின் பின்பக்கமுள்ள விதிகளின்படி அந்தச் சீட்டைப் பூர்த்தி செய்யவேண்டும். அவனுக்கு ஒரு பித்தளை வில்லையும் கொடுக்கப்படும். வில்லையை ஒரு பித்தளைச் சங்கிலியில் கோர்த்து அவன் போட்டுக்கொள்ளவேண்டும். வில்லையில் கூலியின் நம்பர், காங்க் நம்பர், பகுதி நம்பர், அவனுடைய ஸமஸ்தானத்தின் பெயர் எல்லாம் வரையப்பட்டிருக்கும். சொந்த ஊருக்குத் திரும்பிவரும் வரையில் அவன் வில்லையைப் போட்டுக்கொண்டிருக்கவேண்டும். எந்தச் சமயத்திலும் ஒரு கூலி எந்த வகுப்பைச் சேர்ந்தவனென்று வில்லையைப் பார்த்துக் கண்டுபிடித்துவிடலாம். நோய்வாய்ப் பட்டு வேலை செய்ய முடியாதவர்களை கார்களில் இட்டுக்கொண்டுபோய்க் கல்கத்தாவுக்கு அனுப்பி அங்கே ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்வார்கள். அப்பொழுது அவர்களுக்கு தினசரி ஒரு ரூபாய் சம்பளமும், ரிக்ரூடிங் ஆபீஸரிடம் மறுபடி அவர்கள் வேலைக்கு ஆஜராகும் வரையிலும் தினசரி ஒரு ரூபாய் சம்பளமும் வழங்கப்படும். ஆஸ்பத்திரியிலிருக்கும்பொழுது ஆகாரமும் இலவசமாகக் கொடுக்கப்படும்.

அஸாமுக்கு வந்தவுடன் அவர்களுக்கு ஆடைகள் கொடுக்கப்படுகின்றன. ரோமங்களால் செய்யப்பட்ட காகி அங்கிகளும், ஷர்ட்டுகளும், மலேரியாவைத் தடுப்பதற்காக மெழுகும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அவர்களிருக்கும் குடிசைகளில் ப்ளிட் என்னும் எண்ணெயும் தெளிக்கப்படும். அவர்களுக்குக் கொசு வலைகளும் கொடுக்கப்படுகின்றன. குடிசைகள் தென்னங்கீத்துகளால் மேயப்பட்டிருக்கின்றன. நல்லக் குடி தண்ணீர் வசதியுண்டு. குழாய்கள் இல்லாத இடங்களில் கிணறுகள் தோண்டப்படுகின்றன. சுகாதார வசதிகளை சுகாதார இலாகா கவனித்துவருகிறது. பொழுது போக்குக்காக ஒவ்வொரு பகுதிக்கும் ராணுவ இலாகா ரூபாய் 100 மாதா மாதம் கொடுத்துவருகிறார்கள். சிலர் கால் பந்துகளையும், சிலர் வாலி பந்துகளையும், சிலர் தங்களிஷ்டம்போலும் பணத்தைச் செலவிடுகிறார்கள்.

ஆகார வசதிகளும், ஊதியமும்.

ஒவ்வொரு கூலிக்கும் நாளைக்கு ஒரு ரூபாய் சம்பளம். அவன் 5½ மணி நேரம் வேலை செய்யவேண்டும். அதன்பின் அவன் இஷ்டப்பட்டால் வேறு வேலைகளைச் செய்து அதிகப் பணம் சம்பாதிக்கலாம். அவர்களுக்கு ஆகார வசதிகள் தாராளமாகக் கொடுக்கப்படுகின்றன. சிப்பாய்களுக்குக் கொடுக்கும் உணவுதான் கூலிகளுக்கும் கொடுக்கப்படுகின்றது. இவைகள் மிகவும் சிலாக்கியமானவை. ஸமஸ்தான கூலிகளுக்கு புழுங்கல் அரிசியும், புளியும், மலையாளிகளுக்கு தேங்காய் எண்ணெயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை கூலிகளுக்கு நல்லெண்ணெய் கொடுத்தால் சிலாக்கியமாகயிருக்குமென்று என்னிடம் சிலர் கேட்டுக்கொண்டார்கள். நான் என்னூருக்குச் சென்றபின் அதைப்பற்றி கவனிக்கிறேன். கூலிகளுக்குப் புதிதான கறிகாய்களும், உருளைக்கிழங்கும், மாமிசமும் (வாரத்தில் மும்முறை) பருப்பும், கறிகாய் வக்கிணிகளும், பழ வகைகளும் (ஆரஞ்சு அல்லது அன்னாசிப் பழம்) ஸப்ளை செய்யப்படுகின்றன. புதிய பழ வர்க்கங்கள் கிடைக்காவிட்டால் டப்பியிலடைத்த கனிகள் வழங்கப்படுகின்றன. பகுதியிலுள்ளவர்கள் ஆகாரத்தில் மாறுதல் செய்யவேண்டுமென்றால் அதையும் நாங்கள் பூர்த்திசெய்துவைக்கிறோம். உதாரணமாக வட இந்தியர்களுக்கு வெள்ளைப்பூண்டு அதிகமாகத் தேவையாகயிருக்கிறது. தென் இந்தியர்களுக்கு அது அருவருப்பாகயிருக்கிறது.

மலேரியா குளிர் ஜுரமில்லை.

அஸ்ஸாமில் மலேரியா ஜுரம் அதிகமென்று வதந்தி கிளம்பியிருக்கிறது. ப்ரஹ்மபுத்ரா நதிக்கரையிலும், தேயிலைத் தோட்டங்களிலும் மலேரியாவைத் தொலைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். இந்தப்பிராந்தியங்களில் மலேரியா ஜுரமே கிடையாது. சென்ற வருஷத்தில் வனங்களில் நமது துருப்புகள் சண்டை செய்தபொழுது அவர்கள் தானாகவே மலேரியா ஜுரத்தை வரவழைத்துக்கொண்டார்கள். சென்ற எட்டு மாதங்களாக மலேரியாவை அகற்றுவதற்கு வேண்டிய முறைகளைக் கையாண்டு வந்தோம். இதன் உண்மையை அறியவேண்டுமானால் கூலிகளின் ஆரோக்கியத்தைக் கவனிக்கவேண்டும். கொச்சினுக்குத் திரும்பி தாயகத்துக்குவரும் கூலிகளைக் கவனித்தீர்களேயானால் அவர்கள் ஆரோக்கியத்துடனிருப்பதையும். திரும்பி வேலைக்குச் செல்ல ஆசைப்படுவதையும் காணலாம். இதிலிருந்து அவர்கள் எவ்வளவு சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டுவந்திருக்கிறார்களென்று புலப்படும். இந்தியத் தொழிலாளர்களின் அக்கலரையையும் அவர்களின் க்ஷேமத்தையும் கவனிப்பதில் சேனையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் கவலைகொண்டிருக்கிறார்கள்.

கடிதப் போக்குவரத்து.

கூலிகளுக்குக் கடிதம் எழுதவேண்டுமானால் முத்திரை ஸ்டாம்புகள் ஒட்டிய கடிதங்களைத்தான் அனுப்பவேண்டும். ஆனால் ஸ்டாம்பு இல்லாமல் கடிதம் அனுப்பும் உரிமை அவர்களுக்கு உண்டு. அப்படி எழுதும்பொழுது "ஸ்டாம்புகள் கிடைக்கவில்லை. ஆகையால் ஸ்டாம்பு ஒட்டவில்லை. ராணுவத் தபால்" என்று கடிதத்தில் ஸுபர்வைஸர் கையொப்பமிடவேண்டும். அவர்களுக்கு அனுப்பும் கடிதங்களைக் கீழே குறிப்பிட்ட விலாசத்துக்கு எழுதவேண்டும். "புதுக்கோட்டை ஸமஸ்தானம் தொழிலாளர் பகுதி No. (1) c/o No. 6 தற்காப்பு பேஸ் போஸ்ட் ஆபீஸ்".

பணம் மீதம்.

யுத்த முயற்சியில் ஈடுபடுவதுடன், இந்த சேவையிலிருந்து ஸமஸ்தானத்துக்கும் லாபமுண்டு. கூலிகளின் ஊதியத்தில் ஒரு பாகம் ஸமஸ்தானத்திற்கு வந்துவிடும். கூலிகளின் ஊதியத்தில் பெரும்பாகம் ஒவ்வொரு மாதமும் ஸமஸ்தானத்துக்கு மணி ஆர்டர்மூலம் அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் அஸ்ஸாமிலிருந்து கொச்சி ஸமஸ்தானத்திற்கு 4 லக்ஷம் ரூபாய்கள் வந்துசேருகின்றன. புதுக்கோட்டைக்கும் அவ்விதமாக ஏராளமான பணம் வரக்கூடும்.

அவர்களுடைய ஊழியம்.

இந்தக் கூலியாட்கள் யுத்த முயற்சிக்கு உண்மையான, முதல்தரமான முக்யத்வமுள்ள பேருதவி செய்துவருகிறார்கள். அஸ்ஸாமில் தொழிலாளர்கள் குறைவு. அங்கே இந்திய வேலைக்காரர்கள் விமானத் தளங்கள் கட்டுவதும், ரஸ்தாக்கள் அமைப்பதும் இன்னும் மற்ற வேலைகளையும் செய்துவருகிறார்கள்.

வசதிகள்.

நமது கூலிகளுக்கு தமிழ் லிபி ஞானமும், தமிழ் எழுதும் முறைகளையும் ஓய்வு நேரங்களில் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றும் எனக்கு சிபார்சு செய்தார்கள். இந்த சிபார்சையும் நான் கவனிக்கிறேன். தொழிலாளர் பகுதியில் தமிழில் பாண்டித்தியமுள்ள அநேக உத்தியோகஸ்தர்களிருக்கிறார்கள். அவர்கள் தினசரி அரைமணி நேரம் கூலியாட்களுக்குப் படிப்பு சொல்லிக்கொடுக்கக்கூடும்.

ஒவ்வொரு பகுதியிலும் நாடகமேடை அமைக்கப்பட்டிருக்கிறது. பல பகுதிகளுக்குள் நாடகப்போட்டியும் நடைபெறும். தொழிலாளிகள் பகுதியிலுள்ளவர்களே ஒரு நாடகத்தை தயாரிப்பார்கள். மாதாக் கோவில்களும் கட்டப்படுகின்றன. மாதா கோவில்கள், ஹிந்து கோவில்கள், பள்ளிவாசல்கள் கட்டுவதற்கு ராணுவ இலாகா ஏராளமான பணம் செலவிட்டு வருகிறது.

தொழிலாளர்களும், விமானத் தாக்குதல்களும்.

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் முதல் இந்த வேலை நடைபெற்றுவருகிறது. அப்பொழுது தொழிலாளர்கள் கல்கத்தாவிலும், அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களிலும் வேலை செய்தார்கள். அப்பொழுதுதான் ஜப்பானியர்களின் விமானத்தாக்குதல் நடைபெற்றது. அவர்கள் வெடி விமானங்களின் லக்ஷியத்துக்குள்ளாகவில்லை. ஒன்று அல்லது இரண்டுபேர் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டாலும் ஒருவரும் இறந்துவிடவில்லை. வெடி விமானத் தாக்குதல் ஏற்படும்பொழுது தென் இந்திய கூலிகளின் தைரியத்தைப் பாராட்டி சேனைத் தலைவர்கள் எழுத்துமூலம் அறிவித்திருக்கிறார்கள். ஜப்பானிய விமானங்கள் திரும்பி விட்டபின் அவர்கள் வேலைத் தளத்துக்கு வந்துவிட்டார்கள். ஒரு சமயம் கொச்சியைச்

சேர்ந்த லாரி ஓட்டும் டிரைவர் ஜப்பானிய விமானத் தாக்குதலின்போது அகப்பட்டுக் கொண்டான். மற்றவர்கள் ஓடிவிட்டபோதிலும் அவன் தன்னுடைய அலுவலை விடாமுயற்சியுடன் நடத்திவந்தான். இந்தச் செய்கையை எல்லோரும் சிலாகித்துப் பேசினார்கள். எல்லாக் கூலிப் பகுதிகளும் இப்பொழுது அஸ்ஸாமில் வேலை செய்துவருகிறார்கள். 8 பகுதிகள் மட்டும் ஸிலோனுக்குச் சென்றிருக்கின்றன.

நம்பிக்கையும், வேண்டுகோளும்.

புதுக்கோட்டை கூலிகள் செய்துவரும் வேலையைப்பற்றி மாதாந்திர ரிபோர்ட்டின் பிரதியை ஸமஸ்தான நிர்வாகிக்கு அனுப்பலாமென்று உத்தேசித்திருக்கிறேன். இந்த ரிபோர்ட்டு திருப்திகரமாகயிருக்குமென்று நான் நம்புகிறேன். புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலிருந்து வரப்போகும் பகுதியின்பேரில் சேனை அதிகாரிகள் பூரணமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். யுத்த முயற்சிக்காக புதுக்கோட்டையில் நடைபெறும் ஏற்பாடுகளையும், அதில் அவர்கள் காண்பித்துவரும் ஆர்வத்தையும் கவனிக்கும்பொழுது இங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கும் கூலிகளின் பகுதியானது முன்னணிக்குச் சென்று கீர்த்தி பெற்று ஸமஸ்தானத்துக்கும் கௌரவம் விளைவிக்குமென்று நான் நம்புகிறேன்.

நமக்கு இன்னும் ஏராளமான தொழிலாளர்கள் தேவையாகயிருக்கின்றன. அநேகர் முன் வரவேண்டும். புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலிருந்து இன்னும் அநேக பகுதிகள் அனுப்பக்கூடுமென்று நினைக்கிறேன். புதுக்கோட்டை ஒரு சிறிய ஸமஸ்தானம். ஆகிலும் அது யுத்த முயற்சிக்குப் பேருதவி செய்திருக்கிறது. ஆகிலும் உணவுப்பொருள் கஷ்டத்தை நிவாரணம் செய்வதற்குப் பர்மாவை அவசியம் திரும்பிப் பிடித்துவிடவேண்டும். பர்மாவுக்காக நடைபெறும் யுத்தத்தில், இந்திய ஸமஸ்தான தொழிலாளர்கள் தங்களாலியன்றவற்றைச் செய்துவருகிறார்கள். இந்தப் பகுதிகள் சென்ற எட்டு மாதங்களாக அஸ்ஸாமில் கஷ்டமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவின் உணவுப்பொருள் கஷ்டத்தை ஒழிப்பதற்கு பர்மாவைத் திரும்பிப்பிடிப்பதுதான் அத்தியாவசியம்.

ரத்த வெறி பிடித்த எதிரியைத் தாக்குதல்.

(லிபரேடர்.)

நைல் நதிப் பிரதேசத்தில் வெற்றி கிடைத்தபின் "இந்த மகத்தான முடிவுக்கு வெற்றி என்ற பதப்பிரயோகம் போதாதென்று" நெல்ஸன் சொன்னார். மறுபடியும் நைல்நதி யுத்தத்தைப் போன்ற மற்றொரு யுத்தம் வர்ணிக்கமுடியாத தோற்றங்களுடன் முடிவடைந்துவிட்டது. நேசதேசப் படைகளுக்கு கிடைத்திருக்கிற ராணுவ வெற்றிகள் மகத்தானவை. அதேவிதமாக அச்சுநாடுகளின் ஆபிரிக்கத் துருப்புகள் இறுதியில் சரணடைந்ததும் முக்கியத்வமுள்ளது. ஜெர்மன் துருப்புகள் சந்தோஷகரமாக தியாக புத்தியுடன் சரணடைந்ததற்கும், யுத்தங்களில் வெற்றிபெற்றபொழுது ஜெர்மானியர்கள் கொலையும், கொடுமையும் விளைத்து வந்த கோரமான தோற்றத்திற்கும் மிகுதியான வித்தியாசமுண்டு.

நைல்நதிப் பிரதேசத்தில் நெல்ஸனுக்குக் கிடைத்த வெற்றி நதியின் முகத்வாரத்திலுள்ள அபூகர் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் கிடைத்தது. நைல் நதியிலிருந்து 2,000 மைல்களுக்குக்கப்பாலுள்ள மெட்ஜர்டா நதிப்பிரதேசத்தில் நாம் வெற்றிபெற்றோம். இவ்விதம் ஒப்பிட்டுச் சொல்லுதல் சர்ச்சைக்காக மட்டும் நடைபெறவில்லை. 1943-ம் வருஷத்தில் நடைபெறும் யுத்தப்போக்கின் அடிப்படையான அம்சங்களையும் இது தெளிவுபடுத்துகிறது. மாகினோ அரண்கள் மூன்று மைல்கள் கனமுள்ளதாகயிருந்தன. ஆகையால் அவைகள் பிரயோஜனப்படவில்லை. தற்காப்பு அரண்கள் 30 அல்லது 50 மைல்கள் வரையில், கட்டியிருந்ததால் ஜெர்மன் பான்ஸர் படையின் எதிர்ப்பைத் தடுக்கமுடியும். 1940-ம் வருஷத்தில் இப்பேர்ப்பட்ட புத்திமதி நமக்கு உறைக்கப்பட்டது. ருஷ்யத் தற்காப்பு போதுமானதென்றுகருதப்பட்டது. மேற்கு ஐரோப்பாவிலுள்ளதைவிட ருஷ்யத் தற்காப்பு பலமாகயிருந்தது.

ஜெர்மானியர் 500, 600, 700, மைல்கள் முன்னேறியபின்தான் ருஷ்யர்கள் எதிர்த்து நின்று சமாளிக்கமுடிந்தது. ருஷ்யப்போரின் நிலைமை மாறுதலடைந்தபொழுது ஜெனரல் டிட்மார் சொன்னதாவது. "ருஷ்யாவின் மாரிகால முன்னேற்ற யுத்தத்தை நமக்குள்ள விசாலமான பிரதேசம் முறியடித்துவிட்டது. எளிதில் சலனம் செய்யக்கூடிய தற்காப்புகளை அமைத்துக்கொள்ள ஜெர்மனிக்கு ஏராளமான ஸ்தல வசதி உண்டாகிவிட்டது."

மழ மழுப்பான யுத்தம்.

விசாலமான தற்காப்பு என்பது என்ன? இது பிரசாரமுறையில் சொல்லும் பரிபாஷை மட்டுமல்ல. இது 17, 18-வது நூற்றாண்டுகளில் நடைபெற்ற மழமழுப்பான யுத்தத்தின் நவீன அவதாரரூபம். அதாவது எதிரியைக் கூடியவரையில் சோர்வடையும்படி செய்து விடுகிறது. அபாய ஸ்தலம் வரையில் அவனுடைய போக்குவரவுகளை விஸ்தாரம் செய்யும்படி தூண்டிவிடுகிறது. தற்காப்பிலிருக்கும் சேனை யுத்தம் செய்யாமல் சும்மாயிருந்து விடுகிறது. அதாவது சண்டைக்கு இழுத்தாலும் போர்புரியாத கடற்படையைப்போல் அடைபட்டு நின்றுவிடுவது.

இப்பொழுது நாம் ஐரோப்பாவிலுள்ள அச்சுநாடுகளின் அரண்களை எதிர்க்கவேண்டியதுடன் மேலே சொல்லிய யுத்த தந்திரத்தையும் எதிர்க்கவேண்டும். ஐரோப்பிய அரணைத்தாக்குவதில் நாம் இப்பொழுது தீவ்ரமான நடவடிக்கையை ஆரம்பித்துவிட்டோம். ஆகிலும், நம்முடைய எதிர்ப்பு தற்காப்பு முறையில் நடைபெறுவது போல் காணப்படுகிறது. இந்த முறை எந்த சந்தர்ப்பத்திலும் மாறுதலடையக்கூடும். விரிவாகச் சொன்னால், நாஸி எட்டுக்கால் பூச்சியை நசுக்குவதற்குமுன் அதன் கொடுக்குகளை நறுக்கிவிடுவதற்காகத்தான் நேசநாடுகள் முயன்று வருகிறார்கள். நேசநாடுகளின் யுத்த தந்திர முறையில் ஜெர்மனியை முறியடிக்குமுன் ஸிஸிலி, இதாலி, பால்கன் நாடுகளை முதலில் பிடித்துவிடவேண்டும். எதிரியின் பிரதேசங்களைப் பிடிப்பதற்கு அமெரிக்க பிரிடிஷ் வெடிவிமானங்களின் உதவி அவசியம். வெடி விமானங்களின் நடைவடிக்கையினால்தான் மகத்தானகாரியங்கள் நடைபெறக்கூடும். நேசதேச யுத்த தந்திரத்தில் லங்காஸ்டர் விமானங்களும், பறக்கும் கோட்டைகளும் பெரும் பங்கெடுத்துக்கொள்ளுகின்றன. ஆனால் யுத்தத்தை ஒருவகைப்படைமட்டும் ஜயித்துவிட முடியாது. டாங்கிகளும், விமானங்களும், கப்பல்களும் மட்டும் யுத்தத்தில் வெற்றிபெற முடியாது.

எல் அலாமீன் வெற்றியும், வடமேற்கு ஆபிரிக்காவில் துருப்புகள் இறங்கியதும், நவம்பர் மாதத்தில் ருஷ்யாவின் மாரிகால முன்னேற்ற யுத்தமும் சேர்ந்துதான், அச்சுநாடுகளுக்கு ஆபிரிக்காவில் தோல்வியளித்தன. நடவடிக்கைகளை மதித்துப் பார்த்தால் யுத்தத்தை நடத்துவதில் ஒன்றுப்பட்ட முறைவேண்டுமென்பது நிச்சயம். நேசதேசங்களிடையே இந்த ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதாக புலப்படவில்லை. கஸாபிளாங்காவிலும், வாஷிங்டனிலும் நடந்த நேசதேச மகாநாடுகளும் வாஷிங்டனில் நிரந்தரமாக அமைக்கப்பட்டிருக்கும் கமிட்டிகளும் சிறந்த ஏற்பாடுகள்தான். ஆகிலும், யுத்தத்தை ஒன்றுபட்ட நிர்வாகியின் திட்டப்படி நடத்தவேண்டுமென்ற எண்ணம் இன்னும் பூர்த்தியாகவில்லை.

நாஸிகளின் யுத்த தந்திரம் யாதெனில், தற்பாப்பு முறையில் யுத்தம் செய்யாமல் ஏமாற்றிவிடுவது. விசாலமான பிரதேசத்திலிருந்துகொண்டு பத்திரமாகயிருப்பது. ருஷ்யப் போர்முனையில தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்காக சாவதானமாக முன்னேறித் தாக்குவது. ஜெர்மன் விமானப்படையின் பலம் குறைந்துவிட்டதால் அது தற்காப்பு முறைகளுக்காகப் பின்னடி வைக்கப்பட்டிருக்கிறது. யுத்த லக்ஷியத்தை அடைய முடியாதபோனாலும், எதிரியைத் தாக்கி அவனை நாசம் செய்துவிடுவது என்ற ஜெர்மன் ராணுவ முறையை அது கைவிட்டுவிட்டது. ஆகாய நிருபர் சொல்லுகிறபடி எல்லாப்போர் முனைகளிலும் ஜெர்மன் விமானப்படையின் உயர்வு குன்றிவிட்டதென்றாலும் சென்ற இலையுதிர் காலத்தில் ருஷ்யாவிலும் வருஷ ஆரம்பத்தில் டுனிஸியாவிலும் தாக்காலிகமாக விமான ஆதிக்கம் பெறவேகமாக ஒன்றுபட்டு வேலைசெய்ய அது சக்திவாய்ந்திருந்தது.

ஆகாய யுத்தமென்பது பூப்பிரதேசத்திலுள்ள ஸ்தானங்களைப் பிடிக்கும் முறையோடு நின்றுவிடவில்லை. தப்பியோடும் முறைகளையும் ஸ்தலவசதிகளையும் புறக்கணித்து நேசதேச வெடி விமானங்கள் முன்னேறித் தாக்க ஆரம்பித்துவிட்டன. தொழிற்சாலைகள் பெரும்பாலும் சலனப் பொருள்களில்லை. தரைப் பிரதேசத்துக்கும் ஆகாயப் பரப்புக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. ஐரோப்பாவில் எவ்வளவு பூப்பிரதேசமிருந்தபோதிலும் அதைக் கொண்டு சமாளிக்கமுடியாத வெடி விமானங்களின் தாக்குதலை நிவர்த்திப்பதற்காக ஜெர்மன் சண்டை விமானங்களை உற்பத்திசெய்யும் வேலையில் அதிகக் கவனம் செலுத்திவருகிறது.

சென்ற ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் விமான இலாகா நிர்வாகிகள் யுத்தத்தில் விமானப்படைகளை ஈடுபடுத்தும் முறையில் விசேஷ மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். வ்யூகரசனைக்காகவும், யுத்தம் செய்வதற்காகவும் ஏராளமான யுத்த விமானங்களை உற்பத்தி செய்து சண்டைக்கு உதவும்படி செய்ததும், வெகுதூரம் செல்லும் யுத்த விமானங்களைக் கட்டியிருப்பதும் பிரிடிஷ் விமானப்படை, தரைப்படைகளுக்கும், கடற்படைக்கும் உதவி செய்யமுன் வந்துவிட்டதென்பதைத் துலக்கிவிடுகிறது. சந்தர்ப்பம் ஏற்பட்டபொழுது தனிப்பட்ட முறைகளில் விமானத் தாக்குதல் செய்வதைவிட இது சிறந்த நடவடிக்கையாகும்.

இவ்விதமாக பலமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு விமானப்படையை ஐரோப்பியப் போர் முனையில் உபயோகப்படுத்தாமல் ஆபிரிக்காவில் வைத்திருப்பது முறையல்ல. ஏனென்றால் எதிரியின் ஐரோப்பிய அரணைத் தகர்ப்பதற்கு விமானங்கள்தான் இங்கு தேவை. அதாவது ஜெர்மானியர் நம்பியிருக்கும் பூமியின் விசாலமான பிரதேசத்தை ஒட்டி ஐரோப்பிய அரண் நிலைத்திருக்கிறது.

கொடுக்குகள்.

அச்சுநாடுகளின் கொடுக்குகளென்பது யூக்ரேன், கிழக்கேயுள்ள சதுப்பு நிலங்கள். வடக்கிலுள்ள நார்வே அரண், தெற்கிலும், தென்கிழக்கிலுள்ள பால்கன் நாடுகள், இதாலி எல்லைச் சரகங்கள், தென்மேற்கு மூலையிலுள்ள நடுநிலைமை வகிக்கும் ஸ்பெயின் இந்த தேசங்களடங்கியது. இவைகள்தான் எட்டுக்கால் பூச்சியாகிய ஜெர்மனியின் கால்கள். அதன் உடலானது அட்லாண்டிக்கிலுள்ள அரண்களுக்கும் மேற்குப்பக்கத்திலுள்ள அரண்களுக்கும் பின்பக்கத்திலும், ஆல்பஸ், கார்பேதியன் மலைகளுக்குப் பின்னும் கிழக்கிலும், மேற்கிலுமுள்ள ஜெர்மன் துருப்புகளுக்குப் பின்னும் கடலிலுள்ள யூ படகுகளின் நடமாட்டத்துக்குப் பின்னும் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஜெர்மானியர்கள் ருஷ்யப் போர்முனையில் பால்டிக் பிரதேசத்திலும் வடக்கில் ஹாலந்து, டென்மார்க் நாடுகளிலும் ஸ்தலங்களை இழந்துவிடமாட்டார்கள். மற்ற இடங்களில் இடவசதி உண்டாகும்படிக்கும், ஸ்தலங்களைவிட்டுப் பின்வாங்குவதினால் லாபம் உண்டாகும்படிக்கும் இளக்கமான தற்காப்புகளை ஜெர்மானியர்கள் அமைத்து வருகிறார்கள். தெற்கு ஐரோப்பாவில் ஜெர்மனியைப் படையெடுப்பிலிருந்து பாதுகாக்க 60 இதாலிய டிவிஷன்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது நேசதேசத்தாரின் விமான, தரை எதிர்ப்பைச் சமாளிக்க முன்னணியில் ஒரு மிலியன் இதாலியர்களிருந்து வருகிறார்கள்.

இந்த மோசமான துருப்புகள், பாஸிஸ்டு கக்ஷிக்காரர்கள் உஸ்தாஷ்கள், திவாலான ராஜாக்கள், கைவிடப்பட்ட நாடுகள், ராஜீய நெருக்கடியில் முன்வருகிறவர்கள் எல்லோரும் ஜெர்மன் எஜமானர்களைக் கைவிட்டுவிடும்படியாகத் தூண்டப்பட்டு சென்ற வருஷத்தில் டார்லான் செய்ததுபோல நமது கக்ஷியில் சேரும்படியாகச் செய்துவிடலாமென்று சிலர் யோசனை கூறுகிறார்கள். அறுகுறையான வெற்றி கிடைப்பதற்காக யுத்தத்தில் நாம் ஈடுபடுவதற்கு முக்கியமான லக்ஷியங்களாகயிருந்தவைகளை கைவிடுவதென்பது பிரயோஜனமற்றதென்று நேசநாடுகள் அவர்களுடைய மக்களுக்கும் ஐரோப்பாவை முறியடித்த நாடுகளிடம் சரணடைந்தவர்களுக்கும் தெளிவுப்படச் சொல்லியிருக்கிறார்கள்.

பிரெஞ்சு வட ஆபிரிக்காவில் நாம் பேரம் செய்ததிலிருந்து சச்சரவுகளும், மனக்லேசமும் உண்டாகிற்று. ஆனால் டூனிஸ், பிஸர்ட்டா வீழ்ச்சியின் தோற்றம் வேறுவிதமானது. இங்கே நேசதேசங்களின் தீரமும் வலிமையும் காண்பிக்கப்பட்டன. அச்சு நாட்டுத் துருப்புகள் சரணடைந்தன. சந்தோஷமாகவும், சமாதானத்துடனும் ஜனங்கள் நமது கக்ஷியில் சேர்ந்துகொண்டார்கள். ராஜ்ய லாபத்திற்கில்லாமல் பிழைத்திருப்பதற்காக நடைபெறும் இந்த யுத்தத்தில் இது ஒரு நல்ல படிப்பினையாகும். வெற்றிபெற்ற இந்த சமயத்தில் இதை நாம் மறந்து விடுவது சகஜம்தான்.

மன்னிப்பு இல்லை.

ஜெர்மானியர்களும், பாஸிஸ்டு கக்ஷிக்காரர்களும் ஒன்றை நிச்சயமாய் மறந்துவிடமாட்டார்கள். அக்ரம வழியில் தூண்டப்பட்டு பிறகு கைவிடப்பட்டுக் காட்டிக்கொடுக்கப்பட்ட ஜனங்களின் ஸமக்ஷத்தில் அவர்களை இவ்வுலகிலுள்ள ஒருவனும மன்னித்துவிடமாட்டானென்று அவர்கள் அறிவார்கள். நூதனமான துரோகச் செய்கையினாலும, கக்ஷி விட்டு கக்ஷி மாறுதல் செய்வதினாலும் அவர்களுக்கு சிறிது லாபம் கிடைத்தாலும், அதிகார ஸ்தானத்தை இழந்த உடனேயே அவர்களின் முடிவு நிச்சயமென்பதையும் அவர்கள் அறிய வேண்டும். ஆகையால் நாம் இன்னும் அநேககாலம் சிரமப்படவேண்டும். யுத்தமும் ராஜீய விஷயங்களும் ஒன்றோடொன்று நெருங்கி கலந்து நிற்கின்றன. நேசநாடுகளுக்குள் பிளவுகள் உண்டாகுவதற்கு அநேக சந்தர்ப்பங்கள் உண்டாகியிருக்கின்றன. இதேவிதமாக பெரிய வல்லரசுகளான, ருஷ்யா, பிரிடன், அமெரிக்கா ஆகிய மூவருக்குள் உண்மையான நிரந்தரமான ஒற்றுமை ஏற்படுத்துவதற்கும், பஸிபிக்கிலும், சைனாவிலும் அந்த ஒற்றுமை விருத்தியடைவதற்கும் மிகுதியான சந்தர்ப்பமிருக்கிறது.

யுத்தத்தில், வெறும் பேச்சினாலும், வாக்குறுதிகளினாலும் நட்பு அதிகரிக்காது. நடவடிக்கைமூலம்தான் அது பெறுகவேண்டும். ருஷ்யாவில் மகத்தான போர்கள் நடைபெறும் தருணம் வந்துவிட்டது. நமக்கு நெருக்கடியான நிலைமை உண்டாகியிருக்கிறது. கிழக்கே நடைபெறும் நடவடிக்கைகள் மேற்கிலும், தெற்கிலும் நம்மை பாதிக்கும்.

இங்கே நாம் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் அங்கே நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு அனுகூலமளிக்கும். ஆபிரிக்கப் போர்முனையில் நடைபெற்றது போலில்லாமல் பூரா யுத்த அரங்கத்திலும் ஒற்றுமையேற்பட்டு ருஷ்யர்களுடன் நாம் கலந்து நின்று போராடும் சமயம் வந்துவிடவில்லையா என்று நான் கேட்கிறேன்.

இந்த வியாசத்தில் நம்மிடமுள்ள மூவகைப்பட்ட படைகளும் ஒன்றுபடவேண்டுமென்று நேசதேசங்களுக்குள் ஒன்றுபட்ட உயர்தர அதிகாரிகள் இருக்கவேண்மென்று நான் வாதம் செய்திருக்கிறேன், மன்றாடிக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நேசதேசத்தாரின் ஒன்றுபட்ட படைகள் ஒன்றுபட்டு தாக்குவதற்கும், முன்னேறுவதற்கும், வெற்றிபெறுவதற்கும், சரியான தருணத்திலும், பிரதேசத்திலும், லக்ஷியத்திலும், ஒரேவிதமான மனப்பான்மையுடன் தீர்மானம்செய்து அவ்விதம் நடைபெறும்படியாகச் செய்யும் ஒரு நிர்வாகம் ஏற்பட வேண்டியது அவசியமாகும்.

ராயல் விமானப்படையின் முயற்சிகள் வெற்றி யடைந்து வருகின்றன.

விமானங்கள் கப்பல்களுக்கு உதவியாய் உபயோகப்படுத்தப்படுகிறது.

விமான பலத்தை உபயோகித்து ஜெர்மனியின் பொருளாதாரத்தை முற்றுகையிட்டு வெற்றிபெறும் மார்க்கத்தை பிரிடன் தெளிவாய் அறிந்திருந்ததன்னியில், 1939-ம் வருஷம் முதல் சரியாகவும், தீவிரமாயும் கவனத்தோடும் செய்துவந்த விமான உற்பத்திகளின் பயனால் ராயல் விமானப்படை தற்போது பெரும்பெரும் வெற்றிகளை அடைந்து வருகிறது. ஜெர்மானிய யுத்த தளவாட உற்பத்திகளையும் நன்கு அறிந்துகொண்டு அவைகளை அழிப்பதற்காக நிலையான நஷ்டங்களை ஏற்படுத்தும் குண்டுகளையுடைய விமானங்களைக் கண்டுபிடித்து எந்தெந்த உற்பத்திசாலைகளைத் தாக்கினால் நல்ல பயனும் வெற்றியும் கிடைக்கும் என்பதை ஆலோசிக்கலாயினர். 1939-ம் வருஷத்தில் ஜெர்மன் தொழிலாளிகள் சராசரி வாரத்திற்கு 49·6 மணி நேரங்கள் வேலை செய்தும் இப்பொழுது ஜெர்மன் மூலாதாரப் பொருள்களும், தொழிலாளிகளும் மிகவும் அதிகமாய் வேலை செய்கின்றனர் என்பதும், கடல் முற்றுகைகளினால் உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யவேண்டிய வேலையையும் சேர்த்து செய்யவேண்டியதாலும் 1,000,000 மனிதர்களுக்கு வேலையதிகப்படும் என்பதும் ராயல் விமானப்படை இன்னும் 2,000,000 மனிதர்களை விமான எதிர்ப்பிலும் பொதுமக்களை தற்காத்தல், புதுப்பித்தல் முதலியவைகளில் ஈடுபடுமாறு செய்து வருதலால் ஜெர்மன் யுத்த தளவாடங்களின் உற்பத்தியானது வேலையாட்களின் குறைவினாலும் வேலையின் அதிகத்தினாலும் பாதிக்கப்படும் என்பதும் நன்கு தெரிந்தது. நேரான விமானத் தாக்குதல்கள், யுத்ததளவாட உற்பத்தி ஸாதனங்கள், போக்குவரத்துக்கள், பொதுமக்கள் ஆகிய மூன்றையும் பாதிக்கும்.

யுத்த தளவாட உற்பத்தி.

600 சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள ஜெர்மனியிலுள்ள ரூர்ப் பிரதேசத்தில் அந்நாட்டிற்கு வேண்டிய நிலக்கரி, இரும்பு, இவைகளிரண்டும் 3-க்கு 2 பகுதி கிடைக்கிறது. அச்சாமான்களைக்கொண்டு ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்தி பாதிக்குமேல் செய்யப்படும். இக்குறுகிய பிரதேசத்தில் இவ்வளவு பொருள்களும் இருப்பது ஜெர்மனியின் துரதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். அதுவுமன்னியில் ரூர் பிரதேசங்கள் அதிகமாய் குண்டுகள் கொண்டுபோய்த் தாக்கும்படியாய் இங்கிலாந்திலுள்ள ராயல் விமானப்படை தளங்களுக்கு அருகாமையிலுள்ளது. ஜெர்மனியின் யுத்த தொழிற்சாலைகளை ரூரிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றவும் சாத்யமில்லை. இக்காரணங்களால் ராயல் விமானப்படை 1939-ம் வருஷம் ரூர்ப் பிராந்தியத்தை பிரிடிஷ் விமானத்தாக்குதலுக்கு தகுந்த இலக்காகத் தேர்ந்தெடுத்தது.

பிரிடிஷ் கடற்படையால் செய்யப்படும் கடல் முற்றுகைகள் ஜெர்மனிக்கு ஸப்ளையாகும் மூலாதாரப்பொருள்களை ஸப்ளையாகாமல் செய்துவிடுவதால் ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்தியில் கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்பதும் ராயல் விமானப்படைக்கு நன்கு தெரியும். ஆகையால் ஜெர்மனிக்குள்ள சிரமங்களை அதிகப்படுத்த ராயல் விமானப்படையும் உதவி செய்கிறது.

உதாரணமாக கடல்படை, யுத்தத்திற்கு முந்தின நாட்களில் வந்துகொண்டிருந்து ஜெர்மனியில் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் பொருள்களில் 100-க்கு 80 பாகத்தை வராமல் செய்துவிட்டது. ராயல் விமானப்படை அங்குள்ள எண்ணெய்ச் சேமிப்புகளையும், எண்ணெய் கிணறுகளையும் தாக்கி இன்னும் அப்பொருளைக் குறைவுபடுத்த முயற்சிகள் செய்தது. இன்னும் நம் கடற்படை ஜெர்மனியின் மாலிப்டீனம் (Molybdenum) என்ற உலோகத்தின் ஸப்ளைகளில் 100-க்கு 35 பகுதி குறைத்துவிட்டது. அதனால் அவர்களுக்கு நார்வேயில் உள்ள சுரங்கங்களிலிருந்து கிடைத்துவரும் மாலிப்டீனத்தைத் தவிர வேறு கெதியில்லை. 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 3-ம் தேதி செய்த ராயல் விமானத்தாக்குதலினால் இந்த ஸப்ளைகளையும் 10 மாதங்களுக்கு வேண்டிய அளவு குறைக்கப்பட்டுவிட்டது. மூலாதாரப் பொருள்களின் இறக்குமதியில்லாமல் செய்துவிட்டதால் வேண்டியவைகளை விஞ்ஞான முறையினால் உற்பத்தி செய்ய மின்சார சக்தியில் 1-க்கு 35 பகுதியை ஜெர்மனி உபயோகப்படுத்தும்படி நம் கடற்படை செய்துவிட்டது. மீதமாய் இருக்கக்கூடிய இந்த மின்சார நிலயங்களையும் ராயல் விமானப்படை தாக்கி ஜெர்மனிக்கு இன்னும் அதிக கஷ்டம் உண்டாக்குகிறது.

போக்குவரத்துக்களின்மேல் தாக்குதல்கள்.

1939-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு இன்னும் 2 கஷ்டங்கள் சுபாவத்திலேயே உள்ளது. நீராவி யந்திரங்களினுடையவும் வண்டிகளுடையவும் குறைவும் அதன் உற்பத்தியை தொழிற்சாலைகளில் நடத்திவந்ததும்தான். இந்தக்குறைவை இன்னும் தாக்குதல்கள் செய்து ஜெர்மனியை பயங்கர நிலைமைக்குக் கொண்டுவருவதற்கு நீராவி யந்திரத் தொழிற்சாலைகளையும், புகைவண்டிகளையும் தாக்க ஆலோசித்தது. ஆனால் அந்த நிகழ்ச்சி வேறு சில காரணங்களால் 1942-ம வருஷம் ஆகஸ்டு மாதம் வரையிலும் தள்ளிப்போடப்பட்டது. அதே சமயத்தில் ராயல் விமானப்படையைச் சேர்ந்த சண்டையிடும் விமானங்கள் ரயில் வண்டிகளைத் தாக்கி உடைக்க ஆரம்பித்தது.

ஜெர்மனியின் போக்குவரத்துக்களையும் முக்கியமாய் எண்ணெய் கிடைப்பது தடுக்கப்பட்டதால் கஷ்டம் ஏற்பட்டதால் ரஸ்தாப்போக்குவரத்துக்களையும் பிரிடிஷ் கடற்படை தடுத்துவிட்டதால், 1938-ம் வருஷத்தைவிட 1941-ம் வருஷத்தில் 100-க்கு 76 விகிதம் அதிகமான போக்குவரத்தக்களும் சாமான்களும் ஏற்றிச்செல்லும் புகைவண்டிகளுக்கு இன்னும் அதிகமான வேலை உண்டாகுமென்பதை ராயல் விமானப்படையின் தலைவர் அறிந்திருந்தார். இந்தவிதமான கஷ்டங்களை அதிகப்படுத்துவதற்காக, சாமான்கள் தயார் செய்து சேகரிக்குமிடங்களையும், போக்குவரத்து மத்திய ஸ்தலங்களையும் தாக்குவதற்காக 1939-ம் வருஷம் ராயல் விமானப்படை அதிகமான ஆலோசனைகள் எல்லாம் செய்தது. 1940-ம் வருஷம் இவ்வாலோசனைகள் முடிவில் செய்கையில் காண்பிக்கப்பட்டு ஹாம், சோபெஸ்ட், ஷுவர்ட் ஆகிய பிரதேசங்களின் மேல் 130 தாக்குதல்கள் செய்யப்பட்டன. 1941-ம் வருஷம் ஜூன் மாதம் போக்குவரத்து மத்திய ஸ்தலங்களான ஏச்சின், மன்ஸ்டர், கொலோன் ஆகிய இடங்கள் தாக்கப்பட்டன.

பொதுமக்களுக்கு வேண்டிய தேவைகளின் உற்பத்திகளின் மேல் தாக்குதல்கள்.

பொதுமக்களுக்கு தேவையான பொருள்களின் உற்பத்தி மிகவும் குறைவாய்ப் போயிருப்பது ஜெர்மனியின் பலஹீனங்களில் ஒன்றாகும். சைனியங்களுக்கென உற்பத்தி செய்யப்பட்டிருப்பதைத் தவிர பொதுமக்களின் தேவைகள் நாசமாக்கப்பட்டால் அவர்களுக்கு ஸப்ளை செய்வதற்கு வேறு வழியில்லை. ஆகையால் பொதுமக்களுச்குத் தேவையான சாமான்களை நாசப்படுத்தினால் அவைகளைத் திரும்பவும் உற்பத்தி செய்வதற்காக வேலையாட்களும், பொருள்களும், யுத்தத் தேவையிலிருந்தும் குறைக்கப்படும் என்று ராயல் விமானப்படை 1939-ம் வருஷத்திலேயே தெரிந்துகொண்டிருந்தது. இத்தகைய முறைகளில் ராயல் விமானப்படை செய்ய நினைத்த தாக்குதல்களைப்பற்றிய ஆலோசனை ஜெர்மனியின் பெரிய தொழிற்சாலை ஸ்தலங்களைத் தாக்குவதற்கான ராயல் விமானப்படையின் குண்டு போடும் விமானங்களுக்கு போதுமான பலம் உண்டாகும்வரை காத்திருக்க வேண்டியதாயிற்று. இந்தத் தாக்குதல்கள் 1942-ம் வருஷத்திலே, ஜெர்மனி பொதுஜனத்திற்கு வேண்டிய தேவைகளை உற்பத்தி செய்வதைக் குறைத்துக்கொண்ட உடனே செய்யப்பட்டன. 1942-ம்

வருஷம் அக்டோபர் மாதம் 23-ம் தேதி, அவசரமாக 200,000 வஸ்துக்கள் பொதுமக்களுக்குத் தேவையாயிருந்ததால், அந்தச் சாமான்களை உற்பத்தி செய்வதற்கு யுத்தத் தொழிற்சாலைகளிலிருந்து ஆட்களை அனுப்பப்பட்டன.

இவைகளினால், 1939-ம் வருஷத்தில் ராயல் விமானப்படை தான் செய்து வைத்திருந்த ஆலோசனைகளின்படி, இரக்கமில்லாமல் எப்படி நடவடிக்கைகள் நடத்திற்று என்றும், அந்த ஆலோசனை எவ்வளவு சரியாய் நடந்ததினால் கிடைத்துள்ள சரியான வெற்றிகளையும் நாம் கண்கூடாய் காண்கிறோம். யுத்த தளவாட சாதனங்களில் உற்பத்திகளின்மேல் செய்த தாக்குதல்களினால், ரூர்ப் பிரதேசத்தில் வருஷத்திற்கு 1,250,000 டன்கள் இரும்பும், 20,000,000 டன்கள் நிலக்கரியுமாய் 1942-ம் வருஷம் முதல் வேலையிலிருந்து குறைக்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்து சாதனங்களின் மேல் செய்த தாக்குதல்களினால் யுத்த தளவாட உற்பத்தி செய்யும் தொழிற்சாலையிலுள்ள தொழிலாளிகளெல்லாம், நீராவி யந்திர உற்பத்தியில் ஈடுபடுமாறு செய்தது. பொதுமக்களின் தேவைகளைத் தாக்கியதால் மூலாதாரப் பொருள்கள் யுத்த தேவைகளுக்கன்னியில் பொதுஜனத் தேவைக்கும் உபயோகப்படுத்த வேண்டியதாயிற்று. இந்த ராயல் விமானப்படை செய்த தாக்குதல்களினால், 1942-ம் வருஷம் ஜனவரி முதல் ஜெர்மானிய யுத்த தளவாட உற்பத்தி மொத்தத்தில் குறைவடைந்துவிட்டது.

1939-ம் வருஷத்தின் திட்டத்தின் வெற்றியைப்பற்றி விமான இலாகா பின்வருமாறு கூறுகிறது. "ஒவ்வொரு வகையிலும், ராயல் விமானப்படை செய்த தாக்குதல்கள். ஜெர்மானியருக்கு அனுகூலமில்லாததாய், தொழிலாளிகளுக்கும் கஷ்டமும், சேமிப்புகளுக்கும் யந்திரசாலைகளினாலும் நஷ்டமும், யுத்த தளவாடங்களுக்கும் பொதுஜன தேவைக்கு வேண்டியவைகளை உற்பத்தி செய்ய தொழில்களின் தேவையை உண்டாக்கிவிட்டது. ஜாக்கிரதையோடும் கவனத்தோடும் ஜெர்மானியத் தொழிற்சாலைகள் மேலும், இதர இடங்களிலும் இந்த திட்டம் வகுத்து செய்யப்பட்ட தாக்குதல்களினால் ஜெர்மானியர்களின் நஷ்டம் அதிகம். இந்த தாக்குதல்கள் இப்படியே நடந்தும், இன்னும் உக்கிரமாகவும் இருந்தால் 1943-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு ஏற்படும் விளைவுகள் பயங்கரமான முடிவோடு கூடியதாயிருக்கிறது.

ஜெர்மன் விமானப்படை இழிவடைந்து வருகிறது.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகையில் பீடர் மேஸ்பீல்ட் எழுதுவது.)

ருஷ்யாவில் குறிப்பிட்ட இடத்தில் தாக்குவதென்றும், அதே சமயத்தில் மத்தியதரைக் கடலிலுள்ள தீவுகளைத் தற்காப்பு செய்வதென்றும் முயற்சி செய்து வருவதும் ஜெர்மானிய விமானப்படை கதியற்று செய்துவரும் நடைவடிக்கையாகும். யுத்தத்தின் வருங்காலப் போக்கையும் விசேஷமாகப் பாதிக்கக்கூடும். விருத்தி அடைந்துவரும் நேசதேச வலிமையை ஜெர்மனி எதிர்த்து நிற்பது ஜெர்மன் விமானப் படையைச் சேர்ந்த சண்டை விமானப்படை பலத்தைப் பொருத்ததாகும். 1940—41-ம் வருஷத்தில் பிரிடனுடைய தற்காப்பும் பிரிடிஷ் சண்டை விமானங்களின் வலிமையைத்தான் பொருத்திருந்தது.

இப்பொழுது ஜெர்மானியர்கள் அறிந்திராதவண்ணம் விமானப் படையின் உயர்வையும், உபயோகத்தையும் நேசதேசத்தார்கள் அறிந்து தாக்க ஆரம்பித்து, தங்களுடைய அபிப்பிராயங்களைப் பூர்த்தி செய்துவிடுவார்கள். உற்பத்தியைவிட அதிகக்குறைவான நஷ்டம்தான் விமானங்களுக்கு உண்டாகுகிறது. மேலும், எதிரியின் விமானங்கள் சேனையுடன் ஒத்துழைத்து வந்தன. நேசதேச விமானங்கள் தாக்குதல் செய்யும்பொழுது இருவகைப்பட்ட லக்ஷியங்களை அடைந்துவிடுகின்றன. சேனைக்குதவுவதுடன் தன்னுடைய குறிப்பிட்ட காரியத்தையும் நடத்திவிடுகிறது. எவ்வகையில் நமக்கு இறுதியில் வெற்றி கிடைத்தாலும் விமானப் படையின் நடவடிக்கையும் அதற்கு பேருதவி செய்ததாகும்.

மேற்குப் போர்முனையில் நேசதேச விமானத் தாக்குதலும் ருஷ்யாவிலும் மத்திய தரைக்கடலிலும் தரைப் போரும், கடல் போரும் ஜெர்மன் சண்டை விமானங்களின் நிலைமையை பெரும்பாலும் பாதிக்கின்றன. யுத்தத்தை நடத்துவதற்கு எதிரிக்குள்ள சக்தியை பலமாகக் குறைப்பதில் விமான எதிர்ப்பு முக்கியமான சாதனம்.

இந்தத் திருப்திகரமான விளைவு உண்டாகுவதற்கு முதலாக நேசதேச விமான உற்பத்தி அதிகரிக்கவேண்டும். இப்பொழுது நேசதேச உற்பத்தி அபரிமிதமானது. நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இரண்டாவதாக, ஜெர்மனியின் ஆகாய தற்காப்புகள், இதில் சண்டை விமானப் படைதான் மிகவும் முக்கியமான பகுதி. சண்டை விமானங்களில்லாவிட்டால் விமான எதிர்ப்பு பீரங்கிகளின் வேலை பரிமளிக்காது. அவைகள் அல்பமானவைகள் என்று

பொருள்படும்படியாகச் செய்துவிடலாம். வேறுவிதமாகச் சொன்னால், எதிரிகள் எதிர் பாராதபடி ஜெர்மன் சண்டை விமானப்படையின் பலம் மிகவும் ஜாஸ்தியாகிவிட்டால், எதிரி நேசதேச வெடிவிமானங்களின் குண்டு வீச்சைத் தடுத்துவிடுவதோடு விமானப்படை யெடுப்பையே உபயோகமற்றதாகச் செய்து படையெடுப்பும் சாத்யமான காரியமில்லை யென்றும் செய்துவிடலாம்.

ஆகையால்தான் ஜெர்மனி கடைசி பிரயத்னமாக சண்டை விமானங்களை உற்பத்தி செய்வதில் அதிகமான கவனம் செலுத்தி வருகிறது. வெடி விமானங்கள் கட்டுவதை நிறுத்தி விட்டு சிறிய சண்டைபோடும் விமானங்களைக் கட்டுவதிலிருந்து, விமானங்களின் சங்கியை அதிகரித்துவிடலாம். ஆனால் விமானங்களின் இடை மானம் மாறுதலடையாது. ஒருக்கால் குறைந்தாலும் குறையும்.

தற்சமயத்தில் ஜெர்மன் விமானப் படையைச் சேர்ந்த சண்டை விமானங்கள் மேற்கு, ருஷ்யா, மத்தியதரைக் கடல் என்ற மூன்று முக்கியமான யுத்த அரங்கங்களில் வைக்கப் பட்டிருக்கின்றன. ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த விமானங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இவ்விடங்களுக்கு அனுப்புவதன்மூலம் போர்முனைகளில் விமானபலம் குறைவுபடாமலிருந்து வருகிறது. ஆகிலும், நிச்சயமான தோற்றமுண்டாகிவிட்டது. ஜெர்மன் விமானப்படை பலம் குன்றிவிட்டது. இதைத் தடுக்க எதிரி எவ்வித பிரயத்னம் செய்தாலும் பயன் படாது.

தரையிலும், ஆகாயத்திலும் நேசதேசத் தாக்குதல் அதிகரித்து வருவதிலிருந்து ஜெர்மன் விமானப் படையின் பலம் குறைவடைந்து வருகிறது. குறைவு அதிகரித்துக் கொண்டே வந்தால் ஒரு நெருக்கடியான சமயம் வந்துவிடும். எதிரியின் சண்டை விமானங் களின் நஷ்டத்தை உற்பத்தி மூலமும், ரிஸர்விலிருந்தும் ஈடுசெய்ய முடியாமல் போய்விடும். அத்துடன் சண்டை விமானங்கள் ஒன்றுபட்டு தாக்கமுடியாது. குறிதவறாமல் குண்டுவீசு வதும் சிரமஸாத்யமாகிவிடும். இதன் பயனாக நேசதேச விமானத் தாக்குதல் அதிகரிக்கும், விமான பலமும் விருத்தியடைந்துவிடும்.

இவ்விதமாக ஜெர்மன் விமானப்படை நொறுங்கும் சமயம் வெகு சீக்கிரமாக நேச தேசங்கள் ஒன்றுபட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து அதிலிருந்து உண்டாகும் விளைவுகளைப் பொருத்து தீரிதப்படும். குறிப்பிட்டுச் சொன்னால் மாதம் ஒன்றுக்குச் சுமாராக 3,000 விமானங்களை ஜெர்மனி இழக்கும் சமயத்தில்தான் ஜெர்மன் விமானபலம் அழிந்துவிடும்.

ஆகாயத்தில் விமான ஆதிக்கம் பெறுவதற்குப் போதுமான சண்டை விமானப்படையின் உதவியில்லாவிட்டால் நவீன முறையில் பயிற்சி பெற்ற சேனைகளின் வலிமை பிரயோஜன மற்றதாகிவிடும். ஜெர்மன் விமானப்படையின் வலிமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. சேமிப்புகளுக்கும் தேய்ந்து வருகின்றன. நிலைமையைச் சமாளிக்க உற்பத்தியை அதிகரிக்க எதிரியால் விசேஷ பிரயத்னம் செய்யப்படுகிறது. நமது வெடிவிமானங்களின் தாக்குதலிலிருந்து உற்பத்திக் குறைவும் உண்டாகிவிட்டது. எல்லாப் போர் முனைகளிலும் ஏராளமாக நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. நேசதேச விமானப்படைபலம் பன்மடங்கு அதிகரித்து வருகிறது. ஆகையால் ஜெர்மன் விமானப்படை வெகு சீக்கிரத்தில் நிலைகுலைந்து விடுமென்பது நிச்சயம்.''

வனங்களில் பத்திரிகை பிரசுரம்.

நவீன பத்திரிகை நிருபரின் சிரமங்கள்.

(F. R. மோரேயிஸ்).

சென்ற நூற்றாண்டில் அமெரிக்கப் பத்திரிகைகளின் மூல புருஷரான கார்டன் பென்னெட்டைப்பற்றி ஒரு கதையுண்டு. ஒருநாள் தென் அமெரிக்காவிலுள்ள இரு நாடுகளுக் குள் யுத்தம் நடைபெறுவதாக அவருக்குத் தகவல் கிடைத்தது. அவரிடமிருந்த சிறந்த போட்டோ படம் பிடிப்பவரை யுத்த முனைக்கு அவர் அனுப்பினார். போட்டோ படம் பிடிப்பவர் அங்கு வந்தபொழுது யுத்தம் நின்றுவிட்டது. உடனே அவர் பென்னெட்டுக்கு "யுத்தம் நின்றுவிட்டது. மறு உத்தரவு" என்று தந்தி அனுப்பினார். "பாதகமில்லை. படங்களை எடுத்து வா. நாம் யுத்தத்தைப்பற்றிய விருத்தாந்தம் எழுதிவிடுவோம்" என்று கார்டன் பென்னெட் பதிலனுப்பினார்.

அப்பேற்பட்ட சந்தோஷமான நிலைமை இப்பொழுது இருக்கவில்லை. சாவகாசப்பட்ட பொழுது பல தேசங்களில் நடைபெற்ற யுத்தத்தைப்பற்றி கற்பனையாக பத்திரிகைகளுக்கு தகவல் எழுதிய காலம் போய்விட்டது. நவீன யுத்த காலத்திலுள்ள நிருபர் அநேக கஷ்டங்களுக்குட்படவேண்டும், ஆகிலும் யுத்தத்தைப்பற்றிய தகவல்களை எழுதுவோம் என்ற ஒரு ஆறுதலும் அவனுக்குண்டு.

அரக்கான் போன்ற சிறிய போர்முனையிலும், பத்திரிகை நிருபர்களுக்கு மயிர்க்கூச்ச லிடும் படியான நிகழ்ச்சிகள் உண்டாகின்றன. அத்துடன் கஷ்டப்படும்படியான நிலைமையும் சில சமயங்களில் ஏற்பட்டது.

இந்த விசித்திரமான அரக்கான் போர்முனையிலிருந்த நாங்கள் மாங்டா நகரத்தில் தங்கியிருந்தோம். சமாதான காலத்தில் இந்த நகரத்தில் அமைதியும் ஜனங்களின் நடமாட்டமும் அதிகமாயிருந்திருக்கும். ஜப்பானியர்கள் ராதேடாங்கிலிருந்து மாயூ நதியின் அடிபாகத்திலுள்ள பூதேடாங்குக்குச் சென்றபொழுதும் மாங்டாவில் அமைதியான நிலைமை காணப்பட்டது. சூரிய வெப்பத்தில் அரக்கானிலுள்ள குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் சமீபத்திலுள்ள கப்பல் துறையில் சாமான்களை இறக்கிக்கொண்டிருந்தார்கள், அல்லது ரஸ்தாக்களில் தண்ணீர் தெளித்து வந்தார்கள்.

மாங்டாவில் பையித்தியம் பிடித்தவர்களின் நிலயம்.

சென்ற சில மாதங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாங்டாவுக்கு வருவதும் அதை விட்டுப்போவதுமாகயிருந்த ஒரு இந்திய டாக்டர் "மாங்டா பர்மாவின் கொல்லை வாசல் படி" என்று அபிப்பிராயப்பட்டார். ஒரு புத்திசாலியான யுத்த நிருபர் இது ஒரு பிற்போக்கான ஸ்தலமென்று அருவருப்புடன் சொன்னார். நாப் நதியிலிருந்து சிறிது தூரத்தில் மரத்தினாலும் மூங்கிளாலும் கட்டப்பட்ட அநேக குடிசைகளிருந்தன. இவைகளில் ஒன்றில் யுத்த நிருபர்களிருந்து வந்தார்கள். அங்கு ஆபீஸர்கள் போர்முனையிலிருந்து வருவதும் போவதுமாக இருந்தார்கள். ஒரு நிருபரிருந்தால் விசேஷமானது. இரண்டு பேரிருந்தால் விவாதம். மூன்று பேர்களிருந்தால் ஒரே குழப்பம். ஆகையால்தான் நிருபர்களின் முகாமுக்கு பைத்தியக்காரர்கள் நிலயமென்று சொன்னது பொருத்தமானது.

பகல் பூராவிலும் நிருபர்கள் டைப் அடிக்கும் மெஷினில் தகவல்களை டைப் அடித்து வரும் சப்தம் கேட்கும். இரவு வந்தவுடன் எல்லோரும் பானம் பண்ணும் கண்ணாடிக் கோப்பைகளின் சப்தம் அதிகரித்துவரும். இவ்விதமாகத் தனிப்பட்ட கொள்கைகளுள்ளவர்கள் விசித்திரமாக ஒன்று சேர்ந்திருக்கும்கோஷ்டியில் நாடகமேடையில் அனுபவம் பெற்ற ஒரு உத்தியோகஸ்தரும் சேர்ந்துகொண்டார். எங்களுக்குள் சச்சரவுகள் ஏற்பட்டு எங்கள் மனம் குழம்பியிருக்கும்பொழுது சாமர்த்தியசாலியான இந்த உத்தியோகஸ்தர் நாடகத்தின் ஒரு அங்கத்தை நடிக்க ஆரம்பித்துவிடுவார். அவர் சிறந்த விகடகவியானதால் வார்த்தைகளுக்கு குயுக்தியான அர்த்தங்களையும் விளக்கிக்காட்டுவார். அவருக்கு உதவியாக நாடகம் எழுதும் சக்தியும் ஏராளமான கட்டுக் கதைகளும், வாக்சாதுர்யமும் உள்ள ஒருவர் சேர்ந்துகொண்டார். அவ்விருவரின் நடவடிக்கைகளும் விலை மதிக்கக்கூடியவையல்ல.

போர்முனையிலுள்ள மற்ற இடங்களைப்போல், மாங்டாவிலும் விசித்திரமாக திடீரென்று ஊளையிட்டு நின்றுவிடும் அபாயச் சங்கு ஒன்றிருந்தது. நாடக மேடையில் முதலில் பாடும் ஸ்திரீ பாடகரின் த்வனியை ஒட்டி சில சமயம் அது சப்திக்கும் சில சமயம் அதன் த்வனி கர்ண கடோரமாகயிருக்கும். ஜப்பானியர்களுக்கு ருசிகரமான சந்திர வெளிச்சமுள்ள ஒரு இரவில் அபாயச் சங்கு இடைவிடாது த்வனித்தது. ஆகாயத்தில் ஒரு விமானம் சப்தித்தது. நிருபர்கள் சோர்வடைந்திருந்தோம். நாங்கள் சுகத்தின் மிகுதியால் சற்று களைத்து விட்டோம். வெளிப்பக்கத்திலிருந்த கான்களில் ஒளிந்துகொள்ள எங்களில் ஒன்று அல்லது இரண்டு பேர் சென்றிருக்கலாம்.

உண்மையை உரைக்கும்கால், ஒருவர் மட்டும் படுக்கையில் நிம்மதியன்று விமான சப்தத்தைக் கேட்டுக்கொண்டே படுத்திருந்தார். அன்றிரவு ஒரு நடவடிக்கையும் ஏற்படவில்லை. மறுநாள் விசாரித்தபொழுது அந்த விமானம் நேசதேசத்தாருடையதென்றும் விமானத் தாக்குதலுக்குப் பின் வழி தப்பி இங்குவந்து விட்டதென்றும் தெரிய வந்தது.

சுங்கிங்கின் வாழ்க்கை.

மார்டின்மூர் (டெயிலி டெலகிராப் பத்திரிகை.)

சுங்கிங்கில் ஒரு புறம் குதூஹலமும், மற்றொரு புறம் துக்கமும் நிரம்பியிருக்கிறது. ஜனங்கள் முகத்திலும், நடையுடை பாவனைகளிலும் சந்தோஷம் காணப்படுகிறது. இரண்டு நதிகளின் ஸங்கம பிரதேசத்திற்குமேலே செங்குத்தான குன்றுகளின் உச்சியிலிருக்கும் நகரமானது நொருக்கப்பட்டு, சின்னபின்னமடைந்து கோரமான தோற்றத்துடனிருக்கிறது.

சுங்கிங் அழிவுபட்டிருப்பது போல ஐரோப்பாவில் ஒரு இடமும் அழிவுபட்டிருது. கவென்டிரியையும், ராட்டர்டாமையும் ஈவு இறக்கமன்னியில் வெடிவிமானங்கள் தாக்கியிருக்கின்றன. ஆகிலும் சைனாவின் யுத்தகால தலைநகரத்தைப்போல இவ்வளவு பலமாக இடைவிடாது நொருக்கப்பட்ட நகரம் வேறு ஒன்றுமிருக்கமுடியாது.

ஒரு விமான எதிர்ப்பு எச்சரிக்கைக்குப்பின் இரவு பகலாக இரண்டு வாரங்கள் வரையில் அபாயம் நீங்கிவிட்டது என்ற சங்கு த்வனிக்கவேயில்லை.

கட்டடங்கள் மறுபடியும் அமைக்கப்படுகின்றன. சுங்கிங்கிலுள்ள சில கட்டடங்கள் நொருங்கிவிட்டன. அவைகள் நாலு, ஐந்து தடவை திரும்பி அமைக்கப்பட்டன. மறுபடியும் அநேகம் தடவைகள் கட்டவேண்டியிருக்குமென்று ஆலோசித்து, அவைகள் பலமான முறையில் கட்டப்படவில்லை.

பழுதுபார்க்கக் கூடிய நிலைமையிலுள்ள செங்கல் கட்டடங்களை ராணுவமும் அரசாங்க இலாகாக்களும் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். வாசஸ்தலங்களெல்லாம் சேரினாலும், வைக்கோலில் மேயப்பட்ட கூரையுடனும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஜனங்கள், பழைய மொரும்புகளையும் பாய்களையும் உபயோகப்படுத்தி கட்டப்பட்ட குடிசைகளில் வசித்துவருகிறார்கள்.

சீனர்களின் இயற்கை முறைப்படி காலியாகயுள்ள ஒவ்வொரு பூப்பிரதேசமும் சாகுபடி செய்யப்படுகிறது. சாம்பல் நிறமுள்ள சுங்கிங்கில் வயலிலுள்ள பயிர்பச்சைகளும், பழக்கடைகளிலுள்ள ஆரஞ்சுப் பழக்குவியல்களும், திவஜங்களும், சிறிய கொடிகளும்தான் விசித்ரமான வர்ணக் காக்ஷியை அளிக்கின்றன. தலைநகரத்தின் மத்திய பிரதேசத்தில் 4,20,000 ஜனங்கள் வசித்து வருகிறார்கள். எல்லோரும் கருப்பு, நீலம், அல்லது பழுப்பு நிறமான உடைகளை தரித்து வருகிறார்கள். பூராவாக உடுப்புப் போட்டிருக்காதவர்களைக் கண்டு அவர்கள் சில்லரை வியாபாரிகள் என்று முதல் முதலில் மதித்துவிடலாம். ஒவ்வொரு தெருவிலும் அநேக சிறிய கடைகளிலிருக்கின்றன. 100 கஜத்துக்குள்ளாக 20 அல்லது 30 கடைகளிருக்கின்றன. இதைத் தவிர சில்லரை வியாபாரிகள் நடை வழியில் தட்டுகளை வைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள்.

கடைகளெல்லாம் திறந்த வெளியான பொட்டிக்கடைகள். கடைகளுக்குப் பின்புறம் இல்லறவாழ்க்கை நடைபெறுகிறது. எந்த சமயத்திலும் கடையின் பின்புறத்தில் ஒருபக்கத்தில் சாப்பாடு தயாராகவிருக்கும். கடைகளை இரவில் வெகு நேரம் கழித்து மூடியும் அதிகாலையில் திரந்தும் விடுவதால் நகரம் எப்பொழுதும் சுருசுறுப்பாகயிருப்பது போலத் தோன்றுகிறது.

சுங்கிங்குக்குள் தாராளமாக நடமாட முடியாது. தெருக்களில் நொருக்கப்பட்ட வீடுகளின் துணுக்கள் நிரம்பியிருக்கின்றன. முக்கியமான ரஸ்தாக்களுக்கு தள வரிசை போட்டிருந்தாலும் அநேக ரஸ்தாக்களில் ஏராளமான புழுதியிருக்கிறது. மழை பெய்துவிட்டால் சேர் கணுக்கால் வரையில் வந்துவிடும்.

தாவர எண்ணெயின் உதவியால் ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் வண்டிகள், அடிக்கடி நடமாடக்கூடியவையல்ல. இருந்தபோதிலும், அவைகள் வரும்பொழுது அவைகள் வெளிப்படுத்தும் புகையானது ஆகாயத்தில் ஏராளமாகப் பரவிவிடுகிறது. டிராம் வண்டிகளும், வாடகை மோட்டார்களும் சுங்கிங்கிலில்லை. அங்கே காணப்படும் மோட்டார்கள் ஸர்க்கார் அதிகாரிகள் அல்லது அயல்நாட்டு மந்திரிகள் வைத்திருப்பவை.

ஜனங்கள் பெரும்பாலும் நடந்து செல்லுகிறார்கள். அதற்குப் பார்த்தியாக பழமையான ரிக்ஷா வண்டி உபயோகப்படுகிறது. அதன்பாகங்கள் கயிற்றினாலும் கம்பியினாலும் ஒன்று சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றன. ரிக்ஷாவுக்கு வாடகை ஏராளமாகக் கொடுக்கவேண்டும். ரிக்ஷாக்காரர் ஒரு நாளைக்கு அநேகம் தடவை வாடகை பெற்றால், சர்வ கலாசாலை பண்டிதரை விட அதிகப்பணம் சம்பாதித்துவிடுவார்கள். சுங்கிங்கிலுள்ள பெருவாரியான ரஸ்தாக்கள் செங்குத்தாகச் செல்லுகின்றன. ஆகையால் இரண்டு கூலிகள் சுமந்து செல்லும் டோலிகள்தான் பெரும்பாலும் உபயோகிக்கப்படுகின்றன.

சுங்கிங்கில் விமானத்தாக்குதல் ஏற்பட்டால் ஜனங்கள் ஒளிந்துகொள்ளும் கட்டடங்கள் பரிஷ்காரமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. மலைச்சரிவுகளில் ஏராளமான கான்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் சுங்கிங்கிலுள்ள எல்லா ஜனங்களும் ஒளிந்து கொள்ளலாம்.

சுரங்க ஒளிகள்.

ஏ. ஆர். பி. சங்கத்தின் தலைவர் 6,000 பேர்கள் சுகமாக ஒளிந்துகொள்ளக்கூடியதும் ஜப்பானிய வெடிகுண்டுகளிலிருந்து காப்பாற்றக்கூடிய 100 அடி மலையும் உள்ள ஒரு ஒளிக்கு என்னை அழைத்துச்சென்று சுற்றிக்காட்டினார். இந்தச் சுரங்கத்துக்கு மூன்று வாசல்படிகளிருக்கின்றன. ஒரு பலகணியிருக்கிறது. இதன் மூலமாக மின்சார விசிறிகள் சுத்தமான காற்றுகளை உண்டுபண்ணுகின்றன. ஒவ்வொருவருக்கும் பிரத்யேகமான ஸ்தலமுண்டு. பிரயாணிகளுக்கும், அயல் நாட்டுக்காரர்களுக்கும் தனிப்பட்ட வசதிகளமைக்கப்பட்டிருக்கின்றன.

விமான எதிர்ப்பு ஏற்படுவதற்குமுன்னதாக வெகுநேரத்துக்குமுன்பே ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்யும் ஸ்தாபனம் பரிஷ்காரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் அவரவருடைய ஒளிக்கு ஒவ்வொருவரும் சென்றுவிடுகிறார்கள்.

இவ்விதமான ஆறு பெரிய ஒளிகளிருக்கின்றன. சமீபத்தில் 500 பேர்கள் ஒளிந்து கொள்ளக் கூடிய சிறிய குகைகளும் தோண்டப்பட்டிருக்கின்றன. சிறிய ஒளிக்கும், இரண்டு வாசல்படி உண்டு. ஏனென்றால் சுங்கிங்கை முதல் முதலில் தாக்கியபொழுது குகைகளின் வாசல்படிகள் கட்டடத்துணுக்குகளால் அடைபட்டுவிட்டதால் ஜனங்கள் வெளியே வரமுடியவில்லை. மறுபடியும் ஒரு பாதை அமைத்தபின்தான் அவர்கள் வெளியேற முடிந்தது. பொதுஜன ஒளிகளைத்தவிர எல்லா ஆபீஸர்களுக்கும் அரசாங்க இலாகாக்களுக்கும் ஒளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தமாக சுங்கிங்கில் மலைச்சருவில் 700 ஒளிகள் வெட்டப்பட்டிருக்கின்றன.

லண்டனைப் போல சுங்கிங்கிலும், வெகுகாலமாக விமானத்தாக்குதல் நடைபெறவில்லை. சைனாவில் நேசதேசச் சண்டை விமானபலம் அதிகரித்துவிட்டதால் எதிரி விமானங்கள் சுங்கிங்குக்கு வருமுன் அவைகள் அழிக்கப்படுகின்றன அல்லது துரத்தியடிக்கப்படுகின்றன. மேலும், எதிரி மற்ற இடங்களில் யுத்தம் செய்ய வேண்டியிருக்கிறது.

ஸெப்டம்பர் மாத முடிவில் அதிக சூரிய வெப்பமுள்ள சுங்கிங்கில் ஏராளமான மூடுபனி பெய்கிறது. இது சுங்கிங்குக்குப் பெரிய சாதகம். மே மாதம் வரையில் இந்தப் பனி உரையாதென்றும் அதுவரையில் விமானத்தாக்குதல் பயம் ஏற்படாதென்றும் ஜனங்களறிவார்கள். அபாயம் ஏற்படாவிட்டாலும் ஏ. ஆர். பி. இயக்கமானது 20,000 கௌரவ வேலைக்காரர்களுடன் எப்பொழுதும் தயாராகயிருந்துவருகிறது. சிறிய அவகாசத்துக்குள் ரொட்டிக் கடைகளெல்லாம் ஒளிகளில் தங்கியிருக்கும் ஜனங்களுக்கு லக்ஷக்கணக்கான ரொட்டிகளைத் தயார் செய்துவிடுவார்கள்.

நகரத்தைவிட்டு நாட்டுப்புறத்திற்குச் சென்றால் சைனாவிலுள்ளவர் எல்லோரும் சேனையில் சேர்ந்திருக்கிறார்களென்பதை அறிந்துகொள்ளலாம். ஒவ்வொரு இடத்திலும் துருப்புகள் கூட்டம் கூட்டமாக நடமாடுகிறார்கள். 700 மைல் பிரயாணத்தில் நான் எங்கு பார்த்தாலும் துருப்புகளைச் சந்தித்தேன்.

ஏராளமான மனித பலம்.

எங்கு பார்த்தாலும் ராணுவ லாரிகள் நடமாடிக்கொண்டிருக்கின்றன. சேனையின் தேவைகளுக்கு அவைகள் ஈடுகொடுக்க முடியவில்லை. ஏராளமான சாமான்கள் மனித பலத்தின் மூலம் நூற்றுக்கணக்கான மைல்களுள்ள இடங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன. தள்ளுவண்டிகளில் சாமான்களை ஏற்றி 6 கூலிகள் அதை இழுத்துச் செல்லுகிறார்கள்.

சைனாவில் 1 கோடி ஜனங்களிருக்கிறார்கள். எல்லோரும் சேனையில் சேரவில்லை. எல்லோருக்கும் முஸ்தீப்புகள் கிடையாது. அயல்நாட்டார்கள் சீனாவின் படை பலம் 2 அல்லது 3 மிலியன் என்று கணக்கிடுகிறார்கள். முஸ்தீப்புகளிலிருந்தால் இன்னும் ஏராளமான படைகளைச் சேர்த்துவிடலாம்.

18 வயது முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் எல்லோரும் ராணுவப் பயிற்சி பெற வேண்டும். அப்படிப் பயிற்சிபெற்றவர்களைக் கொண்டுதான் சேனை தயாரிக்கப்படுகிறது. ஒரு ஜில்லாவிலிருந்து 1,000 பேர் வரவேண்டுமென்ற உத்தரவு போட்டவுடன் சீட்டுப் போட்டு எவர்கள் போகவேண்டுமென்று தீர்மானம் செய்யப்படுகிறது. யுத்த அவசியமான காலத்திலும் சைனாவில் குடும்ப விருத்தி செய்யவேண்டுமென்ற புராதனமான பழக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஒரே பிள்ளையுள்ள குடும்பத்திலிருந்து அவன் சேனைக்கு எடுக்கப்படுவதில்லை.

சைனாவிலுள்ள ஒவ்வொரு நடவடிக்கையும் சீனாவின் கஷ்ட நிலைமையை வெளிப்படுத்துகிறது. நீண்ட கால யுத்தம், வருங்காலத்திய போக்கைப்பற்றி சந்தேகம், ஜீவாதாரத்துக் குறிய தினசரி வாழ்க்கை, விலைவாசியின் உயர்வு, உயர்வான வரி விகிதங்கள், சாமான்களின் உற்பத்தி குறைவு இவையெல்லாம் சந்தோஷம் உண்டுபண்ணக்கூடியவையல்ல.

சுங்கிங்கின் ராஜ வீதியில் ஒருவன் துவிச்சக்கர வண்டியில் போய்க்கொண்டிருந்தான். இதுதான் அவனுடைய சொத்து. அதை செங்கலின்பேரில் மோதினான். சைக்கிள் இரண்டாக முறிந்துவிட்டது.

பழைய சைகிள் 50 முதல் 100 பவுன் வரையில் விலை மதிப்புள்ள ஒரு நாட்டில் இது ஒரு பெரிய நஷ்டமாகும். இது கஷ்டமானதாயிருந்தபோதிலும் அங்கிருந்த ஜனங்கள் துக்கிக்கவில்லை. நஷ்டமடைந்தவனும் எழுந்திருந்து எல்லோருடனும் சேர்ந்து சந்தோஷித்தான்.

இந்த சம்பவம் சைனாவின் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. அழிவும், வறுமையும், யுத்தமும் சைனாவில் பரவியிருக்கிறது. ஏராளமான மழையும் பெய்கிறது. ஆகிலும் சீனர்கள் சதாகாலமும் ஆனந்தத்துடனிருக்கிறார்கள்.

"இந்தியாவின் வரக்ஷை நமக்கு முன் நிற்கின்றது".

பூமியின் சிதைவும், அதை நிவர்த்திக்கும் முறைகளும்.

(கர்னல் பிரேனுடைய எச்சரிக்கை).

"நம் கண் முன்னால் இந்தியாவின் செழிப்பு அழிந்துவருகிறது. ஆகிலும் அநேகர் இதை அறியவில்லை. பூமிப்பிரதேசம் சிதைவுபடுவதையும் நாம் கவனிக்கிறதில்லை" என்று கர்னல் F. L. பிரேன், M. C., C. S. I., C. I. E. அகில இந்தியா ஒலிபரப்பில் பேசினார். இந்த பிரசங்கம் நீர்ப்பாசன மத்திய சங்கத்தின் 39-வது பிரசுரத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. "வட இந்தியாவிலுள்ள ஒரு மலைப்பிராந்தியமான மாகாணத்தை இது மிகவும் சிலாக்கியமானதென்று ஒரு சிநேகிதர் விவரித்தார். உண்மை யாதெனில் ஒவ்வொரு வருஷமும் அந்த மாகாணத்தில் செழிப்பு குறைந்துவருகிறது. மண் பிரதேசம் சிதைவுபடுவதும், மரங்களும், புல் பூண்டுகளும் குறைவுபடுவதும், ஜனங்களில் பாதி பாகம் சரியான ஆகாரம் உட்கொள்ளாமலுமிருப்பதும்தான் இதற்குக் காரணங்கள். இந்தியாவின் மற்றொரு பாகத்தில் பிரயாணம் செய்த மற்றொரு சிநேகிதர் சந்திரனிடமுள்ள மலைகளைப்போலிருக்கின்றன" என்று அந்த தேசத்தை வர்ணித்தார்.

சென்ற சில வருஷங்களுக்குமுன் பூமி பிரதேசம் சிதைபடுவதை நான் கவனித்தேன். அதுமுதல் இந்தப் பிரச்னையை பஞ்சாப்பைச் சேர்ந்த காட்டு இலாகா நிபுணர்களுடன் கலந்து நுட்பமாக ஆராய்ச்சி செய்தேன். இந்தியா பூராவிலும் பூமி பிரதேசம் அழிவுபடுவதையும், புல்பூண்டுகள் மறைவதையும்கண்டு என் மனம் கலங்குகிறது. வடக்கு பாகத்திலும், தெற்கிலும் ஒரேவிதமாகத்தானிருக்கிறது. சில இடங்களில் அழகான காடுகள் காணப்படுகின்றன. இதற்குப்பின் அவைகள் எப்படியாகப்போகிறதென்று மதிப்பதற்கு இவைகள் அனுகூலமாகயிருக்கின்றன. குன்றுகளை வரக்ஷையாக ஈஸ்வரன் சிருஷ்டிக்கவில்லை. அவைகளில் மரங்களும், புதருகளும் உற்பத்தியாகுகின்றன. மனிதனுடைய அஜாக்ரதையினால்தான் மலைகள் சூன்யமாகிவிடுகின்றன. காற்றும், மழையும் சேர்ந்து மலைகளிலுள்ள மண்ணைக் கரைத்துவிடுகிறது. இவைகளுக்கு ஈடுசெய்வது அசாத்தியமான காரியம். மலைகளும், மேய்ச்சல் ஸ்தலங்களும், வயல்களும் சிதைவுபடுகின்றன. அநேக இடங்களில் மழை குறைவாகயிருக்கிறது. பூமிக்குள் இருக்கும் ஊற்று ஜலம் ஆழத்தில் போய்விடுகிறது. மழை பெய்வதற்கும், புல் பூண்டுகளின் அபிவிருத்திக்கும் சம்பந்தமுண்டு. மரங்களின் குறைவினால் மழை பெய்வதும் குறைந்துவிடுமென்று நாம் ருஜுச்செய்ய முடியாதபோதிலும், குளுமையான காடுகளிருக்கும் இடத்தைவிட உஷ்ணமான, வரக்ஷையான பாலைவனத்தில் மழை பெய்யுமென்று எதிர்பார்க்கமுடியாதென்பது தெளிவான சமாசாரம்.

ஈஸ்வரன் பாலைவனத்தையும் சிருஷ்டிக்கவில்லையென்பது உண்மைதான். பாலைவனங்கள் மனிதனுடைய சிருஷ்டிதான். ஒரு பெரிய பிராந்தியத்திலுள்ள மரங்களை ஒருவன் அப்புறப்படுத்திவிட்டால் காற்றுகள் பலமாக அடிக்க ஆரம்பித்து பொட்டல்களை அதிகரித்துவிடும். அமெரிக்காவிலுள்ள விளையாட்டு ஸ்தலங்களைப் பார்த்தாலேயே பாலைவனங்கள் சரித்திரத்துக்குமுன் உண்டானவை என்று சொல்லக்கூடியதல்லவென்று புலப்படுகிறது. மனிதனுடைய அஜாக்ரதையினால்தான் இந்தப் பிரதேசங்கள் தோன்றுகின்றன.

மனிதனுடைய அஜாக்ரதை எவ்விதம் பொட்டல்களை உண்டுபண்ணுகிறதென்றும், இந்தியாவில் துர்பிக்ஷமேற்படுகிறதென்றும் பார்ப்போம். இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதி பலமாக சிறிது நேரம் மழை பெய்வதும், பிறகு வெகுகாலம் மழையின்மையும் பூமி வரக்ஷையடைந்து பொடிமயமாக ஆகிவிடுவதுமாக இருக்கிறது. இதன் பயனாக பலமான மழை பெய்யும்பொழுது சமமாகயில்லாத பிரதேசங்களிலுள்ள மண் எல்லாம் ஜலத்தில் அரித்துக்கொண்டுபோகப்படுகின்றன. பயிர் பச்சைகள் நிரம்பியிருந்தால் அவ்விதம் ஏற்படாது. சாகுபடிக்கு லாயக்குள்ள இடங்களில் அடர்த்தியான பயிர்களைப் போட்டுவிடலாம். ஆகையால் விவசாயம் செய்வதற்கு முன் சமமாகயில்லாத பூமியை சமப்படுத்திவிடவேண்டும். இந்தியாவில் பண்படுத்தாத அநேக பிரதேசங்களிருக்கின்றன. அபிவிருத்தியடையாததுடன் அவைகளின் பூப்பிரதேசமும், பூசாரமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைவுபட்டு வருகின்றன. இந்திய விவசாயிகள் செய்யவேண்டிய முதல் கடமை யாதெனில், சரிவுள்ள பூமிகளை மட்டம் செய்து உயர்த்தி, அவசியமான பிரதேசங்களில் உபரி ஜலம் வடிவதற்கு

ஜலதாரைகளையும் அமைக்கவேண்டும். சில இடங்களில் நிலத்தை சமப்படுத்தவேண்டிய அவசியத்தை அறிந்திருக்கிறார்கள். ஆகிலும் இந்தியாவின் பெரும்பாகத்தார் இதை உணரவில்லை. ஆகையால் பூமியின் செழிப்புக் குறைந்துவருகிறது.

மலைக்குன்றுகளிலும், மேய்ச்சல் தரைகளிலும், புல் வளர்ச்சி வெகு அர்ப்பமானது. ஆகையால், மேய்ச்சலுக்கு விடுவதைக் குறைவுபடுத்தியும், கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொள்ளாவிட்டால், அங்கிருக்கும் பயிர் பச்சைகளும் அழிந்துவிடும். பூமியிலுள்ள பயிர் அகற்றப்பட்டுவருகிறது. மிருகங்களின் கூர்மையான குளம்புகள் தரையைப் பொடியாக்கி அவைகளைக் காற்றும், மழையும் கொண்டுபோகும்படியாகச் செய்துவிடுகின்றன. இவ்விதமாகத்தான் மலைக்குன்றுகளும், மேய்ச்சல் ஸ்தலங்களும் பாழாகிவிடுகின்றன. இந்தியாவும் வேகமாக வரக்ஷைபெற்றுவருகிறது.

பூமி சிதைபடுவதைத் தடுக்கும் முறையும் சுலபமானதுதான். இந்த உஷ்ணமான பிரதேசத்தில் வேகமாகவும் நடைபெறக்கூடியது. குன்றுகளிலும், மேய்ச்சல் ஸ்தலங்களிலும் மேய்ச்சலுக்கு ஆடுமாடுகள் செல்லக்கூடாதென்று தடைசெய்யவேண்டும். கால்நடைகளை கொட்டில்களில் கட்டிப்போட்டு அவைகளுக்குப் புல்லையும், வைக்கோல்போன்ற ஆகார வசதிகளையும் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால் மரங்களின் சிறிய கன்றுகள் உண்டாகும். புல்லும் விருத்தியடைந்து அதிகரிக்கும். கொட்டிலிலடைபட்டிருக்கும் மாடுகள் மேய்ச்சலுக்குப் போய்விட்டுவருகிற மாடுகளைவிட அதிகப் பால் கொடுக்கும். ஜனங்கள் புல்லை அறுத்து கால் நடை ஆகாரப்பொருள் பயிர்களை உற்பத்தி செய்தால், சிறந்த மாடுகளைத்தான் அதிகரிக்க முயற்சிப்பார்கள். இந்தியாவின் சீதோஷ்ண நிலைமையில் கால்நடைகள் மேய்வதும், தழைகளைத் தின்பதிலிருந்தும்தான் வளரும் பயிர்களுக்கும் இயற்கையான பயிர் பச்சைகளுக்கும் அழிவு உண்டாகிறது. இதை ருஜூப்பிக்கவேண்டுமானல் பூமி முற்றிலும் சிதைபடாத மலைக்குன்றிலுள்ள ஒரு பிரதேசத்தைச் சுற்றிலும் சுவரைக் கட்டிப்பாருங்கள்; அல்லது முள் வேலியை அமைத்துப்பாருங்கள். அதன் பிறகு இதன் விளைவு நன்கு புலப்படும்.

வயல்களை சமப்படுத்தி உயர்த்திவிட்டால் பூமியிலுள்ள ஈரம் அதிகரித்துவிடும். ஏற்கனவே மழையிலடித்துச் சென்றுகொண்டிருந்த மண்ணும், கிருஷிக்கு உதவும் உப்புகளும் அங்கேயே தங்கிவிடும். அதிலிருந்து பயிர்களும் விருத்தியடையும். ஒவ்வொரு வருஷத்திலும் மிலியன்கள்கணக்கான மண் கரைந்துகொண்டுவருகிறது. ஒரு மழையில் கொண்டு போகப்பட்ட மண்ணை மறுபடியும் உண்டுபண்ணுவதற்கு நூற்றுக்கணக்கான வருஷங்கள் பிடிக்கும். இந்தப் பிரச்னையை நாம் எவ்வளவு சீக்கிரம் தீர்த்துவிடுகிறோமோ அவ்வளவு சீக்கிரமாக இந்தியாவின் வயல்களின் செழிப்பு அதிகரிக்கும். மேய்ச்சல் ஸ்தலங்களில் புல் வளரும். மலைப்பிரதேசங்களில் மரங்கள் அதிகரிக்கும். உணவுப் பொருளும் அபிவிருத்தியடையும்.

இந்தியாவின் க்ஷேமம், ராஜீய வாதிகள் கையிலிருக்கவில்லை. அது இந்தியாவிலுள்ள ஏராளமான கால் நடைகளின் நடமாட்டத்தைப் பொருத்திருக்கிறது. அவைகளை நாம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளாவிட்டால் அவைகள் இந்தியாவைப் பொட்டலாக்கிவிடும்; நாம் எல்லோரும் ஏககாலத்தில் உயிர் துறக்கவேண்டிவரும். இந்தியா மற்றொரு ஸஹாரா அல்லது கோபி பாலைவனமாக ஆகிவிடும்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 157.. (2-வது பிரிவு).

31- 7-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
1- 8-43	நீர்ப்பழனி	... ,,	7.00
,,	ஆலூர்	... ,,	7.30
2- 8-43	காரையூர்	... ,,	7.00
,,	இடையாத்தூர்	... ,,	7.30
3- 8-43	வடவாளம்	... ,,	7.00
,,	செம்மட்டிவிடுதி	... ,,	7.30
4- 8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,	10.45
4- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	நார்த்தாமலை	... மாலை	7.00
,,	உப்பிலியக்குடி	... ,,	7.30
5- 8-43	அண்டக்குளம்	... ,,	7.00
,,	கிள்ளனூர்	... ,,	7.30
6- 8-43	கொடும்பாளூர்	... ,,	7.00
,,	விராலூர்	... ,,	7.30

பிரஸங்கம் 158. (3-வது பிரிவு).

7- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை 6.00	11- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை 10.45
8- 8-43	ஆலங்குடி	... ,, 7.00	,,	காலேஜ் B தமிழ்	... ,, 10.45
,,	ராசியமங்கலம்	... ,, 7.30	,,	பொ. புதுப்பட்டி	... மாலை 7.00
9- 8-43	திருமயம்	... ,, 7.00	,,	வேந்தம்பட்டி	... ,, 7.30
,,	மேலூர்	... ,, 7.30	12- 8-43	வெள்ளனூர்	... ,, 7.00
10- 8-43	பள்ளிவாசல்	... ,, 7.00	,,	செம்பாட்டூர்	... ,, 7.30
,,	பில்லமங்கலம்	... ,, 7.30	13- 8-43	புலியூர்	... ,, 7.00
11 -8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை 10.00	,,	கண்ணங்குடி	... ,, 7.30
,,	ராணி பெண் பாட்சாலை	... ,, 10.45			

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

31—7—43	பொன்னமராவதி.	7—8—43	திருமயம்.
1—8—43	ஏம்பல்.	8—8—43	கொடும்பாளூர்.
2—8—43	கீரனூர்.	9—8—43	விராலிமலை.
3—8—43	கோனுபட்டு.	10—8—43	ராமச்சந்திரபுரம்.
4—8—43	ராயவரம்.	11—8—43	கீழாநிலை-புதுப்பட்டி.
5—8—43	ஆலங்குடி.	12—8—43	குழிபிரை.
6—8—43	புதுக்கோட்டை.	13—8—43	புதுக்கோட்டை.

யுத்தப்பாட்டு நே. 5.

முசலோனியின் வீழ்ச்சி.

By **A. RAMASWAMI AYYAR**, (*Member, N. W. F B.*).

(கும்மி மெட்டு).

1. பாரினில் பெயர்பெற்ற கண்ட
மொன்றுமதன்
பேரும் **ஐரோப்பா** வென்ற ழைப்பார்
ஐரோப்பா தேசத்தி லாதி புகழ்பெற்ற
இத்தாலி யென்றொரு நாடு முண்டாம்.

2. கிருஸ்துவர் நாடது தேசத்தி லேமிக
கீர்த்தி யதிகமே பெற்ற நாடாம்
போற்று மதக்குரு **போப்பு** விருந்திடும்
ஆற்றலும் வீற்றலு முள்ள நாடாம்.

3. சக்கர வர்த்தி களாண்ட நாடாமதில்
சாஸ்திரத் தேற்சி யதிக முண்டாம்
வீழ்ச்சியடைந்துத் தாழ்ந்திட்ட பின்னதை
மன்ன ரனேக ராண்டு வந்தார்.

4. தொழிலும் வளமும் தோன்றிச்
செழிக்கையில்
தோன்றினன் முசலோனி யென்ற காலன்
பழிசெய்யும் பாஸிஸ்டு கட்சியென
யொன்றை
பிறப்பித்துச் சேனையுந் திரட்டி னனே.

5. திரட்டிய பின்னதை திடம்பெறச்
செய்துமே
விரட்டி யடக்கி னனர சனையே
மிரட்டியே தானேதான் சர்வாதி காரியாய்
பட்டமும் பூண்டு பகட்டாய் நின்றான்.

6. அகங்கார மானவ மதிகமா யாகவே
அயல்நாட்டைச் சேர்க்க ஆவல் கொண்டு
எளியதோர் **எத்யோப்பிய** நாடதுமேலேயே
வலியவே பாய்ந்துமே வெற்றி
கொண்டான்.

7. வெற்றி யடைந்திட்ட வீறுப்பு னாலேயே
மற்றவர் நாட்டைக் கைப்பற் றிடவே
சற்றும் தயங்காமல் சேர்ந்து
கொண்டானவன்
சுற்றி நடந்த சமரி லேயே.

8. காரண மொன்றுமே யில்லாமலே யவன்
பூரணமாய் **பிரான்ஸைத்** தாக்கி னனே
வீர னென்றுவெகு சில்லரை நாட்டையும்
ஜெர்மனி யாருடன் தாக்கி னனே.

9. மதங்கொண் டுலாவிய முசலோனி
யானவன்
ஆதிக்கம் பெற்ற தோர்நா டிழந்து
சதமென வெண்ணிய தன்சொந்த
நாடையும்
தோற்கவே வந்த கெதியு ணர்ந்தான்.

10. தோற்று விடுவ துறுதியெனக் கண்டு
சித்த மிழந்துமே பித்த னுனன்
மாற்றியே வந்துள்ள ராஜீயக் கட்சியார்
சீற்றங் கொண்டவனையும் சிறையி லிட்டார்.

11. அச்ச முறிவுண் டடியோடே போனதும்
மிச்ச மிருக்கும் நாஸி மாரே
சொச்சச் சண்டையைச் சோர்வின்றி
நடத்திட
அச்சமே கொண்டு மலைகின் றாரே.

12. சட்டென்று ஜெர்மனி சடுதியில்
தோற்பது
நிச்சய மென்பதி லைய்ய மில்லை
பட்டென்று மஞ்ச ளரக்கரும் மாய்வதை
கிட்டவே நேரிடக் காணு வோமே.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,750—3-8-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ ஆகஸ்டு ௴ 7௳ [ந. 158

பிரஸங்கம் CLVIII.

இதாலியர்களுக்கு நேசநாடுகளின் எச்சரிக்கை.

இதாலியில் யுத்தம் சீக்கிரம் துவங்கும்.

நேசதேசப் படையினர் கூடிய சீக்கிரம் இதாலியிலேயே யுத்தம் ஆரம்பித்துவிடுவார்கள். 2 லக்ஷம் இதாலியப்படைகள் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

உங்களை ஏமாற்றி ஜெர்மானியர்கள் உங்கள் துருப்புகளை நிராயுதபாணிகளாகச் செய்துவிட்டார்கள். உங்களுக்கு ஜெனரல் ஈசன் ஹவர் விடுத்த செய்தியை மார்ஷல் படோக்ளியோ ஒளித்துவைத்துவிட்டான். சமாதான ஏற்பாடுகள் ஒன்றையும் மார்ஷல் படோக்ளியோ செய்யவில்லை.

நிச்சயமாக ஏற்படப்போகும் தோல்வியை ஒத்திவைப்பதற்காக கடைசி பிரயத்னமாக ஜெர்மானியர்கள் இதாலியில் எல்லா பாகங்களிலும் சண்டைபோடுவார்கள்.

ஈவு இரக்கமன்னியில் நாங்கள் இதாலியில் முன்னேறுவோம். இதாலிய தீபகற்பத்திலுள்ள நீங்கள் யுத்தத்தின் கொடுமைகளை அனுபவிக்கவேண்டும். நாங்கள் பொருத்திருந்தோம். உங்களுக்கு எச்சரிக்கை செய்தோம். எங்களுக்கு வேறு வழியில்லை.

எங்களுடைய நோக்கங்கள் ஸ்பஷ்டமானவை. கொடுந் துன்பமும் அடிமைத்தனமும் அடிப்படையாக உள்ள ஆக்ஷிகளை நாங்கள் அறவே ஒழித்துவிடுவோம். இந்த அபிப்பிராயத்தில் நாங்கள் திட சித்தத்துடனிருக்கிறோம். அக்கிரமக்காரர்கள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்றும் நாங்கள் வற்புறுத்துகிறோம்.

முஸோலினி உங்களை பிறர்கையில் காட்டிக்கொடுத்துவிட்டான். இப்பொழுது பீட்ரோ படோக்ளியோ உங்களை அவ்விதமே நடத்திவருகிறான். நீங்கள் யோசனைசெய்து முடிவுக்கு வரும்வரையில் நாங்கள் பொறுத்திருந்தோம். உங்கள் முடிவை எதிர்பார்த்து நாங்கள் 8 நாட்களாகப் பொருத்திருந்தோம்.

இப்பொழுது நம்முடைய படைகள் முன்னேற ஆரம்பித்துவிட்டன. எங்களுடைய படைகளை ஒருவரும் எதிர்த்து நிற்கமுடியாது. இதாலியின் வாசற்படிக்கும் நாங்கள் வந்துவிட்டோம். நாங்கள் வரும்காலத்தில் செய்யப்போகும் நடவடிக்கைகளிலிருந்தும் ஏற்படக்கூடிய யுத்தத்தின் கொடுமைகளை நீங்கள் அனுபவிக்கும்படியாக செய்யப்போகிறோம்.

பூமியின் சிதைவு.

(புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய நிர்வாகியான ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம், C.I.E எழுதியது).

"ராஜீய வியவகாரத்தைவிட பூமியின் சிதைவுதான் நமது நாட்டின் முக்கியமான பிரச்னை." (ஜெனரல் ஸ்மட்ஸ்).

"கல்வி அபிவிருத்தியையும், வைத்திய வசதியையும்விட பூமியின் சிதைவைத் தடுப்பதுதான் முக்கியமான வேலை." (ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன்ஹாம்).

1. பூமியின் சிதைவென்பது ஒரு உலகமளாவிய பிரச்னையாகும். இந்தக் கஷ்டமான நிலைமை ஐரோப்பாவில் ஏற்படவில்லை. ஆகிலும், ஐரோப்பாவில் ருஷ்ய மைதானங்கள்

போன்ற சில இடங்களில் இந்தப் பிரச்னை மிகவும் நெருக்கடியானது. அமெரிக்காவிலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் இது முக்கியமான பிரச்னைதான். ஆபிரிக்காவிலுள்ள ஜெனரல் ஸ்மட்ஸ் ராஜீய வியவகாரத்தைவிட பூமியின் சிதைவுதான் நமது நாட்டின் முக்கியமான பிரச்னையென்று சொல்லியிருக்கிறார். நமது ஸமஸ்தானத்தில் கல்வி அபிவிருத்தியையும், வைத்திய வசதியையும்விட பூமியின் சிதைவைத் தடுப்பதுதான் முக்கியமான பிரச்னையென்று ா-தர்பார் அவர்கள் கருதுகிறார்கள். இந்த வேலை முக்கியமானதென்று பொதுமக்கள் அறிந்துகொண்டாலொழிய நமது வரவு, செலவு திட்டத்தில் பூமியின் சிதைவைத் தடுப்பதற்காக முகான்மையாகப் பொருள் ஒத்திவைக்கும் திட்டமானது பிரயோஜனமற்றதாகும்.

2. பூமியின் சிதைவு இருவகைப்படும். காற்றினால் ஏற்படக்கூடியது ஒன்று. ஜலத்தினால் ஏற்படக்கூடியது மற்றொன்று. நமது ஸமஸ்தானத்தில் காற்றினால் சிதைவு அதிகமாக ஏற்படுகிறதில்லை. கோயம்புத்தூரிலும், இன்னும் இதர மதராஸ் மாகாணத்தைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் காற்றினால் ஏற்படும் சிதைவு முக்கியத்வமுள்ளது. அமெரிக்காவில் இதன் விளைவுகள் எவ்வகைப்பட்டதென்று அறியவேண்டுமானால் "செழிப்பான பூமி, வரக்ஷயான பூமி" என்ற; தலையங்கத்துடன் ஸ்டேவர்ட்சேஸ் எழுதியிருக்கும் ஸ்வாரஸ்யமான புத்தகத்திலுளள விருத்தாந்தத்தைப் படித்தால் அது தெரியவரும். அதன் வரலாறு பின்வருமாறு "புயல்காற்று அடித்துக்கொண்டிருந்தபொழுது நெப்ராஸ்காவைச் சேர்ந்த வயது முதிர்ந்த குடியானவன் தன் வீட்டின் முன்னாலுள்ள வளைவில் உட்கார்ந்திருந்தான். "எதை ஸ்வாரஸ்யமாக கவனித்துக்கொண்டிருக்கிறாய்" என்று அவனை வினவியபொழுது "நான் கான்ஸாஸிலுள்ள வயல்களிலுள்ள தூசிகள் பறந்து செல்லுவதை கவனிக்கிறேன்" என்று அவன் சொன்னார். புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ஜலத்தினால் ஏற்படும் சிதைவைத்தான் நாம் கவனிக்கவேண்டும்.

3. முதலில் பூமி படலம் படலமாக அழிந்து போகிறது. இதை அநேக ஜனங்கள் கவனித்திருக்க மாட்டார்கள். படை படையாக பூமி பிரதேசம் சிதைபட்டு விடுகிறது. கடைசியாக ஒரு அடி கனத்திற்கு மண் குறைந்துவிட்டபின் அமெரிக்கர்கள் சொல்லுகிறபடி கெட்டியான பரப்பு வந்துவிடும். இது செழிப்பான பூமியில்லை. அதை உழுது சிறிது காலம் சும்மாவிட்டு விட்டால் பிறகு சாகுபடிக்கு லாயக்காகிவிடும். எந்நிலைமையிலும் சிறிது காலம்வரையில் அந்த இடத்தில் புல் பூண்டுகள் உண்டாகாது. அதன் பிறகு அருத்தோடிகள் தோன்றும். அவைகள் முதலில் சிறிதாக ஆரம்பித்து கடைசியில் பெரிய பள்ளங்களாக 20 அடி ஆழமுள்ளதாகவும் ஆகிவிடும். இவ்விதம் ஏற்பட்ட பள்ளத்தாக்குகள் நமது ஸமஸ்தானத்தில் ஆரியூர் வாரியிலும், துடையாம்பாரையிலுமிருக்கின்றன. இந்த சிதைவு மேன் மேலும் ஏற்பட்டு வந்தால், மேலே சொல்லிய இடங்களில் காணப்படுவது போல் கல்பாறைகள் தோன்றிவிடும். ஸமஸ்தானத்தில் ஆலங்குடி தாலூகாவில் வலநாடு, பெரிய குளத்துக்கு வரும் வரத்து வாரியான மணத்துறை வாரியிலும், பொன்னாச்சிக் குளத்திலும் பாறைகள் காணப்படுகின்றன.

4. பூமியின் சிதைவினால் குளங்களும், ஏரிகளும் மேடிட்டுப் போகின்றன என்பதுடன் ஒரு இடத்திலுள்ள மண்ணை மற்றொரு இடத்துக்கு பிரவாகம் அடித்துக்கொண்டு போகிறதோடு இந்த பிரச்னை முடிந்துவிடவில்லையென்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். எகிப்திலுள்ள நைல் நதியும், சீனாவிலுள்ள பெரிய நதிகளும் பிரவாகத்தில் அடித்துக்கொண்டு போகும் சகதி எவ்வகைப்பட்டதாகயிருந்தபோதிலும், நமது ஸமஸ்தானத்தில் சிதைவினால் உண்டாகும் சகதியானது செழிப்பற்றது. பிரவாகத்தினால் அடிக்கப்பட்டு கொண்டுபோகப்படும் மண்ணினுடைய அமைப்பும் ரசாயனப் பொருள் மிகுதியும் வெகுசீக்கிரமாகக் கெட்டுப் போய் விடுகிறது. "பூமியின் தேய்வு" என்று தலையங்கமுள்ள புஸ்தகத்தில் ஜாக்ஸ், ஒயிட் என்பவர்கள் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள். "பிரவாகமானது அடித்துச்செல்லப்படும் மண் கட்டிகளை மணல், சகதி, களி என்று மூன்று வகைகளாகப் பிரித்து விடுகிறது. அதன் மூலம் பூசாரமும் செழிப்பும் அழிந்து விடுகின்றன. சிதைவுபட்ட மண் அணுக்குகள் சாகுபடி செய்யப்படும் பூமியில்போய் சேர்ந்தாலும் அவைகளில் உற்பத்திக்குத் தேவையான பொருள்கள் அதிகமாகயில்லை." 33-வது பக்கம்.

5. கூடிய சீக்கிரத்தில் நமது ஸமஸ்தானத்தில் பூமி சிதைவுபடுவதைத் தடுக்க நாம் தீவிரமான முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும். இந்த நடவடிக்கைகள் ஒரு நூற்றாண்டோ அல்லது அதற்கு அதிக காலமோ நடைபெறலாம். இவ்விதம் செய்யாவிட்டால் ஆலங்குடி, திருமயம் தாலூகாக்களிலுள்ள மேடான பிரதேசங்களின் பெரும்பாகம் வெகுசீக்கிரத்தில் மண் கறைந்து போய், வெரும்பாறையுள்ளதாகவும், ஏராளமான பயங்கரமான பள்ளத்தாக்குகளுள்ளதாகவும், யாதொருவிதமான பயிர் பச்சைகளில்லாததாகவும், மனிதர்களோ, மிருகங்களோ வசிக்கமுடியாத வரண்ட பூமியாகவும் ஆகிவிடும். அதைத் தவிர எல்லா குளங்களும், ஏரிகளும் சகதி நிரம்பி மேடிட்டுவிடும். சாகுபடிக்கு லாயக்குள்ள நிலங்களும்

செழிப்பற்ற சகதி படிவதால் நாசமாகிவிடும். குளத்தூர் தாலூகாவில் பூமியின் சிதைவு குறைவானது. அங்கு அதிகமாக பூமியின் அடிமட்டத்தில் பாறைகளில்லை. பளிங்குக் கற்கள் தானிருக்கின்றன.

6. பூமியின் சிதைவைப்பற்றி வரையப்பட்டிருக்கும் புஸ்தகங்களெல்லாம் சாதகம் அளிக்கக்கூடிய இயற்கையான சிதைவு ஒரு புறமிருக்க மனிதனுக உண்டுபண்ணும் சிதைவானது சமீப காலத்திலுண்டானதென்று சொல்லுகின்றன. நமது ஸமஸ்தானத்திலும் சிதைவு சமீப காலத்தில்தான் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. இப்பொழுது நடைபெற்று வருகிற வேகத்துடன் வெகு காலமாக நமது ஸமஸ்தானத்தில் சிதைவு ஏற்பட்டு வந்திருந்தால் நாம் முன் கூறியபடி ஸமஸ்தானத்தின் நிலைமை மோசமாகியிருக்கும். இப்பொழுது ஆரியூர் பள்ளத்தாக்குயிருக்குமிடத்தில் 40 வருஷங்களுக்கு முன் ஒரு அருத்தோடியும் கிடையாதென்று ஆரியூர் வட்டம், கர்ணம் இந்தக் கட்டுரையின் ஆசிரியரிடம் அறிவித்தார். இது முற்றிலும் உண்மையென்று இந்தக் கட்டுரையின் ஆசிரியர் உறுதிகூற முடியாதபோதிலும், இது சம்பாவிதமென்று சொல்லக்கூடும்.

7. இதற்கு ஆதாரம் என்னவென்று பார்ப்போம். ஸமஸ்தான சரித்திரத்திலுள்ள ஒரு வாக்கியத்தைப் படித்துப் பார்த்தால் இது விளங்கும். "ஸமஸ்தானத்திலுள்ள காடுகளை அழித்து ஸமஸ்தானத்தின் சாகுபடி நிலங்களை அதிகப்படுத்த வேண்டியதற்காக ரெஸிடெண்ட் துரை அவர்கள் ஏற்பாடுகள் செய்தார். 1826-ம் வருஷத்தில் "ஸமஸ்தானத்தில் முன்போல காடுகளிருக்கின்றனவா" என்று ஸமஸ்தான மன்னருக்கு மதராஸ் கவர்னர் ஒரு வினு அனுப்பினர்.

கர்னல் பிளாக்பர்னுடைய உத்தரவுப்படி காடுகள் அநேகமாக அழிக்கப்பட்டுவிட்டனவென்றும், விவசாயம் அபிவிருத்தியடைந்து வருகிறதென்றும் சில இடங்களில் மட்டும் லேசான காடுகளிருக்கின்றனவென்றும் நமது மன்னர் பதிலனுப்பினர். சிதைவு அதிகமாக ஏற்பட்டிருக்கும் பிராந்தியங்களில் இன்னும் ஏராளமான அடர்த்தியான புதர்களிருக்கின்றன. புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் எக்காலத்திலும் உன்னதமான மரங்களுள்ள காடுகளிருந்ததில்லை.

8. அருத்தோடிகளுண்டாகுவதற்கு வண்டிப்பாதைகள் ஒரு முக்கிய காரணம். ஆபிரிக்காவைப்பற்றி ஹெயிலி பிரபு எழுதியிருக்கும் புஸ்தகத்தில் அவர் இதை விவரித்திருக்கிறார். பூமியின் சிதைவு ஏற்படும் பிரதேசத்தில் சிதைவு ஏற்படும் முறை பின்வருமாறு. வண்டியின் நடமாட்டத்தினுல் சிறிய அருத்தோடிகள் உண்டாகிவிடுகின்றன. நாளடைவில் இவைகள் ஆழமாகிவிடுகின்றன. அதன் பிறகு அந்த வண்டிப்பாதை நடமாட்டத்துக்கு லாயக்குப்படுவதில்லை. அதன் பக்கத்தில் மற்றொரு பாதை வழியாக வண்டி செல்லுகிறது. பழைய வண்டிப்பாதையின் ஆழம் அதிகரித்து ஒரு பெரிய அருத்தோடி உண்டாகிவிடுகிறது. அதன்பின் அது பெரிய கணவாயாக மாறிவிடுகிறது.

9. சென்ற ஆறு வருஷங்களுக்குமுன் பூமியின் சிதைவைத் தடுக்க ஒரு முறையும் கையாளப்படவில்லை. குளங்களிலும், ஏரிகளிலும் சகதி நிறம்பாதபடி தடுக்கும் முறையில்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. குளங்களுக்கு வரும் வாரியின் அடி பாகத்தில் ஏராளமான பொருள் செலவிட்டு சுவர்கள் கட்டப்பட்டன. இவ்விதம் கட்டப்பட்ட சுவர்கள் சொல்பம்தான். இப்பேர்ப்பட்ட ஆயிரக்கணக்கான சுவர்களை நாம் கட்டவேண்டும். இதற்கு ஏராளமான திரவ்யத்தைச் செலவிடவேண்டும். இவைகள் ஒன்றும் உபயோகப்படவில்லை. குளங்களுக்கு வரும் வண்டல் மண்ணைக்கூட அந்தச் சுவர்கள் தடுக்க முடியவில்லை. இந்தச் சுவர்களுக்குப் பின்னுல் படிந்திருக்கும் சகதியை மோட்டார் லாரிகளில் போட்டு அப்புறப்படுத்திவிடலாமென்ற யோசனையிருந்தது. ஆனுல் அது நடைபெறவில்லை. அதற்கு அபாரமான செலவேற்பட்டிருக்கும். சகதியைச் சேமித்து வைப்பதற்கு ஒரு பத்திரமான ஸ்தலத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். அங்கிருந்து மறுபடியும் பிரவாகம் அதை அடித்துக்கொண்டு போய் மற்றொரு குளத்திலோ அல்லது சாகுபடிக்கு லாயக்குள்ள வயலிலோ சேர்த்துவிடாமலும் குவியலை பத்திரப்படுத்தவேண்டும். மேடான பூமிகள் சிதைபடுவதில் கவனம் செலுத்தப்படவேயில்லை. மேன் கூரையில் ஒழுக்கிருக்கும்பொழுது அதை நிவர்த்திப்பதற்கு பர்த்தியாக பூமியில் ஒரு பாத்திரத்தை வைப்பது போலிருக்கிறது.

10. மேடான பிரதேசங்கள் சிதை படுவதையும், வரகைஷயாகப் போய்விடுவதையும், வண்டல்மண் படியாதபடிக்கும் தடுக்கவும், அவ்விதம் சகதி நிறம்பிய பின் அதை எவ்விதம் அப்புறப்படுத்துவது என்பதைப்பற்றியும்தான் நாம் கவனம் செலுத்தவேண்டும். சிதைவைத் தடுக்கும் வேலையானது சிதைவு ஆரம்பிக்கும் பிரதேசத்தில் ஆரம்பித்து அதன் முடிவு வரையில் நடைபெறவேண்டுமென்ற முக்கியமான கருத்தை நாம் கடைப்பிடித்திருக்கிறோம். ஏராளமான கருங்கல் அணைகளைக் கட்டியிருக்கிறோம். பூமி பரப்பிலுள்ள மண் கரைந்து

விடாமல் தடுப்பதற்காக குறுக்கே மண்மேடுகள் அமைத்திருக்கிறோம். பனை மரங்களின் தூறுகளை உபயோகித்து முதலில் அணைகள் கட்டப்பட்டன. இது அதிகப்பொருள் செலவில்லாதது. ஆகிலும், இந்த முறை பயன்படவில்லை. முதிர்ந்த மரங்களை உபயோகிக்காததால் கெடுதல் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று தோன்றுகிறது.

11. செங்குத்தான கரைகளைப் பலப்படுத்தியிருக்கிறோம். குளக்கரைகளிலும் அணைகளின் பேரிலும் பலவிதமான புற்களை உற்பத்திசெய்திருக்கிறோம். கொடைக்கானலில் பயிர் செய்யப்பட்டிருக்கும் கிகுயூ புல்லையும், ஆபிரிக்காவிலுள்ள கென்யாவிலிருந்தும் ப்ரிடோரியாவிலிருந்தும் வரவழைத்த "ஜயண்ட் ஸ்டார் புல்லையும்" நாம் வளர்த்து வருகிறோம். இவ்விரண்டும் ஆபிக்காவில் உற்பத்திசெய்யப்பட்டவை. உள் நாட்டிலுள்ள அநேக புல்பூண்டுகளையும் நாம் பயிர்செய்ய முயன்றுவருகிறோம். கிகுயூ புல் பயன்படவில்லை. "ஜயண்ட் ஸ்டார்" என்னும் புல் சில இடங்களில் வளர்ச்சியடைந்து வருகிறது. இது சம்பந்தமாக நாம் இன்னும் ஏராளமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

12. மணத்துறை வாரிக்கு சமீபத்திலுள்ள சரிவான ஏராளமான பிரதேசத்தை ஸமஸ்தான மோட்டார் கலப்பையைக்கொண்டு பண்படுத்தி அவற்றில் சோளம் பயரிடப்பட்டது. மோட்டாரின் உதவியால் உழுவது பிரயோஜனமுள்ளதாக யிருந்தபோதிலும் சோள சாகுபடி காலம் தப்பி செய்யப்பட்டதால் பயன்படவில்லை. தாழையும், மிந்திரியும், விராலிச் செடியும் பயிரிடப்பட்டன. இவ்விதமான சிக்கன முறையில் ஆறு பிராந்தியங்களில் மிகுதியான வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸமஸ்தான வரவு செலவு திட்டத்தில் இந்த வேலைகளுக்கு வருஷாவருஷம் அதிகமான பொருள் ஒதுக்கிவைக்கப்படுகிறது.

13. இந்த நடவடிக்கைகள் விவசாயிகளின் சௌகரியத்திற்காக கையாளப்படுகின்றனவென்று அவர்கள் முதலில் அறிந்துகொள்ளவில்லை. தங்களுடைய குளங்களுக்குவரும் ஜல ஸப்ளை தடைபடுகிறதென்று புகார் செய்தார்கள். இவ்விதம் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளாவிட்டால் குளங்கள் கூடிய சீக்கிரத்தில் தூர்ந்துபோய்விடுமென்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. இந்த ஏற்பாடுகளிலிருந்தும் இறுதியில் லாபங்கள்தான் கிடைக்கும். குளங்களின் தண்ணீர் ஸப்ளை அதிகரித்துவிடும்; வரத்துவாரியின் அடிபாகத்தில் நீர்மட்டம் உயர்ந்துவிடும்; வெள்ளத்தின் வேகமும், பலமும் குறைவுபட்டுவிடும் என்பது நிச்சயம். இப்பொழுதுதான் அநேக விவசாயிகள் இந்த திட்டங்களின் பிரயோஜனத்தை உணருகிறார்கள்.

14. இது ஒரு மகத்தான பிரச்னை. இது சம்பந்தமாக ஸ்ரீ-தர்பார் அவர்கள் ஒரு சிறிது செய்துவருகிறார்களென்பது வாஸ்தவம். இவ்விஷயத்தில் லக்ஷம், கோடிக்கணக்கான பொருள் செலவிடலாம். அதற்கு இப்பொழுது இயலாது. ஒன்றும் செய்யாமல் சும்மாவிருப்பதைக் காட்டிலும் முறையுடன் வருஷாவருஷம் ஒரு சிறிது செய்துவந்தாலும், நலமென்று ஸ்ரீ-தர்பாரவர்கள் நினைக்கிறார்கள். "எனது சந்ததியார்கள் எனக்கு ஒன்றும் செய்துவைக்கவில்லை. ஆகையால் என் சந்ததியார்களுக்கு நானும் ஒன்றும் செய்யவேண்டிய முறையில்லை" என்ற கொள்கையை அவர்கள் அங்கீகாரம் செய்யவில்லை.

15. ஸமஸ்தானத்தின் பூமி சிதைவு பிரச்னையை பரிசீலனை செய்து அதை நிவர்த்திக்க நாம் கையாளவேண்டிய முறைகளையும் எடுத்துரைப்பதற்காக மதராஸ் அரசாங்கத்தார் ஸமஸ்தானத்துக்குக் கடனுக்கனுப்பிய ராவ் ஸாஹிப் E. V. பத்மநாபபிள்ளை உபயோகமுள்ள சில ஆலோசனையை நமக்கு விடுத்தார் என்பதையும் ஸ்ரீ-தர்பார் அவர்கள் வெளியிடுகிறார்கள். அவர் 1938-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 28-ம் தேதி முதல் ஸெப்டம்பர் மாதம் 7-ம் தேதி வரையிலும் பிறகு 1939-ம் வருஷம் ஜனவரி 21-ம் தேதி முதல் பிப்ரவரிமாதம் 1-ம் தேதி வரையிலும் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்திருந்தார். பூமியின் சிதைவைப்பற்றி அவர் அழகான ஒரு ரிப்போர்ட்டு எழுதியிருக்கிறார். அதையும் ஸ்ரீ-தர்பார் அவர்கள் அச்சிட்டிருக்கிறார்கள்.

வார யுத்தச் செய்திகள்.

31—7—43-லிருந்து 6—8—43-வரை.

ஸிஸிலி.—ஜெர்மானியர்கள் அநேக வாரங்களாக காப்பாற்றிவந்த கடானியா விழுந்துவிட்டது. ஜெர்மன் படைகள் இரண்டு பகுதிகளாக துண்டிக்கப்பட்டுவிட்டார்கள். நேச தேசத் துருப்புகள் எட்னாவிக்குப் போகும் ரஸ்தாவையும், இருப்புப் பாதையையும் தாண்டவில்லை. ஆகிலும், கடல் மார்க்கத்தில் எதிரியின் போக்குவரவு தடைபட்டுவிட்டது. பிரிடிஷ்

கனேடியத் துருப்புகள் எட்னுமலை அடிவாரத்துக்கு முன்னேறுகிறார்கள். அட்ரானோ பிரதேசத்தில் ரஸ்தாக்களும் இருப்புப் பாதை மார்க்கங்களும் நாசம் செய்யப்பட்டன.

இந்த வாரத்தில் கீழ்க்கண்ட பிரதேசங்கள் பிடிக்கப்பட்டன.

நிகோஸா, வியான்பார்டி, பாலினு, காஸ்டெல் பூவானோ, ஆகிரா, கெங்கி, நிஸ் ஸோரியா, ஸான் ஸ்தெபானோ, ஸ்பெர்லிங்கா, மாரோ, காஸ்டல் வெர்டி, மிஸ்டிரெல்லா, காஸ்டல் டிஸோ, காஸ்டல் டி லூஷியோ, செண்டோரின், ரெகால்பூமோ, செண்டுரிபி, ஸெண்டனுனோவா.

ருஷ்யா.—ஓரெலும், பெயலோகிராடும் விழுந்துவிட்டன. டாங்கிகளையும் பீரங்கிகளையும் போட்டுவிட்டு ஜெர்மானியர்கள் பிரியான்ஸ்கை நோக்கிப் பின் வாங்குகிறார்கள். ஓரல் மத்திய ருஷ்யாவில் ஒரு முக்கியமான கேந்திரஸ்தானம். இது 1941-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் ஜெர்மானியர் வசமிருந்தது.

விமானத் தாக்குதல்.—ஒரு வாரத்திற்குள்ளாக ஹாம்பர்க் ஏழு தடவை தாக்கப்பட்டது. ஜெர்மனியில் யந்திரங்களை உற்பத்தி செய்யும் முக்கியமான பிரதேசம் முதல் முதலாக இவ்வாரத்தில் தாக்கப்பட்டது. ருமேனியாவிலுள்ள போலஸ்டியும் தாக்கப்பட்டது. போலஸ்தியிலுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களும், எண்ணெய் கிட்டங்கிகளும், சுத்தி செய்யும் ஆலைகளும் நாசமாகின.

தென்மேற்கு பஸிபிக்.—இந்த யுத்தத்தில் எல்லா மாதங்களையும்விட சென்ற ஜூலை மாதத்தில் எதிரியின் லக்ஷியங்கள் பேரில் ஏராளமான வெடி குண்டுகள் வீசப்பட்டன. ஸாலமன்ஸிலுள்ள முண்டா பிரதேசம் நியூகினியாவிலுள்ள ஸாலாமூவாவும் பலமாகத் தாக்குண்டன. நேசதேச விமானங்கள், 436 எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்திவிட்டன. மேலும், 3 சஞ்சாரிகளும், 15, நாசகாரிகளும், நீர்மூழ்கியைத் துரத்தும் ஒரு கப்பலும், 11 விமானம் தாங்கிக் கப்பல்களும், 11 சாமான் கப்பல்களும், குறைந்த பக்ஷம் 62 சிறிய கலங்களும், மூழ்கடிக்கப்பட்டன. முண்டாவிலும், ஸலாமூவாவிலும் 1,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகள் ஒவ்வொரு இடத்திலும் வீசப்பட்டன. நியூ கினியாவில் நேசதேசப் படைகள் சாவதானமாக ஸலாமூவாவை நோக்கி முன்னேறுகிறார்கள். நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா விழுந்து விட்டது.

ஷார்ட்லாந்து தீவை வெடி விமானங்கள் தாழப்பறந்து சென்று தாக்கின. ஜப்பானியர்களுக்கு 7 கடல் விமானங்களும், 3 படகுகளும் ஒரு சாமான் படகும் நஷ்டமாகிவிட்டன.

பர்மா.—ஜூலை மாதத்தில் பர்மாவை நேசதேச விமானங்கள் தாக்கியதில் எதிரிக்கு நதியில் செல்லும் 650 படகுகள் நஷ்டமாகிவிட்டன. இதை விடு, எதிரியின் மற்ற போக்கு வரவுசாதனங்கள் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன. 300 சாமான் வண்டிகளும், 22 ரயில்வே எஞ்சின்களும் தகர்க்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளின்பொழுது விமானிகள் கடுமையான கால நிலையை சமாளிக்கவேண்டியிருந்தது. லக்ஷியங்கள் பர்மாவில் பல்வேறு பாகங்களில் பரவியிருந்தன. அரக்கான் கடற்கரையிலும், டாங்குப்பிலிருந்து கலாடானுக்குப் போகும் ஸப்ளை மார்க்கங்களிலும், உள்நாட்டிலுள்ள நதிக்கரைகளிலும், முக்கியமாக ஐராவதி, சிண்ட்வின், யா, மித்தாவிலுமுள்ள லக்ஷியங்கள் குண்டுவீச்சுக்குட்பட்டன. சில சமயங்களில் கால நிலை அனுகூலமாகயில்லாதபொழுது விமானத்தாக்குதல் ஒத்திவைக்கப்பட்டது. அப்பொழுதும்கூட வேவு பார்ப்பது நடைபெற்றது. எதிரியின் 100-க்கு மேற்பட்ட வாசஸ்தலங்கள் அழிவுற்றன, அல்லது பழுதுபட்டன.

ஜூலை மாதம் 29-ம் தேதியன்று 150 அடி நீளமுள்ள இரண்டு ஜப்பானியக் கப்பல்கள் ஒன்று சாதாம் தீவிலும், மற்றொன்று அண்டமான் தீவிலுள்ள ப்ளேர் துறைமுகத்திலும் தாக்கப்பட்டன.

இந்த வாரத்தில் கீழ்கண்ட இடங்கள் விமானத்தாக்குதலுக்குட்பட்டன.

மணிவா, டாங்கனி, மியின்சான், செளக், பின்தா, சுப்ராபம், ஷிங்பான், நம்தி, மணிவாட், டாஸா, குவாசான், இண்டின், சின்ஷ், அடெட்நான்ரா, பாமோ, நியாம்பின்வன், தானபியூஸாயாட், பகோடா முனை, வெட்லட், மோக்ஸாகுயூ, கினு, தாழி, மெக்டிலா.

அட்லாண்டிக்கடல்.—வட அட்லாண்டிக்கில் வைக்கப்பட்டிருந்த 25 அல்லது முப்பது யூ படகுகள்கொண்ட ஒரு கூட்டத்தை, அவைகள் கிழக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சாமான் கப்பல்கள் கூட்டத்தை வழிமறுத்தபொழுது பிரிடிஷ் கடற்படையும், கடற்கரை விமானப்படையும் தாக்கின. துணைக்காவல் படையும், சாமான் கப்பல்களும் அடர்த்தியான மூடுபனியையும், பனிக்கட்டிகளையும் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தன. மூன்று நாள் யுத்தம் நடைபெற்றது. எதிரி நம்மைத் தாக்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தையும் நாம் கொடுக்கவில்லை. யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன, அல்லது துரத்தியடிக்கப்பட்டன. மூன்றாவது தினத்தன்று பாக்கியிருந்த யூ படகுகள் பின்வாங்கிவிட்டன. குறைவுபடாமல் துணைக்காவல் கப்பல்கள் பூராவும் பத்திரமாக அக்கரை சேர்ந்தன.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

26—7—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—யு-படகு தளம் விமான தொழிற்சாலைகள்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

துறைமுக ஸ்தாபனங்கள்.—ஜெர்மனியிலுள்ள வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven), வெஸ்ஸர்முண்டி (Wessermunde).

ரப்பர் தொழிற்சாலைகள்.—ஜெர்மனியிலுள்ள ஹனேவர் (Hanover).

விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள அப்பிவில்லி (Abbeville), மர்வில்லி (Merville), செயிண்ட் ஓமர் (St. Omer), பெல்ஜியத்திலுள்ள கோர்ட்ராய் (Courtrai). (26 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை; 50 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

இரவு.—துறைமுகம்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

விமான நிலயங்கள், தரைமீதுள்ள இலக்குகள்—வடக்கு, வடமேற்கு பிரான்ஸ்.

எதிரி சுரங்கவேடி அறுக்கும் கப்பல்.—பிரெஞ்சுக்கரை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—தெற்கு இதாலியிலுள்ள மாரினடிபாக்ளா (Marina-Di-Paola).

கப்பல்கள்.—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian-Channel).

போக்குவரத்துகள் ஸிஸிலி முழுவதும்.

விமான நிலயம்.—கேபே டிசினே (Capo Dichino), மாண்ட் கார்வினே ராவல்லா (Monte Carvino Ravella), காடாஸ்காலே (Catuascalea).

ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—தெற்கு இதாலி (South Italy).

ராணுவ ஸ்தாபனங்கள்.—மிலாஸ்ஸோ (Milazzo).

போக்குவரத்துகள்.—ஸிஸிலியிலுள்ள ஆஸிரா (Azira).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).

எதிரி துறைமுகங்கள்.—டெனிம்பர் தீவிலுள்ள லாரட் (Larat).

கைத்தீவிலுள்ள வாட்டெக் தீவு (Watdek).

பீரங்கி ஸ்தாபனங்கள்.—நியூ கினியிலுள்ள கோமியாதம் (Komeatum).

நியூ கினியிலுள்ள ஸலாமுவா (Salamaua).

... (Kiska).

27—7—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—தொழிற்சாலை இலக்குகள்—ஸீப்ரக்கி (Zeebrugge).

விமான நிலயங்கள்.—பெல்ஜியத்திலுள்ள கோர்ட்ராய் (Courtrai), ஹாலந்திலுள்ள வான்ஸ்ட்ராச்சு (Wornsdrech).

பிரான்ஸிலுள்ள ட்ரிக்குவில்லி (Tricqueville).

சுறங்கவேடி அறுக்கும் கப்பல்கள்.—பிரான்ஸ் (France).

இரவு.—துறைமுகம்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).

இலக்குகள்.—ரூர் (Ruhr).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள லியோனி (Lioni), காளிஸி (Calisi).

விமான நிலயம்.—இதாலியிலுள்ள ஸாலியா (Salia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்—ஸாலமன்ஸிலுள்ள காஹிலி (Kahili), பல்லாலி (Ballale).

ஜப்பானியச் சைனியங்கள்.—முண்டா (Munda).

விமான நிலயம்.—கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).

அலூஷியனிலுள்ள **கிஸ்கா** (Kiska).

எதிரிக் கப்பல்.—பகோடா (Pagoda) முனைக்கு வடக்கில்.

28—7—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எதிரி விமான நிலயங்கள்—பெல்ஜியத்திலுள்ள காக்ஸிடி (Coxyde).

இலக்குகள்.—ஹாலந்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் (Amsterdam).

இரவு.—விமானத் தொழிற்சாலைகள்—ஜெர்மனியிலுள்ள காஸ்ஸல் (Kassel), மாக்டெபர்க் (Magdeburg).

நிலக்கரி.—பெல்ஜியத்திலுள்ள ஸீப்ரக்கி (Zeebrugge).

எதிரி விமான நிலயங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France). (24 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

அச்சுநாட்டு ரோட்டு, ரயில்வேப் போக்கு...

கப்பல்கள்.—ஸிஸிலியின் துறைமுகம்.
ஸிஸிலியிலுள்ள ரேகாபுடா (Regalbuto).
அச்சுநாட்டு விமான நிலயங்கள், போக்குவரத்து ஸ்தலங்கள்.—தெற்கு இதாலி (South Italy).

ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய நாசகாரி வியாபாரக் கப்பல்.—நியூ கினி (New Guinea).
விமான நிலயம்.—டிமோர் (Timor).
ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள முண்டா (Munda).
விமான நிலயம்.—கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila).
ஜப்பானியக் கப்பல்.—டாவாய் (Tavoy)த் தீவு.
ஜப்பான் ரேடியோ ஸ்டேஷன்.—பர்மாவிலுள்ள டயமாண்ட் (Diamond) தீவு.
எதிரி ஸ்தாபனங்கள்.—காங்தாங் (Kaungthaung) தீவு.
விமான நிலயம்.—பர்மாவிலுள்ள பகோடா (Pagoda) முனை.
ஜப்பானியக் கப்பல்.—அந்தமான் தீவிலுள்ள பிளேர் (Blair) துறைமுகம்.
சீனுவிலுள்ள ஹாங்காங் (Hongkong).

29—7—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(13 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
கப்பல் தளங்கள்.—கியல் (Kiel).
விமானத் தொழிற்சாலை.—ஜெர்மனியிலுள்ள வார்ன்முண்டே (Warne Munde).
மின்சார நிலயம்.—பிரான்ஸிலுள்ள ரோவன் (Rouen).
விமான நிலயம்.—பிரான்ஸிலுள்ள மெர்வில்லி (Merville), ரோக் (Rouge) கோட்டை.
இரவு.—துறைமுகம்—ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் (Hamburg).
எதிரி விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany), பிரான்ஸ் (France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல்கள்.—ஏஜியான் (Aegean) கடல்
எதிரிப் படகுகள்.—நாஸாக்கடல் (Nassau-bay).
ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான ஸ்தலம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ பிரிடனிலுள்ள ஆரா (Arawe).
ஜப்பானியக் கப்பல்கள்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்டர் முனை (Cap Gloucester).
விமான நிலயம்.—டிமோரிலுள்ள கோபாங் (Koepang).
டானிம்பார் தீவிலுள்ள லாரட்லிங்யட் (Larat Lingiat).
ரயில்ரோட் பாலம்.—பர்மாவிலுள்ள மூ நதி (Mu River).
பட்டணங்கள்.—பர்மாவிலுள்ள ஐராவதி (Irrawaddy), சிண்ட்வின் (Chindwin).
தொழிற்சாலைகள்.—பர்மாவிலுள்ள டாங்கன் (Tangon).
யந்திர சாலைகள்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan), ஸ்ப்ரபம் (Suprabum).
மோட்டார் வண்டிகள்.—பர்மாவிலுள்ள கமாய்ங (Kamaing).
சேமிப்புகள்.—பர்மாவிலுள்ள நாம்டி (Namti).

30—7—43 (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—(27 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 22 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமானத்திற்கு வேண்டிய உலோகங்கள்.—காஸல் (Kassel).
எதிரி விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்திலுள்ள ஷிபால் (Schipol), பெல்ஜியத்திலுள்ள கோர்ட்ராய் (Countrai), காக்ஸ்டி (Coxyde).
இரவு.—(17 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
யந்திர சாமான் தொழிற்சாலை.—ரெம்ஸ்செய்ட் (Remsheid).
எதிரி விமான நிலயங்கள், ரயில்வேக்கள்.—பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயங்கள்.—இதாலியிலுள்ள குரோட்டாக்ளி (Grottaglie); பிராக்டிகாடிமாரி (Practicadimare).
எதிரிக் கப்பல்கள்.—ஸிஸிலியிலுள்ள மிலாஸ்ஸோ (Milazzo).
தரைமட்டம்.—ஸார்டீனியா (Sardinia). (21 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 1 நேசதேச விமானம் காணப்படவில்லை).
கப்பல்கள், கடல் விமானங்கள்.—கிரீஸ் (Greece).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி படகுகள்.—நியூகினியிலுள்ள வாட்டியாஸ் ஜலஸந்தி (Vitiaz); நியூகினியிலுள்ள கரோக்கா பிரதேசம் (Garoka area).

விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள பல்லாலி (Ballale).

ஜப்பானியச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்ட்டர் முனை (Cape Gloucester), காஸ்மாடா (Gasmata), வங்காள வளைகுடாவிலுள்ள அந்தமான்ஸ் (Andamans).

சில இடங்கள்.—மாயு தீபகற்பம்.

சேனை தங்கியிருக்குமிடங்கள்.—இண்டின் சினோ (Indin, Sinoh); அடெர்நண்ரா (Atetnanra).

படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

31—7—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள, பாய் (Poix), மெர்வில்லி (Merville), டிரிக்வில்லி (Tricqueville), அப்பிவில்லி (Abbeville), செயிண்ட் ஓமர் (St. Omer), அமீன்ஸ் (Amiens), லில்லி (Lille).

இரவு.—விமான நடவடிக்கை இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

போக்குவரத்து ஸ்தலம்.—ஸிஸிலியிலுள்ள அட்ரானோ (Adrano), ரன்டாஸ்ஸோ (Randazzo).

எதிரிச் சைனியங்கள்—தீவுகளில்.

துறைமுகம்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினா (Messina).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய சைனியங்கள்.—நியூ ஜார்ஜியா (New Georgia).

ஜப்பானியப் படகுகள்.—நியூ கினி கடல் கரை.

கப்பல்கள்.—பர்மாவிலுள்ள ஐராவதி (Irrawaddy).

எதிரி ராணுவ நிலயங்கள்.—பர்மாவிலுள்ள பாமோ (Bhamo).

சேமிப்புகள்.—பர்மாவிலுள்ள நியாங்பின்வன் (Nyaung Binwun).

ரயில்வே ஸ்தலம்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).

பர்மாவிலுள்ள யீயு (Ye-U).

லாரிகள்.—பர்மாவிலுள்ள கின்பின் (Kinbin).

எதிரிக் குடிசைகள்—பர்மாவிலுள்ள பூதிடாங் (Buthidaung).

1—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—எண்ணெய்க் கிடங்குகள்—ருமேனியாவிலுள்ள பிளோயெஸ்ட்டி (Ploesti).

இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy),

மத்தியதரைச்கடல் (Mediterranean).

கப்பற் கட்டுந்துறைகள்—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples), விமான நிலயம் காபோடிசினோ (Capo Dichino).

துறைமுகம்.—மிபாங்ஸோ, ரயில்ப்போக்குவரத்துக்கள், ஸிஸிலி (Sicily).

தெற்கு இதாலி (South Italy), ரேன்டோஸா (Randazzo).

ரயில்வே லயன்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய் ஸ்தாபனங்கள்.—டச்சுக் கிழக்கு இந்தியத் தீவிலுள்ள போயலா (Boela).

விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).

நியூகினியாவிலுள்ள லே (Lae).

எதிரிப்படகுகள்.—கிளஸ்ட்டர் முனை (Cape Gloucester).

எதிரி பீரங்கி ஸ்தானங்கள்.—முண்டா (Munda).

ஸாலமன்ஸிலுள்ள **கோலம்பங்காராத் தீவு** (Kolambangara).

அலூஷியனிலுள்ள **கிஸ்கா** (Kiska).

கப்பல்கள், கப்பற்கட்டுந்துறைகள்.—சேமிப்புகள் காதா (Katha).

பாலம்.—பர்மாவிலுள்ள ஷுவேலி (Shweli). நதி.

ஜப்பானிய விமான நிலயம்.—வடக்கு பர்மா (North Burma).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

27—7—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

லண்டன் பிரதேசம் (விமான எச்சரிக்கை மட்டும்).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசப் பிரதேசங்கள்.—நியூ கினியிலுள்ள லே (Lae).

நேசதேசச் சைனியங்கள்—தாம்புக் கடல் (Tambu) பிரதேசம்.

28—7—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).

29—7—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லா.—இங்கிலாந்திலுள்ள கிழக்கு ஆங்கிலியா (Anglia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

30—7—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

மேல் டானெட்ஸ் (Upper Donetz).

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டாவிற்கருகில்.

நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).

31—7—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

கடற்கரை ஜில்லாக்கள்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia). (1 எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது).

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஸலாமூவாவிற்கருகிலுள்ள போப்டுபி (Bobdubi) பிரதேசம்.

1—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

ருஷ்யா (Russia).

மேல் டானெட்ஸ் (Upper Donetz) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா விமான நிலயம்.

2—8—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

பயித்தியமுகாமா அல்லது காராக்கிருஹமா? சென்ற வாரத்தில் முஸோலினி பயித்தம் பிடித்தவர்கள் அடைக்கப்படும் முகாமில் அடைக்கப்படுவானென்று சொன்னோம். ஆனால் முஸோலினி கொலைக்களமாக உபயோகித்த ப்ராகி என்னும் கட்டடத்தில் அவன் அடைக்கப்பட்டுவிட்டானென்று தெரிய வருகிறது. அவருடைய சம்சாரம், குழந்தைகள், இதாலிய அயல்நாட்டு மந்திரியாக இருந்தவரும் போப்பாண்டவரிருக்கும் பிரதேசத்தில் தூதராகவிருந்தவருமான முஸோலியின் மருமகனுமான சியானோ பிரபுவும் கைது செய்யப்பட்டுவிட்டார்கள். இன்னும் அநேகர் இந்தக் கட்டடத்திற்கு வந்துசேர்ந்துவிடுவார்கள்.

இந்தக் கோட்டையில் அடைபட்ட முஸோலினிக்கு ஹிட்லர் அனுப்பிய பிறந்தநாள் கொண்டாட்டத்தின் பரிசான நீட்சி எழுதிய "அதிகாரம் பெறுவதற்கு ஊக்கம்" என்ற தலையங்கமுள்ள புஸ்தகத்தைப் படித்துப்பார்க்கப் போதுமான அவகாசமிருக்கிறது. ஆகிலும் அதிகாரம் பெற அவனிடம் சக்தியில்லை. ஊக்கமாக வேலை செய்ய அவனுக்கு புத்தி சுவாதீனமும் இல்லை. மாக்பத்துக்குப்புலப்பட்ட மாதிரி முஸோலினிக்கும் தன்னை எதிர்த்துவரும் கத்திகளின் தோற்றம் ஏற்பட்டு அவன் கலக்கமடையலாம். அல்லது பாஸ்வொர்த் யுத்தகளத்தில் மூன்றுவது ரிச்சர்ட் மன்னருக்கு ஏற்பட்ட புத்தி பிரமங்கள் முஸோலினிக்கும் உண்டாகலாம்:—

> "விளக்குகள் நீலவர்ணமாக எரிகின்றன. இப்பொழுது நடுராத்திரி.
> என் உடல் நடுங்குகிறது. பனித்துளிகள் விழுகின்றன.
> ரிச்சர்ட் தன்னைத்தானே நேசிக்கிறான்.
> நான் ஒரு கொலையாளியா? இல்லை. ஒருக்கால் இருந்தாலுமிருக்கலாம்!
> அப்படியானால் நான் ஓடிவிடவேண்டும். இதற்கு ஞாயமிருக்கிறது.
> என்னைப் பழிக்குப்பழி நான் வாங்கிவிடவேண்டும்.
> அய்யோ பாவம்! எனக்கு பிழைத்திருக்க ஆசையிருக்கிறது.
> நான் ஒரு போக்கிரி. ஆகிலும் அப்படியில்லையென்று நான் பொய்சொல்லுகிறேன்.
> முட்டாளே, உன்னைப்பற்றி சரியான விஷயங்களைச் சொல்லு: தப்புத்தோத்திரம் செய்யாதே.

என்னுடைய அந்தரங்கத்தில் ஆயிரக்கணக்கான ஒற்றர்களிருக்கிறார்கள்.
ஒவ்வொருவரும் அநேக விருத்தாந்தங்களை வெளிப்படுத்துகிறார்கள்.
ஒவ்வொரு கதையிலும் நான் போக்கிரி என்று சொல்லப்படுகிறது.
அபாண்டமான பொய் சொல்லுகிறவனென்று சொல்லுகிறார்கள்.
கொலை, படுகொலை, அநியாயமான கொலைபாதகன்.
எல்லாக் குற்றங்களும் ஒன்று சேர்ந்து
நியாய ஸ்தலத்தில் இவன் குற்றவாளி என்று குற்றம் சாட்டுகிறார்கள்".

வி வி வி வி வி

அயல்நாட்டு வாசம். இதாலி சரணடைந்துவிடுமென்றும், நேசநாடுகள் கையில் அகப்பட்டுக்கொண்டால் அவனைக் குற்றங்களுக்காக பரிசீலனைசெய்து யுத்தக் குற்றவாளி என்று கண்டுபிடித்து சிக்ஷித்துவிடுவார்களென்றும் பயந்து முஸோலினி நடுநிலைமை வகிக்கும் நாடுகளுக்கு ஓடிவிடலாமென்றும் யோசனைசெய்து வருகிறான். ஆகிலும் யுத்தக்குற்றவாளிகளுக்கு இடம் கொடுத்தால் நேசநாடுகளுக்கு விரோதமாக நடவடிக்கை செய்ததாக ஆகுமென்று நடுநிலைமை நாடுகளுக்கு பிரிட்டனும், அமெரிக்காவும், ருஷ்யாவும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

வி வி வி வி வி

பாஸிதத்வம். பெனிடோ முஸோலினி திடீரென்று வீழ்ச்சிபெற்றதும் 1941-ம் வருஷத்தில் ஜெர்மனியிலிருந்து டாக்டர் ஹெஸ் தப்பி ஓடியதும் அதிக ஆசைப்படுகிறவர்களின் முடிவை விளக்கிக் காட்டுகிறது. யதேச்சாதிகாரமென்பது கொடுங்கோன்மைக்கு மற்றொரு நாமதேயம்தான்.

முஸோலினியின் யதேச்சாதிகாரம் முடிவுற்றது. அத்துடன் பாஸிஸமும், அதன் தனிப்பட்ட கொள்கைகளும், கொடுங்கோன்மையும் முறிவடைந்துவிட்டன. டூசேயைச் சேர்ந்தவர்களெல்லாம் கொள்ளைக்கூட்டத்தாரின் தலைவர் உபயோகிக்கும் பொதுவான தந்திரங்களால் ஒன்றுபடுத்தப்பட்டிருந்தார்கள். கொள்ளையடிப்பதும், பறிமுதல் சொத்தில் பங்கு கொடுப்பதும்தான் இந்த முறைகள். இவ்விதமாகத்தான் முதலில் இதாலியிலும், பிறகு அபிஸீனியாவிலும், பிறகு ஸ்பெயினிலும், பிறகு அல்பேனியாவிலும், பிறகு கிரீஸிலும் நடவடிக்கைகள் நடைபெற்றன. ஆகிலும் கொள்ளையிட்ட சாமான்கள் கைப்பற்றப்பட்டபொழுது பலபட்டரையான கோஷ்டியார்கள் கலைந்துவிட்டார்கள்.

படோக்ளியோ அரசாங்கம் பாஸிஸ்ட் கக்ஷியைக் கலைத்துவிட்டது. அதன் நியாய ஸ்தலங்களை மூடிவிட்டது. பாஸிஸ்ட் சின்னங்களை உபயோகப்படுத்தக்கூடாது என்று தடை செய்துவிட்டது. பிரசார முறைகளையும் அகற்றிவிட்டது. பள்ளிக்கூடங்களில் பாஸிஸ்ட் சம்பந்தமான புஸ்தகங்கள் உபயோகப்படுத்தக்கூடாதென்றும் உத்தரவிட்டுவிட்டது.

வி வி வி வி வி

சின்னங்களும், தத்வமும் பாஸிஸ்ட் சின்னங்கள் மறைந்துவிட்டன. ஆகிலும் பாஸிஸ்ட் தத்வம் மறைந்துவிடவில்லை. முஸோலினிக்கு பதிலாக படோக்ளியோ வந்துவிட்டான். ஆகிலும் இது ராணுவ அமுலுடன்கூடிய பாஸிஸமாகயிருக்கிறது. முஸோலினியின் உத்தரவுப்படி அபிஸீனியாவில் விஷவாயுப் பிரயோகம் செய்தவரும், கிரீஸிலும், ஆல்பேனியாவிலும் போர்புரிந்தவரும் படோக்ளியோ தான். பாஸிஸ்ட் கக்ஷி போய்விட்டது. ஆகிலும் அதன் விஷம் அகன்றுவிடவில்லை.

ஆகையால் சமாதானம் கோரி படோக்ளியோ பேச்சுகள் ஆரம்பித்திருக்கிறானென்பதெல்லாம் சந்தேகாஸ்பதமானது. ரோம் ஒலிபரப்பும் ஜெர்மன் அறிக்கை நிலயமும் சமாதான ஷரத்துகளை வெளியிட்டதென்று அச்சுநாடுகள் செய்த ரிபோர்ட்டுகள் கட்டுக்கதையானவை. ரிபோர்ட்டுகளில் ஒன்றில் நேசதேசத்தாரின் சமாதான ஷரத்துகளை இதாலியர்கள் கவலையுடன் பரிசீலனை செய்துவருகிறார்களென்று சொல்லப்படுகிறது. இது சந்தேகாஸ்பதமானது.

வி வி வி வி வி

சமாதான வெள்ளோட்டம். நேசநாடுகளின் மனப்பான்மையை அறிய படோக்ளியோ முயற்சி செய்துவருகிறான். அல்லது இதாலியிலுள்ள ஜெர்மன் துருப்புகள் இதாலியைக் காலி செய்யும் வரையில் அவகாசம் சம்பாதிக்க முயன்றுவருகிறான். ஆனால் நிலைமை நெருக்கடியாகிவிட்டது. ப்ரென்னர் கணவாய் ஹிட்லர் வசமாகிவிட்டது. ஹிட்லர் இதாலியிலுள்ள கேந்திர ஸ்தானங்களைப் பிடித்துவிட்டான். கபடத்தினாலும், பலாத்காரத்தினாலும், ஜெர்மன் துருப்புகள், இதாலியத் துருப்புகளை நிராயுத

பாணிகளாக்குகிறார்கள். ஆகையால் நேசநாட்டாரிடம் சரண் புகுவதற்குமுன் ஜெர்மன் எட்டுக்கால்பூச்சியின் பிடிப்பிலிருந்து படோக்ளியோ தன்னை விடுவித்துக்கொள்ளவேண்டும்.

மிலானிலும், டூரினிலும் உண்டாகியிருக்கும் கலகங்கள் வெளிப்படுத்துவதுபோல இதாலிய ஜனங்கள் சண்டையை வெறுக்கிறார்களென்றும், சமாதானம் செய்துகொள்ள ஆவலுள்ளவர்களாகயிருக்கிறார்களென்பதும் தெரியவருகிறது. ஆகிலும் படோக்ளியோவை கட்டாயப்படுத்த அவர்களிடம் சக்தியில்லை.

நேசநாடுகள் சலுகை காட்டுமென்று எதிர்பார்த்து படோக்ளியோ தாமதம் செய்யலாம். சரணடைவதில் கௌரவமில்லையென்றும், கௌரவமான சரணாகதியென்பது பரஸ்பர விரோதமுள்ள பதங்களென்றும் சொல்லப்படுகிறது. சரணாகதி செய்தால், ஸ்வதந்திரமும் சமாதானமும் கிட்டிவிடாதென்றும், நேசநாடுகளுடன் சமாதானப் பேச்சுகளெல்லாம் இப்பொழுதிருக்கும் அடிமைத்தனத்தை பலப்படுத்துவதற்கும் யுத்தத்தை மும்முரமாக நடத்துவதற்கும்தான் பொருள்படுமென்றும், எஜமானர்கள்தான் மாறிவிடுகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ரூஸ்வெல்டும், சர்ச்சிலும், ஈஸன்ஹவரும் தங்களால் இயன்ற அளவு விஷயங்களைத் தெளிவுபடச் சொல்லியிருக்கிறார்கள். ஜூலை 29-ம் தேதியன்று ஈஸன்ஹவர் இதாலியர்களுக்கு ஒலிபரப்பில் ஒரு பிரசங்கம் செய்தார். "நீங்கள் சமாதானத்தைக் கோருகிறார்கள். இப்பொழுதே அதை நீங்கள் கௌரவமாகப் பெற்றுவிடலாம். உங்களை விடுதலை செய்வதற்காக நாங்கள் முன்வந்திருக்கிறோம். ஜெர்மானியர்களிடமிருந்து உங்களை விடுவித்துவிடுவோம். யுத்தக் கொடுமைகளிலிருந்தும் உங்களை விடுவிக்கிறோம். எங்களுடைய ஆக்கிரமணம், அமைதியும், நன்மையும் பொருந்தியதென்று ஸிஸிலி ருஜூப்படுத்தும். சமாதான காலத்திய அலுவல்களை நீங்கள் செய்ய ஆரம்பிக்கலாம். டூனிஸியாவிலும், ஸிஸிலியிலுமுள்ள இதாலிய யுத்தக் கைதிகளை விடுதலை செய்துவிடுவோம். இதைவிட லாபகரமான ஷரத்துகளை இதாலி எதிர்பார்க்கமுடியாது. இதாலியின் நடவடிக்கைகளை உத்தேசித்து நாங்கள் விடுத்திருக்கும் நிபந்தனைகள் தயையும், தாராளமும் பொருந்தியவை".

இதாலி யுத்தத்தை நிறுத்திவிடவில்லை. ஆகிலும், முஸோலினியின் வீழ்ச்சிக்குப் பின் உண்டாகியிருக்கும் கிளர்ச்சிகள் இதாலி யுத்தத்தை விட்டு விலகும் வரையில் நின்றுவிடப் போவதில்லை. இதாலியர்களுக்கு நல்ல புத்தி வந்து அவர்கள் சரியானமுறையில் நடந்து கொள்ளட்டும் என்ற அபிப்பிராயத்துடன் சிறிதுகாலம் யுத்தத்தை நிறுத்திவைக்கும்படி மிஸ்ட்டர் சர்ச்சில் உத்தரவிட்டிருந்தார். அதற்குப்பின் நேசநாடுகள் கடுமையான, நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டார்கள். ஆகஸ்டு 2-ம் தேதி ஆல்ஜியர்ஸ் ஒலிபரப்பில் இதாலிய மக்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

"தந்திரமாக ஜெர்மானியர்கள் உங்களை நிராயுதபாணிகளாகச் செய்து வருகிறார்கள். முஸோலினி உங்களைப் பிறர் கையில் காட்டிக் கொடுத்துவிட்டார். இப்பொழுது பீட்ரோ படோக்ளியோவும் அவ்விதம் செய்துவருகிறான். உங்களுடைய முடிவை எதிர்பார்த்து நாங்கள் காத்திருந்தோம். அவ்விதம் 8 நாட்களாக பொறுத்திருந்தோம்.

"இப்பொழுது எங்களுடைய படைகள் மும்முரமாகச் சண்டை செய்ய ஆரம்பித்துவிட்டன. இதாலியின் வாசற்படிக்கு வந்து விட்டோம். இதாலியில் ஈவு இரக்கமன்னியில் முன்னேறுவோம். இதாலிய தீபகற்பத்தில் நாங்கள் விளைவிக்கப்போகும் யுத்தக் கஷ்டங்களை நீங்கள் அனுபவிக்க வேண்டும். நாங்கள் பொறுத்திருந்தோம். எச்சரிக்கை விடுத்தோம். எங்களுக்கு வேறு வழியில்லை."

வி வி வி வி வி

அச்சு நாடுகளின் கோஷ்டி கலைந்து விட்டது. ஹிட்லருக்கும் தேக அசௌக்யம் ஏற்பட்டிருக்கிறதென்று செய்திகிடைத்திருக்கிறது. கொடுங்கோல் மன்னர்களின் முறைப்படி இந்த யதேச்சாதிகாரிகளும், ஒரேவிதமாகத்தான் மறைந்துவிடுகிறார்கள். முதலில் வெறிபிடித்தவர்கள்போல பீத்திக் கொள்ளுவது, பிறகு சிலகாலம் கனவுகாண்கிறது, முடிவில் துக்கமும், ஆக்ரோஷமும், மௌனமும், அதன் பிறகு ராஜீனாமாவும், தேக அசௌக்யமும் கடைசியாக பயித்தியக்காரர்கள் வீட்டில் வாசமும் படிப்படியாக ஏற்படக்கூடியவை. முஸோலினி மறைந்துவிட்டான். ஹிட்லரின் வீழ்ச்சியும் நிச்சயமாக வந்துவிடும். முஸோலினிக்கு ஏற்பட்ட அவகேடு ஹிட்லரையும் தொடர்ந்துவிடும். இதுதான் வெரோனாவில் ஹிட்லரும், முஸோலினியும் சந்தித்துப் பேசியதன் விளைவு. யுத்தம் நீடித்து நடக்குமென்று படோக்ளியோ சொல்லிவரலாம். அவனுடைய நிர்வாக சபையும் அதை ஆமோதிக்கலாம். ஆகிலும் கடற்கரைகள் தாக்குதலுக்கு இலக்காகவும், நகரங்கள் தற்காப்பில்லாமலும், தொழிற்சாலைகள் நொருக்கப்பட்டும், சேனைகள் முறியடிக்கப்பட்டு, மனம் தளர்ச்சிபெற்றும், கடற்படை ஒளிந்து

கொண்டும் ஜனங்கள் சமாதானம் செய்துகொள்ளவேண்டுமென்று ஆரவாரம் செய்து கொண்டும், எதிரிக்கு அதிகமானபடை பலமும் வெற்றிபெறவேண்டுமென்ற ஊக்கமும், இவ்விதமான அநேக இடுக்கண்களிருக்கும்பொழுது படோக்ளியோ எவ்விதம் எதிர்த்து நிற்பானென்று புலப்படவில்லை. படோக்ளியோ இருந்தாலும் சரி, விக்டர்மோனுவல் இருந்தாலும் சரி, இதாலி யுத்தத்தை விட்டு வெளியேறவேண்டும். சரணடைந்தால் சாவதானமாக வெளியேறலாம். அல்லது முட்டாள்தனமாக எதிர்த்து நின்றால் இதாலி நொருக்கப்பட்டுவிடும். இதாலியின் வீழ்ச்சியிலிருந்து மகத்தான விளைவுகள் ஏற்படக்கூடும். அச்சுக் கக்ஷியானது இப்பொழுது நிலைகுலைய ஆரம்பித்துவிட்டது. அப்பொழுது அச்சு முறிந்துவிடும். இப்பொழுது உண்டாகியிருக்கும் வெடிப்பு அப்பொழுது அச்சை இரண்டு துண்டாக்கிவிடும், இப்போழுது தோன்றியிருக்கும் பிளவு முதலில் தென்கிழக்கு ஐரோப்பாவுக்குப் பறவும். இங்கே ருமேனியாவும், ஹங்கேரியும், பல்கேரியாவும், ஏற்கனவே கோடீகரித்திருக்கும் அச்சுநாடுகளின் தாக்குதல்களிலிருந்து எவ்விதம் தப்பிப்பதென்று யோசனை செய்து வருகிறார்கள். அதன் பிறகு இந்தப் பிளவு பிரான்ஸ் பூராவிலும் பெல்ஜீயம் டென்மார்க்கு வழியாக நார்வேக்கும் பரவக்கூடும். நடுநிலைமை வகிக்கும் ஸ்வீடனிலும் இந்த வாடை அடித்துவிடும். சமீபத்தில் கிடைத்த தகவல்களின்படி ஸ்வீடிஷ் ராஜ்யத்தின் வழியாக ருஷ்யாவிலுள்ள ஜெர்மன் துருப்புகளுக்கு ஜெர்மனி சாமான்கள் கொண்டுபோவதை சமீபகாலத்தில் ஸ்வீடன் தடை செய்துவிட்டதாகத் தெரியவருகிறது. இதாலி நேசநாடுகள் வசமேற்பட்டுவிட்டால் ஆஸ்திரியா, தெற்கு ஜெர்மனி, ஸெகோஸ்லாவோகியா முதலிய இடங்களிலுள்ள ஜெர்மானிய தளவாட உற்பத்திசாலைகளை நாம் ரூர் பிரதேசத்தைத் தாக்குவது போல சுலபமாகவும், பலமாகவும் தாக்குவதற்கு வசதி உண்டாகிவிடும். முஸோலினியின் வீழ்ச்சியை ஒட்டி ஹிட்லரின் வீழ்ச்சியும் நிச்சயம். ஹிட்லருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்கும் பேச்சு ஜெர்மனியில் ஆரம்பமாகிவிட்டது.

வி வீ வி வீ வி

ஸிஸிலி யுத்தம். இதாலிய புதிய நிர்வாகம் சமயோசிதம்போல் நடிக்க ஆரம்பித்தபின், நேசநாடுகள் யுத்தத்தை தீவ்ரமாக நடத்த ஆரம்பித்துவிட்டார்கள். ஸிஸிலிய யுத்தத்தின் நாலாவது வாரத்தில் நமக்கு விசேஷமான லாபங்கள் கிடைத்துவிட்டன. இந்த வாரத்தில் ஸிஸிலியைச் சுற்றியுள்ள நிஸ்ஸோரியா, நிகோஸ்யா, ஸ்பெர்லிங்காவென்ற சிறிய தீவுகள் நிபந்தனையற்ற சரணாகதி செய்துவிட்டன. ஸிஸிலியில் ஸான் ஸ்டெபானோ, மிஸ்ட்ரெல்லா, காஸ்டல்டி டுஸா, காஸ்டல்டி டுசியோ, மோட்டா, பாட்டிமியோ, ரீகல்பூடோ, ஸெண்டூரிபா, ஆகிரா, காண்டெனுவா முதலிய இடங்கள் நமது வசமாகிவிட்டன. முக்கியமான வெற்றியாதெனில் கடானியாவின் வீழ்ச்சிதான். இங்கு ஜெர்மானியர்கள் பலமான தற்காப்புகளுடன் அநேக நாட்களாக கோரமாக யுத்தம் புரிந்தார்கள். இறந்தவர்களை அப்புறப்படுத்துவதற்குக் கூட அவகாசம் கொடுக்காமல் யுத்தம் புரிந்து வந்தார்கள். மத்திய ஸிஸிலியில் கனேடியர்கள் எட்னா மலைக்குன்றுகளின் அடிவாரத்திலுள்ள அட்ரானோவை அடைந்துவிட்டார்கள்.

வீ வி வி வி வீ

ருஷ்யா. ருஷ்யாவின் கேந்திரஸ்தானமானதும் இரண்டு வருஷங்களாக எதிரிபலமாகத் தற்காப்பு செய்துவந்ததுமான ஓரல் விழுந்துவிட்டது. ஜெர்மானியர்கள் பிரியான்ஸை நோக்கிப்பின்வாங்கிவருகிறார்கள். ரஸ்தாக்களில் ஜெர்மானியர்கள் டைகர் டாங்கிகளையும், பீரங்கிகளையும் ஏராளமாக போட்டுவிட்டு ஓடுகிறார்கள்.

பேயலோகிராடும் விழுந்துவிட்டது. இவ்வாரத்தில் ஜெர்மனிக்கு அநேகம் தோல்விகள் ஏற்பட்டுவிட்டன. ஸிஸிலியில் கடானியாவிலும், ருஷ்யாவில் ஓரலிலும், பேயலோகிராட்டிலும் ஜெர்மானியர்கள் தோல்வியுற்றார்கள்.

வீ வி வீ வி வி

விமான யுத்தம். ஐரோப்பாவை விமான மூலம் தாக்கும் நடவடிக்கைகள் இடைவிடாது நடைபெறுகின்றன. முக்கியமாக, ஹாம்பர்க் ஒருவாரத்தில் ஏழு தடவை தாக்கப்பட்டது. ருமேனியாவின் எண்ணெய்க் கிணறுகள் உள்ள போலஸ்தி பிரதேசம் தாக்குண்டது. எண்ணெய் பிரதேசங்களில் அதிகச் சேதம் ஏற்பட்டதென்று புலப்படுகிறது. இந்தத் தாக்குதலை, பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்துக்கும், ஸ்டாலின்கிராட் டுனிஸியா வெற்றிக்கும் ஒப்பிடலாம். எண்ணெய்க் கிட்டங்கிகள், ஆஸ்டோ-ரொமானா எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள், கிரெடிட் மினியர் எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள், நாசமாக்கப்பட்டன. பெட்ரோல் எண்ணெய் ஜெர்மனிக்கு போலஸ்தியிலிருந்து பெரும்பாலும் ஸப்ளை செய்யப்படுவதால் ஜெர்மனியின் வயிறான ஸ்தலத்தில் நாம் அடித்துவிட்டோம்.

சீனுவும், விஷியும். சமீப காலத்தில் விஷி அரசாங்கத்தாரின் நடவடிக்கை திருப்திகரமாகயில்லாததால் சைனு விஷியுடன் ராஜதந்திர உறவை ரத்து செய்துவிட்டது. இந்தோ-சைனுவிலுள்ள இருப்புப்பாதையில் சைனுவுக்குள்ள பகுதியை சைனு கைவசப்படுத்திவிட்டது.

வி வி வி வி வி

பிரெஞ்சு மக்களின் ஒற்றுமை. ஆபிரிக்காவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களே ஒன்றுகூடி அமைக்கும் முறையில், பிரெஞ்சு படைகளுக்கு கிராட் சேனுதிபதியாகவும், தேசீயத் தற்காப்பு சபைக்கு டிகாலி தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறூர். ராணுவ விஷயங்கள் பரிசீலனை செய்யப்படும்பொழுது கிராட் தலைமை வகிப்பார். பொதுஜன, ராஜீய வியவகாரங்கள், பேசப்படும்பொழுது டிகாலி தலைமை வகிப்பார்.

வி வி வி வி வி

நாலாவது இந்திய சேனைப் பகுதி. பிரிடனுக்கு செல்லுவதற்கு இந்தப் பகுதியிலுள்ள எல்லா விதமான தொகுதிகளிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஆக்கிரமித்த நாட்டு ஜனங்களின் கோபத்தால் அச்சுநாட்டினர் அழிக்கப்படுவார்.

(பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட்டின் யுத்த விமர்சனம்).

பொதுமக்களின் சௌகரியத்தைக் கருதும் நேசதேச பெரும்படை ருஷ்யாவிலும், பஸிபிக் பிரதேசங்களிலும், ஐரோப்பாவிலும், முன்னேறிக்கொண்டிருக்கின்றன. பெர்லின், டோகியோ ஆகிய முக்கியமான இடங்களைப் பிடிப்பதற்குவேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது. கொடுமையான பாஸிஸ்ட்கக்ஷியினரின் ஆட்சி இதாலியில் நிர்தூளியாக்கப்பட்டது. பாஸிஸ்ட் முறையும் நாஸிக் கொள்கைகளும் இனி தலை தூக்கி நிற்கமுடியாது. கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் நேசதேச ராணுவ ஆதிக்கம் இப்போது அதிகப்பட்டு சமயத்திற்கேற்றபடி சரியான இடங்களில் பயன் படுத்தப்பட்டு வருகிறது. முஸோலினியைக் காப்பாற்றவேண்டிய உதவிகளை ஹிட்லர் மறுத்துவிட்டான். ஸிஸிலியில் ஹிட்லரின் துருப்புகள் அங்கிருந்த மோட்டார்களை எல்லாம் தங்களுக்கென எடுத்துக்கொண்டதால் இதாலியத் துருப்புகள் நிலைகுலைந்து சரணடைய வேண்டியதாயிற்று. ருஷ்ய யுத்த அரங்கங்களிலும், லிபியா டிரிபோலி, டூனிஸியா இவைகளிலிருந்தும் பின்வாங்கியபோதும், ஜெர்மானியர்கள் இதாலியரைக்காட்டி கொடுத்ததுபோல இப்பொழுது காட்டிகொடுத்து விட்டனர். கெடுதி காலம் நெருங்கி விட்டது என்ற முடிவுக்கு முஸோலினி வந்துவிட்டான். இறுதியில் நியாயம் வழங்கப்பட்டே தீரும்.

வடக்கு ஆபிரிக்கப் படைகளுக்கு உதவியாக ஆயிரக்கணக்கான கப்பல்களும், விமானங்களும் காத்துக்கொண்டும், கடல் விமானங்கள், சைனியங்களையும், யுத்தத் தளவாடங்களையும், ஸப்ளைகளையும் தாக்குதல் செய்யும் இடங்களுக்கு ஏற்றிக்கொண்டும், இவைகளையன்னியில் ரயில்வேக்கள் மூலமாயும் பெரும் ரஸ்தாக்கள் மூலமாயும் சைனியங்களும், யுத்த தளவாடங்களும் துறைமுகங்களுக்கு ஏற்றிச் செல்லப்பட்டும். தொழிற்சாலைகளும், சுரங்கங்களும் யுத்தத்திற்கு வேண்டிய தளவாடங்களை உற்பத்தி செய்தும், கடற்கரைகளிலும், பாலைவனங்களிலும், மலைகளின் மேலும் செய்யவேண்டிய யுத்தங்களில் ஏற்படும் கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டியபடி துருப்புக்களின் தங்கியிருக்கும் இடங்களும் ஆகிய இவைகள் எல்லாம் நம் நேசநாட்டினருக்கு அமைந்திருந்து தாக்குதல் செய்யப்பட்டது. இதே மாதிரியாக ஸிஸிலியிலும் தாக்குதல்கள் செய்யப்படவேண்டி இருக்கிறது. இந்தத் தாக்குதலில் விமானங்களும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு ஆபிரிக்காவைத் தளமாக வைத்துக்கொண்டு ஸிஸிலியின் எதிர்ப்புக்களையும் இதாலிக்கு செல்லும் ஸப்ளைகளையும் தாக்குதல்கள் செய்யப்படுகிறது.

முஸோலினி தண்டிக்கப்படுவான்.

(பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட்டின் உறுதி).

குற்றம் செய்தவன் யாராயினும் சரி, ராஜீனுமா செய்துவிட்டாலும் தப்பவிடப்பட மாட்டான். ஜெர்மனி, ஜப்பான் ஆகிய தேசங்களுக்கும், இதாலிக்கும் நிபந்தனையில்லாது

சரணடைய வேண்டியதைத்தவிர வேறுவழியில்லை. பாஸிஸத்துடன், அமைப்பு, முறை இவைகளில் எந்த வழியிலும் நமக்குத் தொடர்பு கிடையாது. பாஸிஸத்தின் எச்சில்கூட மிஞ்சியிருக்க நாம் அனுமதிக்கமாட்டோம். இதாலிய மக்கள்தான் தங்களுக்கென பொது நோக்கத்தோடும் ஸ்வதந்திரத்தோடும் கூடிய பொதுஜன ஆட்சியை உண்டாக்கிக்கொள்ள வேண்டும்.

இதற்கிடையில், முஸோலினியோ, ஹிட்லரோ, அல்லது ஜப்பானியர்களோ, தாங்கள் ஆக்கிரமித்த நாடுகளை நடத்தியமுறையில், நேசநாடுகள் தாங்கள் ஆக்கிரமித்த நாடுகளை நடத்தமாட்டார்கள். அந்நாட்டுமக்களை அவர்கள் அடிமைகளாகவும், உணவிற்கும் கஷ்டப்படும் நிலைமையிலும் நடத்தியதுபோல் நாம் நடத்தமாட்டோம். ஸிஸிலியிலுள்ள இதாலிய மக்களுக்கு நாம் வேண்டிய உதவிகள் ஏற்கனவே செய்துவருகிறோம். அவர்களின் மனப் பூர்வமான ஒத்துழைப்பினால், நாம் பலத்தோடும், நல்ல நிலைமையிலும் வெற்றியடைந்து வருகிறோம். அவர்களை பாஸிஸ்ட்கட்சியின் கொடும் ஆட்சியால் வருத்திய சங்கங்களை அழித்து வருகிறோம். அவர்களுக்கென வேண்டியவைகளை அவர்களே தேடிக்கொள்ளும் திறனயடை யும் வரையில் அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுத்துக்கொண்டும் வருகிறோம்.

ஸிஸிலியிலுள்ள மக்கள் அவர்களின் உழைப்பால் உண்டாக்கும் ஒவ்வொன்றையும் அவர்களே அனுபவிப்பதினால் இன்றையதினம் மகிழ்வெய்துகிறார்கள். அவர்கள் உண்டாக்கு வதை இதுகாறும், பாஸிஸ்ட் நாஸிக் கள்ளர்களினால் கவறப்பட்டு வந்ததுபோலில்லாமல் இன்றையதினம் அவர்கள் உற்பத்திசெய்வதையெல்லாம் அவர்களே பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். நாஸிகளும், பாஸிஸ்ட்களும், ஜப்பானியர்களும் ஜயித்த நாடுகளிலுள்ள மக்களை அடிமைகளாகவோ, ஒன்றுமற்ற ஏழைகளாகவோ செய்தனர் என்பது உண்மை.

திரும்பவும் பூரண சுயாட்சி.

ஜயித்த மக்களை மனிதர்களாகவும், அவர்களின் வினைகளுக்கு அவர்களே எஜமானர் களாகவும், பேச்சு, மதம், இவைகளின் ஸ்வதந்திரமும், பஞ்சம், பயம் இவைகள் இல்லாமல் அவர்க்ள் வாழுமாறும் செய்வதுதான் நம் உறுதி. அவ்வுறுதியில் சிறிதும் தளர்ச்சியில்லாமல் இருக்க நாம் ஆரம்பித்திருக்கிறோம்.

வெளிநாட்டு விஷயங்களில் ஈடுபடுவது பைத்தியக்காரத்தனம் என்றும், பெறுங் கனவு என்றும் சொல்லிவரும் அமெரிக்காவிலுள்ள ராஜீயவாதிகள் சொல்லுவது பிசகு என்பது என் திடமான எண்ணம்.

இதனிடையில் ஸிஸிலியிலும், இதாலியிலும் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. இது நடந்துதான் ஆகவேண்டும். மேலே நடந்துகொண்டேதானிருக்கும். இதாலிய மக்கள் முழுமனதோடு உதவாததும், அவ்வப்போது கஷ்ட நஷ்டங்களை அதிகப்படுத்திக்கொண்டும் வரும் இந்த யுத்தம் அவர்களுக்குச் சிறிதும் பயனில்லாதது என்று இதாலியர்கள் உணரும் வரையில் இந்த யுத்தம் நடந்துகொண்டுதானிருக்கும்.

அமைதிக்குப் பங்கம்.

(ஸாமுவல் கிராப்டன்).

ஸிஸிலியைப் படையெடுத்ததின் வினைவென்னவென்று பார்ப்போம். ஐரோப்பிய அரணென்பது இனிமேல் இல்லையென்று பொருள்படும். ஒரு பிராந்தியத்தில் நடைபெறக் கூடியது மற்ற எல்லாப் பிரதேசங்களிலும் நடைபெறக்கூடும். ஐரோப்பியக் கோட்டையின் வலிமையைப்பற்றி ஒரு வருஷ காலமாக ஹிட்லர் செய்துவந்த பிரசங்கமெல்லாம் உபயோக மற்றதாக ஆகிவிட்டது. இந்தக் கோட்டையின் மேன்கூரை வெகுகாலமாக ஒழுக ஆரம்பித்து விட்டது. இப்பொழுது அதன் கதவுகளை உடைத்துவிடலாமென்ற நம்பிக்கை உண்டாகி விட்டது.

ஸிஸிலி நடவடிக்கை மூலம் ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் வினைவுகளைப்போலவே பஸிபிக்கிலும் ஏற்பட்டிருக்கிறது. ஸிஸிலி ஒரு தீவுபென்று அச்சுநாடுகள் சொல்லிவரும் சமாதானங்களும், புகல்களும், தூரக்கிழக்கிலுள்ள ஜப்பானுக்கு ஆறுதலளிக்கமுடியாது. ஜப்பானும், ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளும் தீவுகள்தான்.

ஆகிலும் நாம் சொன்னவைகள் ஒரு மகத்தான நிகழ்ச்சியிலிருந்து ஏற்படக்கூடிய வெளிப்படையான விளைவுகள். இதை ஊன்றி ஆராய்ச்சி செய்வோம்.

யுத்த நிலைமையில் அமைதி ஏற்பட்டுவிடுமென்ற நம்பிக்கை ஸிஸிலி யுத்தத்தினின்றும் போய்விட்டது. அமைதி ஏற்பட்டு காலதாமதம் ஏற்படவேண்டுமென்றுதான் ஹிட்லர்

நம்பியிருந்தான். மேமீ 20-ம்தேதியன்று மிஸ்ட்டர் சர்ச்சில் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டு நமக்கு எச்சரிக்கை செய்தார்.

"ஏராளமான செலவுடன் நாம் யுத்தத்தை நீடித்து நடத்தவேண்டுமென்றும், அதன் மூலமாக நாம் சோர்வடைந்து மனம் கசந்து பிளவுபட்டு விடுவோமென்றும், ஜெர்மனியும் ஜப்பானும் நம்பியிருக்கிறது" என்று சொன்னார். இவ்விதமான ஒரு அமைதியான நிலைமையை ஸிஸிலி நடவடிக்கை மாற்றிவிட்டது. ஸிஸிலியின் நஷ்டத்தைவிட அமைதியில் பங்கம் ஏற்பட்டதைக்கண்டு ஹிட்லர் மனம் கலங்கிவிட்டான்.

இதாலியில் விமானத் தாக்குதல் அதிகரிக்கிறது.

(விமானப்படை கம்மாண்டர் L. V. பிரேஸர்).

டுனிஸியா யுத்தம் போலில்லாமல் ஸிஸிலியில் நடைபெற்றுவரும் யுத்தமானது போக்குவரவு மார்க்கங்களைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்று வருகிறது. இந்த அபிப்பிராயத்தைக்கொண்டு தான் ரோமும் நேபிள்ஸும் யுத்த தந்திர முறையில் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன. ரோமிலுள்ள ராணுவ லக்ஷியங்களைத் தாக்கியதென்பது இதாலியின் வட பாகத்திலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து இதாலியின் கால் கட்டை விரல் போன்ற தெற்குப் பிரதேசத்திற்கும் அங்கிருந்து ஸிஸிலிக்கும் சாமான்களையும், உதவிப் படைகளையும் ஏற்றிச்செல்லும் இதாலிய இருப்புப்பாதை, ரஸ்தாக்கள் முதலியவற்றை சின்னாபின்னம் செய்யும் முறையில் நேசதேசத்தாரால் செய்யப்பட்டது. நகரத்தைத் தாக்கிய வடமேற்கு ஆபிரிக்காவிலுள்ள விமானப்படையைச் சேர்ந்த கனமான வெடி விமானங்களும் மத்தியக் கிழக்கிலுள்ள லிபரேடர் விமானங்களும் முக்கியமாக லிட்டோரியாவிலும் ஸான் லோரன் ஸோவிலுமுள்ள எஞ்சின்கள் நிறுத்திவைக்கும் தளத்தையும் சியாண்டினோ விமான தளங்களையும் தாக்கின. அந்த இரண்டு எஞ்சின் தளங்களும் சீசாகழுத்துப் போல் அமைக்கப்பட்டு தெற்கு வெளிகளுக்குப்போகும் பிரயாணி வண்டிகள், சாமான் வண்டிகள் போகும் வழியாகயிருக்கின்றன.

லிட்டோரியோ தளமென்பது ரோமுக்கு வடக்கே நாலு மைல்களுக் கப்பாலுள்ளது. அது ஒரு முக்கியமான சாமான்கள் சேகரிக்கும் மத்திய நிலயம். மின்சார சக்தியால் இது ஜெர்மனியிலுள்ள ஹாம் தளத்தைப்போல் நன்றாய் அமைக்கப்பட்டிருக்கிறது. வட இதாலியிலிருந்து ரோமுக்கும், நேபிள்ஸுக்கும், தென்மேற்குக் கரைக்கும் செல்லும் சாமான் போக்குவரவுகள் இதன் வழியாகத் தான் நடைபெறுகின்றன. ரோமிலுள்ள ஸான் லோரன்ஸோ தளமும் மின்சாரசக்தி அமைக்கப்பெற்றது. அதிலிருந்து ஏராளமான சாமான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது ப்ளாரென்ஸ், நேபிள்ஸிலிருந்து போகும் இருப்புப் பாதையையும் ஜெனோவாவிலிருந்து செல்லும் கடற்கரை இருப்புப்பாதையையும் ஒட்டியிருக்கிறது.

ரோமிலிருந்து $8\frac{1}{2}$ மைல்கள் தூரத்திலுள்ள ஸியாண்டினோவிலுள்ள இரண்டு விமான தளங்களும் வெடி விமானங்கள், யுத்த விமானங்கள் ஏராளமாகத் தங்குமிடம். தொழிற்சாலைகளுக்குப் பேர் போனதாகயிருப்பதுடன் ரோம் நகரம் அநேக இருப்புப்பாதைகள் சேரும் மத்திய ஸ்தலப் பிரதேசம். அநேக மாதங்களாக இதாலியத் தொழிற்சாலைகளும், இருப்புப்பாதைகளும் நாஸிகளின் ஆதிக்கத்துக்குப்பட்டிருந்தன. ரோமிலுள்ள தளங்களில் ஜெர்மானியர்கள் ஏராளமான ஜெர்மன் துருப்புகளையும், தளவாடங்களையும் ரெயில் வண்டித் தொடர்களில் குவித்து அங்கிருந்து அவைகளை கேந்திர ஸ்தானங்களுக்குக் கொண்டு போவதையும் நேசநாடுகள் அறிந்திருக்கிறார்கள்.

ஸிஸிலியின் மேல் படையெடுப்பு ஆரம்பித்த பிறகு ரோம் நகரத்தை வெடி விமானங்களால் தாக்கக்கூடாது என்ற அபிப்பிராயம் மாறிவிட்டது. ரோமும் தாக்கப்படும் நிலைமையை அடைந்துவிட்டது. நேசநாடுகளின் யுத்த தந்திரத்தில் ரோமைத் தாக்குவதென்ற அபிப்பிராயமே கிடையாது. ஆகிலும், அவசிய மேற்பட்ட பொழுது நேசநாடுகள் தங்களுடைய அபிப்பிராயத்தைப் பூர்த்தி செய்துவிட்டன.

விமானப்படையின் உயர்வு.

விமானப்படை பலமிருந்தால் எந்தக் காரியத்தையும் சாதித்துவிடலாம். விமானப்படை உயர்தர மார்ஷல் ஸர் ஆர்தர் டெட்டர் சொல்லுகிறபடி நேசநாடுகளிடம் ஏராளமான விமானப்படையிருப்பதுடன் விமானப்படை ஆதிக்கமும் அவர்களிடமிருக்கிறது. ஜெர்மன் விமானப்படை திறமையுடன் வேலை செய்து வந்த நாட்களில் கூட பிரிடிஷ், அமெரிக்க

விமானங்களின் குறிதப்பாமலடிக்கும் முறைகளையும், லாகவத்தையும் பெற்றிருக்கவில்லை. பிரிடிஷ், அமெரிக்கத் தொழிற்சாலைகள் விமானங்களை உயர்வான முறையில் கட்டிவிடுகின்றன.

இருப்புப்பாதை மார்க்கங்களையும், கப்பல்களைப் பழுதுபார்க்கும் தளங்களையும் தொழிற்சாலைகளிலுள்ள யந்திர சாதனங்களையும் நாம் முக்கியமாகத் தாக்கியிருக்கிறோம். இவைகளின் எதிரொலிகள் ஸிஸிலியிலும் கேட்கின்றன. இதாலியின் கட்டைவிரலுக்கும், ஸிஸிலியின் வடகிழக்கு முனைக்கும் மத்தியிலுள்ள குறுகலான பிரதேசத்தில் இரண்டு அல்லது மூன்று மைல்கள் அகலமுள்ள மெஸ்ஸினா ஜலசந்தியிலுள்ள கியொவனி—மெஸ்ஸினா கடல் மார்க்க இருப்புப்பாதையின் இருபக்கங்களும் இடைவிடாது நொருக்கப்பட்டதால் ரெயில் வண்டித் தொடர்களின் போக்குவரத்து தடைபட்டுவிட்டது. ரோமிலும், நேபிள்ஸிலும் உள்ள ரெயில் வண்டித் தொடர்கள் நிற்குமிடங்களை நேசதேச வெடிவிமானங்கள் தாக்கியதிலிருந்து நாசமும், தடங்கலும் ஏற்பட்டுவிட்டதால் இந்த மார்க்கங்கள் வழியாக ஸிஸிலியிலுள்ள துருப்புகளுக்கு அதிக சாமான்களைக் கொண்டுவரமுடியாது.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஆதிக்கம் கடல் மூலமாகவும், ஆகாய மூலமாகவும் படையெடுப்பு ஆரம்பித்ததற்கு முன்னதாகவே உண்டாகிவிட்டது. ஜூலை மாதம் முதல் வாரக் கடைசியிலேயே ஸிஸிலியில் நேசதேச விமான ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. ஸிஸிலியில் ஏற்பட்ட நடவடிக்கைகளிலிருந்து கீழ்தரமான விமானப்படையை அதன் கூட்டங்களை இடைவிடாது அழித்து விடுவதன் மூலம் முற்றிலும் பிரயோஜனமற்றதாகச் செய்து விடலாமென்று நன்றாய் விளங்குகிறது. பெருகிவரும் அலைகள் போல் நேசதேச விமானத் தாக்குதல் இதாலி பூராவிலும் வடக்கு நோக்கி மெதுவாக முன்னேறி வருகிறது.

ஜெர்மனியின் ராஜீய, ராணுவச் சங்கடங்கள்.

அடிமைபட்ட நாடுகள் அச்சிலிருந்து விலகிவிடலாம்.

(W. N. யூயர்).

ருஷ்யப் படைகள் பலமாகத் தாக்குவதிலிருந்தும், ஸிஸிலியில் நேசதேசப் படைகள் இறங்கியதிலிருந்தும் ஜெர்மன் ராணுவ அதிகார வர்க்கத்தார் கலக்கமடைந்துவிட்டார்கள்.

ஜெர்மனிக்கு ராணுவ முறையில்மட்டும் கலக்கம் ஏற்படவில்லை. ஜெர்மன் பத்திரிகைக்காரர்களின் ராஜீய நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—"ஜெர்மனியின் ராஜீய கோஷ்டிகளில், ஐரோப்பிய நாடுகளின் அதோகதியைப்பற்றி பேச்சுகள் கிளம்பிவிட்டன. நடைபெறும் கோரமான யுத்தங்களுக்கும் போர்முனைகளில் ஈடுபட்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளின் ஒரேவிதமான அதோகதிக்குமுள்ள சம்பந்தத்தை இந்தப் பதங்கள் குறிப்பிடுகின்றன."

ஜெர்மனிக்கும், இதாலிக்கும், அவனைச் சேர்ந்த மற்ற நாடுகளுக்கும் ஒரேவிதமான முடிவு ஏற்படப் போகிறது என்பதை அறிந்து, இதாலியும், மற்ற நாடுகளும் ஜெர்மனியை விட்டுப் பிறிந்து ஜெர்மனியின் கதியை அடையாமல் தப்பித்துக்கொள்ளப் பிரயத்னம் செய்யக்கூடுமென்ற பீதி ஜெர்மானியர்களுக்கு உண்டாகிவிட்டது.

எதிர் பார்த்ததற்குமேல் நேசநாடுகளுக்கு வெற்றி கிடைத்தது மட்டுமல்ல. அவர்கள் மதித்ததற்கு மேலாகவே நேசதேசங்களின் முன்னேற்ற யுத்த வலிமை அதிகரித்துவிட்டது என்பதும் ஸ்பஷ்டமானது.

அச்சு நாடுகளின் பலம் குறைந்து வருவதைக்கண்டு மற்ற நாடுகளெல்லாம் கலக்கமடைந்துவிட்டன. ஸிஸிலி பிளக்கமுடியாத ஒரு கோட்டையென்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அது தற்காப்பில்லாத தனிப்பட்ட எல்லைப்புறப் பிரதேசமென்று இப்பொழுது அச்சு நாடுகள் சொல்லிவருகிறார்கள். இதிலிருந்து பால்கன் நாடுகள், மேற்கு ஐரோப்பா, ருஷ்யப் போர்முனை எல்லாவற்றிலும் தற்கார்ப்புகள் பலஹீனமானவைதானென்றும் அவர்கள் சிந்திக்க இடம் உண்டாகிவிட்டது.

ஹங்கேரியும், ருமேனியாவும், பல்கேரியாவும் அச்சுநாடுகளுடன் உறவாடினபொழுது தங்களுடைய க்ஷேமத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. ஸிஸிலியிலிருந்தும் ருஷ்யாவிலிருந்தும் கோரமான செய்திகள் வந்துகொண்டிருப்பதால் அவர்களுக்கு இரண்டுவிதமான சங்கடங்கள் உண்டாகிவிட்டன. சமீபகாலத்தில் தெற்குப் பக்கத்திலிருந்து பிரிடிஷ் அமெரிக்கப் படையெடுப்பு உண்டாகலாம் அல்லது கிழக்கிலிருந்து ருஷ்யாவின் தாக்குதல் ஏற்படலாம்.

இப்பேர்ப்பட்ட நிலைமையில் சமாதானப் பேச்சுகளை அவர்கள் ஆரம்பிப்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. சந்தர்ப்பம் வாய்த்தால் அச்சுநாட்டுக்குட்பட்ட நாடுகள் சந்தோஷமாக சமாதானம் செய்துகொள்ளத் தயாராக யிருக்கின்றனவென்றும் ஹேஷ்யங்கள் புலப்படுகின்றன.

ஸிஸிலியில் நேசதேசத்தார் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளை அவர்களும் நடத்தும் முறைகளைத் தணிக்கை செய்யப்பட்ட தகவல்கள் மூலம் அறிந்த நாடுகளில் நல்ல உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. நேசதேச ஆக்கிரமணத்திலிருந்து குழப்பமும், கொள்ளையடிப்பதும் கொடுமையும் தான் ஜனங்களுக்கு ஏற்படும் என்று போதிக்கப்பட்ட நாடுகளெல்லாம் நேசதேச ராணுவ அரசாங்கத்தின் நடைமுறைகளை இப்பொழுது நன்கு அறிந்துவருகிறார்கள்.

இந்த யுத்தத்தில் ஒரு புதிய முறை அனுஷ்டிக்கப்படுகிறது. அதாவது நேசதேசப் படைகள் ஆக்கிரமித்துவரும் நாடுகளை நிர்வாகம் செய்யும் உத்தியோகஸ்தர்கள், அந்த நாடுகளின் பாஷைகள், சட்ட திட்டங்கள், பழக்கவழக்கங்கள், நிர்வாக முறைகள் எல்லாவற்றிலும் விசேஷப் பயிற்சி பெற்றுவருகிறார்கள்.

இதன் பயனாக, ஸிஸிலியில் குழப்பமில்லை. நிர்வாகமில்லாத காலமில்லை. ஒரு நிர்வாகம் முடிந்தவுடன், மற்றொரு நிர்வாகம் அமுலுக்கு வந்துவிட்டது.

புது நிர்வாகிகள் ராணுவம் சம்பந்தப்பட்டமட்டிலும், யுத்த நடவடிக்கைகளிலும் கடுமையான உத்தரவுகள் போட்டுவந்தாலும், பழைய நிர்வாகத்தைப்போல் அவ்வளவு கடுமையாக ஜனங்களை நடத்தவில்லை. புதிய அரசாங்கத்தை கொடுங்கோல் அரசாக்ஷி என்று சொன்னபோதிலும், அது ஜனங்களின் ஹிதத்தைக் கோரக்கூடிய ஆக்ஷியென்பதில் சந்தேகமில்லை. இந்தச் செய்தி பரவி வருகிறது. ஸிஸிலியிலிருப்பவர்களைத் தவிர மற்றவர்களும், பிரிடிஷ் அமெரிக்கப்படையெடுப்பிலிருந்து ஒரு கெடுதலும் வராதென்றும் யுத்தத்துக்குக் காரணமானவர்களும் யுத்தக் குற்றவாளிகளும் தண்டனையடைவதிலிருந்து தப்பிக்கமுடியாதென்றும் அறிந்துவிட்டார்கள்.

வெடிகுண்டு வீசுவதில் தந்திர முறைகள்.

பிரிடிஷ் விமானப்படையின் புதிய ஏற்பாடுகள்.

எதிரியின் ஆயுத உற்பத்தி ஸ்தாபனங்களையும், போக்குவரவு மார்க்கங்களையும், பொதுஜன சாமான் உற்பத்திகளையும் நொருக்கவேண்டுமென்று 1939-ம் வருஷத்தில் போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றும் முறையில் நேசதேச விமானப்படை மூன்று பிரச்னைகளை கவனிக்கவேண்டியிருக்கிறது. லக்ஷியத்தைக் கண்டுபிடிப்பது, தற்காப்புகளை அகற்றுவது. லக்ஷியத்தை நாசம் செய்வது. அமைப்பைப் பொருத்து லக்ஷியங்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்றுபட்ட லக்ஷியங்கள். தனிப்பட்ட லக்ஷியங்கள். முதல் வகுப்பைச் சேர்ந்தவைகளைக் குறிப்பிடுவோம். ரூர் பிரதேசம்—ஏராளமான தளவாட உற்பத்திசாலைகள் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. கோலோன்—இருப்புப்பாதைகள், ரெயில்வே ஸ்டேஷன்கள், கிட்டங்கிகள், வண்டிகளைப் பிணைக்கும் தளங்களெல்லாம் இங்கு ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மேற்கு ஜெர்மனி டெக்ஸ்டைல் தொழிற்சாலைகள்—இந்த இடங்களில் பொதுஜனங்களுக்குரிய உற்பத்திகள் செய்யப்படுகின்றன. தனிப்பட்ட லக்ஷியங்கள் பின்வருமாறு. ஹாலந்திலுள்ள எயின்டோவனிலுள்ள 'பிலிப்ஸ் ரேடியோ பெட்டி உற்பத்திசெய்யும் தொழிற்சாலை. பிரிட்டானியிலுள்ள ஸெயின்ட் ஜோஸப்பிலுள்ள ரயில்வே எஞ்சின் உற்பத்திசாலை. கலோனுக்கருகிலுள்ள நாப்ஸாக், குவார்ட்ராத் முதலிய இடங்களிலுள்ள மின்சார உற்பத்தி யந்திரசாலைகள். ஒவ்வொரு வகைப்பட்ட லக்ஷியத்தையும் ஒவ்வொரு விதமாகத் தாக்குதல் செய்யவேண்டும். முதலாவது வகுப்பைச் சேர்ந்த பிரதேசங்களில் லக்ஷியங்கள் விசாலமான பரப்பில் அமைக்கப்பட்டு நன்றாய் தற்காப்பு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்விடங்களை இரவில் குறிதவறாமல் அடிக்க வேண்டும். எதிரியின் சண்டை விமான பலத்தைக் குறைப்பதும், விமான எதிர்ப்பு பீரங்கிகளின் எதிர்ப்பைத் தவிர்ப்பதும் முக்கியமான வேலையாகும். ஊசி முனைபோன்ற பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் லக்ஷியங்களைக் குறிதவறாமல் அடிக்கவேண்டுமானால் பகலில் தான் தாக்குதல் நடைபெறவேண்டும். நகரங்களில் இருவகைப்பட்ட லக்ஷியங்களுமிருப்பதால் பாம்பர் படைகள் இரவுத் தாக்குதலைத்தான் விசேஷமாகக் கையாண்டுவந்தார்கள். 75 சதவிகிதம் விமானத் தாக்குதல் இரவில்தான் நடைபெற்றது.

மார்க்கத்தைக் கண்டுபிடிக்கும் படை.

ஒவ்வொரு தடவையிலும், எவ்விதமான தாக்குதல் பயன்படுமென்றும், தாக்குதல்செய்ய சரியான ஸ்தானத்தை எவ்விதம் அடைவதென்றும்—அதாவது விமான மார்க்கத்தை நிர்த்தார

ணம் செய்வது என்ற பிரச்னையையும் பிரிடிஷ் விமானப்படை தீர்த்துக்கொள்ளவேண்டும். 1940-ம் வருஷம் டிஸம்பர் 29-ம் தேதியன்று லண்டனை ஜெர்மன் விமானப்படை எறிவெடிகளால் தாக்கியபொழுது இந்தப் பிரச்னைக்கு விடை கிடைத்தது. 100 மைல்களுக்கப்பால் காணக்கூடிய அக்கினி ஜ்வாலையானது, இரவில் செல்லும் வெடி விமானங்களுக்குத் தொழிற்சாலைகளுள்ள பிரதேசங்களுக்கு வழி காட்டக்கூடுமென்றும் புலனாகிவிட்டது. வடக்கு ருஷ்யப் போர்முனையில் லூபெக்கிலுள்ள ஜெர்மனியின் முக்கிய ஸப்ளை ஸ்தலங்களைத் தாக்கியபொழுது முதல்முதலாக இந்தப் புதிய தந்திரங்களை பிரிடிஷ் விமானப்படை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தது. இது 1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ம் தேதியில் நடைபெற்றது. முதலாவது வெடி விமானப்படை எறிவெடிகளைக்கொண்டு தீ மூட்டிவிட்டது. பிறகு 30 நிமிஷங்கள் கிரமித்து மற்றும் சில வெடி விமானங்கள் கிட்டங்கிகளிலுள்ள சாமான்களையும் மற்ற சொத்துக்களையும் அழிப்பதற்காக 300 டன் எடைமானமுள்ள வெடிகுண்டுகளை வர்ஷித்தன. 12 தொழிற்சாலைகளையும், மத்திய மின்சார நிலயத்தையும், கரிவாயு, இருப்புப்பாதை நிலயங்களையும் நமது விமானங்கள் நாசம் செய்துவிட்டன. இந்த முறைகள் பல தடவைகளில் கையாளப்பட்டன. இவ்விதமாக லக்ஷியத்தைக் கண்டுபிடிக்கும் பிரச்னையை வழிகாட்டும் படை தீர்த்துவிட்டது.

தற்காப்புகளைத் தவிர்ப்பது.

தற்காப்புகளைத் தவிர்ப்பது இரண்டாவது பிரச்னையாகும். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் போடப்படும் வெடிகுண்டுகளின் விளைவுகள் அவ்வளவு அதிகமாயிருக்காது. தற்காப்புகளைத் தகர்த்துவிட்டால் அதற்குப்பின் செய்யப்படும் தாக்குதல்களிலிருந்து அதிக விளைவுகள் ஏற்பட்டுவிடும். அதாவது தற்காப்புகளின் பலமானது தாக்குதல்களின் பலத்தைப் பொருத்திருக்கிறது. யுத்த தளவாட உற்பத்தி சாலையிலுண்டாகும் தீ லக்ஷியத்தை மறைத்துவிடாது. தீயை அணைக்கப்போதுமான ஏ. ஆர். பி. வேலைக்காரர்களில்லாவிட்டால் தான் இது நடைபெறக்கூடும். ஆகையால் ஏ. ஆர். பி. வேலைக்காரர்களால் ஈடு கொடுக்க முடியாதபடி ஏராளமான தொழிற்சாலைகளையும், ரயில்வே ஸ்டேஷன் முதலியவைகளையும் நாம் எறிவெடிகளால் தாக்கித் தீ வைத்துவிடவேண்டும். இரண்டாவதாக குறிதவறாமல் குண்டுகளைப் போடுவதற்கு, விமான எதிர்ப்பு பீரங்கிகளின் குண்டுகளைத் தவிர்க்க அடிக்கடி அங்குமிங்கும் செல்லக்கூடாது. அதாவது விமான எதிர்ப்பு பீரங்கி நிலயங்களை நொருக்கிவிடவேண்டும்.

மூன்றாவதாக, வெடிகுண்டு வீச்சுக்கு இடைஞ்சல் செய்யும் தேடுவிளக்குகளின் லக்ஷியத்துக்கிடாமலிருக்கவேண்டும்.

ஏ. ஆர். பி. சேவையையும், விமான எதிர்ப்பு பீரங்கிகளையும், தேடுவிளக்குகளையும் பயன்படாமல் செய்து, ஜெர்மனியின் யுத்த தளவாட உற்பத்திசாலைகளை பலமாக அழிப்பதற்காக, பிரிடன் பலமான தாக்குதல் செய்யும் முறைகளைக்கையாண்டுவருகிறது. தற்காப்புகளின் பலத்தையும், தாக்குதலுக்கு உபயோகப்படுத்தக்கூடிய வெடி விமானப்படை பலத்தையும் அறிந்துவிட்டால் தற்காப்புகளை நொருக்குவதற்கு எவ்வளவு எடைமானமுள்ள குண்டுகள் தேவையென்றும் எவ்வளவு காலம் தாக்குதல் நீடிக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்துவிடவேண்டும். இதற்குபின் உபரியாக அநேக வெடி விமானங்களை அனுப்பி தற்காப்புகளையும் மேலும் தவிடுபொடியாக்கி ஜெர்மன் தொழிற்சாலைகளை அழித்து அதிக பிரயோஜனமடைந்துவிடலாம்.

பிரிடிஷ் விமானப்படை கவனிக்கவேண்டிய மூன்றாவது யுத்த தந்திரமாவது, தற்காப்புகளை நொருக்கியபின் ஜெர்மன் தொழிற்சாலைகளை எவ்விதம் நிரந்தரமாக அழித்துவிடுவது என்பதாகும். இது நடைபெறுவதற்கு குறிப்பிட்ட காலத்துக்குள் லக்ஷியங்களைத் தாக்க போதுமான வெடிவிமானங்கள் வேண்டும். கட்டடங்களை அழிப்பதற்குத் தேவையான எரிவெடிகளைப் போடவேண்டும். அதன்பிறகு யந்திரங்களையும், உலைகளையும் அழிக்க உயர்தர வெடிகுண்டுகளைப் போடவேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் செல்லவேண்டிய வெடிவிமானங்களின் உத்தமபக்ஷ சங்கியையானது விமானங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் செல்லவேண்டிய ஸ்தல வித்தியாசத்தைப் பொருத்ததாகும். ஆகையால், தாக்குதலின் வலிமையை அதிகரிக்கவேண்டுமானால் இரண்டு முறைகளை அனுஷ்டிக்கவேண்டும். விமானத்தின் அளவை அதிகரிக்கவேண்டும். அதாவது விமானத்தில் குண்டுகளை ஏற்றிச் செல்லும் பரப்பை அதிகப்படுத்தவேண்டும். இது விஷயத்தில் பிரிடிஷ் விமானப்படை கமாண்டர்களின் புத்திசாலித்தனத்தைக் கவனியுங்கள். யுத்தத்துக்கு முன்னாகவே, 12,000 ராத்தல் குண்டுகளேற்றிச் செல்லக்கூடிய லங்காஸ்டர், ஹாலிபாக்ஸ் போன்ற விமானங்களையும் 17,000 ராத்தல் குண்டுகளையும் ஏற்றிச் செல்லக்கூடிய ஸ்டர்லிங்க் விமானங்களையும் அவர்கள் கட்டியிருக்கிறார்கள். ஜெர்மன் டார்னியர் 217-ல் 6,615 ராத்தல் எடைமானமுள்ள குண்டுகளைத்தான் ஏற்றிச் செல்லலாமென்பதையும் ஞாபகப்

படுத்திக்கொள்ளுங்கள். இரண்டாவதாக, வெடிகுண்டுகளின் பருமனை அதிகப்படுத்த வேண்டும். தாக்குதலைப்போல், தனிப்பட்ட வெடிகுண்டுகளின் அழிக்கும் சக்தியானது அவைகளின் பருமனுக்குத் தகுந்தபடி பன்மடங்கு அதிகரித்துவிடுகிறது. இரண்டு 2,000 ராத்தல் குண்டுகளைவிட ஒரு 4,000 ராத்தல் குண்டு சிலாக்கியமானது. ஆகையால்தான் 1940-ம் வருஷத்தில் 500, ராத்தலாகயிருந்த குண்டுகளின் எடைமானம் 1942-ம் வருஷத்தில் 8,000 ராத்தலுக்கு அதிகரித்துவிட்டது.

பகல் தாக்குதல்.

ஜெர்மனியிலுள்ள லக்ஷியங்களை பிரிடிஷ் 'விமானப்படை தாக்கும் முறையில் பகலில் தாக்குவது இரவில் தாக்குவதைவிட அல்பமானதாக இருந்தாலும் இரவு தாக்குதலில் ஏற்படக்கூடிய பிரச்னைகளைப் போல பகல் தாக்குதலிலுள்ள பிரச்னைகளையும் அவர்கள் வெற்றிகரமாகத் தீர்த்துவிட்டார்கள். பகல் தாக்குதலில் லக்ஷியத்தைக் கண்டுபிடிக்கவேண்டிய சிரமமே கிடையாது. தற்காப்புகளை நொருக்குவதுதான் முதல் பிரச்னை. இதுவும், இரவில் ஏற்படக்கூடியதைவிட வேறுபட்டது. பகலில் சண்டை விமானங்களின் எதிர்ப்பு பலமாக இருக்கும். இதை பிரிடிஷ் விமானப்படை இரண்டு விதத்தில் சமாளித்துவிடுகிறது. முதலாவது திடீர் தாக்குதல். கனமான வெடிவிமானங்கள் இந்தப் புதிய முறையைக் கண்டுபிடித்தன. விமானங்கள் தாழப் பறந்துசெல்லும்பொழுது அவைகளை வெகு தூரத்திலிருந்து கண்டுபிடிக்க முடியாது. விமான எதிர்ப்பு பீரங்கிகளும் அவைகளைக் குறிவைக்க முடியாது. மேற்குப் பக்கத்தில் ஜெர்மனி 50 சதவிகிதம் சண்டை விமானங்களை உபயோகப்படுத்த ஆரம்பித்தவுடன் பிரிடிஷ் விமானப்படை புதிய தந்திரங்களைக் கையாண்டு வந்தது. அதிக வேகமும், சண்டை விமானஙகளைப்போல் சலன சக்தியுமுள்ள லேசான விமானங்கள் கட்டப்படுகின்றன. அதிகமான வெடிகுண்டுகளை ஏற்றிச்செல்லக்கூடிய சக்தியும், ஏராளமாக உண்டுபண்ணுவதற்கு எளிதில் அமைக்கக்கூடிய உருப்புகளுமுள்ள விமானங்கள் கட்டப்பட்டன. இந்தத் திட்டப்படி கட்டப்பட்ட விமானம்தான் மஸ்கிடோ விமானம். உலகத்திலேயே அதிக வேகம் பொருந்தியது. அடிக்கடி திருத்தியமைக்கக்கூடிய மரத்தினால் கட்டப்பட்ட அமைப்புள்ளது. ஒரு டன் எடைமானமுள்ள வெடிகுண்டுகளை ஏற்றிச் செல்லக்கூடியது. நான்கு எஞ்சின்களுள்ள பறக்கும் கோட்டையில் ஏற்றிச்செல்லக்கூடிய குண்டுகளின் பாதி அளவு குண்டுகளை இதில் ஏற்றிச்செல்லலாம். லக்ஷியமுள்ள பிரதேசத்துக்கு வந்தவுடன் மஸ்கிடோவும் மற்ற வெடி விமானங்களும் இரவில் தாக்கும் வெடி விமானங்களைப்போல லக்ஷியத்தின் பேரில் ஏராளமான குண்டுகளைப் பொழிந்து விடுகின்றன.

"கோஸ்ட் படை."

பிரிடனுடைய ஒன்பதாவது சேனையின் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் W. G. ஹோம்ஸ் என்பவர் தென்கிழக்கு ஐரோப்பாவிலுள்ள தன்னுடைய பலமான துருப்புகள் தாக்குவதற்குத் தயாராகவும், ஆவலுடனும் இருக்கிறார்கள் என்று சொன்னாரென்று 9-வது சேனையுடனிருக்கும் டெய்லி எக்ஸ்பிரஸின் நிருபர் எழுதுகிறார்.

"நாங்கள் தாக்குதலை எப்பொழுது ஆரம்பிக்கப்போகிறோம், எங்கு ஆரம்பிக்கப்போகிறோம் என்று அறியக்கூடிய தகவல்களை ஒன்றும் சொல்லமுடியாது. ஏனென்றால் எங்களுடைய திட்டங்களை எதிரிக்குத் தெரியாதபடி இதுவரையில் ரகசியமாக வைத்திருந்தோம்" என்றும் அவர் சொன்னார். "எதிரிக்கு மனக்கிலேசம் உண்டாகிவிட்டது. இதைச்செய்ய வேண்டும் என்றுதான் எங்களுடைய உத்தேசம். நாங்கள் தாக்கும்பொழுது அவனுக்கு அதிகச் சங்கடம் ஏற்படும். சந்தர்ப்பத்தை வெகுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம், கிடைத்தவுடன் அதை நன்றாகப் பிரயோஜனப்படுத்துவோ" மென்றும் அவர் சொன்னார்.

குன்றுகளுள்ள வளைகுடாக்களும், மணல்பாங்கான விரிகுடாக்களுமுள்ள கடற்கரை வழியாக ஒரு பெரிய சேனையின் முகாமுக்குச் சென்றேன். அந்தக் கடற்கரைப் பிரதேசமானது தரையிலும், சமுத்திரத்திலும் மகத்தான ராணுவ ஒத்திகையைச் செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டதென்று ஒரு அதிகாரி சொன்னார். உலகத்திலேயே இந்தப் பிரதேசமானது ஒன்பதாவது சேனைக்குச் சிறந்த பயிற்சிப் பிரதேசம் என்பது தெளிவானது. இவர்களுடைய காலம் சரியாக உபயோகப்பட்டதென்பதில் ஜெனரல் ஹோம்ஸ் சந்தோஷப்பட்டார். அவர் சொன்னதாவது, "சென்ற பன்னிரண்டு மாதங்களாக ஒன்பதாவது சேனை அமைதியாக இருந்தது. ஆனால் அது சும்மா இருக்கவில்லை. அவர்கள் விசேஷமான பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஒரு வருஷத்திற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது இரண்டு மடங்கு தேர்ச்சி பெற்றுவிட்டார்கள். அவர்களைப் பார்த்தாலே இது நன்கு புலப்படும். அவர்கள் உல்லாசத்துடனும் சுறுசுறுப்புடனும் இருக்கிறார்கள். படுத்துக்கொண்டவுடன் அவர்கள் தூங்கி விடுகிறார்கள்."

பயிற்சி பெற்றதென்பது இந்த விருத்தாந்தத்தின் ஒரு பகுதியாகும். மற்றொரு பகுதி ரகசியமானது. ஒன்பதாவது சேனையை "பூத"ச்சேனை என்று யுத்த அவசியத்தை முன்னிட்டு சொல்லுகிறார்கள். இதன் பகுதிகள், ஆயுதங்கள், யுத்த முறைகள், சேனை அமைப்புகள் எல்லாம் வெளியிடக்கூடியவை அல்ல. அதன் உயர்தர அதிகாரிகளும் ரகசியமானவர்கள். அதன் தளபதி ஜெனரல் ஹோம்ஸூம் ஒருமறை முகமான தோற்றம். ஒருவரும் அறிய முடியாதவர். இந்த ரகசியமுறையை சேனையின் தலைவர் அங்கீகாரம் செய்கிறார். இதிலிருந்து நல்ல விளைவுகள் உண்டாகியிருக்கின்றன என்றும், எதிரியின் கவனத்திலிருந்து நாம் மறைக்கப்பட்டிருக்கிறோம் என்றும் அவர் சொல்லுகிறார். நம்முடைய ஸ்தாபனத்தைக் கண்டு பிடிக்க எதிரி பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறான்.

ஒன்பதாவது சேனையில் உள்ளவர்களின் பெயரும், இருப்பிடமும் வெளியிடப்படுவதில்லை. அறைக்குள் நுழையும்பொழுது தேசப்படங்கள், திரைகளால் மூடப்படுகின்றன. டெலிபோன் மூலம் பேசுவது இருவகையில் பொருள்படும்படியாக இருக்கிறது.

நேற்று இரவு நீ சந்தித்த மனிதன் புதிய பொம்மைகள், நான் சொன்ன இரண்டாவது முனைக்குப்போக வேண்டுமென்றும், அவ்விதம் செய்தால் அங்குள்ள சேனையில் சேர்ந்து கொள்வார்களென்றும் சொல்லுகிறான்.

இந்தப் பிரதேசத்தில் நோட்டீஸில் ஒட்டப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. "ராணுவக் கடல், ஆகாயப்படைகள் சம்பந்தமாக விவாதம் செய்வது ராணுவ முறைப்படி சிக்ஷிக்கக்கூடிய குற்றம்." சிப்பாய்கள எழுதும் கடிதங்கள் தணிக்கைக்கு உள்ளாகின்றன. அவர்களுடைய அக்கரையை உத்தேசித்துத்தான் இது செய்யப்படுகிறதென்று ஜெனரல் ஹோம்ஸ் சொன்னார்.

துருக்கி வழியாக ஜெர்மனிக்குத் தகவல்கள் பேசுவதைத் தடுக்க எல்லைப்புறத்தில் செய்திருக்கும் ஏற்பாட்டைப்பற்றிச் சொல்லுவது ஸ்வாரஸ்யமான விஷயமாகிலும் இந்தச் சேனை யுத்தத்தில் ஈடுபடும்வரையில் அது ரகசியமாகத்தான் இருக்கவேண்டும்.

9-ம் படையின் தளபதியான ஹோம்ஸைப்பற்றிச் சொன்னபொழுது அவர் ஒரு கனமான ஆள் என்றும், புத்திசாலி என்றும் சொல்லப்பட்டது. அவர் 6 அடி உயரமுள்ளவர். நல்ல போர்வீரர். நாணயத்தில் காணப்படும் தலையைப்போல கம்பீரமான தோற்றமுள்ள முகத்தில் நீலவர்ணமுள்ள கண்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தவறுதல் செய்த ஒரு சிப்பந்தியும் அவர் திருஷ்டிக்குட்பட பயப்படுவான். அவரை எதிர்க்கிறவர்கள் நிச்சயம் துன்பப்படுவர்கள். ஆகாரம் சாப்பிடுவதைவிட யுத்தத்தில் ஈடுபடுவதில் அவருக்கு அதிக சந்தோஷம்.

இவ்விதமான வெளிப்படையாக இல்லாத மனோநிலை இருந்தபோதிலும், ஹோம்ஸ் டம்பமில்லாதவர். புன் சிரிப்புள்ளவர். கேள்விகள் கேட்டால் அவசரமாகப் பதில் உரைப்பதில்லை. பதில் உறைக்க முடியாது என்று அவர் சொல்லும்பொழுது அவருடைய உல்லாசம் வெளிப்படும். இவரை அறையில் காணமுடியாது. தலைமைக் காரியாலயத்தில் இருப்பதைவிட முகாமில் இருப்பதைத்தான் இவர் விரும்புகிறார். அழுக்கான ராணுவ உடுப்பைப் போட்டுக்கொண்டு பிரயாணம் செய்து தன்னுடைய துருப்புகளுக்கு உத்ஸாகம் ஊட்டுவதில்தான் அவருக்குச் சந்தோஷம்.

கடல் மார்க்கங்களின் ரக்ஷணை.

(கடல் இலாகா அறிக்கை ஆபீஸரின் தலைவரான கடற்தளபதி **ஸர் வில்லியம் ஜேம்ஸ், M. P.**)

கடல் இலாகா அறிக்கை நிலயத்தின் தலைவராக என்னை நியமித்த காரணம் யாதென்று அநேகர்கள் வினவுகிறார்கள். இந்த இலாகா புதிதாக ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் கடற்படையின் அலுவல்களையும், வெற்றிகளையும் பற்றி நமது ஜனங்களுக்கும், நேசநாடுகளுக்கும் அறிவிப்பதுதான் என்னுடைய வேலை. ஒரு தீவில் வசித்துவரும் நாம் அநேக நூற்றாண்டுகளாக கடல் போக்குவரத்து மார்க்கங்களைப் பலப்படுத்தியிருக்கிறோமென்று மதித்தால், இவ்விதமான தகவல்களை வெளியிடுவதற்கு அவசியமேயில்லையென்றும் தோன்றிவிடலாம். ஆனால் பிரிடிஷ் கடற்படை செய்துவரும் சில வேலைகள் பகிரங்கமாக நடைபெறுவதில்லை. வெளிப்படையாக ருசிகரமாக நடைபெறும் சம்பவங்கள் இவைகளை மறைமுகப்படுத்திவிடுகின்றன.

இதில் ஒரு ஆச்சரியமுமில்லை. யுத்தத்துக்குமுன் அநேக துறைமுகங்களுக்கு நமது கடற்படை சென்றிருப்பதால் அதன் சரித்திரமும், அதன் அலுவல்களும் ஜனங்களுக்கு அறிமுகமானவை. அதன் திறமையையும் ஜனங்கள் மதித்துவருகிறார்கள். பிரிடிஷ் கடற்படை இறுதியில் எக்காலத்திலும் வெற்றிபெற்றிருக்கிறது. இப்பொழுதும் அது நம்மைக் காப்பாற்றிவிடுமென்பதில் சந்தேகமில்லை. இது நமக்கு ஏற்படக்கூடிய இயற்கையான

விசாலமான தோற்றம். பிரிடிஷ் கடற்படையும், பிரிடிஷ் விமானப்படையும் ஒன்றுபட்டு உழைத்துவரும் கடல் யுத்தங்களில் ருசிகரமான அநேக சம்பவங்கள் நேர்ந்திருக்கின்றன. நமது முக்கியமான கடல் மார்க்கங்களின் பெரும்பாகம் கடற்கரையிலுள்ள விமானப்படையின் ரக்ஷணையைத் தாண்டியிருக்கின்றதென்றும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

நமது யுத்த முறையில் கடற்படைதான் முக்கியமான அம்சமென்றும் அநேகர் மதித்துப் பார்க்கவில்லை. இதுவும் ஆச்சரியமில்லை. ஏனெனில் கடற்படையின் நடவடிக்கைகளை ஜனங்கள் தெளிவுறத் தெரிந்துகொள்ளவில்லை. முக்கியமான கடற்படையின் ரக்ஷணையுடன்தான் சிறிய கப்பல்கள் சென்று வேலை செய்துவருகின்றன. கடல் யுத்தத்தில் கப்பல்களில் பீரங்கிகள் அமைத்ததிலிருந்தும் யுத்தக் கப்பற்படை தயாரிக்கப்பட்டதிலிருந்தும் யுத்த தந்திரம் மாறுதலடையவில்லை.

பதினெட்டாவது நூற்றாண்டின் மத்தியில் சிறந்த கடற்தளபதியாகயிருந்த ஹாக் பிரபு இப்பொழுது கடல் மார்க்கங்களை கவனிப்பாராகில் அவருக்கு ருசிகரமான தோற்றமுண்டாகும். சாமான் கப்பல் கூட்டங்கள், சண்டைக் கப்பல்கள் உதவியுடன் அட்லாண்டிக்கடலில் அங்குமிங்கும் நடமாடுவதையும், மற்ற துணைக்காவல் கப்பல்கள் நன்னம்பிக்கை முனையைச்சுற்றிப் போவதையும், குறுகிய கடல் மார்க்கங்களில் சிறிய படகுக் கூட்டங்களும் கப்பல் தளங்களுக்குச் சமீபத்தில் முக்கியமான கடற்படைகள் சஞ்சரிப்பதையும் நாம் காணலாம். அவருடைய காலத்தில் அட்லாண்டிக்கில் சென்ற கப்பல்களில் வுல்பும் அவருடைய துருப்புகளும் கனடாவுக்குச் சென்றார்கள். நன்னம்பிக்கை முனையைச்சுற்றிச் சென்ற கப்பல்களில் கிளைவ் பிரபுவும் அவரைச் சேர்ந்தவர்களும் பிரயாணம் செய்தார்கள். கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் நாம் பிரெஞ்சுக் கடற்கரையைத் தாக்கியதும், வட ஆபிரிக்காவில் துருப்புகளை இறக்கிய முறைகளும் அவரறிந்தவைகள்தான். ஏனெனில் அவர் காலத்திலேயே இருவகைப்பட்ட நடவடிக்கை வெற்றிகரமாகக் கையாளப்பட்டது. ஹாக் என்பவர் கடலில் மூன்று வருஷங்கள் வரையில் சஞ்சாரம் செய்து பிறகு பிரெஞ்சுக் கடற்படையை சந்தித்து குவிபெரான் விரிகுடா யுத்தத்தில் அவைகளை முறியடித்தார். இந்த தீரமுள்ள தலைவரும், அவருடன் ஒத்துழைத்தவர்களும் செய்த சேவையை ஜனங்கள் உணராமல், எதிரிகள் கப்பல்களிலிருந்து பீரங்கிகளைப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தவுடன் லண்டனில் அவருடைய உருவப்படத்திற்குத் தீ வைத்துக் கொளுத்தினார்கள்.

சென்ற யுத்தத்திலும், நீர்மூழ்கிகளிடமிருந்து அபாயம் அதிகரித்தபொழுது, நமது நாட்டிலிருந்த உயர்தர அதிகார வர்க்கத்தார் கடற்தளபதி பீயாட்டியின் கடற்படையைக் கலைத்து நீர்மூழ்கிகளை எதிர்த்து நிற்கக்கூடிய படைகளைத் தயாரிக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். அவ்விதம் செய்திருந்தால் நமக்கு ஆபத்துத்தான் வந்திருக்கும். ஒன்றை நாம் கண்டிப்பாகச் செய்யக்கூடாது. கடற்படை பலத்தை ஒரு சிறிதும்கூட நாம் குறைத்து விடக்கூடாது.

உதவியளித்துவந்த கடற்படையின் தளபதியான ஒருவர், அவருடைய கப்பல்களிலுள்ள வாலிபமுள்ள வேலைக்காரர்கள், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் நடைபெற்றுவரும் ஆபிரிக்கா யுத்தத்துக்கு கப்பற்படை எவ்வளவு உதவி செய்துவருகிறதென்பதை அவர்களறியவில்லையென்று ஒரு சமயத்தில் என்னிடம் சொன்னார். கடற்படையினர் பலமாக சண்டை செய்து கடல் மார்க்கங்களைக் காப்பாற்றாவிட்டால் படைகளுக்குச் செல்லும் போக்குவரவுகள் நின்றுபோய்விடுமென்பதை அவர்களறியவில்லை. பிஸ்மார்க் கப்பலைத் துறத்தி மூழ்கடித்ததும் ருஷ்யாவுக்கும், மால்டாவுக்கும் யுத்த தளவாடங்களையும் ஸப்ளைகளையும் எடுத்துச்செல்லும் வழியில் நமது கடற்படை செய்த மகத்தான போர்களும்தான் நம்முடைய கவனத்தைக் கவருகின்றன. ஆனால் கடல் மார்க்கங்களை ரக்ஷிக்க சதாகாலமும் தயாராகயிருந்துவரும் கடற்படை ஆபீஸர்கள், மாலுமிகள் இவர்களின் சேவையைப்பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைப்பதில்லை. அவர்கள் எதிரியுடன் போர்புரியும் காலத்தில்தான் அவர்களுடைய சகிப்புத் தன்மை வெளியாகும். கிப்ளிங் சொல்லுகிறபடி அவர்கள் வெகுகாலமாக பொறுமையுடன் இருந்திருக்கிறார்களென்றும் தங்களுடைய முயற்சிகளை ஒருபொழுதும் தளர்த்தவில்லை என்றும் வெளிப்பட்டுவிடும்.

இப்பொழுது சஞ்சாரிகள் செய்துவரும் சேவையைப்பற்றிச் சொல்லுவோம். சமுத்திரங்களில் எதிரியின் கொள்ளைக் கப்பல்களின் தாக்குதலை நிவர்த்திப்பதில் சஞ்சாரிகள் ஈடுபட்டு இருக்கின்றன. ஒரு சமயத்தில் ஒரு சஞ்சாரியின் காப்டனை சந்தித்தேன். அவர் சென்ற இரண்டு வருஷங்களில் உலகத்தைச்சுற்றி ஐந்து தடவை செல்லக்கூடிய பிரயாணம் செய்திருக்கிறார். எல்லா சமுத்திரங்களிலும் நடமாடியிருக்கிறார். இந்த அவகாசத்தில் அவருடைய கப்பலின் மேல்தட்டிலும், பீரங்கிகளிலும் பனிக்கட்டி ஏராளமாக மூடியிருந்தது. இஞ்சின் அறையிலுள்ள வேலைக்காரர்கள் கொள்ளைக் கப்பலைத் துறத்தியடிக்கும்பொழுது 140 டிகிரி உஷ்ணமுள்ள சீதோஷ்ண ஸ்திதியில் தங்களுடைய அலுவல்களை இரண்டு மணி

நேரம் ஒவ்வொருவரும் செய்திருக்கிறார்கள். சதா காலமும் இந்தக் கப்பலிலுள்ள வேலைக்காரர்கள் தகவல் கிடைத்தவுடன் நடவடிக்கையை ஆரம்பிக்கத் தயாராகயிருக்கவேண்டும்.

சஞ்சாரிக் கப்பலின் காப்டன் வெளியிட்ட ஒரு கதையை இங்கு கூறுவோம். ஒரு வருஷத்திற்குள்ளாக 400 தடவைக்குமேல் ஒவ்வொரு நாள் காலையிலும் சஞ்சாரியிலிருந்த வேலைக்காரர்கள் தங்களுடைய வேலைத் தளத்திற்குச் சென்றிருக்கிறார்கள். கிருஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாள் உடுப்பு அணிந்துகொள்ளும் அறையில் கிருஸ்துமஸ் தினத்தன்று காலையில் விடுமுறையிருந்தால் சௌகரியமாகயிருக்குமென்று சில உத்தியோகஸ்தர்கள் பேசிக்கொண்டிருந்ததை அந்தக் காப்டன் செவியுற்றார். சமீபத்தில் எதிரியின் நடமாட்டமிருப்பதாகப் புலனில்லை. கமாண்டரும் அன்று ஆபீஸர்களுக்கு ரஜாக் கொடுத்துவிடுவோமா என்று யோசித்துக்கொண்டிருந்தார். ஆகிலும் இதைப்பற்றி ஆபீஸர்கள் விவாதித்ததைக் கேட்டபின், இதை அனுமதிக்கக்கூடாதென்று அவருக்கு தெய்வாதீனமாகத் தோன்றி அவர் மறுத்துவிட்டார். ஆகையினால் கிருஸ்துமஸ் தினம் காலையில் அவர்கள் வழக்கம்போல் வேலைக்குச் சென்றார்கள். அந்த சமயத்தில் எதிரிக் கப்பல் ஒன்று திருஷ்டிக்கோசரமாயிற்று.

சென்ற யுத்தத்தில் எதிரியின் கொள்ளைக் கப்பல்கள் ஏராளமான நஷ்டத்தை விளைவித்திருக்கின்றனவென்று நாம் அறிந்தோமானால், நமக்குப் புலப்படாத மகத்தான சேவை செய்துவரும் சஞ்சாரிகளின் வேலைத் திறமையை நாம் அறிந்துகொள்ளலாம். சாமான் கப்பல்களுக்கு துணைக்காவலாகச் செல்லும் வேலை மிகவும் கஷ்டசாத்யமானது. சாமான் கப்பல்களைக் காப்பாற்றும் வேலையில் சஞ்சாரிகள் நாள் முழுவதும், விசாலமான கடல்களிலும் கடுமையான சீதோஷ்ண ஸ்திதியிலும் நடமாடிக்கொண்டிருக்கின்றன. இந்த முடிவற்ற கோரமான அட்லாண்டிக்கடல் யுத்தமானது எதிரி பூராவாக முறியடிக்கப்படும் வரையில் நடைபெறக்கூடும்.

அடுத்தபடியாக சுரங்க வாரிக்கப்பல்களின் வேலைத் திறமையை கவனிப்போம். இவர்களின் நடவடிக்கை ருசிகரமானது. என்னுடைய சிநேகிதனை ஸ்பிட்ஹெட் துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றேன். அங்கிருந்து சமுத்திரத்தின் அடிவாரத்தில் வேலை செய்துவரும் சுரங்க வாரிக்கப்பல்களைக் கண்ணுற்றோம். "இவைகள் வேலையை நிறுத்திவிட்டால் யுத்தம் முடிவடைந்து விடுமென்று நான் சொன்னேன்". அவனுக்கு ஆச்சரியம் உண்டாகிற்று. இந்த சுரங்க வாரிகள் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கப்பற்துறையிலிருந்து புறப்பட்டு, காலநிலை எவ்விதமிருந்தாலும், புயல் காற்று வீசினாலும், கடுமையான குளிர் நிரம்பியிருந்தாலும் இருள் வரும் வரையில் தங்களுடைய சிரம சாத்தியமான வேலையில் ஈடுபடுகின்றன என்றும் சொன்னேன். இவைகள் வேலை செய்யாவிட்டால் நமது வெடி விமானங்களுக்கும், சண்டை விமானங்களுக்கும் பெட்ரோல் எண்ணெய் கிடைக்காது. உணவுப்பொருள்களும், தாவரப் பொருள்களும் நமது நாட்டிற்கு வந்து சேர முடியாது. சுரங்க வாரிகளுக்கு இரண்டு எதிரிகள் உண்டு. தண்ணீருக்குள்ளிருக்கும் சுரங்க வெடி ஒன்று, மற்றொன்று எதிரி விமானங்கள்.

இங்கிலீஷ் கால்வாயில் நடைபெற்ற யுத்தத்தில் ஒரு கனமான வெடி குண்டு ஒரு ட்ராலர் கப்பலின் மேல் பட்டது. ஆனால் குண்டு வெடிக்கவில்லை. இஞ்ஜின் அறையிலிருந்த தகடுகளில் அகப்பட்டுக்கொண்டது. இதைப்பற்றி அதன் காப்டன் அனுப்பிய தகவல் பின் வருமாறு :—"சீப் இஞ்ஜினியரின் உதவிகொண்டு இந்த வெடி குண்டை கப்பல் தளத்துக்கு ஏற்றி அதை மறுபடியும் சமுத்திரத்தில் தள்ளிவிட்டோம்." புலன் விசாரித்தபொழுது இஞ்ஜின் ரூமிலுள்ள வேலைக்காரர் தன்னுடைய வேலைத்தளத்தைவிட்டு ஓடவில்லையென்றும், கப்பல் தலைவர் கப்பலிருந்தவர்களை படகிற்குப் போகும்படி உத்தரவிட்டாரென்றும், அவரும் சீப் இஞ்ஜினியருமாக வெடி குண்டை இஞ்ஜின் ரூமிலிருந்து வெளிப்படுத்தி சமுத்திரத்தில் உருட்டி விட்டார்களென்றும் தெரியவந்தது. எதிரியின் வெடி குண்டுகளில் சிலதுகள் தாமதித்து வெடிக்கக்கூடியதென்றும் வெடி குண்டை அசைத்து விட்டால் அவைகள் உடனே வெடித்து விடுமென்றும் அவர்களுக்குத் தெரியும். ஆகிலும் வெடி குண்டை அகற்றிவிட வேண்டியதும், கப்பலைக் காப்பாற்றுவதும், சுரங்க வெடிகளை வாரும் வேலையை நடத்துவதும்தான் அவர்களுடைய முக்கியமான லக்ஷியங்கள். இவை கடற்படை மாலுமிகளின் தீரத்தைக்காட்டுகிறது.

அடுத்தபடியாக கடற்படைக்கு உதவி செய்யும் விமானப்படை. அதாவது விமானம் தாங்கிக் கப்பல்களைப்பற்றிப் பேசுவோம். இவைகள் ஒன்று அல்லது இரண்டு தடவை மகத்தான தலையங்கத்துடன் வெளிப்படுத்திய நடவடிக்கைகளைச் செய்திருக்கின்றன. டாரண்டோவில் வெற்றிகரமாக நடைபெற்ற தாக்குதலும், இதாலியக் கடற்படையைத் தாக்க ஆரம்பித்து மடபானில் நடைபெற்ற இரா நடவடிக்கையும், பிஸ்மார்க்கைத் தாக்கியதும் கடல் விமானப் படையின் உயர்தர சேவையாகும். ஆகிலும் அவைகள் தினசரி செய்து வரும் சேவைகளை நாம் அறிய முடியவில்லை. பிஸ்மார்க்கு கப்பலைத் தாக்கிய பின் நமது

விமானிகள் கடும் புயலடித்தபோதிலும் விமானம் தாங்கிக் கப்பலுக்கு வந்து சேர்ந்தார்கள். விமானம் புறப்படும் மேல் தட்டானது அந்த சமயத்தில் 50 அடி உயரம் மேலும் கீழுமாக ஆடிக்கொண்டிருந்தது. விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து புறப்படுவதும், அலைகளில் வந்து இறங்குவதும் இந்த கடல் விமானிகளுக்குச் சகஜமான பயிற்சியாகும்.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் திறமையுடன் போர் புரிந்த பேடருடைய விமானப் படையிலிருந்த மூன்று விமானிகள் கடல் படையைச் சேர்ந்தவர்களென்று ஒருவரும் அறியமாட்டார்கள். கடல் விமானிகள், வட ஆபிரிக்க யுத்தத்திற்கு எவ்வளவு ஒத்தாசை செய்திருக்கிறார்களென்பதையும் ஒருவரும் அறியமுடியாது. பிஸ்மார்க் துறைமுகத்தைவிட்டு புறப்பட்டுவிட்டதென்ற தகவலை கடற்தளபதி ஸர்ஜாக் டோவிக்கு முதல் முதலில் கொடுத்தது ஒரு கடல் விமானம்தான் என்பதை அநேகர் அறிந்திருக்கமாட்டார்கள். விமானங்கள் பறந்து செல்ல காலநிலை சரியாகயில்லை. விமானங்கள் தளத்திலேயே தங்கியிருந்தன. ஆகிலும் கடல் விமான இலாகாவின் தலைவரான காப்டன் பான்கர்ட் வாலன்டியர்கள் தேவையென்று அறிவித்த உடன் காலத்திலேயே கமாண்டர் ராதர்ஹாமும், லெப்டினண்ட் கோடார்டும், இரண்டு கடற்படை உத்தியோகஸ்தர்களான மில்னியும், ஆர்ம்ஸ்ட்ராங்கும் முன் வந்தார்கள். அவர்கள் நார்வேக்கு விமானங்களில் சென்று பிஸ்மார்க் சமுத்திரத்தில் செல்லுகிறதென்ற தகவலைத் தெரிந்துகொண்டார்கள். அவர்களுடைய விமானங்கள் புறப்பட்டபின், விமானம் செல்ல காலநிலை சரியில்லையென்ற தகவல் வந்தது. ஆகிலும் அவர்கள் பயப்படாமல் சென்றார்கள். ராதர்ஹாம் அனுப்பிய தகவல் கடற்தளபதி டோவிக்குத் கிடைத்த சிறிது நேரத்திற்கெல்லாம் கடற்படை பிஸ் மார்க்கைத் துரத்த ஆரம்பித்துவிட்டது கடல் விமானிகளின் நடவடிக்கைகளைப்பற்றி இன்னும் அநேக தகவல்களை நீங்கள் கேட்கக்கூடுமென்று நம்புகிறேன். இதைவிட சிறந்த நடவடிக்கை செய்யக்கூடிய ஒரு படையும் இந்த யுத்தத்திலிருக்கமுடியாது.

நமது நீர்மூழ்கிகளின் அரிய நடவடிக்கைகளையும் கடற்கரையிலுள்ள நமது விமானப் படைகளின் தைரியமும், சாதுர்யமும் பொருந்திய தாக்குதல்களையும் நாம் மறந்து விட முடியாது. ஆனால், அவைகளின் நடவடிக்கைகள் ஸ்பஷ்டமானவை. நீங்கள் எளிதில் அறியக்கூடியவை. நான் மேலே சொன்ன விஷயங்கள் மறைமுகமானவை. ஆகையால் கடற்படையின் சேவையைப்பற்றி வெளியிடவேண்டிய தகவல்கள் அநேகமிருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஆபீஸர்களும், வேலைக்காரர்களும் மறைபொருளாகயிருந்து ஊக்கத்துடன் கப்பல்களைச் சரியான நிலைமையில் காப்பாற்றி வருகிறார்கள். அநேகர்கள் கடல் மார்க்கங்களில் எதிரியின் நடமாட்டத்தை நிவர்த்திக்கும் கஷ்ட சாத்தியமான வேலையிலீடுபட்டிருக்கிறார்கள். யுத்தம் முடியும் வரையில் அட்லாண்டிக் சமுத்திரத்திலுண்டாகும் பெரும் புயல்காற்றுகளையும் பொருட்படுத்தாமல் சாமான் கப்பல்கள் பத்திரமாக துறைமுகங்களுக்குச் செல்லுவதற்காக அநேகர் முயன்றுவருகிறார்கள். விமானம் தாங்கிகளிலிருந்து எவ்வகைப்பட்ட காலநிலைமையிலும் பறந்து சென்று திரும்பி வரும் கஷ்டத்தை அநேகர்கள் தினந்தோறும் அனுபவித்து வருகிறார்கள்.

ஆகையால், கடல் சம்பந்தமான அறிக்கை இலாகாவின் தலைவர் என்ற முறையில் நான் இந்த விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கடற்படையைச் சேர்ந்த ஆபீஸர்களும், மனிதர்களும உங்களுடைய மதிப்புக்குட்பட்டவர்களாக ஆகவேண்டுமென்பது ஒரு கருத்து. மேலும், நமது யுத்த முயற்சியானது, அநேக கஷ்டங்களுக்குட்பட்டு, நமது சேனைகளும், உணவுப்பொருள்களும், யுத்த தளவாடங்களும் தங்கு தடையன்னியில் கடல் மார்க்கமாகச் செல்லுவதற்கு கடல் மார்க்கங்களை பத்திரமாகச் செய்துவரும் மனிதர்களைப் பொருத்திருக்கிறதென்றும் நீங்கள் அறியவேண்டும்.

தென்மேற்கு பஸிபிக்கில் உள்ள சில தீவுகள்.

(தென்மேற்கு பஸிபிக்கில் செய்யப்படும் நேசதேசத் தாக்குதல்களைப் பற்றி சொல்வதற்கு கீழே கொடுக்கப்படும் தேசவர்த்தமான செய்தி உதவியாய் இருக்கும் என்ற நம்பிக்கையின்மேல் பிரசுரிக்கப்பட்டு இருக்கிறது).

நியூ ஜார்ஜியாவும், அதன் அருகாமையிலுள்ள சில தீவுகளும் ஸாலமன்ஸ் தீவு தொகுதிகளின் மத்தியில் அமைந்துள்ள ஒரு கூட்டம். இக்கூட்டத்தில், ரெண்டோவா, வன்குனு, நியூ ஜார்ஜியா, கொலம்பங்காரா, வனு வனு, அருண்டேல், கிள்ளோ, டெட்டிபாரி, கனோங்கா, வெள்ளாலவெள்ளா, காடுகெய் ஆகிய தீவுகள் ஒன்று சேர்ந்து தென்கிழக்கிலிருந்து, வடமேற்கு வரையிலும் 130 மைல் நீளமும், 40 மைல் அகலமும் உள்ள பிரதேசம்.

இத்தீவுகளில் தென்னை உற்பத்தி யன்னியில், நல்ல காடுகள் அடர்ந்திருக்கின்றன. அக்காடுகள் கடற்கரையோரங்களில் மிகவும் அடர்த்தியாய் இருக்கும். மழை அதிகம். ஒவ்வொரு

தீவிலும் வருஷத்திற்கு 100 அங்குல மழைக்குக் குறையாமலும், சில தீவுகளில் 200 அங்குல மழையாகவும் இருக்கிறது.

ஸெப்டம்பர் முதல் டிஸம்பர் வரையிலும் உள்ள காலத்திலும் மாதத்திற்கு 7 அங்குல மழைக்குக் குறைவு இல்லை. மழை அதிகமாய் உள்ள மாதம் ஜனவரி.

நியூ ஜார்ஜியா, ரெண்டோவா.

இத் தீவு கூட்டத்தில் மிகப் பெரிய தீவாகவும் 40 மைல் நீளமும் 20 மைல் அகலமும் உள்ளது நியூ ஜார்ஜியாத் தீவு. இத்தீவு 2,500 அடிகள் உயரமுள்ள பல மலைகளை கொண்ட மலைப்பாங்கான பிரதேசமாகும். கூடல்கானுரைத் தாக்குவதற்காக விமான தளமாக ஜப்பானியர் உபயோகப்படுத்திய பெரும் பிரதேசம் ஒன்றும், இத்தீவின் மேற்கிலே உள்ளது. முண்டா விமான நிலயம் என்று சொல்லப்படுவது ரெண்டோவா தீவிற்கு 8 மைல்கள் நேர் வடக்கே உள்ளது. அதனை ஜெனரல் மாக் ஆர்தரின் படைகள் ஜூன் 30-ம் தேதி கைப் பற்றின. அதே தேதியில் பிடிக்கப்பட்ட வீரு துறைமுகம் முண்டாவிற்கு 30 மைல்கள் தென் கிழக்கிலே நியூ ஜார்ஜியா தீவின் தெற்குக் கரையிலுள்ளது. இது மிகவும் குறுகலாயும் 300 கெஜங்கள் மட்டும் பிரயாணம் செய்யக்கூடியவகையில் செங்குத்தான மலைகளை உடையதாயும் இருக்கிறது.

ரெண்டோவாத் தீவு 20 மைல்கள் நீளமும், 8 மைல்கள் அகலமும் உள்ளது. இத்தீவின் வடமுனையிலுள்ள ரெண்டோவா துறைமுகம் முண்டாவிற்கு எதிராக நாசகாரிகள், க்ரூயிஸர் கள் இவைகள் உள்பட 10,000 டன்கள் நிறையுள்ள கப்பல்கள் நிற்கும் தன்மை யுடையது. இருந்தாலும், மூன்று நிமிஷத்தில் பறந்துவரக்கூடிய முண்டா விமான நிலயத்தை ஜப்பானியர்கள் வைத்திருக்கும் வரையில் இத்துறைமுகத்தில் கப்பல்களை நிறுத்திவைப்பது பாதுகாப்பு உடையதாக இல்லை. அங்குள்ள தரைப் பிரதேசம் செங்குத்தாகவும், சிறுகாடுகளை உடையதாகவும் இருப்பதால் நேசகட்சியினர் அங்கு ஒரு விமான நிலயத்தை கட்ட மாட்டார்கள்.

கொலம்பங்காராத்தீவு.

முண்டாவிலுள்ள ஜப்பானிய விமான நிலயத்திற்கும், அருகாமையிலுள்ள ஜப்பானிய படைகளுக்கும் ஸப்ளை தளமாக இருக்கிறதாகக் கருதப்படுகிறது. இது வட்டவடிவமாய் 18 மைல் குறுக்களவுள்ளதாய் இருக்கிறது. அங்குள்ள எரிமலையின் சிகரம் எல்லாப் பாகத்திற்கும் வெளிப்படையாய்த் தெரியக்கூடியது. அத்தீவின் தென்கிழக்குப் பிரதேசத்தில் ஜப்பானியர்கள் ஒரு தென்னஞ்சோலை ஒன்றை உண்டாக்கியும், விமான நிலயம் ஒன்றைக் கட்டியும் இருக்கின்றனர். இவ்விடத்திற்குத்தான் விலா என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இவ்விமான நிலயம் ஈண்டாவிற்கு 15 மைல்கள் வடமேற்கிலுள்ளது. இத்தீவில், விலா, வெப்ஸ்டர்கேவ், பாம்பாரி துறைமுகம் என்ற மூன்று சாமான்கள் ஏற்றிறக்குமதி செய்யும் பிரதேசங்கள் இருக்கின்றன.

ஸாலமன்ஸிற்கும் நெதர்லாந்தின் கிழக்கு இந்தியத் தீவிற்கும் இடையிலுள்ள நியூ கினிப் பிரதேசங்களிலுள்ள முக்கியமான தீவுகள், நியூ கினியும், நியூ பிரிடன், நியூ அயர்லாந்து, ஆரு, டிமோர் ஆகியவைகளாகும். இத்தீவுகள் பூமத்தியரேகைக்கு நேர் தெற்கில் அருகா மையில் இருப்பதால் அங்குள்ள சீதோஷ்ண ஸ்திதி மிகவும் உஷ்ணமானதாகத்தான் இருக்கும். அங்குள்ள காடுகள் இருளுடையதாகவும் அடர்த்தியாயும் உள்ளது. அங்கு கொடுமையான சூரிய ரேகைகளும்கூட இக்காடுகள் அடர்த்தியாயிருப்பதால் உள்செல்லுவதில்லை.

நியூ கினி.

இவைகளில் பெரிய தீவு நியூ கினி. பர்மா, பெங்கால் மாகாணம் இவை இரண்டையும் சேர்த்தாற்போல் இத்தீவு 3,11,750 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுடையது. அங்கு ரஸ்தாக் களே இல்லாததால் நேசக்கட்சியினரும், எதிரிகளும் தங்கள் சேனைகள் செல்வதற்கு வேண்டிய ரஸ்தாக்களை அவர்களே கட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது. தீவில் மேற்கி லிருந்து கிழக்கு வரையிலும் ஒரே நெட்டாக மலைத்தொடர்ச்சிகள் இருக்கின்றன. அவைக ளில் முக்கியமாக ஓவன் ஸ்டான்லி, முல்லர், ஒரான்ஸி, நாஸோ ஆகியமலைகளைச் சொல்லலாம்.

தற்காலத்தில் நடந்த நடவடிக்கைகளினால், அத்தீவின் பெரும்பகுதியில் ஏதும் வேறுபாடு ஏற்படவில்லை. ஜப்பானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட வடக்கு பாகத்தைப்பற்றி கவனிக்க வேண்டும். அங்கு வீவாக் துறைமுகம், படாங், லே, ஸலாமூவா, ஆகிய இடங்கள்தான் மிகவும் முக்கியமான இடங்களாகும். லே, ஸலாமூவா ஆகிய இவைகள் ஹுவான் குடாவில் இருக்கின்றன. அங்குதான் சில வாரங்களுக்கு முன்பு சில எதிரி துணைக்காவலோடு கூடிய கப்பல் கூட்டங்கள் நாசமாக்கப்பட்டன. அவ்விரு இடங்களும் ஜப்பானியர்களுக்கு முக்கிய மான ஸப்ளை தளங்களாகும்.

நியூ பிரிடன், நியூ ஐயர்லாந்து.

லேயிக்கும், ஸலாமூவாவிற்கும் வடகிழக்கில் நியூ பிரிடன் தீவு இருக்கிறது. அதன் விஸ்தீரணம் அநேகமாய் வடமேற்கு இந்தியாவின் எல்லைப்புற மாகாணங்களைப் போன்றதாய் 14,600 மைல்களாகும். எதிரியின் தென்மேற்கு பஸிபிக்கிலுள்ள கடற்படை தளமும், விமான தளமுமான ரபால் இத்தீவில்தான் உளது. ரபால் தென்மேற்கிலே உள்ள ஸாலமன் ஸிற்கும், தென்கிழக்கிலுள்ள நியூ கினிக்கும் மத்திய ஸ்தானத்தில் அமைந்துள்ளது. ரபாலை விட நியூ கினிக்கும் அருகாமையிலுள்ள காஸ்மாடா, அத்தீவின் தென்கரையிலுள்ள ஒரு முக்கியமான எதிரியின் தளமாகும்.

50 மைல்கள் கடலால் பிரிக்கப்பட்டு நியூ அயர்லாந்துதீவு நியூ பிரிடனுக்கு வடக்கில் இருக்கிறது. அத்தீவின் வடமுனையிலுள்ள காவியங் என்ற பட்ணம் இத்தீவில் முக்கியமானது. ஸாலமன்ஸ் வரிசையில், பொகெய்ன்வில்லித் தீவிற்கு 200-மைல்கள் தூரத்தில் இருக்கிறது. இத்தீவின் தென்முனை.

டிராப்ரியாண்ட், வுட்லார்க் தீவுகள்.

நியூ கினிக்கு நேர்கிழக்கின், வடகிழக்கிலே இவ்விருதீவுகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டும் உருவில் சிறியனவேயாயினும், முக்கியத்வம் மிகவும் உடையனவேயாகும். அவைகள் ஆக்கிரமித்ததால் நேசதேசத் துருப்புகளை காஸ்மர்டாவிற்கு 180 மைல்கள் தூரத்திலும், ரபாலுக்கு 300 மைல்கள் தூரத்திலும், பெய்ஸி என்ற பொகெய்ன்வில்லியிலுள்ள ஜப்பானிய தளத்திற்கும் 330 மைல்கள் தூரத்திலும் கொண்டுவந்திருக்கிறது. இத்தீவுகளின் பிரதேசங்கள், மிகவும் முக்கியமானதாய் ஆகாய விமான நிலயங் கட்டுவதற்குப் பொருந்தியதாய் இருக்கிறது.

ட்ரோபிரியண்ட் தீவுகளில் 4 பெரிதும், 4 சிறிதுமான 8 தீவுகள் அடங்கியுள்ளன. அவைகளில் முக்கியமானது 28 மைல்கள், நீளமும் 13 மைல்கள் அகலமுடைய கிரிவிணுவாகும். வுட்லார்க் கூட்டங்கள் 7 தீவுகளை உடையது. அதில் 40 மைல்கள் நீளமும், 15 மைல்கள் அகலமுமுடைய மூராத்தீவை ஒரு பெரிதும், மற்றைய 6-ம் சிறிய தீவுகளுமாகவே இருக்கிறது.

ஸியாமுக்கு ஜப்பானியரின் சலுகை.

மலேயா ஸமஸ்தானங்களில் ஆதிக்கம்.

(எகானமிஸ்ட்).

சமக்ஷேமமும், புதிய உலக அமைப்பும் ஒரே மாதிரியானது. ஆக்கிரமிப்பு ஐரோப்பாவில் ஜெர்மனி கையாண்ட ராஜீய பொருளாதார முறைகளை எல்லாம் ஜப்பானும் நடத்தி வருகிறது. ருமேனியா, ஹங்கேரி, பல்கேரியாவைப்போலவே எதேச்சாதிகாரிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு சுகமாக வாழ்வதென்பது சிரமமானது என்பதை ஸியாமும் இப்பொழுது அறிந்துவருகிறது. ஜப்பானியர்கள் மலேயா தீபகற்பத்தைப் பிடித்தபொழுது, அளவற்ற அதிகாரத்துடனும், கொள்ளையுடனும் தேசத்திற்குச் சுபிக்ஷம் உண்டாகுமென்ற நம்பிக்கை கொண்ட காலமும் உண்டு. ஆகிலும் இந்த மாயத்தைப் புது உலக அமைப்பின் பொருளாதார முறைகள் வெகு சீக்கிரத்தில் போக்கடித்துவிட்டன.

தன்னுடைய வியாபார ஸ்தலங்களிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டதால், ஸியாம் தன்னுடைய சாமான்களை ஜப்பானுக்குமட்டும் விற்பனை செய்யவேண்டியதாயிற்று. ஸியாமுடைய அரிசி ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அதற்குப் பார்த்தியாக சாமான்களும், தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களும் அனுப்பப்படவில்லை. ஜப்பானியர்கள கொண்ட ஸியாமிய சேனையானது ஸியாமிலுள்ள தொழிற்சாலைகளை எல்லாம் கைப்பற்றிக் கொண்டது. உணவுப்பொருள்கள் பங்கீடும், உணவுப்பொருள் கட்டுப்பாடும் அமுலுக்கு வந்தன. 1942-ம் வருஷ மத்தியில் உணவுப்பொருள் சட்டங்களை மீறின குற்றங்கள் ஸிவில் அதிகாரத்திலிருந்து ராணுவக் கோர்ட்டுகளுக்கு மாற்றப்பட்டன. இதே சமயத்தில் ஸியாமிய அரசாங்கம் கட்டாயசேவை அமுலை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதாகவும் உத்தேசித்தது.

ஸியாமுக்குக் கிடைத்த வெகுமதி.

இந்தத் தியாகங்களுக்குப் பதிலாக சீனர்களுடன் யுத்தம் செய்யும்படியான ஒரு கௌரவம் ஜப்பானியர்களுக்குக் கிடைத்தது. டிஸம்பர் மாதத்தில் ஷான் ஸமஸ்தானங்களில் யுத்தம் முடிந்தபொழுது, ஸியாமியர்கள் ஜயித்துக் கைப்பற்றிய நாடுகளையே ஜப்பானியர்கள் அவர்களுக்குக் கொடுத்தார்கள். யுத்தம் செய்வதோடு ஸியாமியர்கள் திருப்தியடையவில்லை. அவர்களுடைய நன்றியறிவை ஹங்கேரியர்களுடைய மனப்பான்மைக்கு ஒப்பிடலாம்.

இவ்வருஷ ஆரம்பத்தில் நிர்வாக சபையில் நெருக்கடி ஏற்பட்டு இரண்டு மந்திரிகள் வெளியேறினார்கள். ஸியாமிய அரசாங்கத்தில் அதிக அக்கரைகொள்ளவேண்டுமென்று

ஜப்பானியர்களுக்குத் தோன்றிற்று. ராஜீய ஸ்வதந்திரம் குறைவுபட்டதற்குப் பதி ஸியாமுக்கு மற்ற இரண்டு ஷான் ஸமஸ்தான நாடுகளும், மலேயா நாடுகளைச் சேர்ந்த பெர்லி, கெட்டா, கெலண்டான், ட்ரெங்கண்ணு முதலிய தேசங்களும் கொடுக்கப்பட்டன.

சிங்கப்பூர் நிர்மாணம் செய்யப்பட்டதற்கும், 1909-ம் வருஷம் நடைபெற்ற பிரிடிஷ் ஸியாமிய ஒப்பந்தத்திற்கும் மத்தியில் ஒரு நூற்றுண்டாக, ஷான் ஸமஸ்தானங்களும், சமஷ்டி மலேயா நாடுகளும் பிரிடன், ஸியாம் இவ்விரண்டினுடைய அமுலுக்கு உட்பட்டிருந்தன. டம்பமாகச் சொன்னால் ஸியாம் இந்த இடங்களில் பேருக்குமட்டும் ஆட்சிபுரிந்தது என்று சொல்லலாம். ஸியாமின் ஆட்சி என்பது மூன்று வருஷத்திற்கு ஒருதரம் ஸமஸ்தான மன்னர்களிடமிருந்து ஒரு தங்க புஷ்பத்தைக் காணிக்கையாகப் பெறுவதுதான். 1867-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து மலேயா நாடுகள் பிரிக்கப்பட்டபொழுது பிரிடிஷ் வியாபாரம் விருத்தி அடைந்து, தீபகற்பத்தில் சுபிக்ஷம் உண்டானபொழுது எல்லைச்சரகத்திலுள்ள நாடுகள் பிரிடனுடைய ரக்ஷணையை ஆவலுடன் கோரினார்கள்.

1909-ம் வருஷத்திய உடன்படிக்கை.

ஆரம்பத்தில் தனிப்பட்ட மன்னர்களுக்கு ராஜீய முறையில் ரக்ஷணை அளிப்பதில்லை என்ற கொள்கை மேலிட்டிருந்தது. கடைசியில் பொருளாதார அபிவிருத்தியையும், உள்நாட்டு அமைதியையும் உத்தேசித்து ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி அரசர்கள் பிரிடிஷ் அரசாங்கத்தின் ரக்ஷணைக்குள்ளானார்கள். அவர்களுக்கு ஆலோசகர்களாக பிரிடிஷ் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். 1909-ம் வருஷம் ஏற்பட்ட பிரிடிஷ் ஸியாமிய ஒப்பந்தப்படி இந்தத் திட்டம் அமுலுக்குவந்தது. இப்பொழுது ஸியாமியர்கள் தங்களுடைய சுய ஆட்சியைப் பெற்றுவிட்டார்கள். அதாவது, ஜப்பானியர்களின் மறைமுகமான அமுலுக்குட்பட்டு ஸியாமியர்களிடம் அதிகாரத்தை ஜப்பானியர்கள் ஒப்படைத்துவிட்டார்கள்.

மூன்று வருஷத்திற்கு ஒருதரம் தங்கப்புஷ்பத்தைக் காணிக்கையாகக் கொடுப்பதுடன் மலாய் நாடுகள் நின்றுவிட்டால் அது பெரிய அதிருஷ்டமாகும்.

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 158. (3-வது பிரிவு).

7- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
8- 8-43	ஆலங்குடி	... ,,	7.00
,,	ராசியமங்கலம்	... ,,	7.30
9- 8-43	திருமயம்	... ,,	7.00
,,	மேலூர்	... ,,	7.30
10- 8-43	பள்ளிவாசல்	... ,,	7.00
,,	பில்லமங்கலம்	... ,,	7.30
11 -8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
11- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	பொ. புதுப்பட்டி	... மாலை	7.00
,,	வேந்தம்பட்டி	... ,,	7.30
12- 8-43	வெள்ளனூர்	... ,,	7.00
,,	செம்பாட்டூர்	... ,,	7.30
13- 8-43	புலியூர்	... ,,	7.00
,,	கண்ணங்குடி	... ,,	7.30

பிரஸங்கம் 159 (4-வது பிரிவு).

14- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
15- 8-43	கீழாநிலை	... ,,	7.00
,,	கீழாநிலை-புதுப்பட்டி	... ,,	7.30
16- 8-43	பெருமாநாடு	... ,,	7.00
,,	புல்வயல்	... ,,	7.30
17- 8-43	சடயம்பட்டி	... ,,	7.00
,,	ஒலியமங்கலம்	... ,,	7.30
18- 8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,	10.45
18- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	அன்னவாசல்	... மாலை	7.00
,,	கீழக்குறிச்சி	... ,,	7.30
19- 8-43	மலம்பட்டி	... ,,	7.00
,,	பேராம்பூர்	... ,,	7.30
20- 8-43	ஆலவயல்	... ,,	7.00
,,	அம்மன்குறிச்சி	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

7—8—43	திருமயம்.
8—8—43	கொடும்பாளூர்.
9—8—43	விராலிமலை.
10—8—43	ராமசந்திரபுரம்.
11—8—43	கீழாநிலை-புதுப்பட்டி.
12—8—43	குழிபிறை.
13—8—43	புதுக்கோட்டை.
14—8—43	வெட்டன்விடுதி.
15—8—43	விராச்சிலை.
16—8—43	அரிமளம்.
17—8—43	குடுமியாமலை.
18—8—43	கரம்பக்குடி.
19—8—43	கீழாநிலை.
20—8—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—10-8-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான

தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் வருஷம் ஆகஸ்டு மீ 14உ [ந. 159

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLIX.

முஸோலினி நாடகம் முடிவடைந்துவிட்டது.

ஜனநாயகத்தின் முன்னேற்றம்.

(**J. B. ப்ரீஸ்ட்லி.** பிரிடிஷ் ஒலிபரப்பு பிரசங்கத்தின் சுருக்கம்).

ஐரோப்பிய நாடகமேடையிலிருந்து முஸோலினி வீழ்ச்சிபெற்று திடீரென்று மறைந்ததைக் கண்டு பிரிடிஷ் மக்கள் கலக்கமடையவில்லை, அவர்கள் குதூகலப்படுகிறார்கள். சென்ற மூன்று வருஷங்களில் அவனை ஆதரிப்பவர்கள் பிரிடனில் ஒருவருமில்லை.

தலையிட சமயம் வாய்த்துவிட்டதென்று மதித்து, ஜெர்மனியின் வெற்றியில் பங்கு கேட்கலாமென்று யோசித்து, இதாலிக்குச் க்ஷேம காலம் வந்துவிட்டதென்றும், இது இதாலியின் யுத்தமும்தானென்றும் முஸோலினி வெளியிட்டது முதல் மிஸ்ட்டர் சர்ச்சிலின் வெறுப்புக்கும், பலமான ஹேளனத்துக்கும் அவன் பாத்திரமாகிவிட்டான்.

1940-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் நாம் தன்னந்தனியாக யுத்தம் செய்துகொண்டிருந்தபொழுது மிஸ்ட்டர் சர்ச்சில் இதாலிய மக்களுக்கு ஒலிபரப்பில் ஒரு செய்திவிடுத்தார். அது பின்வருமாறு: "எங்களுடைய சேனைகள் உன்னுடைய ஆபிரிக்க சாம்ராஜ்யத்தை சின்னாபின்னப்படுத்தி அழித்துவிடும். பிரிடிஷ் சாம்ராஜ்யத்துடன் சண்டையிடும்படி இதாலிய மக்களை யுத்தத்தில் புகுத்திவிட்டதற்கு ஒருவன்தான் காரணம். 18 வருஷ ஏகாதிபத்யத்துக்குப்பின் உங்களுடைய தேசத்தை அழிவுபடும் நிலைமைக்கு அவன்தான் கொண்டுவந்துவிட்டான்."

மிகுந்த காவு.

இப்பொழுது இதாலியின் அதோகதி நிச்சயம். கருஞ்சட்டையினர் நடவடிக்கைக்கும், நாட்டியத்திற்கும், வீண் பீத்தலுக்கும், டம்பத்துக்கும், துரோக புத்திக்கும் தகுந்த வெகுமதி கிடைத்துவிட்டது.

இந்த யுத்தத்தில் இதாலி ஈடுபடுவதற்கு முந்தியும், இதாலி ஏராளமான காவு கொடுத்திருக்கிறது. இதாலியின் செயலுக்கு உபரியான பொருளை அது இதாலியில் செலவழித்தது. பாஸிஸ்ட் கக்ஷியின் ஆடம்பரத்துக்காக பொதுமக்களின் மிலியன்கணக்கான திரவியம் செலவிடப்பட்டது. ஜனங்களின் வாழ்க்கை சுகம் குறைவுபட்டது. ஏராளமான வரி விகிதங்கள் ஏற்பட்டன. ஊதியம் குறைத்துக் கொடுக்கப்பட்டது. சரியான திட்டங்கள் கிடையாது. இதாலியின் சக்திக்கு ஒவ்வாதபடி அது முதல்தரமான ராணுவ வல்லரசு என்று தோன்றும்படியாக வேஷம் போடப்பட்டது. அநேக பத்திரிகைகள் பிரசுரிப்பதுபோல ஈசாப் எழுதியிருக்கும் பெரிய தவளையின் கதையாக முடிந்துவிட்டது.

ஆடம்பரம்.

யுத்தம் தவங்கு முன்னரே முஸோலினியைப்பற்றி நான் அநேகம் தடவைகளில் வியாக்யானம் செய்திருக்கிறேன். அநேகர்கள் இவன் ஒரு பெரிய மனிதனென்று மதித்தார்கள். முஸோலினி எப்பொழுதும் டம்பமானவனுனதால் அவன் அவ்விதம் தோன்றினுன். அவனைக் காட்டிலும் கெடுதல் புத்தியும் மோசம் செய்யக்கூடியவனுமான ஹிட்லர், முஸோலினியை விட இழிவானவன், சூன்யக்காரன், மந்திரவாதி.

சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறவர்களைக் கவரக்கூடிய முஸோலினியின் ஆடம்பரம் ஜனங்களையும் ஏமாற்றிவிட்டது. 10 வருஷங்களுக்குமுன் சிற்றுண்டி நேரம் முழுவதும் ஒரு சிறந்த நூலாசிரியருடன் சம்பாஷனை செய்துகொண்டிருந்தேன். அவருக்கு பாஸிதத்வத்தில் நம்பிக்கையில்லாதபோதிலும், நெபோலியனைப்போல, முஸோலினியும் சிறந்த மனிதனென்று அவர் சொன்னுர். நெபோலியனை நான் மதிக்கவில்லையென்றும் முஸோலினியைப்போல் பத்துப் பேர்களைச் சேர்த்தாலும் நெபோலியனுக்கு ஈடுசெய்ய முடியாதென்றும் நான் சொன்னேன்.

இருவருக்குமுள்ள தாரதம்யம்.

ஆட்டமும், வேஷமும், வீண் பீத்தலும், கூக்கூரலும் எல்லாம் கெடுதலை சூசிப்பிக்கின்றன. உண்மையில் திடமும், வலிமையும் பொருந்தியவர்கள். மகத்தான காரியங்களைச் செய்வதுபோல் பாசாங்கு செய்யவேண்டியதில்லை. அவர்களுக்கு இயற்கையான குணமிருக்கிறது. அவர்கள் வேஷம் போடவேண்டியதில்லை. உண்மையில் பலிஷ்டனுன கிராம் வெல்லும்கூட விம்மி அழுவான். தான் துர்பலமுள்ளவனென்றும் பாபச் செய்கையுள்ளவனென்றும் வருந்துவான். லிங்கன் நாற்காலியில் படுத்துக்கொண்டு விசித்திரமான கதைகளைச் சொல்லுவான். முஸோலினி ஒரு இதாலியன். இதாலியர்கள் விசித்ரமானவர்கள். நாடகம் ஆடுவதில் ருசியுள்ளவர்கள். ஆகிலும், இதாலியின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்ட காரிபால்டியும், மாக்ஸினியும், காவூரும் முஸோலினியைப்போல ஆடவுமில்லை, பாடவுமில்லை, வேஷம் போடவுமில்லை.

நியூஸ் ரீல் சினிமாப் படத்தில் ஸ்டாலினையும், முஸோலினியையும் கவனித்துப்பார்த்தால் ஜார்ஜியாவிலுதித்த குடியானவனுன ஸ்டாலின், அபரிமிதமான அதிகாரம் பெற்றிருக்கும் ஸ்டாலின், உண்மையில் திடபுத்தியுள்ளவனென்பது புலப்படும். வேஷம் போட்டுக் கொள்ளுவதிலும், நடிகர்போல அதை பரிமளிக்கச் செய்வதிலும் தரந்தரனுன முஸோலினி சாதுர்யமுள்ள வீருப்புப் பேச்சுள்ளவன்தான்.

உபயோகமற்ற நாடகம்.

நெபோலியன் 100 நாட்களில் செய்த தீரச் செய்கைகளைப்பற்றிய நாடகத்தை முஸோலினி நடித்ததைப் பார்த்தேன். அந்த நாடகத்தில் ஆடம்பரம்தான் மிச்சம். நாடகம் உபயோகமற்றது. பொழுது போக்குக்காக நடிக்கப்பட்டது. எல்லாம் மிகையாகச் சொல்லப்பட்டது. அதில் நுண்ணறிவும், புத்தி விசாலமும் காணப்படவில்லை. நாடகம் அவனுக்கு இகழ்ச்சி உண்டாக்கிவிட்டது. அவன் செய்வித்ததெல்லாம் அவனை அதோகதியில் விட்டுவிட்டன.

இவ்வளவு ஜனங்கள் அவனிடம் மோகம்கொண்டதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போம். அவனுடன் சேர்ந்துகொள்ளவேண்டுமென்று ஜனங்கள் பிரியப்பட்டதுதான் காரணம். முஸோலினியிடம் ஏமாற்றமடைந்தவர்களெல்லாம் ஜனநாயக நோக்கங்களையும் பொதுஜனங்கள் வெளிப்படையாக அரசாங்கத்தின்பேரில் குறைகூறுகிறவர்களையும் மனதார வெறுத்தவர்கள்தான். அவர்கள் யதேச்சாதிகாரி என்னும் விக்ரஹ ஆராதனை செய்பவர்கள். இந்த யதேச்சாதிகாரி சதா காலமும் வீண் பேச்சுப்பேசுவான். அவனைச்சுற்றிலும் உடுப்புப் போட்ட சேவகர்கள் சதாகாலமும் வந்தனம் செய்துகொண்டிருப்பார்கள். யதேச்சாதிகாரி கையை அசக்கினால் எல்லாக் காரியங்களும் முடிவடைந்துவிடும். தொழிலாளர்களை அவர் அழித்துவிடுவார். கல்வி கற்றவர்களை வெருட்டல் மூலமோ அல்லது காவல் முகாமில் அடைப்பது மூலமாகவோ அடக்கிவிடுவார். உலகத்தின் சமாதானத்தையும், க்ஷேமத்தையும் அபாயத்துக்குள்ளாகிவிடுவார். ரயில் வண்டித்தொடர்கள் மணிப்படி புறப்படவேண்டுமென்று உத்தரவிடுவார். அதிகப் பிரசங்கிகளான பிச்சைக்காரர்களைத் தெருக்களிலிருந்து அப்புறப் படுத்திவிடுவார். சரிதான். ரயில் வண்டித்தொடர்கள் மணிப்படி புறப்படவேண்டிய அவசியத்தை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆகிலும், அவ்வண்டிகள் அடிமைப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் பிரதேசங்களுக்குள் ஓடுவதென்பதை நாம் ஆமோதிக்கவில்லை. தெருக்களில் பிச்சைக்காரர்கள் நடமாடுவது தொந்தரவாகயிருந்தாலும், தெருக்களில் பிச்சைக்காரர்கள் முகமலர்ச்சியுடனும் ஸ்வதந்திரத்துடனுமிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். தெருக்களில் பிச்சைக்காரர்களும், சந்தோஷப்படுகிறவர்களும் ஸ்வதந்திர புருஷர்களும் நடமாடாத கோரத்தைப் பார்க்க நான் விரும்பவில்லை.

ஆகையால், முஸோலினிக்கு வந்தனம்செய்து முஸோலினியைப் பாராட்டியவர்களுக்கு நான் ஒரு எச்சரிக்கை விடுக்கிறேன். முஸோலினி மறைந்துவிட்டான். கூடிய சீக்கிரத்தில் அவனைச்சேர்ந்த கருஞ்சட்டைப்படைகளும் குறுகிய நோக்கமுள்ளவர்களும் அவனுக்கு ஒத்தாசை செய்த பணக்காரர்களும் சீக்கிரம் மறைந்துவிடுவார்கள். இவர்களிடத்தில் நமக்கு ஆயாசம் வந்துவிட்டது. இவர்கள் வெகுநாட்களாக அமுல் நடத்திவிட்டார்கள். அவர்கள் இஷ்டம்போல் உலகத்தில் இனிமேல் அவர்கள் விளையாடமுடியாது.

உண்மையாக ஸ்வதந்திரத்துக்காகப் பாடுபடும் ஜனநாயகம் முன்னேற்றமடைந்து வருகிறது.

வார யுத்தச் செய்திகள்.

7—8—43-லிருந்து 13—8—43-வரை.

ஸிஸிலி.—ஸிஸிலி யுத்தம் ஆரம்பித்து 26 நாட்களுக்குப்பின் ஆகஸ்டு மாதம் 5-ம் தேதி யன்று கடானியா விழுந்தது. அதற்குப் பிறகு ஸெண்டேரிபி, பாடெர்னோ, மிஸ்டர் பியாங்கோ ரெகல்பூடோ, காஸ்லியானோ, பாலர்மோவுக்கு சமீபத்திலுள்ள உஸ்டிகா, அட்ரானோ, பெல்பாஸோ, பியான் காவில்லா, பிராண்டி, ஆஸிர்கேலி, ஸான்மரியாடி லிகோடியா, ஸான் பிடெல்லோ, ஸான் அகாடா, ஸெஸாரோ, கார்டியா, பாராகலோ, ஸாப்பரானு, ஸெயிண்ட் மார்கோ, அலர்ஸோ முதலிய இடங்களை நேசநாடுகள் பிடித்துவிட்டார்கள்.

எதிரியின் படைவரிசைகளுக்குப்பின் இறங்கிய அமெரிக்கப்படைகள் மற்றப்படைகளுடன் சேர்ந்துவிட்டன. பிரிடிஷ் 8-ம் படையும், அமெரிக்க ஏழாம் படையுடன் தொடர்பு ஏற்படுத்திவிட்டது. எட்னாமலையின் வட்டத்தின் முக்கால்பாகம் நேசதேச ஆதிக்கத்துக் குட்பட்டுவிட்டது. எட்னாவை நமது படைகள் வளைத்துவருகிறார்கள். எட்னாவுக்கு சமீபத்தில் ஆசிர் கேலிக்கு வடக்கே நதிக்கரையிலிருக்கும் ஜெர்மன் துருப்புகள் இதாலியர்களைக் கைவிட்டுவிட்டுப் பின்வாங்குகிறார்கள். ராண்டாஸோவுக்காக கடும் போர் நடைபெறுகிறது.

மஸ்ஸினா ஜலசந்தியில் பதினைந்து நாட்களுக்குள்ளாக ஒரு அச்சுக் கப்பல்கூட நுழைய முடியவில்லை. ஸிஸிலியின் வடக்குக்கரையிலுள்ள நகரங்களை நமது விமானங்கள் நொருக்கி வருகின்றன.

அச்சுநாடுகளின் படை வரிசைகள் 45 மைல்கள் விஸ்தீர்ணத்தில்தான் நிற்கின்றன. இதாலியை நமது படைகள் பார்த்துவிட்டார்கள், நிலைமை மோசமாகிவிட்டது.

இதாலி.—பிரிடிஷ் விமானப்படை இதாலியை மறுபடியும் தாக்க ஆரம்பித்துவிட்டது. யுத்த எதிர்ப்பு கிளர்ச்சியுள்ள மிலானும், பியாட் தொழிற்சாலைகளுள்ள டூரினும், முக்கியமான வியாபாரத் துறை முகமான ஜெனோவாவும் வெடிவிமானங்களால் தாக்கப்பட்டன.

ருஷ்யா.—பெயலோகிராட்டின் வீழ்ச்சிக்குப்பின் ஸோலோசெவ், குரோமி, கிரெய் வோரன் அக்தியர்கா என்ற இடங்களை ருஷ்யர்கள் கைப்பற்றிவிட்டு கார்காவை வளைத்து வருகிறார்கள். ஜெர்மானியர்கள் கார்காவைக் காலி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் தப்பித்து ஓடுவதற்கு ஒரு குறுகலான மார்க்கம்தானிருக்கிறது.

பிரியான்ஸ்க் போர்முனையில் கோடியானெட்ஸ் விழுந்துவிட்டது.

தெற்கே கூபானிலும், மத்தியில் கிராவிலும் டானட்ஸின் அடிபாகத்திலும் ருஷ்யர்கள் புதிய தாக்குதலை ஆரம்பித்துவிட்டார்கள்.

விமானத் தாக்குதல்.—மான்ஹீமும், லட்விக்ஷாபனும், நூரம்பர்க்கும் வெடிகுண்டு வீச்சுக் குட்பட்டன. மான்ஹீமென்பது ஜெர்மனியின் மத்தியில் முக்கியமான தொழிற்சாலைகளும், வியாபார ஸ்தலங்களுமுள்ள பிரதேசம். இங்கு யூ படகுகள் கட்டப்படுகின்றன. லட்விக்ஷே பனில் பெரிய ரசாயனப்பொருள் உற்பத்திசாலையிருக்கிறது.

தென்மேற்கு பஸிபிக்.—முண்டாவுக்கு எதிர்த்த கரையில் ஒரு குறுகலான கால்வாயைத் தாண்டியிருக்கும் கொலம்பாங்காரா தீவிலுள்ள விலாவை நேசதேசத்தார்கள் தாக்கி வருகிறார்கள். இந்தப் பிராந்தியத்தில் விலா தான் பாக்கியிருக்கும் தற்காப்பு ஸ்தலம். முண் டாவுக்குத் தெற்கேயுள்ள பெய்ரோகோ என்னுமிடத்தை நமது விமானங்கள் வளைத்து விட்டன.

வால்டு விரிகுடா முதல் பீரீட்ரிக் கார்ப் துறைமுகம் வரையிலுள்ள கடற்கரைப் பிரதேசங் களும் நியூகினியாவிலுள்ள கியான்க்வாவும், பொஸ்ட்ரம் விரிகுடாவும் வெடிவிமானங்களால் தாக்கப்பட்டன.

ஸாலமன்ஸ் தீவுகளில் வெல்லா வளைகுடாவில் நடைபெற்ற கடல்போரில் ஜப்பானியர் களுக்கு ஒரு சஞ்சாரிக்கப்பலும், இரண்டு நாசகாரிகளும் நஷ்டமாகிவிட்டன.

நேசதேச வெடிவிமானங்கள் ஸலாமூவா, பின்ஸ்ஷேபன், ஸாலமன்ஸ் முதலிய இடங் களிலுள்ள எதிரிக் கப்பல்களைத் தாக்கின.

சைனு.—யாங்ட்ஸீ நதியின் தெற்குக்கரையிலுள்ள கெக்டியனிலுள்ள ஜப்பானிய ஸ்தானங்களை நேசதேச விமானங்கள் வெற்றிகரமாகத்தாக்கின.

பர்மா.—ஆகஸ்டு 9-ம் தேதி யன்று, ஸெடாவிலுள்ள ரெயில்வே ஸ்டேஷனும், மாண்ட லேக்கு வடக்கேயுள்ள நதியிலுள்ள படகுகளும், பாக்கனிலுள்ள இருப்புப்பாதை ஸ்தாபனங் களும் குண்டுவீச்சுக்குட்பட்டன.

ஆகஸ்டு மாதம் 10-ம் தேதியன்று அரக்கான் கடற்கரையிலிருந்து மாண்டலே வரையி லுள்ள பிரதேசங்களிலுள்ள விசேஷமாக, அக்யாப் பியாவீ முதலிய இடங்களிலுள்ள ஜப்பா னிய ஸ்தானங்களை நமது விமானப்படை குண்டுகளால் நொருக்கின.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

2—8—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்.—பிரான்ஸிலுள்ள, மெர்வில்லி (Merville), செயிண்ட் ஓமர் (St. Omer).

எதிரி துணைக்காவலோடிகூடிய கப்பற் கூட் டம்.—டெக்ஸல் (Texel) தீவு.

கப்பல்கள்.—பிரான்ஸிலுள்ள டங்கர்க் (Dunkirk) துறைமுகம்.

இரவு.—துறைமுகம்–ஹாம்பர்க் (Hamburg).

எதிரி விமான நிலயங்கள்.—ஸில்ட் (Sylt), கக்ஸாவன் (Cuxhaven).

எதிரிக் கப்பல்கள்.—நார்வே (Norway). (32 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

(4 அச்சு விமானங்கள் நாசமாக்கப்பட்டன, 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

போக்குவரத்து ஸ்தலங்கள்.—ஸிஸிலியிலுள்ள அட்ரானோ (Adrano), ரன்டாஸோ (Randazzo).
ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).
ரயில்வே ஸ்தாபனங்கள்.—ரெஜியோடி கலாபிரியா (Reggio di Calabria).
விமான நிலயங்கள்.—தெற்கு இதாலி (Southern Italy).

ருஷ்யா (Russia).

(180 எதிரிவிமானங்கள் நாசமாக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata).
படகுகள் ஜப்பானிய நாசகாரிகள்.—நியூ பிரிடனிள் (New Britain) கடற்கரை.
விமான நிலயம்—நியூ கினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).
நியூ கினியிலுள்ள பூயின் பெஸ்ஸி (Buin Faisi) பிரதேசம்.
காஹிலி(Kahili)போகேய்ன்வில்லித் தீவுகள் (Bougainville)
எதிரிக் கப்பல்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

3—8—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானத் தாக்குதல்கள்—வடக்கு பிரான்ஸ் (Northern France), இங்கிலீஷ் கால்வாய் (English Channel).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ஸிஸிலியிலுள்ள அட்ரானோ (Adrano).
துறைமுகங்கள்.—மிலாஸ்ஸோ (Milazzo), மெஸ்ஸினா (Messina).
சிறிய கப்பல்.-கிரீஸின் (Greece) மேற்கு கரை.
ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—இதாலியிலுள்ள மாரினாடி கடான்ஸாரோ (Marina-di-Catanzaro), பாவோலோ (Paola).
ஸ்ப்மரீன் தளம்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).
ரயில்வேப் போக்குவரத்துக்கள்.—இதாலியிலுள்ள பட்டிபாக்ளியா (Battipaglia).
ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினா (Messina).

ருஷ்யா (Russia).

(148 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ராணுவ நிலயங்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள மனோக்வாரி (Manokwari).
படகுகள்.—நியூ பிரிடனிலுள்ள பார்ஜஸ் கடல் (Borges Bay).
துறைமுகங்கள்.—டெனிம்பார் தீவிலுள்ள லாரட் (Larat) தீவு.
ஸப்ளைக் துவியல்கள்.—நியூகினியிலுள்ள டாமோனியா (Daumonia) விற்குச் செல்லும் ரஸ்தாக்கள்.
பூசர்தி.—ஸாலமூவா (Salamaua).
எதிரி ஸ்தாபனங்கள்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகே (Bairoko) துறைமுகத்தின் இரு கரைகளிலும்.
ஜப்பானிய துருப்பு ஸ்தானங்கள்.—பர்மாவிலுள்ள காலிமியோ (Kalemyo).
பர்மாவிலுள்ள பாக் (Pauk).

4—8—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

ஒரு தகவலும் இல்லே,

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே.—ஸிஸிலியிலுள்ள தார்மினு (Taormina).
எதிரித் துருப்புகள் கப்பல்கள்.—மெஸ்ஸினு (Messina) விற்கருகில்.
விமான நிலயங்கள்.—தெற்கு இதாலி (Southern Italy).
சுரங்கவெடி அறுக்கும் கப்பல்கள்.—ஏஜியன் கடல் (Aegean).

ருஷ்யா (Russia).

(168 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியக் கடற்படை தளம்.—ஷார்ட்லாண்ட்ஸ் தீவுகள் (Shortland).
கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).
விமான நிலயங்கள் பக்கத்திலுள்ள கிராமங்கள்.—ஸெலாருத்தீவு (Selaru).
விமான நிலயங்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), கிளஸ்டர் முனே (Cape Gloucester).
அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள மாலெய்க் (Mawlaik), காலிமியோ (Kalemyo).

5—8—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லே,

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தாப் போக்குவரத்துக்கள்.—ஸிஸிலியிலுள்ள பிராங்கா வில்லா, (Francavilla), அட்ராஞே (Adrano).
மின்சார ஸ்தாபனங்கள்.—ஸார்டீனியா (Sardinia).
எதிரிக் கப்பல்கள்.—கிரீஸின் (Greece) மேற்கு கரை.

ருஷ்யா (Russia).

(114 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.
ஜெர்மன் சைனியங்கள்.—ஓரல் (Orel), மேற்கில் பின்வாங்கும் சைனியங்கள்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—பர்மாவிலுள்ள காஸ்மாடா (Gasmata).
ஜப்பானியச் சைனியங்கள்.—பர்மாவிலுள்ள ஸலாமூவாவிற்கருகில்.

6—8—43 (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—நீராவி யந்திரங்கள், இதர ரயில்வே இலக்குகள்-வடக்கு பிரான்ஸ் (Northern-France).

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தாப் போக்குவரத்துகள்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸிஞ (Messina), ஜெஸ்ஸோ (Gesso), பட்ஜஸ்ஸோ (Badjazzo).
எதிரிக் கப்பல்கள்.—ஸிஸிலியன் கால்வாய் (Sicilian Channel).
கப்பற் கட்டுந்துறைகள், ரயில்வே போக்குவரத்துக்கள்.—இதாலியிலுள்ள நேபிள்ஸ் (Naples).
துருப்புகள், புகைவண்டிகள்.—மெஸ்ஸிஞ (Messina)விற்கருகில்.
வேவு பார்த்தல்.—தெற்கு இதாலி(Southern-Italy),

ருஷ்யா (Russia).

(80 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வே ஜங்ஷன்கள்.—லெனின்கிராட்டில் உள்ள காரக்கோவ் (Kharkov), பிரையான்ஸக் (Bryansk).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி சைட்டிலிருந்த கிராமங்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள கியோக் (Keauk).
எதிரிப் படகுகள் தங்கியிருக்குமிடங்கள்.—நியூ கினியிலுள்ள பாஸ்ட்ரம் (Bostrem).
குடா, படகுகள்.—வாட் குடா (Wafd Bay) விலிருந்து பிரடெரிக்கால் (Friedrich Karl) துறைமுகம் வரையில், ரெகடா கடல் (Rekata Bay), பன்ஸன் (Bunsen)முனை.
விமானச் சண்டைகள்.—பூயின் பெய்ஸி (Buin-Faisi). (7 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
ஸப்ளைக் குவியல்கள்.—ரெகடாபே(Rekata-Bay).
கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab)பிரதேசம்.

7—8—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல், இரவு.—ஒரு தகவலும் இல்லை.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல்கள்.—மெஸ்ஸிஞ (Messina) ஜலஸந்தி.
விமான நிலயம்.—குரோடோன் (Crotone).
ரஸ்தா, ரயில்வேப் பாலங்கள்.—மாரிஞ டி கடான்ஸாரோ (Marina di Catanzaro).
வேவு பார்த்தல்.—தெற்கு இதாலி(Southern-Italy).
தொழிற்சாலைகள், ரயில்வே ஸ்டேஷன், இதர தொழிற்சாலை, ராணுவ லக்ஷியங்கள்.—இதாலியிலுள்ள மிலான் (Milan), டூரின் (Turin), ஜினேவா (Genoa).

ருஷ்யா (Russia).

(125 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.
ரயில்வே ஸ்டேஷன்கள்.—காரச்சேவ் (Karachev), லியூபோடின் (Lyubotin), மோர்பா (Morefa), ஆஸ்னேவா (Osnova).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய துருப்பினர், 2 நாசகாரிகள்.—ஸாலமன்ஸிலுள்ள வெல்லா குடா(Vella Gulf). (எல்லாம் மூழ்கடிக்கப்பட்டன).
நியூ ஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகோ (Bairoko) துறைமுகம்.
ஜப்பானியச் சைனியங்கள்.—அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
பர்மாவிலுள்ள மாங்டா (Maungdaw).
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).
ரயில்ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள யவாட்டாங் (Ywataung).

8—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy), மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தா, ரயில்வேப் பாலங்கள்.—இதாலியிலுள்ள கடான்ஸரோ (Catanzaro), அங்கிடாரோ (Angitoro), டிராய்னி (Troine).

நீராவி யந்திரங்கள்.—தெற்கு இதாலி (Southern Italy).
போக்குவரத்து ஸ்தலங்கள்.—ரென்டாஸோ (Randazzo).
வண்டிகள் கார்கள்.—ஸிஸிலி (Sicily).
கப்பல்கள்.—ஸிஸிலியன் கரை (Sicilan-coast).
படகுகள், துருப்புகள்.—மெஸ்ஸினு (Messina) துறைமுகம்.

ருஷ்யா (Russia).

(80 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

விமானச்சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.
ரயில்வே டிரேயின்கள், லாரிகள்.—பார்வென் கோவோ (Barvenkovo), கிராஸ்னோகிராட் (Krasnograd), கூஸாரேவல்க (Gusarovka), லோஸேவொயா (Lo-Zovaya).

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—கொலம்பங்காராத் தீவிலுள்ள விலா (Vila).
ஜப்பானியக் கப்பல்கள்.—ஸாலமன்ஸ் (Solomons), பிரதேசம்.
ஜப்பானியச் சைனியங்கள்.—நியூகினியிலுள்ள ஸாலமூவா (Salamaua), பின்ஷாபன் (Finschhafen).
தாஸி டாம் (பர்மா).
ரஸ்தா லக்ஷியங்கள்.—பாகான் (Poukhan), ஆங்தா (Aungtha), பாதைகள்.—பர்மாவிலுள்ள சாமனு (Samon)க்கும், தாபிடாங் (Thabyedaung)கும் மத்தியில்.
துணைக்காவலோடு கூடிய மோட்டார் படகுகள்.—ஹான்ஸா (Hanza).

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

3—8—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.—நியூகினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).

4—8—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—ஓரல் (Orel).

தூரக்கிழக்கு (Far East).

வுட்லார்க் தீவு(Woodlark)ப்பிரதேசம்.

5—8—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain),
ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசச் சைனியங்கள்.—ரென்டோவா (Rendova) தீவு, (12 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன, 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை.)

6—8—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—குபான் (Kuban) பாலம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

7—8—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

பிரிடனில் எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

நேசதேசக் கப்பல்கள்.—அராபூரா கடல் (Arafura Sea).

8—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ருஷ்யச் சைனியங்கள்.—குபான் (Kuban) பாலம்.

தூரக்கிழக்கு (Far East).

ரென்டோவாத்தீவு (Rendova).

9—8—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

சொற்பமான எதிரி விமான நடவடிக்கை.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

யுத்தக் குறிப்புகள்.

சாஞ்சல்யம்? "யுத்தம் நடைபெற்று வரும்" என்று படோக்ளியோ சொல்லுகிறான். நேசநாடுகளும் "நாங்களும் யுத்தத்தை நடத்துகிறோம்" என்று பதில் சொல்லிவிட்டார்கள். படோக்ளியோவின் முடிவு சாஞ்சல்யமா, துரோகமா அல்லது முட்டாள்தனமாவென்று இப்பொழுது சொல்லமுடியாது. இதாலியர்கள் சமாதானம் வேண்டுமென்று சொல்லும்பொழுதும், ஆபிரிக்கா யுத்தத்திற்குப் பின் தோல்வியுற்று அடிபட்ட சேனையையும், குறைவுபட்ட கடற்படையையும் சாதகமாகக் கொண்டு தேசத்தைக் காப்பாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும்பொழுதும், ஸிஸிலியில் ஸெடான் யுத்தத்தைப்போல் முறியடிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கும்பொழுதும் யுத்தத்தை நடத்துவதென்று படோக்ளியோ முடிவு செய்துவிட்டான். மாஸ்கோ யுத்தத்துக்குப்பின் நெபோலியன் செய்ததுபோல அவன் இதாலியிலுள்ள சகலவிதமான ஆட்களையும் கட்டாயப்படுத்தி இதாலிய சேனையைத் திரட்டவேண்டும். ஜெர்மனி இதாலிக்கு உதவியனுப்பவில்லை. ஜெர்மனி ஒரு பெரிய ராணுவ வல்லரசு என்ற தோற்றமும் போய் விட்டது. அதன் யுத்த தந்திரங்கள் இகழ்ச்சியடைந்துவிட்டன. அதற்கு அபஜயங்கள் உண்டாகிவிட்டன. இதாலியர்களும், தேசாபிமானத்திற்காகச் சண்டைபோடவோ அல்லது ஜெர்மானியர்களுக்காக உயிர் துறக்கவோ தயாராகவில்லை. படோக்ளியோ எவ்வளவு காலம் யுத்தத்தை நடத்தக்கூடும், அல்லது அவனுடைய பிடிவாதம் எவ்வளவு காலம் நீடிக்கக்கூடும்.

வி வி வி வி வி

ஜனங்களின் கோரிக்கை. இதாலியிலுள்ள சர்வ கக்ஷிகளின் பிரதிநிதிகளும் தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் மிகவும் நெருக்கடியான நிலைமையை படோக்ளியோவுக்கு எடுத்துக்காட்டி "யுத்தப்போக்கின் நிலைமையை உத்தேசித்தும், இதாலிய மக்களின் பெரும்பாலோருடைய விருப்பத்துக்கிணங்கவும் உடன் காலத்திலேயே அவன் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்றும் வற்புறுத்துகிறார்கள். மிலானிலுள்ளவர்கள் "சமாதானம் ஏற்படவேண்டும், எங்களுக்கு வேலை வேண்டும். ஜெர்மானியர்கள் இதாலியை விட்டகலவேண்டும்" என்று கூக்குரல் போடுகிறார்கள்.

வி வி வி வி வி

பொழுதுபோக்கு. நேசதேசத்தாரின் பொறுமை அளவுகடந்துவிட்டது. இதாலிய நகரங்களின்பேரில் வெடிகுண்டு போடும் முறைகள் துவங்கிவிட்டன. இதாலி தீப்பற்றி எறியும்பொழுது படோக்ளியோ பொழுது போக்குகிறான். காலஹரணம் செய்வதற்காக படோக்ளியோ தாமதிக்கலாம். ஆனால் நேச நாடுகள் ஒவ்வொரு நிமிஷத்திலும், அநேக பொதுமக்களைக் காப்பாற்றிவிடுவார்கள். இவ்விதமாகவே படோக்ளியோ நடந்துவந்தால் முஸோலினியின் கதிதான் அவனுக்கும் ஏற்படும். அதிருஷ்டவசமாக அவன் பிழைத்திருந்தால், இதாலி தீக்கிரையாகி சுடுகாடாகயிருக்கிறதை அவன் காணக்கூடும்.

வி வி வி வி வி

அதைரியமும், முட்டாள்தனமும். முஸோலினியைத் துரத்திவிட்டு, அதிகாரத்துக்கு வர படோக்ளியோவுக்கு சக்தியிருந்தபோதிலும் ஜெர்மானியர்களை அப்புறப்படுத்த அவனுக்கு தத்வமில்லையென்று தோன்றுகிறது. அப்படியிருந்தால் அவன் தாமதிப்பதற்கு முகாந்திரமே கிடையாது. முட்டாள்தனமே ஒழிய வேறில்லை. அவன் சரணாகதியடைந்து, ஜெர்மனிக்கு இதாலிக்குள் புதுந்துவிடும்படியாக அவகாசம் கொடுக்காமலிருந்திருந்தால் எல்லாம் இனிது முடிவடைந்திருக்கும். இதாலிக்கு கௌரவமான சமாதானமும் கிடைத்திருக்கும். நேசநாடுகள் தாராள மனப்பான்மையுடன் வெகு காலம் பொருத்திருந்தார்கள். பொறுமைக்கும் எல்லையுண்டு. கிரான்போர்ன் பிரபு சொல்லுகிறபடி சந்தேகிக்கக்கூடிய நடவடிக்கையுள்ள படோக்ளியோவின் அரசாங்கத்துடன் சமாதான ஷரத்துக்களை பேரம்பண்ண நேசநாடுகள் காத்துக்கொண்டிருந்தால் அதிலிருந்து ஜெர்மனிக்குத்தான் சாதகம் உண்டாகும். இதாலியர்களுக்கு நல்லறிவு வரும்வரையில் இதாலி தீக்கிரையாகவேண்டியதுதான். படோக்ளியோ அதிகாரத்திலிருக்கும்பொழுதே ஜெர்மானியர்கள் தூத்திக்கொள்ளவேண்டும். நேசநாடுகள் அளித்திருந்த அவகாசத்துக்குள் ஜெர்மானியர் இதாலியில் தங்கள் ஸ்தானத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டுவிட்டார்கள். அவர்கள் பால்கன் நாடுகளிலுள்ள இதாலிய விமானப்படையை ஸ்வீகரித்து, அவைகளில் தங்களுடைய அடையாளங்களைப் போட்டுவிட்டார்கள்.

பேரம்? இதாலி இழந்த சாம்ராஜ்யத்தில் ஏதாவது மீதப் படுத்தலாமென்று படோக்ளியோ இன்னமும் நம்பிக்கை கொண்டிருக்கிறான். தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளுவதற்காக அவன் இவ்விதம் செய்கிறான்போலும். அப்படியானால் இதாலிய மக்களுடையவும், நேச தேசத்தார்களுடையவும் கோபத்தை அறிந்துகொள்ளவில்லையென்று புலப்படுகிறது. இதாலியர்கள் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமென்கிறார்கள். நேசநாடுகள் நிபந்தனை யற்ற சரணாகதி செய்யவேண்டுமென்கிறார்கள்.

இதாலியில் ஜெர்மானியர்களிருக்கிறார்களென்ற ஊக்கத்துடன் படோக்ளியோ இன்னும் பேரம் செய்துவருவானாகில் இதைவிட முட்டாள்தனம் கிடையாது. நிலைமையை அவன் கேவலமாகத்தான் செய்துவிட முடியும். ஜெர்மானியர் தங்களுடைய பிடிப்பை பலப்படுத்து வார்கள். நேசதேசத்தார்கள் தங்களுடைய முற்றுகையை விரிவுபடுத்துவார்கள்.

வி வி வி வி வி

புதிர். படோக்ளியோவின் கொள்கை யாதெனில் "பாஸிஸம் போய்விட்டபின் நேசநாடுகள் இதாலியுடன் ஏன் போர் தொடுக்கவேண்டும்" என்பது. இந்த அனுவாதத்தினால் நேசநாடுகளையும், அச்சு நாடுகளையும் ஆச்வாசப்படுத்திவிடலாமென்று அவன் எதிர்பார்க்கிறான். "உன்னுடன் சேர்ந்து யுத்தம் செய்கிறோம்" என்று ஜெர்மானியரிடமும் "நாங்கள் பாஸிஸ்டுகளல்ல" வென்று நேசதேசத்தாரிடமும் சொல்லிவிட அவன் பிரயத்னம் செய்கிறான்.

இது ஜேனஸ் என்னும் தேவதையைப்போல இருவகைப்பட்ட தோற்றமுள்ளது. இதாலிக்கு க்ஷேமமுண்டாகவேண்டுமானால் இந்த தேவதையின் ஆராதனையை அது விட்டு விடவேண்டும். இதாலி யுத்தம் செய்யாமலிருந்தாலும், நேசநாடுகளுக்கு ஆபத்துண்டாக்கக் கூடியதுதான். இதாலி நடுநிலைமை வகித்தாலும் நேசதேசத்தார்களுக்கு ஆபிரிக்காவிலும், மத்தியதரைக்கடலிலும் கிடைத்த வெற்றிகள் நிஷ்பிரயோஜனமாகிவிடும். ஏனென்றால், நடுநிலைமை வகிக்கும் இதாலியானது ஜெர்மனிக்கு தெற்குப் பக்கத்திலுள்ள ஒரு பெரிய அரணாக ஆகிவிடும். இது உதவாது. ஜெர்மனிக்குச் சாதகமாக இதாலி நடந்துகொள்ளக் கூடாது. ஜெர்மனிதான் உண்மையான விரோதி. ஜெர்மனியின் உறவை படோக்ளியோ ரத்து செய்யாதவரையில் அவன் நேசதேசங்களுக்கு உண்மையாக உதவி செய்தவனாக மாட்டான். ஆகையால் சமாதான முறையில் அரைகுறையான நிலைமை ஏற்படக்கூடாது.

வி வி வி வி வி

ஸிஸிலி யுத்தம். ஸிஸிலி யுத்தத்தின் இறுதி கட்டம் வந்துவிட்டது. நேச நாடுகள் ஸிஸிலியை பலமாகத் தாக்கி அழித்து வருகிறார்கள்.

கோரமான யுத்தத்துக்குப்பின் கடானியா வீழ்ச்சிபெற்றது. அதற்குமுன் நேசதேசத் தாரின் நடவடிக்கைகள் மெதுவாக நடைபெற்றன. மனிதர்களைக் காவு கொடுக்கக்கூடா தென்பதும், காலநிலை சரியாகயில்லாததும், இறுதித் தாக்குதலுக்காக உபரிப் படைகளை திரட்டுவதும்தான் ஆலஸ்யத்திற்கு காரணங்கள். கடானியா, பாடர்னோ, அட்ரானோ, ட்ராயினாவின் வீழ்ச்சிக்குப்பின் நேசநாடுகளின் முன்னேற்ற வேகம் அதிகரித்துவிட்டது. அச்சுநாட்டுப் படைகளின் வரிசைகள் பிளவுபட்டுவிட்டன. துருப்புகளுக்கு உற்சாகம் குறைந்துவிட்டது. இப்பொழுது துருப்புகள் 45 மைல்கள் பரப்பில்தான் நிலைபெற்றிருக் கின்றன. அட்ரானோவின் வீழ்ச்சியிலிருந்து மெஸ்ஸினாவுக்குப் போகும் போக்குவரவு மார்க்கம் துண்டிக்கப்பட்டுவிட்டது. 1,25,000 அச்சுத் துருப்புகள் கைதியாகிவிட்டார்கள். மெஸ்ஸினா ஜலசந்தியை நமது வெடி விமானங்கள் இடைவிடாது நொருக்கி வருகின்றன. எதிரி நெப்ராடி மலைக் குன்றுகளின் அடிவாரத்தில் நிலைநின்று எதிர்க்கலாம். ஆனால் நிலைமை கேவலமாகிவிட்டது.

வி வி வி வி வி

மற்றொரு கேப் பானா? மற்றொரு கேப்பான் நடவடிக்கை உண்டாகும்போலிருக் கிறது. ஸ்தல அமைப்பிலும், தற்காப்பு முறை களிலும், முக்கியமாக கதவுப் பொறிகளிலும், தரைச் சுரங்க வெடிகளிலும், ஸிஸிலியின் வடக்கு முனை யுத்தத்தை கேப்பான் முனை யுத்தத்துக்கு சமமாகச் சொல்லலாம். ஒரு வித்தியாசமிருக்கிறது. எட்னா மலையைச்சுற்றி பிறை வடிவமான ஒரு தற்காப்பு அரண் இங்கிருக்கிறது. சமீபத்திலுள்ள இதாலியின் அடிபாகத்திலுள்ள உபரிப் படைகளும், விமானப்படையும் ஸிஸிலிக்கு வந்துசேர எதிரிக்கு இங்கு சௌகரியமிருக்கிறது.

ருஷ்யப் போர்முனை. குர்ஸ்கில் ருஷ்யர் வசமிருந்த உப்பல் ஸ்தலத்தைப் பிடிக்க ஜெர்மனி செய்த முயற்சி வீணானதும், ருஷ்யர்கள் ஓரலேயும், பெயலோகிராட்டையும் கைப்பற்றிக்கொண்டதும் ஜெர்மானியர்களுக்கு மூன்று தோல்விகளாகும். ஓரலே ஜெர்மானியர்கள் இரண்டு வருஷங்களாக ரக்ஷித்துவந்தார்கள். குர்ஸ்க், வோ, வாரனேஷ், மாஸ்கோ முதலிய இடங்களைத் தாக்க இது கேந்திர ஸ்தானமென்று சொல்லப்பட்டது. வேனிர் காலம் ஆரம்பமானபொழுது ஜெர்மானியர்கள் குர்ஸ்க்கைத் தாக்கினார்கள். நிலைமை மாறுதலடைந்துவிட்டது. ஜெர்மனி இப்பொழுது ருஷ்யாவினால் வேட்டையாடப்படுகிறது. ருஷ்யர்கள் ஓரலேத் தாக்கினார்கள். ஓரலே எப்பாடு பட்டும் ரக்ஷித்துவிடவேண்டுமென்று ஹிட்லர் துருப்புகளுக்கு உத்தரவிட்டான். தற்காப்பு முரட்டுத்தனமாக இருந்தபோதிலும் ருஷ்யத் தாக்குதல் அதைவிட வலுவாகயிருந்ததால் ஓரல் விழுந்துவிட்டது. இரண்டாவது ஸ்டாலின்கிராட் நிகழ்ச்சி இங்கு ஏற்படாவிட்டாலும் ஸ்டாலின்கிராட் போருக்குப்பின் இதுதான் முதல்தரமான ருஷ்ய வெற்றி. நேசநாடுகளுக்கும் இது மகத்தான ஜயம். இதிலிருந்து ஹிட்லருக்கு மனித பலம் குறைவுபட்டுவிட்டதென்றும் புலப்பட்டுவிட்டது. ஓரல் யுத்தம் அநேக வாரங்கள் நடைபெற்றதால் ஹிட்லரிடம் பல ஆதிக்கமிருந்தால் அவன் உதவிப்படைகளைக் கொண்டுவந்திருக்கக்கூடும். இதுதான் ருஷ்யாவின் வேனிர்கால முன்னேற்ற யுத்தத்தின் முதலங்கம்.

பயலோகிராட் விழுந்துவிட்டதால் இரண்டாவது அங்கமும் முடிவடைந்துவிட்டதென்று சொல்லலாம். அதன் பிறகு அடுத்தபடியாக பெயலோகிராட்டிலிருந்து புறப்பட்டு மூன்று பகுதிகளாக ருஷ்யச் சேனைகள் யூக்ரேனின் தலைநகரமான கார்காவுக்கு சமீபத்தில் வந்துவிட்டனர். கார்காவில் தீப்பற்றி எறிகிறது. ஜூலை 5 முதல், ஆகஸ்டு 5 வரையில் ஜெர்மனிக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1,20,000 மனிதர்கள் இறந்துவிட்டார்கள், 4,605 டாங்கிகளும், 1,623 பீரங்கிகளும், 11,000 லாரிகளும், 2,492 விமானங்களும் நஷ்டமாகிவிட்டன.

வி வி வி வி வி

அரண்ட நகரம். பெர்லினை அரட்டி கொண்ட நகரம் என்று சொல்லலாம். ஹாம்பர்க்கைப்போல் இங்கும் பலமான வெடி குண்டுவீச்சேற்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஹாம்பர்க்கிலிருந்து காயம்பட்டவர்களும், வீடில்லாதவர்களும் ஏராளமாக பெர்லினுக்கு வந்துகொண்டிருப்பதிலிருந்து பீதி அதிகரித்துவிட்டது. கோயபல்ஸ் ஒப்புக்கொண்டிருக்கிற பிரகாரம் பெர்லின் நகரத்தைக் காலி செய்துவருகிறார்கள். இரவு பகலாக கான்கள் வெட்டப்படுகின்றன. ஒலிகளைப் பலப்படுத்துகிறார்கள். விமான எதிர்ப்புப் படைகள் அதிகரிக்கப்படுகின்றன. வைத்தியசாலைகளைக் காலிசெய்து விமானத் தாக்குதல்களில் காயம்பட்டவர்களுக்கு வசதியளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

வி வி வி வி வி

ஊகம். பெர்லினைப் போலவே மற்ற அநேக நகரங்களும், காலி செய்யப்படுகின்றன. ஜெர்மன் தலைமை காரியாலயத்தில் ராணுவ விஷயங்களும், ராஜீய விஷயங்களும் விவாதிக்கப்படுகின்றன. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் பொதுஜன உத்தியோகஸ்தர்களின் சில அலுவல்களை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். நாஸிகளின் அமுலுக்குப்பின் ராணுவ யதேச்சாதிகாரம் நிலவுபெறுமென்ற ஹேஷ்யங்கள் தோன்றுகின்றன. நாஸி தத்வமும், அதன் தலைவரும் வீழ்ச்சிபெற்றுவிடுமென்று இப்பொழுது சொல்லுவது இயலாது.

வி வி வி வி வி

யுத்தம் செய்ய ஊக்கக் குறைவு. இதாலியர்களைப்போல ஜெர்மானியர்களுக்கும் யுத்தம் செய்வதில் உற்சாகம் குறைந்துவிட்டதென்றும் தோன்றுகிறது. முஸோலினியின் வீழ்ச்சியும், ஸிஸிலியின் நஷ்டமும், ருஷ்யாவில் சரமாரியான தோல்விகளும் ஜெர்மன் பொதுமக்களின் நம்பிக்கைக்கு பங்கம் விளைவித்துவிட்டன. கடைசிவரையில் யுத்தம் செய்யவேண்டுமென்று ஆக்ஞைபெற்ற வான் ஆர்ணிம், 2 லக்ஷம் சிறந்த துருப்புகளுடனும், மிலியன்கணக்கான வெடி மருந்துகளுடனும் சரணடைந்ததற்கு அவன் நம்பிக்கையையிழந்ததுதான் முக்கிய காரணம். பிளக்கமுடியாது என்று நினைத்த ஸிஸிலி சில வாரங்களுக்குள் விழுந்துவிட்டது. ஓரலிலும், பெயலோகிராட்டிலும் எதிர்த்து நிற்கமுடியாத ஜெர்மன் துருப்புகள் ஐரோப்பா எல்லைச் சரகம் பூராவையும் இப்பொழுது ரக்ஷிக்கவேண்டும்.

ராணுவச் சிதைவு. ராணுவ உயர்வு நிலைகுலைந்ததற்குக் காரணம் யாது. ஜெர்மானியரின் யுத்த தந்திரமான மின்னல் எதிர்ப்பு, டாங்கிகள் முதலில் செல்லுவது, அதற்குப் பின் காலாட்படை முன்னேறுவது என்பது ருஷ்யாவில் பலிக்கவில்லை. ருஷ்யாவின் புதிய யுத்த தந்திரமான முதலில் ஏராளமான பீரங்கிப் பிரயோகம், பிறகு காலாட்படை முன்னேறுவது என்பது வெற்றியளித்துவிட்டது. ஸிஸிலியின் வீழ்ச்சிக்கு இதாலியர்களின் சோம்பேரித்தனமும் ஜெர்மனியின் சேனாதிபத்தியக் குறைவும் ஒரு புறமும், மற்றொரு புறத்தில் நேசதேசத்தாரின் சிறந்த ஏற்பாடும், தலைவர்களின் புத்திசாலித்தனமும் காரணங்களாகும்.

வி வி வி வி வி

விமான யுத்தம். மற்றொரு முக்கியமான விஷயம் விமான யுத்தம். ஜெர்மன் யுத்த தந்திரத்தில் எண்ணெய் நிலைமைதான் பலஹீனமான பாகம். இந்த விஷயத்தில் போலஸ்தியை நமது விமானங்கள் தாக்கியதிலிருந்து ஜெர்மனிக்குப் பலமான நஷ்டமேற்பட்டிருக்கிறது. ஜெர்மனியின் இரண்டாவது முக்கிய நகரமான ஹாம்பர்க் அழிந்துவிட்டது.

பதினெட்டு மாதங்களுக்கு முன் வெடி விமானத் தாக்குதல்களின் விளைவுகள் அதிகமாக இல்லை. ஏனென்றால் வெடிகுண்டுகள் அதிகமாகப் போடப்படவில்லை. அவைகளிலிருந்து அதிக நாசமும் ஏற்படவில்லை. 1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28-ம் தேதி லூபெக்கை மூன்று மணி நேரங்கள் தாக்கி 340 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளைத்தான் வர்ஷித்தார்கள். இப்பொழுது நடைபெறும் தாக்குதல்கள் அதிக பளுவானவை. சமீப காலத்தில் நடைபெற்ற வெடி விமான வீச்சுகளை கவனிப்போம். 1942-ம் வருஷம் ஜூலை மாதம் 26-ம் தேதியன்று ஹாம்பர்க்கில் 50 நிமிஷம் நடந்த தாக்குதலில் 700 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளும், 1943-ம் வருஷம் மே மாதம் 12-ம் தேதியன்று டுயிஸ்பர்க்கில் 45 நிமிஷம் நடந்த தாக்குதலில் 1,500 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளும், 1943-ம் வருஷம் மே மாதம் 23-ம் தேதியன்று டார்ட்மண்டில் 60 நிமிஷத் தாக்குதலில் 2,000 டன் எடைமானமுள்ள குண்டுகளும், 1943-ம் வருஷம் ஜூலை மாதம் 24 முதல் 27 முடிய 72 மணி நேரத்தில் நடைபெற்ற ஆறு தாக்குதலில் 10,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளும் வீசப்பட்டன. இதுதான் ஒன்றுபட்டு இடைவிடாது தாக்குவது என்னும் யுத்த தந்திரம். ஒன்றுபட்டு தாக்குவதின் மூலம் எதிரியின் தற்காப்பு குலைந்துவிடுகிறது. தொடர்ச்சியாக குண்டுவீசும் முறையில் ஹாம்பர்க்கை ஜூலை 24-ம் தேதியன்று பிரிடிஷ் விமானப்படை இரவில் தாக்கிற்று. ஜூலை 25-ம் தேதியன்று அமெரிக்க விமானப்படை பகலில் தாக்கிற்று, ஜூலை 25-ம் தேதியன்று இரவில் பிரிடிஷ் விமானப்படை மறுபடியும் தாக்கிற்று, மறுபடியும் ஜூலை 26-ம் தேதி அமெரிக்க விமானங்களும், 27-ம் தேதியன்று பிரிடிஷ் விமானங்களும் குண்டுகளைப் பொழிந்தன. இவ்விதமாக இரவு பகலாக ஒன்றன்பின் ஒன்றாக பிரிடிஷ் அமெரிக்க விமானங்கள் ஒன்றுபட்டு குண்டுகளை வர்ஷித்ததிலிருந்து நமக்கு விசேஷமான பலன் கிடைத்திருக்கிறது.

இவ்விதமாக நேசதேச விமானத் தாக்குதலில் புதிய முறைகள் ஏற்பட்டிருப்பதைத் தடுக்க ஜெர்மனி புதிய தற்காப்பு முறையை அனுஷ்டித்துவருகிறது. வெடி விமானங்களைக் குறைத்து சண்டை விமானங்களை ஏராளமாக ஜெர்மனி கட்டிவருகிறது.

சென்ற பதினொன்று மாதங்களில் ஜெர்மனி பேரில் நடைபெற்ற விமான யுத்தங்களில் அமெரிக்கர்கள் மட்டும் 1,000-க்கு மேற்பட்ட ஜெர்மன் சண்டை விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள்.

மற்றொரு தற்காப்பு முறை—நகரங்களைக் காலி செய்வதும்—ஜெர்மானியரால் கையாளப்படுகிறது. இந்த முறையை ஜெர்மனி இதற்குமுன் ஹேளனம் செய்துவந்தது.

வி வி வி வி வி

'ஸ்வதந்திரம்.' ஆகஸ்டு 1-ம் தேதி முதல் பர்மாவுக்கு ஸ்வதந்திரமளித்துவிட்டோம் என்று ஜப்பான் சொல்லிவிட்டது. ஜப்பானின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஒலிப்பரப்பு நிலயங்கள் இந்த ஜப்பானிய மோசடியை பிரகடனம்செய்து வருகின்றன. ஆஸாத் ஹிந்து என்னும் ஒலிபரப்பு நிலயத்தில் பர்மா பர்மா ஜனங்களுக்கு என்ற கனவு உண்மையாகிவிட்டது என்று குதூகலமாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் படாவியாவிலுள்ள ஒலிபரப்பு நிலயம் அகஸ்மாத்தாக உண்மையை வெளியிட்டுவிட்டது. "பர்மாவின் தேச முன்னேற்றத்தின் அடிப்படையான திட்டமானது, ஜப்பானும், மஞ்சூரியாவும் பிரிவுபடாமலிருப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் நிர்வாக அமைப்புக்கு சமமானது.

"நிர்வாக அமைப்பு திட்டம்" என்பது என்ன, "மஞ்சூரியாவை துண்டாடக்கூடாது. இதுதான் ஜப்பான் ஆசியா கண்டத்தில் செய்திருக்கும் தேசமுன்னேற்ற முறை, இதற்கு ஷின்டொயிஸம் என்னும் கொள்கை அடிப்படையானது. இதன்படி சாம்ராஜ்யத்தின் உற்பத்திக்கு ஆதிகர்த்தா சூர்யதேவதை ஜனசமூக அமைப்பிலும், ஜப்பானியர்கள் ஜப்பானென்ற சாம்ராஜ்யத்தின் மக்களாவார்கள். இந்தக் காரணத்தினாலேயே மஞ்சூரியாவில் ஜப்பானியர்கள்தான் முக்யத்வம் வாய்ந்தவர்கள்" என்று புரொபெஸர் டோஷியோ டாமுரா சொல்லுகிறார்.

தெளிவுபடச் சொன்னால் ஜப்பானின் நிர்வாக திட்டப்படி, மஞ்சூரியா அதன் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுதான். இந்த அந்தஸ்துதான் பர்மாவுக்கும் இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பானியர்கள் அளிக்கும் ஸ்வதந்திரத்தைப்பற்றி மடாம் சியாங்கைஷேக் தெளிவாகவும், உருக்கமாகவும், வியாக்யானம் செய்திருக்கிறார். "உங்களை விடுதலை செய்வதற்காக வருகிறோம் என்று அவர்கள் சொல்லுவார்கள். ஆனால் அது பொய்" என்று அவர் சொன்னார்.

வி வி வி வி வி

தென்மேற்கு பசிபிக். முண்டா விழுந்துவிட்டது. இந்தப் பிராந்தியத்தில் ஜப்பானியரின் கடைசி விமானதளமாகிய கொலம்பாங்காரா தீவிலுள்ள விலாவை நாம் தாக்க ஆரம்பித்துவிட்டோம். ஜுலை, ஆகஸ்டுமாதங்களில் நேசதேசங்கள் தென்மேற்கு பஸிபிக்கில் முன்னேறித்தாக்கி வெற்றிபெற்றார்களென்பதை ஜப்பானியர்கள் என்றும் மறக்கமாட்டார்கள். ஜுலை மாதத்தில் நியூகினியாவில் லே, ஸலாமூவா என்னும் பிரதேசங்களுக்கு உதவிப்படைகளை அனுப்பும் பிரயத்னம் வீணாகிவிட்டது. முண்டாவை நேசதேசங்கள் பிடித்துவிட்டதிலிருந்து ஸலாமூவாவுக்குச் செல்லும் மார்க்கத்தில் நேசதேசஙகள் ஆதிக்கம் பெற்றுவிட்டார்கள். ஜாவாவிலிருந்து நியூபிரிடன் வரையிலுள்ள ஜப்பானிய தளங்களை நாம் பலமாகத்தாக்கிவருகிறோம். சமீபத்தில் வெல்லா வளைகுடாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒரு ஜப்பானிய சஞ்சாரிக் கப்பலும், இரண்டு நாசகாரிகளும் மூழ்கடிக்கப்பட்டன. இதிலிருந்து பஸிபிக் கடலில் நேசநாடுகளுக்கு கடலாதிக்கமேற்பட்டு விட்டதென்று வெளிப்படுகிறது. "யுத்த நிலைமை நெருக்கடியை அடைந்து வருகிறது. நமக்கு யுத்தத்தில் நெருக்கடியான சமயம் வந்துவிட்டது" என்று டோஜோ வெளியிடுவதற்கும் தகுந்த முகாந்திரமிருக்கிறது.

இருபக்கத்திலும் பலமான கஷ்டங்கள்.

(C. M. பிரான்ஸெரோ).

ஒடெஸி என்னும் புஸ்தகத்தில் ஸில்லா என்பது பயங்கரமான பிராணியென்றும் அதற்கு ஆறு தலைகளும், 12 கால்களுமுண்டென்றும் அதற்கு நாய்க்குட்டியின் குறல்போன்ற த்வனி உண்டென்றும் அது உயரமான பாரையிலுள்ள குகையில் வசித்து வருகிறதென்றும் தலைகளை வெளியே நீட்டி கப்பல்களில் போய்க்கொண்டிருக்கும் மாலுமிகளை விழுங்கிவிடுகிறதென்றும் ஹோமர் எழுதியிருக்கிறார். அங்கிருந்து அம்பு எய்யக்கூடிய மற்றொரு மலையில் சாரிப்டிஸ் என்னும் மற்றொரு பயங்கரமான பிராணி வசித்துவந்தது. அது நாளைக்கு மூன்று தடவை சமுத்திர ஜலத்தை உட்கொண்டு மூன்று தடவை வெளியே கக்கிவிடும்.

பிராசீனமான கதைகளுக்கு இயற்கையான தோற்றங்களிலிருந்துதான் ஆதாரம் ஏற்படுகிறது. இப்பொழுது ரெகியோகலாப்ரியாயிருக்கும் இதாலிய தீபகற்பத்தின் குதிகால் கட்டை விரலில் ஸில்லாயிருந்தது. மெஸ்ஸினா இருக்குமிடத்தில் சாரிப்டிஸ் இருந்தது. ஸில்லாவுக்கும், சாரிப்டிஸுக்கும் மத்தியில் அகப்பட்டுக்கொள்ளுவது என்று நாம் இப்பொழுது சொல்லிவரும் பிராசீனமான பழமொழியானது மெஸ்ஸினா ஜலசந்தியைத் தாண்டும்பொழுது ஏற்படும் அபாயத்தைக் குறிப்பிடுகிறது.

மெஸ்ஸினாவின் அழகான துறைமுகத்திலுள்ள கப்பற்துறையில் நின்றுகொண்டு கவனித்தால், நேபிள்ஸிலிருந்தும் ரோமிலிருந்தும் இதாலியின் மேற்குக் கரை ஓரமாகவும், மெடபாண்டோவிலிருந்து கிழக்குக் கரை ஓரமாகவும் ரயில்வண்டித்தொடர்களில் இதாலியின் அடிபாகத்துக்கு பிரயாணிகள் வருவதையும் அங்கிருந்து ஸிஸிலிக்குச் செல்லுவதற்காக

குறுகலான மார்க்கத்தில் தோணிப் படகுகளில் ஏறிச்செல்லுவதையும் பார்க்கலாம். ஜலசந்தியின் அகலமான பாகத்தில் பத்து மைல்கள் அகலமுள்ளது. குறுகலான பாகத்தில் இரண்டு மைல்கள் அகலமுள்ளது. ஆகிலும், தோணிகள் ரெக்கியாவிலிருந்து புறப்படுவதைவிட, அதற்கு வடக்கே எட்டு மைல்களுக்கப்பாலிலுள்ள வில்லா ஸான்கியோவன்னியிலிருந்துதான் புறப்படுகின்றன. இங்கிருந்து மெஸ்ஸினாவுக்கு ஐந்து மைல் தூரம்தானிருக்கிறது. 1908-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் ஏற்பட்ட பூகம்பத்தில் ரெக்கியோ பூராவும் அழிந்துவிட்டது. நகரத்தின் மத்தியிலுள்ள 40,000 ஜனங்கள் மாண்டுவிட்டார்கள்.

மெஸ்ஸினா.

ஜலசந்தியின் முக்கியமான பாகம் மெஸ்ஸினா என்னும் நகரம். இதில் 1,85,000 ஜனங்கள் வசித்துவருகிறார்கள். சாதாரணமான இதாலிய நகரங்களைவிட இதில் ஜனத்தொகை அதிகமானது. இதன் சரித்திரம் கி. மு. 800 வருஷங்களுக்குமுன் ஆரம்பமுள்ளது. அப்பொழுது கிரேக்க குடியேற்றக்காரர்கள் ஸாங்கிள் என்ற பெயரை மாற்றி மெஸ்ஸினா என்ற பெயரை வழங்கினார்கள்.

மெஸ்ஸினாவின் முக்கியத்துவம் அதன் துறைமுகத்தை ஒட்டி ஏற்பட்டிருக்கிறது. ஒரு உருண்டை வடிவமுள்ள அமைப்பு, வடக்குப் பக்கத்தில் மட்டும் திறந்தவாயுள்ளது. அரிவாள் வடிவமாக பூப் பிரதேசம் வளைவாக அமைந்திருக்கிறது. மெஸ்ஸானி என்ற பெயர் வழங்குவதற்கு முன் ஸாங்கிள் என்ற பெயரும் இதிலிருந்துதான் ஏற்பட்டது.

அற்புதமான தோற்றம்.

மெஸ்ஸினா துறைமுகமும், ஜலசந்தியும் சேர்ந்து பூகோள அமைப்பிலேயே மிகவும் அற்புதமான தோற்றமுள்ளதாகயிருக்கின்றன. வடக்கு முனையில் நீர்மட்டத்தை 300 அடி தாழ்த்தினால் பூசந்தி உண்டாகிவிடும். இதை ஆதாரமாகக்கொண்டு பூகோள சாஸ்திரிகள் இதாலியிலிருந்து ஸிஸிலி துண்டாகியது. கல் ஆயுதங்களை உபயோகித்த யுகத்துக்குப்பின் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ஜலசந்தியில் பாறைகளும், சுழல்காற்றுகளும் மிகுதியாகயிருந்ததால் இவ்விடத்தில் நடமாட மாலுமிகள் அச்சம்கொண்டார்கள். இதிலிருந்துதான் ஸில்லா, சாரிப்டிஸ் புராணமும் தோன்றிற்று. பலமாகக் காற்றடிக்கும் பொழுது நீரோட்டங்கள் அதிக சங்கடத்தை விளைவிக்கும். முக்கியமான நீரோட்டம் தெற்கேயிருந்து வடக்கே ஓடுகிறது. மற்றொரு நீரோட்டம் எதிர்த்துவருகிறது. நீரோட்டங்கள் ஆறு மணிகளுக்கொருதரம் மாறி மாறி ஓடுகின்றன. அவைகளின் கதிகள் சூரிய வெப்பத்தினாலும், சந்திரகாந்தியாலும், காற்றுகளாலும் பாதிக்கப்படுகின்றன. தெற்கிலிருந்து வடக்கு முகமாக நீரோட்டம் செல்லும்பொழுது ஜலசந்தியிலுள்ள நீர்மட்டத்தில் 6 முதல் 8 இஞ்சு வரையில் குறைவு ஏற்படுகிறது. நீரோட்டம் திரும்பி தெற்கு நோக்கி வரும்பொழுது நீர் மட்டம் அதே மாதிரி உயர்ந்து விடுகிறது. நீரோட்டம் அதிக வேகமாக உண்டாகும்பொழுது சமுத்திரத்தின் அடியிலுள்ள புல் பூண்டுகள் அகற்றப்பட்டு மேலே கிளம்பிவிடுகின்றன. கோரமான கண்களுள்ள மீன்களும் ஏராளமாக மிதந்து வருகின்றன. புயல் காற்றடிக்கும் இராக் காலங்களில் பளபளப்பான கண்களுள்ள மீன்கள் ஏராளமாகக் கிளம்பிவிடுவதால் ஜலசந்தியில் பயங்கரமான தோற்றம் காணப்படுகிறது.

இதாலியர்களைக் கை விட்டுவிட்டு, ஸிஸிலியிலிருந்து துருப்புகளை ஜெர்மானியர்கள் இந்தக் குறுகலான மிகவும் அபாயகரமான ஜலசந்தி வழியாகத்தான் கொண்டுபோக வேண்டும். அப்பொழுது நேசதேச வெடிவிமானங்கள் ஏராளமான வெடிகுண்டுகளை வர்ஷிக்கக்கூடும். அப்பொழுதுதான் ஹோமர் வர்ணித்த ஸில்லா, சாரிப்டிஸ் என்ற பயங்கரமான பிராணிகளின் கதைகள் ஜெர்மானியர்களுக்கு ஞாபகம்வரும்.

ஸிஸிலியிலும், இதாலியிலுமுள்ள அச்சு விமானப்படை.

(டெயிலி டெலகிராப்).

ஸிஸிலியிலிருந்த அச்சு விமானங்களெல்லாம் ஸிஸிலியை விட்டகன்றுவிட்டன. மெஸ்ஸினாவையும் அதன் பக்கத்திலுள்ள மிலாஸோவையும் தவிர மற்ற இடங்களில் ஜெர்மன் விமானதளம் கிடையாது. பாக்கியிருக்கும் 8 முக்கிய விமான தளங்களும், மற்ற சிறிய 19 தளங்களும் சிலது நேசதேசத்தினர் வசமாகிவிட்டன. சிலது பரிபாலிக்க முடியாதவை.

இதாலியின் குதிகால் பாகத்தில் மூன்று முக்கியமான விமான தளங்கள் தானிருக்கின்றன. ரெக்கியோ, ஸாங்கியோவானி, கோட்ரோன்—இன்ஸ்டெட் என்னுமிடத்தில் ஒரு முன்னணி தளமுமிருக்கிறது. இன்னும் இரண்டு சிறிய தளங்களுமிருக்கின்றன. இந்த தளங்களை நமது வெடி விமானங்கள் இரவு பகலாக நொருக்கிவருவதால் அவைகள் விமான நடமாட்டத்துக்கு உபயோகப்படாது.

ஜெர்மன் விமானப்படையும், இதாலிய விமானப்படையும் நேபிள்ஸிலும், ரோமிலும் மற்ற இடங்களிலுமுள்ள விமான தளங்களுக்குச் சென்றுவிட்டன. இதாலியிலுள்ள ஜெர்மன் விமானப்படையின் வலிமை பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. மொத்தம் 1,000 விமானங்கள், ஏறக்குறைய 500 சண்டை விமானங்கள். 250 இரண்டு எஞ்சின்களுள்ள வெடிவிமானங்கள், மற்றவைகள் கடற்கரை விமானங்கள், இதர ரகங்கள் இவைகள் பெரும்பாலும் மத்திய, வடக்கு இதாலியில் வைக்கப்பட்டிருக்கின்றன. சில விமானங்கள் கிரீட்டிலும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இன்னும் சில விமானங்கள் டோடிகானீஸ் தீவிலிருக்கின்றன. அங்கிருக்கும் விமானங்கள் நவீன முறையில் கட்டப்பட்டவைகள்.

சில நாட்களுக்கு முன்வரையில், இதாலியில் ஜெர்மனிக்கு உண்டான விமான நஷ்டத்தையும், விமானிகள் நஷ்டத்தையும் ஈடுசெய்து தங்களுடைய வலிமையை ஜெர்மானியர்கள் நிலைநாட்டி வந்தார்கள். இதாலிய விமானப்படையில் 1,500 விமானங்களிருக்கலாம். அவைகளில் ஒன்றுகூட உபயோகப்படக்கூடியதில்லை. பாதிக்குமேற்பட்டவைகள் சண்டை விமானங்கள். இவைகளெல்லாம் நேபிள்ஸிலும், ரோமிலும், பிரிண்டிஸியிலும்-டாரண்டோவிலும் வடக்கு பக்கத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. நேசதேச விமானங்களின் யந்திர உயர்வினாலும், சங்கியையினாலும் அவைகள் ஜனங்களுக்கு உண்டுபண்ணும் மன உறுதியினாலும், நேசநாடுகளுக்கு இதாலியிலும், ஸிஸிலியிலும் விமான ஆதிக்கம் ஏற்பட்டிருக்கிறது. F. W. 190, மாக்கி M. C. 202 என்ற அச்சுநாட்டாரின் சண்டை விமானங்கள், நாம் சமீபத்தில் கட்டியிருக்கும் ஸ்பிட்பையர் விமானங்களுடன் ஒப்பிட முடியாது. ஹாலிபாக்ஸ், லங்காஸ்டர், ஸ்டர்லிங், அமெரிக்க பறக்கும் கோட்டைகள் இவைகளுடன் ஒப்பிட்டால் ஜெர்மன் டார்னியர் 272, ஸவாய் 84 வெடி விமானங்கள் அல்பமானவைகள்.

ஸிஸிலியிலிருக்கும், அச்சுப்படைகளுக்கு விமான மூலமாக பகலிலோ, இரவிலோ ஏராளமான ஒத்தாசை செய்வதென்பது கஷ்டசாத்தியமானது. ஸிஸிலித் தீவு முழுவதும் நேசதேச விமான ஆதிகத்துக்குக்குட்பட்டிருப்பதால் துருப்பேற்றிச்செல்லும் எதிரி விமானங்கள் ஏராளமாக தைரியமாக நடமாடமுடியாது. இரவில் குறிப்பிட்ட சில விமானங்கள்தான் நடமாடக்கூடும். இவைகளையும் நமது விமானங்கள் வழி மறித்துத் தாக்கக்கூடும். இதாலியர்கள் முறியடிக்கப்பட்டால், நேசநாடுகள் இதாலிய தளங்களை உபயோகிக்கக் கூடுமென்றும், அப்பொழுது ஜெர்மன் விமானப்படை இதாலிய நகரங்களை வெடிகுண்டுகளால் தாக்குமென்றும் ஜெர்மனி பிரசாரம் செய்து வருகிறது. ஆகிலும் இந்த வெருட்டலைப் பயன்படும்படியாகச் செய்வதற்கு ஜெர்மனிக்கு இயலாதென்று சொல்லவேண்டும். இதாலியைக் காப்பாற்றிவிட நேசநாடுகளில் பலம் பொருந்திய சண்டை விமானங்கள் ஏராளமாகயிருக்கின்றன. இதைவிட ருஷ்யப் போர் முனையிலிருந்து ஜெர்மானியர்கள் அதிக சிலாக்கியமில்லாத வெடி விமானங்களை இங்கு கொண்டுவர முடியாது.

இதாலியையும், ஜெர்மானியர்கள் காலிசெய்து விடுவார்கள்.

(லெப்டினன்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

நற்செய்திகளைக் கேட்டு சந்தோஷப்படுவதற்கு ஞாயமிருக்கிறது. ஆகிலும், அதிலிருந்து உண்டாகும் விளைவுகளை மட்டும் அதிகமாக மதித்துவிடக்கூடாது.

இதாலியின் அதோகதிக்கு மூல புருஷனான முஸோலினி மறைந்துவிட்டான். அதன் விளைவுகள் ஏராளமானவை. ஒரு தேசத்தின் மனப்பான்மை மாறுதலடைந்து விட்டதென்பதை இது அறிமுகப்படுத்துகிறது. இதின் படிப்பினையாதெனில், இந்த மாற்றமடைந்த மனப்பான்மை, வெறும் பேச்சினால் உண்டாக்கப்படவில்லை. நமது பலமான தாக்குதல்களினால்தான் ஏற்பட்டதென்று நாம் அறியவேண்டும்.

ஐரோப்பாவிலுள்ள அச்சுநாடுகளின் பிரச்னைகள் பெர்லினில் ஆலோசிக்கப்படுமேயல்லாது ரோமில் தீர்மானிக்கப்படாது என்று எனக்குப் புலப்படுகிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள், நிலைகுலைந்துவரும் இதாலிக்கு உதவி பலத்தை அனுப்பித்து அவனுக்கு ஒத்தாசை செய்வதா, அல்லது அவன் எக்கேடு கெட்டுப்போகட்டுமென்று விட்டுவிடுவதா என்று இப்பொழுது தீர்மானிக்கவேண்டும். அவர்கள் ஏற்கனவே தீர்மானம் செய்திருந்தாலுமிருக்கலாம்.

இவ்விருவகைப்பட்ட முடிவுகளின் லாப நஷ்டங்களை நாம் ஆராய்ச்சி செய்வோம். முதலில் சொல்லப்பட்ட முடிவின் காரிய காரணங்களை கவனிக்குமுன், ஜெர்மன் ராணுவ அதிகாரிகளில் கருமத்தில் கண்ணுள்ளவர்களும் தேர்ச்சி பெற்றவர்களும் ஜெர்மனியின் பலாபலத்தை மதித்துப்பார்த்திருக்கக்கூடுமென்பது நிச்சயம். இவ்விஷயத்தில் அவர்கள் ஏமாற்றமடைந்திருப்பார்களென்பதும் நிச்சயம். லெனின்கிராட்டிலிருந்தும், குபான் தீபகற்பத்திலிருந்தும் துருப்புகளையும், விமானங்களையும் கொண்டுபோவது சாவதானமில்லை என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். பிரான்ஸிலிருந்தும் துருப்புகளை வேறு இடத்துக்கு அனுப்ப முடியாது. ஸிஸிலியை ஈசன்ஹவர் பிடித்தபின் மறுபடியும் தாக்குதல் ஆரம்பிக்கும் வரையிலும் இது நடைபெறாது. ஐரோப்பிய மேற்கு அரணில் வெகுநாட்களாக வைக்கப்பட்டிருக்கும் சிறந்த துருப்புகளை, பிரிடிஷ், அமெரிக்க விமானப்படைகள் ஹாம்பர்க், ரூர் முதலிய பிரதேசங்களை வெடி குண்டுகளால் நொருக்கி வரும்பொழுதும், பால்கன் நாடுகளிலிருந்து இனிமேல் ஒன்றும் கொள்ளையிட முடியாதென்று தெரிந்த பிறகும், வேறு இடங்களுக்கு அனுப்புவது பொருத்தமில்லாத காரியமாகும். இவ்விதமாக முடிவுசெய்துவிட்டால் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இதாலிக்கு உதவிப்படைகளை அனுப்பும் யோஜனையைப் புரக்கணித்து விடுவார்கள். இவ்விதம் அவர்கள் சொல்லுவதற்குத் தகுந்த முகாந்திரமிருக்கிறதென்றும், அவர்கள் ஆறுதல் செய்து கொள்ளலாம். ஜெர்மானியரின் மனோதிடத்தைவிட இதாலிய ஸோல்ஜரின் மனோதிடம் மட்டமானதென்றும் இதாலிய ஸோல்ஜருடன் நின்று ஜெர்மானிய ஸோல்ஜர் போர் புரிவது பிரயோஜனமற்றதென்றும் அவர்கள் சொல்லக்கூடும். ஆகையால் தங்களிடம் போதுமான உதவிப்படைகள் இல்லையென்றும், உண்மையான காரணத்தை மறைத்து இவ்விதமாக அவர்கள் புகல் சொல்லிவிடலாம்.

ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் இரண்டாவதாகச் சொன்ன முடிவைத்தான் செய்திருக்க வேண்டுமென்றும், அதை வெகு சீக்கிரமாக காரியாம்சையில் நடத்திக்காட்டிவிடுவார்களென்றும் எனக்குத் தோன்றுகிறது. இதாலியிலிருந்து எல்லா ஜெர்மானியர்களும் திடீரென்று ஓடி விடுவார்களென்று நான் சொல்லவில்லை. பலமான சண்டைபோட்டுக்கொண்டே திட்டப்படி பின்வாங்கும் முறையைத்தான் அவர்கள் கையாளப்போகிறார்கள். இனிமேல் அவசியமில்லாத நிர்வாக கோஷ்டியார்கள் முதலில் தாயகம் திரும்பிவிடுவார்கள். கடைசியில்தான் வடக்கேயுள்ள ஜெர்மன் துருப்புகள் பின்வாங்கும். ஜெர்மன் துருப்புகள் திட்டப்படி பின்வாங்குவதைத் தடுக்கும் முறையில் தெற்கேயுள்ள இதாலியர்கள் ஏதாவது நடவடிக்கை ஆரம்பித்தால் புதிய அரசாங்கத்துக்கு அவமதிப்பு உண்டாகும்படி பதில் நடவடிக்கைகளை ஜெர்மன் சேனைகள் ஆரம்பித்துவிடும். இந்த முற்போக்கான யோசனையின் உண்மையோ அல்லது அபத்தமோ இன்னும் சில நாட்களுக்குள் வெளிவந்துவிடும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அச்சுநாட்டுக் கட்டடத்தின் முகப்பில் பலமான வெடிப்பு உண்டாகிவிட்டதென்பது ஸ்பஷ்டமானது.

ஜார்ஜ் கிராஸ் என்ற பதக்கம்பெற்ற மால்டா நகர மக்களுக்கு ஒரு செய்தி.

(பி. பி. ஸி. ஒலிபரப்பில் லெப்டினண்ட் ஜெனரல் ஸர் வில்லியம் டோபி ஜீ. ஸி. எம். ஜி., கே. ஸி. பி., டி. எஸ். ஓ. பேசியது).

முன்பு உங்கள் முன் பேசியதின் பிறகு அநேக விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன. நம் நிலைமையில், மத்தியதரைக்கடலிலும் இன்னும் பூரா உலகத்திலும், பெரிதும் ஆச்சரியகரமானதுமான பல சாதகமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. நம் சாம்ராஜ்யத்தில் இந்நடவடிக்கைகளால் நன்மை அடைந்த நாடு மால்டாவைத் தவிர வேறுஇல்லை என்பது சொல்லுவது உண்மைதான் என்று நான் நினைக்கிறேன். அந்த விஷயத்தில் நான் பெரிதும் மகிழ்வெய்துகிறேன்.

சென்ற 12 மாதங்களில், மால்டாவின் மக்கள் எவ்வித வாழ்க்கை நடத்தினார்கள் என்பதைப் பற்றி நான் அடிக்கடி நினைத்துப் பார்ப்பதுண்டு. சென்ற வருஷம் இதே காலங்களில் நான் மால்டாவில் இருந்தபொழுது மால்டாவின் நிலை எவ்வாறு இருந்தது என்பது எனக்கு நன்றாய் நினைவிலுள்ளது. அந்த சமயத்தில் மால்டா பயங்கரமானதும், நீண்டதுமான ஒரு இக்கட்டில் அகப்பட்டிருந்தது. மால்டாவின் கோட்டைகளின்மேல் ஜெர்மன் விமானப் படை செய்துவந்த நீடித்த பெரும் பயங்கரமான தாக்குதல்களை, அவைகளை அனுபவித்து கஷ்டப்பட்டவர்கள் மறக்க முடியாது. அதுவேபோல, மால்டாவின் சைனியங்கள் எதிரியின்மேல் ஏற்படுத்திய பெரும் நஷ்டங்களையும் எதிரிகள் மறக்கமுடியாது.

இது ஒரு இக்கட்டாக இருப்பினும், லாபத்தோடுதான் இருந்தது. மால்டாவிலிருந்து செய்து வந்த தாக்குதல்களை எதிரிகள் நிறுத்திவிடவேண்டுமென்று முயற்சித்தனர் அதில் அவர்கள் தோல்வியுற்றனர். இதனால் எகிப்து, லிபியா, டூனிஸ் ஆகிய இடங்களில் கிடைத்த வெற்றிகளுக்கு இவர்கள் செய்த தாக்குதல் பெரும் உதவியாயிருந்திருக்கிறது என்று தெரிகிறது.

மேலும், மால்டாவின் மக்கள் அடைந்து வந்த இக்கட்டுகள், நமக்கு வேறொரு காரணத்திலும் மிகவும் முக்கியத்வம் உடையதாயிருக்கிறது. ஜெர்மன் படைகளை ஸிஸிலிக்குக் கொண்டு வரவேண்டியதிலும் அப்படைக்கு ஏற்பட்ட அதிகமான நஷ்டத்தினாலும், விமானப்படையின் மூல பலத்திற்கு குறைவு ஏற்படுத்தியிருக்கிறது. ஜெர்மன் விமான பலத்தை ருஷ்யாவின்மேல் படையெடுப்பதற்கு மிகவும் அவசியமான இச்சமயத்தில் அந்த விமான பலத்தை ஜெர்மனி இழந்து வருகிறது. இவ்விதமாக மால்டா அடைந்துவந்த இக்கட்டுகள் ஆபிரிக்காவில் எட்டாம் படைக்கு உதவியாயிருந்ததன்னியில் ருஷ்ய மக்களுக்கு பேருதவியாயுமிருந்தது.

அந்த பயங்கரமான காலத்தை நினைத்துப் பார்க்குங்கால், மால்டாவானது கஷ்டங்கள், அடைந்தும் அதன் நேசர்களுக்கு மிகவும் உதவியாயிருக்கிறது. நேரான முறையில் நேசக்கட்சிகளுக்கு பேருதவி யளித்துமிருக்கிறது.

ஆனால், உண்மையில் மால்டா அடைந்த இக்கட்டுகள் எல்லாம் விமானங்களிலிருந்து எதிரிகள் எறிந்த குண்டுகளால் மட்டுமல்லாமல் வேறுகாரணங்களாலும்தான். உணவுப் பொருள்களிலும், இன்னும் இதர தேவைகளிலும் சிக்கனமாயிருக்கவேண்டியிருந்ததாலும், கணக்குக்கு மேலில்லாமலும் வைத்திருக்கவேண்டியிருந்ததாலும்கூட மால்டா இந்த இக்கட்டுகளை யடைந்தது. இதனை மால்டாவே ஒப்புக்கொண்டது. மால்டாவிற்கு வேண்டிய தேவைகளைக் கொண்டுவர வேண்டுமென்றால் ராயல் கடற்படையை உபயோகிக்க வேண்டியிருக்குமென்றும், ஆனால் கடற்படைக்கு நஷ்டங்கள் ஏற்படும் என்றும் மால்டாவிலுள்ள மக்களுக்குத் தெரியும். ஆகையால் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் பொருத்துக்கொண்டு இருப்பது என்றும், கடற்படைக்கு இந்த வேலையையும் கொடுத்து அவர்களின் வேலையை அதிகப்படுத்துவதில்லை என்றும் தீர்மானித்துவிட்டார்கள். இத்தனை கஷ்டங்களையும் அவர்கள் அடைந்தார்கள் என்பதை பிரிடனில் உள்ளயாவரும் உணர்ந்தார்களென்று நான் மால்டாவின் மக்களுக்கு உறுதியாய்ச் சொல்லுகிறேன். அவர்களுக்கு ஏற்பட்ட பெரும் கஷ்டங்களையெல்லாம் அவர்கள் சமாளித்து, அவர்களின் உணர்ச்சி பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள ஒவ்வொருவராலும், ஏன் இவ்வுலகிலுள்ள எல்லோராலும் போற்றத்தக்கதாயிருக்கிறது. அவ்வுணர்ச்சி நம் நேசக்கட்சிகளுக்கு பேருதவியளித்திருக்கிறது என்று சொல்லுவதில் நான் சிறிதும் பின்வாங்கமாட்டேன்.

நமக்கு எதிரியாய் இதாலி யுத்தத்தில் ஈடுபட்ட காலம்முதல் மால்டாவிலுள்ள மக்கள் தான் இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட கஷ்டங்களையெல்லாம் பொறுமையுடன் சமாளித்துக் கொண்டிருந்தவர்கள். யுத்த ஆரம்பகாலத்தில் நம் தற்காப்புகள் பலமற்றதன்மையோடிருந்தும், தைரியத்தை கலைக்க வேண்டுமென்று செய்யப்பட்ட எதிரியின் நீடித்த விமானத் தாக்குதல்கள் மக்களின் ஸப்ளைகளின் குறைவினால் ஏற்பட்ட கஷ்டங்கள் ஆகிய இவைகளால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை, தைரியமாயும், தீர்மானமாயும் சமாளித்து வந்தவர்கள் மால்டாவின் மக்களேயாகும். அதன் பயனாலும், நம்மவர்பால் இருந்த கடவுளின் கிருபையாலும் மால்டா இன்றையதினம் பிரிடிஷார் கையில் இருந்துகொண்டு, இன்னும் என்ன செய்யச் சொன்னாலும் அதனைச் செய்யத் தயாராயிருக்கிறது.

ஒவ்வொருவரும் இதன் அனுபவத்தினால் ஒரு பாடம் கற்றுக்கொள்ளுகிறார்கள். துன்பப்படும்போதும், இக்கட்டடையும்போதும் தான் அநேகமாய் நாம் ஒரு பாடம் கற்றுக்கொள்ளுகிறோம். அதுவேபோல் இப்பொழுது மால்டாவிலிருந்து ஒரு பாடங்கற்றுக்கொள்ளவேண்டும். முந்தி நடந்தவைகளை நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அப்போது பட்ட கஷ்டங்களிற்குப் பதிலாக நாம் பெரும் பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். அதற்கு நாம் ஈடு

கொடுக்க வேண்டுமென்றால், நாம் அவர்கள் பட்ட கஷ்டங்களையும், அதனை அவர்கள் சமாளித்ததையும், நாம் நினைத்துக்கொண்டு இனி வருங்காலத்திலும் நாம் அவர்களைப்போல் இருக்கவேண்டும். அவைகளில் 3 வித அறிவுரைகள் முக்கியமாய்த் தென்படுகின்றது. அவைகள் பின்வருவனவாகும்:—

முதலாவது, தைரியமாயும், திடமாயும் ஒவ்வொரு மக்களும் இருக்கவேண்டுவது மிகவும் அவசியமாகும். நமக்குக் கிடைக்கும் யுத்த தளவாடங்களாலும், மூலப்பொருள்களாலும் மட்டும் நாம் ஜயம் பெறுவது கஷ்டம். அத்துடன் நாம் எல்லோரும் தைரியமாயும், திடமாயும் நமக்கு ஏற்படும் கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டிய உணர்ச்சியிருக்கவேண்டும். எனவே, நாம் நம் வாழ்க்கையில் திடமான உணர்ச்சியை உண்டாக்கிக்கொண்டு இனி வருங்காலத்தில் ஏற்படப்போகும் துன்பங்களை, தைரியமாயும், திடமான எண்ணத்தோடும் எதிர்த்து நிற்கவேண்டும்.

இரண்டாவதாக, ஒரு நாட்டிற்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும், அபாயத்தையும் சமாளிக்கவேண்டுமென்றால் எல்லா மக்களும் ஒன்றுபட்டு இருப்பது மிகவும் அத்யாவசியமாகும். எல்லா மக்களும் ஒன்றுபடுதல் என்றால் மன உணர்ச்சியோடு ஒன்றுபடுவதாகும். பயங்கரங்களையும் இன்னும் நமக்கு ஏற்படவிருக்கும் துன்பங்களையும், சமாளிக்க அத்தகைய ஒற்றுமை நமக்கு முழுதும்வேண்டும். நாம் எடுத்துக்கொண்டிருக்கும் காரியத்தில் வெற்றி பெறவேண்டியிருப்பதால் சுயநலம் கருதுதல், தனித்தனியே ஒவ்வொருவரிடத்திலோ, அல்லது ஒவ்வொரு தனித்தனி வகுப்பினரிடமோ இருப்பின் அதனை நாம் அறவே அறுத்தெரியவேண்டும். "தனக்கெனவாழாமை அவசியம்" என்பதை ஒவ்வொருவரும் அறிந்து பொதுக்காரியத்தில் வெற்றிபெற பாடுபடவேண்டும்.

மூன்றவதாக, நினைத்துப் பார்க்கின், மால்டாவைக் காத்துக்கொள்ளவேண்டி பாடுபட்ட மக்களின் தேசபக்தியையும், தைரியத்தையும் நாம் நன்குணருகிறோம். இவைகள் எல்லாவற்றையும்விட நமக்கு இருக்கும் கடவுளின் பற்றையும், அவரின் உதவியையும், நாம் உணர்ந்து அவருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம். முன்பு நாம் அடைந்த ஜயத்திற்கெல்லாம், நமக்கு கடவுளின் அனுக்ரகம் இருந்தது போல, இனியும் நாம் கடவுளின் உதவியால்தான் வெற்றி பெறுவோம் என்றும் நாம் உணரவேண்டும். கடவுள் நமக்கு அளிக்கும் உதவியை தனியாகவோ, கூட்டாகவோ தடுக்கமுடியாது.

முடிவாக என் சொந்தக் குறிப்புடன் நான் என் பேச்சை முடிக்கிறேன். என் குமாரியாகிய லேடி டோபியும், நானும், சதா நினைத்துக்கொண்டிருப்பதும், எங்கு நாங்கள் சந்தோஷமாக இரண்டு வருஷங்கள் கழித்தோமே, அந்த மால்டாவின் மக்களுக்கு எங்களது மனமார்ந்த வாழ்த்தை அனுப்புகிறோம்.

சமீபகாலத்தில் நடைபெற்ற வெடி விமானத் தாக்குதலின் சில அம்சங்கள்.

வெடி விமானங்களின் நஷ்டம் குறைவானது.

(டைம்ஸ்.)

ஜூலை மாதம் கடைசி வாரத்தில் கால நிலையில் சௌகரிய மேற்பட்டதால் அடைபட்டிருந்த பிரிடிஷ் வெடி விமானங்கள் ஜெர்மனியின் மர்மஸ்தானங்களை இரவு பகலாகத் தாக்க ஆரம்பித்தன.

கிழக்குப் பக்கத்தில் ருஷ்யா முன்னேறுகிறது. தெற்குப் பக்கத்தில் இதாலி தடுமாற்றமடைந்துவிட்டது. இதுவரையிலில்லாதபடி சதாகாலமும் ஜெர்மனியை நமது விமானங்கள் தவிடுபொடி செய்து வருகின்றன. மகத்தான, முடிவான நடவடிக்கை செய்வதற்கு இந்த மூன்று அம்சங்களும் சாதகமளிக்கின்றன. பிரிடிஷ் விமானப்படை எதிரியின் யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளை நொருக்கி வருகின்றது, அமெரிக்க விமானிகள் ஜெர்மனியின் யுத்த விமானப்படையைத் தாக்கி அழித்து வருகிறார்கள். இந்தப் படை அழிந்துவிட்டால் ஜெர்மனி ஆகாயத்திலிருந்து யுத்தம் செய்யாதபடி நாம் கவிழ்த்துவிடலாம். அதன் மூலம் தரைமார்க்கமாக நாம் முடிவான தாக்குதல் செய்வதற்கு சாதக மேற்படக்கூடும்.

சமீபத்தில் நடைபெற்ற விமானத் தாக்குதல்களிலிருந்து இரண்டு முக்கியமான அம்சங்கள் புலப்படுகின்றன. முதலாவது, மிகவும் பலமான தாக்குதல்கள் இரவில் நடைபெற்ற பொழுதுகூட நமது வெடி விமானங்களுக்குக் குறைவான நஷ்டம் தான் ஏற்பட்டது. இரண்டாவது, பலமான எதிர்ப்புயிருந்த போதிலும் அமெரிக்க பறக்கும் கோட்டை வெடி விமானங்கள் எதிரியின் நாடுகளில் வெகுதூரம் வெற்றிகரமாக ஊடுருவிச் சென்றிருக்கின்றன. இரவில் ஒரு பிரதேசத்தை வெடி குண்டுகளால் தாக்கவேண்டுமானால் ஏராளமான விமானங்கள் வெகு சீக்கிரமாக ஒரு தனிப்பட்ட லக்ஷியத்தைக் தாக்கவேண்டுமென்பதும் ஒவ்வொரு விமானமும் தனிப்பட்ட முறையில் சென்று குண்டுகளை வர்ஷிக்கவேண்டுமென்பதும் அவசியமாகும். அதுபோல பகல் காலத்தில் குறிதப்பாமல், சிறிய லக்ஷியத்தை அடிக்கவேண்டுமானால் ஒரு லக்ஷியத்தைத் தாக்குவதற்கு 100 வெடி விமானங்கள் செல்ல வேண்டும். அவைகள் ஒன்று பட்டு ஏகமனதாகத் தாக்கி லக்ஷியத்தைத் தரை மட்டமாக்கிவிட வேண்டும்.

ஹாம்பர்க்கில் நடைபெற்ற தாக்குதல்களில் ஒவ்வொரு தடவைகளிலும் 4,500 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளுக்கு மேலாகவே போட்டிருக்கலாம். ஏராளமான உயர்தர வெடி குண்டுகளை மட்டும் விமானங்களில் ஏற்றியும் எரிவெடிகளையோ அல்லது இதர தீப்பற்றிக் கொள்ளும் மருந்துகளையோ ஏற்றிச் செல்லாமலுமிருந்திருந்தால், இது சாத்தியமாகயிருந்திருக்கும். ஆகிலும், பெரிய தொழிற்சாலைகளுள்ள லக்ஷியங்களைத் தாக்குவதில் உயர்தர வெடி குண்டுகளும், எரிவெடிகளும் சேர்ந்துதான் நமக்கு பலனளிக்கக்கூடும். சிறிய லக்ஷியங்களை உபயோகமுள்ள வகையில் தாக்கவேண்டுமானால் உயர்தரமான வெடி குண்டுகளைத் தான் உபயோகிக்கவேண்டும்.

நாம் விமர்சனம் செய்யும் வாரத்தில் இரவில் தாக்குதல் செய்த விமானங்களுக்கு நஷ்டம் குறைவாக யேற்பட்டிருந்தபோதிலும் எதிரியின் தற்காப்பு முறைகளின் சோர்வினால் அது ஏற்படவில்லை. ஜூலை மாதம் 24-ம் தேதியன்று முதல் தடவை ஹாம்பர்க்கைத் தாக்கிய பொழுது அங்கிருந்த விமான எதிர்ப்பு பீரங்கிகள் ஹாம்பர்க்கிலிருந்து ரூருக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இந்தச் சலன பீரங்கிகளை மறுபடியும் துரிதமாக ஹாம்பர்க்குக்குக் கொண்டு வந்தார்கள். விமானத் தாக்குதல் வெகு சீக்கிரமாக முடிவடைந்து விட்டதால் பீரங்கிகள் குறிதப்பாமல் அடிக்க முடியவில்லை.

ஆகிலும், வெடி விமானங்களின் சாமீப்யத்தைக் கண்டுபிடிப்பதற்காக ஜெர்மன் சண்டை விமானங்கள் ஏராளமாக ரேடியோ லொகேடர் கருவிகளை உபயோகப்படுத்திவருகின்றன.

ஜெர்மனியை வெடி விமானங்கள் பகலில் தாக்கிய பொழுது கருப்பு வர்ணம் பூசப்பட்ட இரவு ஜெர்மன் சண்டை விமானங்கள் ஏராளமாக எதிர்த்தன. பகலில் வெகுதூரம் நமது விமானங்கள் செல்லக் கூடுமென்று ஜெர்மனி எதிர் பார்க்கவில்லை. ஆகையால் காஸ்ஸல் போன்ற லக்ஷியங்களைத் தற்காப்பு செய்வதற்கு ஜெர்மனி ஏராளமான பகல் சண்டை விமானங்களை வைத்திருக்கவில்லை. இரவில் நடைபெறும் விமானத் தாக்குதல் போலவே பகலிலும் பலமான விமானத் தாக்குதல் செய்யக்கூடுமென்று அமெரிக்கர்கள் ருஜுச் செய்து விட்டார்கள். மிகவும் பலமான தாக்குதல் செய்வதற்குப் போதுமான வெடி விமானப் படை மட்டும் அவசியமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வெடி விமானத் தாக்குதல் செய்ய சாதகமான காலநிலை இன்னும் ஒன்று அல்லது இரண்டு மாதம் கிடைத்துவிட்டால் மற்ற போர்முனைகளுக்கு உதவியளிக்கும் முறையில் பிரிடனிலிருந்து விமானங்கள் புறப்பட்டு இரவிலும், பகலிலும் ஜெர்மனியைத் தாக்கி விசேஷ லாபங்களை சம்பாதித்துவிடும். ஜெர்மனி யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யமுடியாமல் தடுப்பதுடன், ஜெர்மனிக்குக் கூடிய சீக்கிரம் அழிவு ஏற்படும் படியான நிலைமையையும் உண்டு பண்ணிவிடும்.

படையெடுப்புக்கு சாதகமான படிப்பினைகள்.

சாமான்களை ஏற்றிச்செல்லுவதற்கு யூ படகுகள் லாயக்கில்லை.

(A. J. மாக்வின்னி).

ஸிஸிலிய நடவடிக்கையிலிருந்து வரப்போகும் படையெடுப்பு திட்டங்களுக்கு மூன்று உயர்தரமான படிப்பினைகள் புலப்படுகின்றன.

(1) கடற்கரைகளையும், கடற்கரையோரமாகயுள்ள சமுத்திரங்களையும் சுரங்கவெடிகள் மூலம் தற்காப்பு செய்யும் முறைகளை அச்சுநாட்டு யுத்த சாஸ்திர நிபுணர்கள் சிறந்த முறையில் கண்டுபிடிக்க முடியவில்லை.

(2) நன்ருக ரக்ஷிக்கப்பட்டு கடல் மார்க்கமாக வரும் படையெடுப்பு சேனைகளை யூ படகுகள் தடுக்கமுடியாது.

(3) சென்ற சில வருஷங்களாக யுத்தக்கப்பல்களின் மேன்மையை சிலர் சந்தேகத்துடன் மதித்தபோதிலும், கடல்மூலம் மகத்தான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு யுத்தக் கப்பல்தான் சிறந்தவையென்பது.

அச்சுநாடுகளின் சுரங்க வெடிகள் பலமுள்ளதாகவும், யூ பட்குகள் முன்னணியில் நின்று படையெடுக்கும் சேனைகளை இறங்கவொட்டாமல் தடுக்க சக்தியுள்ளதாகவும் இருந்திருந்தால் ஸிஸிலியப் படையெடுப்பின் வரலாறு வேறுவிதமாக வரையப்பட்டிருக்கும்.

இதாலியக் கடற்படை யுத்தம் செய்ய முன் வந்தால் அவைகளைத்தாக்க பிரிடிஷ் யுத்தக் கப்பல்கள் தயாராகயிருந்தன. இதாலியர்கள் இதைத் தெளிவுபட அறியும்படி நாம் செய்தோம். முதலில் கடானியாவை நமது பீரங்கிகள் நொருக்கின. பிறகு இதாலியக் கடற்கரைக்கு சமீபத்திலுள்ள பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படையின் பலம் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவேயிருக்கிறதென்ற அறிவும் எதிரிக்கு உண்டாகிற்று.

அநேக வருஷங்களாக பிரிடனிலுள்ள அநேகர்கள் யுத்தக் கப்பல்களின் மேன்மைகாலம் போய்விட்டதென்றும், 10 மிலியன் பவுன் செலவிட்டுக் கட்டப்படும் யுத்தக் கப்பல்களுக்கு விமானபலம் உலைவைத்து விட்டதென்றும் சொல்லிவந்தார்கள். ஆகிலும், பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும் யுத்தக் கப்பல்களின் பேரில் பூர்ணமான நம்பிக்கையுண்டு. இப்பொழுதிருக்கும் ரகங்களைவிடப் பெரிதும், அதிக சக்தி வாய்ந்ததுமான புதிய யுத்தக் கப்பல்களை அவ்விரு நாடுகளும் கட்டிவருவதிலிருந்து இந்த விஷயம் நன்கு புலப்படுகிறது.

யுத்தத்தில் வெற்றிபெறுவதற்கு அச்சுநாடுகள் யூ படகுகளைத்தான் பூராவாக நம்பியிருக்கிருர்கள். இந்த நம்பிக்கை வரவரக் குறைந்து வருகிறது.

நேசதேசத்தாரின் கடல் முற்றுகையை அகற்றும் விஷயத்தில் யூ படகுகள்தான் சிறந்தவையென்று ஜெர்மானியர் வெளியிட முயன்றுவருவதைப் பார்த்தால் ஜெர்மானியர்களுக்கு ஒரே ஒரு குறிப்பான மார்க்கத்தில்தான் யோசனை தோன்றுமென்று ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

ஜெர்மானியரின் உத்தரவு பிரகாரம் பெரிய இதாலிய நீர்மூழ்கிகளிலுள்ள ஆயுத சாதனங்களை அகற்றிவிட்டு அவைகள் ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் சாமான்கள் கொண்டு போவதற்காக சமுத்திர மட்டத்துக்குக் கீழே போக்குவரவுக்கு உபயோகப்படுத்தப் படுகின்றனவென்று வாஷிங்டனிலிருந்து தகவல் வந்திருக்கிறது. கடல் முற்றுகையிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதற்காக யூ படகுகள் உபயோகிக்கக் கூடுமென்று நான் முன்கூடிச் சொல்லியிருக்கிறேன். ஆகிலும், இந்த ஏற்பாடானது நிரந்தரமாகவும் திருப்திகரமாகவும் நடைபெறுமென்று நான் நம்பவில்லை.

இது புதிய திட்டமல்ல. சென்ற யுத்தத்திலும் ட்யூச்லாந்து, பிரெமன், மற்ற நான்கு நீர்மூழ்கிகளும் ஜெர்மன் கடற்படையில் சேர்ந்து சாமான்கள் ஏற்றிச்செல்லும் வேலையிலீடுபட்டன. ட்யூச்லாந்தில் சாயமும், தபால்களும், விலையுயர்ந்த கற்களும் அமெரிக்கா யுத்தத்திலீடுபடுவதற்குமுன் 1916-ம் வருஷத்தில் பால்டிமோருக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவ்விதமாக இரண்டு தடவைதான் அந்த நீர்மூழ்கி சென்றது. பிரெமன் நார்பக்குக்கும், வர்ஜினியாவுக்கும் புறப்பட்டது. ஆனல் அவ்விடங்களுக்குப் போய்ச் சேரவில்லை. மற்ற நான்கு நீர்மூழ்கிகளைப் பற்றிய தகவலே கிடையாது.

இந்த யுத்தத்தில் மத்தியதரைக்கடலில் பிரிடனுக்கு மிகவும் நெருக்கடியான சமயம் ஏற்பட்டபொழுது மால்டாவில் கஷ்டப்பட்டிகொண்டிருக்கும் ஜனங்களுக்கு உதவிசெய்ய நீர்மூழ்கிகள் நீர்மட்டத்துக்கு கீழே சாமான்களை இட்டுக்கொண்டுபோயின. அந்த சாமான்களில் மால்டாவிலுள்ள குழந்தைகளுக்கு அனுப்பப்பட்ட பால் பொட்டிகளும் ஒன்று. மத்தியதரைக்கடலில் பாதிவழி மட்டும் பிரயாணம் செய்வதற்கும் உலகத்தில் ஒரு பாதிவழி செல்லுவதற்கும் மகத்தான வித்தியாசமுண்டு.

ஒரு நாட்டிற்கு அத்தியாவசியமான சாமான்களையும், ஐரோப்பாவுக்கும், ஜப்பானுக்கும் உள்ள கடிதப் போக்குவரத்துகளையும் யூபடகு முக்கியமாக எடுத்துச் செல்லவேண்டும். இது பிரசாரத்துக்கு அனுகூலமாகயிருக்குமேயல்லாது, பொருளாதார முறையில் உபயோகப் படகூடியதென்று எனக்குத் தோனறவில்லை.

ஒவ்வொரு வருஷமும், ஜப்பானிய நாடுகளிலிருந்து ஜெர்மனிக்குக் குறைந்த பக்ஷம் 1,80,000 டன்கள் எடைமானமுள்ள ரப்பர் தேவையாயிருக்கும். மிகப்பெரிய யூ படகில் 200 டன்கள் எடைமானத்துக்குமேல் சாமான்களை அனுப்பமுடியுமாவென்பது சந்தேகம். ஒரு வருஷத்தில் இரண்டு தடவைக்குமேல் யூ படகு பிரயாணம் செய்யக்கூடுமாவென்பதும் சந்தேகம். ஆகையால் ஒரு வருஷத்தில் ஒரு யூ படகு 400 டன்கள் எடைமானமுள்ள சாமான்களைத்தான் கொண்டுபோக முடியும். ஒரு சிறிய மரக்கலத்தில்கூட இதைவிட அதிகமான சாமான்களை ஏற்றிச்செல்லலாம்.

சாமான்கள் போக்குவரவுக்கு நீர்மூழ்கிகளை உபயோகப்படுத்தவேண்டுமென்று ஜெர்மனி எண்ணங்கொண்டதிலிருந்து, கடலில் நேசதேசத்தாரின் முற்றுகை பலமானதென்றும், ஐரோப்பாவிலிருந்து கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் தனிப்பட்ட கப்பல்களும் மிகுதியான அபாயத்துக்குள்ளாகவேண்டுமென்றும் ஜெர்மனி அறிந்துவிட்டதென்பதற்கு அத்தாக்ஷி ஏற்படுகிறது.

இவ்விதமாக கடல் முற்றுகையைத்தாண்டிச் செல்லுவதற்காக யூ படகுகளைத் திருத்தி அமைத்துவந்தால் விருத்தியடைந்துவரும் நேசதேசநாட்டுக் கப்பல்களைத் தாக்கும் யூ படகுகளின் சங்கியை ஒவ்வொன்றாகக் குறைந்துவிடும்.

ஜெர்மனியின் எண்ணெய் நிலைமை : உண்மையும், மதிப்புரையும்.

(டெய்லி ஹெரால்ட் பத்திரிகை).

போலஸ்தியிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகளை வெடிவிமானங்கள் தாக்கியபின் அச்சுநாடுகளின் எண்ணெய் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய அவசியமேற்பட்டு விட்டது.

இது விஷயமாக சென்ற நான்கு வருஷங்களில் அநேகம் எழுதப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் அபத்தமென்று இப்பொழுது வெளியாகிவிட்டது.

இந்த விஷயத்தில் வர்த்தமான நடப்புகளை மட்டும் பொருட்படுத்தினால் மட்டும் போதுமானதல்ல. நாம் மதிப்புத்தான் போடமுடியும். அந்த மதிப்பும் மிலியன்கள் கணக்கான டன்கள் வரையில் வித்தியாசப்படக்கூடும். ஆகிலும், சில அம்சங்களை நாம் ஆக்ஷேபிக்க முடியாது.

எண்ணெய்க் கிணறுகளைவிட எண்ணெய் சுத்திசெய்யும் நிலயங்களை எளிதில் நொருக்கி விடலாம். கிணறுகளிலிருந்து கொண்டுவரப்படும் தாவர பெட்ரோலை சுத்திகரித்துத்தான் எவரும் உபயோகப்படுத்தக்கூடும். ருமேனியாவில் எண்ணெய் சுத்தி செய்யும் ஆலைகள் 30 இருக்கின்றன. இவற்றில் சரிபாதி போலஸ்தியிலிருக்கிறது. இவைகள் முக்கிய மானவைகள். எண்ணெயில் 80 சதவிகிதம் இங்கிருந்துதான் அனுப்பப்படுகிறது.

போலஸ்திக்கு வடமேற்கில் 30 மைலுக்கப்பால் காம்பினா என்னுமிடத்தில் மற்றொரு சுத்திசெய்யும் ஆலையிருக்கிறது. ருமேனியாவிலுள்ள சுத்திகரிக்கும் ஆலைகளெல்லாம் மும்முரமாக வேலை செய்தாலும் ஒரு வருஷத்தில் 11 மிலியன்கள் எடைமானமுள்ள எண்ணெயைத்தான் சுத்தி செய்யக்கூடும். இது அந்த நாட்டில் உற்பத்தியாகும் எண்ணெய்க்கு இரட்டிப்பு மடங்கானது. நமக்கு பயன்படும்படி செய்யவேண்டுமானால் எண்ணெய் சுத்திசெய்யும் ஆலைகளில் அநேகத்தை நாம் அழித்துவிடவேண்டும்.

மேலும் ருமேனியாவின் எண்ணெய் உற்பத்தி வருஷா வருஷம் குறைந்து வருகிறது. பிரிடிஷ், அமெரிக்க நிபுணர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள். இப்பொழுது கெட்டிக்காரர்களான ருமேனிய, ஜெர்மன் எண்ணெய் இஞ்ஜினியர்கள் ஸ்வல்பமாகத்தானிருக்கிறார்கள். ஆழமாகக் குடைந்து செல்லுவதற்கு முக்கியமான முஸ்தீப்புகள் அமெரிக்காவில்தான் இப்பொழுது உபயோகப்படுத்தப்படுகின்றன. போதுமான, சேர்மான எஃகு கிடைக்காததால் ருமேனியாவின் அகாதமான கிணறுகளில் துவாரம் போடக்கூடிய ஆயுதங்களையும் திருப்திகரமாக வேலைசெய்வதற்குத் தேவையான கனமான குழாய்களையும் ஐரோப்பியர் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ய முடியவில்லை.

ருமேனியாவின் எண்ணெய் உயர்தரமான எண்ணெயையும் விமானங்களுக்கு உபயோகப்படக்கூடிய திராவகத்தையும் உண்டுபண்ண லாயக்கில்லாதது. ஆகிலும் ருமேனியாதான் இப்பொழுது அச்சுநாடுகளுக்கு எண்ணெய் ஸப்ளை செய்யும் முக்கியமான நாடு. இதில் குறைவு ஏற்பட்டால் ஜெர்மனிக்குச் சங்கடம் ஏற்பட்டுவிடும். இதுதான் வர்த்தமான நடவடிக்கை.

இப்பொழுது மதிப்புப் போடுவோம். ஜெர்மனியும், அதைச்சேர்ந்த மற்ற நாடுகளும் யுத்தத்தை இடைவிடாது நடத்த வேண்டுமானால் ஒரு வருஷத்திற்கு 20 மிலியன் டன்கள் எடைமானமுள்ள பெட்ரோல்வேண்டும். மிகவும் சிக்கன முறையில் உபயோகித்தாலும் ஜெர்மனிக்கு 15 மிலியன் டன்கள் அவசியம் தேவையாகயிருக்கும். ருஷ்யப் போர்முனையில் மகத்தான முன்னேற்ற யுத்தம் நடைபெற வேண்டுமானால் ஒரு மாதத்திலேயே 15 அல்லது 20 லக்ஷம் டன்கள் எடைமானமுள்ள எண்ணெயை ஜெர்மனி உபயோகப்படுத்த வேண்டும். முன்னேற்ற யுத்தங்களுக்கு மத்திய காலத்தில் ஒரு மாதத்தில் 1 மிலியின் டன்கள் எண்ணெய் தேவைப்படும். ருமேனியாவிலிருந்து $5\frac{1}{2}$ மிலியனும், அல்பேனியாவிலிருந்து $2\frac{1}{2}$ மிலியினும், ஹங்கேரியிலிருந்து 235,000 டன்களும், போலந்திலிருந்து 130,000 டன்களும் இதர ஜெர்மனுதிக்கத்துட்பட்ட இடங்களிலிருந்து 11 லக்ஷம் டன்களும், ஜெர்மனிக்குக் கிடைத்து வருகிறது. இவைகளின் மொத்தம் 7 மிலியன்களுக்கு மேலாகிறது. பாக்கிப்படும் எண்ணெய் சேர்மானமான எண்ணெய்தான்.

ஜெர்மனி எவ்வளவு சேர்க்கை எண்ணெயை உற்பத்திசெய்கிறதென்பதை கணக்கிட முடியாது. யுத்தத்தில் இந்த உற்பத்தியில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. இரண்டு மகத்தான தாக்குதலுக்கு மத்தியிலுள்ள அவகாசத்தில் ஜெர்மனி ஏராளமான எண்ணெயைச் சேமித்து வைத்திருக்கக்கூடுமென்பது சாத்தியமில்லை. ஜெர்மனிக்குத் தேவையான எண்ணெயில் மூன்றில் ஒரு பங்கை ருமேனியா ஸப்ளை செய்து வருகிறதென்பது நிச்சயம். சென்ற மாரிகாலத்தில் வருஷத்துக்கு 30 மிலியன் டன்கள் உற்பத்திசெய்யக் கூடிய காகேஸியாவிலுள்ள எண்ணெய் கிணறுகளைக் கைப்பற்றி விடலாமென்று ஜெர்மனி நம்பியிருந்தது. இந்த முயற்சி பலிக்கவில்லை. ஆகையால் போலஸ்தியையும் மற்ற எண்ணெய்ப் பிரதேசங்களையும் வெடி விமானங்கள் தாக்குவதிலிருந்து ஏற்படக்கூடும் விளைவுகளை நாம் கவனித்துவரவேண்டும்.

பஸிபிக்கில் நேசநாடுகளின் சகாக்கள்.

ஆஸ்திரேலியாவில் டச்சுப்படைகள்.

(லண்டன் டைம்ஸ் பத்திரிகை).

பஸிபிக் கடல் யுத்தத்தில் டச்சுக்காரர்கள் முக்கியமான நடவடிக்கைகளை நடத்தி வருகிறார்கள். ஆகிலும், அவைகள் நம்முடைய கவனத்துக்கு வருவதில்லை. டச்சுக்கார, வேலைக்காரர்களுடன் ஒரு டச்சு விமானப்படை பகுதி அநேக வாரங்கள் வரையில் டார்வினில் வைக்கப்பட்டிருந்தது. அதைச் சேர்ந்த வட அமெரிக்க மிச்சல் வெடி விமானங்கள், வட மேற்குப் பகுதியில், தினந்தோறும் தாக்குதல் செய்துவருகின்றன. விமானங்களின் இறக்கைகளில் டச்சுக்காரர்களின் அடையாளம் புலப்படுவதால் டச்சு இந்திய ஜனங்கள் ஜப்பானியர்களைத் தாக்குவதில் டச்சுக்காரர்களும் தங்களாலியன்றதைச் செய்துவருகிறார்களென்று அறிந்துகொள்ளுகிறார்கள். வெடி விமானங்களை ஓட்டுவதுடன் டச்சு விமானிகள் அமெரிக்க துருப்பேற்றிசெல்லும் விமானங்களையும் ஓட்டிவருகிறார்கள். சில விமானிகள் இதற்குமுன் K. L. I. N. M. படையில் சேர்ந்திருந்தார்கள். அவர்கள் ஏராளமான காலம் விமானங்களில் பறந்துசென்றிருக்கிறார்கள். இவர்களில் பெயர் பெற்றவர் காப்டன் இவான் ஸ்மர்னுவ். இவர் சாம்ராஜ்ய ருஷ்ய விமானப்படையில் விமானியாக இருந்தார். ஜாவாவிலிருந்து இவர் கடைசியாக விமானத்தில் சென்றபொழுது 2 மிலியன் கில்டர்கள் (அதாவது 3 லக்ஷம் பவுன்கள்) மதிப்புள்ள வைரக் கற்களை எடுத்துச்சென்றார்.

கிழக்கு இந்தியத் தீவுப்படைகள்.

ராணுவ இலாகா சம்பந்தமாகவும், ஆஸ்திரேலியாவில் இப்பொழுது நெதர்லாந்து கிழக்கிந்தியச் சேனையைச் சேர்ந்த தரைப்படையினர் இருக்கின்றார்கள். டிமோரிலிலும், மேற்கு டச்சு நியூ கினியாவிலும், அராபூலா கடலிலுள்ள தீவுகளிலும், ஜப்பானியர்களுடன் போர் செய்துவிட்டு இந்த கிழக்கிந்தியப் படைகள் ஆஸ்திரேலியாவுக்கு வந்தன. இவர்களுக்கு விசேஷ ராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிழக்கு இந்தியத் தீவுகளில் ஜப்பானியர்களைத் தாக்குவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பமாகும் பொழுது இவர்கள் வழிகாட்டிகளாகவும், மொழி பெயர்ப்பாளர்களாகவும் இன்னும் இதர வழிகளில் உபயோகமுள்ளவர்களாகவுமிருப்பார்களென்பது நிச்சயம். மெல்போர்னில் சமீபத்தில் ராணுவ ஒத்திகை நடைபெற்றபொழுது அதில் கலந்துகொண்ட மற்றெல்லா ராணுவப்பகுதிகளையும்விட பச்சை உடுப்புகளைப் போட்டுக்கொண்டிருந்த பருத்த சரீரமுள்ள கிழக்கிந்தியத் துருப்புகள்தான் ஜனங்களின் கரகோஷத்துக்குப் பாத்திரமானார்கள்.

கடற்படையிலும், டச்சுக்காரர்கள் மகத்தான சேவை செய்திருக்கிறார்கள். டச்சு யுத்தக் கப்பல்கள் தென்மேற்கு பஸிபிக்கில் உதவி கடற் தளபதி கார்பெண்ட்ரிடமுள்ள கப்பற்படையுடனும் இந்துமகா சமுத்திரத்தில் கடற் தளபதி ஸோமர்வில்லினுடைய கடற் படையுடனும் சேர்ந்து போர்புரிகின்றன. டச்சுக் கப்பல்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து நியூ காலிடோனியாவுக்கும், ஆஸ்திரேலியாவிலிருந்து அமெரிக்காவுக்கும் ஸாலமன்ஸ் தீவுகளைச் சுற்றியுள்ள கடல்களிலும், சாமான்களை ஏற்றிச் செல்லுகின்றன. மெல்போர்னில் ஒரு ரம்யமான ஸ்தலமிருக்கிறது. அதாவது டச்சுக்காரர்களுடைய பண்டகசாலை, இதை டச்சுக்காரர்களும். கிழக்கிந்தியத்தீவைச் சேர்ந்த அருப்புகளும் ரஜாவிலிருக்கும்பொழுது குழுமியிருப்பார்கள். டச்சு ஆண்கள் கூடுமிடத்திற்கு அவசியமான உயர்தர டச்சு சாராயம் ஆர்ஜெண்டினாவிலுள்ள ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

டச்சுக்காரர்கள் செய்துவரும் பேருதவியில் மற்றொன்றுமுண்டு. ஜப்பானின் ஆதிக்கத் துட்பட்ட நாடுகளிலிருந்து தகவல்களை அறிவதற்கும், இந்தீஸ் நாடுகளின் பூப்பிரதேச அமைப்பைப்பற்றி சவிஸ்தாரமான தகவல்களை வெளியிடுவதற்கும் டச்சுக்காரர்கள் பிர யோஜனப்படுகிறார்கள். எதிரியின் திட்டங்களைப் பரிசீலனைசெய்து, எதிரியின் நடவடிக்கைகளை முன்கூட்டி அறிவிப்பதிலும் நேசதேசத்தாருக்கு அவர்கள் ஒத்தாசை செய்துவருகிறார்கள். டச்சு பொதுமக்களும், ஜப்பான் யுத்தத்தில் ஈடுபடுவதற்குமுன் அவர்கள் அமெரிக்காவிலும் மற்ற இடங்களிலும் விலைக்கு வாங்கியிருந்த சாமான்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். ஜாவா வீழ்ச்சியடைவதற்கு முன்னதாகவே சாமான்கள் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப் பட்டன. நெதர்லாந்து கிழக்கு இந்திய அரசாங்கத்தாரின் கோஷ்டியின் தலைவரான J. E. வான் ஹூக்ஸ்ட்ராடன் (இவர் கிழக்கிந்தியத் தீவுகளில் பொருளாதார இலாகா டிரெக்டராக இருந்தார்) ஏராளமான சாமான்களை விற்பனை செய்யவேண்டியிருந்தது. விமானங்கள், டாங்கிகள், பலவகைப்பட்ட யுத்த தளவாடங்கள் எல்லாம் ஆஸ்திரேலியா விலுள்ள நேசதேசப்படைகளிடம் வெகு சீக்கிரத்தில் ஒப்படைக்கப்பட்டன. பொதுஜன சாமான்களை அப்புறப்படுத்துவதற்குமட்டும் காலதாமதம் ஏற்பட்டது.

ஆஸ்திரேலியாவில் டச்சுக்காரர் செய்யும் அலுவல்களில் மிகவும் ருசிகரமானதும் முக்கியமானதுமான வேலை யாதெனில் அவர்கள் பலமான தயாரிப்புச் செய்வதுதான். நிச்சயமாக மறுபடியும் கிழக்கு இந்தியத்தீவுகளுக்குப் போய்ச்சேர்ந்துவிடுவோமென்று டச்சுக்காரர்கள் நம்பியிருக்கிறார்கள். ஆகையால் இப்பொழுதே அதற்காக திட்டம்போட வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்து விட்டார்கள்.

ஒன்றுபட்ட குடியரசு.

பஸிபிக்கில் நடைபெற்ற யுத்தத்தைக்கண்டு கிழக்குத் தீவுகளிலுள்ள டச்சுக்காரர்கள் ஏமாற்ற மடைந்தார்களென்பதை ஒருவரும் மறைத்துச்சொல்லமுடியாது. உதவி கடற் தளபதி ஹெல்ப்ரிச், ஹொர்வான் டெர்ப்ளாஸ் முதற்கொண்டு கிழக்கிந்தித்தீவைச்சேர்ந்த ஸோல்ஜர்களும், மாலுமிகளும் தங்களுடைய மனைவிமார்களையும், குழந்தைகளையும் இந்தீஸ் தீவுகளில் வைத்துவிட்டுவந்துவிட்டார்களென்பதில் சந்தேகமில்லை. அவ்விதம் புறப்பட்ட பொழுது பிரிவுத்துயரம் சீக்கிரத்தில் நிவர்த்தியாகி விடுமென்றும் வெற்றிகரமாக நாட்டிற்கு சீக்கிரத்தில் திரும்பிவந்துவிடலாமென்றும் அவர்கள் நம்பிருந்தார்கள். ஹிட்லரை முதலில் முறியடிக்கவேண்டுமென்ற கொள்கையை அவர்கள் இன்னும் தெளிவுபட அறிந்துகொள்ள வில்லை. ஆகையால் அவர்கள் ஏமாற்றம் மடைவது சகஜம்தான். ஆகிலும் அவர்கள் எல்லோரும் நேசநாடுகளின் யுத்த தந்திரத்தை ஆதரிக்கிறார்கள். நேசநாடுகளும் தங் களுடைய தாய் நாடும் கூடிய சீக்கிரத்தில் விடுதலை பெறவேண்டுமென்ற தாகமும் அவர் களிடம் குடிகொண்டிருக்கிறது.

டச்சுக்காரர்களின் விடாமுயற்சியும், ஒருவகைப்பட்ட திண்ணமும் சிலாகிக்கத்தகுந்தவை. யுத்தத்துக்குப்பின் டச்சுக்கிழக்குத் தீவுகளில் மகத்தான மாறுதல்கள் ஏற்படக்கூடுமென்று அவர்கள் அறிவார்கள். இது விஷயத்தில் வில்ஹெல்மினா பிராட்டியார் தனது திட்டங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். வருங்காலத்தில் குடியரசு அமைக்கப்படும். அதில் டச்சுக்காரர் களுக்கும், கிழக்கிந்தியத்தீவிலுள்ளவர்களும் சமமான உரிமைகளுண்டு. ஒவ்வொரு தனிப்பட்ட பாகத்திலும் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் அமைக்கப்படும். ஆகிலும் அவைகள் ஒன்றுபட்ட தற்காப்பு அமுலுக்குட்படவேண்டும். கிழக்கிந்தியத்தீவுகளில் டச்சுக்காரர்கள் செய்திருக்கும் அரிய சேவைகளையும், நெருக்கடியான சமயம் வந்து ஜப்பானியர்கள் தாக்கியபொழுது அவர்கள் தீரத்துடன் போர்புரிந்ததையும் கண்ணுற்றவர்களும், மூன்றரை நூற்றாண்டுகளாக கிழக்கிந்திய மக்களுடன் அவர்கள் உறவாடி அவர்களுடன் ஐக்கியபாவத்தை அடைந்திருப் பதையும் கவனித்தவர்களும், யுத்தத்துக்குப்பின் கிழக்கிந்தியத் தீவுகளில் விசேஷமான

அக்கரையுள்ள மேனாட்டார்களில் டச்சுக்காரர்களும் ஒருவரென்று டச்சுக்காரர்கள் பாத்தியங் கொண்டாடக்கூடியவர்களென்பதை ஆக்ஷேபிக்கமுடியாது. ஆஸ்திரேலியாவில் பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் யுத்த முயற்சியில் டச்சுக்காரர்கள் ஈடுபட்டிருப்பதிலிருந்து இந்த பாத்யதை அதிக வலுவடைந்து வருகிறது.

ஜெர்மனியின் "புலி" டாங்கிகள்.

இப்பொழுது ருஷ்யப் போர்முனையில் ஜெர்மனி உபயோகப்படுத்திவரும் VI மார்க் புலி டாங்கிகள் சென்ற பிப்ரவரி மாதத்தில் டுனிஸியாவில் உபயோகப்படுத்தப்பட்ட டாங்கிளைப்போல் அமைப்பும் உருவமுமுள்ளவை.

இது 52 முதல் 62 டன்கள் எடைமானமுள்ள பெரிய பூதாகாரமுள்ளது. இதில் அதிக வேகமாக அடிக்கக்கூடிய 88 மிலிமீடர் துவாரமுள்ள பீரங்கியும் நான்கு கனமான யந்திர பீரங்கிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் 8 பேர்கள் வேலை செய்கிறார்கள். அதன் கோபுரத்தில் ஒரு புலியின் உருவம் வர்ணத்தினால் எழுதப்பட்டிருக்கிறது. இந்த டாங்கியில் பலமான கவசம் அமைக்கப்பட்டிருக்கிறது. பலஹீனமாக உள்ள முன் பக்கத்திலுள்ள தகடுகள் $7\frac{1}{2}$ இஞ்சு கனமுள்ளவைகள். அதன் பக்கங்களில் 5 இஞ்சு கனமுள்ள தகடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

60 டன்கள் கனமுள்ள பெரிய டாங்கிகளை உபயோகப்படுத்துவதில் சுடும் சக்தியின் பலமும், பலமான கவசங்களின் தற்காப்புமிருக்கிறதென்றாலும், அதன் அபரிமிதமான பளுவிலிருந்து பாதகங்களும் உண்டாகிவிடும். புலி டாங்கிகள் மணிக்கு 22 மைல்கள்தான் வேகம் பொருந்தியவை. அதன் பளுவின் அதிகத்தினால் அதன் சலன சக்தியும் குறைவுபடுகிறது. இப்பேர்ப்பட்ட கனமான டாங்கிகள் பாலங்கள் மீதும், ரஸ்தாக்கள் வழியாகவும் செல்லமுடியாது.

இந்தப் புலி டாங்கிகளை உடைப்பதற்கு நேசநாடுகள் உற்பத்திசெய்திருக்கும் புதிய கனமான பீரங்கிகள் லாயக்குள்ளவையென்று டுனிஸியாவில் கிடைத்த அனுபவத்திலிருந்து வெளியாகுகிறது. ஜெனரல் கிராண்ட் டாங்கி வண்டியில் அமைக்கப்பட்டிருக்கும் தாழ்வாகச் சுடக்கூடியதும் 105 மிலிமீடர் துவாரமுள்ளதுமான அமெரிக்க பீரங்கிகள் எவ்வகைப்பட்ட டாங்கியையும் நொருக்கிவிடும்.

யுவர்களின் புத்திசாலித்தனம்.

மூனிக் மாணவர்களின் சார்பாக ஹான்ஸ், மேரியா ஸ்கோல், ஆட்ரியான் புரோப்ஸ்டு என்றவர்கள் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார்கள். மூனிக்கிலிருந்த ஜெர்மன் நிர்வாகியான ஹெர் கீஸ்லர் (1943-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 22-ம் தேதி அவர்களை சிரச்சேதம் செய்தார்). அந்த துண்டுபிரசுரத்தின் சாராம்சம் பின்வருமாறு.

"ஜெர்மன் மக்களின் ஸ்வதந்திர முறையென்று பறைசாற்றிக்கொண்டு ஐரோப்பா பூராவிலும், ஹிட்லரும், அவனைச்சேர்ந்த கூட்டத்தார்களும் ரெத்தவெள்ளம் ஓடும்படி செய்து வருகிறார்களென்று ஜெர்மானியர்களில் முட்டாளானவர்களும் அறிந்துவிட்டார்கள். ஜெர்மன் யுவர்கள் இப்பொழுதாவது கிளர்ச்சிசெய்து, கொடுந் துன்பம் விளைவிக்கிறவர்களைப் பழிக்குப்பழிவாங்கி நாசம் செய்யாவிட்டால் ஜெர்மனிக்கு எக்காலத்திலும் இகழ்ச்சி ஏற்பட்டுவிடும். மாணவர்களும், மாணவிகளுமாகிய நம்மிடத்தில் தேசம் பூராவும் நம்பிக்கை வைத்திருக்கிறது. 1943-ம் வருஷத்தில் தேசீய சமூக ஆக்ஷியின் கொடுமையை ஒழித்துவிட நாம் முன்வரவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இதேமாதிரியாக 1814-ம் வருஷத்தில் நெபோலியனிடமிருந்து ஏற்பட்ட பீதியை நாம் நிவர்த்தித்தோம்.

"ஸ்டாலின்கிராட்டில் உயிர்துறந்தவர்கள் நமக்கு உத்சாகம் மூட்டுகிறார்கள். ஆகையால் நமக்கு சமயம் கிட்டிவிட்டது. நாம் கிளம்பவேண்டும்."

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—4—0; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0; மொராக்கோ ரூ. 2—0—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணா.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 159. (4-வது பிரிவு).

14- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
15- 8-43	கீழாநிலை	... ,,	7.00
,,	கீழாநிலை-புதுப்பட்டி	... ,,	7.30
16- 8-43	பெருமாநாடு	... ,,	7.00
,,	புல்வயல்	... ,,	7.30
17- 8-43	சடயம்பட்டி	... ,,	7.00
,,	ஒலியமங்கலம்	... ,,	7.30
18- 8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
18- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	அன்னவாசல்	... மாலை	7.00
,,	கீழக்குறிச்சி	... ,,	7.30
19- 8-43	மலம்பட்டி	... ,,	7.00
,,	பேராம்பூர்	... ,,	7.30
20- 8-43	ஆலவயல்	... ,,	7.00
,,	அம்மன்குரிச்சி	... ,,	7.30

பிரஸங்கம் 160. (5-வது பிரிவு).

21- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
22- 8-43	கீரனூர்	... ,,	7.00
,,	நாஞ்சூர்	... ,,	7.30
23- 8-43	பூவரசகுடி	... ,,	7.00
,,	வேங்கடகுளம்	... ,,	7.30
24- 8-43	பெருங்களூர்	... ,,	7.00
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30
25 -8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
25- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	மிரட்டுநிலை	... மாலை	7.00
,,	அரிமளம்	... ,,	7.30
26- 8-43	பூங்குடி	... ,,	7.00
,,	சத்யமங்கலம்	... ,,	7.30
27- 8-43	உடையாளிப்பட்டி	... ,,	7.00
,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

14— 8—43	வெட்டம்விடுதி.
15— 8—43	விராச்சிலை.
16— 8—43	அரிமளம்.
17— 8—43	குடுமியாமலை.
18— 8—43	கரம்பக்குடி.
19— 8—43	கீழாநிலை.
20— 8—43	புதுக்கோட்டை.
21— 8—43	பொன்னமராவதி.
22— 8—43	தீத்தான்விடுதி.
23— 8—43	முள்ளங்குறிச்சி.
24— 8—43	வடகாடு.
25— 8—43	ராயவரம்.
26— 8—43	ஆலங்குடி.
27— 8—43	புதுக்கோட்டை.

பல்லவி.

காத்தருள்வாய் தேவா—எம்
காருண்ய ராஜனே. (காத்)

அனுபல்லவி.

ஆயுளும் வெற்றியும் ஆயுரா ரோக்யமும்—
அய்யனே மெய்யனே துய்யனே அருள்வாய். (காத்)

சரணம்.

எதிரிக்குத் தோல்வியும் எமையாளும் இறைவர்க்கு
என்றும் செல்கீர்த்தியும் நீ யருள்வாய்
போரிலே வெற்றியும் பூவில் சந்துஷ்டியும்
போதனே, நீதனே, வேதனே யருள்வாய். (காத்)

---

1. தன் பலம் பிறர் பலம் தானறியா
தரணிபர் போர்க்கலம் மிக்குடையார்
ஹிட்லர் டோஜோ முசலோனி
எழுப்பினர் மூட்டினர் போரனலே.

2. போரனல் பக்க நாடுகளில்
வாழும் மக்கள் உடைமை யெல்லாம்
சுட்டும் எரித்தும் நில்லாமல்
சுகமாய் வாழும் நம்மவரை.

3. பொசுக்க வருமுன் நம் நாட்டை
காக்க திட்டம் நம் தலைவர்
சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்டாலின், சயாங்கே
ஷேக், டிகால், க்ராட் முன்போட்டார்.

4. போட்ட திட்டம் குலையாமல்
போரைத் திறமாய் அவர் நடத்தி
எதிரியைப் போரில் முறியடித்து
எங்கும் அமைதி நிலையாக.

5. வாரும் தோழரே நாமெல்லாம்
தலைவர் கொள்கை நிறைவுபெற
நாதன் திருவடி முடிதாங்கி
நாளும் தொழுவோம் ஒருமனதாய்.

பல்லவி.

நாளே நல்ல நாள்

அனுபல்லவி.

ஜயம் பெறக் கடவுளின்
பதமலர் தொழுதிடும். (நா)

சரணம்.

1. போரினில் வெற்றிநாம் பெறுவதற்
குதவிடும். (நா)
2. நம் படை ஜயம்பெற நாமதில்
சேர்ந்திடும். (நா)
3. போரிடும் படைகட்டு படைக்கலம்
ஆக்கிடும். (நா)
4. சேனைகள் உடுக்க நல் லாடைகள்
நெய்திடும். (நா)
5. உணவு செய் புலன்களில் உற்பத்தி
செய்திடும். (நா)
6. பீதியை வளர்த்திடும் வார்த்தையை
தடுத்திடும். (நா)
7. ஐந்தாம் படையினரை அறிந்தற
வொழித்திடும். (நா)

பல்லவி.

திறந்தானே பதவி—நம் படை
வலியஞ்சி. (தி)

அனுபல்லவி.

போர் செய்ய முடியாமல் புறமுதுகிடும் படை—
நிலைகண்டு மனம்விண்டு மிகவஞ்சி முசலோனி. (தி)

சரணம்.

1. ஹிட்லரின் உயிர்த்தோழன் என்றுனே முசலோனி
இன்று அவனைவிட்டுப் பிரிந்து விரைந்துவந்து—
செய்நன்றி கொன்றவன் தேசத் துரோகியானேன்
கொல்லாமல் உயிர்பிச்சை தந்து ரக்ஷியுமென்று (தி)

2. படைத்திமிர் வெறிகொண்டு நாடாசை மிகக்கொண்டு
அண்டைஅயல் வாழ்வோரை கண்டு பொறுமைகொண்டு—
தன்படை தனையேவி அவர் செல்வம் வௌவிய
பேராசை பிடித்தலைந் துராத்மா முசலோனி (தி)

பல்லவி.

ஜெயம் ஜெயம், ஜெயம் ஜெயம், ஜெயம் ஜெயம் நமக்கே
இறைவன் திருவருள் ஜெயம் தரும் நமக்கே. (ஜெ)

அனுபல்லவி.

வருகிறதையா ஜெயம் ஜெயம் நமக்கே
வானிலே ப்ளேனிலே ஜெயம் ஜெயம் நமக்கே. (ஜெ)

சரணம்.

1. ஆங்கிலர் மனவலி தரும் ஜெயம் நமக்கே
அமெரிக்கர் படைவலி தரும் ஜெயம் நமக்கே
ரஷ்யரின் தோள்வலி தரும் ஜெயம் நமக்கே
உலகினர் ஆசி தரும் ஜெயம் நமக்கே. (ஜெ)

2. ரோமவின் ஓட்டம் முதல் ஜெயம் நமக்கே
முசலோனி துறவுமே மறு ஜெயம் நமக்கே
ஹிட்லரும் டோஜோவும் இனிமேலே பணிவர்
இறுதி ஜெயமதில் இருக்கிற ததிமின். (ஜெ)

---

1. வெற்றி வெற்றி வெற்றி வெற்றி மக்களே—நாம்
விழைவதும் வேண்டுவதும் மக்களே.

2. வண்டியிலே வாகனிலே மக்களே
வானிலே ப்ளேனிலே மக்களே.

3. எதிரியைச் சிறைகொண்டு மக்களே
இரைந்து விரைந்து அது மக்களே.

4. திறைகொண்டு வரும் விந்தை மக்களே
தலைவர் நமக்குரைப்பார் மக்களே.

5. வாருங்கள் வாருங்கள் மக்களே
உட்காருங்கள் உட்காருங்கள் மக்களே.

6. கேளுங்கள் கேளுங்கள் மக்களே
களி கூறுங்கள் கூறுங்கள் மக்களே. (வெற்றி)

---

1. பாலய பாலய பாலய தேவா
பாலய ராஜகோ பாலனை பார்த்தனே
ப்ரஹதம்பா தாசனை ஆங்கிலர் நேசனே
செந்தமிழ் நாடனை பாலய தேவா.

2. பாலய பாலய பாலய தேவா.
ராஜாதி ராஜனை ஆளும் ஜார்ஜ மன்னனை
சக்கரவர்த்தியை சஜ்ஜன பாலனை
பாலய பாலய பாலய தேவா.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—18-8-43.

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ஸு ஆகஸ்டு மீ 21 உ [ந. 160

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLX.

உழைப்பிற்கும், அனுதாபத்துக்கும் பலன் கிடைத்துவிட்டது.

டேவிட் லோ எழுதுகிறார்.

(ஒலிபரப்புப் பிரசங்கத்தின் சுருக்கம்).

ஒரு பையனைப்பற்றி அவனுடைய பள்ளிக்கூடத்திலிருந்து படிப்பு சம்பந்தமான ரிபோர்ட்டு அவன் பெற்றோர்களுக்கு வந்தபொழுது, அவன் சரித்திரம் என்ற பாடத்தில் தேர்ச்சிபெறாததால் அவஸ்தைப்பட்டானென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். "சரித்திரப்படிப்பு முக்கியமானது. நீ ஏன் சரியாகப்படிக்கவில்லை" என்று அவனுடைய தகப்பனார் வினவினார்.

"நான் சரித்திரத்தில் தேர்ச்சிபெற்றவன்தான். ஆகிலும், உங்களுடைய காலத்தில் சரித்திரக் கதை அதிகமாகயிருக்கிறது" என்று பையன் பதில் சொன்னான். வாஸ்தவம்தான். இந்தப் பையன் இப்பொழுது மனிதனாகிவிட்டான். இவனுடைய பிள்ளை இப்பேர்ப்பட்ட முகாந்திரத்தைச் சொல்லுவதற்கு அதிக நியாயமிருக்கிறது. சில நாட்களுக்குமுன் ஐரோப்பிய அரணை உடைப்பதற்காக 2,000 கப்பல்கள் கொண்ட பெரிய நேசதேசக் கப்பற்கூட்டம் சமுத்திரத்தில் சென்றது. என்னுடைய பால்யத்தில் சரித்திர புஸ்தகங்களில் ஒரு லக்ஷியத்தையும் அடையாத ஸ்பானிஷ் கடற்படையைப்பற்றி ஒரு பக்கம் பூராவும் கதை எழுதப்பட்டிருந்தது. 2,000 கப்பல்களின் நடவடிக்கை முடிவடையும்பொழுது அதைப்பற்றி சரித்திரத்தில் 10 பக்கங்களாவது எழுதவேண்டும். வில்லி போன்ற சிறு பிள்ளைகளும் அதைக் கற்கவேண்டும்.

நமது பிள்ளைகள் சமுத்திரத்தைத் தாண்டிவிட அகலக்கால்வைத்து பத்திரமாக இறங்கிவிட்டார்கள். இனிமேல் எவ்வித கஷ்டங்கள் ஏற்பட்டாலும், நடந்தவரையில் பிரயத்தனம் வெற்றிகரமாக முடிவடைந்துவிட்டது.

வட்டி கிடைத்துவிட்டது.

அடிக்கடி சொல்லுவதுபோல நாம் லண்டனில் அமைதியுடனிருக்கிறோம். அதிகமாக இப்பொழுது குதூகலமடைவது முட்டாள்தனமான காரியம். எனினும், பிரிடிஷார்கள் ஒரு விசித்திரமான நடவடிக்கையுள்ள ஜனங்கள். சாந்தத்துடனிருப்பதில் சிறந்தவர்கள். தீவாந்தரத்தில் வசிப்பதை மதித்துப் பார்த்து, சாதாரணமான ஜனங்கள் பூர்ணமான நம்பிக்கையுடனிருக்கிறார்கள். அல்லது யதார்த்தத்தின் நுண்ணறிவினால் அவர்கள் இவ்வித

மாக அமைதியுடனிருக்கிறார்களென்றும் சொல்லலாம். சில சமயங்களில் நாம் அளவுக்கு மீறி நடந்துகொள்ளவும் கூடும்.

இப்பொழுது நாமிருப்பதைவிட அமைதிக்குறைவுடன் இருந்த காலத்தில் நமது தலைவர்கள் மனம் கலங்கியிருந்தார்களென்பது நிச்சயம். நியாயமான மார்க்கத்தில் சண்டையிடுகிறவனுக்கு மூன்றுமடங்கு பலமுண்டென்பது உண்மைதான். ஆகிலும், நியாயத்திற்காக சண்டை செய்த ஏராளமான நாடுகள் இச்சமயத்தில் முறியடிக்கப்பட்டு அடிமைகளாகயிருக்கின்றன. அதிருஷ்ட வசமாக நமக்கும் பலமிருக்கிறது. இன்றைக்கு நமக்குக் கிடைத்துவரும் வெற்றிகளுக்கு நம்முடைய தியாகமும், உழைப்பும், அனுதாபமும்தான் காரணங்களாகும். அந்த பரிச்சிரமங்களுக்கு இப்பொழுது பலன் கிடைத்துவிட்டது.

பூரணமான தாக்குதல்.

அச்சு வல்லரசுகளுடன் நாம் பலமாக சண்டை போடுகிறோம். பாஸிஸத்தின் கொடுமை ஆக்ஷியை ஒழித்துவிடுவது நிச்சயம். அதற்கு நம்மிடம் சக்தியுமிருக்கிறது. ஆகையால் நாம் அமைதியுடனிருப்பதற்கு நல்ல நியாயமிருக்கிறது.

பெர்லினிலும், ரோமிலும் அச்சுநாடுகளுக்குக் கிடைத்த வெற்றிகளை கொம்புவாத்தியங்களின் எக்காளத்துடன் அவர்கள் பறைசாற்றிவந்தார்கள். இப்பொழுது அவர்கள் வேறு விதமான வாத்தியத்தை உபயோகிக்கவேண்டும். தெற்கு ஐரோப்பாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும், ஜெர்மனியின் நிலைமை கோரமாயிருக்கிறது. மின்னல் எதிர்ப்பு செய்த ருசிகரமான காலம் போய்விட்டது. நாஸிகள் ஆதிக்கத்துக்குட்பட்ட ஜெர்மனியும், அமைதியுடனும், நம்பிக்கையுடனுமிருக்கிறது. ஹிட்லருக்கு நம்பிக்கைதான் முக்கியமான லாபம். ஜெர்மன் குழந்தைகளுக்கு அவர்கள் தோற்கடிக்கப்படமாட்டார்கள் என்ற எண்ணத்தைப் புகட்டுவதில் ஹிட்லர் ஏராளமான பொருளைச் செலவிடுகிறான். அதிகச் சிரமமும் எடுத்துக்கொள்ளுகிறான். அவன் அதிகாரத்துக்கு வருவதற்குமுன் சென்ற யுத்தத்தில் ஜெர்மானியர்கள் முறியடிக்கப்பட்டார்களென்று சொல்லப்படுவதைச் செவியுற்று அவனுக்கு வருத்தமுண்டாகிற்று. ஹிட்லரின் அபிப்பிராயப்படி இது அபாண்டமான பொய். இப்பொழுதும் அவர்கள் யுத்தத்தில் ஜயமடையவில்லை.

உருக்கமான பேச்சுகள்.

இந்த மாயவியின் பேச்சைக் கேட்டு ஜெர்மன் குழந்தைகள் 1918-ம் வருஷத்தில் நடைபெற்ற விருத்தாந்தங்களை மறந்து அவனிடம் நம்பிக்கை கொண்டுவிடுகிறார்கள். ஆனால், அவர்களுடைய நம்பிக்கை அல்பமானது. நன்றாய்ப் பரிசீலனை செய்து, உண்மைகளை ஆராய்ச்சி செய்தால் நம்பிக்கை போய்விடும். வெளிப்படையாக இந்த நம்பிக்கை இருந்து வருகிறது. யுத்த ஆரம்பத்தில் நாஸிகளின் கொடுமையால் அவர்களுக்குக் கிடைத்த வெற்றிகள் இன்னும் அவர்கள் கண்கள்முன் நிற்கின்றன. சமீப காலத்தில் நடப்பு பாதகமாக மாறிவருகிறது. ஜெர்மனியில் பிளவுகள் ஏற்பட்டிருக்கிறதென்று ஒருவருக்கும் புலப்படாமலிருந்ததை, வெடிப்பில்லையென்று ருஜுச் செய்ய டாக்டர் கோயபல்ஸும், அவனுடைய உதவியாளர்களும், கூக்குறலிட்டுச் செய்துவரும் பிரசாரமூலமாக அவர்கள் வெளிப்படுத்திவிட்டார்கள்.

நாட்டுமக்களுக்கு, உருக்கமாக விடுவிக்கப்படும் செய்திகள் வரவர விசித்திரமாகயிருக்கின்றன. நீங்கள் பயப்படவேண்டாம். ஸிஸிலி முக்கியமானதல்ல. ருஷ்யப் போரும் முக்கியமானதல்ல. நமது வெடி விமானங்கள் எப்பொழுதாவது பிரிடனை நாசம் செய்துவிடும். நமது யூ படகுகள் ஏதாவது ஒரு சமயத்தில் யுத்தப்போக்கை மாற்றிவிடும் என்று சொல்லப்படுகிறது.

இவ்விதமான பேச்சுக்கள் ஹிட்லருடைய ஐரோப்பிய கைதி முகாமில் உலாவலாம். இது உண்மைக்கு முரணானது. ஆகையால் வெளியில் இந்த பேச்சு எடுபடாது. அச்சு நாடுகளிடம் அக்கரையுள்ள ஸ்பெயினிலும்கூட, புத்தி கூர்மையுள்ள ப்ராங்கோ இந்தப் பிரசாரத்தை நம்பவில்லை.

மற்றொரு வகை பிரசாரம்.

உலகத்துக்கு ஹிட்லர் வேறு விதமான பிரசாரம் செய்துவருகிறான். அவனுடைய ராணுவ பலம் மழுங்கிப்போய்விட்டதால் ராஜீய ஆயுதங்களை இப்பொழுது கூர்மைப்படுத்துகிறான். பீரங்கிகளால் நம்மைச்சுட முடியாது போய்விட்டதால் வாக்குச் சாதுர்யத்தினால் நம்மைக் கட்டிவிடப்பார்க்கிறான். நமக்கு ஏராளமான சிக்கல்களை உண்டாக்கி அவைகளில் இருந்து நாம் எவ்விதம் மீளுவதென்று புரியாமல் நாம் தத்தளிக்க வேண்டுமென்று அவன் எண்ணுகிறான். இந்த ஆபத்தான சமயத்திலும், நமது சிப்பாய்களுக்கு ஒரு கதை சொல்லி அவர்கள் தங்களிடமுள்ள டாமித் துப்பாக்கிகளைப் போட்டுவிட்டு, அவர்கள் விளைவித்த கொடுமைகளுக்காகப் பச்சாதாபப்பட்டு கண்ணீர் விட்டு அதைத் துடைப்பதற்கு கைக்குட்டைகளைத் தேடும்படியாகச்செய்து விடுவதாகவும் உத்தேசிக்கிறான்.

நாமும், அவனும் ஒன்றுப்பட்டவர்களென்று நாம் நினைக்கவேண்டுமென்றும் அவன் நினைக்கிறான். வக்கிரமான தர்க்கத்துடனும் முன்னுக்குப்பின் விரோதமான வாதங்களுடனும் நாஸி தத்வம் நிரபராதியென்றும், ஜனநாயகம் குற்றவாளியென்றும், ஹிட்லரை ஜனங்கள் தேர்ந்தெடுத்து அதிகாரம் வகிக்கும்படி செய்தார்களென்றும், சர்ச்சிலும், ரூஸ்வெல்டும், கெட்ட எண்ணமுள்ள யதேச்சாதிகாரிகளென்றும் அவர்கள் பிரிடனிலும், அமெரிக்காவிலும், அமுலை செலுத்தி வருகிறார்களென்றும், அவர்கள்தான் உலக யுத்தத்திற்குக் காரணமென்றும், வெடி குண்டு வீசும் முறையை அவர்கள்தான் ஏற்பாடு செய்தார்களென்றும், அவர்கள் கைதிகளை சித்திரவதைக்குட்படுத்துகிறார்களென்றும், நிரபராதியான ஜெர்மனியும், ஜப்பானும், இதாலியும் மனச்சாக்ஷிக்கு விரோதமாக அநியாயமான தாக்குதல்களைத் தடுக்க வெடி குண்டுகளை உபயோகிக்க நேரிட்டதென்றும் சொல்லப்படுகிறது.

அபத்தம் போதும், நாகரீகத்தை அழிக்க முன்வந்திருக்கும் இந்தக் காட்டுமிராண்டிகளிடமிருந்து நிரபராதியான ஜெர்மனியையும், இதாலியையும், ஜப்பானையும் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்!

நாஸிகளின் தர்க்கம்.

இந்தப் பிதற்றலின் முடிவில் 1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 1-ம் தேதியன்று போலந்தைப் படையெடுத்தது பிரிடிஷார்கள்தான், தாங்களில்லையென்று ஜெர்மானியர்கள் கட்டிவிடுவார்களென்று நான் ஏற்கனவே அநேகம் தடவைகளில் சொல்லியிருக்கிறேன்.

என்னுடைய அயல் வீட்டுக்காரன் வெகுளி. அவனுக்கு நுட்பமான அறிவு கிடையாது. ஆனால் கோழை மனதுள்ளவன். அவனைப் போல உலகில் அநேகரிருக்கிறார்கள். அவன் பத்திரிகையில் நாஸிகள் செய்த ஒலிபரப்புப் பிரசங்கத்தைப் படித்தான். அவன் ஆச்சரியத்துடன் சொன்னதாவது "நாம் ஹிட்லருடனும். அவனுடைய சகாக்களுடனும் யுத்தம் செய்கிறோம். அவர்களை முறியடித்து விடுவதாகவும் தீர்மானித்துவிட்டோம். ஆகையால், அதைப் பற்றி ஒரு சந்தேகமுமில்லை. ஆகிலும், யுத்தத்தை நாம் துவக்கினோமா. வெடி குண்டுகளை நாம் முதலில் உண்டுபண்ணினோமா, இவை ஆரம்பமாகி வெகுகாலம் கடந்துவிட்டது. அநேக சம்பவங்கள் நேர்ந்துவிட்டன. ஆகையால், எனக்கு மறதி ஏற்பட்டுவிட்டது போலிருக்கிறது."

ஆகிலும் நாம் உண்மைகளை மறந்துவிடாமலிருக்கவேண்டியது அவசியமாகும். நாம் மறந்துவிட்டால் எதிரிக்குச் சாதகம் ஏற்படுமென்று நினைத்து எதிரி இது விஷயமாக நாள் பூராவும் பிரயத்தனம் செய்து வருகிறான்.

உண்மைகள்.

பிரசார முறைக்கு அடிப்படையான சாதாரண மக்களின் மனோபாவத்தைப்பற்றி ஹிட்லர் என்ன நினைக்கிறானென்று பாருங்கள். "பொதுமக்களின் புத்தி விசாலம் அல்பமானது; பகுத்தறிவு மிகவும் குறைவானது. ஆகிலும், அவர்கள் விஷயங்களை வெகு சீக்கிரத்தில் மறந்துவிடுவார்கள்" என்று சொல்லுகிறார்கள்.

இதை நீங்களே ஊகித்துப்பாருங்கள். நாம் புத்தியற்றவர்களாம். நேற்று நடந்த விஷயங்களை இன்று நாம் மறந்துவிடுவோமாம்.

நேற்று நாம் கேள்விப்பட்டோம். "நமது பலமான படைகள் தேசப்படத்திலிருந்து எல்லோரையும் அழித்துவிடும். யுத்தம் நன்றாய் நடைபெறுகிறது" என்று. இன்றைக்கு நாம் கேள்விப்படுகிறோம். "நிதானியுங்கள். ரெத்த வெறி பிடித்த யுத்த தூர்தாரர்கள் நம்மைக் கொலை செய்துவருகிறார்கள். யுத்தம் கொடுமையானது" என்று. நேற்று நடந்ததை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளாமல இன்று ஹிட்லர் சொல்லும் பேச்சை மனதில் இறுத்தி வைக்கவேண்டுமாம். ஹிட்லர் யுத்தம் செய்யப் பிரியப்படவில்லையாம்.

பவேரியாவிலுதித்த கொள்ளைக் கூட்டத்தின் வாலிபமுள்ள தலைவனான ஹிட்லர் 1930 ம் வருஷம் வாக்கில் நாஸி கக்ஷியை ஏற்பாடு செய்து ராஜ்யங்களைச் சம்பாதிப்பதற்காக ஜெர்மானியர்களை ஆயுதபாணிகளாகச் செய்துவிட்டானென்பதை நாம் மறந்துவிடவேண்டுமாம். "புதிய தேசங்களைக் கைப்பற்றுவது" என்ற பதங்கள் அழகாகத்தானிருக்கின்றன. உண்மையாக "உன்னுடைய அயல் வீட்டுக்காரனைக் கொன்றுவிட்டு அவனுடைய பூமியை ஸ்வாபகராம் செய்துகொள்" என்று சொல்லுவதைவிட அழகான பதங்களாகயிருக்கின்றன. ஹிட்லர் பின்வருமாறு ஒரு சமயம் சொன்னான். வருங்காலத்தில் சர்வ தேசங்களுக்குள் அமைதியான போட்டி நடைபெறுதென்றும், என்னுடைய வாழ்நாள் அமைதியுடனும், ஒழுங்கான முறையிலும் கழியாதென்றும் நினைப்பதொன்று தான் என்னுடைய வாலிபத்தில் எனக்கு கிலேசமளித்தது.

மறந்துவிட வேண்டுமாம்.

பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்த அபிப்பிராயத்தை நீங்களே படித்துப்பாருங்கள். அதிகாரத்துக்கு வந்தபின் அநேக வருஷங்களாக சரித்திரத்திலேயே காணப்படாத மிகவும் பலமான யுத்த முஸ்தீப்புகளை ஹிட்லர் தயாரித்ததையும், இதைப் பரீக்ஷை செய்யும் முறையில் ஸ்பெயினில் உள்நாட்டுக்கலகத்தை அவன் மூட்டியதையும், ஸெகோஸ்லாவாகியா வில் கடைசியாக யுத்தம் செய்யவேண்டாமென்று ஏற்பட்டபொழுது அவனுக்கு உண்டான ஆக்ரோஷத்தையும், அடுத்த சந்தர்ப்பத்தில் எவ்விதம் அவன் பூரா பலத்தையும் உபயோகப் படுத்தி யுத்தம் துவக்கினானென்பதையும் நாம் மறந்துவிடவேண்டுமாம்.

நாஸிகள் நமது பேரில் குற்றங்களைச் சாட்டி அவர்களுக்கு உரித்தான கெடுதல்களை நமக்கு அறிமுகப்படுத்தும்பொழுது மேலே சொன்ன விஷயங்களை நாம் மறந்துவிடக்கூடாது. இப்பொழுது நம்முடைய வெடிகுண்டு வீச்சைக்கண்டு ஜெர்மானியர்கள் ஓலமிடுகிறார்கள். அதன் கொடுமைகளைக்கண்டு நம்மை நிந்திக்கிறார்கள். ஆனால் இதை ஆரம்பித்தது அவர்கள் தான் என்று ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள். நம்மிடம் ஒரு விமானம்கூட இல்லாத பொழுது ஜெர்மனி ஒரு மகத்தான வெடிகுண்டுவீசும் விமானப்படையை தயாரித்திருந்தது என்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

இறக்கமற்ற கொடுமை.

யுத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று நாம் அறிந்துகொள்ளுவதற்கு முன்பே அவர்கள் வார்ஸாவையும், ராட்டர்டாமையும் நொருக்கினார்களென்பது பரிதாபமானது. முற்றுகைக் குள்ளான கோட்டையாயிருந்ததால் வார்ஸாவைத் தாக்க நியாயமிருக்கின்றதென்று ஜெர்மானியர்கள் சொல்லிவருகிறார்கள். இதுவும் சரிதான். ஹிட்லர் சொல்லுகிறபடி ஐரோப்பா ஒரு பெரிய கோட்டையென்றால் அதை நாம் தாக்குவதற்கு ஞாயமிருக்கிறது. அப்பொழுது ஹிட்லர் ஆக்ஷேபிக்க ஞாயமில்லையே.

நம்முடைய கொடுமைகளையும், கொடுந்துன்பத்தையும்பற்றி அபத்தமான கதைகளை ஜெர்மானியர்கள் பரவச் செய்துவரும்பொழுது, ராஜீயக் கொள்கைகளுக்காக இரக்கமற்ற கொடுமையைச் செய்தவர்களும், இந்த உலகத்தில் ஜனித்த தோஷத்துக்காக ஆயிரக்கணக் கான கதியற்ற ஆண், பெண், குழந்தைகளையும் வதைத்துவிட தனிப்பட்ட இலாகாவை ஏற்படுத்தியவர்களும் ஜெர்மானியர்கள் தானென்பது நீங்கள் ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.

கெட்ட எண்ணங்களை வளர்த்துவிடுவதற்கில்லாவிட்டாலும், யுத்தம் எதற்காக நடை பெற்று வருகிறதென்று மறந்துவிடாமலிருப்பதற்கு நான் கூறியிருக்கும் விஷயங்களை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் எதை எதிர்த்துச் சண்டைபோடுகிறோம். நமது யுத்த நோக்கங்களென்ன என்பதைத் தெளிவாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது மெத்த அவசியம்.

வார யுத்தச் செய்திகள்.

14—8—43-லிருந்து 20—8—43-வரை.

ஸிஸிலி.—ஸிஸிலியில் துருப்புகள் இறங்கிய 40 நாட்களுக்குப்பின் ஸிஸிலிய யுத்தம் முடிவடைந்துவிட்டது. ஜெர்மானியர்கள் ஜூலை 30-ம் தேதி முதல் ஸிஸிலியைக் காலி செய்ய ஆரம்பித்தார்கள். ஆகஸ்டு 17-ம் தேதி காலையில் மெஸ்ஸினாவை நாம் பிடித்ததுடன் யுத்தம் நின்றுவிட்டது.

ஸிஸிலி பூராவும் நேசதேசத்தார் வசமாகிவிட்டது. இது ஒரு பெரிய தீவு என்பதுடன் மத்தியதரைக்கடலில் ஒரு முக்கியமான பிரதேசமாகும். இதற்கும், ஐரோப்பியக் கண்டத் துக்கும் இடையில் 2 மைல்கள் உள்ள சமுத்திரம்தானிருக்கிறது. ஸிஸிலியின் ஆக்கிரமணத் திலிருந்து இதாலிக்குப் பாய்வதற்கு வசதி உண்டாகிவிட்டது.

இந்த வார ஆரம்பத்தில் கீழ்கண்ட பிரதேசங்களை நாம் பிடித்துக்கொண்டோம்;—

ரிபாஸ்டோ, கியாரா, மிலோ, பிரைனோ, பிளாரஸ்டா, ரண்டாஸோ. அமெரிக்கர்கள் கடல் மூலமாகவும், விமான மூலமாகவும் ஆர்லாண்டோ முனையிலும், மிலாஸோவிலும் இறங்கினார்கள்.

இதாலி.—ரோம், மிலான், டூரினும், பாக்கியா, டார்டோரெல்லா, ஸான்நிகோலா முதலிய இடங்களிலுள்ள விமான தளங்களும், வெடிகுண்டு வீச்சுக்குட்பட்டன. கடானியாவுக்குச் சமீபத்தில் ஒரு பெரிய கடற்படை தென்பட்டதாக ரோம் ஒலிபரப்பில் சொல்லப்பட்டது.

ருஷ்யா.— கார்கோவ் ருஷ்யர்களின் பீரங்கிக் குண்டுவீச்சுக்குட்பட்டிருக்கிறது. கார்கோவைச் சுற்றியும் கார்கோவைத் தாண்டியும் முன்னேறியிருக்கும் ருஷ்யத் துருப்புகளை எதிர்ப்பதற்காக கடைசி பிரயத்தனமாக தங்களிடமுள்ள எல்லாத் துருப்புகளையும் ஜெர்மானியர்கள் இங்கு அனுப்பித்திருக்கிறார்கள். நீபர் நதிக்குக் கிழக்கிலும், டான்பாஸ் பகுதியிலும், கூபானிலும், கிரிமியாவிலுமுள்ள 50 டிவிஷன்கள் கொண்ட ஜெர்மன் துருப்புகள் அபாயத்துக்குள்ளாகிவிட்டன. ஜெர்மானியர்கள் தப்பி ஓடக்கூடிய இரண்டு மார்க்கங்களில் ஒன்றான கார்கோவ்—போல்டாவா இருப்புப்பாதை துண்டிக்கப்பட்டுவிட்டது. ரெட் ஸ்டார் பத்திரிகையில் ''டாங்கிகளுடனும், விமானப்படையுடனும் ஜெர்மானியர்கள் செய்துவரும் பலமான எதிர்த் தாக்குதல்களை ருஷ்யர்கள் கோரமான யுத்தம் செய்து தடுத்து வருகிறார்கள்'' என்று வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த வாரத்தில் அக்கிராவும், ஸூமியும், கார்கோவுக்குச் சமீபத்திலுள்ள சுகியேவும் ருஷ்யர் வசமாகிவிட்டன.

பிரயான்ஸ்க் போர்முனையில் கோடியனெட்ஸும், காராசேவும், ஸித்ராவும் விழுந்து விட்டன. செம்படை பிரியான்ஸ்குக்கு 15 மைலுக்குள் வந்துவிட்டது. ருஷ்யாவில் ஜெர்மனியின் மத்திய, தெற்குப் போர்முனைகளுக்கு பிரியான்ஸ்க் அச்சாணி போன்ற தற்காப்பு ஸ்தலம்.

ஸ்மோலன்ஸ்குக்கும் அபாயம் ஏற்பட்டுவிட்டது. ருஷ்யர்கள் இரண்டுபகுதிகளாக ஸ்பாஸ் டெமென்ஸ்கிலிருந்தும், ஸெஞெஸ்னயாவிலிருந்தும் முன்னேறுகிறார்கள். 25 மைல்களுள்ள பிளவு உண்டுபண்ணப்பட்டுவிட்டது. 100 கிராமங்கள் பிடிபட்டுவிட்டன.

நோவாராஸிஸ்கு பகுதியிலும், இஸியம் பகுதியிலும் ருஷ்யர்கள் புதிய தாக்குதல்கள் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

ஐரோப்பிய விமான யுத்தம்.—

ஆகஸ்டு 11.—பிரிடானிக்கு அருகாமையில் திடீர் தாக்குதல் செய்த காரணமாக 6 அச்சுக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

ஆகஸ்டு 12.—கெல்ஸன் கொர்சனிலும், வெஸ்ஸல்னிங்கிலுமுள்ள எண்ணெய்ப் பிரதேசங்களும், பானிலுள்ள உற்பத்திசாலைகளும், வெடிவிமானங்களால் தாக்கப்பட்டன. அன்று தினமும், ஆகஸ்டு 16-ம் தேதியன்றும் பெர்லின்பேரில் நமது விமானங்கள் 68-ம் தடவையும், 69-ம் தடவையும் குண்டுகளை வீசின.

ஆகஸ்டு 13.—ஜெர்மன் ஆதிக்கத்துக்குட்பட்ட ஆஸ்திரியா முதல் முதலாக இன்றுதான் தாக்கப்பட்டது. வியன்னாவுக்குச் சமீபத்தில் வீனர் நியூஸ் டாட் என்னுமிடத்திலுள்ள மெஸ்ஸர்ஷிமிட்ஸ் விமான உற்பத்திசாலையின்பேரில் குண்டுகள் விழுந்தன. 400 புதிய விமானங்கள் அழிவுபட்டன.

ஆகஸ்டு 17.—இஸ்ட்ரிஸ், லெபே, மார்ஸெல்ஸுக்குச் சமீபத்திலுள்ள ஸாலன் முதலிய இடங்களிலுள்ள விமான தளங்கள் தாக்கப்பட்டன. தெற்கு பிரான்ஸில் இதுதான் முதல் தடவை குண்டு வீசப்பட்டது.

பஸிபிக் சமுத்திரம்.—அலூஷியன் தீவுகளில், அமெரிக்க தளமாகிய காமசட்காவுக்கும் ஜப்பானுக்கும் நடுவில் பாய்ச்சல் ஸ்தலமாக உள்ள குரைல் தீவுகளை நாம் வெற்றிகரமாகத் தாக்கினோம்.

சென்ற வெள்ளிக்கிழமையன்று 2,500 மைல்கள் பறந்துசென்று விமானங்கள் போர்னியோ தீவிலுள்ள எண்ணெய் வைப்பு ஸ்தலமான பாலிக் பாபானை வெடிகுண்டுகளால் தாக்கின. எந்தப் போர்முனையிலும் இவ்விதமான விமானத் தாக்குதல் நடைபெற்றதில்லை. வெடி விமானங்கள் புயல்காற்றையும் மேகங்களையும் லக்ஷியம் செய்யாமல் சென்றன. குறைந்த பக்ஷம் 7 எண்ணெய் சுத்திகரிக்கும் ஆலைகள் நாசமடைந்தன. 6,000 டன்கள் எடைமானமுள்ள ஒரு எண்ணெய்க் கப்பலும் தீப்பிடித்தது.

நேசதேசத் தரைப்படைகள், ஸாலமன்ஸ் தீவுகளைச் சேர்ந்த வெல்லா லா வெல்லாவைப் பிடித்துக்கொண்டு 350 ஜப்பானியர்களைக் கைதி செய்தார்கள். இதனால் கொலம்பங்கரா தீவில் விலாவிலிருக்கும் எதிரியின் ஸ்தானங்களுக்கு ஆபத்து அதிகரித்துவிட்டது.

நியூ கினியாவில் வேவாக் பிரதேசத்திலுள்ள ஜப்பானிய விமானக் கூட்டத்தை நமது விமானங்கள் கூட்டமாகச் சென்று தாக்கின. 10,000 சிறிய வெடிகுண்டும், எரி வெடிகளும் வீசப்பட்டன. எதிரிக்கு 120 விமானங்கள் நஷ்டமாகிவிட்டன. 50 பலமாகப் பழுதுப்பட்டு விட்டன. இந்த வெற்றிகரமான நிகழ்ச்சியைப்பற்றி ஜெனரல் மாக் ஆர்தர் பின்வருமாறு

வியாக்யானம் எழுதியிருக்கிறார். "சரியான சந்தர்ப்பத்தில், பலமான தாக்குதல் செய்யப்பட்டது. சங்கியையில் எதிரியிடமும் நமக்குச் சமமான விமான பலமிருந்தது. ஆனால், நாம் ஆகாயத்தில் இருந்து அடித்தோம். ஜப்பானிய விமானங்கள் தரையிலிருந்தன. தரையில் இருக்கும் விமானம் கதியற்றது. யுத்தத்தில் திடீர் தாக்குதல் முறைகள்தான் விசேஷ பலனளிக்கக்கூடியவை."

நியூ கினியாவில் அமெரிக்கத் தரைப்படைகள் பெய்ராகோ துறைமுகத்தை நோக்கி முன்னேறுகின்றன.

சைனு.—சீனர்கள் செகியாங்கில் ஜப்பானியர் வசமுள்ள லிம்பு ரெயில்வே ஸ்டேஷனையும் கிழக்கு குவாண்டங்கிலுள்ள யூகான் நகரத்தையும் தாக்கினார்கள். ஹாங்க்மே நகரத்தை நோக்கி சீனர்கள் எதிர்த் தாக்குதல் செய்து 300 ஜப்பானியர்களைக் கொன்றுவிட்டார்கள்.

மத்திய சைனாவில் ஜப்பானிய விமானப்படை ஹெனியாங்க், செங்க்ஷா, பிங்கியாங்க், லிய்யாங்க், யிங்க்டியன் முதலிய இடங்களிலுள்ள சீன விமான தளங்களைத் தாக்கினார்கள். செங்க்ஷா பேரில் ஜப்பானியர்கள் யந்திர பீரங்கி பிரயோகம் செய்தார்கள். டிங்க்டியனை வெடிகுண்டுகளால் தாக்கினார்கள்.

பர்மா.—கீழ்க்கண்ட லக்ஷியங்கள் தாக்கப்பட்டன:—

ஆகஸ்டு 9.—ஸெடா, மாண்டலேக்கருகில் நதியில் சென்ற கப்பல்கள், பாதானிலுள்ள இருப்புப்பாதை, சேமிப்பு ஸ்தலங்கள்.

ஆகஸ்டு 10.—அக்யாப், பியாப்வீ.

ஆகஸ்டு 12.—சிண்ட்வின் நதியிலுள்ள படகுகள்.

ஆகஸ்டு 13.—மாண்டலே, மீஞ்சானுக்கருகிலுள்ள இருப்புப்பாதை மார்க்கங்களும் ஜப்பானிய கேந்திரஸ்தானங்களும், காலிமியோ, ஸாண்டோவே, டயமண்ட் தீவு, ஷ்வீபோ, யே, கினு, கதா, காணி, மாலி, மியின்மூ, நாட்கோயாங்க், ஸிகன், டாண்டாபின்.

ஆகஸ்டு 14.—அக்யாப் தீவும், நகரமும், கான்கிலா, ஆலன்மியோ, பூதேடாங்.

ஆகஸ்டு 15.—அண்டமான் தீவுகளிலுள்ள சாதாம் தீவு.

ஆகஸ்டு 17.—கான்கிலா, இராவதி, மாயூ, காலடான், குவேகூ நதிகளிலுள்ள சாமான் படகுகள்.

சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

9—8—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரஸ்தா, ரயில்வே இலக்குகள்-வடக்கு பிரான்ஸ் (Northern France).

தாக்குதல்கள்.—பிரான்ஸ் (France). (7 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன; 3 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—தொழிற்சாலைகள் நிறைந்த பட்டணங்கள்.—மான்ஹீம் (Mannheim), லட்விக்ஷாபன் (Ludwigshafen).

எதிரி விமான நிலயங்கள், ரயில்வேக்கள்.—பிரான்ஸ் (France), லோ கண்ட்ரீஸ் (Low Countries). (9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை, 2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

போக்குவரத்துகள், ரஸ்தாக்கள், ரயில்வேப் பாலங்கள்.—தெற்கு இதாலி (South Italy).

ரஸ்தா சந்திப்புகள்.—ஸிஸிலியிலுள்ள மெஸ்ஸினு (Messina).

மோட்டார் போக்குவரத்துகள், ரஸ்தாக்கள்.—ஸிஸிலியிலுள்ள எதிரி அரண்களுக்குப்பின்.

கப்பல்கள்.—ஸிஸிலி (Sicily).

ருஷ்யா (Russia).

(84 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான தளம், துறைமுகம்.—கொலம்பங்காரா தீவிலுள்ள விலா (Vila).

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—குரைல் (Kurile) தீவுகள்.

ஜப்பானிய தளம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள ஸலாமூவா (Salamaua).

டச்சு கிழக்கு இந்தியத்தீவுகளிலுள்ள அம்பாய்னு (Amboina), கெய் (Kai), டெனிம்பர் (Tanimbar) தீவுகள்.

ரயில்ரோட் திரும்பும் ஸ்டேஷன்கள்.—பர்மாவிலுள்ள ஸெடா (Sedaw).
சிறிய கப்பல்கள்.—மாண்டலேக்கு (Mandalay) வடக்கில்.
ரயில்ரோட் ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள பாக்கான் (Paukkan).
ஐராவதி நதித் துறைமுகங்கள்.—பர்மாவிலுள்ள காதா (Katha), பாமோ (Bhamo).

10—8—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—(3 எதிரி விமானங்கள் நாசமாக்கப் பட்டன, 16 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
ரயில்வே, தொழிற்சாலை ஸ்தலங்கள்.—தெற்கு தெர்மனி (South Germany).
இரவு.—ஜெர்மனியிலுள்ள நூரம்பர்க் (Nuremburg).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
போக்குவரத்துகள் இதர லக்ஷியங்கள்.—இதாலி (Italy).
ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள டெர்னி (Terni).
ரயில்வே, மோட்டார் போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (Southern Italy).
தரைமீதிறங்கும் விமானங்கள்.—மெஸ்ஸிஞ (Messina), இதாலியிலுள்ள டோ (Toe) வின் கடற்கரைகள்.

ருஷ்யா (Russia).
(86 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—நியூகினியிலுள்ள ஸலாமூவா (Salamaua).
துறைமுகம்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab).
ராணுவ நிலயங்கள்.—பியாபா (Pyawbwe).
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).

11—8—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—எதிரிக் கப்பல்கள்—பிரிட்டானி (Brittany).
போக்குவரத்துகள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
ரயில்வேப் போக்குவரத்துகள்.—இதாலியிலுள்ள டெர்னி (Terni).
ரயில்வேக்கள் ஸான் கியோவன்னி (San Giovanni).
கிரீஸிலுள்ள பிரவேஸா (Preveza).
போக்குவரத்துகள், ஜெர்மன் துருப்புகள்.—வடகிழக்கு ஸிஸிலி (North-east Sicily).

ருஷ்யா (Russia).
(48 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.
ரயில்வே ஜங்ஷன்கள்.—போல்டாவா (Poltava), கிராஸ்னோகிராட் (Krasnograd).

தூரக்கிழக்கு (Far East).
அலூஷியனிலுள்ள கிஸ்கா (Kiska).
விமான நிலயம்.—கொலம்பங்காராத்தீவிலுள்ள விலா (Vila).
ஜப்பானியரால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்கள்.—பர்மாவிலுள்ள அக்யாப் (Akyab) பிரதேசம்.

12—8—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
தொடர்ச்சியான எண்ணெய்க் கிடங்குகள், தொழிற்சாலைகள்.—ஜெர்மனியிலுள்ள கெல்ஸன் கிர்ச்சன் (Gelsen Kirchen), வெஸ்ஸல்ரிங் (Wesselring).
தொழிற்சாலை, இலக்குகள்.—ரூரிலுள்ள பான் (Bonn).
எதிரி விமான நிலயம்.—பிரான்ஸிலுள்ள பாய் (Poix), கோர்ட்ராய் (Courtrai), மர்வில்லி (Merville). (25 நேசதேச குண்டுபோடும் விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
தொழிற்சாலைகள், போக்குவரத்துகள்.—இதாலியிலுள்ள மிலான் (Milan).
தொழிற்சாலைகள், ரயில்வேக்கள்.—டூரின் (Turin).
எதிரிக் கப்பல்கள்.—பாரோஸ்கடல் (Paros-bay).
போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (South Italy).
போக்குவரத்துகள், அச்சுநாட்டுத் துருப்புகள்.—வடகிழக்கு ஸிஸிலி (North-east Sicily).

ருஷ்யா (Russia).
(73 எதிரி விமானங்கள் காணப்படவில்லை).
விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).
விரதுக் குவியல்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள கெய்மான் (Kaimana).
விமான நிலயம்.—டச்சு நியூ கினியிலுள்ள டிமோகா (Timeoka).
கட்டடங்கள்.—பினிஸ்ஷாபன் (Finschhafen).
படகு.—பர்மாவிலுள்ள சிண்ட்வின் (Chindwin).
பாலம்.—பர்மாவிலுள்ள வடகிழக்கு முனிவா (Monywa).
ரயில் ரோட் முடிவு.—பர்மாவிலுள்ள யீ (Ye).

சேமிப்புகள்.—பர்மாவிலுள்ள கினு (Kinu).
திரும்புமிடங்கள்.—செடா (Sedaw).
சிறிய கப்பல்.—சிண்ட்வின் (Chindwin).
படகுகள்.—பர்மாவிலுள்ள காதா (Katha), கன்னி (Kanni), மாலி (Mali)இவைகளுக்கருகிலும், செகய்ங் (Sagaing), மின்மு (Myinmo)இவைகளுக்கருகிலும்.
ரயில்ரோட் இலக்குகள்.—பர்மாவிலுள்ள ஸிகோ (Zigon),டாண்டாபின் (Tantabin).
சேனைகள், யுத்த தளவாடங்கள் தயார்செய்து சேகரிக்குமிடங்கள்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingan).

13—8—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—உற்பத்தி தொழிற்சாலைகள் தளவாடங்களும்.—ஆஸ்திரேலியாவிலுள்ள வெய்னர் நியூஸ்டாட் (Weiner Neustadt). (மிகவும் பலமான சேதங்கள் ஏற்படுத்தப் பட்டன).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

கப்பல்கள்.—ஸார்டீனியா (Sardinia).
போக்குவரத்துகள்.—தெற்கு ஸார்டீனியா (South Sardinia).
எதிரிக் கப்பல்கள்.—மெஸ்ஸினா (Messina) ஜலஸந்தி.
இதாலியின் தலைநகரான ரோம் (Rome).

ருஷ்யா (Russia).

விமானச்சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

துறைமுகம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகோ (Bairoko).
ஜப்பானிய தளம்.—ஸலாமூவா (Salamaua).
விமான நிலயம்.—ஸாலமன்ஸிலுள்ள பூயின் (Buin).
ரயில்வேப் போக்குவரத்துகள்.—மாண்டலேக்குத்(Mandalay) தெற்கிலும், மிங்யானிற்கு (Myingyan) தென்கிழக்கிழக்கிலும்.
ஜப்பானியச் சைனியங்கள்.—காலிமியோ (Kalemyo),பர்மாவிலுள்ள ஸாண்டோவே (Sandoway), கா (Gwa), அரக்கான் (Arakan)கடற்கரை.
மோட்டார் வண்டிகள்.—டயமாண்ட் (Diamond)தீவு.
ரயில்வே ஸ்தாபனங்கள்.—ஷீவிபோ (Shwebo).

14—8—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

மாலை —எதிரி விமான நிலயங்கள்—பிரான்ஸிலுள்ள செயிண்ட் ஓமர் (St. Omer), பாயிண்ட் பாய் (Point Poix), அமின்ஸ் (Amiens), விட்ரி (Vitry), எனர்டிராய் (Enatrois), லில்லி (Lille), மெர்வில்லி (Merville),ஹாலந்திலுள்ள விஸ்ஸிங்ஜென் (Vissingen).
ரயில்வே ஸ்தலம்.—பிரான்ஸிலுள்ள அப்பிவில்லி (Abbeville).
தாக்குதல்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern-France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

பிரேடா (Breda) யுத்த தளவாட தொழிற்சாலைகள்.—இதாலியிலுள்ள மிலான் (Milan).
துருப்புகள், படகுகள்.—மெஸ்ஸினா (Messina) ஜலசந்தியின் இரு கடற்கரை ஓரங்களிலும்.

ருஷ்யா (Russia).

(64 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன.)
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வே ஜங்ஷன்கள்.—போல்டாவா (Poltava), கிரெஸ்னோ கிராட் (Krasno Grad), ராஸ்லாவி (Roslavi).

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய்க் கிடங்குகள்.—போர்னியோவிலுள்ள பாலிக்பாபன் (Palikpapan).
கடல் யுத்த முனைகள்.—டிமோரிலுள்ள கொபாங் (Koepang).
கிராமங்கள்.—டெனு (Tenau).
விமான நிலயங்கள்.—டிமோரிலுள்ள பென்போய் (Penfoei).
இலக்குகள்.—அக்யாப் தீவும், அக்யாப் (Akyab) பட்டணமும்.
படகுகள்.—ஐராவதி (Irrawaddy).
கடற்கரைக் களஞ்சியங்கள்.—பர்மாவிலுள்ள ஸாண்டோவே (Sandoway).
துடிசைகள்.—ஷாக் கான் (Shauk-Kon).
தொழிற்சாலைக் கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள அல்லான்மியோ (Allanmyo).
கட்டடங்கள்.—பூதிடாங் (Buthidaung).

15—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-எதிரிக்கப்பல்-செர்பர்க் (Cherbourg) தீபகற்பம்.
தாக்குதல்கள்.—பிரான்ஸ், (France), பெல்ஜியம் (Belgium), ஹாலந்து (Holland).
விமான நிலயம்.-செயிண்ட் ஓமர் (St. Omer).
இரவு.—ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் (Berlin).
சுரங்க வேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.
எதிரி விமான நிலயங்கள், ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸ் (France), (12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—இதாலியிலுள்ள ஸாப்ரி (Sapri), ஸைபாரி (Saibari).
எதிரி போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (South Italy).

ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள விட்டர்போ (Viterbo).
ரயில்வே போக்குவரத்துகள், படகு போக்குவரத்து முடிவு.—ஸான்கியோவன்னி (Sangiovanni).
விமானமிறங்குமிடங்கள்.—கிரீஸிலுள்ள கலாமாடா (Kalamata).
படகுகள் துறைமுகங்கள், இதர போக்குவரத்துகள்.—மெஸ்ஸினா (Messina) ஜலசந்தி.

ருஷ்யா (Russia).

(59 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—காஹிலி (Kahili).
ஜப்பானிய படகுகள்.—ரெயின் பே (Rein Bay) முதல் ஸ்டெட்டின் பே (Stettin Bay) வரை.
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—டாலா கடல் (Tala), வாலிண்டி (Walindi).
கிராமங்கள்.—நியூ பிரிடனிலுள்ள கிளஸ்ட்டர் முனை (Cape Gloucester), நியூ பிரிடனிலுள்ள ஆரா (Arawe).
எதிரி ஸ்தாபனங்கள்.— அந்தமான்ஸ் (Andamans), சாதாம் (Chathan).
கிராமங்கள்.—அக்யாப் (Akyab) பிரதேசம்

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்

10—8—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

ருஷ்யா (Russia).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

ஸாலமன்ஸிலுள்ள ரென்டோவா (Rendova) வாத்தீவு.

11—8—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia),
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

12—8—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

பட்டணம்.-இங்கிலாந்தின் தென்மேற்குக்கரை.
இதர இடங்கள்.—இங்கிலாந்தின் தென் மேற்குக் கரை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கார்க்கோவ் (Kharkov).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

13—8—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை,

தூரக்கிழக்கு (Far East).

நியூ கினிக்கருகிலுள்ள கரைவினா (Karaiwina) த்தீவு.

ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் துறைமுகம்.

14—8—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கார்சேவ் (Kharchev).

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

15—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை,

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—வெல்லா லவெல்லா (Vella Lavella), (34 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன; 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

16—8—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

தேம்ஸ் முகத்துவாரம் (Thames), லண்டன் பிரதேசம், (விமான படையெடுப்பு எச்சரிக்கை மட்டும்).

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—வெல்லா லவெல்லா (Vella Lavella), (34 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

யுத்தக் குறிப்புகள்.

க்விபெக் மகாநாடு. நேசதேச ராணுவ அதிகாரிகளும், ராஜ தந்திரிகளும் மற்றொரு முறை க்விபெக்கில் கூடிப்பேசினார்கள். இதன் முடிவுகள் கஸாப்ளாங்கா மகாநாட்டின் முடிவுகளைவிட மிகவும் முக்கியமானவை. மிஸ்டர் சர்ச்சில் அமெரிக்காவுக்கு வந்து நியூ யார்க்கில் ஹைட்பார்க் என்னுமிடத்தில் ரூஸ்வெல்டை சந்தித்து மூன்று நாட்கள் சம்பாஷணை செய்தார். மிஸ்டர் ரூஸ்வெல்டும் மகாநாட்டில் கலந்துகொள்ளுவார். மிஸ்டர் ஈடனும் பிரசன்னமாகியிருப்பார். மகாநாடு முடிந்தபின் அவர் மாஸ்கோவுக்குச் சென்று ஸ்டாலினை சந்தித்துப்பேசுவார்.

அதன் நோக்கங்கள். இந்த மகா நாட்டில் ராணுவ, ராஜீய விஷயங்கள் ஆலோசிக்கப்படும். வட மேற்கு ஆபிரிக்காவில் நடைபெற்ற யுத்தத்திலிருந்து எதிர் பார்த்ததற்கு மேலாகவே பலன் ஏற்பட்டுவிட்டது. ஸிஸிலி யுத்தமும் எதிர் பார்த்ததற்கு முன்பே முடிவடைந்துவிட்டது. இலையுதிர் காலம் துவக்கமாகு முன்னதாகவே மத்தியதரைக்கடலிலும், இன்னும், மற்ற இடங்களிலும் பலமான போர் ஆரம்பமாகுமென்று மிஸ்ட்டர் சர்ச்சில் சொல்லியிருக்கிறார். மற்ற எந்த இடத்தில் என்ற பிரச்னை ஏற்படுகிறது. புதிர் போட்டால் போல் விமானப்படை மார்ஷல் ஸர் P. B. ஜோபார்ட் டி லா பெர்டி ;பின்வருமாறு சொல்லியிருக்கிறார். “ஆலப்ஸ் மலைகளின் அரணை அடைவதற்காக நேசநாடுகள் இதாலியிலிறங்கி யுத்தம் செய்யவேண்டியதில்லை. நமக்கு வேறு மார்க்கங்களிருக்கின்றன.” ஆகையால், மற்ற மார்க்கங்களென்ன என்று ஆராய்ச்சி செய்வோம். ஸ்டாலின் இரண்டாம் போர்முனையை அவசியமாக ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறான். அதாவது மேற்கே ஐரோப்பாவில் யுத்தம் ஆரம்பிக்கவேண்டும். அவ்விதம் செய்தால் கிழக்குப் போர்முனைகளிலிருந்து ஹிட்லர் 30 டிவிஷன் துருப்புகளை மேற்குப் போர்முனைக்கு அனுப்பும்படி நேரும். அப்பொழுது ருஷ்யாவுக்கு ஏற்பட்டிருக்கும் பளுக் குறைவுபடும். ஆகையால், ஸ்டாலினுடன் ஆலோஜனை செய்துகொண்டு புதிய தாக்குதலை ஆரம்பிக்கவேண்டும். அமெரிக்காவிலிருந்தும், கனடாவிலிருந்தும் ஏராளமான உதவிப்படைகள் வந்துவிட்டன. பிரிடன் பூராவிலும், ராணுவ முகாம்களும், அமெரிக்க விமான தளங்களும் நிர்மாணிக்கப்பட்டுவிட்டன. யுத்தம் செய்வதற்கு வசதியான காலநிலை வந்துவிட்டது. வடக்கு முனையிலிருந்து பிஸ்கே வளைகுடா வரையிலுமுள்ள பிரதேசத்தில் எந்த இடத்திலும் ஒரு மகத்தான தாக்குதல் செய்வதற்குத் தயார் செய்யப்படுகிறது. எங்கே தாக்குதல் ஏற்படக்கூடும். வெற்றிக்குத் தேவையான சாதனங்களான மனிதர்களும், முஸ்தீப்புகளும் தயாராகயிருக்கின்றன. ஆகிலும், எதிரியை பூராவாக முறியடித்து, அவனை நிபந்தனையற்ற சரணாகதி செய்யும்படி செய்யக்கூடிய வெற்றி நமக்கு எவ்விதம் கிடைக்கக்கூடும். துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களுடைய கஷ்டநிஷ்டூரங்களைக் கூடிய சீக்கிரத்தில் நிவர்த்திக்க வெற்றி சீக்கிரத்தில் கிடைக்கும்படி எவ்விதம் செய்வது. ராணுவ பலத்துடன் ராஜ தந்திரத்தையும் உபயோகப்படுத்துவதைவிட வேறு என்ன செய்யக்கூடும். நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை சொல்லுவதுபோல, ஜெர்மனியின் தற்காப்புகள் வலுவாகயிருக்கின்றன. ராஜதந்திர முறையிலும் ஜெர்மனி முற்போக்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளக்கூடும். ஆகையால், நாமும் ராஜதந்திர முன்னேற்ற யுத்தத்தை ஆரம்பிக்கவேண்டும். பலாத்கார யுத்தத்துடன் புத்திசாலித்தனத்தையும், முன்யோஜனையையும் நாம் உபயோகப்படுத்தவேண்டும். ஆகையினால், தான் ராஜ தந்திரிகளும், போர் வீரர்களும் க்விபெக் மகாநாட்டில் கலந்து பேசுகிறார்கள்.

வி வி வி வி வி

சரித்திர பிரசித்தமானது. சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் இப்பொழுது 6-வது தடவை சந்தித்துப் பேசுகிறார்கள். மற்ற மகாநாடுகளைப் போல இதுவும் பிரசித்தி பெற்றுவிடுமென்பதில் ஐயமில்லை. பிரிடிஷ் கடற்படையைச் சேர்ந்த பிரின்ஸ் ஆப் வேல்ஸ் யுத்தக் கப்பலில் 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் முதல் தடவை சந்தித்துப் பேசியபொழுது அட்லாண்டிக் சாஸனம் வரையப்பட்டது. பேர்ல் துறைமுகத் தாக்குதலுக்குப் பின் 1941-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் வாஷிங்டனில் நடைபெற்ற இரண்டாவது சந்திப்பிற்குப்பின் அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டது. வாஷிங்டனில் 1942-ம் வருஷம் ஜூன் மாதம் நடைபெற்ற மகா நாட்டில் கடற்படை சம்பந்தமான பிரச்னைகள் முடிவு செய்யப்பட்டன. கஸாபிளாங்காவில் 1943-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் நடைபெற்ற நான்காவது மகா நாட்டில் ஆபிரிக்காவில் அச்சுநாடுகளை முறியடிக்க திட்டம் போடப்பட்டது. எதிரிகள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்று நேசநாடுகள் வற்புறுத்தவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. மறுபடியும் வாஷிங்டனில் 1943-ம் வருஷம் மே மாதத்தில் நடைபெற்ற மகாநாட்டின் திட்டப்படி ஸிஸிலிய யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. தென்மேற்கு பஸிபிக் போர்முனையில் நேசநாடுகள் யுத்தம் துவக்கி முண்டா, லூபோ என்ற இடங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள். சர்ச்சில், ரூஸ்வெல்டின் ஆறுவது சம்பாஷனை மூலமாகவும் க்விபெக்கில் நடைபெறப்போகும் மகாநாட்டின் திட்டங்கள் மூலமாகவும் முன்போல முக்கியமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென்றும் நாம் நிச்சயமாக நம்பலாம்.

வி வி வி வி வி

க்விபெக்கில் மகாநாடு கூடுவதின் காரணம். க்விபெக் கனடாவின் தலைநகரம். ஸிஸிலிய யுத்தத்தில் கனடா கியாதி பெற்றுவிட்டது. ஐரோப்பியக் கடற்கரையில் யுத்தம் செய்ய கனேடியர்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். கனேடியர்களும், அமெரிக்கர்களும், பிரிடிஷார்களும், ருஷ்யப் பிரதி

நிதிகளும் சந்தித்துப் பேச கனடா மத்தியஸ்தலம். கனடாவில் பிரிடிஷ் சாம்ராஜ்யத்தின் முக்கியமான விமானிகள் பயிற்சி நிலயமிருக்கிறது. யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்வதில், அமெரிக்கா, ருஷ்யா, பிரிடனுக்கு அடுத்தபடியாக கனடா நிற்கின்றது. கீழேகண்ட புள்ளி விவரங்கள் இதை விளக்கிக்காட்டும். இந்த விவரங்கள் கனடாவின் வாராந்தர உற்பத்தியைக்காண்பிக்கின்றன. இவைகளில் 70-சதவிகிதம் நேசநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

விமானங்கள் 80. மோட்டார் வண்டிகள் 4,000. கவசம்பூண்ட வண்டிகள் 450. துணைக்கப்பல், சாமான் கப்பல், எண்ணெய்க் கப்பல்கள் 6. கனமான பீரங்கிகள் 940. சிறிய யுத்த ஆயுதங்கள் 13,000. பலமான வெடி மருந்துகள் 5,25,000 குண்டுகள். துப்பாக்கி முதலிய சிறிய ஆயுதங்களுக்கு உபயோகப்படக்கூடிய தோட்டாக்கள் 2,50,00,000. ரஸாயனப் பொருள்களும் வெடிகுண்டுகளும் 10,000 டன்கள். ஆயுதங்களும், போக்குவரவு மார்க்கங்களமைக்க தேவையான தளவாடங்களும் 12 மிலியன் ரூபாய்கள் பொருமானமுள்ளவை.

வி வி வி வி வி

இதாலிய ஜேனஸ் தேவதை. சென்ற வாரத்தில் படோக்ளியோ ஜேனஸ் தேவதையைப் போல் இருவகைப்பட்ட தோற்றமுள்ளவனுகயிருக்கிருனென்று சொன்னேம். அதற்குப் பிறகு பாஸிஸ்ட் சங்கங்களை ஒழித்துவிட்டோமென்றும் யுத்தத்துக்குப்பின் பொதுஜனத் தேர்தல் நடத்தப்படுமென்றும் சொல்லி சோம் ரேடியோ மூலமாக தங்களுக்கு தாராளமான நிபந்தனைகளுள்ள சமாதானம் வேண்டுமென்று வெளியிடப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

பாஸிஸத்தின் சேஷம். இந்த வாக்குறுதிகளில் கொஞ்சம்கூட உண்மையில்லை என்று நடப்புகள் ருஜூப்படுத்துகின்றன. பாஸிதத்வத்தின் சின்னங்களை அகற்றிவிட்ட போதிலும், பாஸிஸ்டு முறைகளில் அதிகாரம் செலுத்தப்பட்டு வருகிறது. முஸோலினி போய்விட்டான். ஆகிலும், படோக்ளியோவும், அவன் போலவே பொறுப்பற்ற அதிகாரம் வகித்து வருகிருன். அரசாங்கத்தின் தலைமை அதிகாரி மட்டும்தான் மாறுதலடைந்திருக்கிருர். உள் வயணத்தில் ஒரு மாறுதலும் உண்டாகவில்லை. முஸோலினியைப் போலவே படோக்ளியோவின் நிர்வாகமும் பத்திரிகைகளின் உரிமையையும், பேச்சுரிமையையும் இரக்கமன்னியில் அழித்துவருகிறது. மிலானில் சமாதானம் வேண்டுமென்று ஜனங்கள் செய்த கிளர்ச்சியை அடக்கி விட்டார்கள். வேலை நிறுத்த முறைகள் கண்டிக்கப்படுகின்றன. தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிருர்கள்.

முஸோலினியின் வீழ்ச்சியைப்பற்றிப் பேசும்பொழுது பொதுமக்களின் புரட்சியைத் தடுப்பதற்காக நிர்வாகத்தின் உயர்தர அதிகாரியை மாற்றிவிட ஒரு ஏற்பாடென்று ஜெர்மானியர்கள் வர்ணிக்கிருர்கள். சமீபகாலத்தில் புதிய நிர்வாகத்துடன் கலந்துபேச ரிப்பன்டிராப் ரோமுக்கு வந்து மூன்று நாட்கள் தங்கியிருந்தார்.

வி வி வி வி வி

ஜெர்மானியர்களின் ஆக்கிரமணம். ஏட்டிரியாடிக் கடலின் தலைப்பக்கத்திலுள்ள டிரஸ்டியையும், இஸ்திரியன் தீபகற்பத்தையும் ஜெர்மானியர்கள் பூராவாக ஆக்கிரமித்துவிட்டார்கள். இதனுல் பால்கன் நாடுகளிலுள்ள 20 இதாலிய டிவிஷன் துருப்புகள் தாயகம் வரமுடியாமல் துண்டிக்கப்பட்டுவிட்டார்கள். லம்பார்டி மாகாணத்திலுள்ள கேந்திர ஸ்தானங்களையும் ஜெர்மானியர்கள் கைப்பற்றிக்கொண்டுவிட்டார்கள். இவைகளைக் குறித்து, இதாலிய அரசாங்கம் யாதொரு ஆக்ஷேபனையையும் விடுக்கவில்லை. படோக்ளியோ ஜெர்மானியர்களை அன்புடன் ஆதரித்து வருகிருன். பாஸிதத்வத்தை அகற்றிவிட வேண்டுமென்று இதாலிய மக்கள் ஸ்பஷ்டமாக வெளிக்காட்டி விட்டார்கள். உடன் காலத்தில் சமாதானமும், ஜனநாயக முறையில் ஸ்வதந்திரமும் ஏற்படவேண்டுமென்றும் அவர்கள் விரும்புகிருர்கள். பேருக்குமட்டும் பாஸிதத்வம் மறைந்துவிட்டது. அதன் சாராம்சங்கள் இன்னும் நிலை பெற்றிருக்கின்றன. மற்ற இரண்டு கோரிக்கைகளும் பூர்த்தியாகவில்லை. இதாலியில் என்ன நேரிடும். படோக்ளியோ நீக்கப்படவேண்டும். கலகமும் அராஜகமும் இதாலியில் ஏற்படவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நேசநாடுகளின் கடமை ஒன்றுதான். பிரிடிஷ் உள்நாட்டு காரியதரிசி மிஸ்டர் ஹெர்பர்ட் மாரிஸன் சொல்லுக்றபடி, பாஸிஸம் முறியடிக்கப்பட்டு அது மற்றொரு வழியாகத் திரும்பவும், நாட்டில் பரவி விடும்படி செய்வதற்காக நாம் பாஸிதத்வத்தை எதிர்த்துப் போராடவில்லை: இதாலியிலுள்ள பாஸிஸ்ட்டு கக்ஷியைச் சேர்ந்த ஜனநாயக விரோதியின் நிர்வாகத்தை எப்படி வர்ணித்தாலும், அந்த நிர்வாகம் இதாலிய மக்களுக்கும், ஐரோப்பிய சமாதானத்துக்கும், எக்காலத்திலும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதுதான்.

ஆல்ஜியர்ஸ் ஒலிபரப்பிலும் ஸ்பஷ்டமாக எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. "முஸோலினி உங்களை பிறர் கையில் காட்டிக்கொடுத்து விட்டான். பீட்ரோ படோக்ளியோ அவ்விதமே செய்துவருகிறான். கபடம் மூலமாக 2,00,000 இதாலியத் துருப்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டார்கள். ஜெர்மானியர்கள் உங்களுடைய துருப்புகளை நிராயுதபாணிகளாக்கி வருகிறார்கள். சமாதானம் செய்துகொள்ள படோக்ளியோ ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை."

இவ்விதமான எச்சரிக்கை செய்துவிட்டு நேசநாடுகள் இதாலியை வெடிகுண்டுகள் மூலம் மறுபடியும் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆகஸ்டு மாதம் 12, 13, தேதிகளில் மிலானிலும், ரோமிலும் மறுபடியும் குண்டுகள் வீசப்பட்டன. இதாலி நிபந்தனையன்றியில் சரணாகதி செய்யும் வரையில் விமானத்தாக்குதல் நடைபெறும். ஜெர்மானியர்கள் முறியடிக்கப்படும் வரையில் நேசநாடுகளுக்கு இதாலியிலுள்ள ஆதிக்கமும் குறைவுபடாது.

வி வி வி வி வி

ரோம் ராணுவ ரக்ஷணையற்ற நகரம். போப்பாண்டவரின் சிபார்சுக்கிணங்க இதாலிய நிர்வாகம் ரோம் நகரத்தை ராணுவ ரக்ஷணையற்ற நகரம் என்று சொல்லிவிட்டது. ஆகிலும், இந்த விஷயத்தில் க்வீபெக்கில் நடக்கும் மகாநாட்டிற்குப் பின்தான் சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் முடிவான அபிப்பிராயம் கூறுவார்கள். ரக்ஷக வல்லரசுகளால் இது ராணுவ தற்காப்பற்ற நகரமென்று சொல்லப்பட்டாலொழிய இதாலிய அரசாங்கத்தார் வெளியிட்டது மட்டும் போதாது. ரோம் துறந்த நகரம் என்று ஏற்படுவதற்கு முன் ரோமிலுள்ள இருப்புப்பாதைகளின் மார்க்கமாக ராணுவ நடமாட்டம் ஓய்ந்துவிடவேண்டும். ரோமிலுள்ள துருப்புகளை வாபஸ் பெறவேண்டும். ரோமிலுள்ள யுத்த தளவாட உற்பத்தி சாலைகளையெல்லாம் மூடிவிடவேண்டும். இந்த நிபந்தனைகளைச்செய்து முடிப்பதற்காக நேசதேச கோஷ்டியார்கள் ரோமுக்குச்சென்று அவைகளைக் கவனித்துவரவேண்டும். ஆகையால், இப்பொழுது சொல்லியிருக்கும் முடிவு ஒரு சாரார் சொல்லும் அபிப்பிராயம்தான்.

வி வி வி வி வி

பெர்லின் காலிசெய்யப்படுகிறது. தன்னுடைய தலைமை காரியாலயத்தில் தன்னுடைய கூட்டாளிகளான கோயரிங், ஹிம்லர், கோயபல்ஸ், ரிப்பன்டிராப்புடனும், தரைப் படை, விமானப்படை தளகர்த்தர்களுடனும் ஒன்று சேர்ந்து ஹிட்லர் ஆலோசனை செய்து வருகிறானென்பதில் விசேஷமிருக்கிறது. ரிப்பன்டிராப் ராஜீய விவகாரங்களை விவாதிப்பதற்காக வந்திருக்கிறான். ஹிம்லர் வந்திருப்பதிலிருந்து உள்நாட்டில் புரட்சி ஏற்படுமோ என்று பயமுண்டாகிவிட்டதென்று புலப்படுகிறது. நாஸி கக்ஷிக்காரர்களுக்கு சரியான வேலை கிடைத்துவிட்டது. தங்களுடைய கக்ஷியையும், சேனையையும் ஒன்று பட்டிருக்கும்படி செய்வதுடன் பொதுமக்களையும் அடக்கியாளவேண்டிய பொறுப்பு உண்டாகிவிட்டது. ஹிட்லரின் உத்தரவுப் பிரகாரம் இதுவரையில் விடாமுயற்சியுடன் ஜெர்மானியர்கள் ரக்ஷித்துவந்த ருஷ்ய நகரங்களை சமீப காலத்தில் காலி செய்ததிலிருந்து ஹிட்லரின் செல்வாக்குக் குறைந்துவிட்டதென்றும், ஜெர்மன் தளகர்த்தர்களின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டதென்றும் புலப்படுகிறது. ஹிட்லருக்கும், சேனைகளுக்குமுள்ள சம்பந்தம் பூராவாக ஒழிந்துவிடவில்லையென்றாலும் ஹிட்லரின் செல்வாக்கு நாளடைவில் குறைந்துவிடுமென்பதில் சந்தேகமில்லை.

பிரிடிஷ் விமானப்படை இடைவிடாது பெர்லினைத் தாக்கி வருவதிலிருந்து அங்குள்ள ஜெர்மன் நிர்வாகத்தை வேறு இடத்துக்கு மாற்றிவிட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்நிய நாட்டு இலாகா ஆபீஸும், பிரசார இலாகாவும் வியன்னாவுக்கு மாற்றப்பட்டன. யுத்த இலாகா காரியாலயம் குறிப்பிடாத ஒரு நகரத்துக்குச் சென்றுவிட்டது. ஆகஸ்டு 13-ம் தேதியன்று பெர்லினை நமது விமானங்கள் 65-வது தடவை தாக்கின.

காற்றுள்ளபோதே தூத்திக்கொள்ள நேசநாடுகள் தயார்செய்து வருகிறார்கள். சரித்திரத்திலேயே மகத்தான தாக்குதல் செய்ய திட்டம் போடப்படுகிறது. நேசதேசத்தாரின் படை பலத்தின் ஒரு சிறிய பாகத்தைக்கொண்டு நேசநாடுகள் ஸிஸிலியை 38-நாட்களுக்குள் கைப்பற்றிவிட்டார்கள். நேசதேசத்தார்களிடம் இன்னும் ஏராளமான படை பலமிருந்து வருகிறது. நமது மன்னர்பிரான் பிரிடனிலுள்ள கடற்படையைப் பார்வையிட்டார். ஒவ்வொரு நாளும் டோவர் பக்கத்திலிருந்து ஏராளமான பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியைத் தாக்குவதற்குச் சென்று வருகின்றன. ஜெர்மானியர்களுக்கு பீதி உண்டாகிவிட்டது. இது முற்றிவிட்டால் குழப்பம் ஏற்பட்டுவிடும். ஹிம்லர் என்ன பிரயத்னம் செய்தாலும் கலவரத்தை அடக்கமுடியாது.

பால்கன் நாடுகள். தெற்கு ஐரோப்பா நேசநாடுகளுக்கு சமிக்கை மூலம் வரவேற்புச் செய்கிறது. போலஸ்தி எண்ணெய்ப் பிரதேசங்களைத் தாக்கியதும், யூகோஸ்லாவியாவில் புரட்சிக்காரர்களின் வெற்றிகளும், கிரீஸிலும் அல்பேனியாவிலுமுள்ள இதாலியத் துருப்புகளுக்கு பதிலாக ஜெர்மன் துருப்புகள் நிலைநாட்டப்படுவதும் ஹங்கேரியாவிலும், ருமேனியாவிலும், யுத்த எதிர்ப்புக் கலவரங்கள் தோன்றிவிட்டதும், பால்கன் நாடுகள் நிலைமை மோசமாகிவிடுவதற்குமுன் ஹிட்லரின் ஆதிக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடுமென்பதை வெளிப்படுத்துகின்றன. அச்சு நாடுகளுக்கு வெற்றி கிடைக்கும் சின்னங்கள் அற்றுப்போய்விட்டனவென்று அவர்கள் அறிந்துவிட்டார்கள். ஜெர்மானியரிடமுள்ள 300 டிவிஷன் துருப்புகளில் 190 டிவிஷன்கள் கிழக்குப் போர்முனையிலும், 50 டிவிஷன்கள் மேற்குப் போர்முனையிலும் 37 டிவிஷன்கள் இதாலியிலும், 12 டிவிஷன்கள் ஆக்கிரமிப்பு ஐரோப்பாவில் பந்தோபஸ்து வேலையிலும் ஈடுபட்டிருக்கின்றன. பாக்கியிருக்கும் படைகள் பால்கன் நாடுகளை ரக்ஷிக்க உபயோகப்படும். பால்கன் நாடுகளில் நேசதேசத்தாரின் அடக்குமுறை அதிகரித்துவிட்டது. அச்சு நாடுகளின் ஆதிக்கம் பலஹீனமடைந்து வருகிறதென்பதற்கும் இதுவும் ஒரு சூசகமாகும். ஆகஸ்டு மாதம் 7-ம் தேதியன்று பிரிடிஷ் ஒலிபரப்பு நிலயத்திலிருந்து பின்கண்ட செய்தி ஒலிபரப்பப்பட்டது. "கொஞ்ச காலம் பொறுமையுடனிருங்கள். நாஸிகளுக்கு இப்பொழுது புதிய அபாயங்கள் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் முன்னைவிட அதிக காட்டுமிராண்டித்தனமாய் அடிக்க ஆரம்பிப்பார்கள்."

வி வி வி வி வி

ஸிஸிலிய யுத்தம். 40 நாட்கள் கோரமான யுத்தம் செய்தபின் ஸிஸிலிய யுத்தம் முடிவடைந்து விட்டது. ஜெர்மானியர்கள் ஜுலை 30 முதல் கொண்டே ஸிஸிலியைக் காலிசெய்ய ஆரம்பித்தார்கள். ஆகஸ்டு 17-ம் தேதியன்று மெஸ்ஸினாவை நாம் பிடித்ததுடன் யுத்தம் நின்றுவிட்டது.

ஆகஸ்டு 10-ம் தேதி வரையில் எதிரியின் நஷ்டம் பின்வருமாறு: மாண்டவர்களும், காயம்பட்டவர்களும், கைதி செய்யப்பட்டவர்களும் சேர்ந்து 1,67,000 பேர்கள். 260 டாங்கிகள், 502 பீரங்கிகள், 1013 விமானங்களும் நஷ்டமாகின. நேசதேசக்கடற்படை, விமானப்படையின் உயர்வுக்கும் எதிரியை எந்த இடத்திலும் எதிர்த்து அவனை முறியடிப்பதென்று நேசதேசப்படைகள் ஊக்கம் கொண்டிருக்கின்றன என்பதற்கும் ஸிஸிலிய யுத்தம் சிறந்த அத்தாக்ஷியாகும்.

வி வி வி வி வி

ருஷ்யப் போர்முனை. ஓரல் விழுந்துவிட்டது. கார்கோவும் விழுந்துவிடும். இரண்டு வருஷமாக ஜென்மானியர்கள் காப்பாற்றி வந்த ஓரல் பிரயோஜனமற்றதென்றும் திட்டப்படி அதை நாங்கள் காலி செய்துவிட்டோமென்றும் எதிரியிடமிருந்து யாதொரு சங்கடமும் ஏற்படவில்லையென்றும் ஜெர்மானியர்கள் புகல் சொல்லிவருகிறார்கள். ஓரலில் சண்டையே நடைபெறவில்லையென்று ஹாஹா பிரபு சொல்லுகிறார். செய்கோன் ஒலிபரப்பில் ஓரலைச் சுற்றி கோரமான யுத்தம் நடைபெற்று வருகிறதென்று அபாண்டமான பொய் வெளியிடப்பட்டிருக்கிறது. தோல்விகளைக் குறைத்து கூறுவதில் ஜெர்மானியர்களுக்கு சாமர்த்தியமதிகம். ரிஷெவ் விழுந்தபொழுது "ஜெர்மன் பின்னணிப் படைகள் யுத்தத்தை நிறுத்திவிட்டன" வென்று அவர்கள் சொன்னார்கள். ஸாட்ஸ்க் சரணடைந்தபொழுது "நாங்கள் நகரத்தை எதிரிகள் வசம் விட்டுவிட்டோம்" என்று சொல்லப்பட்டது. டூனிஸியாவைக் காலிசெய்தபொழுது "அமெரிக்கர்களுக்கும், தெளிவுபடாதவண்ணம் நாங்கள் நிலைமையைச் சமாளித்துவிட்டோம்" என்று சொல்லப்பட்டது. ஸிஸிலிய வெற்றியைப்பற்றிச் சொல்லும்பொழுது இது நேசநாடுகளுக்கு பெரிய தோல்வியென்றும், நடவடிக்கைகள் நேசநாடுகள் எதிர்பார்த்தவண்ணம் 48 மணி நேரங்களில் முடிவடையவில்லையென்றும் அதனால், நேசநாடுகளின் மனம் கலங்கிவிட்டதென்றும் ஜெர்மானியர்கள் சொல்லிவருகிறார்கள்.

வி வி வி வி வி

யூ படகுகளின் வேட்டை. நாம் இந்த இதளில் மற்றொரு பகுதியில் பிரசுரித்திருக்கும், யூ படகுகளின் யுத்தத்தின் இழிவைப்பற்றிய ரூஸ்வெல்ட்-சர்ச்சில் கூட்டறிக்கையானது சரியான காலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஏனெனில் இப்பொழுதுதான் சென்ற ஏழு மாதங்களில் ஏராளமான கப்பல்களை மூழ்கடித்துவிட்டதாக எதிரி பிரசாரம் செய்து வருகிறான். சென்ற மூன்று மாதங்களில் ஏற்பட்ட குறைவான நஷ்டங்களை மறைத்துக்காட்ட முதல் ஏழு மாதங்களின் நஷ்டக் கணக்குகளை ஒன்று கூட்டி அவர்கள் வெளியிடுகிறார்கள். ஜூன் மாதம் முதற்கொண்டு யூ படகுகளின்

நஷ்டமும் அதிகரித்திருக்கிறது. ஹாம்பர்க்கில் யூ படகுகளின் உற்பத்தியும் தடைப்பட்டு விட்டது. இப்பொழுதிருக்கும் யூ படகுகளின் நிலைமையைப்பற்றிப் பேசும்பொழுது ஹெயின்ரிச் ஷிடிச் என்னும் ஜெர்மன் தலைமை காரியாலய உத்தியோகஸ்தர் ஆகஸ்டு 5-ம் தேதியன்று "அட்லாண்டிக் சமுத்திரத்தில் எதிரியின் தற்காப்புகள் நமது யூ படகுகளை முறியடித்துவிட்டன" என்று ஒலிபரப்பில் பிரசங்கம் செய்தான். ரூஸ்வெல்டு-சர்ச்சில் அறிக்கை இதை ஊர்ஜிதம் செய்து விடுகிறது. அந்த அறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு:—"விரிவான நடவடிக்கைகளை ஆரம்பித்தபோதிலும், யூ படகுகளின் தாக்குதலின் மூலம் சமீப காலத்தில் அதிக நஷ்டம் ஏற்படவில்லை. இந்த விஷயம் அட்லாண்டிக் கடல் மூலமாகவும், மத்தியதரைக்கடல் மூலமாகவும் நமக்கு ஏராளமான யுத்த தளவாடங்களும் துருப்புகளும் பத்திரமாகப் போய்க்கொண்டிருப்பதிலிருந்து வெளிப்படுகிறது. மே, ஜூன், ஜூலை மாதங்களில் நாம் 90 யூ படகுகளை மூழ்கடித்திருக்கிறோம். அதாவது தினசரி ஒன்று வீதம் யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. முப்பது வாரங்களுக்குள்ளாக நாம் வாரத்துக்கு லக்ஷம் டன்கள் வீதம் புதிய கப்பல்களைக் கட்டியிருக்கிறோம். நஷ்ட ஈடு செய்தது போக நம்மிடம் 3 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மீதப்படுகின்றன. இந்த வெற்றிக்கு இரண்டு காரணங்களுண்டு. யூ படகுக் கூட்டங்களை நாம் வேட்டையாடுவது ஒன்று. மற்றொன்று, மத்திய அட்லாண்டிக் பிரதேசத்தில் புதைகுழி ஸ்தலமென்று எதிரி சொல்லிவந்த வெளியில் நாம் பலமான தற்காப்புகளைச் செய்திருப்பது மற்றொன்று.

வி வி வி வி வி

விமான யுத்தம். இந்த வாரத்தில் கெல்ஸன் கொர்ச்சன், வெஸ்ஸல்ரிங், பான், ஆக்ஸ்பர்க், பெர்லின் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன. ஆகஸ்டு 13-ம் தேதி ஆஸ்திரேலியாவிலுள்ள வீனர் நியூஸ்டாட்டையும் ஆகஸ்டு 17-ம் தேதியன்று பிரான்ஸிலுள்ள மார்ஸெயில்ஸையும் நமது விமானங்கள் முதல் முதலாகத் தாக்கின. அமெரிக்க விமானங்கள் 2,500 மைல்கள் பறந்து சென்று வீனர் நியூஸ்டாட்டைத் தாக்கின. இங்குதான் மெஸ்ஸர்ஸ்ஷிமிட்ஸ் விமானம் கட்டும் தொழிற்சாலையிருக்கிறது. 400 புதிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன. மத்தியக்கிழக்கிலிருந்து ஆஸ்திரேலியாவைத் தாக்கியது இதுதான் முதல் தடவை. தெற்கு பிரான்ஸிலுள்ள மார்ஸெயில்ஸைத் தாக்கியதும் இதுதான் முதல் தடவை.

வி வி வி வி வி

நார்வே. நார்வே முற்றுகைக்குட்படுத்தப்பட்டிருக்கிறதென்று ஜெர்மானியர்கள் பறைச்சாற்றிவிட்டார்களென்று ஸ்வீடிஷ் ஒலிபரப்பில் சொல்லப்படுகிறது. ஜெர்மனியில் வேலை செய்ய வரமுடியாது என்று மறுத்த பெண்மணிகளை கைதி செய்யும்படி போட்ட உத்தரவின்படி கீழ்படிந்து நடக்க மறுத்துவிட்ட ஆஸ்லோ போலீஸ் இலாகாவைச் சேர்ந்த தலைமையதிகாரியான கர்னல் எமிலிப்ஸன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஹிட்லர் மற்றொரு உத்தரவு பிறப்பித்து விட்டாராம். ஜெர்மனியிலுள்ள நார்வே உத்தியோகஸ்தர்களெல்லாம் ஜெர்மனியிலுள்ள கைதி முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். நார்வேயிலுள்ள போலீஸ் அதிகாரிகளும், தலைவர்களின் மெய்க்காப்பாளர்களும் குயிஸ்லிங் நிர்வாகத்தைச் சேர்ந்த கவசம் பூண்ட துருப்புகளான ஹிரிட் வகுப்பினர்களும் ஜெர்மன் சேனையில் சேர்க்கப்பட்டு விட்டார்கள் என்று ஆஸ்லோ ஒலிபரப்பில் வெளியிடப்பட்டிருக்கிறது.

வி வி வி வி வி

பஸிபிக் யுத்தம். கடைசியாக வந்த செய்திகளிலிருந்து நேசநாடுகள் நியூ ஜார்ஜியாவுக்கு வடமேற்கில் 45 மைல்களிலுள்ள, ஸாலமன்ஸ் தீவைச் சேர்ந்த வெல்லா லாவல்லாவைப் பிடித்துவிட்டார்களென்றும், நியூகினியாவிலுள்ள வேவாக் தீவை நமது விமானங்கள் தாக்கினவென்றும் தெரியவருகிறது.

டெயிலி டெலகிராப் பத்திரிகையின் கடற்படை நிருபரான கம்மாண்டர் கென்னத் எட்வர்ட்ஸ் சொல்லுவதுபோல ஜப்பானியர்களுக்கு ஏராளமான சஞ்சாரிகளும், நாசகாரிகளும் நஷ்டமாகிவிட்டபடியால், இதாலியக் கடற்படையைப் போல் ஜப்பானியக் கடற்படையும் துறைமுகங்களை விட்டு சலிக்காதென்று தோன்றுகிறது. 1941-ம் வருஷத்தில் ஜப்பானிடம் 56 சஞ்சாரிகளும், 156 நாசகாரிகளும் இருந்தன. இப்பொழுது 21 சஞ்சாரிகளும், 78 நாசகாரிகளும்தான பாக்கியுள்ளவை. இப்பேர்ப்பட்ட அழிவு ஏற்பட்டால் கடற்படை நிலைத்து நிற்கமுடியாது. ஜப்பானியர்களும், இதாலியர்களும் தங்களுடைய கனமான கப்பல்களை அபாயத்துக்குள்ளாக்குவதற்கு பிரியப்படாததால் லேசான கப்பல்களைத் தியாகம் செய்து வந்தார்கள். லேசான கப்பல்கள் அழிவுபட்டுவிட்டதால் கனமான கப்பல்கள் லேசான கப்பல்களின் உதவியன்னியில் வெளிக்கிளம்ப முடியாது.

பிரார்த்தனை தினம். மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரானின் உத்தரவின் பிரகாரம் மேன்மைதங்கிய வைஸிராய் அவர்கள் யுத்தத்தின் நான்காவது வருஷ விழாவைக் கொண்டாடும் பொருட்டு ஸெப்டம்பர் 5-ம் தேதியை பிரார்த்தனை தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். மாக்ஷிமை தங்கிய மன்னர் பிரானவர்கள் ஒரு பெரிய சம்பவம் நேரிடப் போகிறதென்றும் அவசரமான அறிக்கை செய்த உடன் சாம்ராஜ்ய நாடுகள் பிரார்த்தனை தினத்தைக் கொண்டாடத் தயாராகவிருக்க வேண்டுமென்றும் அறிக்கை செய்திருக்கிறார். இதைப்பற்றி அநேக பிரச்னைகள் கிளம்பி யிருக்கின்றன. இது இரண்டாம் போர்முனையா, அல்லது இதாலியின் சரணாகதியையா குறிப்பிடுகிறது என்று கேட்கிறார்கள்.

யுத்த ஆரம்பத்திலிருந்து 10 தடவைகளில் நாம் பிரார்த்தனை தினத்தைக் கொண்டாடி யிருக்கிறோம். ஒவ்வொரு தடவையிலும் ஒரு வெற்றியைக் கொண்டாடியிருக்கிறோம்.

மூன்று மாதங்களில் 90 யூ-படகுகளை அழித்துவிட்டோம்.

ரூஸ்வெல்ட்-சர்ச்சில் கூட்டறிக்கை.

கப்பல் நஷ்டங்களின் குறைவு.

நேசதேசக் கப்பல்களை யூ படகுகள் ஜூலை மாதத்தில் விஸ்தாரமான பிரதேசங்களில் தாக்கியதிலிருந்து அதிக விளைவுகள் உண்டாகவில்லை. அட்லாண்டிக் கடல் மார்க்கமாக ஏராளமான சாமான்கள் சாவதானமாக தாக்குதலுக்குட்படாமல் பத்திரமாக போய்ச் சேருகின்றன. தூரதேசங்களில் ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களும், நேசநாடுகளின் யுத்த முயற்சிகளுக்கு அதிக இடையூறு விளைவிக்கவில்லை.

இவ்வருஷம் ஜூலை மாதத்தில் நமக்கு விசேஷ வெற்றிகள் கிடைத்திருக்கின்றன. ஏனென்றால் ஏராளமான சாமான்கள் இறக்குமதியாகியிருக்கின்றன. கப்பல் நஷ்டம் மிதமாகயிருக்கிறது. யூ படகுகள் ஏராளமாக மூழ்கடிக்கப்பட்டன.

ஸிஸிலியில் நாம் படையெடுப்பதற்கு முன்னதாக யுத்தக் கப்பல்களும், துருப்பேற்றிச் செல்லும் கப்பல்களும், சாமான் கப்பல்களும், துருப்புகள் இறங்குவதற்கு லாயக்கான சிறிய கலங்களும் கொண்ட ஒரு பெரிய கப்பற்கூட்டம் அட்லாண்டிக் சமுத்திரத்திலும், மத்தியதரைக்கடலிலும் எதிரியின் யூ படகுகளின் பலமான தாக்குதலுக்குட்படாமலேயே சென்றன. அதன் பிறகு ஸிஸிலிக்கு ஏராளமான உதவிகளும் அனுப்பப்பட்டன. இந்த நடவடிக்கைகளில் 2,500-க்கு மேற்பட்ட கப்பல்கள் ஈடுபட்டன. நமக்கு 80,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள்தான் நஷ்டமாகின. ஆனால், நம்மை வழிமறித்துத் தாக்கிய யூ படகுகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

நீர்மூழ்கிகளைத் தாக்குவதற்காக நாம் செய்துவரும் நடவடிக்கைகள் எல்லாப்பிராந்தியங்களிலும் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றன. மே, ஜூன், ஜூலை மாதங்களில் நாம் 90 யூ படகுகளை மூழ்கடித்திருக்கிறோம். அதாவது தினசரி ஒன்று வீதம் எதிரிகளுக்கு நீர்மூழ்கி நஷ்டமேற்பட்டிருக்கிறது.

யூ படகுகளின் பிரயோஜனம் குறைத்துவிட்டதென்பது கீழே விவரிக்கப்படும் கணக்கு விவரங்களைப் பார்த்தால் தெளிவாகும். 1943-ம் வருஷம் முதல் 6 மாதங்களில் யூ படகுகள் மூழ்கடித்த கப்பல்கள் 1942-ம் வருஷம் பின் ஆறு மாதங்களில் மூழ்கடிக்கப்பட்டவைகளில் பாதி பாகம், 1942-ம் வருஷம் முதல் ஆறு மாதங்களில் மூழ்கடிக்கப்பட்டவைகளில் கால் பாகம்தான்.

நேசதேசத்தாரிடம் நஷ்ட ஈடுசெய்தது போக பாக்கியிருக்கும் கப்பல்கள் ஏராளமானவை. 1943-ம் வருஷத்தில் நேசநாடுகள் ஏராளமான புதிய கப்பல்களைக் கட்டிவிட்டார்கள். பலவிதமாக மூழ்கடிக்கப்பட்ட கப்பல் நஷ்டங்களுக்கு ஈடுசெய்தது போக நம்மிடம் 3 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் மீதப்படுகின்றன.

யூ படகுகளை அழிக்கும் யுத்தம் நமக்குச் சாதகமாக இருந்துவருகிறதென்றாலும் எதிரி இன்னமும் ஏராளமான யூ படகுகளைக் கட்டிமுடித்திருக்கிறானென்பதையும் மறந்துவிடக் கூடாது.

ஆகையால், யூ படகுகளை அழிக்கும் யுத்தத்தை நாம் மும்முரமாக நடத்தவேண்டும். இந்த யுத்தமானது கடலிலும் கப்பற்கட்டும் தளங்களிலும் தீவிரமான நடவடிக்கைகள்மூலம் நடைபெறவேண்டும். கப்பல்களுக்கு அதிக நஷ்டம் வராமலும் நாம் பாதுகாக்கவேண்டும். இவ்விதம் செய்தால் நேசதேசத்தார்கள் எல்லா இடங்களிலும் முன்னேறித் தாக்குவதாகப் போட்டிருக்கும் திட்டத்துக்கு சக்தியும் வேகமும் அளித்ததாகும்.

ஸ்வதந்திரத்துக்கும், க்ஷேமத்துக்கும்.

அட்லாண்டிக் சாஸனக் கொள்கைகளை ரூஸ்வெல்டு ஊர்ஜிதப்படுத்துகிறார்.

இந்த யுத்தத்தில் மகத்தான மாறுதல்கள் ஏற்படக்கூடிய சமயம் வந்துவிட்டது. எதிரிகளின் பேரில் நமக்குப் பூர்ணமாக வெற்றி கிடைக்கவேண்டுமென்று நாம் திண்ணமாய் போர் புரிகிறோம். நம்முடைய விரோதிகள் ஜெர்மனி, இதாலி, ஜப்பான் மட்டுமல்ல. நாகரீகத்தின் முற்போக்குக்குத் தடங்கல் செய்த கொடுமைகளும், துவேஷமும், பத்திரமின்மையும், அநியாயமும் தான் நம்முடைய பரம விரோதிகள்.

நேசதேசத்தாரின் தளவாட உற்பத்தி அச்சுநாடுகளைவிட அதிகரித்து விட்டது.

ஸ்வதந்திர மக்கள் எதேச்சாதிகாரிகளை வதைத்துவருகிறார்கள்.

(நியூ யார்க் டைம்ஸ் பத்திரிகை.)

மிஸ்ட்டர் சர்ச்சிலும், மிஸ்ட்டர் ரூஸ்வெல்ட்டும் "நீங்கள் அநேக விஷயங்களை வருங் காலத்தில் அறிவீர்கள்" என்று அச்சு நாடுகளுக்குச் செய்தி விடுத்தார்கள். நாம் கெடுதல் செய்யக்கூடியவர்கள் என்றும், அவர்களைவிட அதிகமான யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்துவிடுவோம் என்றும், அவர்களிடம் சொன்னோம். அவர்கள் இந்தப் பேச்சுகளை நம்ப வில்லை. இப்பொழுது நாம் ஏராளமான யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்துவிட்டோம். அதன் விளைவாக உலகம் பூராவிலும் நமக்குப்பலம் அதிகரித்துவிட்டது.

நாம் ஏராளமான கப்பல்களைக் கட்ட முடியாது என்று எதிரிகள் சொல்லி வந்தார்கள். நாம் கட்டிவிட்டோம். ஸிஸிலியைத் தாக்குவதற்குமட்டும் நாம் 3,000 கப்பல்களை அனுப்பி இருக்கிறோம்.

வெகு தூரத்திலுள்ள தெற்கு பஸிபிக் போர்முனைக்கு நாம் சொல்பமான படைகளையும் அனுப்ப இயலாது என்று எதிரிகள் சொன்னார்கள். ஆனால் நியூகினியிலும், ஸாலமன்ஸிலும் முக்கியமான ஸ்தானங்களை மனித பலத்துடனும், விமான பலத்துடனும் நாம் கைப்பற்றி விட்டோம்.

பர்மா ரஸ்தாவை நாம் இழந்துவிட்டதால் சைனாவுக்கு உதவி அனுப்ப வேறு மார்க்க மில்லை என்று எதிரிகள் நினைத்தார்கள். ஆனால் ஜெனரல் ஸென்னால்ட்டினுடைய விமானங் கள் தகுதிக்கு 100 விமானங்களாகச் சென்று, சைனாவிலுள்ள ஜப்பானிய தளங்களை நொருக்கி வருகின்றன.

நேசநாட்டினரின் வலிமை உலகத்தின் எல்லாபாகத்திலும் விருத்தி அடைந்துவிட்டது. நமது விமானங்கள் ஏராளமாக, மேகம்போல ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றன. இப்பொழுது $2\frac{1}{2}$ மிலியன் துருப்புகள் கடல் தாண்டி யுத்தம் செய்துவருகிறார்கள். இன்னும் அநேகரும், அங்கு சென்றிருக்கலாம்.

இவைகள் நடைபெறுமென்று எதிரிகளிடம் நாம் சொன்னோம். இந்த யுத்தத்தை நாம் ஆரம்பிக்கவில்லை. ஆகிலும், இதன் முடிவு என்னவென்று எதிரிகளுக்கு நாம் தெளிவுபடச் சொன்னோம். யதேச்சாதிகாரிகள் ஸ்வதந்திர மக்களை ஒருபொழுதும் வென்றுவிட முடியாது.

இதாலியக் கடற்படையின் வருங்கால கதி.

உணவுப் பொருள்களை இறக்குமதி செய்ய உபயோகப்படும்.

(A. J. மாக்வினி).

இதாலிய யுத்தக் கப்பல்களின் வருங்காலத்திய நிலைமை என்ன ஆகும் என்பதைப்பற்றி உலகம் பூராவும் அனுமானம் செய்துவரும்பொழுது, இதாலியின் சாமான் கப்பல்களைப்பற்றி ஒருவரும் கவனம் செலுத்தவில்லை.

யுத்தம் ஆரம்பித்தபொழுது இதாலியில் $3\frac{1}{2}$ மிலியன் டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்களிருந்தன. நேசதேசக் கடற்படையும், விமானப்படையும் அவைகளைக் குறைவு படுத்திவிட்டன. இன்று இதாலியிடம் 1 மிலியன் டன்கள் எடைமானமுள்ள சாமான் கப்பல்களிருக்கின்றனவா என்றுகூட சந்தேகப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஹிட்லர் தெற்குபிரான்ஸை ஆக்கிரமித்தபொழுது விஷி ஸர்க்காரிடமிருந்து அவன்கைப்பற்றிக் கொண்ட 8,53,000 டன்கள் எடைமானமுள்ள கப்பல்களையும் இந்தக் கணக்கில் சேர்த்திருக்கிறேன். அச்சு நாடுகளுக்கு அந்த சமயத்தில் விஷி கப்பல்கள் கிடைத்தது, ஒரு பெரிய அதிருஷ்டம். ஆகிலும், நேசநாடுகளின் நடவடிக்கைகளின் மூலம் கப்பல் நஷ்டம் அதிகரித்துவிட்டதால் இந்த லாபம் பிரயோஜனப்படவில்லை.

ஜெர்மானியர்களின் உத்தரவுப்பிரகாரம் இதாலியர்கள் சாமான் கப்பல்களைத் தாங்களே மூழ்கடித்துவிட்டால் அவர்கள் தற்கொலை செய்து கொண்டதுபோலாகும்.

இதாலியர்களுக்கு ஆகார வசதிகளை இறக்குமதி செய்ய ஏராளமான கப்பல்கள் தேவையாகயிருக்கும். ஒவ்வொரு சாமான் கப்பலும் அவர்களுக்கு முக்கியம்தான். நேசதேசத்தாருடன் போர்புரிவதை அவர்கள் நிறுத்திவிட்டால், எவ்விதத்திலும் இதாலிய யுத்தம் கூடிய சீக்கிரம் முடிவடைந்துவிடும். நேசநாடுகளின் முற்றுகை அகன்று விடும். 1 மிலியன் டன்கள் எடைமானமுள்ள கப்பல்கள் கடல் மார்க்கமாக சாமான்களை இதாலிக்குக் கொண்டுவர உபயோகப்படலாம்.

ஜெர்மனியிலிருந்து ஆல்ப்ஸ் மலை வழியாக அவர்களுக்கு உணவுப் பொருள்கள் வந்து சேரவில்லை. ஸிஸிலியிலுண்டாகும் உயர்வான தானியங்களையும், இதாலியிலிருந்து ஆயிரக்கணக்கான காலன்கள் பாலையும் இதாலி ஸப்ளை செய்ததற்கு, பதிலாக ஹிட்லர் இதாலிக்குநிலக்கரியையும், கனமான எரிவெடிகளையும், ரசாயனப் பொருள்களையும் யுத்த தளவாடங்களையும் தான் அனுப்பி வருகிறான்.

யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் இதாலிக்கு நிலக்கரி அவசியம். ஜெர்மனியுடன் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டால் நிலக்கரியை நாம் கடல் மார்க்கமாக அனுப்பக்கூடும். முக்கியமாக இது பிரிடனிலிருந்துதான் அனுப்பக்கூடும். சாமான் கப்பல்களையும், யுத்தக் கப்பல்களையும் அவர்கள் பத்திரமாகக் காப்பாற்றி வைத்திருந்தால் அவர்களுக்குத் தேவையான நிலக்கரியையும், உணவுப் பொருள்களையும், தங்களுடைய கப்பல்களிலேயே மத்தியதரைக் கடல் மார்க்கமாக அவர்கள் கொண்டுவரலாம்.

தற்சமயம் இதாலியின் நிலைமை எவ்வளவு சிக்கலாகயிருந்த போதிலும் சாதாரண மக்களுக்கும், நேசநாடுகளின் கடற்படையின் யுத்த தந்திரம் நன்கு புலப்பட்டுவருகிறது.

நேசநாடுகளுக்கு, கடலாதிக்கம் உண்டாகிவிட்டதால் அதன் கடற்படை மகா சமுத்திரங்களையும் தாண்டிச் செல்ல சக்தியுள்ளது. தேவையான பிரதேசங்களுக்கு கடல் மார்க்கமாக ஆயிரக்கணக்கான கப்பல்களில் துருப்புகளை ஏற்றிச் செல்ல சக்தியுள்ள தேசம் எந்த பிரதேசத்தையும் இஷ்டப்பட்டால் தாக்கக்கூடும்.

இதாலிக்குள், ஜெர்மானியர்கள் துருப்புகளை எந்த இடத்துக்குக் கொண்டுபோனாலும், அந்த இடத்திற்கு நமது துருப்புகள் கடல் மார்க்கமாகச் செல்ல முடியும். இதாலியில் நடவடிக்கைகளுக்காக ஜெர்மானியர்கள் எந்த எந்த இடங்களிலிருந்து துருப்புகளை அகற்றிவிடுகிறார்களோ அந்த இடங்கள் பலஹீனமடைந்துவிடும். ஜெர்மன் துருப்புகளின் நடவடிக்கைகளை அறிந்துகொண்டு நமது கடற்படை பலஹீனமான பிராந்தியங்களை நொருக்கிவிடக்கூடும். கூடியசீக்கிரத்தில் வருங்காலத்தில் பிரிடிஷ், நேசதேசக் கடற்படையின் நடவடிக்கைகளில் விசேஷமாக நடைபெற்று வெற்றிபெற சாதகமளிக்கும். இதாலியிலுள்ள ஜெர்மானியர்கள் வடக்குநோக்கி எவ்வளவு தூரம் பின்வாங்கினாலும் நமது கடற்படையின் நடவடிக்கையிலிருந்துதப்பமுடியாது.

இதாலியிலுள்ள ஜெர்மன் துருப்புகளையும், இதாலியில் நேசநாடுகளை எதிர்த்து நிற்கும் இதாலியர்களையும், நேசதேசத்தாரின் துருப்புகள் கடல் மார்க்கமாகச் சென்று தாக்க முடியும்.

பிரிடிஷ் ;சேனை என்பது பிரிடிஷ் கடற்படையிலிருந்து வீசப்படும் ஒரு பெரிய குண்டென்று சொல்லலாம்.

புளோயஸ்டி எண்ணெய் ஊற்றுக்கள் நேசதேச விமானங்களால் தாக்கப்பட்டன.

2,00,000 டன்கள் நிறையுள்ள பெட்ரோல் எண்ணெய் நாசமாக்கப்பட்டன.

(டெய்லி டெலிகிராப் பத்திரிகை).

அமெரிக்க தேச லிபரேட்டர் விமானங்கள் தாக்கிய 4 நாட்களுக்குப் பிறகு ருமேனியன் எண்ணெய்க் கிடங்குகளான புளோயஸ்டியில் குண்டுகள் போடப்பட்டு எங்கும் புகைமயமாய் இருந்தது என்ற செய்தி கிடைத்திருக்கிறது.

2,00,000 டன்கள் நிறையுள்ள பெட்ரோல் ஏற்கனவே மின்னல் போல் வேகமாய்ச் செல்லும் நெருப்புகளினால் எரிக்கப்பட்டுவிட்டன என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அருகாமையிலுள்ள, எதிரிகளின் ஸ்தாபனங்களை அழித்தும், முக்கியமான இடங்களை அணிவகுத்தும், எதிரியின் சைனியங்கள் பாதுகாத்து வருகின்றன. எரிந்து கொண்டிருக்கும் கிணறுகளை நெருப்பை அணைக்க முடியாததால், வெடிவைத்து அழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நேசதேச நிபுணர்கள் புளோயஸ்டியின் வருஷாந்திர எண்ணெய் உற்பத்தி சுமார் 60,00,000 டன்கள் நிறையுள்ளது என்று கணக்கெடுத்திருக்கிறார்கள்.

தாக்குதல்கள் 3 தடவைகளாய் செய்யப்பட்டன. முதலாவதாக, இலக்குகளின் மேல் யந்திரங்கள் வெடி குண்டுகளையும், எரிகுண்டுகளையும் போட்டன. இரண்டாவது தடவை குண்டுகள் போட்டதன்னியில் முக்கியமான எண்ணெய் கொண்டு போகும் குழாய்களையும், சேமிப்புகளையும் யந்திர பீரங்கிகளாலும், பீரங்கிகளாலும் தாக்கின. 3-ம் தடவை பாஸ்பரஸ் குண்டுகளை பெட்ரோல் முதலிய எண்ணெய்கள் இருக்குமிடங்களின் மேல் போட்டன. பரந்த பிரதேசங்களின் மேல் எத்தனை வேகமாய் தாக்குதல் செய்ய முடியுமோ அத்தனை வேகமாய் குண்டுகள் வீசப்பட்டன.

புளோயஸ்டியிலுள்ள எண்ணெய் யந்திரங்கள் நாசமாக்கப்பட்டன. அவைகளைச் சேமித்து வைத்திருந்த இடங்கள் கொளுத்தப்பட்டன.

இத்தாக்குதலுக்கு அடுத்தநாள் முதல் ருமேனிய தேசத்து உத்தியோகஸ்தர்கள் எல்லா யுத்தத் தேவைக்கல்லாத மற்றைய மோட்டார் போக்குவரத்துக்களையும் நிறுத்தி விட்டனர். கார்கள் ஓடவில்லை.

ருமேனியத் தலைநகரான பூகாரெஸ்டின் டிராம் வண்டிகளில் எல்லாம் கூட்டம் அதிகமாயின. வாடகை மோட்டார் வண்டி ஓட்டிகள் எல்லாம் தலைநகர் விதிகளில் எதிர்த்து ஊர்வலம் வந்தனர்.

ருமேனியாவில் பெட்ரோலின் விலை 100-க்கு 500 ஆக ஆகிவிட்டது.

படோக்ளியோவின் ஜீவிய சரித்திரம்.

குட்டையாகவும், மொட்டத்தலையும், வெகுளியும், நாவடக்கமும் உள்ள படோக்ளியோ சாதாரண இதாலியரைவிட வேறுபட்டவன். அவன் 1871-ம் வருஷத்தில் பீட்மாண்டில் பிறந்தான். 1914-ம் வருஷத்தில் லெப்டினென்ட் கர்னல் ஆகவும், 1916-ம் வருஷத்தில் வாலிபமுள்ள இதாலிய ஜெனரலாகவும் முன்னேற்றமடைந்தான். 1896-ம் வருஷம் அபிஸீனியர்களுடன் அடோவாவில் நடைபெற்ற யுத்தத்தில்தான் இவனுக்கு முதன்முதலில் யுத்த அனுபவம் ஏற்பட்டது. அதன்பின் இதாலியர்கள் நடத்திய எல்லா யுத்தங்களிலும் அவன் ஈடுபட்டிருக்கிறான். முதல் உலக யுத்தத்தில் காபரட்டோ என்னும் இடத்திலிருந்து சேனைகள் பின்வாங்கியபின் இவன் ஜெனரல் டியாஸுக்கு அடுத்த உதவி உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டான். இதாலியச்சேனையைத் திருத்தி அமைத்து, யுத்த திட்டத்தையும் போட்டு, விட்டோரியோ, வெனடோ என்னும் இடத்தில் அவன் வெற்றி பெற்றான். ரோமாபுரியின் கவர்னராகவும், சேனைத்தலைவராகவும், 1925-ம் வருஷம் முதல் அவன் உத்தியோகம் வகித்தான். 1922-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் முஸோலினி ரோமாபுரியின் மேல் படையெடுத்தபொழுது, ரோமில் உள்ள ரக்ஷக சேனையின் தலைவராய் இருந்த படோக்ளியோவும், மற்றும் சிலரும் கருஞ்சட்டையினருடன் சேர்ந்து கொள்ளவில்லை. "என்னிடம் மூன்று பட்டாளத்தை ஒப்பிவியுங்கள் அந்தக் கருஞ்சட்டையினர் குப்பையை குண்டுவீச்சுக் காற்றினால் சிதற அடித்து விடுகிறேன்" என்று அவன் எமானுவல் மன்னரிடம் சொன்னதாகக் கூறப்படுகிறது. ஆகிலும், மன்னர் ஒப்புக்கொள்ளவில்லை. கருஞ்சட்டையினர் வெற்றி பெற்றார்கள். அபிஸீனியா யுத்தத்தில் பாஸிட்டு கட்சியைச் சேர்ந்தவரும், ரோமாபுரியில் போலீஷ் உயர்தர அதிகாரியாயிருந்தவருமான மார்ஷல் டி. போனுவின் தலைமையில் யுத்தப் போக்கு திருப்திகரமாக இல்லாததுகண்டு 1935-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் படோக்ளியோ அவருக்குப் பதிலாக சேனைத்தலைவரானார். அபிஸீனிய யுத்தத்தைப் புதியமுறையில் நடத்துவதற்காக அவன் திட்டம் போட்டான். விமானங்களிலிருந்து விஷ வாயுவைத் தாராளமாகப் பிரயோகம் செய்து அபிஸீனியர்களின் எதிர்ப்பை படோக்ளியோ நிவர்த்தி செய்தான். மூன்று மாதத்திற்குள்ளாக அவன் அபிஸீனியாவின் தலைநகரமான அடிஸ் அபாபாவிற்குள் வெற்றிகரமாக நுழைந்தான். 1939-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் அவனுடைய 68-வது வயதில் அவன் சேனையிலிருந்து விலகிக்கொண்டிருக்கவேண்டும். ஆகிலும்,

ராணுவ இலாகாவின் தலைமை அதிகாரியாக அவனை முஸோலினி நியமனம் செய்துவிட்டான். 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 10-ம் தேதியன்று முஸோலினி ஜெர்மனியுடன் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபட்ட பொழுது முஸோலினி படோக்ளியோவை சேனாதிபதியாக அமற்றினான். அபிஸீனிய யுத்தத்துக்குமுன் படோக்ளியோ பாஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவனல்ல. அதற்குப்பின் பாஸிஸ்ட் கட்சியின் காரியதரிசியான ஸ்பிராஸி என்பவர் அவனுக்கு வெகுமதியாக மெம்பர்ஷிப் அட்டையை அளித்தான். பிரான்ஸ் வீழ்ச்சி அடைந்த தன் பிரெஞ்சு பிரதிநிதிகளுடன் ஸமாதான உடன்படிக்கைகளைப் பேசச்சென்ற இதாலிய கோஷ்டியில் முஸோலினியும் ஒருவர். இது 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 23-ம் தேதி நடைபெற்றது. ஐந்து மாதங்களுக்குப் பிறகு கிரேக்கர்களால் இதாலியர்கள் தோற்கடிக்கப்பட்டபொழுது ஆல்பேனியவிலுள்ள இதாலியச்சேனைக்குத் தளகர்த்தராக படோக்ளியோ நியமிக்கப்பட்டான். 1940-வருஷம் நவம்பர் மாதம் 28-ம் தேதியன்று அவன் டிரானாவுக்கு வந்து சேர்ந்தான். ஒரு வாரத்திற்குள்ளாகவே அவனுடைய வேண்டுகோள்களுக்கிணங்க சேனாதிபதி வேலையிலிருந்து அவன் நீக்கப்பட்டான். படோக்ளியோ இதாலிக்குத் திரும்பிவந்து 1940-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 9-ம் தேதியன்று முஸோலினியிடம் விடைபெற்றுச் சென்றான். இருவர்களுக்குள் என்ன விவாதம் நடந்ததென்று புலப்படவில்லை. ஆகிலும், பாஸிஸ்ட் கட்சிக்காரர்கள் படோக்ளியோ க்ரீஸுடன் யுத்தம் செய்வதை ஆமோதிக்கவில்லை என்று அவன் பேரில் பலமான குற்றம் சாட்டி வந்தார்கள். காபரட்டோ தோல்விக்குப்பின் தேசத்தைக் காப்பாற்றிய படோக்ளியோவை நெருக்கடி ஏற்படும் பொழுது மறுபடியும் விக்டர் எமானுவல் அதிகாரத்தில் இருத்திவிடுவானென்று நடுநிலை வகிக்கும் அப்ஸர்வர்கள் நம்பியிருந்தார்கள். அதுபோல் நடந்துவிட்டது.

தென்மேற்கு பஸிபிக்கில் நேசநாடுகளின் தற்காப்பு முன்னேற்ற யுத்தம்.

"ஜப்பானை முறியடிக்க முதல் யுத்தம்."

(ஸ்ட்ரபால்கி பிரபு.)

தென்மேற்கு பஸிபிக்கில் அமெரிக்க, ஆஸ்திரேலியப் படைகள் ஒன்றுபட்டு தாக்குதல் ஆரம்பித்ததிலிருந்து முக்கியமான விளைவுகள் ஏற்படக்கூடும். பெர்ல் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படை நிலைகுலைந்த பின்னும், மலாய் நாடுகளையும் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளையும் தற்காப்பு செய்யும் முயற்சியில் பிரிட்டனுக்கும், டச்சுக்காரர்களுக்கும் ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களுக்குப் பின்னும், ஜப்பானியர்களின் பலம் அதிகரித்துவிட்டதால் அவர்கள் சென்ற வருஷம் ஆகஸ்டு மாதம் வரையில் அநேக ஊர்களைப்பிடிக்க முடிந்தது. அவர்கள் பர்மாவைப் பிடித்துவிட்டபின் இந்தியாவுக்கு அபாயம் அதிகரித்தது. நியூ கினியாவின் பெரும்பாகத்தையும், அதற்குக் கிழக்கேயுள்ள ஸாலமன்ஸ் தீவுகளையும், ஜப்பான் கைப்பற்றியதிலிருந்து அதன் நிலைமை பலமடைந்து வட அமெரிக்காவிலிருந்து பஸிபிக் சமுத்திர மார்க்கமாய் ஆஸ்திரேலியாவுக்குப் போகும் கடல் மார்க்கங்களுக்கு அபாயம் உண்டுபண்ணக்கூடிய சௌகரியமுமேற்பட்டது.

இந்த உலக யுத்தத்தில் ஜப்பான் சேர்ந்து கொள்ளுவதற்கு மூன்று வருஷங்களுக்கு முன் முதற்கொண்டு அமெரிக்கர்கள் கனமான யுத்தக் கப்பல்களைக்கட்டும் திட்டத்தை ஆரம்பித்து பூர்த்திசெய்து வந்ததால்தான் அதற்கு ஏற்பட்ட கப்பல் நஷ்டங்களை ஈடுசெய்ய முடிந்தது. ஜப்பானும், இதர அச்சு நாடுகளும் அமெரிக்காவின் பேரில் போர் துவக்கியதற்கு முன் யுத்தத்தில் ஈடுபடாமல் தனித்திருக்கவேண்டுமென்ற கோஷ்டியின் வலு எவ்விதமிருந்த போதிலும், இரண்டு கடலிலும் சஞ்சாரம் செய்யத் தேவையான கப்பல்களைக் கட்டிவிட வேண்டுமென்பதில் எல்லாக் கக்ஷியினரும் ஏகமனதுடனிருந்தார்கள். அமெரிக்கக் காங்கிரஸின் ஆதரவின் கீழ் ஏராளமான யுத்தக் கப்பல்கள் கட்டப்பட்டு வந்தன.

இந்த யுத்த முனையில் அமெரிக்க, ஆஸ்திரேலிய விமானங்களின் சங்கியையும், யந்திர அமைப்பும் எதிரிகளுடையதைவிட சிறந்தவையென்று அவைகள் நிர்த்தாரணம் செய்துவிட்டன. ஜப்பானியர்களிடம் முன்னணியில் விமான தளங்களும், கப்பல் தளங்களும் அதிகமாகயிருந்தன. இவைகளை நாம் கைப்பற்றிவிட்டால் ஜப்பானின் நிலைமை மோசமாகிவிடும்.

ஜப்பானியர்கள் மற்றொரு இடத்தில் கடற்படை யுத்தம் ஆரம்பித்து நமது கவனத்தை வேறுபக்கம் திரும்பிவிடுவார்களாவென்பது ஏற்கனவே க்ஷீணத்துவரும் கடற்படையை ஜப்பான் அபாயத்துக்குள்ளாக்கிவிடுமா என்பதைப் பொருத்திருக்கிறது. யுத்த ஆரம்பத்திற்குப்பின் ஜப்பானியர்களுக்கு மூன்று யுத்தக் கப்பல் மூழ்கிவிட்டன. 10 கப்பல்கள்

பழுதுபட்டுவிட்டன. பழுது பட்டவைகளைச் சீர்படுத்திவிடுவதாக வைத்துக்கொண்டாலும் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு லாயக்குள்ள 6 யுத்தக் கப்பல்களை ஜப்பான் தயாரிக்க முடியுமாவென்பது சந்தேகாஸ்பதமானது. பேர்ல் துறைமுகத்தில் பழுதுபட்ட ஆறு அமெரிக்க யுத்தக் கப்பல்களும் பழுது பார்க்கப்பட்டு வேலை செய்து வருகின்றன. புதிதாக அமெரிக்காவில் கட்டப்பட்ட யுத்தக் கப்பல்கள் கொண்ட கடற்படையும் பஸிபிக்கில் நடமாடுகின்றதென்றும், எந்த நேரத்திலும் போர்புரியத் தயாராகயிருக்கின்றனவென்றும் விளங்குகிறது.

ஜப்பானியர்களுக்கு ஏராளமான விமானம் தாங்கிக் கப்பல்களும், சஞ்சாரிகளும், நாசகாரிகளும் நஷ்டமாகியிருக்கின்றன. தாய்நாட்டின் சமீபத்தில் நடைபெறப்போகும் யுத்தத்திற்காக பாக்கியிருக்கும் கப்பல்களை ஜப்பான் பத்திரப்படுத்தி வைப்பதுதான் இயல்பான காரியமாகும். நியூ கினியாவுக்கு அருகில் கடற்படை யுத்தம் செய்வதென்பது ஜப்பானியக் கப்பல் தளங்களுக்கு வெகுதூரத்தில் நடைபெறக்கூடியது. இந்தக் கப்பல் தளங்களில்தான் பழுதுபட்ட பெரிய யுத்தக் கப்பல்களைக்கொண்டுபோய் ஜப்பான் சீர்படுத்தலாம். நியூ ஜார்ஜியாவிக்கருகில் யுத்தம் நடந்தால் கப்பல்கள் பழுதுபட்டால் அவைகளை சுலபமாகச் சீர்படுத்த முடியாததால் அவைகள் நஷ்டமாகிவிடும்.

ஜப்பானியக் கப்பல்கள் தங்களுடைய கப்பற் தளங்களிலிருந்து வெகு தூரத்தில் யுத்தம் செய்வதிலுள்ள சிரமங்களெல்லாம் பெர்ல் துறைமுகத்திலிருந்தும், ஸிட்னி துறைமுகத்திலிருந்தும் வெகுதூரத்தில் சண்டை செய்யக்கூடிய அமெரிக்கக் கடற்படைக்கும் ஏற்படக்கூடியதுதான்.

ஆகிலும் அமெரிக்கக் கடற்படைக்கு பக்கபலமாக பிரிடிஷ் கடற்படையிருக்கிறது. யுத்தத்தில் நஷ்டமடைந்தவைகளையெல்லாம் பிரிடன் ஈடுசெய்துவிட்டது. இதை விஞ மத்தியதரைக்கடலில் நடைபெறும் யுத்தத்தின் தேவைகளுக்கும், வடக்கு ஐரோப்பிய சமுத்திரங்களில் ஜெர்மன் யுத்தக் கப்பல்களின் நடவடிக்கைகளைக் கண்டிப்பதற்கும் தேவையான கப்பல்களுக்கும் உபரியாக பிரிடனிடம் உபரிக் கப்பல்களிருக்கிறபடியால் அவைகளை இங்கு உதவிக்கு அனுப்பக்கூடும்.

தாத்காலிகமாக ஜப்பானியருக்குக் கடல் மார்க்கத்தில் சௌகரியமேற்பட்டதினால்தான் பஸிபிக்கில் ஜப்பானுக்கு ஏராளமான வெற்றிகள் கிடைத்தன. ஆனால் இந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டால் காலக்கிரமத்தில் ஜப்பான் கைப்பற்றிய தீவுகளையும், நாடுகளையும் அது இழந்து விடக்கூடும்.

ஆகையால், நேசநாடுகளின் அபிப்பிராயப்படி இப்பொழுது நடைபெறும் யுத்தங்களெல்லாம் தற்காப்புக்காக முன்னேறித்தாக்குவதேயாகும். இதை விளக்கிச்சொன்னால், ஆஸ்திரேலியாவுக்கு இனிமேல் அபாயம் ஏற்படாமல் தடுத்துவிடுவதற்குத்தான் யுத்தம் நடத்தப்படுகிறது. காலக்கிரமத்தில் நமக்கு லாபகரமான முறையில் யுத்தத்தை நாம் நடத்தக்கூடும். பஸிபிக்கில் ஒவ்வொரு தீவாகப் பிடித்து முன்னேறுவது என்ற திட்டத்தை அவரும், அவருடைய ஆலோசகர்களும், புரக்கணித்துவிட்டார்களென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து ஒன்றன்பின் ஒன்றாக ஜப்பானியர்களை விரட்டியடிப்பதென்பது, முக்கியமாக சிரமமான கால நிலையுள்ளபொழுது, வெகுகாலம் பிடிக்கும். மிகவும் பரிச்சிரமப்படவேண்டியதாகவுமிருக்கும். ஜாவாத் தீவைத் தவிர மற்றெல்லாத் தீவுகளும் மலைப்பிராந்தியம். பெரும்பாலும் அடர்த்தியான காடுகளுள்ளவை. ரஸ்தாக்களும், இருப்புப்பாதைகளும் அவைகளில் கிடையாது. இப்பொழுது யுத்தம் நடைபெற்றுவரும் கிழக்குக்கோடியிலுள்ள தீவுகளிலிருந்து எதிரியை விரட்டிவிடுவோமாகில் சிதறிக்கிடக்கும் தீவுகளுள்ள காரலைன் தீவுகளைக் கைப்பற்றுவதற்காக விமானப்படையின் சக்தியை அவலம்பித்து தாக்குதல் செய்ய நமக்கு வசதி உண்டாக்கிவிடும்.

காரலைன் தீவுகளும், அவைகளுக்குக் கிழக்கேயுள்ள மார்ஷல் தீவுகளும், வெர்ஸேயில்ஸ் ஒப்பந்தப்படி ஜப்பானின் அமுலுக்குட்படுத்தப்பட்டன. ஒப்பந்தத்தின் ஷரத்துகளுக்குப் புறம்பாக ஜப்பான் அவ்விடங்களில் கடல், விமான தளங்களை ஸ்தாபித்துவிட்டது. அவைகள் அநேகம் தீவுகள் கொண்டவை. கடல் பிரதேசத்தில் சிதறிக்கிடக்கின்றன. ஜாவா, ஸுமத்ரா, போர்னியோ தீவுகளைப் பிடிப்பதற்கு அவசியமாக தரைச்சண்டை செய்தாக வேண்டும். இந்தத் தீவுக் கூட்டங்களைப் பிடிப்பது அவ்வளவு சிரம சாத்யமான காரியமல்ல.

காரலைன் தீவுகளில் நேசநாடுகள் ஊன்றிவிட்டால் ஜப்பானுக்கும், பிலிப்பைன்ஸுக்குப்போகும் கடல்மார்க்கங்களுக்கும், பிரெஞ்சு இண்டோ-சைனாவுக்கும், மலேயாவுக்கும் விலாப்பக்கத்தில் நாம் நிலைநாட்டிக்கொண்டுவிடலாம். நமது முயற்சிகள் வெற்றிகரமாக முடிவுபெற்றால் தென்மேற்குப் பஸிபிக்கில் வெற்றிகள் மூலம் 1942-ம் வருஷத்தில் ஜப்பான் ஏற்படுத்தியிருந்த பலமான கேந்திர ஸ்தானங்கள் பலஹீனமடைந்துவிடும். ஜப்பானிய

யுத்தக் கடற்படைக்கு ஏற்பட்ட நஷ்டத்தை விட, துருப்புகளையும் சாமான்களையும் ஏற்றிச் செல்லும் அநேக ஜப்பானிய வியாபாரக் கப்பல்களும் நஷ்டமாகியிருக்கின்றன.

ஜப்பான் இருவகைப்பட்ட யுத்தம் புரிந்து வருகிறது. சைனாவிலும், பர்மாவிலும் ஜப்பானியத் துருப்புகளும், விமானங்களும் சண்டையை நடத்தி வருகின்றன. தரையிலுள்ள துருப்புகளும் ஆசியா கண்டத்திலுள்ள விமான தளங்களிலுள்ள விமானங்களும், இந்த யுத்தத்தை முடிவு செய்துவிடும். மற்றொரு யுத்தம் பஸிபிக் மஹா சமுத்திரத்தில் தூர தேசங்களில் நடைபெற்று வருகிறது. நமது யுத்தக் கப்பல்களும் கப்பற்படையைச் சேர்ந்த விமானப்படையும் தீவுகளிலுள்ள தளங்களைப் பிடிப்பதின் மூலம் இந்த யுத்தத்தில் வெற்றி பெற்று விடும்.

கடல் யுத்தத்தில் ஜப்பானை முறியடிக்கக்கூடிய முதல் யுத்தமானது இப்பொழுது நியூ கினியாவுக்குக் கிழக்கே உள்ள உஷ்ணந்த ரேகையிலிருக்கும் தீவுக்கூட்டங்களிலும் அதைச்சுற்றிலும் நடைபெற்று வருகிறது.

குரங்கு முறைகள்.

(MONKEY METHODS).

நியூகினியிலுள்ள மூபோ சமவெளியை ஆக்கிரமித்திருந்த 9 மாதங்களுக்குள் ஜப்பானியர்கள் மிகவும் பலத்தோடு தங்களை பலப்படுத்திக்கொண்டிருந்ததால் நேரான முறையில் தாக்குதல் செய்து அவர்களை விரட்டுவதற்கு பெரும் படைகள் வேண்டியிருக்கும் என்று ஆஸ்திரேலிய யுத்த நிருபர் H. J. ஸ்மட்ஸ் கூறுகிறார்.

மலைகளின் மேல், அவர்கள் தவர்ந்து பதுங்கிக்கொள்ளுமாறு அநேக மறைவிடங்களை உண்டாக்கி, அதனுடன் பல கீழ்தரை சுரங்கங்களையும் கட்டியிருந்தனர். அவர்கள் ஜப்பானிய முறைகளிலேயே பல ஜால முறைகளைக்கையாண்டனர். கோமியாதத்திலிருந்து அவர்களுக்குச் செல்லும் ஸப்ளைகளை நாம் செல்லவிடாமல் தடுத்துவிட்டதால் அவர்கள் அவர்களுடைய அந்தக் குழிகளிலிருந்து வெளியேறும்படி ஆகிவிட்டது.

நடந்த விபரங்களை உணர்நததும், இத்துருப்புகள் உடனே வெளியேறிவிட்டனர். நமது நிருபர், இப்படைதான் ஸலாமூவாவிற்கருகிலுள்ள மலைச்சாரலில் நடந்த யுத்தத்தில் ஈடுபட்ட எதிரியின் சைனியங்களாகும் என்று நம்புகிறார்.

நியூகினிக்காக சண்டைபோடும் இந்த இரண்டாம் சண்டையில் எதிரி கையாளும் முறையானது, முதலில் பாபூவாவில், கையாண்டதுபோன்ற குரங்கு முறை (Monkey method) களேயாகும்.

ஒரு புதரில் கயிரைக் கட்டிக்கொண்டு வேறொரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு கயிற்றை இழுத்து அங்கு தங்கியிருப்பதாக பாசாங்கு செய்தனர். நன்றாய் மறைவான குழிகளில் தங்கியிருந்த மற்றவர்கள் நம் படைகளின் வெடிகளை வேறொரு இடத்திற்கு கூக்குரலிட்டு மாற்றிவிடுகிறார்கள். இம்முறைகள் முதலில் பயனளித்தனவெனினும் இப்பொழுது ஆஸ்திரேலியர்கள் அவர்கள் தங்கியிருக்கும் இடங்களை அறிந்துகொள்ளுகிறார்கள். இவர்கள் அகப்பட்டுக்கொள்ளுவதில்லை. தாக்குதல்களில் சப்தங்களை உண்டாக்குவதென்றுஇம்முறையை ஜப்பானியர்கள் கையாளுகிறார்கள். சப்தமிட்டுக்கொண்டு அவர்கள் ஓடுகிறார்கள், இவர்களை வேகமாய்த் தாக்கித்தான் நம் படைகள் அவர்களுக்கு, சிறிய யந்திர துப்பாக்கிகளாலும், தானே இயங்கும் தளவாடங்களாலும் பெருத்த நஷ்டத்தை விளைவித்திருக்கின்றனர்.

சைனா, இந்தியாவுடன் பொருளாதார நட்பு வைத்துக்கொள்ளப் பிரியப்படுகிறது.

தேசத்தின் சிரமங்களைப்பற்றி டாக்டர் சூங்க்.

('டெயிலி மெயில் பத்திரிகையில்' கை ராம்ஸி எழுதுகிறார்).

சைனாவின் திரவிய நிபுணரும், அயல்நாட்டு மந்திரியும், ஜெனராலிஸிமோ சியாங்கே ஷேக்குக்கும், குடியரசு நிர்வாகத்தை ஸ்தாபித்த ஸன் யாட் ஸென்னுக்கும் மைத்துனனுமான டாக்டர் T. V. சூங்க் என்பவர் 50 பத்திரிகைகாரர்கள்கூடிய மகாநாட்டில் சரமாரியான கேள்விகளுக்கு விடையளித்தார்.

அவருடைய நடவடிக்கை அற்புதமானது. பொருளாதார முறைகளையும், போக்கு வரத்து பிரச்னைகளையும், ராணுவ நடவடிக்கைகளையும் யுத்தத்துக்குப்பின் நடைபெற வேண்டிய திட்டங்களையும்பற்றி அவர் பதிலளித்தபொழுது ஆறு வருஷங்களாக யுத்தத்தினாலும், ஜப்பானிய ஆக்கிரமணத்தினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் சைனாவில் மின்னல் வெளிச்சம் தோன்றி ஜோதிமயமாகக் காணப்பட்டதுபோலிருந்தது.

சைனாவின் சிரமங்களை அவர் மனதார ஒப்புக்கொண்டார். அவர் சொன்னதாவது: "சைனாவில் விலைவாசியின் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. இது யுத்தத்தின் விளைவு. இதிலிருந்து குடியானவர்கள் அதிகச் சிரமப்படவில்லை. எப்பொழுதும்போல், இப்பொழுது உத்தியோகஸ்தர்களும், பண்டிதர்களும், நிகுதியான வருமானமுள்ள பொதுஜன சேவகர்களும்தான் அதிகமாக சிரமப்படுகிறார்கள். விலைவாசிக்குத் தகுந்தபடி அவர்களுடைய உபரிச் சம்பளம் உயர்த்தப்படுவதில்லை. வரி விகிதங்களை நாணயத்திலில்லாமல் சாமான்கள் மூலம் வசூலிப்பதன் மூலம் இதை நிவர்த்திக்க நாங்கள் ஒரு சிறிது செய்துவருகிறோம். நெல் சாகுபடி செய்யும் குடியானவன் தானியத்தைக்கொண்டு வரி செலுத்திவிடுகிறான். அரசாங்கத்துக்கு நெல் கிடைத்துவிடுகிறது. இதைக்கொண்டு சேனை போஷிக்கப்படுகிறது.

"சைனாவில் வறுமைப் பிணியே கிடையாது. ஆனால் ஜப்பானியர்கள் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளில் இந்தக் கஷ்டமேற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்களைப்போலவே ஜப்பானியர்களும் "யாருக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டாலும், எங்களுக்குக் கிடையாது" என்று சொல்லி வருகிறார்கள். அந்த இடங்களைத் தவிர மற்ற இடங்களில் பஞ்சமே கிடையாது. நீங்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியம் என்று நினைக்கக்கூடிய அநேக சாமான்கள் எங்களுக்குத் தேவை."

ராணுவ சம்பந்தமாகப் பேசும்பொழுது, சீனர்கள் அமைத்த பர்மா ரஸ்தா வழியாக இதற்குமுன் மாதம் ஒன்றுக்கு 25,000 டன்கள் எடைமானமுள்ள தளவாடங்கள் போய்க்கொண்டிருந்ததென்றும், இப்பொழுது சைனாவுக்கு முஸ்தீப்புகளை அனுப்பக்கூடிய ஆகாய மார்க்கமாக நேசதேசத்தார்கள் அந்த அளவுக்கு சாமான்களை அனுப்பக்கூடவில்லையென்றும் டாக்டர் சுங் ஒப்புக்கொண்டார். "ஜெர்மனி ருஷ்யாவைத் தாக்கிய 1941-ம் வருஷம் வரையில் சைனாவின் பெரும்பான்மையான ஸப்ளைகள் ருஷ்யாவிலிருந்து கிடைத்துவந்தன. அதன் பிறகு சீனர்களுக்கு அனுப்பும்படியாக உபரி சாமான்கள் தங்களிடமில்லையென்று ருஷ்யா ஸ்பஷ்டமாக அறிவித்துவிட்டது. ஆகிலும், இப்பொழுதும் ஒரு சிறிது உதவி ருஷ்யாவிலிருந்து வந்துகொண்டிருக்கிறது."

இதற்குப்பின் ருஷ்யாவின் பொதுவுடமைக் கொள்கையைப்பற்றி அவர் பிரஸ்தாபித்தார். சைனாவில் இந்தக் கொள்கை சம்பந்தமான பிரச்னை தீர்ந்துவிடவில்லையென்று ஒப்புக்கொண்டார். ஆகிலும் ராஜீய ஒற்றுமை ஏற்பட்டுவிட்டதென்று அவர் கூறினார். பொது உடமைக் கக்ஷிக்கார சேனைகளும், தேசியப் படைகளும் ஒன்றுபட்டுவிட்டன. இந்தப் படைகள் இடைவிடாது கொரில்லாச் சண்டை செய்துவருகிறார்கள்.

"ஜப்பானியத் துருப்புகளில் 4,00,000 பேர்கள் மஞ்சூரியாவிலிருக்கிறார்கள். மஞ்சுகோ நிலைத்திருக்கிறதென்று நான் ஒப்புக்கொள்ள முடியவில்லை" என்று கடுகடுத்த மூஞ்சியுடன் அவர் சொன்னார். சைனாவில் ஒவ்வொரு டிவிஷனிலும் 25,000 முதல் 35,000 துருப்புகளுள்ள 30 டிவிஷன்களிருக்கின்றன.

எங்களைச் சமாதானப்படுத்தும் முறையில் ஜப்பானியர் செய்துவரும் பிரயத்தனத்தைப் பற்றிப் பேசும்பொழுது இதற்கு 6 வருஷ காலாவதி சென்றுவிட்டது. நாங்கள் யுத்தத்தை இவ்வளவு காலம் நடத்திவிட்டு, அதன் பிறகு இப்பொழுது சமாதானத்தை விரும்ப மாட்டோம்.

ஆகிலும், அவர்கள் சமாதான முறையில் இறங்கிவிட்டார்கள். ஜப்பானிய நாணயம்தான் சைனாவில் செலாவணியிலிருக்கவேண்டுமென்று இப்பொழுது அவர்கள் கட்டாயப்படுத்தவில்லை. அவர்கள் பொம்மை அரசாங்கங்களையும், பொம்மை நாணயங்களையும் ஆதரித்து வருகிறார்கள்.

"அவர்கள் கைப்பற்றியிருந்த தொழிற்சாலைகளையும், சீனர்களிடம் திரும்பி ஒப்படைத்து வருகிறார்கள். ஆனால் பொம்மைத் துருப்புகள் சமயம் வாய்த்தபொழுது தங்களுடைய ஆபீஸர்களைக் கொன்றுவிட்டு சீனச் சேனையுடன் சேர்ந்துவிடுகிறார்கள்."

யுத்தத்துக்குப்பின் ஏற்படும் உலக அமைப்பைப்பற்றியும் டாக்டர் சூங் தெளிவாகவும், நட்பமாகவும் விவகரித்து அபிப்பிராயங்களை தெளிவுபட வெளியிட்டார். அவர் சொன்னதாவது: "எங்களைப் பொறுத்தமட்டில் வித்தியாசம் பாராட்டாமலிருந்தால், வருங்காலத்தைப்பற்றி நாங்கள் பயப்பட வேண்டியதில்லை. அயல்நாட்டாரின் உதவி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் யுத்தத்துக்குப்பின் மகத்தான தொழிற்சாலைகளை நாங்கள்

நிர்மாணம் செய்யப்போகிறோம். அயல்நாட்டாரின் மூலதனத்தையும் யந்திர நைபுண்யத்தையும் உபயோகப்படுத்த அவர்களுக்கு சந்தர்ப்பமளிப்போம். ருஷ்யாவில் நடைபெற்றது போல், பொருள் ஏராளமாகயிருந்தால் யந்திர வேலைக்காரர்களைச் சம்பாதித்துவிடலாம். அயல்நாட்டாருக்கும் எங்களிடத்தில் அக்கரையிருக்கவேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேல்நாட்டார்கள் இஷ்டப்பட்டால், ஒத்துழைப்பதற்கு அவர்களுக்கு நாங்கள் சந்தர்ப்பங்களை அளிப்போம். நேசநாட்டினரிடம் சீனர்களுக்குள்ள மனப்பான்மையை அறியவேண்டுமானால் சுடப்பட்ட விமானங்களிலிருந்து கீழே குதித்த விமானிகளுக்கும் பிரிடிஷ் கப்பல்களிலிருந்து கப்பல் உடைபட்டு கரையில் வந்துசேரும் மாலுமிகளுக்கும், எவ்வித அபாயத்தையும் பொருட்படுத்தாமல் சீனர்கள் உதவியளிக்கும் முறைகளைக் கவனித்துப்பாருங்கள்.

யுத்தத்துக்குப் பின் உண்டாகும் உலக அமைப்பில் சீனாவுக்கு ஜனங்கள் குடியேற வேண்டிய அவசியம் ஏற்படாது. தாய் நாட்டை சீர்திருத்தஞ் செய்வதில்தான் சீனர்கள் ஈடுபட்டிருப்பார்கள்.

இப்பொழுது அவர் அர்த்தபுஷ்டியுடன் பேச ஆரம்பித்தார். "எங்களுக்கு ராஜ்ய லாபம் அடையவேண்டுமென்ற எண்ணமில்லை. சியாமிலும், இந்தோ-சைனாவிலும் சீனர்களிருக்கிறார்கள். எங்களைச் சரியான முறையில் நடத்தும் வரையில் நாங்கள் ஒரு வம்பும் செய்ய மாட்டோம்" என்று சொன்னார். இந்தியாவுக்கும், சீனாவுக்கும் நெருங்கிய பொருளாதார நட்பு ஏற்படவேண்டுமென்று அவர் ஆசைப்படுவதாகவும் வெளியிட்டார். ஆகிலும் அவருடைய பல்லவி ஆரம்பத்திலும், முடிவிலும் யுத்தத்தைப்பற்றிய பேச்சுதான்.

டாக்டர் சூங்க் ராணுவ, பொருளாதார, ராஜீய விவகாரங்களிலெல்லாம் ஈடுபட்டவர். பருவ காலம் வந்துவிட்டதாலும் விமானங்கள் இறங்குவது கஷ்ட சாத்தியமாகயிருப்பதாலும் இப்பொழுது சாமான்களை ஏற்றி அனுப்புவது சிரமமாகயிருக்கிறது. இனிமேல் அவைகளைத் துரிதமாக அனுப்பக்கூடும். போக்குவரவுக்கு நம்மிடம் ஏராளமான விமானங்களிருக்கின்றன. ஆகிலும் இப்பொழுது போக்குவரவு பிரச்னைதான் முன்னிற்கின்றது. ஜப்பான் நமது இருப்புப்பாதை மார்க்கங்களை ஆக்கிரமித்து அங்கிருந்த தண்டவாளங்களை அப்புறப்படுத்தி வேறு இடங்களில் அமைத்துவிட்டது. ஜப்பானிய இருப்புப்பாதைகள் வழியாகச் சென்று ரெயில்வே எஞ்ஜின்களை அபகரிக்க நாங்கள் எங்களுடைய கொள்ளையடிக்கும் கோஷ்டிகளையும் அனுப்பியிருக்கிறோம்.

இவ்விதம் செய்தால்.

(ஸௌத் இந்தியன் பிரசுரம்).

எல்லோரும் கேட்கும்படியாக உன்னைச்சுற்றிலுமுள்ளவர்கள் பிதற்றிக்கொண்டிருக்கும் பொழுது உன் நாவை நீ அடக்கிக்கொண்டு, அவர்கள் உன்னுடைய நல்லெண்ணத்தைப் பற்றி சந்தேகம் கொண்டாலும் அவர்களிடம் ஐந்தாம்படையினர் சமீபத்திலிருக்கிறார்களென்று அறிவிப்பாயாகிலும்,

கடிதத்தில் ஏராளமான தகவல்களை எழுதியனுப்பவேண்டுமென்று உத்தேசிக்குமுன் தீர்க்காலோசனை செய்து புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளுவதுதான் மேலானதென்று நினைத்து அடக்கமாயிருப்பாயாகிலும்,

அனாவசியமான சம்பாஷணையில் ஈடுபட்டால் அதன் மூலம் உன்னுடைய சிநேகிதனுக்கு ஆபத்துவந்துவிடுமென்று நீ மதித்து, உன் சிநேகிதனுடைய விபத்துக்கு நீதான் ஜவாப்தாரி என்று அறிந்துகொள்ளுவாயாகிலும்,

அமைதியும், அடக்கமுமுள்ள உனக்கு அறிமுகமில்லாதவனைச் சந்தித்து அவன் ஜப்பானுடைய நண்பனென்று கண்டுபிடித்து அவனிடமிருந்து அபாயம் நேரிடுமென்று உணர்ந்துவிடுவாயாகிலும்,

நகரத்தில் அபத்தமான வதந்திகளைக் கிளப்பிவிட்டு குதூகலமடையும் முட்டாளை நீ கண்டுபிடித்து, அவனை அருவருப்புடன் மதித்து, அவன் ஒரு சமூக தொத்து வியாதியென்று அவனை சிக்ஷைக்குக்கொண்டுவந்தாலும்,

சட்டதிட்டங்களை மனதில் இறுத்தி அதன்படி ஒவ்வொருவரும் நடந்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தியும் அவைகளை உன்னுடைய மனைவிக்கும், சுற்றத்தார்களுக்கும் விளக்கிக் காட்டினாலும்,

நீ உன்னுடைய தேசத்திற்கு உதவி செய்தவனாவாய். எதிரிக்கு ஒத்தாசை செய்யாதவனாக ஆகிவிடுவாய்.

ஸெலின் ரிசர்ட்ஸன்.

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—4—0 ; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0 ; மொராக்கோ ரூ. 2—0—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசிய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 160. (5-வது பிரிவு).

21- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	25- 8-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
22- 8-43	கீரனூர்	... ,,	7.00	,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	நாஞ்சூர்	... ,,	7.30	,,	மிரட்டுநிலை	... மாலை	7.00
23- 8-43	பூவரசகுடி	... ,,	7.00	,,	அரிமளம்	... ,,	7.30
,,	வேங்கடகுளம்	... ,,	7.30	26- 8-43	பூங்குடி	... ,,	7.00
24- 8-43	பெருங்களூர்	... ,,	7.00	,,	சத்யமங்கலம்	... ,,	7.30
,,	ஆதனக்கோட்டை	... ,,	7.30	27- 8-43	உடையாளிப்பட்டி	... ,,	7.00
25 -8-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00	,,	கிள்ளுகோட்டை	... ,,	7.30
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45				

பிரஸங்கம் 161. (1-வது பிரிவு).

28- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00	1- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
29- 8-43	குடுமியாமலை	... ,,	7.00	,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	பரம்பூர்	... ,,	7.30	,,	குழிபிரை	... மாலை	7.00
30- 8-43	வெங்களூர்	... ,,	7.00	,,	செவலூர்	... ,,	7.30
,,	கோனுபட்டு	... ,,	7.30	2- 9-43	களமாவூர்	... ,,	7.00
31- 8-43	நச்சாந்துபட்டி	... ,,	7.00	,,	நல்லூர்	... ,,	7.30
,,	விராச்சிலை	... ,,	7.30	3- 9-43	பனையப்பட்டி	... ,,	7.00
1- 9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00	,,	ராங்கியம்	... ,,	7.30
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45				

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

21— 8—43	பொன்னமராவதி.	28— 8—43	திருமெய்யம்.
22— 8—43	தீத்தான்விடுதி.	29— 8—43	மருதன்கோன்விடுதி.
23— 8—43	முள்ளங்குரிச்சி.	30— 8—43	கொன்னையூர்.
24— 8—43	வடகாடு.	31— 8—43	ராமச்சந்திரபுரம்.
25— 8—43	ராயவரம்.	1— 9—43	கரம்பக்குடி.
26— 8—43	ஆலங்குடி.	2— 9—43	கீழாநிலைக்கோட்டை.
27— 8—43	புதுக்கோட்டை.	3— 9—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—23-8-43

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ஞூ ஆகஸ்டு மீ 28உ [ந. 161

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXI.

ஜெர்மனியின் தற்போதிய நிலைமை.

(கென்னத் டி கோர்ஸி).

ஜெர்மனியின் நிலைமையைப் பற்றி அநேக விருத்தாந்தங்கள் வெளிவந்திருக்கின்றன. அவ்விதமிருந்தும் ஜெர்மனியின் உண்மையான நிலைமையை அறிந்துகொள்ள முடியவில்லை. 1940-ம் வருஷம் வேனிர்காலம் முதல், சமீபகாலம் வரையில் மாகாணங்களின் நிலைமையைக் கண்ணாரக் கண்டவரின் வர்ணனையின் சுருக்கத்தை வெளியிட்டால், எதிரியின் நிலைமையை நன்கு அறிவதற்குச் சாதகமளிக்கக்கூடும். 1939-ம் வருஷம் மாரி காலத்தில் குளிர் கடுமையாகயிருந்தது. போக்குவரவு மார்க்கங்கள் கெடுதலடைந்துவிட்டதாலும் கால நிலைமை சரியாகயில்லாததாலும் கரிப்பொருளில்லாமல் எல்லோரும் கஷ்டப்பட்டார்கள். ஆகிலும், ஜனங்களின் மனோநிலை குன்றிவிடவில்லை.

1940-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் சிற்றுண்டிசாலைகளில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக சம்பாஷணை செய்துகொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தார்கள். வெற்றிகளைக்கண்டு எல்லா வகுப்பினரும் குதூகலமடைந்தார்கள். போலந்திலும், நார்வேயிலும், மேற்கு ஐரோப்பாவிலும் வெகு சீக்கிரமாக வெற்றிகள் கிடைத்துவிட்டதால் ஜெர்மன் மக்கள் அதில் சந்தோஷமடைந்தார்கள். தீர்க்க சந்தேகிகளும், துக்கமான மனப்பான்மையுள்ளவர்களும் கூட தங்களுடைய அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டார்கள். ஒவ்வொருவரும், ஹிட்லரும் அவனுடைய சேனைகளும் தோற்கடிக்கமுடியாதவைகளென்று நினைத்தார்கள். ஜெர்மனியில் ஒரு புதிய யுகம் உண்டாகிவிட்டதென்று நினைத்தார்கள். பால்கன் நாடுகளில், வெற்றிகள் அதி சீக்கிரத்தில் கிடைத்ததைக்கண்டு ஜனங்கள் திருப்தியடைந்தார்கள். அதற்குப் பின் மாஸ்கோவின் வெளிப்பக்க அரண்களுக்கு ஜெர்மனி முன்னேறியதும், அவர்களுக்குச் சந்தோஷமளித்தது. 1941-ம் வருஷம் இலை யுதிர் காலத்தில் மாரிகால உடைகளை ஜெர்மனி திடீரென்று திரட்ட ஆரம்பித்தபொழுது ஜனங்களுக்குத் திகில் உண்டாகிற்று. அப்பொழுதுதான் மாரிகால யுத்தத்துக்கு ஜெர்மனி தயார் செய்துகொள்ளவில்லை யென்ற அறிவு ஜனங்களுக்கு உண்டாகிற்று. மாரிகால யுத்தம் நடைபெறுமென்றும், அவர்கள் எதிர் பார்க்கவில்லை. மகத்தான தவறுதல் ஏற்பட்டுவிட்டதென்று ஜெர்மனியிலுள்ள ஒவ்வொருவரும் அறிந்துகொண்டார்கள். சிற்றுண்டிசாலைகளில் ஜனங்கள் கூடி குதூகலமாக சம்பாஷணை செய்வது ஓய்வடைந்து, ஜனங்கள் மௌனம் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள். ஆகிலும், வீடுகளில் ஆகாரவசதிகள் செய்துகொள்ள முடியாததினால் ஜனங்கள் சிற்றுண்டிசாலைகளில் கூடுவது மட்டும் ஓயவில்லை. ஜனங்களில் 50 சத விகிதம் பொதுவான சிற்றுண்டிசாலைகளில்

தான் ஆகாரம் உட்கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவரும் ரகசியமாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள். சிறிப்பு ஓய்ந்துவிட்டது. மூன்று மேஜைகளுக்குள் ஒன்றில் ஜனங்கள் பலமாகத் தூக்கித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

தோற்றமும், அபிப்பிராய வெளியீடுகளும் மாறுபட்டுவிட்டன. பிரிடனையும், அமெரிக்காவையும் தோற்கடித்து முடிவான வெற்றியைப் பெற்றுவிடலாமென்று இப்பொழுது ஒருவரும் நினைக்கவில்லை. அதிக நம்பிக்கை கொண்டவர்களும், இன்னும் அதிகமான தியாகங்களைச் செய்து ருஷ்யர்களை முறியடித்துவிட்டால் பிரிடிஷார்களும், அமெரிக்கர்களும் சமாதானத்துக்கு வந்துவிடுவார்களென்று நினைக்கிறார்கள்.

இந்த மாறுதல் கவனார்கமுள்ளது. 1940-ம் வருஷத்திலும், 1943-ம் வருஷத்திலும், சிற்றுண்டிசாலைகளில் தோற்றத்தை கவனித்தால் இது நன்கு புலப்படும். அப்பொழுது கொக்கரிப்பு. இப்பொழுது மௌனம். அப்பொழுது உரத்த பேச்சு. இப்பொழுது நம்பிக்கையிழந்த முணுமுணுப்புப்பேச்சு. அப்பொழுது சாராயபானம். இப்பொழுது தண்ணீர் அருந்துவது. ஏற்கனவே கிடைத்த வெற்றிகளைக் கண்டு இறுதியில் வெற்றி நமக்குத்தான் என்ற நம்பிக்கை அப்பொழுது. எதிர் பாராதபடி நெடுநாள் யுத்தம் நடைபெறப் போகிறதேயென்ற கோரமான துக்கம். இப்பொழுது மிலியன்கள்கணக்கான விதவைகளும், தாய்மார்களும் தங்களுடைய ஆதாரமாகிய புருஷர்களையும், பிள்ளைகளையும் இழந்துவிட்டார்கள்.

ஆடைகளின் குறைவு.

பங்கிடுச்சீட்டில் அளிக்கப்பட்ட சொல்பமான ஆடைகளையும், இப்பொழுது பெறுவது கஷ்டமாயிருக்கிறது. துணி உற்பத்திக் குறைவு அதிகரித்துவிட்டது. சில தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக ருஷ்ய ஸ்திரீகள் தங்களுடைய மேலங்கியைத் தவிர வேறு ஆடையில்லாமல் சமீபகாலத்தில் வந்திருக்கிறார்கள். மாரி காலத்தில், கடுமையான குளிரின் நிமித்தமாக அநேக தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கும்பொழுதே மூர்ச்சையாக விழுந்துவிட்டார்கள். மற்றவர்கள், நோய்வாய்ப்பட்டு வெகுநாட்கள் வேலைக்கு வராமல் இருந்தார்கள். சிலர் உயிர் துறந்தார்கள்.

ஏற்கனவே, தொழிலாளர்களின் குறைவு ஏற்பட்ட சாலைகளின் மானேஜர்கள் பலமாகப் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். ஒரு தலைவர் கதியற்ற ஸ்திரீகளுக்கு வஸ்திரதானம் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தாரிடம் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். அநேக வாரங்கள் வரையில் பேரம் செய்தபின் அத்தியாவசியமான சில ஆடைகள் வந்து சேர்ந்தன. அத்துடன் சில விதிகளும் அனுப்பப்பட்டன. துணிகளுக்கு நம்பர் போடவேண்டும். துணியை உபயோகித்தவர் இறந்தாலும், அல்லது வேலையை விட்டகன்றாலும், அவர் அந்த ஆடையை தொழிற்சாலை முதலாளியிடம் ஒப்படைத்து விடவேண்டும். அந்த வேலைக்கு வரும் மற்றொருவர் அந்த ஆடையை உபயோகித்துக் கொள்ளவேண்டும். மிகவும் இழிவான அறை அங்கிகளும் ஸமஸ்தானத்தைச் சேர்ந்தது என்று ஏற்பட்டதென்பது மிகவும் அழகான நிலைமையல்லவா.

அயல் நாட்டுத் தொழிலாளர்கள் முகாமின் நிலைமை இன்னும் மோசமாயிருக்கிறது. அநேக இடங்களில் மனப்பான்மையும் திருப்திகரமாகயில்லை.

தெருத்தெருவாகச் சென்றால் கடைகளெல்லாம் மூடப்பட்டிருக்கும். வெடிகுண்டு வீச்சினாலும், ராணுவ அவசியத்தை முன்னிட்டும் அவைகள் வாசஸ்தலங்களாக ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. பெர்லினில் வியாபார ஸ்தலங்களை மூடினவர்களின் குடியிருப்புக்காக வரிசைக் கிரமமாக முதன்மையாக யாருக்கு இடங்களைக் கொடுப்பதென்பதை நிர்த்தாரணம் செய்வதற்காக ஜாபிதா தயார் செய்யப்பட்டு வருகிறது. வாசஸ்தல கட்டுப்பாடு உத்தரவின்படி ஒரு வீட்டிற்கு அதிகமான வாசஸ்தலமுள்ளவர்களும், ஒரு வீட்டில் தனிப்பட்ட முறையில் வாசம் செய்துவரும் நபரும் ஸர்க்காரிடம் பதிவு செய்துகொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

வியாபாரம் செய்யும் சில கடைகளில் சாமான்கள் ஒன்றுமில்லை. ஜன்னல்களில் கதவு கிடையாது. பீரோக்கள் காலியாகவிருக்கின்றன. குடித்தன முறைகளுக்கு வேண்டிய சாமான்கள் கிடைப்பதில்லை. ரெயில்வேயைச் சேர்ந்த சிற்றுண்டி சாலைகளில் கத்தியும், கவர் முள்ளும் வாங்குவதற்குப் பொருளுதவும்படி ஜனங்கள் வேண்டப்படுகிறார்கள்.

இல்லற வாழ்க்கை குறைந்து வருகிறது. ஒவ்வொருவரும் யுத்த முயற்சியிலீடுபட்டு ஒரு தொழிற்சாலையில் அநேக மணி நேரங்கள் வேலை செய்துவருகிறார்கள். பண்டகசாலையிலோ அல்லது சிற்றுண்டி சாலையிலோ அவர்கள் ஆகாரம் உட்கொள்ளுகிறார்கள். சாதாரணமான ஹோட்டல்களையும் சிற்றுண்டி சாலைகளையும், தவிர மூன்றுவிதமான ஆகார விடுதிகள் ஜெர்மனியில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(a) தொழிற்சாலைகள் சம்பந்தமான பண்டகசாலைகள்—இவைகள் 12,000 இருக்கின்றன. அவைகளில் $3\frac{1}{2}$ மிலியன் தொழிலாளர்களுக்கு ஆகாரமளிக்கப்படுகிறது.

(b) மத்திய பாகசாலைகள்—இவைகள் 15,000 இருக்கின்றன. அவைகளில் 4,200,000 ஜெர்மானியர், அயல் நாட்டுத் தொழிலாளர்கள் போஜனம் உட்கொள்ளுகிறார்கள்.

(c) ஜாதியார்களுக்கு ஏற்பட்ட சிற்றுண்டி சாலைகள்—இவைகள் 200 இருக்கின்றன. இவைகள் பெரிய நகரங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இல்லற வாழ்க்கையும், தனிப்பட்டவர்கள் தொழிற்செய்யும் வசதிகளும் குறைவுபட்டு விட்டபடியால் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்களெல்லாம் போல்ஷிவிக் முறைப்படி அன்னார்த்திகளாக ஆகிவிட்டார்கள். இந்த மாறுதல் நிலைமையானது, மிலியன்கள்கணக்கான ஜனங்களுக்குக் கஷ்டத்தை விளைவிக்கப்போகிறது.

சில தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் நேரம் அதிகரிக்கப்பட்டிருப்பதற்கு ஜெர்மன் தொழிலாளர்கள் ஆக்ஷேபனை செய்கிறார்கள். அதிக ஆகாரம் கொடுத்தால்தான் அதிக நேரம் வேலைசெய்ய ஒப்புக்கொள்ளுவதாக அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

தற்போதிய ஜெர்மனியில் முக்கியமாக எண்ணெய்க்குறைவு உண்டாகியிருக்கிறது. தெருக்களில் வாடகை மோட்டார்கள் நடமாட்டம் நின்றுவிட்டது. சொந்த மோட்டாரை உபயோகிக்கிறவர்களும் மிகவும் அவசியமான காரியங்களுக்குத்தான் மோட்டாரில் செல்லலாம். வியவசாயிகள் பதில்வெட்டு எண்ணெய்களை உபயோகிக்கவேண்டுமாம். இதைப் போல இன்னும் அநேக சின்னங்களும் காணப்படுகின்றன.

மிகவும் முக்கியமான விஷயம் யாதெனில் விமானங்களின் சலனமும், ஒத்திகைகளும் குறைவடைந்துவிட்டன. இதுவரையில் ஒய்வில்லாமல் சுறுசுறுப்பு நிறம்பியிருந்த விமானக் கூட்டங்களுக்கு சமீபத்தில் வசிப்பவர்கள் சுறுசுறுப்புக் குறைவை இப்பொழுது வெளியிடுகிறார்கள். விமானப்படையினர்கள் இரவுபகலாகப் பயிற்சியளிக்கப் பட்டார்கள். எந்த நேரத்திலும் விமானங்கள் ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. இப்பொழுது பூர்ணமான அமைதி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு விமானத்துக்கு உபயோகப்படும் எண்ணெய்க் குறைவு தான் காரணம் என்று சொல்லப்படுகிறது.

சமீபகாலத்தில் உள்நாட்டு பிரச்னைதான் அதிகமாகக் கவனிக்கப்பட்டுவருகிறது. யுத்தச் செய்திகள் இரண்டாம் பக்ஷமாகத்தான் கவனிக்கப்படுகின்றன. ஜெர்மனியின் உள்நாட்டு பிரசாரர்கள் ருஷ்யாவை முறியடிப்பதற்கு சகலவிதமான தேசிய ஐச்வர்யங்களையும் திரட்டவேண்டுமென்று பிரசாரம் செய்துவருகிறார்கள். இந்த விஷயத்தை ஏராளமாக விஸ்தாரப்படுத்திவிட்டார்கள். அதாவது மேற்குப்பக்கத்தில் தற்காப்பும் போல்ஷிவிஸம் பரவவொட்டாமல் தடுப்பதற்கு ஜெர்மனியின் பொறுப்பும் பறைசாற்றப்படுகிறது. ருஷ்யாவுடன் யுத்தம் செய்யவேண்டியது அவசியமாயிற்று என்று பலமாகச்சொல்லப்படுகிறது. ஜனங்களில் சிலர் ருஷ்யாவுடன் யுத்தம் துவக்கியது முட்டாள்தனமென்றும், அனாவசியமென்றும், சொல்லுகிறபடியால் அதன் அவசியத்தைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது.

பலிகொடுப்பதற்கு ஆள் தேடுதல்.

கிழக்குப்போர்முனையில், முக்கியமாக ஸ்டாலின்கிராடிலும், ஓரலிலும், ஜெர்மனிக்கு ஏற்பட்ட ராணுவத் தோல்விகளுக்கு ஜவாப்தாரியைக் கண்டுபிடித்து அவனைப் பலி கொடுக்க வேண்டுமென்று ஜனங்கள் எல்லோரும் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மன் மக்களின் மனோநிலையில் இது ஒரு முக்கியமான புதிய மாறுதல். பொது ஜனங்களின் உணர்ச்சி பகிரங்கமாக அநேக தடவைகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது.

படை திரட்டுவதிலும், கடுமையான உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பு போலந்தில் பத்திரமாக உத்தியோகங்களிலமர்ந்திருந்த அநேக பொதுமக்களும், ஆபீஸர்களும் திரட்டப்பட்டு ஒரு படைப்பகுதி தயாரிக்கப்பட்டிருக்கிறது. பிரசார இலாகா காரியாலயத்திலுள்ள வாலிபர்களில், நூற்றுக்கணக்கானவர்களும் ராணுவத்தில் சேர்க்கப்பட்டுவிட்டார்கள். சண்டையிலீடுபடாத ராணுவ சேவையிலிருந்தவர்களெல்லாம் போர்புரியும் பகுதிகளில் சேர்க்கப்பட்டுவிட்டார்கள். பையன்கள் யுத்த அலுவல்களை $15\frac{1}{2}$ வயது முதல் செய்து வருகிறார்கள். 14 வயதுள்ள பிள்ளைகளும்கூட பள்ளிக்கூடங்களிலும், பொது ஜன இலாகா கட்டடங்களிலும் இரவில் காவல்புரியும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

ஜெர்மன் தேசமக்களின் தோற்றம் சீர்கேடடைந்து கோரமாக இருக்கிறது. ஜெர்மானியர்கள் அதிகமாகக் கவலையுடன் எதிர்பார்க்கும் விஷயம் மறைந்துவிட்டது. வெற்றிச் சின்னங்கள் ஏற்படவில்லை. சமாதானம் செய்துகொள்ளும் பேச்சும் புலன்படவில்லை. எங்கு

பார்த்தாலும், ரகசியப் போலீஸாரும் தற்கொலைப் பகுதியாரும் தங்களுடைய அமுலை அதிகரித்து ஈவு, இரக்கமன்னியில் அவைகளை உபயோகித்துவருகிறார்கள். நாஸி கக்ஷியின் பிரசார முறைகள் பலமடைந்து வருகின்றன. நாஸிக்காரர்கள் அபரிமிதமாக உளவு விசாரித்து வருகிறார்கள். குழந்தைகளும், வாலிபர்களும் அயல் நாட்டு ஒலிப்பிரசாரங்களைக் கேட்கிறவர்களைக் கண்டுபிடித்து வெளிப்படுத்திவிடுகிறார்கள். இதன் மூலம் நாட்டில் குழப்பம் அதிகரித்துவிட்டது.

எங்கு பார்த்தாலும் யுத்த சின்னங்கள் ஏற்பட்டுவிட்டன. நெருக்கடியும் உண்டாகி இருக்கிறது. இந்த அபாயகரமான நிலைமையைச் சமாளிப்பதற்காகத்தான் ஜெர்மானியர்கள் புதிய திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவைகள் அபரிமிதமானவை.

அவைகளெல்லாவற்றையும் கவனித்தால் ஜெர்மனியின் வீழ்ச்சி சமீபித்துவிட்டதென்று எண்ணக்கூடும். ஆகிலும், அது சரியான முடிவல்ல. அங்கே காணப்படும் கோரமான சின்னங்களுக்கு, யுத்த முயற்சிக்காக அமானுஷமான பிரயத்தனங்கள் செய்வதுதான் காரணமாகும். நாஸி ராணுவ நிலை குலைந்துவிடுமுன் இதுவரையில் எதிர்பாராத கோரமான யுத்தம் நடைபெறப் போகிறது. பலமான விமான பலத்துடனும், யூ படகுகளுடைய உதவியுடனும், ஜெர்மன் சேனைகள் போர்புரிய இன்னும் அபாரமான சக்தி வாய்ந்தவர்கள். எதிரியின் சக்தியைக் குறைவாக மதித்துப் பார்ப்பது முட்டாள்தனம். அப்படிச் செய்வதற்கு யாதொரு முகாந்திரமுமில்லை.

வார யுத்தச் செய்திகள்

20—8—43-லிருந்து 27—8—43-வரை.

இதாலி.—பிரதேசத்தை நொருக்கித் தவிடுபொடி செய்யும் முறைகள் நடைபெற்று வருகின்றன. நேசதேச விமானப் படைகளுக்கு ஜலசந்திக்கு அக்கரையிலுள்ள பீரங்கிகளும், பிரிடிஷ் கடற்படையும் உதவியளித்து வருகிறது.

ரயில்வே தளங்களும், ஸ்டேஷன்களும், பாலங்களும், ரஸ்தாக்களும், படைகளை ஏற்றிச் செல்லும் கலங்களும், துணைக்காவல் கப்பல்களும் தாக்கப்படுகின்றன. போக்குவரவு மத்திய ஸ்தலங்களான காஸ்ட்ரோ வில்லாரியும் பாட்டிபாக்ளியாவும் குண்டு வீச்சுக்குட்பட்டன. ஜெர்மானியர்கள் தப்பித்து ஓட உபயோகப்படுத்திய இதாலியக் கடற்கரையிலுள்ள படகுகளும் தாக்கப்பட்டன. ரெக்கியோ டி கலாப்ரியாவை ஜெர்மானியர்கள் காலி செய்துவிட்டார்கள்.

ஆகஸ்டு 17-ம் தேதியன்று ஸிஸிலிக்கு விலாப்பக்கத்திலுள்ள லிபாரி, ஸ்ட்ராம்போலி தீவுகள் நமது வசமாகின.

ஆகஸ்டு 18-ம் தேதியன்று கியோயியா விரிகுடாவிலுள்ள கியோகா டாரோவிலும் பால்மியிலுமுள்ள பாலங்களும் மின்சார உற்பத்தி யந்திர அமைப்புகளும் கடற்படை பீரங்கிகளால் தாக்கப்பட்டன.

ஆகஸ்டு 18, 19 தேதிகளில் கலாப்ரியாவுக்கு மேற்குக் கரையிலுள்ள ஸிரியாவுக்கு சமீபத்தில் 7 துருப்பிறக்கும் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

ஆகஸ்டு 20, 21 தேதிகளில் நேபிள்ஸைச் சுற்றிலுமுள்ள, வில்லா லிடர்னோ, ஆவெர்ஸா, பென் வெனடோ, டாரி அனன்சியாடா, ரிபோல்டா, சாலா, கான்ஸெல்ஸோ, போமிக்ளியானோ, டார்சி, ஸாலர்னோ முதலிய இடங்களிலுள்ள இருப்புப்பாதை மார்க்கங்கள் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன.

ருஷ்யா.—ஆகஸ்டு 23-ம் தேதி யன்று யூக்ரேனின் இரண்டாவது தலை நகரமான கார்கோவை ருஷ்யர்கள் கைப்பற்றினார்கள். யுத்தத்தில் நான்காவது தடவையாக கார்கோவ் கைமாறியிருக்கிறது. இது ருஷ்யர் வசமாகிவிட்டதால் யூக்ரேனில் முன்னேற அவர்களுக்கு வசதி ஏற்பட்டுவிட்டது. அதைக் கைப்பற்றியபின் செம்படை டானட்ஸ் நதிப் பிரதேசத்துக்கு முன்னேறி விட்டது. டான்பாஸ் பகுதியிலும், இஸியத்துக்கு தெற்கிலுள்ள பிரதேசத்திலும் வாரஷிலாவ்கிராட்டிலும் ருஷ்யர்கள் வெற்றிகரமாகப் போர்புரிந்து வருகிறார்கள்.

ஜெர்மனியின்பேரில் விமானப் படையெடுப்பு.—கீழ்கண்ட ஸ்தலங்கள் தாக்கப்பட்டன.

ஆகஸ்டு 17.—பீனமுண்டி (இங்கு ஆராய்ச்சி, அபிவிருத்தி இலாகாவின் ஆபீஸ்களிருக்கின்றன). ஷ்வீன்பர்ட், ரெகென்ஸ்பர்க் (இவ்விடங்களில் ரவைகளின்பேரிலும் உருளைகளின்பேரிலும் சலிக்கும் யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன).

ஆகஸ்டு 22.—லெவர்குஸன் (கியாதிபெற்ற பெயர். ரசாயன உற்பத்திசாலையுள்ளது).
ஆகஸ்டு 23, 24, 25—பெர்லின்.

பஸிபிக் யுத்தம்.—கிஸ்காவை நாம் ஆக்கிரமித்துவிட்டோம். மூடுபனியின் ரக்ஷணையுடன் எதிரி முன்னதாகவே தப்பித்து ஓடிவிட்டான். ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியில் தான் அமெரிக்க, கனேடியத் துருப்புகள் இங்கு இறங்க ஆரம்பித்தார்கள்.

ஜப்பானிய முக்கிய நிக்கல் உற்பத்தி ஸ்தலமாகிய டச்சு ஸெலிபிஸ் தீவுகளிலிருக்கும் பொமாலாவென்னும் ஸ்தலத்தை நமது வெடிவிமானங்கள் தாக்கின. சாமான் கிட்டங்கிகளுக்கும், யந்திரசாலைகளுக்கும் கப்பல்களுக்கும் அதிக சேதம் ஏற்பட்டது.

ஸாலாமூவாவும் கூடிய சீக்கிரத்தில் விழுந்துவிடும். ஸாலாமூவாவுக்குச் சமீபத்திலும் அதைச் சுற்றியுமுள்ள குட்வுயூ ஜங்ஷனும், மௌண்ட் தம்புவும், ஓராடுபியும், கொமியாதமும், கென்னடி கிராஸிங்கிக்குச் சமீபத்திலுள்ள குன்றுகளும் குண்டுவீச்சுக்குட்பட்டன.

சைனு.—ஸால்வீன் நதிக்கு மேற்குக்கரையிலுள்ள டெங்சங்கையும், டாங்க்ஷூவையும், கோயாங்கையும் டாயேயையும் ஜப்பானியர்கள் தாக்கினர்கள். சுங்கிங்கை ஆகஸ்டு 22-ம் தேதியிலும், 23-ம் தேதியிலும் 27, 47 ஜப்பானிய வெடி விமானங்கள் தாக்கின. சீன விமானங்கள் அவைகளை வழிமறித்தன. முதல்நாள் போரில் ஒரு வெடி விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இரண்டாவது நாளில் இரண்டு ஸீரோ விமானங்கள் நாசமாகிவிட்டன. மூன்ருவது விமானம் தரையிலிறங்கும்படி நேரிட்டது. 5 வெடி விமானங்களும், நாசமாக்கப்பட்டன.

சென்றவாரம் வெள்ளிக்கிழமையன்று அமெரிக்க வெடி விமானங்கள் டியன்ஹோ விமான தளத்தை குண்டுகளால் தாக்கின.

பர்மா.—இந்த வாரத்தில் கீழ்கண்ட பிரதேசங்களில் குண்டு வீச்சு ஏற்பட்டது.

ஆகஸ்டு 18.—கதா, பாமோ.
ஆகஸ்டு 19.—ராங்க்ஸி, ஹாங்ஸா, ராணு, லக்ஸாங், ஷிங்கான், ஸெடன், டாரோ.
ஆகஸ்டு 22.—ஸாகேயிங், மாண்டலே, மெயிக்டிலா, ஆலனுக்கு வடக்கே சிண்ட்வின் நதியிலிருக்கும் கப்பல்கள், பாகாகு, மணிவா, டியாங்க்ஸப், ஸோஸ்ஸாப், கியாக்பியூ.
ஆகஸ்டு 23.—கார்நிகோபார் தீவுக்கருகில் 300 அடி நீளமுள்ள ஒரு சாமான் கப்பல். பாகாக்கு, மெயிக்டிலா, மிடிங்கி.
ஆகஸ்டு 24.—ஐராவதி, சின்ட்வின், கலாடான் நதியிலுள்ள சாமான் படகுகள், பாகுனு, கான்பாலு, திட்டியாபின், யாமிதின்.

சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

16—8—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்-பிரான்ஸிலுள்ள லேபோர்ஜெட் (Lebourget), பாய் (Poix), அப்பிவில்லி (Abbeville), பெர்னே (Bernay), டிரிக்வில்லி (Tricqueville), அமீன்ஸ் (Amiens). (19 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. 12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—இரும்புத் தொழிற்சாலைகள்—பிரான்ஸிலுள்ள வாலென்ஷியன்னிஸ் (Valenciennes). (6 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

போக்குவரத்து சாதனங்கள், மோட்டார் போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (South Italy).

ரஸ்தா, ரயில்வேப் பாலங்கள்.—தெற்கு இதாலி (South Italy).

எதிரி கப்பல்கள்.—டிரேனியன் கடல் (Tyrrhenian Sea).

விமான நிலங்கள்.—போகியா (Foggia).

விமானமிறங்குமிடங்கள்.—இதாலியிலுள்ள டார்டோரெல்ல (Tortorella), இதாலியிலுள்ள ஸான்னிகோலோ (San Nicola).

ருஷ்யா (Russia).

(78 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ஜெர்மன் யுத்த தளவாடக் குவியல்கள்.—பிரையான்ஸ்க் (Bryansk I), பிரையான்ஸ்க் (Bryansk II), ரோஸ்லாவி (Roslavi) ஸ்லாவியான்ஸ்க் (Slavyansk), பார்வென்கோவா (Barvenkovo), இப்பிரதேசங்களிலுள்ள ரயில்வே ஜங்ஷன்கள்.

தூரக்கிழக்கு (Far East).

எண்ணெய்க் கிணறுகள்.—போர்னியோவிலுள்ள பாலிக் பாபன் (Balik Papan); டானிம்பார் தீவுகளிலுள்ள லான்கோயர் (Langgoer), ஸாம்லகி (Saumlaki).
துவியல்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata)விற்கருகில்.
எதிரிப் படகுகள்.—நியூ கினியிலுள்ள ஸெய்டான் (Saidon) கடற்கரை; கொலம்பங்காரத் தீவிலுள்ள விலா (Vila) விமான நிலயம்.
ராணுவ ஸ்தாபனங்கள்.—ரெகாதா பே (Rekata Bay).
எதிரிக் கப்பல்கள்.—பர்மாவிலுள்ள மார்ட்டாபன் வளைகுடா (Martaban).
படகுகள்.—மாயு (Mayu), கலடான் (Kaladan), சிண்ட்வின் (Chidwin) நதிகள்.

17—8—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—தெற்கு பிரான்ஸிலுள்ள இஸ்ட்ரெஸ், லெடுபி (Letube), ஸெலான் (Salon).
ரயில்வே ஜங்ஷன்கள், விமானத் தொழிற்சாலைகள்.—ஷ்வெய்ன்பர்ட் (Schweinfurt), ராஜென்ஸ்பர்க் (Ragensburg). (42 நேச விமானங்கள் காணப்படவில்லை; 4 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
இரவு.—ஆராய்ச்சி அபிவிருத்தி இலாகா—பென்னி முண்டி (Penne Munde); ஜெர்மன் தலைநகரான பெர்லின் (Berlin).
விமான நிலயம், ரயில்வே இலக்குகள்.—பிரான்ஸ் (France), லோகண்ட்ரீஸ் (Low-countries).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

காலி செய்யப்படும் கடற்கரைகள், ரஸ்தாக்கள்.—இதாலியிலுள்ள டோ (Toe).
போக்குவரத்து ஸ்தலங்கள்.—காஸ்ட்ரோவில்லாரி (Castrovillari).
ரயில்வே தளங்கள்.-பட்டிபாக்ளியா (Battipaglia).
ரஸ்தாக்கள், பாலங்கள்.—தெற்கு இதாலி (South Italy).

ருஷ்யா (Russia).

(129 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம்முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான தளம்.—நியூ கினியாவிலுள்ள வீவாக் (Wewak).
விமான நிலயங்கள்.—கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila).
ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—பர்மாவிலுள்ள மெய்க்டிலா (Meiktila).
ஸப்ளைக் கப்பல்கள்.-பர்மாவிலுள்ள ஐராவதி (Irrawaddy), அக்யாப்(Akyab) பட்டணம்.

18—8—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயங்கள்—ஹாலந்திலுள்ள ஆயன்ஸ்ட்ரெட்ச் (Woensdrecht), பிரான்ஸிலுள்ள லில்லி (Lille).
இரவு.—E படகு—இங்கிலீஷ் கால்வாய் (English Channel).
ரயில்வேக்கள், விமான நிலயங்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரஸ்தாக்கள், ரயில்வேக்கள்.-தெற்கு இதாலி (Southern Italy).
பாலங்கள்.—இதாலியிலுள்ள ஆங்கிடோலா (Angitola).
ரயில்வேப் போக்குவரத்துகள்.—இதாலியிலுள்ள போன்டியோடி (Pontiodi), ஸடாலெட்டி (Staletti).
இதாலியில் குடோரனிலுள்ள ரயில்வே சாமான் தளங்கள், கப்பல்கள், துறைமுகங்களிலுள்ள சாமான்கள்; ஈஜீயன் கடல், கிரீஸுக்கு மேற்குக்கரை சமீபம்.

ருஷ்யா (Russia).

(96 அச்சு விமானங்கள் நஷ்டம்).
விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
விமான தளங்கள்.—பிரியான்ஸ்க் — ரோஸ்லாவி.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak). (173 ஜப்பானிய விமானங்கள் நாசமாக்கப்பட்டன).
எதிரி சண்டையிடும் விமானங்கள்.—(ஐயர்லாந்து) செய்ண்ட் ஜார்ஜ் முனை.
எதிரிப் படகுகள்.—நியூ பிரிடன் (New-Britain).
கிராமங்கள்.—ஸலாமூவா (Salamaua).
எதிரிக் கடல் விமானங்கள்.—ரெகாதாபே (Rekata Bay).
நதித் துறைமுகங்கள்.—பர்மாவிலுள்ள கதா (Katha), பாமோ (Bhamo).
சேமிப்புக் கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள புரோம் (Prome).

19—8—43. (வியாழக்கிழமை).

பகல்.—அச்சுநாட்டு விமான நிலயங்கள்—பிரான்ஸிலுள்ள பாய் (Poix), அமின்ஸ் (Amiens).
தாக்குதல்கள்.-வடக்கு பிரான்ஸ் (Northern-France).
ஜெர்மன் விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland).
இரவு.—ஜெர்மனியின் தலைநகரான பேர்லின் (Berlin).
எதிரிக் கப்பல்கள்.—இங்கிலிஷ் கால்வாய்.
விமான நிலயங்கள் ரயில்வேக்கள்.-பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
ரயில்வே சாமான்கள் தயார்செய்து சேகரிக்குமிடங்கள்.—இதாலியிலுள்ள போகியோ (Foggia).
ரயில்வே இலக்குகள்.—தெற்கு இதாலி (South Italy).
ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள விலா லிட்டெர்னோ (Vila Literno).
ருஷ்யா (Russia).
(118 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
தூரக்கிழக்கு (Far East).
விமான நிலயங்கள், துறைகள்.—டிமோரிஅள்ள கோபாங் (Koepang).
எதிரி ஆக்கிரமித்த கிராமங்கள்.—டச்சு நியூ கினியிலுள்ள டெனிம்பர் (Tanimbar) தீவுகள்.
வியாபாரக் கப்பல்.—ஈவிங் (Eving)கிற்கருகில்.
எதிரி முகாம்கள்.—கரோவ் (Garove), முண்டா (Munda)த் தீவுகள்.
படகுகள்.—நியூ பிரிடனிலுள்ள ஆக்ஸ்போர்ட் முனை (Cape Oxford), ஆர்ச்வே (Cape Archway) முனை.
எதிரிக் துவியல்கள்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata); நியூகினியாவிலுள்ள பின்ஷாபன் (Finschhfen) பிரதேசம்.
படகுகள்.—நியூ கினியாவிலுள்ள லே (Lae) யிற்கருகில்.
நெருங்கித் தாக்குமிடங்கள்.—நியூ கினியாவிலுள்ள ஸலாமுவா (Salamaua).
சரி பார்க்குமிடங்கள், சேமிப்புக் கட்டடங்கள்.- பர்மாவிலுள்ள தாழி (Thazi) ஜங்ஷன்.
களஞ்சியம்.—பர்மாவிலுள்ள மிங்யான் (Myingyan).
ரயில்ரோட் தளங்கள்.—நியாங்பின்வன் (Nyaungbinwun).
பட்டணம்.—மாலெய்க் (Mawlaik); ராம்ரீத் தீவிலுள்ள கியாக்பியூ (Kyaukpyu).

20—8—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல்.—எதிரி விமான நிலயத் தொழிற்சாலை.- பிளஷிங் (Flushing).
ரயில்வே சாமான்கள் தயார்செய்து சேமிக்குமிடங்கள்.—அப்பிவில்லி (Abbeville). (16 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.
இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
ரயில்வே தளங்கள்.—அவர்ஷா (Auersa); நேபிள்ஸிற்கு அருகிலுள்ள பெனெவெண்டோ (Benevanto). (14 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).
விமான நிலயம்.—இதாலியிலுள்ள மான்ஸெர்ராட்டோ (Manserrato).
ரயில்வே இலக்குகள்.—தெற்கு இதாலி (South Italy), ரோம் (Rome)—(பிரசுரங்கள் போடப்பட்டன).
ருஷ்யா (Russia).
(86 அச்சுநாட்டு விமானங்கள் அழிக்கப்பட்டன).
விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
தூரக்கிழக்கு (Far East).
எதிரிக் கப்பல்கள்.—நிலாத்தீவு (Nila Island).
வியாபாரக் கப்பல்.—ஸாலமன்ஸிலுள்ள பூகா (Buka).
படகுகள்.—நியூ பிரிடனிலுள்ள ரெயின்பே (Reinbay), பஸ்சிங்முனை (Cape Busching), நியூ கினியிலுள்ள வீவாக் (Wewak) பிரதேசம்.
துருப்புகள், தங்கியிருக்குமிடங்கள், சேமிப்புக் கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள லாக் சாங்கா (Lak Changga).
ஸப்ளைக் கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள சிங் பான் (Shing Bawn), பர்மாவிலுள்ள ஸெடான் (Seton), டாரோ (Taro).
படகுகள்.—கலடான் (Kaladan), சிண்ட்வின் (Chindwin), மாயூ (Mayu), ஐராவதி (Irrawaddy), நதிகள், சைனாவிலுள்ள கான்டன் (Canton).

21—8—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).
பகல், இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.
இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).
யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—இதாலியிலுள்ள கான்ஸெல்லோ (Cancello). (25 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 2 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).
விமான நிலயம்.—நேபிள்ஸிலுள்ள போமிக்லியானோ டார்ஸ் (Pomigliano Darce).
ரஸ்தா இலக்குகள்.—இதாலியிலுள்ள டோ (Toe).
யுத்த தளவாடங்கள் தயார் செய்து சேகரிக்கும் இடங்கள்.—இதாலியிலுள்ள ஸாலெர்னோ (Salerno).
மருந்து தொழிற்சாலை.—இதாலியிலுள்ள குரோடோன் (Crotone).
ருஷ்யா (Russia).
(53 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)
விமானச் சண்டைகளும் தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.
ரயில்வேக்கள், ராணுவ ஸ்டோர்கள், ரயில்வே ஜங்ஷன்கள்.—டெபால்ட்ஷிவ் (Debaltseve), இலோவாய்ஸ்காயா (Ilovaiskaya).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி நிக்கல் தொழிற்சாலைகள்.—டச்சு ஸெலபஸ்ஸிலுள்ள போமெல்லா (Pomelaa). 3 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன. 3 அநேகமாய் நாசமாக்கப்பட்டன. நேச தேச விமான நஷ்டமில்லை).

எதிரி விமான நிலயங்கள்.— வீவாக் (Wewak) பிரதேசம். (34 எதிரி விமானங்கள நாசமாக்கப்பட்டன).

எதிரி தளங்கள்.—டிமோர் (Timor).

எதிரி சைனியங்கள்.—நியூகினியிலுள்ள ஸலாமூவாவிலும் ஸலாமூவாவைச் (Salamaua) சுற்றிலும்.

ரயில்வே தளங்கள்.—சகெய்ங் (Sagaing).

யுத்த தளவாடங்கள் சைனியங்கள் தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—மாண்டலே (Mandalay).

ரயில்வேக்கள்.—யவாடாங (Ywataung).

எதிரி ஸ்தாபனங்கள்.–மெய்க்டிலா (Meiktila) பிரதேசம்.

கப்பல்கள் சேமிப்பு ஷெட்டுகள்.—சிண்ட்வின் (Chindwin) நதி.

கட்டடங்கள்.—பர்மாவிலுள்ள பாக்கோர்க்கு.

ஜப்பானிய ஸ்தாபனங்கள்.—மூனிவா (Monywa).

22—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—பிரான்ஸிலுள்ள போமாண்ட்ரோகர் (Beaumout-Roger).

தாக்குதல்கள்.—ஆக்கிரமித்த பிரதேசங்கள் (9 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்ப்பட்டன). (9 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—தொழிற்சாலை இலக்குகள்.—ரைன்லாந்திலுள்ள லெவர்க்குஸேனி (Leeverkusen) லுள்ள மருந்து தொழிற்சாலைகளும், இதர தொழிற்சாலைகளும்.

சுரங்க வேடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

ரயில்வே இலக்குகள், எதிரி விமான நிலயங்கள்.—பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). (2 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. 5 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),

மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே போக்குவரத்துகள்.–ஸாலெர்னோ (Salerno). (28 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

கப்பல்கள்.—கிரீஸை (Greece)ச்சுற்றிலும்.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

எதிரி சைனியங்கள்.—ஸலாமூவா (Salamaua)பிரதேசம்.

விமான நிலயங்கள். வீவாக்(Wewak) பிரதேசம்.

படகுகள்.—வீவாக் (Wewak).

விமான நிலயம்.—கிளஸ்டர்முனை (Cape Gloucester).

படகுகள்.—நியூ பிரிடனிலுள்ள கிராஸ் முனை (Grass Point).

எதிரி போக்குவரத்துகள்.—கிரீன்விச்(Greenwich) தீவு.

2 தொழிற்சாலைகள்.—பர்மாவிலுள்ள தாயெட் (Thayet).

எண்ணெய் சேமிப்பு.--பர்மாவிலுள்ள சாக் (Chauk).

ஜப்பானிய விமானங்கள்.—பர்மாவிலுள்ள மெயின்க்வானிற்கு(Maingkwan)வடக்கில்.

எதிரி உணவுப்பொருள் குவியல்கள், துருப்பு நிலயங்கள்.—டியாங்ஸுப் (Tiangzup), ஸொப்ஷுப் (Nsopzup).

ராணுவ நிலயங்கள்.—பர்மாவிலுள்ள கியாக்பியூ (Kyaukpyu) விற்கு மேற்கில்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

17—8—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

ஒரு இடம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—கார்க்கோவ் (Karkov) பிரதேசம்

ஆபிரிக்கா (Africa).

பிஸேர்ட்டா (Bizerta) (8 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன.)

தூரக்கிழக்கு (Far East).

ஆஸ்திரேலியாவிலுள்ள புரூம் (Broome) பிரதேசம்.

18—8—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

ஒரு தகவலும் இல்லை.

ஆபிரிக்கா (Africa).

துறைமுகம்.—பிஸெர்ட்டா (Bizerta).

தூரக்கிழக்கு (Far East).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

19—8—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), ஆபிரிக்கா (Africa).
ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).
நேசதேச தளங்கள்.—ஸாலமன்ஸிலுள்ள வெல்லா (Vella) குடா.

20—8—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).
விமானச் சண்டைகள்.—டான்பாஸ் (Donbas) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலயம்.—முண்டா (Munda).

21—8—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).
ஒரு தகவலும் இல்லை.

தூரக்கிழக்கு (Far East).
ஆஸ்திரேலியாவிலுள்ள டார்வின் துறைமுகம்.

22—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).
எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).
விமானச் சண்டைகள்.—டான்பாஸ (Donbas) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).
விமான நிலயம்.—நியூ ஜார்ஜியாவிலுள்ள முண்டா (Munda).

23—8—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).
ஒரு பட்டணம்.—கிழக்கு ஆங்கிலியா (East Anglia).

ருஷ்யா (Russia).
ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

தூரக்கிழக்கு (Far East).
நாஸாபே (Nassau bay).

யுத்தக் குறிப்புகள்.

நிகழ்ச்சிக்கு முன். அடுத்த தேசீய யுத்த முன்னணிப் பிரசுரம் வெளிவருமுன் ஸெப்டம்பர் 3-ம் தேதி போய்விடும். அன்று சரித்திரத்திலேயே மிகவும் கோரமான யுத்தத்தின் நான்காவது ஆண்டும் முடிவடைந்துவிடும்.

1940-ம் வருஷத்தில் ஜெர்மனிக்கு ஏராளமான வெற்றிகள் ஏற்பட்டன. ஜெர்மன் துருப்புகளும், விமானப்படையும், பான்ஸர் படைகளும், மின்னல் எதிர்ப்பு முறைகளும் உபயோகப்படுத்தப்பட்டு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ச்சி பெற்றன. அவ்வருஷம் முடிவடையுமுன் அவனுடைய வெற்றிகளுக்கு, பிரிடனிலும் ஆபிரிக்கப் பாலைவனங்களிலும் பங்கம் ஏற்பட்டுவிட்டது.

1941-ம் வருஷத்தில் ஜெர்மனி விமானப் படையின் மேல் நம்பிக்கையை விட்டு யூ படகுகளை அனுப்பி பிரிடனைப் பிடிப்பதைவிட்டு பிரிடிஷ் சாம்ராஜ்யத்தைத் தாக்க ஆரம்பித்தது. வருஷ ஆரம்பத்தில் அவனுக்கு அநேக வெற்றிகள் கிடைத்தன. வெற்றி மேல் வெற்றி கிடைத்தது. யூகோஸ்லாவியாவும், கிரீஸும், கிரீட்டும் விழுந்தன. இராக்கில் கலகம் உண்டாகிற்று. ஸிரியாவிலும், பாரஸீகத்திலும் ஐந்தாம் படையினர் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். ஹிட்லரின் வெற்றி பெற்ற துருப்புகள் லெனின்கிராட்டுக்கும் மாஸ்கோவுக்கும் ஆபத்தை உண்டுபண்ண முயன்றன. ஆபிரிக்காவில் வேவல் பின்வாங்கும்படி நேரிட்டது. ஆனால், வருஷம் முடிவதற்குள் வேவல் சாமர்த்தியமாக மத்தியக் கிழக்கைக் காப்பாற்றினார். ஸ்டாலினும், ருஷ்யாவின் தலைநகரத்தை முன்னேறி வரும் படைகளின் தாக்குதலிலிருந்து விடுவித்தார்.

1942-ம் வருஷத்தில் ஹிட்லர் அகலக் கால் வைக்க ஆசை கொண்டான். ஐரோப்பிய ஆக்கிரமணத்துடன் உலகத்தை ஜயிப்பதற்கும் திட்டம் போட்டான். வான் பாக் காஸ்பியன் கடலைப்பிடித்து விடவேண்டுமென்றும், ரோமல் எகிப்தை கைப்பற்றிவிடவேண்டுமென்றும், ஹிட்லர் மகத்தான இரண்டு இடுக்கித் தாக்குதல் மூலம் இந்தியாவுக்குச் சென்று அங்கே டோஜோவுடன் கலந்து கொள்ளுவதென்றும் யோஜனை செய்யப்பட்டது. ஆகிலும், எல் அலாமீனிலும், ஸ்டாலின்கிராட்டிலும் அவனுடைய எண்ணங்கள் முறியடிக்கப்பட்டன. இது 1942-ம் வருஷம் முடிவில் நடைபெற்றது.

1943-ம் வருஷம் ஆரம்பத்திலேயே நேசநாடுகளுக்கு வெற்றிகள் கிடைக்கத் தொடங்கிவிட்டன. ஆபிரிக்காவிலிருந்து துரத்தியடிக்கப்பட்டு ஹிட்லர் இப்பொழுது ஐரோப்பிய அரணில் அடைபட்டிருக்கிறான். நேசநாடுகளுக்கு வெற்றிகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கின்றன. டூனிஸியா, ஸிஸிலி, ஓரல், பெய்லொகிராட், கார்கோவ், குடால்கனார்,

ரூபோ, முண்டா, ஆட்டு, கிஸ்கா, ஸெகுல்லா முதலிய இடங்கள் நமது வசமாகிவிட்டன. கஸாபிளாங்கா மகாநாட்டிற்குப்பின் க்வீபெக் மகாநாடு ஆரம்பித்தாகிவிட்டது. முஸோலினியைப் பின்பற்றி ஹிட்லரும் சென்றுவிடுவான். இவ்வருஷத்தில் இன்னும் நான்கு மாதங்கள்தானிருக்கின்றன. ஒவ்வொரு வருஷ முடிவிலும், நேசதேசங்களின் ஸ்திதி அபிவிருத்தியடைந்திருக்கிறது. 1940, 1941, 1942-ம் வருஷம் போலவே 1943-ம் வருஷ முடிவிலும் நேசதேசத்தாரின் ஸ்திதி திருப்திகரமாகவேயிருக்கும்.

வி வி வி வி வி

க்வீபெக். க்வீபெக்கில் நடந்த சம்பாஷணைகள் முடிவடைந்துவிட்டன. அதன் முடிவுகள் ரகசியமானவை. நடவடிக்கைகளில் தான் அவைகளை நாம் காணக்கூடும். க்வீபெக்கில் நிறுவப்பட்ட திட்டங்கள் கஸாபிளாங்கா மகாநாட்டு முடிவுகளைவிட விரிவானதாகயிருக்கக்கூடுமென்பதில் சந்தேகமில்லை. டானட்ஸ் முனையில் ருஷ்ய வேனிர் கால முன்னேற்றமும், இதாலி, பால்கன் நாடுகள், மேற்கு ஐரோப்பாவில் நேசதேசத்தாரின் தாக்குதல்களும் ஒரே சமயத்தில் நடைபெறக்கூடும். அதே சமயத்தில் ஜப்பானையும் நாம் பலமாகத் தாக்க ஆரம்பித்துவிடுவோம். ஜெர்மனியைத் தாக்குவதற்கு சாஸ்திர முறைப்படி பரிஷ்காரமான திட்டங்கள் நிறுவியிருப்பதுபோல் ஜப்பானைத் தாக்குவதற்கும் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றனவென்று நாம் கேள்விப்படுகிறோம்.

வட ஆபிரிக்காவின் வடக்குக் கரையில் நேசதேசப் படையெடுப்புப் படைகள் குவிந்து கொண்டிருக்கின்றன. உயர்தரமான முஸ்தீப்புகளுள்ள சேனைகளும், இதாலியின் குதிகால் கட்டை விரலிலிருந்து ஸ்பெயின் எல்லைச் சரகம் வரையிலிருக்கும் மகத்தான கப்பற்கூட்டங்களும், ஏராளமான விமானப் படைகளும் தயாராகயிருக்கின்றன. பால்கன் நாடுகளில், படையெடுக்கும் படைகளுக்கு ஈஸன்ஹவர் தளகர்த்தராகவும், பிரான்ஸிலும், ஹாலந்திலும் அல்லது ஏதாவது ஒன்றில் படையெடுக்கும் படைகளுக்கு ஒரு ஆங்கிலேயரை தளகர்த்தராகவும், நியமனம் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. தென் கிழக்கு ஆசியாவில் லூயி மெண்ட்பெடன் பிரபு நேசதேச உயர்தர கம்மாண்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜெர்மன் பிரசாரர்கள் என்ன செய்வதென்று புரியாமல், முட்டாள்தனமாக பழைய புகல்களையே மறுபடியும் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். போல்ஷிவிக் பூச்சாண்டியை புதை குழியிலிருந்து மறுபடியும் தோண்டி எடுத்துவிட்டார்கள். கோமிண்டர்னை ருஷ்யா கலைத்த பொழுது இந்தப் பூச்சாண்டி அழிவுற்றுப் புதைக்கப்பட்டது. ருஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும், பிரிடனுக்கும் அபிப்பிராய பேதங்களிருக்கின்றன என்ற புராணத்தையும் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்தக் கதையை ஜெர்மன் மக்களே நம்பவில்லை. ஆகஸ்டு 12-ம் தேதி பெர்லின் ஒலிபரப்பில் பின்வருமாறு சொல்லப்பட்டது. "பரஸ்பர விரோதங்களிருக்கின்றன என்று அடிக்கடி சொல்லப்பட்ட போதிலும், ருஷ்யாவும், பிரிடனும், அமெரிக்காவும் இந்த வதந்திகளை கெட்ட அபிப்பிராயத்துடன் தான் வெளியிட்டு வருகிறார்கள்." பிரிடனிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் அயல் நாட்டு ஸ்தானீகர்களான M. மெயிஸ்கியையும், M. லிட்வினுவவையும் ருஷ்யா திருப்பி அழைத்துவிட்டதைப்பற்றியும் ஜெர்மன் பிரசாரர்கள் ஆடம்பரம் செய்து வருகிறார்கள். வெற்றி நிச்சயம் வந்து விடுமென்று தோன்றிவிட்டபடியால் ருஷ்யாவின் தலை நகரத்தில் அவ்விருவருடைய வாசமும் யுத்தத்துக்குப் பின் நடை பெறப்போகும் உலக சீர்திருத்த பிரச்னைகளில் அவர்களுடைய அயல் நாட்டு அனுபவங்களின் ஆலோசனையும் அவசியமென்பதை ஜெர்மானியர்கள் மறந்துவிட்டார்கள்.

பொய் பிரசாரமும், டம்பப்பேச்சும் இனிமேல் ஜெர்மானியர்களுக்குப் பலனளித்துவிடாது. நேசதேசத்தார்கள் முன்னேற்ற யுத்தம் துவக்கிவிட்டார்கள். ஜெனரல் ஸம்ட்ஸ் சொல்லுகிறபடி யுத்தப் போக்கின் மகத்தான மாறுதல் உண்டாகிவிட்டது. நாம் வெகுநாட்களாக கஷ்டப்பட்டோம். இன்னும், பலமாகவும், கோரமாகவும் நாம் யுத்தம் செய்யவேண்டும். ஆகிலும், நம்முடைய லக்ஷியம் புலப்பட்டுவிட்டது. நாம் ஜயித்துவிடுவோமென்ற எண்ணம் தோன்றிவிட்டது. வெற்றியடைய வேண்டுமென்றும் நாம் ஊக்கம் கொண்டிருக்கிறோம்.

வி வி வி வி வி

ஆட்டம் கண்டுவிட்டது. ஹிட்லரின் ஐரோப்பிய அரணின் வெளிச்சுவறுகளில் ஆட்டம் கண்டுவிட்டது. இலியட் விர்லெயின் இலாகாவைச் சேர்ந்த பிரெஞ்சு ஸ்வதந்திரக் கக்ஷிக்காரர்களின் நடவடிக்கை மூலமாக ரயில்வே சம்பவம் நடைபெற்று 200 ஜெர்மானியர்கள் இறந்துவிட்டார்கள். 300 பேர்கள் காயமடைந்தார்கள். பிரான்ஸிலுள்ள எதிர்ப்பு கோஷ்டிகளெல்லாம் நேசதேசத்தார் குறிப்பிடும்

னாளிலும், மணியிலும், கலகம் செய்யத் தயாராகயிருக்க வேண்டுமென்று நேசதேசத்தார்கள் செய்தி விடுத்திருக்கிருர்கள். ஆகஸ்டு 24-ம் தேதிக்கு முன் தங்களிடமிருக்கும் ஆயுதங்களை ஒப்புவித்துவிடவேண்டுமென்றும், தவறினல் மரண தண்டனை விதிக்கப்படுமென்றும் பிரெஞ்சு மக்களுக்கு ஜெர்மானியர்கள் உத்தரவிட்டிருக்கிருர்கள்.

வி வி வி வி வி

டென்மார்க். டென்மார்க்கில் ஜெர்மானியர்களுக்கும், டென்மார்க்கு மக்களுக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன. ரயில் வண்டித்தொடர்கள் நாசம் செய்யப்பட்டன. தொழிலாளர் சங்கத்தார்கள் வேலை நிறுத்தம் செய்வதாகச் சொல்லிவிட்டார்கள். ஒடென்ஸி, ஆர்குஸ், ஆல்ஸர்ச் போன்ற ஆறு நகரங்களில் அவசரச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. கொபன்ஹேகனிலுள்ள மகத்தான டெனிஷ் அலுமினியம் தொழிற்சாலையான டான்ஸ்க் அலுமினியம் பாரிக், நொருக்கப்பட்டது. கிழக்கு ஜட்லாந்துக்கு மின்சார ஸப்ளை செய்யும் யந்திரசாலை அழிக்கப்பட்டு விட்டது. இஸ்வென்பார்க் என்னுமிடத்தில் ஜெர்மன் துருப்புகளுக்கும், டெனிஷ் ஸோல்ஜர்களுக்கும் பலமான யுத்தம் நடைபெறுகிறது.

வி வி வி வி வி

ஹோர்-பிராங்கோ சம்பாஷணை. இவ்விருவர்களுக்குள் நடைபெற்ற சம்பாஷணை முடிவடைந்துவிட்டது. ஸர் ஸாமுவேல் ஹோர் லண்டனுக்குச் சென்று விஷயங்களை அறிவிப்பார். மேற்கு மத்தியதரைக்கடலில் மறுபடியும் யுத்தம் ஆரம்பிக்கப்படும் ஹேஷ்யங்களிருப்பதால் டாஞ்ஜியர் சம்பந்தமான பிரச்னை மறுபடியும் கிளம்பிவிட்டது. டாஞ்ஜியரில் ஜெர்மானியர்கள் மிகுதியாகயிருக்கிருர்களென்றும், ஜிப்ரால்டரின் ரக்ஷணைக்காக அவர்களை வெளியேற்றி விடுவது அவசியமென்றும் பேசப்பட்டதென்று தெரியவருகிறது. இது விஷயத்தில் ஸர் ஸாமுவேல் ஹோர் தடஸ்தமான மனப்பான்மையுடனிருந்தாரென்று தோன்றுகிறது. இருநாடுகளுக்குமுள்ள சம்பந்தங்கள் ஸௌசன்யமாகவேயிருக்கும்படி தன்னுலியன்றளவு செய்வதாக ஜெனரல் பிராங்கோ சொல்லி வருகிருர்.

வி வி வி வி வி

துருக்கி யுத்தத்தில் சேருமா? துருக்கி இந்த யுத்தத்தில் சேராமல் தனித்திருக்க வேண்டுமென்று சொல்லும் கோஷ்டி பலமாகயிருந்தபோதிலும், சந்தர்ப்பங்களின் அவசியத்தினுல் இந்த நிலைமை மாறுதலடையக்கூடும். நேசதேசத்தார்களுக்கு வெற்றி நிச்சயமென்று இப்பொழுது ஏற்பட்டுவிட்டதால், தானும் சமாதானப் பேச்சுகள் நடக்கும்பொழுது யுத்தத்தில் ஈடுபட்டவர் என்ற ஒருவராகக் கலந்து கொள்ளவேண்டுமென்ற ஆவல் துருக்கிக்கும் உண்டாகிவிட்டது. மேலும், பால்கன் நாடுகள் போன்ற சில விஷயங்களில் அதனுடைய அக்கரைகளும் பாதிக்கப்படுகின்றன. நேசநாடுகள் கிரீஸை ஆக்கிரமித்தவுடன் துருக்கி யுத்தத்தில் புகுந்துவிடும். அப்பொழுது ஜெர்மனி அதைத் தாக்கினுலும் கிரீஸிலிருந்தும், கிரேக்கத் தீவுகளிலிருந்தும் மத்தியக் கிழக்கிலிருந்தும் நேசதேசத் துருப்புகள் துருக்கிக்கு உதவி செய்யக்கூடும்.

வி வி வி வி வி

கலாப்ரியா நொருக்கப்படுகிறது. படோக்ளியோவின் நடவடிக்கை எப்படியிருந்தாலும், எப்பாடு பட்டும் இதாலியை ரக்ஷித்து விடுவதென்று ஜெர்மானியர்கள் தயார் செய்து வருகிருர்களென்று நியூ யார்சர் ஸீடங் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. அல்ஜீயர்ஸ் ஒலிபரப்பில் இதற்கு மறுமொழியாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. 'இதாலியை ஜெர்மானியர்கள் யுத்தகளமாக உபயோகிக்கும்படி இதாலி அனுமதித்து விட்டால், ஸிஸிலிக்கு ஏற்பட்ட கதிதான் அதற்கும் ஏற்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தெற்கு இதாலியான கலாப்ரியாவுக்கும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. "ஜெர்மானியர்கள் கலாப்ரியாவுக்குப் பின்வாங்கிவிட்டார்கள். கலாப்ரியாவில் ஜெர்மானியர்களை யுத்தம் செய்யும்படி நீங்கள் அனுமதித்தால், அவர்கள் உங்களுக்கு நாசத்தைத்தான் விளைவிப்பார்கள். கலாப்ரியா மக்களாகிய நீங்கள் இது நடைபெருமல் செய்ய வேண்டும். ஸப்ளைகளுக்கும், சாமான் ஏற்றிச் செல்லுவதற்கு சாதனங்களுக்கும் போக்கு வரவு மார்க்கங்களுக்கும் ஜெர்மானியர்கள் உங்களைத்தான் நம்பியிருக்கிருர்கள். கலாப்ரியாவில் ஜெர்மனி உங்களைத்தான் தஞ்சம் அடைந்திருக்கிறது. ஆகையால் கலாப்ரியா ஜனங்களாகிய நீங்கள் ஜெர்மானியர்கள் உங்களுடைய வண்டிகளையும், கரி டெப்போக்களையும், இருப்புப்பாதைகளையும், உங்களுடைய டெலிபோன் அமைப்புகளையும் உபயோகிக்காமல் இருக்கும்படி எப்பாடுபட்டும் செய்து விடவேண்டும்".

ஜெனரல் அலெக்ஸாண்டர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார். "ஜெர்மானியர்கள் இடுக்கியில் அகப்பட்டுவிட்டார்கள். இதாலியில் தற்காப்புகளை அவர்கள் அமைக்கமுடியாது. தற்காப்புகளை இதாலியர்கள்தான் அமைக்கவேண்டும். ஜெர்மானியர்கள் தெற்கு இதாலியைக் காலிசெய்து, வடக்கு இதாலிக்குப் பின்வாங்கினால் பால்கன் நாடுகளிலுள்ள இதாலியப் படைகள் தாயகம் திரும்ப ஆசைப்படுவார்கள். இவர்களுக்குப் பர்த்தியாக ஜெர்மனி தன்னுடைய துருப்புகளை அனுப்பவேண்டும். தெற்கு இதாலியை நாம் பிடித்துவிட்டால் பால்கன் நாடுகளுடனும், தெற்கு பிரான்ஸுடனும் தொடர்பு வைத்துக்கொள்ள நமக்கு வசதி உண்டாகிவிடும்."

ஆகையால் கடலிலிருந்தும், தரை மார்க்கமாகவும், ஆகாயத்திலிருந்தும் கலாப்ரியா நொருக்கப்படுகிறது. இதாலியின் கட்டைவிரல் பக்கத்தில் சீசாக் கழுத்துப்போன்ற ஒரு பிரதேசம் அமைக்கப்படுகிறது. இருப்புப் பாதை, தளவாடங்கள் வைக்குமிடம், ரெயில்வே ஸ்டேஷனைகள், பாலஙகள், ரஸ்தாக்கள், கடற்கரைகள் எல்லாம் தவிடுபொடியாக்கப்படுகின்றன. ஜெர்மானியர்கள் ரெக்கியோடிகலாப்ரியாவைக் காலிசெய்துவிட்டார்கள். ரோமிலிருந்து ராணுவப் படையை அப்புறப்படுத்துவது வேகமாக நடைபெற்று வருகிறது.

வி வி வி வி வி

மத்திய, வடக்கு இதாலி. வடக்கு இதாலியிலும் நிலைமை மோசமாகயிருக்கிறது. போலீஸுக்கும், ராணுவத்துக்கும் சமாதானக் கிளர்ச்சி செய்து வருகிறவர்களுக்கும் சச்சரவுகள் ஆரம்பித்து விட்டன. முஸோலினி காலத்திலிருந்ததைவிட படோக்ளியோ காலத்தில் ஸ்வதந்திரக் குறைவு ஏற்பட்டிருக்கிறதென்று பொதுஜனங்களிடம் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எல்லைச் சரகத்தைத் தாண்ட முயற்சிசெய்யும் இதாலியர்களுக்கு அனுமதிச் சீட்டுக் கொடுக்க மறுதளித்துவிட்டார்கள். ஸ்விட்ஸர்லாந்துடன் டெலிபோன் மூலம் பேசும் வசதிகள் துண்டிக்கப்பட்டுவிட்டன. நேசதேச விமானங்கள் நேபிள்ஸுக்கருகிலுள்ள ஆவெர்ஸீ, பெனிவெண்டோ, கான்ஸெல்லோ, போமிக்ளியானோ, டார்ஸி, ஸாலர்மோ முதலிய இடங்களை பலமாகத் தாக்கியிருக்கின்றன. சென்ற நாலு தினங்களில் ஜெர்மனிக்கு 114 சண்டை விமானங்கள் நஷ்டமாகியிருக்கின்றன.

வி வி வி வி வி

நம்முடைய கார்கோவ். ஆகஸ்டு 22-ம் தேதியன்று ஸோவியத் துருப்புகள் கார்கோவைப் பிடித்துக்கொண்டன. ஜெர்மன் அறிக்கை நிலயம் தெளிவாகவும், அமைதியுடனும் பின்வருமாறு வெளியிடுகிறது. "எதிரிகளின் தொந்திரவன்னியில் ஜெர்மன் துருப்புகள் திட்டப்படி கார்கோவைக் காலிசெய்துவிட்டனர். இவ்விதமாக யுத்தத்திலிருந்து விலகிக் கொண்டதன் மூலம் ஜெர்மன் போர்முனைகளின் நீளம் குறைவுபட்டுவிட்டது." இது வக்ரமான பேச்சு, உண்மையை மறைப்பதாகும். எதிரி சாவதானமாகக் காலிசெய்துவிடவில்லை. கோரமான யுத்தத்துக்குப்பின் அவன் துரத்தியடிக்கப்பட்டான். கார்கோவை இழந்ததிலிருந்து ஜெர்மனிக்கு மிகுந்த நஷ்டம் ஏற்பட்டுவிட்டது இதிலிருந்து ஜெர்மானியர் வசமுள்ள யூக்ரேனுக்கு அபாயம் உண்டாகிவிட்டது. ஸ்டாலின் பின்வருமாறு சொல்லுகிறார்.

"சமவெளிகளிலிருந்த துருப்புகள் வாரனேஷிலிருந்தும், தென்மேற்கு முனைகளிலிருந்தும் வந்த துருப்புகளின் பக்க பலத்துடன் கோரமாக யுத்தம் செய்து எதிரியின் எதிர்ப்பைக் குலைத்து இன்று கார்கோவைப் பிடித்துவிட்டார்கள். இவ்விதமாக யூக்ரேனின் இரண்டாவது தலைநகரமான **நமக்குச் சொந்தமான கார்கோவை** நாம் ஹிட்லர் போன்ற போக்கிரிகளிடமிருந்து விடுவித்துவிட்டோம்." **எங்களுக்குச் சொந்தமான கார்கோவ்** என்ற பதங்களை சரிவெழுத்தில் நான் போட்டிருக்கிறேன். கார்கோவைப் பிடிப்பதற்கு முன் நடைபெற்ற யுத்தத்தின் போக்கையும், அந்த நிகழ்ச்சியின் முக்யத்வத்தையும் இந்தப் பதங்கள் சுட்டிக் காட்டுகின்றன. அன்பு மிகுந்த கார்கோவைப் பிடித்த வெற்றியைக் கொண்டாடுவதற்காக சில படைகளை கார்கோவ் படைகளென்று ஸ்டாலின் பெயரிட்டிருக்கிறார். ஸ்வதந்திரத்துக்காகவும், தாய்நாட்டின் விடுதலைக்காகவும் போர்செய்து உயிர் துறந்த வீரர்களின் நிரந்தரமான புகழைக் கொண்டாடும்பொருட்டு ஸ்டாலின் பிரார்த்தனை செய்திருக்கிறார். இந்த அபிப்பிராயங்களடங்கிய வார்த்தைகளுள்ள ஸ்டாலினின் செய்தியானது ஒலிபரப்பில் 23 இடங்களுக்கு ஒலிபரப்பப்பட்டது. "நமது நாட்டின் சரித்திரத்தில் புகழ்பெற்றது, அற்புதமானது" என்ற செய்கையைக் கொண்டாடுவதற்காக மணிகள் அதற்குமுன் பலமாக சப்திக்கப்பட்டன. மாஸ்கோவில் இந்த வெற்றியை 324 குண்டுகள் போட்டு வெளிப்படுத்தினார்கள். மாஸ்கோவில் ஆகாயம் முழுவதும் ஜோதிமயமாகயிருந்தது. ஸ்டாலின்

அரண்மனையில் விளக்குகள் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. இரா முழுவதும் வாண வேடிக்கையும், அதிர்வேட்டுகளும் போடப்பட்டு நகரம் முழுவதும் குதூகலமாகயிருந்தது.

இரண்டு வருஷங்களுக்குள்ளாக கார்கோவ் நான்கு தடவை கைமாறிவிட்டதிலிருந்தே அதன் முக்யத்வம் வெளிப்படுகிறது. 1941-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் அது ஜெர்மானியர் வசமாகிற்று. 1943-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் ருஷ்யர்கள் அதை திரும்பிப் பிடித்தார்கள். மார்ச்சு மாதத்தில் அதை ருஷ்யர்கள் இழந்தார்கள். இப்பொழுது ருஷ்யர்கள் அதை மறுபடியும் கைப்பற்றி விட்டார்கள்.

எதிரி வசமாகுவதற்குமுன் கார்கோவானது ருஷ்யாவில் ஒரு பெரிய டாங்கி உற்பத்தி செய்யும் பிரதேசமாக யிருந்தது. அங்கு 9,00,000 வேலைக்காரர்கள் வேலை செய்து வந்தார்கள். அங்கிருந்த விமானம் கட்டும் தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கான விமானங்கள் மாதாமாதம் கட்டப்பட்டுவந்தன.

கார்கோவ் முதல் முதலில் வீழ்ச்சிபெறுமுன் அங்கிருந்த தொழிற்சாலைகளை ருஷ்யர்கள் யூரல் மலைகளுக்குக் கொண்டுபோய்விட்டார்கள். யூரலில் கட்டப்பட்ட டாங்கிகளின் உதவியைக்கொண்டுதான் இப்பொழுது ருஷ்யர்கள் கார்கோவைப் பிடித்திருக்கிறார்கள்.

கார்கோவ் இப்பொழுது பாழாகிவிட்டது. ஆகிலும், அதன் முக்யத்வம் போய்விடவில்லை. கார்கோவில் முக்கியமான ரயில்வே ஜெங்ஷன் இருந்துவருகிறது. நீபர் நதிக்குக் கிழக்கே உள்ள இருப்புப் பாதைகளுக்கு கார்கோவ் அச்சாணி போன்றது. இதிலிருந்துதான் ஜெர்மானியர்கள் மாஸ்கோவிலிருந்து காகஸஸ் வரையிலுள்ள கேந்திர ஸ்தானங்களுக்கு அபாயம் விளைவிக்க நேரிட்டது. இது விழுந்துவிட்டதிலிருந்து யூக்ரேனுக்குச் செல்லுவதற்கு செம்படைக்கு வசதி யேற்பட்டுவிட்டது. நீபர் நதிக்குக் கிழக்கேயிருக்கும் ஜெர்மானிய ஸ்தானங்களுக்கு அபாயம் உண்டாகிவிட்டது. கார்கோவைத்தாண்டி டானட்ஸ் நதி பிரதேசத்தின் வழியாக ஸ்டாலினோவை நோக்கி ருஷ்யர்கள் முன்னேறி வருகிறார்கள். "எதிரியின் வசந்தகால வெள்ளம் நம்முடைய கேந்திர ஸ்தானங்களை அடித்துக்கொண்டுபோகிறது. நமது படை வரிசைகள் பிளக்கப்பட்டுவிட்டன. பிளவை விசாலப்படுத்த ருஷ்யர்கள் ஏராளமான துருப்புகளைக் குவித்துவருகிறார்கள்" என்று ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

வி வி வி வி வி

கிஸ்கா. ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியன்று அமெரிக்கத் துருப்புகளும், கனேடியத் துருப்புகளும் கிஸ்காவில் இறங்கி அதை இப்பொழுது பிடித்துக்கொண்டுவிட்டார்கள். ஜப்பானியர்கள் இதற்கு முன்னதாகவே கப்பல்களில் ஏறிச்சென்று இந்தத் தீவை காலிசெய்துவிட்டார்கள். கப்பல்கள் மூடுபனியில் இங்கு வந்திருக்கவேண்டும். ஆட்டுவை நாம் ஏற்கனவே கைப்பற்றியதன் காரணமாக சாமான்கள் வரும் மார்க்கம் துண்டிக்கப்பட்டதாலும், கடலிலிருந்தும், விமானங்களிலிருந்தும் நாம் கிஸ்காவை பலமாகத் தாக்கி ஜப்பானியர்களுக்கு அபாயம் விளைவித்ததினாலும் அவர்கள் காலி செய்துவிட்டார்கள்போல் தோன்றுகிறது. சென்ற வருஷம் ஆகஸ்டுமாதம் முதல் $5\frac{1}{2}$ மிலியன் ராத்தல் எடைமானத்துக்குமேற்பட்ட வெடிகுண்டுகள் கிஸ்காவில் போடப்பட்டன. 59 யுத்தக் கப்பல்களும், சாமான் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டன.

ஜப்பானியர்கள் இப்பொழுதுதான் முதல் முதலாக ஒரு இடத்தைக் காலிசெய்திருப்பதால் இதில் விசேஷ மிருக்கிறது. டோக்கியோவைத் தாக்குவதற்கு ஈட்டிமுனை போன்ற இந்த முக்கியமான ஸ்தலத்தை ஜப்பானியர்கள் இப்பொழுதுதான் முதல் முதலாகக் காலி செய்திருக்கிறார்கள். ஜப்பானைத் தாக்குவதற்கு கிஸ்காதான் சமீபமான பிரதேசம். ஜப்பானியர்களுடைய கடற்படை சிதறடிக்கப்பட்டு அது ஒளிந்துகொண்டிருப்பதுடன் ஜப்பானியர்களும் ஓட்டம்பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். முதல் தடவையாக ஜப்பானியர்கள் யுத்தம் செய்யாமல் புத்திசாலித்தனமாகப் பின்வாங்கிவிட்டார்கள். வெறிபிடித்தவர்கள் போல அவர்கள் கடைசி வரையில் நின்று போராடவில்லை. கபடமாக ஏற்பாடு செய்து இருட்டு சமயத்தில் அதைப் பூர்த்திசெய்து அவர்கள் ஓடிவிட்டார்கள்.

எதிரியைப்பற்றி சொல்லிவிட்டோம். பஸிபிக்கில் நேசதேசத்தாரின் வலிமை அதிகரித்துவிட்டதென்பதை எதிரி கண்டுபிடித்துவிட்டானென்பதற்கு நேசநாடுகளுக்கு ருஜூக் கிடைத்துவிட்டது. வட பஸிபிக்கிலுள்ள மார்க்கங்கள் நமது வசமாகிவிட்டன. ஜப்பானுக்குச் செல்லக்கூடிய வடக்கு ரஸ்தா திறக்கப்பட்டுவிட்டது. வடக்கேயுள்ள கேந்திரஸ்தானங்களை ஜப்பான் இழந்ததுடன் அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும், செல்லும் போக்குவரவு மார்க்கங்களின் ஆதிக்கத்தையும் ஜப்பான் இழந்துவிட்டது.

தெற்கு பஸிபிக்கில் ஸலாமூவா சீக்கிரத்தில் விழுந்துவிடும். ஜப்பானியர்கள் வெளிப்பக்கத்திலுள்ள தற்காப்பு ஸ்தலங்களிலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள்—அதாவது குட்வ்யூ ஜங்க்ஷன், மௌண்ட் தம்பூ, ஓராடுபி, கெமியாதம் முதலிய இடங்களை ஜப்பானியர்கள் இழந்தனர்.

வி வி வி வி வி

சண்டமாருதம். ஜெர்மன் கிரந்த கர்த்தாக்கள் பிரிடிஷ் விமானங்களின் புதிய வெடிகுண்டுத் தாக்குதல்களைப்பற்றி எழுதும் விவரங்களைப்பற்றி டெயிலி டெலகிராப் பத்திரிகையில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

"விமானத்தாக்குதல் ஆரம்பிக்கும்பொழுது பிரிடிஷ் விமானப்படை பச்சை நிறமுள்ள ஜ்வாலைகளை லக்ஷியமுள்ள இடத்தைச்சுற்றிலும் மூட்டிவிடும். அதற்குப் பின்வரும் வெடி விமானங்கள் இந்த ஜ்வாலைகளுக்குட்பட்ட ஸ்தலங்களில் சுற்றுப்புறத்தில் குண்டுகளைப் போட்டு ஜெர்மன் ஏ. ஆர். பி. வேலைக்காரர்கள் அங்கு வராதபடிக்கும் செய்துவிடுகிறார்கள். பிறகு வளையத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மத்தியில் வெடிகுண்டுகளையும், எரிவெடிகளையும் போட்டுவிடுகிறார்கள்.

"மிகுதியான உஷ்ணம் உண்டாகிவிடுவதினால் குண்டுவீச்சுக்குட்பட்ட பிரதேசத்தில் ஆகாயம் சூன்யமாகிவிடுகிறது. நகரத்தின் மற்ற பாகங்களிலிருந்து அவ்விடத்திற்கு காற்று வேகமாக ஓடிவருகிறது. இதிலிருந்துதான் சண்டமாருதம் உண்டாகிவிடுகிறது.

"சண்டமாருதம் மிகவும் பலமாகயிருப்பதால் ஜனங்கள் அந்த வேகத்தில் கீழே தள்ளப் படுகிறார்கள். தீயணைக்கும் படையினர் தங்களுடைய முஸ்தீப்புகளுடன் குண்டுவீச்சுக் குட்பட்ட ஸ்தலங்களுக்கு உதவிசெய்யச் செல்லமுடியவில்லை."

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த சம்பந்தமான சட்டங்கள். 1. மதராஸ் மாகாணத்தின் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தரிடமிருந்து அனுமதிச்சீட்டு பெறாமல் புதுக்கோட்டை ஸமஸ்தானத்துக்குள், நெல், அரிசி, சாமை, நவதான்யங்கள், கொள்ளு முதலியவற்றைக் கொண்டுவரக்கூடாதென்று ஈ-தர்பாரவர்கள் தடை செய்திருக்கிறார்கள்.

2. பருத்தித்துணி, நெசவு நூல் சம்பந்தமாக ஆகஸ்டு 10-ம் தேதிமுதல் முன்போக்கான ஒப்பந்தங்கள் செய்துகொள்ளக்கூடாதென்று மற்றொரு உத்தரவையும் ஈ-தர்பார் அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள்.

3. மற்றொரு உத்தரவின்படி அனுமதி பெறாமல் கோதுமையை மாவாகச் செய்வதும், மாவை விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டிருக்கிறது.

4. புதுக்கோட்டை சர்க்கரை சாமான்கள் உற்பத்தி கட்டுப்பாடு சட்டப்படி சர்க்கரை வியாபாரிகள் கண்ட்ரோலரிடமிருந்து லைஸென்ஸ் பெறவேண்டும். கண்ட்ரோலர் ரகம், அளவு, விலை வாசிகளை நிர்த்தாரணம் செய்வார். ஒரு பிரதேசத்துக்கும் வியாபார ஸ்தலத்துக்கும், சர்க்கரையின் ஸப்ளை அளவை அவர் நிர்த்தாரணம் செய்வார். பிரதேசங்களுக்கும், வியாபார ஸ்தலங்களுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும், எவ்வளவு ஸப்ளை செய்வது, எந்த ரகம் அனுப்புவது, எப்பொழுது அனுப்புவது, என்னவிலைக்கு விற்பது, எவ்விதம் அனுப்புவது, என்ற விஷயங்களையும்பற்றி கண்ட்ரோலர் உத்தரவு போடுவார்.

ஸிஸிலியைக் கைப்பற்றியவர்களுக்கு மாக்ஷிமை தங்கிய மன்னரின் பாராட்டு.

ஜெனரல் ஈசன்ஹவருக்குச் செய்தி.

ஸிஸிலி பூராவையும் முடிவாக இப்பொழுது ஆக்கிரமித்துவிட்டபடியால் உங்களுக்கும், உங்களுடைய சிறந்த சேனாதிபத்தியத்துக்குட்பட்ட எல்லாவிதமான படைகளுக்கும் உங்களுடைய அரிய சேவைகளுக்காக என்னுடைய மனமார்ந்த பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

கடலிலும், தரையிலும், ஆகாயத்திலும் ஒழுங்காக நடைபெற்ற யுத்தப் போக்கை பிரிடிஷ் சாம்ராஜ்ய மக்கள் அனைவரும் வியப்புடன் கவனித்து வந்தோம். யுத்தம் வெற்றிகரமாக முடிந்ததைக்கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம்.

இந்த வெற்றியில், பிரிடிஷார்களுக்கும் கனேடியத் துருப்புகளுக்கும் பங்கு உண்டென் பதில் நான் பெருமை கொள்ளுகிறேன் என்று அவர்களுக்கு அறிமுகப்படுத்துமாறு நான் கோருகிறேன்.

2. மிஸ்ட்டர் சர்ச்சிலுக்கு செய்தி.

ஸிஸிலிய யுத்தம்திட்டம் போட்டு அதன்படி காரியாம்சையிலும் செய்துவிடுவதற்கு ஒரு உருவான நடவடிக்கையாகும். யுத்தம் வெற்றிகரமாக முடிவடைந்ததற்கு மாலுமிகள், துருப்புகள், விமானிகளின் தீரமும், சக்தியும்தான் முக்கிய காரணமென்றாலும், இந்த நடவடிக்கைகளுக்கு திட்டம் போட்டவர்களுக்கும் அவர்களுடன் ஒத்துழைத்த அமெரிக்கர்களுக்கும் விசேஷமான புகழுரை உரித்ததாகும்.

அநேக மாதங்களாக அவர்கள் ஆர்வத்துடனும், புத்திகூர்மையுடனும் பரிச்சிரமப்பட்டிருக்கிறார்கள். திட்டங்களின் உயர்வுக்கு திட்டங்களின் மூலம் நமக்குக் கிடைத்திருக்கும் வெற்றிகள்தான் அத்தாக்ஷிகள். ஒவ்வொரு சிப்பாயும், ஒவ்வொரு கப்பலும், ஒவ்வொரு விமானமும், ஒவ்வொரு யுத்த முஸ்தீப்பும் சரியான இடத்திலும், சரியான முறையிலும் சரியான சந்தர்ப்பத்திலும் உபயோகிக்கப்பட்டதுதான், அவர்களின் உயர்வான திட்டம்.

தாய் நாட்டிலும், கடல் தாண்டியிருக்கும் பிரதேசங்களிலும் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ, இந்த மிகவும் முக்கியமான வேலையிலீடுபட்ட எல்லோருக்கும் அவர்களுடைய அலுவல்களைத் திறமையுடன் அவர்கள் செய்து முடித்ததற்கும், யுத்தத்தில் வெற்றிபெறுவதற்காக அவர்கள் செய்திருக்கும் சிறந்த பேருதவிக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டை, தற்காப்பு மந்திரி என்ற ஹோதாவில் தாங்கள் அறிவிக்கவேண்டுமென்று நான் கோருகிறேன். இந்தப் பாராட்டில், நானும் பிரிடிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள சர்வதேச மக்களும் ஏகமனதுடனிருக்கிறோமென்றும் நான் உறுதி கூறுகிறேன்.

மிஸ்ட்டர் சர்ச்சில் அட்லாண்டிக்கடல் தாண்டிச்சென்றிருப்பதின் நோக்கம்.

(விக்ஹாம் ஸ்டீட்.)

ஸிஸிலியிலும், ருஷ்யாவிலும் நேசதேசப்படைகள் ஜெர்மானியர்களை ராணுவமுறையில் பலமாகத் தாக்கியிருப்பதிலிருந்து ராஜீய முறையில் பயன்கள் ஏற்படக்கூடும். ஆனல், அந்த விளைவுகள் உடன் காலத்தில் உண்டாகாது. கார்கோவ் விழுந்துவிட்டாலும், ஸிஸிலியின் வடகிழக்கு பாகம் பூராவும் பிடிபட்டாலும், ராஜீய முறையில் குழப்பம் ஏற்படுமென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. நேசநாடுகளின் பலமான தாக்குதல்களிலிருந்தும், வெற்றிகளிலிருந்தும் அச்சுநாடுகளின் நம்பிக்கை முறிபட்டுவிடுமென்பது மட்டும் நிச்சயம். ஆகிலும், ஒவ்வொரு தோல்விக்குப்பின்னும் அச்சுநாடுகள் சமாளித்துக்கொள்ள முயன்று வருவார்கள். எல்லாம் ஒன்றுபட்டால்தான் அவர்களை சரணடையும்படி செய்யும். எல்லா தாக்குதல்களையும் ஒன்றுபடுத்தி அச்சுநாடுகள் சமாளிக்கமுடியாமல் செய்வதற்கு திட்டங்கள் போடுவதற்காகத்தான் மிஸ்ட்டர் சர்ச்சில் கடல் தாண்டிச்சென்றிருக்கிறார்.

1918-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 8-ம் தேதி ஜெர்மன் சேனைக்கு கரிநாளென்று லூடன்டார்ப் சொன்னதை 1943-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 5-ம் தேதி இந்த யுத்தத்தில் ஜெர்மானியர்களுக்கு மிகவும் கெடுதலான நாளென்று சொல்லுவதுடன் ஒப்பிடுவது பொருத்தமாகாது. 1918-ம் வருஷத்தில் ஜெர்மன் ராணுவ திட்டத்தை பரிபாலித்து விடலாமென்று லூடன்டார்ப் நம்பிக்கைகொண்டிருந்தான். அவ்விதமாக அவன் காப்பாற்றி விட்டான். அவனும், அவனுடைய ராணுவ அதிகாரிகளும், ஹிட்லரையும் நாஸி தத்வத்தையும் உபயோகப்படுத்தி வருங்காலத்தில் மற்றொரு யுத்தத்துக்கு அஸ்திவாரம் போட்டார்கள்.

எமானுவல் மன்னரும், படோக்ளியோவும், முஸோலினியையும் பாஸிதத்வத்தையும் தள்ளிவிட்டதுபோல் ஹிட்லரையும், நாஸி தத்வத்தையும் இன்று ஜெர்மன் துருப்புகள் உதறித் தள்ளிவிட்டாலும் ஜெர்மன் ராணுவ திட்டம் அழிவுப்படுவதை அவர்கள் காப்பாற்றி விடமுடியாது. இதாலியில் படோக்ளியோவும், இவ்விதமான எண்ணங்கள் கொண்டிருக்கலாம். ஜெர்மன் அதிகாரத்துக்குட்பட்ட ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி போன்ற நாடுகளி

ளுள்ள முக்கியஸ்தர்களும், வாகுப்தார்களும் நேசநாடுகளின் சமாதான நிபந்தனையை ஒப்புக்கொள்ளும் முறையில் தங்களுடைய யுத்த முயற்சிகளைத் தளர்ச்சி செய்யமுடியாமல் அபாயத்துக்குட்பட்டிருக்கிறார்கள். நாட்டு மக்களைத் தியாகம் செய்ய அவர்கள் முன்வருகிறார்களேயல்லாது தங்களை அபாயத்துக்குள்ளாக்க அவர்கள் பிரியப்படவில்லை. அநேக வருஷங்களாக அவர்கள் யதேச்சாதிகாரிகளின் ஆக்ஞைக்குட்பட்டிருந்ததால் அவர்கள் மாறுதல்களுக்குட்பட்டு அசைந்து கொடுக்கும் தன்மையை இழந்துவிட்டார்களென்பதையும் மறந்துவிடக்கூடாது.

ஏராளமான ரகசிய இயக்கங்கள் நாடெங்கும் பரவியிருக்கின்றனவென்பது நிச்சயம். ஸ்வதந்திர கலை ஞானமுள்ள கிரீஸ், யூகோஸ்லாவியா, போலந்து போன்ற நாடுகளில் ஜனங்கள் கொடுமையையும், ரகசிய போலீஸாரின் நடவடிக்கையையும் எதிர்த்து வருகிறார்கள். மற்ற இடங்களில், நேசதேச பலமானது கொடுமையை ஒழித்து ரகசியப் போலீஸை நசுக்கும் பொழுதுதான் ஜனங்களின் கிளர்ச்சி வலுவடைந்துவிடும். இந்தக் காரணங்களினால்தான் பலாத்காரம் சிறந்த பரிகாரம் என்று சொல்லப்படுகிறது.

முக்கியமாக ஜெர்மனியை முறியடிப்பதற்கு பலாத்காரம்தான் சிறந்த ஆயுதமாகும். பலாத்காரம் தான் சரியான உரிமை என்று உள்ளத்தில் ஊறியிருக்கும் ஜெர்மன் மக்கள் விமானத் தாக்குதலில் நேசதேசத்தார் அதிக பலமுள்ளவர்களென்றும் நகரவாசிகள் அவைகளை சகித்துக்கொள்ளவேண்டுமென்றும் டாக்டர் கோயபல்ஸ் ஒப்புக்கொள்ளும் பொழுது குழப்பமடைந்துவிடுகிறார்கள். கொலோனும், ஹாம்பர்க்கும் அழிந்தபின், மான்ஹீமும் லட்விக்ஷேபனும் அழிக்கப்படுகின்றன. ஸ்டெட்டினிலும், பெர்லினிலுமுள்ள பொது ஜனங்கள் ஊரைவிட்டு ஓடி மத்திய தெற்கு ஜெர்மனிக்கு ஏராளமாக வந்துவிட்டார்கள். இந்த நடவடிக்கை ஜெர்மானியர்கள் உலக ஆதிக்கம் பெறவேண்டுமென்ற கனவை அகற்றி சுயபுத்தி அடைந்து தோல்வி நிச்சயமென்று அறிந்து சரணாகதி செய்யும் வரையில் நடந்தேதீரும்.

நேசநாடுகளின் திட்டங்களும், யுத்த தந்திரங்களும் இதை எதிர்பார்த்துத்தான் நிறுவப்பட்டன. ஆகிலும், அது நடைபெறுவதற்கு, சமீபகால வரம்பை நேசதேசத்தார்கள் குறிப்பிடவில்லை. எதிரிகள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்று நேசநாடுகள் வற்புறுத்துவது அவர்களின் திண்ணமான திட்டத்தைக் குறிப்பிடுகிறது. அச்சுநாடுகளுடனாவது அதைச் சேர்ந்த மற்ற நிர்வாகங்களுடனாவது சமாதானப் பேச்சுகள் துவக்கப்படமாட்டாது.

நேசதேசத்தார்கள் ராணுவ வெற்றிபெறுவதற்கு மட்டுமில்லாமல் உலகில் சாச்வதமான சமாதானம் நிலைபெற வேண்டியதற்கும் போர்புரிந்து வருகிறார்கள். அச்சுநாடுகளுடன் சமாதானம் செய்துகொள்ளும் திட்டம் பரிகரிக்கப்பட்டுவிட்டது. நேசநாட்டு நிர்வாகங்களுடையவும், ஜனங்களுடையவும் இந்த உறுதியான முடிவை அச்சுநாடுகள் அறிந்துகொள்ளும்பொழுது அழிவு அபாயத்துக்குட்பட்ட மனிதர்களும், ஸ்தாபனங்களும் பலமாக எதிர்த்துப் போர்புரிய ஆரம்பித்துவிடும். அப்பொழுது அவர்கள் வஞ்சித்துப் பிறர் கையில் காட்டிக்கொடுத்து நாசத்துக்குட்படுத்திய ஜனங்கள் அவர்களை நாசம் செய்துவிடுவார்கள்.

நேசதேச ராஜ தந்திரிகளும், துருப்புகளும் இதை பூராவும் நம்பாவிட்டாலும் இது சம்பாவிதமென்றும் நினைக்கிறார்கள். ஒவ்வொரு வெற்றியும் அவர்களுடைய முயற்சிகளில் அதிக ஊக்கமளிக்கிறது. யுத்த முயற்சியில் சோர்வு உண்டாகவில்லை. மிஸ்ட்டர் சர்ச்சிலின் கனடா விஜயத்தையும், நேசதேசத்தாருக்கு இதுவரையில் ஏற்பட்டதும், ஏற்படக்கூடியதுமான வெற்றிகளையெல்லாம் இந்த நோக்கத்துடன்தான் நாம் பரிசீலனை செய்ய வேண்டும்.

இதாலிக்கு, ஸிஸிலி படிக்கட்டு,

J. A. ஸின்கிளேர் பூலி.

(ஸண்டே எக்ஸ்பிரஸில் வந்த கட்டுரையின் சுருக்கம்).

ஸிஸிலியானது புகழ்பெற்ற ஸ்வர்கலோகமென்றும், சூரிய வெப்பம் நிரம்பியதென்றும் ரம்யமான புஷ்பச்செடிகளும், மரங்களும் செழிப்பான கனிவர்க்கங்களுள்ள தோட்டங்களுமுள்ள தேசமென்று அநேகர் நினைக்கிறார்கள். இந்தத் தோற்றம் கடற்கரை ஓரங்களிலும் மேற்குப் பக்கத்திலுள்ள சமவெளியிலும் காணப்படும். உள்நாட்டுப் பிரதேசம் கரடுமுரடானது, செழிப்பற்றது. மத்தியதரைக்கடலிலுள்ள தீவுகள் எல்லாவற்றையும்விட மலைகள் அதிகமுள்ளது.

சந்தோஷமும், குதூஹலமும் நிறம்பிய இதாலியர்களைப் போலில்லாமல், ஸிஸிலி வாசிகள் ஆழ்ந்த புத்தியுள்ளவர்கள். காரியத்தில் கண்ணுள்ளவர்கள். அதிகமாக குதூஹலப் படுகிறவர்களில்லை. அநேக நூற்றுண்டுகளாக அயல்நாட்டு ஜாதியாரின் கெட்ட ஆக்ஷிக்கும், கொள்ளையடிப்புக்கும் உட்பட்டும், எரிமலையின் அட்டகாசம் மகத்தான பூகம்பம் போன்ற இயற்கையான அபாயங்களுக்கு சதாகாலமும் உட்பட்டுமிருப்பதால் அவர்கள் திடசித்த முள்ளவர்களாகி விதியின் பயனை அனுபவிக்கவேண்டுமென்று நம்பியுமிருக்கிறுர்கள்.

இத்துடன் உஷ்ணமான சீதோஷ்ண ஸ்திதியும் அவர்களிடம் குடிகொண்டிருக்கும் சோம்பேறித்தனத்துக்குக் காரணங்கள். முக்கியமாக தீவின் கிழக்குப் பாகத்திலிருப்பவர்கள் அதிக சோம்பேறிகள்.

கொதிக்கும் சகதியின் முன்னேற்றம்.

எட்னுமலையின் சரிவுகளில் அடிக்கடி அழிக்கப்படும் பிரதேசங்களில் துர்க்கந்தமுள்ள, கொதிப்புள்ள சக்தியானது வழியிலுள்ள எல்லாவற்றையும் நாசம் செய்துகொண்டு பரவி வருவதை கிராம வாசிகள் கவனித்து வருவதை நான் கண்ணுற்றேன். எரிமலையின் சகதி நின்றுவிடும்வரையில் அதை ஒருவரும் தடுத்துவிடமுடியாதென்று அவர்களறிவார்கள்.

பிரிடிஷார்களைப்போலவே ஸிஸிலியிலும், அநேக ஜாதியார்கள் குடியேறியிருக்கிறுர்கள். கிரேக்கர்கள், புனீஷியர்கள், ரோமர்கள், ஸாரஸன்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஸ்பெயின் தேசத்தார்கள் எல்லோரும் 1860-ம்வருஷம் வரையில் வரிசையாக ஆக்ஷிபுரிந்திருக்கிறுர்கள். 1860-ம் வருஷத்தில்தான் கரிபால்டியின் முயற்சியால் அது இதாலியின் வசமாகிற்று. இதாலியை ஆக்கிரமித்த ஜாதியார்களில் கிரேக்கக் கோவில்களின் அமைப்புகளும், நார்மன் ஜாதியார்களின் பழக்கவழக்கங்களும்தான் ஸிஸிலித் தீவில் காணப்படுகின்றன.

நார்மன் அரசர்களின் ஆக்ஷிகாலம்முதல் ஸிஸிலியர்கள் சந்தோஷமாக ஜீவித்துவரவில்லை. முக்கியமில்லாத பிரதேசங்களுக்குச் சென்றுல் அங்கே பாடகர்கள் குழந்தைகளுக்கு ரோலண்டும், அவனைச்சேர்ந்த வீரர்களும், செய்த தீரச் செய்கைகளைப்பற்றி கீதங்கள் பாடிக் கொண்டிருப்பார்கள். ஸிஸிலிய பொம்மை ஆட்ட மேடையில் பூராவாகக் கவசம்பூண்ட பழைய போர்வீரர்கள் நடத்திய போர்களிலிருந்து சில அம்சங்கள் நடித்துக்காட்டப்படும்.

ஸிஸிலியிலுள்ள வண்டிகளில் அழகாக வர்ணமடிக்கப்பட்டிருக்கும் படங்களில் சார்லி மேனும், அவனுடைய வீரர்களும் செய்த தீரச்செய்கைகளின் சித்ரங்கள் வரையப்பட்டிருக்கும்.

தலைநகரமான பாலர்மோவிலிருக்கும் அழகான கட்டடங்கள் நார்மன் அரசர்களால் நிர்மாணிக்கப்பட்டவை. மன்னர் அரண்மனையிலுள்ள காபெல்லா பாலாடினு என்பது நார்மன், ஆரப், பைஸான்டைன் சித்ரவேலைகளின் ஒன்றுபட்ட அழகான அமைப்பாக யிருக்கிறது.

இந்தக் கட்டடங்களுக்கு எவ்வளவு நஷ்டம் விளைந்ததென்று விளங்கவில்லை. மான்ரியாவிலுள்ள உன்னதமான கோபுரத்தில் விமானம் சுடும் பீரங்கிகளை ஏற்றிவைத்து இதாலியர்கள் வம்பை விலைக்குவாங்கினுர்கள். கவெண்டோடி காப்புகினியும், ஸெயிண்ட் ஸ்பிரிடோவின் மாதாக்கோவிலும் பலமாகப் பழுதுபட்டனவென்று சொல்லப்படுகிறது.

முதல் கட்டடத்தில் பிராசீன காலத்திலிருந்த காபுசீன் பாதிரிகளின் ஆயிரக்கணக்கான கோரமான உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அவைகளை உற்று நோக்குகிறவர்களைக்கண்டு பல்லைக்காட்டி ஹேளனம் செய்வதுபோலிருக்கின்றன. சுற்றுப்பிரயாணம் செய்தவர்களுக்கு அவைகளைக் கண்ணுற்ற கோரமான தோற்றம் ஞாபகம் வரக்கூடும்.

புராதனமான திராக்ஷை வனங்கள்.

ஸிஸிலியக் கடற்கரை பூராவிலும் இனிமையான கனிவர்க்கங்களிருக்கின்றன. கி.பி.960-ம் வருஷத்துக்குமுன் உற்பத்திசெய்யப்பட்ட திராக்ஷைச் செடிகள் இப்பொழுதும் ஏராளமான கனிகளைத் தருகின்றன. ஆரஞ்சுப்பழம், எலுமிச்சம்பழம், பேரிக்காய், டாங்கரின் பழம், மாதுளம்பழம், உற்பத்தியாகும் தோட்டங்களும், வாதாமரம், அத்திப்பழ மரங்களும் கடற்கரையிலிருந்து மலைச்சரிவுகள் வரையில் நிரம்பியிருக்கின்றன.

எட்னு மலையின் சரிவுகளில் அத்திப்பழமரம்தான் நன்முய் விருத்தியாகிறது. இந்த மரம்தான் கெட்டியான எரிமலைக் குழம்பிற்குள் வேரூன்றி அதைப் பொடியாக்கி பிரதேசம் சாகுபடிக்கு லாயக்குள்ளதாகச் செய்துவிடுகிறது.

மார்ஸாலா துறைமுகம் மேற்குக் கோடியிலிருக்கிறது. அதைச் சுற்றிலுமுள்ள சமவெளியில் திராக்ஷாரஸம் உண்டுபண்ணப்படும். உயர்தர திராக்ஷைச் செடிகள் வளருகின்றன.

ஒரு வியாபார ஸ்தலத்தின் கணக்குகளில் தன்னுடைய கடற்படைக்கு மார்ஸாலா திராக்ஷாரஸத்தில் 54,000 காலன்கள்கொண்ட 540 பைப்புகள் அனுப்பும்படி 1880-ம் வருஷம் நெல்ஸன் பிரபு எழுதிய கடிதம் ஒன்றைக் கண்டுபிடித்தேன்.

இங்கேதான் ஸிஸிலியைக் கைப்பற்றுவதற்காக பிரிடனுடைய இரு கப்பல்களின் உதவியுடன் காரிபால்டியும் அவனைச்சேர்ந்த ஆயிரத்தாரும் இறங்கினார்கள்.

ஜலசந்தியின் கரையிலுள்ள தீபகற்பத்தில் மெஸ்ஸினாவில் நேபிள்ஸ் மன்னர் நெல்ஸனுக்குக் கொடுத்த ஒரு புதைகுழி ஸ்தலமிருக்கிறது. இதில் நைல் யுத்தத்தில் இறந்தவர்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் புதிய தற்காப்பு திட்டம்.

(விங் கம்மாண்டர் L. V. பிரேஸர்.)

ஹாம்பர்க்கை பத்து தினங்களாக இடைவிடாது தாக்கி 10,000 டன்கள் எடைமானமுள்ள கனமான வெடிகுண்டுகளை வர்ஷித்து நாசமாக்கிய பிரிடிஷ் விமானப்படை, அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த கனமான வெடி விமானங்கள் ஜெர்மனியின் மிகவும் பலமான தற்காப்பு ஸ்தலங்களையும் பொருட்படுத்தாமல் சஞ்சாரம் செய்திருக்கின்றன. இந்தப் பெரிய துறைமுகத்தையும், 17,00,000 ஜனங்களுள்ள தொழிற்சாலை ஸ்தாபனத்தையும், காப்பாற்றுவதற்காக மற்ற வேலைகளை நிறுத்திவிட்டு இந்த இடத்திற்கு ஏராளமான சண்டை விமானங்களை ஜெர்மானியர்கள் அனுப்பினார்கள். ஹாம்பர்க் பூராவிலும் பலவகைப்பட்ட விமானம் சுடும் பீரங்கிகள் வரிசை வரிசையாகவும், அடர்த்தியாகவும் அமைக்கப்பட்டிருந்தன. அப்படியிருந்தும் வெடி விமானங்கள் லக்ஷியத்தை அடைந்துவிட்டன.

ஜெர்மனியில் பலமான குண்டுவீச்சுக்குட்பட்ட பிரதேசங்களில் தற்காப்பு முறைகள் அதிகரிக்கப்படுகின்றன. ஒரு வருஷத்துக்கு முன் கொலோனை 1,000 வெடி விமானங்கள் தாக்கியபொழுது கூட அங்கே 500 கனமானதும், லேசானதுமான பீரங்கிகளும் குறைந்த பக்ஷம் 150 தேடு விளக்குகளும் நகரத்தைச் சுற்றி வைக்கப்பட்டிருந்தன. ஜெர்மனியின் மற்றெல்லா பாகங்களையும்விட ரூர் பிரதேசத்தில் எல்லாவிதமான தரைத் தற்காப்பு முறைகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. கால நிலைமையையும், இராக்கால நீடிப்பையும் சொல்ப காலத்திற்குள்ளாக ஒரு பிரதேசத்திலுள்ள குறிப்பிட்ட தொழிற்சாலைகளுள்ள ஸ்தலங்கள் நொருக்கப்படுவதையும், ஆராய்ச்சி செய்து அடுத்த மாதத்தில் எந்த இடத்தில் விமானத் தாக்குதல் ஏற்படக்கூடுமென்று எதிரிக்கு புலப்பட்டுவிடுகிறது.

மேலும், ரெயில்வே சாமான் வண்டிகளில் கனமான பீரங்கிகளை ஏராளமாக எதிரி அமைத்திருக்கிறான். தாக்குதல்களுக்குட்படும் ஸ்தலங்களுக்கு அவைகள் துரிதமாகக் கொண்டு போகப்படுகின்றன.

ஏராளமான தேடுவிளக்குகள்.

ரூர் பிரதேசத்தை முதல் முதலில் நாம் தாக்கியபொழுது நேசதேச விமானங்கள் ஐந்து மைல்களுக்கொருதரம் அமைக்கப்பட்டிருந்த தேடுவிளக்குகளையும், தற்காப்பு பீரங்கிக் கூட்டங்களையும் தாண்டிச்செல்லவேண்டியிருந்தன. இந்தத் தற்காப்பு கோஷ்டிகளுக்கு மத்தியில் இரவு யுத்த விமானங்கள் அங்குமிங்கும் பரவலாக வைக்கப்பட்டிருந்தன. இரவு சண்டை விமானங்கள் உயரச்சென்றவுடன் பீரங்கிகள் சுடுவதை நிறுத்திவிட்டன. இன்று ஜெர்மனி மீதப்படுத்தக்கூடிய ஒவ்வொரு யூங்கர் 88 விமானமும், வெடிகுண்டுவீசும் விமானமாகயிருந்ததுபோக இப்பொழுது இரவு சண்டை விமானமாகத் திருத்தி அமைக்கப்படுகிறது. ஆனால் சண்டை விமானங்கள் தங்களுடைய பீரங்கிக்குண்டுகளின் வீச்சுக்குட்பட்டுத்தான் எதிரியைத் தாக்கவேண்டியிருக்கிறது.

மேலும், கடற்கரையிலிருந்து உள்நாடுவரையில் தற்காப்புகள் பூராவாக திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. கடற்கரை ஓரத்தில் சண்டை விமானங்கள் படையெடுக்கும் வெடி விமானங்களைத் தாக்குகின்றன. உள்நாட்டிலிருந்த தேடுவிளக்குக் கூட்டங்களை அப்புறப்படுத்திவிட்டார்கள். ஆனால் விமான எதிர்ப்பு பீரங்கிகள் லக்ஷியத்துக்குச் செல்லும் வரையில் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகாயத்தில் சண்டை விமானங்கள் ரோந்து செய்கின்றன. ரூர் பிரதேசத்தில் ஜெர்மனியின் எல்லா பாகங்களிலிருந்தும் தேடு விளக்குகளும், பீரங்கிகளும் கொண்டுவரப்பட்டு பலமாக அமைக்கப்பட்டிருந்தன. அவைகள் கூட்டம் கூட்டமாக வைக்கப்பட்டிருந்தன. இப்பொழுது தேடு விளக்குகள் ஏராளமாக அமைக்கப்பட்டிருப்பதால் ரூர் பிரதேசத்திலுள்ள ஆகாயம் சில சமயங்களில் ஜோதிமயமாகக் காணப்படுகிறது.

ஜெர்மன் விமானப்படை புதிர்.

ஜெர்மன் விமானப்படையின் நடமாட்டக்குறைவு.

(பால் வெஸ்டு.)

கொஞ்சகாலமாக கோயரிங் அதிகாரத்துக்குட்பட்ட ஜெர்மன் விமானப்படையின் நடவடிக்கையைப்பற்றி ஒரு தகவலும் வெளிப்படவில்லை. ஜெர்மன் விமான உற்பத்தி, போர்முனைகளில் விமான நஷ்டம், விமானம் ஓட்டிகளின் பயிற்சி, ஜெர்மனிக்குக் கிடைத்து வரும் எண்ணெய், இவைகளைப்பற்றி நம்பத்தகுந்த கணக்குகள் கிடைக்காத பொழுது ஜெர்மன் விமானப்படையின் மௌனத்துக்குக் காரணம் வியக்தமாகச் சொல்லமுடியாது.

அதிகமான ஜாக்கிரதையுள்ள பரிசீலனை செய்பவர்கள் இதற்குக் காரணம் ஜெர்மன் விமானப்படையின் பலஹீனமென்று நம்பவில்லை. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் அமைதிக்கு, முக்கியமாக இங்கிலாந்தின்பேரில் குண்டு வீச்சேற்படாமலிருப்பதற்கு, ஜெர்மானியர்கள் விமானங்களை பத்திரப்படுத்தி வைத்து ருஷ்யாவை கடைசி பிரயத்தனமாக ஒரு முறை தாக்கு வதற்கோ, அல்லது ஐரோப்பிய கடற்கரைகளில் நேசதேசத் துருப்புகள் இறங்கும்பொழுது அவைகளை பலமாகத் தாக்குவதற்கோ, அல்லது பிரிட்டனை மறுபடியும் ஏராளமான விமானங் களைக்கொண்டு தாக்குவதற்கோ அவைகளை ஜெர்மனி உபயோகப்படுத்தக்கூடுமென்று அவர்கள் நம்புகிறார்கள். ஆகிலும், நேசதேசத்தாரிருக்கும் வட்டாரங்களில் ஜெர்மன் விமானப்படையின் மௌனத்துக்கு ஜெர்மானியர்களின் வருங்கால திட்டம் காரணமில்லை யென்றும் அவசியத்தை முன்னிட்டுத்தான் இம்மாதிரி சும்மாவிருக்கிறதென்றும் அபிப்பிராயமிருந்து வருகிறது. ஐரோப்பாவில் இரண்டு போர்முனைகளில் சண்டை செய்ய வேண்டிய நிலைமையைக் கண்டுதான் ஜெர்மன் விமானப்படை நடுக்கம் கொண்டிருக்கிறது. யுத்த ஆரம்பத்திலிருந்து இந்த நிலைமையைத்தான் அது தவிர்த்து வந்தது.

கொஞ்ச காலத்திற்குமுன் ஸ்டெட்டினில் வெளியாகும் ஆஸ்ட்ஸி—ஸீடங் பத்திரிகை யில் ஜெர்மனியை பிரிடிஷ் விமானங்கள் தாக்குவதற்கு பதில் முறையாக இங்கிலாந்தைத் தாக்க வேண்டுமானால் ருஷ்யப் போர்முனையிலிருந்து ஜெர்மன் விமானப்படையின் ஒரு பகுதியை இங்கு கொண்டுவரவேண்டும் என்று அனுதாபத்துடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

அபரிமிதமான உற்பத்திக் கணக்குகள் சந்தேகிக்கக்கூடியவை.

1941-ம் வருஷத்தைவிட இப்பொழுது விமான உற்பத்தி இரட்டித்து விட்டதென்று பீல்ட் மார்ஷல் மில்ச் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறார். யுத்த தளவாட உற்பத்தி இலாகா மந்திரியான ஸ்பியர், ஐரோப்பிய யுத்த தளவாட உற்பத்தி சாலைகளை பிரிடிஷ் அமெரிக்க விமானங்கள் நொருக்கியபோதிலும், போர்முனைகளுக்கு அனுப்பப்படும் விமானங்களின் சங்கியை கொஞ்சம்கூட குறைவுபடவில்லையென்று சொல்லுகிறார். ஆகிலும், இம்மாதிரியான வெளியீடுகள் உபயோகமற்றவை.

லண்டன் டெயிலி டெலகிராப் பத்திரிகையில் எழுதியிருக்கிறபடி, 1941-ம் வருஷத்தை விட 1942-ம் வருஷத்தில் ஜெர்மன் விமான உற்பத்தி 50 சதவிகிதம் குறைந்துவிட்டதென்று பெர்லினிலிருந்து சென்ற மார்ச்சு மாதத்தில் ஸ்டாக்ஹோமுக்கு வந்த யந்திர சாஸ்திர நிபுணர் தெரிவித்தார். அவர்கள் கைப்பற்றிய ஜெர்மன் விமானங்களிலுள்ள தொழிற்சாலை அடையாளங்களிலிருந்து, அவைகள் கையிருப்பிலிருக்கும் விமானங்களல்லவென்றும், தொழிற்சாலைகளிலிருந்து கட்டிமுடிந்தவுடன் போர்முனைக்கு வந்துவிட்டன என்றும் ருஷ்யர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதிலிருந்து ஜெர்மனியிடமிருக்கும் விமானங்களின் கையிருப்பு குறைவுபட்டுவிட்டதென்று தெளிவுபடுகிறது. ஆகையால் ஹர் ஸ்பியர் சொன்ன அபிப்பிராயம் உண்மையானதுதான். ஆகிலும், அவருடைய அறிக்கை ஜெர்மன் விமானப்படையின் உண்மையான நிலைமையைப்பற்றி தப்பான அபிப்பிராயம் கொள்ளும் படியாகச் செய்துவிட்டது.

ஜெர்மன் விமான நஷ்டம்.

ஜெர்மனிக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்பதில் ஒரு ஆச்சரியமுமில்லை. கீழ்கண்ட புள்ளி விபரங்கள் அதை விளக்கிக்காட்டும். உத்தியோக முறையில் பிரிடிஷார் வெளியிட்ட புள்ளி விபரங்களிலிருந்து எல்அலாமீன் யுத்தத்திலிருந்து டிரிபோலியை கைவசப் படுத்திய வரையில் 13 வார யுத்தத்தில் வட ஆபிரிக்காவில் ஜெர்மானியர்கள் 2,475 விமானங் களை இழந்தார்களென்று தெரியவருகிறது. வட ஆபிரிக்காவில் உபயோகப்படுத்தப்பட்ட விமானப்படை பகுதிகளை மதித்துப்பார்த்தால் வட ஆபிரிக்கா போர் இரண்டாம் தரமான போர்முனையென்றுதான் சொல்லவேண்டும். டூனிஸியா யுத்தத்தில் ஒரு நாளிலேயே சில சமயங்களில் அச்சு நாடுகள் 200 விமானங்களை இழந்திருக்கிறார்கள்.

ருஷ்யாவில் உத்தியோக முறையில் வெளியிட்ட கணக்குகளின் பிரகாரம் 1942-ம் வருஷம் நவம்பர் மாதத்திலிருந்து 1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் முடிய 4½ மாத யுத்தத்தில் ஜெர்மானியர்கள் 5,090 விமானங்களை இழந்துவிட்டார்களாம். அவைகளில் 1,490 விமானங்கள் ருஷ்யர் வசம் அகப்பட்டுக்கொண்டன. ருஷ்யர்களின் முன்னேற்ற வேகத்தின் காரணமாக தரையில் வைக்கப்பட்டிருந்த அநேக விமானங்களை ஜெர்மானியர்கள் இழந்தார்களென்பது கவனிக்கத்தகுந்தது. அழிவுபட்டதும் அல்லது எதிரி வசமானதுமாக ஜெர்மானியர்களுக்கு 800 வெடிவிமானங்கள் நஷ்டமாகிவிட்டன.

இந்த விளைவுகளின் பயனை ஜெர்மனி அனுபவிக்க வேண்டியதுதான். அதேவிதமாக நேசதேச விமான பலமும், வேகமாக அபிவிருத்தியடைந்து வருகின்றது என்றும் சொல்ல வேண்டும்.

அமெரிக்கர்களின் மதிப்புப்படி அமெரிக்கத் தொழிற்சாலைகள் மாதம் ஒன்றுக்கு 10,000 விமானங்களையும், பிரிடன் 3,500 விமானங்களையும் கட்டிவிடுகிறது. இதை விஞ ருஷ்யர்களும் ஏராளமான விமானங்களைக் கட்டிவிடுகிருர்கள்.

விமானங்களின் தரமும் குறைந்துவிட்டது.

ஜெர்மன் விமானங்களின் தரமும், நேசநாடுகளின் விமானங்களைப்போல் சிலாக்கியமாக யில்லை. பிரிடிஷ் அமெரிக்க விமானங்களின் இயந்திர அமைப்பு முன்னேற்றத்தின் பயனுக ஜெர்மனி அவர்களுடைய விமானங்களின் அமைப்பையும், உற்பத்தி முறைகளையும் திருத்திக் கொள்ளவேண்டியிருக்கிறது. இது கஷ்ட சாத்யமான வேலையாகும். நேசநாடுகளின் உற்பத்தி அளவை அடையவேண்டுமானுல் ஏராளமான விமானங்களை ஜெர்மனி கட்டிவிட வேண்டும். ஆனுல், ஏராளமாக உற்பத்தி செய்யும்பொழுது இயந்திரசாலைகள் புதிய முறையையும் கையாளுவதென்பது முடியாத காரியமாகும்.

ஜெர்மனியின் பருந்துப் பாய்ச்சல் விமானங்களான ஸ்கோ விமானங்கள் அற்றுப்போய் விட்டனவென்று பிரிடிஷார்களும், ருஷ்யர்களும் சொல்லுகிருர்கள். அவைகள் ஏராளமாக உண்டுபண்ணப்பட்டன. ஜெர்மன் விமான உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு இப்பொழுது சிரமமேற்பட்டுவிட்டது. வெகுகாலமாக ஜெர்மானியர்கள் புது தினுசான விமானங்களை உற்பத்தி செய்யவில்லை. பிரிடிஷ் அமெரிக்க தொழிற்சாலைகள் கற்பனையாக அநேக புது ரக விமானங்களை உற்பத்தி செய்திருக்கின்றன.

எண்ணெய் பிரச்னை.

எண்ணெய் ஸப்ளை தான் ஜெர்மனிக்கு மற்ருெரு முக்கியமான பிரச்னை. எண்ணெய் இருப்புக்கணக்குகள் ரகசியமானவை. ஆகிலும், ஒன்று நிச்சயம். ருமேனிய எண்ணெய் பிரதேசங்களும், சேர்மான் எண்ணெய் உற்பத்தி செய்யும் சாலைகளும்தான் ஜெர்மனியின் முக்கியமான எண்ணெய் ஸப்ளை செய்யும் ஆதாரங்கள். அவைகளின் எண்ணெய் ஸப்ளையானது அச்சுப்படைகளுக்கும், ஜெர்மனிக்காக வேலை செய்துவரும் ஐரோப்பிய தொழிற்சாலைகளுக்கும் போதுமானதாக இல்லை.

எல்லா விஷயங்களையும் யோசித்தால் விமானப்படையின் உபயோகத்தை ஜெர்மனி குறைத்துவிட்டதென்று தோன்றுகிறது. ஹிட்லரும், கோயரிங்கும் சொல்லிவந்த பிரகாரம் விமானப்படைதான் யுத்தத்தில் முடிவான வெற்றி அளிக்கும் முதல் தரமான சாதனம் என்பதை நாஸிகள்கூட இப்பொழுது ஒப்புக்கொள்ளவில்லை. இந்த விஷயம் கடற்தளபதி டோனிட்ஸ் சமீபத்தில் விடுத்த செய்தியிலிருந்து புலப்படுகிறது. "பிரிடனைக் கடல் யுத்தத்தில்தான் முறியடிக்க முடியும்" என்று அவர் சமீப காலத்தில் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்.

எஸ்ஸனில் வெளியாகும் நாஷனல் ஸீடங் பத்திரிகையில் ரூர் பிரதேசத்தை பிரிடிஷ் விமானங்கள் தாக்கிய உடன் காலத்திலில்லாமல், பெர்லின் தாக்கப்பட்டபின்தான் பிரிடனை ஜெர்மன் விமானங்கள் பதில் தாக்குதல் செய்த காரணம் யாதுவென்று ஆத்திரத்துடன் பிரச்னம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பத்திரிகைக்கும், பீல்ட் மார்ஷல் கோயரிங்குக்கும் சம்பந்தமுண்டென்று ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஜெர்மன் விமானப்படையை அது மறைமுகமாகத் தாக்கத்துணிந்துவிட்டதிலிருந்து ஹிட்லரின் உயர்வான விமானப்படைக்குக் கேடு வந்துவிட்டதென்று நிச்சயமாய்த் தோன்றுகிறது.

ஜெர்மன் சைனியத்தின் மனேதிடம்.

(டெய்லி டெலிகிராப் பத்திரிகை).

1941-ம் வருஷத்தில் ருஷ்ய யுத்தம் ஆரம்பமானபோது எவ்வளவு திடமாய் இருந்தார்களோ அவ்வளவு திடமாயில்லாவிட்டாலும், ஜெர்மன் சைனியத்தின் மனே வலிமை இன்றும் குறையவில்லை.

ஸிஸிலியிலும், பைல்கோராட்டிலும், ஓரலிலும், கார்க்கோவிலும் அவர்கள் செய்துவரும் திடமான எதிர்ப்பிலிருந்து இவ்விஷயத்தை நான் உணருகிறேன். நார்வேயிலும், வடக்கு பின்லாந்திலுமுள்ள சைனியத்தின் மனோ வலிமை முன்னைவிட இப்பொழு மிகவும் அதிகமாய்க் குறைந்துவிட்டது எனிலும், 1,500 ஒத்துழைக்காதவர்கள் கிர்க்னெஸ், ஆல்டா ஆகிய இடங்களிலுள்ள ராணுவ முகாம்களிலேயே கைதி செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருப்பதினின்றும் அவர்கள் ஒரு கலகத்தை உண்டாக்காமல், பொழுதுபோகச்செய்யும் சிறு விஷயங்கள் என்று தான் கருதவேண்டும். குண்டினால் நாசமாக்கப்படும் நகரங்களிலுள்ள தங்களால் விரும்பப்படும் மக்களின் சுகத்தைக் கருதுவதாலும், புதிதாய் சேர்க்கப்படும் சைனியங்களுக்குப் போதுமான பயிற்சி அளிக்கப்படாததாலும், அவர்களால் உயர்ந்ததெனக் கருதப்பட்ட தளவாடங்கள் ருஷ்ய தளவாடங்களைவிட உயர்ந்ததில்லை என்று உணர்ந்ததாலும், ஜெர்மன் சைனியத்தின் மனோதிடம் குன்றிவிட ஆரம்பிக்கிறது. இருப்பினும், ஜெர்மன் சைனியம் எங்கெங்கு பார்த்தாலும், ஒரு தீரமான படையாகத் தான் இருக்கிறதென்பது மறக்கக்கூடாத காரியமாகும்.

யுத்தம் நடக்கும் பிராந்தியங்களில் இருக்கும் ஜெர்மன் சைனியங்களைவிட ஜெர்மனியில் உள்ளவர்களிடம் மனோதிடம் மிகவும் குன்றிப்போய்த்தான் இருக்கிறது. இங்கு மேற்கிலுள்ள குண்டுகள் போடப்பட்ட பிரதேசங்களுக்கும் மீதமாயுள்ள ஜெர்மனிக்குமுள்ள வித்யாசத்தை நாம் கவனிக்கவேண்டும். பெர்லின் நகரமே ஒரு உதாரணமாய் விளங்குகிறது. ஜெர்மனியின் எப்பாகத்தையும்விட இங்குள்ளோர்களின் மனோதைரியம் மிகவும் மோசமாய் இருக்கிறது. அந்நகரத்தைவிட்டு மக்களை வெளியேறிவிடும்படி கோயபல்ஸ் அளித்த உத்தரவானது அங்குள்ள மக்களுக்கு இன்னும் அதிகமான பயத்தை உண்டாக்கிவிட்டது. அங்குள்ள ஜனங்கள் பதுங்கும் குழிகள் வெட்டுவதில் முனைந்திருக்கிறார்கள். 1933-ம் வருஷம் ஹிட்லர் அதிகாரம் பெறுவதற்கு கெய்ஸர் ஹாம் என்ற ஹோட்டலிருந்து ரெய்ச் சபைக்கு சென்றதைக் குறித்து பெர்லின் மக்கள் வேடிக்கையாய் கூறிய "திரும்பும்பாதை" என்ற கீழ்ச்சுரங்கம் ஒன்று ஹிட்லரின் சபைக் கருகிலுள்ள வில் ஹெம்ஸ் ப்லாட்ஸ் என்ற இடத்தின் கீழ் இருக்கிறது.

இக்குறிப்புகளைப் பொருத்தும், இன்னும் ஜெர்மனிக்குச் சென்று வருபவர்களும் அங்கு தங்கியுள்ளோருமான சில நிபுணர்களின் கருத்தைப் பொருத்தும் நோக்குங்கால் ஜெர்மனியிலுள்ள மக்கள் ஒரு கலகத்திற்கு இன்னும் தயாராகவில்லை என்று தெரிகிறது. நாஸிஸத்தினால் 10 வருஷங்களாய் ஏற்பட்டிருக்கும் வெறுப்புத்தரும் செயல்களை இன்னும் அவர்கள் உதறி எரியவில்லை. அவர்கள் முடிவாக ஏற்படும் கஷ்டங்களை ஜெர்மன் சைனியங்கள் விலக்கிவிடும் என்ற நம்பிக்கையுடையோராயும் இருக்கிறார்கள். ஜெர்மன் சைனியப் போலீஸாரால் அன்றாடம் அவர்கள் பார்வையிடப்பட்டும் வருகின்றனர். இவைகளன்னியில் ஹிட்லரின் கொடுங்கோலை தகர்த்தெரியத்தக்க ஒரு தலைவரை அவர்கள் தங்களிடத்தில் கொண்டிருக்கவில்லை.

இந்தக் குளிர் காலத்தில் தரையில் பெருந்தோல்விகளையும், ஆகாயத்திலுமிருந்து கொண்டு அதிகமான கஷ்டத்தை உண்டாக்குமாறு குண்டுகளைப் போட்டும் தான் ஜெர்மனியின் மனோதிடத்தை குலைக்கமுடியும் என்பது என் கருத்து. இந்த இருகாரியங்கள் நடந்தால்தான் ஜெர்மனியிலுள்ள மக்களினுடைய மனோதிடம் குன்றும். இவ்வாறின்றி, பெரும் படையையுடையதும், உயர்தர யுத்த தளவாடங்களைக்கொண்டதும், தீர்மானமானவர்களும், ஒரே முடிவான எண்ணமுடையோருமான தலைவர்களால் நடத்தப்படும் சைனியங்களையுடையதுமான ஜெர்மன் தேசத்தை தோற்கடிப்பது என்பது பகற்கனவுதான்.

நேசதேசத்தார்கள் எதிரியின் போக்குவரவு மார்க்கங்களை அழிக்கும் யுத்த தந்திரம் பலனளித்துவிட்டது.

(A. J. மாக்வின்னி).

வெடி குண்டுகளாலும், பீரங்கி குண்டுகளாலும், மீன் வெடிகளாலும், சுரங்க வெடிகளாலும் அழிக்கப்படும் ஒவ்வொரு ஜெர்மன் துணைக்காவல் சாமான் கப்பலும் நமக்கு முக்யத்வமுள்ளது. கப்பல்களின் நிபுணர்களான மாலுமிகள், முக்கியமாகக் கப்பலோட்டிகள் எண்ணெய்க் கப்பலுக்குவேண்டிய கரிப்பொருள் இவைகளின் குறைவும், ரெயில்வே எஞ்ஜின்கள், வண்டித் தொடர்களின் நஷ்டமும் சேர்ந்து, நேசதேசத்தாரின் புதிய ராணுவ அபாயத்தைத் தடுப்பதற்குத் துருப்புகளைச் சலனம் செய்யும் வேலையிலீடுபட்டிருக்கும் ஜெர்மன் தலைவர்களுக்குச் சங்கடம் விளைவிக்கின்றன.

பிரிடிஷ் படகுகளெல்லாம் மத்தியதரைக்கடலுக்கு அனுப்பப்பட்டுவிட்டதால் ஜெர்மனியின் சாமான் கப்பல்களின் நிலைமை அபிவிருத்தி அடைந்துவிடும் என்று பொருள்படும்

படியாக பெர்லின் ஒலிபரப்பில் வியாக்யானம் செய்யவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. பிரிடனுடைய வேகம் பொருந்திய சிறிய யுத்தக் கப்பல்கள் ஸிஸிலியைச் சுற்றிலும் இதாலியக் கடற்கரைக்கு அப்பாலிலும் ரோந்து செய்துகொண்டிருக்கின்றனவென்பது வாஸ்தவம். இதே சமயத்தில் இங்கிலீஷ் கால்வாயில் தெற்குப்பக்கத்திலும், வடக்குக் கடலிலும் உள்ள ஜெர்மன் சாமான் கப்பல்களையும் நாம் தாக்கிவருகிறோம்.

ஜெர்மன் துணைக்காவல் கப்பல்களுக்கு ஓய்வு கிடையாது.

பிரிடிஷ் கடற்படை வலுவடைந்துவிட்டதென்றும், சமுத்திரத்தில் அநேக பரப்புகளில் போர்புரிய லாயக்குள்ள கப்பல்களை அனுப்ப வசதியேற்பட்டுவிட்டதென்றும் பிரிடனில் ஏராளமான ஹேஷ்யங்கள் புலப்பட்டுவிட்டன. மோட்டார் மீன் வெடிப் படகுகளையும், மோட்டார் பீரங்கிப் படகுகளையும், மத்தியதரைக்கடலுக்கு அனுப்பியபொழுது ஜெர்மனியின் கடற்கரை சாமான் போக்குவரத்துக் கப்பல்களையும் பலமாகத் தாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாரிகாலத்தில் இரவுகாலம் நீடிக்கும்பொழுது முக்கியமான ஜெர்மன் கடற்கரைக் கப்பல்களையும், அதன் துணைக்காவல் கப்பல்களையும், பிரிடிஷ் கால்வாயைத் தாண்டிச் செல்லும் நேசதேசக் கப்பல்களும், வடக்குக் கடலிலுள்ள யுத்தக் கப்பல்களும் நேசதேச விமானப் படையும் பலமாகத் தாக்கி அழித்துவிடுவதை நாம் எதிர்பார்க்கலாம்.

ஸ்விடன் போட்ட தடை உத்தரவின் விளைவு.

ஜெர்மனியிலிருந்து நார்வேக்கு ஸ்வீடன் வழியாகத் துருப்புகள் செல்லுவதைத் தடை செய்துவிட்டதாக ஸ்வீடன் உத்தரவு பிறப்பித்துவிட்டதால், ஜெர்மன் கடற்படையின் சிரமங்கள் அதிகரித்துவிட்டன. ஜெர்மனியிலிருந்து நார்வேயிலிருக்கும் துறைமுகங்களுக்கு யுத்த தளவாடங்களையும், சாமான்களையும் ஏற்றிச்சென்ற கப்பற்படையில் குறைந்தபக்ஷம் மூன்றில் ஒரு பங்காவது தரை மார்க்கமாக ஸ்வீடன் வழியாகச் சென்ற துருப்புகளை ஏற்றிச் செல்லுவதற்கு உபயோகப்படவேண்டும். இந்தப் பிரயாணத்தில் ஜெர்மனி எவ்வளவுக்கவ்வளவு கப்பல்களை உபயோகிக்கிறதோ, மனிதர்களை ஏற்றிச் செல்லுகிறதோ, அவ்வளவு தூரம் அவைகள் பிரிடிஷ் கடற்படைக்கும், நார்வே கடற்கரைக்கப்பால் நடமாடிக்கொண்டிருக்கும் நேசதேச வெடி விமானங்களுக்கும் சிறந்த தாக்குதல் லக்ஷியங்களாகுகின்றன.

கடற்படையின் அபார சக்தி.

கடற்படை பலமிருப்பதால் பிரிடனும், அமெரிக்காவும் அவர்களுக்கு இஷ்டப்பட்ட எந்தப் பிரதேசத்திலும் அச்சு நாடுகளைத் தாக்க சக்தியுள்ளவர்களாகயிருக்கிறார்கள். ஹிட்லருக்குச் சொந்தமான கடற்கரையில் பல்வேறு பாகங்களில் நமது கப்பல்கள் துருப்புகளையும், பீரங்கிகளையும், டாங்கிகளையும், சாமான்களையும் கொண்டுபோய் இறக்கக்கூடும். வேகமாகச் செல்லக்கூடிய போக்குவரவு சாதனங்களிருந்தால்தான் தாக்குதல் செய்து பழுதுபட்ட ஸ்தானங்களைச் சீர்படுத்த தளவாடங்களை ஜெர்மன் ஜெனரல்கள் அனுப்பமுடியும். இதற்காகத்தான் வருங்காலத்தில் நடைபெறப்போகும் நிகழ்ச்சிகளுக்காக ஒவ்வொரு கப்பலையும் ஜெர்மனி பத்திரப்படுத்திவைக்கவேண்டும். வெடி குண்டுகளால் சிதறடிக்கப்பட்ட இருப்புப் பாதைகளுக்குப் பர்த்தியாகக் கப்பல்கள்தான் உபயோகப்படுத்தப்படவேண்டும். இதே காரணத்தினால்தான், ஜெர்மன் கடற்கரையோரமாகச் செல்லும் சாமான் கப்பல் கூட்டத்திற்கு வேகமாகச் செல்லும் ஈ படகுகளும், சுரங்கவாரிக் கப்பல்களும் துணையாக அனுப்பப்பட்டு பலமாக ரக்ஷணை செய்யப்பட்டுவருகின்றன. அப்படியிருந்தும் ஜெர்மன் கப்பல்கள் மூழ்கடிக்கப்படுகின்றன.

ஜெர்மனிக்கு நாசகாரிகளின் பலக்குறைவு.

பிரிடிஷ் கடற்கரை சாமான் கப்பல் கூட்டத்திற்கு நாசகாரிகளும், லேசான யுத்தக் கப்பல்களும் தற்காப்பளிக்கின்றனவென்று ஜெர்மானியர்கள் அறிவார்கள். துணைக்காவலுக்கு ஜெர்மானியர்கள் நாசகாரிக் கப்பல்களை உபயோகிக்க முடியாது. ஜெர்மனியிடம் நாசகாரிகளே அதிகமாகக் கிடையாது. ஜெர்மனியிடம் சர்வ அடக்கமாக 20 நாசகாரிகளிருக்கும் என்று நான் நினைக்கிறேன். ஜெர்மனியின் சக்திவாய்ந்த யுத்தக் கப்பல்களை ரக்ஷிப்பதற்காக அந்த நாசகாரிகள் அவசியமாகயிருக்கின்றன. அந்த யுத்தக் கப்பல்கள் சமுத்திரத்தில் நடமாடாமல் அடைபட்டிருக்கின்றன. ஆகிலும், நார்வேயின் ரக்ஷணைக்கு அவைகள் உபயோகப்படக்கூடியவை.

எல்லாவிதமான போக்குவரவு மார்க்கங்களையும் தாக்கி நொருக்கிவிடுவது என்ற நேசதேசத்தாரின் நீண்ட நோக்கமுள்ள யுத்த தந்திரம் நமக்கு நல்ல பயனை அளித்துவிடுகிறது என்று நடப்பைக் கவனித்தால் தெளிவாகத் தோன்றுகிறது. யூ படகுகளும், விமானப் படையும், கடற்படையையும், சாமான் கப்பல்களையும்விட சிறந்தவைகள் என்று ஜெர்மனி பூர்ணமாக நம்பியிருந்ததெல்லாம் மத்தியில் அழுகிப்போன உபயோகமற்ற யுத்த தந்திரமென்பதில் சந்தேகமில்லை.

பிரிடன் செய்திருக்கும் வேலை.

I. தரைப்படையும், விமானப்படையும்.

தாக்கப்படாமலிருந்தபொழுதும்கூட ஹிட்லரை எதிர்த்துப் போர்புரிய முன் வந்ததில் பிரிடன்தான் முதல் தேசம். யுத்தத்தில் புகுந்தபின் அது என்னசெய்தது. அது சில தவறுதல்களையும் செய்திருக்கிறது. குழப்பமான சமயங்களும் ஏற்பட்டன. பிரிடன் தவறுதல்களையும் செய்யும். அதன் படிப்பினைகளை உணர்ந்து, பிரயாசைப்பட்டு கஷ்டங்களை அனுபவித்து மனம்தளராமலிருந்து கடைசியில் வெற்றி பெறுவதும் பிரிடனுடைய பாக்கியம்தான்.

டங்கர்க்கிலிருந்து பிரிடிஷ் படைகள் பின்வாங்கிய பின், பிரிடிஷ் சேனை அதோகதியாய்ப் போய் விட்டதென்று உலகம் பூராவும் எண்ணிற்று.

பிரிடிஷ் சேனை அதை ஒப்புக்கொள்ளவில்லை. மறுப்பதுடன் நின்று விடமால், அது புத்துயிர்பெற்று, திருத்தியமைக்கப்பட்டு, அதிக ஊக்கமடைந்தது. போர் புரியவும் ஆரம்பித்தது.

இதாலிய கிழக்கு ஆபிரிக்கா, அபிஸீனியா, மடகாஸ்கர், லிபியா, டுனிஸியா, பாண்டலேரியா, லாம்பதோஸா, ஸிஸிலி முதலிய இடங்களை அது பிடித்துவிட்டது.

சந்தேகிகளுக்கு நமது சேனை நல்ல பதிலுரைத்துவிட்டது. இந்த வெற்றிகள் சுலபமாகக் கிடைத்துவிடவில்லை. மனித நஷ்டமும், பிரயாசையும், விடாமுயற்சியும்தான் வெற்றிகளை அளித்தன.

முதல் மூன்று வருஷ யுத்தத்தில் பிரிடிஷ் சேனை நடத்திய போர்களிலெல்லாம் எதிரியிடம் மனிதபலம் அதிகமாயிருந்தது. ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா முதலிய இடங்களிலுள்ள போர்முனைகளில் போர் புரிந்ததுமட்டுமல்லாமல், ஐஸ்லாந்திலும், பிரிடனிலும், ஜிப்ரால்டரிலும், மால்டாவிலும், ஸைப்ரஸிலும், பாலஸ்தீனத்திலும், இராக்கிலும், ஸிரியாவிலும், பாரஸீகத்திலும், மடகாஸ்கரிலும், இந்தியாவிலும் எதிரிகள் வராதபடி பிரிடிஷ் சேனை தடுத்துமிருக்கிறது.

கிழக்கு ஆபிரிக்க யுத்தத்தில், பிரிடிஷ் துருப்புகள் சில மாதங்களுக்குள்ளாகவே அபிஸீனியாவை ஜெயித்துவிட்டார்கள். அச்சுநாடுகள் கையில் முதல் முதலிலகப்பட்ட தேசம் தான் முதல் முதலில் நம்மால் விடுவிக்கப்பட்டது.

1940-ம் வருஷ யுத்த ஆரம்பத்தில் ஸுடானில் பிரிடிஷ் துருப்புகளைவிட எதிரியிடம் பத்துமடங்கு அதிகமான படைகளிலிருந்தபோதிலும் பிரிடிஷ் துருப்புகள் அதிவேகமாக இதாலிய கிழக்கு ஆபிரிக்காவில் முன்னேறிவிட்டன.

1941-ம் வருஷம் மார்ச்சுமீ 1ம்தேதி முதல் 17-ம் தேதி வரையில் அதாவது 17-நாட்களுக்குள்ளாக கிழக்கு ஆபிரிக்கா யுத்தத்தில் ஜெனரல் கன்னிங்காம் வசமிருந்த துருப்புகள் மொகடிஷுவிலிருந்து ஜிஜிகாவுக்கு தினசரி சராசரி 44 மைல்கள் வீதம் 744 மைல்கள் முன்னேறின. சரித்திரத்திலேயே இதுதான் அதிவேகமான ராணுவ முன்னேற்றம். 1942—43-ம் வருஷத்தில் எட்டாம் படையின் தீரத்தை மட்டும் இதற்கு சமமாகச் சொல்லலாம்.

ஜெனரல் கன்னிங்காமின் படைகள் கிழக்கு ஆபிரிக்க யுத்தத்தில் 53 நாட்களில் 1,725 மைல்கள் முன்னேறி அடிஸ் அபாபாவை அடைந்தன.

ஆபிரிக்க யுத்தத்தில் 5,00,000 எதிரிகள் கைதி செய்யப்பட்டார்கள்.

100-க்கு மேற்பட்ட இதாலிய ஜெனரல்கள் பிரிடனிடம் கைதிகளாகயிருக்கிறார்கள்.

ஜெனரல் மாண்ட்காமரி, ஜெனரல் அலெக்ஸாண்டர் வசமுள்ள பிரிடிஷ் 8-ம்படை 1942-ம் வருஷம் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற்ற எகிப்திய யுத்தத்தில் வெற்றிகரமாக எதிரிகளை முறியடித்தார்கள்.

1942-ம் வருஷம் நவம்பர் 4-ம் தேதி முதல் 23-ம் தேதிக்குள் பிரிடிஷ் 8-ம் படை எல் அலாமீனிலிருந்து ஜெடபாயாவுக்கு 830 மைல்கள் முன்னேறின. இது சராசரி தினந்தோறும் 43-மைல்களாகிறது. 80 நாட்களில் 8-ம் படை 1,400 மைல்கள் முன்னேறியது. அகெலாவிலும், பீயூராட்டிலும் தங்கியிருந்த நாட்களை விலக்கிவிட்டால் 42 நாட்கள்தான் பாக்கிப்படும்.

ஆபிரிக்க வெற்றிகள் பிரிடிஷ் தீவுகளுக்கு அப்பால் கடல் தாண்டி 12,000 மைல்கள் தூரத்திலிருக்கும் இடங்களில் நமக்குக் கிடைத்தன.

1940, 1941-ம் வருஷம் நடைபெற்ற எல்லாப் போர்களிலும் பிரிடிஷ் சாம்ராஜ்யத் துருப்புகளுக்கு ஏற்பட்ட ஆள் நஷ்டத்தில் 70 சத விகிதத்துக்கு மேல் பிரிடிஷ் துருப்புகள் தான் இறந்திருக்கிறார்கள்.

1942-ம் வருஷம் நவம்பர் மாதம் 10-ம் தேதிவரையில் அடிபட்ட 13,600 பேர்களில் 58 சதவிகிதம் பிரிடிஷ் துருப்புகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது.

1942-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் பிரிடிஷ் 1-ம் படையும் அதைச்சேர்ந்த குடைத் துருப்புகளும்தான் டூனிஸியாவில் முதலில் முன்னேற ஆரம்பித்தன.

II. பிரிடிஷ் விமானப்படையின் நடவடிக்கைகள்.

ஜெர்மன் விமானப்படை முறியடிக்கப்பட்டது.

இந்த யுத்தத்தில் எல்லாப் போர்முனைகளிலும் பிரிடிஷ் விமானப்படை போர் தொடுத்திருக்கிறது.

சென்ற இரண்டு வருஷங்களில் எல்லாப் போர்முனைகளிலும் பழுது பட்டதும், மூழ்கடிக்கப்பட்டதுமாக 12,50,000 டன்கள் எடைமானமுள்ள எதிரி கப்பல்களை பிரிடிஷ் விமானப் படை நாசம் செய்திருக்கிறது.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் பிரிடிஷ் விமானப்படை ஜெர்மன் விமானப் படையை வெற்றிகரமாகத் தோற்கடித்து விட்டது.

1940-ம் வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதியன்று குறைந்த பக்ஷம் 181 எதிரி விமானங்களையும், ஸெப்டம்பர் 15-ம் தேதியன்று 185 விமானங்களையும், பிரிடிஷ் விமானிகள் சுட்டு வீழ்த்தியிருக்கிறார்கள்.

ஜெர்மன் விமான நஷ்டம் உத்தியோகமுறையில் வெளியிடப்பட்ட கணக்குகளுக்கு நிச்சயமாக அதிகமானவை.

பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தில் ஜெர்மன் விமானப்படையை முறியடித்துவிட்டு, ஜெர்மானியர்கள் ருஷ்யாவில் போர்தொடுக்க ஆரம்பித்தபொழுது பிரிடிஷ் வெடி விமானப் படை முன்னேறித் தாக்க ஆரம்பித்தது. பிரிடிஷ் யுத்த விமானங்கள் நெதர்லாந்து மீதும் பிரான்ஸ் மீதும் பறந்து சென்று ஜெர்மன் விமான தளங்களை நொருக்கி வந்தன.

இதனால்தான் ருஷ்யப் போர்முனையில் தங்கியிருக்காமல் ஜெர்மன் யுத்த விமானங்களின் பாதிபாகம் மேற்குப் போர் முனையில் தற்காப்பு செய்யவேண்டியதாயிற்று.

இன்று நமது வெடி விமானப்படைகள் ஜெர்மனியை விமானங்களால் தாக்கும் முறைகளைக் கையாண்டு வருகின்றன. தொழிற்சாலைகளுள்ள நகரங்களை வெடி விமானங்கள் தாக்குவதின் விளைவுகளை இப்பொழுதுதான் ஜெர்மானியர்கள் அறிந்து வருகிறார்கள்.

இப்பொழுது பிரிடிஷ் விமானிகள் உபயோகித்துவரும் 4-டன்கள் எடைமானமுள்ள வெடிகுண்டுகள் 1940-ம் வருஷம் ஜனவரி-மார்ச்சு மாதங்களில் உபயோகப்படுத்தப்பட்ட கனமான வெடி குண்டைவிட 16 மடங்கு கனமுள்ளதாகவும், 1939-ம் வருஷம் வீசின வெடி குண்டுகளின் மொத்த எடைமானத்துக்கு சமாராக இரண்டு மடங்குள்ளதாகமிருக்கின்றன.

1942-ம் வருஷம் மார்ச்சு மாதம் 28, 29-ம் தேதிகளில் லூபெக்கை மூன்று மணிநேரங்கள் தாக்கியபொழுது நமது விமானங்கள், கவண்டிரியை ஒரு இரவு பூராவிலும் நவம்பர் மாதத்தில் ஜெர்மன் விமானங்கள் தாக்கி குண்டுகளை வர்ஷித்ததைவிட 1½ மடங்கு அதிக எடைமானமுள்ள வெடி குண்டுகளைப்போட்டன. அதாவது 340, 225 டன்கள் வீதாசாரம். ஏப்ரல் 23, 24 தேதிகளில் ராஸ்டாக்கில் 400 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளை வீசியிருக்கிறோம்.

1943-ம் வருஷம் மேமீ 30, 31 தேதியில் இரவில் கொலோனையும், ஜூன்மீ 1, 2 தேதியில் ரூர் பிரதேசத்தையும் எஸ்ஸனையும், ஜூன் 25, 26 தேதியில் பிரெமனையும் 1,000 விமானங்கள் தாக்கின.

1943-ம் வருஷம் மார்ச்சு மாதம் 27-ம் தேதியன்று பெர்லின் பேரில் 900 டன்கள் எடைமானமுள்ள குண்டுகள் வீசப்பட்டன. லண்டனை அதிகக் கடுமையாக ஜெர்மானியர்கள் தாக்கியபொழுது வீசப்பட்ட குண்டுகளைவிட இது இரண்டு மடங்கு அதிகமானது.

1942-ம் வருஷம் அக்டோபர் 22, 23-ம் தேதிக்கும் டிஸம்பர் 11, 12 தேதிக்கும் மத்தியில் வெகுதூரம் பறந்து செல்லக்கூடிய வெடி விமானங்கள் வடக்கு இதாலிய நகரங்களை 17 தடவைத் தாக்கியிருக்கின்றன.

டூரின்மேல் குண்டு வீச்சு.

1943-ம் வருஷம் நவம்பர் மாதம் 20, 21-ம் தேதியில் டூரின் பேரில் வெடி விமானப் படை 4,000 ராத்தல் எடைமானமுள்ள 54 வெடி குண்டுகளையும், 1,11,000 ராத்தல் எடைமானமுள்ள எரிவெடிகளையும் ஒரு மணிக்குள் வர்ஷித்தன. அதாவது ஒரு நிமிஷத்துக்கு 4,000 ராத்தல் எடைமான முள்ள வெடி குண்டும், ஒவ்வொரு ஸெகண்டுக்கும் 34 ராத்தல் எடைமானமுள்ள எரி வெடியும் போடப்பட்டன.

மால்டாவிலிருந்த பிரிடிஷ் சண்டை விமானங்களும், விமான எதிர்ப்பு பீரங்கிப் படைகளும் 1942-ம் வருஷம் முடிய மால்டா தீவிலும் அதைச் சுற்றிலுமுள்ள சமுத்திரங்களிலும் 1,151 ஜெர்மன் விமானங்களை அழித்திருக்கின்றன.

இந்த மொத்த நஷ்டத்தில் 773 எதிரி விமானங்கள் நமது சண்டை விமானங்களால் நொருக்கப்பட்டன. நமக்கு 195 விமானங்கள் நஷ்டம். ஆகிலும், 89 விமானிகள் பத்திரமாக வந்து சேர்ந்தார்கள். விமான எதிர்ப்பு பீரங்கிகள் 182 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்திவிட்டன.

1939-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் 1942-ம் வருஷம் டிஸம்பர் மாதம் முடிய பிரிடிஷ் விமானப்படையும், சாம்ராஜ்ய விமானப்படையும் நேசதேச விமானப்படையும், விமான எதிர்ப்பு பீரங்கிகளும், ஜெர்மனிக்கும், இதாலிக்கும் சொந்தமான 10,000 விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றன.

எதிரி விமான நஷ்டம்.

யுத்தக் கப்பல்களும், சாமான் கப்பல்களும், கடற்படையைச்சேர்ந்த விமானங்களும் 981 எதிரி விமானங்களை அழித்திருக்கின்றன. தரையிலிருந்த எதிரி விமானங்களையும் நாம் ஏராளமாக அழித்திருக்கிறோம். மத்தியக் கிழக்கில் மட்டும் எதிரிக்கு 2,000 விமானங்கள் நஷ்டமாகியிருக்கின்றன.

தரையிலிருந்த விமானங்கள் நஷ்டத்தையும், ருஷ்யாவிலும், தூரக்கிழக்கிலும் எதிரிக்கு விளைந்த விமான நஷ்டத்தையும்தவிர எதிரிக்கு 11,000 விமானங்கள் நஷ்டமாகியிருக்கின்றன.

பிரிடிஷ் விமான வேலைக்காரர்கள்.

1942-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திய கணக்குகளை கவனித்தால் விமானப்படையில் 89 சதவிகிதம் பிரிடனில் உற்பத்தியானவை. விமான வேலைக்காரர்களில் 72 சத விகிதமும் பிரிடனிலுள்ள விமானத் தரைப்படையில் 98 சதவிகிதமும் பிரிடிஷ் மக்கள்.

கடல் தாண்டி வேலை செய்யும் விமானங்களில் 75 சதவிகிதமும், விமானிகளில் 85 சதவிகிதமும் தரைப்படைகளில் 99 சதவிகிதமும் பிரிடனைச் சேர்ந்தவை.

பிரிடிஷ் விமானப்படையின் திருஷ்டிக் கருவிகள்.

(விமானப்படைத் தலைவர் *L. V.* பிரேஸர்).

பிரிடிஷ் விமானப்படையின் யுத்த விமானங்களில் ஒவ்வொன்றிலும் ஒளிப்படம் பிடிக்கும் பெட்டியிருக்கிறது. அவைகள் அவசியமான ஒவ்வொரு விவரத்தையும் வெளிக்காட்டுகின்றன. சிறிது காலத்துக்குள்ளாக நாஸிகளின் ரகசியங்களை பகிரங்கப்படுத்திவிடுகின்றன. ரூர் பிரதேசத்திலுள்ள யுத்த தளவாட உற்பத்திசாலைகள் எவ்வளவு தூரம் அழிவுபட்டிருக்கின்றனவென்று அப்படங்கள் காண்பிக்கின்றன. தீக்கிரையானதும், சிதறிப்போன தொழிற்சாலைகளின் தோற்றங்களை அவைகள் தெளிவுபடுத்துவதுடன் அடிக்கக்கூடிய லக்ஷியங்களைப்பற்றிய தகவல்களையும், விமானத்தாக்குதல் ஏற்பட்டபின் விளைந்த நஷ்டங்களையும், வரிசைக்கிரமாக பாரபக்ஷமன்னியில் பூராவாகவும், பிரிடிஷ் வெடி விமானப்படைக்கு அறிமுகப்படுத்துகின்றன. ஜெர்மன் யுத்த தொழிற்சாலைகளையும் போக்குவரவு மார்க்கங்களையும் நமது வெடி விமானப்படை வெற்றிகரமாகத் தாக்கியதற்கு ஒளிப்படம் பிடிக்கும் கருவிகள்தான் பேருதவி செய்தன. அவைகளில்லாமல் போனல் இவ்வளவு வேகத்துடனும், வெற்றிகரமாகவும் தாக்குதல் நடைபெற்றிருக்க முடியாது.

பிரிடிஷ் விமானிகள் ஒளிப்படம் பிடிப்பதில் அதிக ஆசைகொண்டுவிட்டார்கள். இன்று பிரிடிஷ் விமானப்படையிலுள்ள வெடிவிமானமும், எவ்வகைப்பட்ட யுத்த விமானமும் படம் பிடிக்கும் பெட்டியில்லாமல் வெளியே புறப்படுவதில்லை, வெடிவிமானங்கள் எதிரி லக்ஷியங்களைத் தாக்குவதற்குமுன் வேவு பார்க்கும் விமானங்களிலுள்ள படம் பிடிக்கும் படைகள், முன்னதாகச் சென்று, புதிய விமான தளங்களையும், துருப்புகளின் சேமிப்பு, நடமாட்டம் முதலியவைகளையும், யுத்த தளவாடங்களை உண்டுபண்ணும், பழுது பார்க்கும் யந்திரசாலைகளையும், எதிரியின் கப்பல்கட்டும் தளங்களையும், யுத்தக் கப்பல்களின் நடமாட்டம், சீர்கேடு முதலியவற்றையும் படம் பிடித்துவிடும்.

படையெடுப்புக்குப் படம் பிடிக்கிறவர்களின் உதவி.

படம் பிடிக்கும் நடவடிக்கைகள் மூலமாக, எதிரி வசமிருக்கும் பிரதேசத்திலுள்ள ராணுவ முக்யத்வமுள்ள லக்ஷியங்கள் நேசதேச ராணுவ இலாகாவுக்குத் தெரிந்துவிடுகிறது. இந்தத் தகவல்களைக்கொண்டு வெடி விமானத்தாக்குதல் திட்டங்கள் நிறுவப்படுகின்றன. ஒரு வெடி விமானம் புறப்படும் முன்னமே விமானத்திலுள்ளவர்களுக்கு லக்ஷியத்தை பலமாக மறைத்து வைத்திருந்தாலும் அதன் ஸ்வரூபம் எவ்வகைப்பட்டதென்று அவர்களுக்கு நன்ருய் புலப்பட்டுவிடுகிறது.

எதிரி பிரதேசத்தில் தரைப்படைகள் இறங்குமுன் படம் பிடிப்பதின் மூலம் வேவு பார்ப்பதுதான் படையெடுப்புக்கு முக்கிய சாதகமளிக்கும். விமானங்கள் எடுத்த படங்களை ஆதாரமாக வைத்து தேசப் படங்கள் வரையப்படுகின்றன. உருவப்படங்களும் அமைக்கப்படுகின்றன. இந்த உதவிகள்தான் ஸிஸிலியில் துருப்புகள் வெற்றிகரமாக இறங்கியதற்கு சாதகம் அளித்தன. வெடிவிமானத்திலுள்ள படப்பெட்டி வெடி விமானங்களின் சக்தியால் வேலை செய்யப்படுகிறது. வெடிகுண்டுகளைப்போட ஆரம்பித்தவுடன் தானாகவே பெட்டியின் கதவு திறந்துவிடுகிறது. எவ்வளவு குண்டுகள் போடப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டுவிடுகிறது. குண்டு வீசுவதற்கு அடுத்தடுத்தும், கடைசியாகவும் லக்ஷியத்தின் பேரில் வெளிச்சம் காணக்கூடிய ஒரு வெடி குண்டு வீசப்படுகிறது. வெளிச்சம் உண்டுபண்ணும் வெடிகுண்டு லக்ஷியத்தை அடிக்கும்பொழுது ஒளிப்படம் பிடிக்கும் கருவி நாசமாக்கப்பட்ட பிரதேசத்தை படம் பிடித்துவிடுகிறது.

எஸ்ஸனை ஒரு இரவில் 1,000 வெடி விமானங்கள் தாக்கியபொழுது ஒவ்வொரு வெடிகுண்டு வெடித்த லக்ஷியத்தையும் ஒவ்வொரு பெட்டி படம் பிடித்தது. வெடி விமானங்கள் திரும்பிவந்த உடன் படங்களைப் பரிசீலனைசெய்து ஒவ்வொரு லக்ஷியத்தையும் தாக்கப்பட்ட பிரதேசமுள்ள தேசப் படத்தில் குறித்துவிடுவார்கள். விமானங்களில் எவ்வளவு வெடிகுண்டுகள் ஏற்றப்பட்டன என்பது கணக்கிடப்படும். குண்டுகள் எவ்வளவு தடவை போடப்பட்டன என்பதையும் ஜாக்கிரதையாகக் கணித்துவிடுவார்கள். குறைபாடுகள் இருந்தால் அதற்கு சரியான முகாந்திரம் ;அறிவிக்கப்படவேண்டும். பாங்கியிலுள்ள கணக்கப்பிள்ளை பேரேட்டிலுள்ள தொகைக்கு ஜவாப்தாரியோ அதுபோல் குண்டுவீச்சுகளுக்கும் விமானிகள் ஜவாப்தாரிகள். வெடி விமானங்கள் தாக்கிய பிரதேசத்திற்கு ஒளிப்படம் எடுக்கும் ஆள்கள் உடன் காலத்தில் செல்லுவார்கள். விமானத் தாக்குதலுக்குப்பின் வேவு பார்க்கும் விமானங்கள் செல்லும். அவைகள் லக்ஷியத்துக்கு வந்தவுடன் பெட்டியின் மூடிகள் தானாக திறந்துவிடும். அநேக படங்கள் பிடிக்கப்படும். பெட்டியிலிருக்கும் கால அளவுக் கருவியினால் ஒரே படங்கள் அநேகம் தடவை எடுக்கப்பட்டிருக்கும். பெட்டியிலிருக்கும் பூதக் கண்ணாடியின் திருஷ்டிகோசரத்துக்கு அப்பாலிலும் லக்ஷியமிருந்தால், மற்றொரு முறை படம் பிடிப்பார்கள். இவ்விதமாக பூரா பிரதேசமும் போட்டோ பெட்டி மூலம் படம் பிடிக்கப்பட்டுவிடும். படம் பிடித்த இரண்டு நிமிஷத்திற்குள்ளாக படத்தை சுத்தப்படுத்தி காப்பி எடுக்கும் யந்திர விமானத்திலுள்ள நாவிகேட்டாருக்கு லக்ஷியத்தின் படத்தைக் கொடுத்துவிடும்.

இவ்விதம் அடுத்தடுத்து பிடிக்கப்பட்ட இரண்டு படங்கள் லக்ஷியத்தின் தோற்றத்தை நன்றாக விளக்கிக்காட்டும். பாம்பர் படையைச் சேர்ந்த நிபுணர்கள் விமானம் வந்தவுடன் இந்தப் படங்களை நன்றாய் பரிசீலனை செய்வார்கள்.

வெடி விமானத்திலுள்ள படப்பெட்டி இரவில் பிடித்த படங்கள் ஒரு தொழிற்சாலையின் பேரில் குண்டு விழுந்ததென்று காண்பிக்கும். பகலில், வேவு பார்க்கும் விமானங்கள் எடுக்கும் படம் எவ்விதமான நஷ்டமேற்பட்டிருக்கிறதென்றும் தொழிற்சாலையின் எந்த பாகத்துக்கு நஷ்ட மேற்பட்டதென்றும், அதை உபயோகமில்லாமல் செய்துவிடுவதற்கு மற்றொரு தாக்குதல் அவசியமாவென்றும் காண்பிக்கும்.

பிரிடனுடைய யந்திரங்களின் உதவி.

பிரிடிஷ் ஒளிப்படம் பிடிக்கும் பெட்டிகளும், புகைப்படங்களும் இந்த வேலைகளுக்கு உதவுகின்றன. யுத்த ஆரம்பத்துக்குமுன் ஜெர்மானியரிடம்தான் சிறந்த பூதக்கண்ணாடிகளும், பிலிம் சாமான்களும் இருந்தனவென்ற புகழ் நிரம்பியிருக்கிறது. நாம் கைப்பற்றின ஜெர்மன் விமானங்களிலிருந்த படப்பெட்டிகளையும், பிலிம்களையும் ஜாக்கிரதையுடன் பரிசீலனை செய்தால் பிரிடிஷ் உற்பத்தியானது ஜெர்மானியர்களுடையதைவிட மேன்மையானதென்று புலப்படும். ஜெர்மன் அமைப்புகள் ஒன்றாவது நமக்கு உபயோகப்படவில்லை. பிரிடிஷ் படப்பெட்டிகளும் புகைப்படங்களும் சிறந்தவைகள். அவைகள் மேன்மையாகவே வேலைசெய்து வருகின்றன.

ஜப்பானியர்கள் ஊகிக்குமாறு விடப்பட்டிருக்கின்றனர்.

அரண்களின் இருபுறமும் சிறிய தாக்குதல்கள் செய்வதின் பலன்கள்.

(ஸண்டே டைம்ஸ் பத்திரிகை).

முண்டாவைப் பிடித்ததினாலும், நேசநாடுகள் ஸலாமூவாவைத் தாக்கியதினாலும், அவைகளில் அடைந்த வெற்றிகளினாலும், விமான பலத்தினால் இப்பிரதேசங்களில் முன்னேற முடியும் என்பது வெளிப்படையாய்த் தெரிகிறது. ஆனாலும், ஏதாவது எதிர்பாராத மாறு

தல்கள் பஸிபிக் யுத்தத்தில் ஏற்படாதவரையில் இந்த நடவடிக்கைகள் சிறிது மெதுவாயும், கஷ்டத்தோடும்தான் நடந்துவரும் என்பதும் தெரிகிறது.

ருஷ்யாவில் 'ஓரல்' போல் ஜப்பானிய வட தெற்கு பிரதேசத்தின் பாதுகாப்புக்கு மார்ஷல் தீவுகள் மிகவும் முக்கியமானவைகளாகும். ஜப்பானியர்கள் இதை நன்குணர்ந்திருப்பதால், மிகவும் கவனத்தோடு இருப்பதன்னியில் சந்தேகத்திற்கிடந்தரும்படியான அமெரிக்கச் சைனியங்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கவனித்துக்கொண்டிருக்கின்றனர். ஜப்பானிய தரை தள எதிர்ப்புகள், இத்தீவுகளின் பரப்பினுல் கட்டுப்பட்டிருக்கிறது. அவைகளின் மொத்த விஸ்தீர்ணம் 160 சதுர மைல்கள் ஆகும். ஆகையால் போதுமான விமானங்களையும் விமானந்தாங்கிகளையும், படைகளையும், உபயோகிப்பார். அங்கு தாக்குதல்கள் வெகு சுலபமாய் நடத்தலாம். இவ்விதம் தாக்குதல் செய்யும்போது அவர்கள் எதிர்தாக்குதல் செய்யவேண்டி வருமாதலால், தெற்கு பஸிபிக்கிலும், தென்மேற்கு பஸிபிக்கிலும், இழந்த விமான பலத்தை புதுப்பிக்கச்செய்ய ஈடுபட்டிருக்கும் அவர்களின் வேலையில் குறைவு ஏற்படும் என்பது நிச்சயம்.

நேசதேசத் தாக்குதல்களால் ஹிட்லரை அழிக்கவேண்டுமென்ற கருத்து நமக்கு முக்கியமானதாலும், ஜப்பானிய யுத்த தந்திரிகள் உலகப்படங்களை வைத்துக்கொண்டு, பஸிபிக் பிராந்தியத்தில் நமது அடுத்த தாக்குதல் எங்கு நடக்கும் என்பதை வெகு கவனமாய் ஊகித்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தருணத்தில், இத்தீவுகளின் பூகோள அமைப்பினுல் சிறிது கஷ்டம் தரும்படியான இடங்களில் தாக்குதல்கள் செய்வது கஷ்டமேயானாலும், இத்தாக்குதல்களினுல் தெற்கு முனைகளில் ஜப்பானியர்களை முற்றிலும் யுத்தத்தில் ஈடுபடச்செய்துவிட்டு வேறு காரியங்களை கவனிக்காமல் செய்யத்தக்க ஒரு நன்மையும் இருக்கிறது. அலாஸ்காவிலும் ஒரு சிறிது தாக்குதல் செய்யவேண்டியதும் இதனாலேயேதான். ஆசியாவில் செய்யும் தாக்குதல்களால் ஜப்பானிய சாம்ராஜ்யத்தைத்தான் அழிக்கமுடியும். ஆனால் பஸிபிக்கில் செய்யும் தாக்குதலால் ஜப்பானையே அழிப்பது சாத்தியமாகும்.

உங்களுடைய சேமிப்புப் பணத்தை பத்திரப்படுத்துங்கள்.

மீதப்படும் பணத்தை, உலோகங்களையும், விலையுயர்ந்த கற்களையும், பூமி, கட்டடங்கள், உற்பத்திப் பொருள்களையும் வாங்குவதில் போடுவதென்பது யுத்த காலத்தில் இயற்கையான நடவடிக்கைதான். ஆனால், அந்த முறைகள் இப்பொழுது அபாயத்துக்குள்ளான நீண்ட நோக்கமுள்ள சேமிப்பு திட்டமாகும். மற்ற சாமான்களின் விலைவாசியின் உயர்வைப் போலவே தங்கம், வெள்ளி, ஆபரணங்கள், வீடுகள், பூமி, இதர சாமான்கள், இவைகளின் மதிப்பும் ஏராளமாக அதிகரித்திருக்கிறது. ஆனால், யுத்தத்தில் நமக்கு ஏற்பட்ட வெற்றிகள் மூலம் நமக்கு நம்பிக்கை பிறந்துவிட்டது. விலைவாசிகள் திடீரென்று ஒரு நாளில் குறைந்துவிடும். அப்பொழுது உங்களுடைய சேமிப்புகள் மறைந்துவிடும். ஆகையால், சிரமப்பட்டு மீதப்படுத்தியிருக்கும் பொருளை புத்திசாலித்தனத்துடன் காப்பாற்றவேண்டும்.

வருங்காலத்திற்காக சேமித்த பொருள்களை காப்பாற்றிவைக்கவேண்டும்.

அரசாங்கக் கடன் பத்திரங்களிலும், தற்காப்பு சேமிப்பு பத்திரங்களிலும், சேமிப்புத் தொகையைப் போட்டால் அது பத்திரமாயிருக்கும். அழிவுபடாது.

ஒரு வாரத்துக்கு ஒரு ரூபாய் மீதப்படுத்துங்கள். உன்னுடைய வீட்டிலேயே சேமிப்பு இயக்கத்தைத் துவக்கம் செய்யுங்கள். தினசரி ஒன்றோ அல்லது அதற்குமேற்பட்ட ரூபாயையோ உன்னுடைய பணப்பெட்டியில் சேமித்துவை. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வட்டி கொடுக்கக்கூடிய விநியோகங்களில் அதைப் போட்டுவையுங்கள்.

பிழைத் திருத்தம்.

31—7—43-ம் தேதி வெளிவந்த 157-ம் நம்பர் பிரசுரம்.

பக்கம் 17—வரி 40—"6", "4" என்பதற்குப் பதிலாக "36", "அநேகம்" என்று வாசிக்கவேண்டும்.

பக்கம் 18—வரி 29—"ஷர்ட்டுகளும்" என்பதற்குப் பதிலாக "சல்லடங்களும்" என்று வாசிக்கவேண்டும்.

பக்கம் 19—வரி 21—"தற்காப்பு" என்பதற்குப் பதிலாக "முன்னணி" என்று வாசிக்கவேண்டும்.

குறிப்பு.

அஸ்ஸாமிலிருக்கும் புதுக்கோட்டை தொழிலாளர்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்குக் கடிதங்கள் அனுப்பவேண்டும்.

**"புதுக்கோட்டை ஸமஸ்தானத் தொழிலாளர் பகுதி No. 1,
c/o No. 6, முன்னணி பேஸ் போஸ்ட் ஆபீஸ்."**

'.வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—4—0 ; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0 ; மொராக்கோ ரூ. 2—0—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,
தேசிய யுத்த முன்னணி நிலயம்,
புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 161. (1-வது பிரிவு).

28- 8-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலே	6.00
29- 8-43	குடுமியாமலே	... ,,	7.00
,,	பரம்பூர்	... ,,	7.30
30- 8-43	வெங்களூர்	... ,,	7.00
,,	கோனுபட்டு	... ,,	7.30
31- 8-43	நச்சாந்துபட்டி	... ,,	7.00
,,	விராச்சிலே	... ,,	7.30
1- 9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலே	10.00
,,	ராணி பெண் பாடசாலே	... ,,	10.45
1- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலே	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	குழிபிறை	... மாலே	7.00
,,	செவலூர்	... ,,	7.30
2- 9-43	களமாவூர்	... ,,	7.00
,,	நல்லூர்	... ,,	7.30
3- 9-43	பனேயப்பட்டி	... ,,	7.00
,,	ராங்கியம்	... ,,	7.30

பிரஸங்கம் 162. (2-வது பிரிவு).

4- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலே	6.00
5- 9-43	சூரக்காடு	... ,,	7.00
,,	கோட்டைக்காடு	... ,,	7.30
6- 9-43	திருவரங்குளம்	... ,,	7.00
,,	வம்பன்	... ,,	7.30
7- 9-43	மழையூர்	... ,,	7.00
,,	கரம்பக்குடி	... ,,	7.30
8 -9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலே	10.00
,,	ராணி பெண் பாடசாலே	... ,,	10.45
8- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலே	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	ராமச்சந்திரபுரம்	... மாலே	7.00
,,	ராயவரம்	... ,,	7.30
9- 9-43	விராலிமலே	... ,,	7.00
,,	பொருவாய்	... ,,	7.30
10- 9-43	வாளரமாணிக்கம்	... ,,	7.00
,,	ஏம்பல்	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலே 4-மணி.

28— 8—43	திருமெய்யம்.
29— 8—43	மருதன்கோன்விடுதி.
30— 8—43	கொன்னையூர்.
31— 8—43	ராமச்சந்திரபுரம்.
1— 9—43	கரம்பக்குடி.
2— 9—43	கீழாநிலேக்கோட்டை.
3— 9—43	புதுக்கோட்டை.
4— 9—43	வெட்டம்விடுதி.
5— 9—43	ஏம்பல்.
6— 9—43	கீரனூர்.
7— 9—43	குடுமியாமலே.
8— 9—43	ராயவரம்.
9— 9—43	குழிபிறை.
10— 9—43	புதுக்கோட்டை.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—30-8-43

புதுக்கோட்டை ஸமஸ்தான
தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1943-ம் ௵ ஸெப்டம்பர் ௴ 4௳ [ந. 162

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனாமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டென்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்.

பிரஸங்கம் CLXII.

மிஸ்ட்டர் சர்ச்சில் கியூபெக்கில் செய்த பிரசங்கம்.

இரண்டாம் போர்முனை.

மேற்கு பிரான்ஸில் ஜெர்மனியைத் தாக்கி இரண்டாம் போர்முனையை ஏற்படுத்த வேண்டுமென்று இரண்டு வருஷங்களாக ஏராளமாகப் பேச்சு நடந்துவருகிறது. இந்த மகத்தான நடவடிக்கையின் அவசியத்தை எல்லோரும் அறிவார்கள். ஜெர்மன் ராணுவத்தின் கடுமையான தாக்குதலைத் தாங்கி நிற்கும் ருஷ்யர்கள் இவ்வேலையை மேற்கொள்ளும்படி நம்மை ஓயாமல் வற்புறுத்தி வருவதும் முன்னதாக இதனை ஏற்படுத்ததாதற்காக நம்மை நிந்திப்பதும் ஒளியாமல் மனதிலுள்ள புகார்களைச் செய்வதும் இயற்கையேயாகும். அவர்கள் சொல்லுகின்றவற்றிற்காக நான் அவர்களைக் குறையே கூறவில்லை.

அவர்கள் நன்கு முயற்சி செய்து ஜெர்மன் ராணுவ பலத்திற்குப் பெருஞ் சேதம் விளைவித்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் நமது போர்முறை பற்றியும், நாம் இதுவரை போரில் எடுத்துக்கொள்ள இயன்றிருக்கும் பங்குபற்றியும் யோக்கிய உணர்ச்சியுடன் கூறும் குண தோஷங்கள் எதையும் நாம் தவறாக நினைத்துக்கொள்ளமாட்டோம். இதனால் அவர்களது வெற்றியிலும், தீரத்திலும் நமக்குள்ள வியப்பும், பாராட்டுதலும் குன்றாது.

ஒரு போர்முனையைத் திரும்ப ஏற்படுத்துவதைவிட ஒரு போர்முனையைக் கலைப்பது சுலபமாகும். ஒரு சமயம் பிரான்ஸில் நாம் நேர்த்தியான போர்முனையைப் பெற்றிருந்தோம். ஆனால் அது சின்னாபின்னமாகக் கிழித்தெறியப்பட்டது.

பிரிடிஷ் அமெரிக்க விடுதலைப் படைகள் ஏராளமாக இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து பிரான்ஸ் மீது படையெடுத்த ஜெர்மனியருடன் நெருங்கி நின்று போராடும் நாளை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அது எப்பொழுது நிகழக்கூடுமென்பதையும், அது சமீபத்தில் நிகழுமா அல்லது நாள் கழித்து நிகழுமா என்பதையும் நான் சொல்லவேண்டுமென்று நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்பது நிச்சயம். ஆனால் பெரிய தாக்குதல் துவக்கப்படும்பொழுது, விடாமல் வெற்றிகிடைக்க ஹேது இருக்கிறதென்பதையும் ராஜீய நலத்திற்காக நமது சிப்பாய்களின் உயிர்களைப் பலி கொடுக்காமல் சிறந்த ராணுவத் திட்டத்திற்கிணங்கச் சிப்பாய்களின் உயிரைச் செலவிடுகிறோம், என்பதையும் நாங்கள் நன்கு கண்டு கொண்டிருப்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம்.

நேசதேசத்தார்களின் யுத்த தந்திரம்.

பிரிடிஷ் அமெரிக்கப்படை நிர்வாகிகள் சேர்ந்து தயாரித்து எங்களால் அங்கீகரிக்கப்பட்டதாயும் ஓரளவு ரூஸ்வெல்டினாலும் என்னாலும் தூண்டப்பட்டதாயுமுள்ள ஆங்கிலோ, அமெரிக்கப் போர் திட்டங்கள் கிரியாம்சையில் சிறந்த திட்டங்களாக இருக்கின்றன என்பதை நேசநாட்டாரும், சரித்திரக்காரர்களுமே நிதானித்துக் கொள்ளும்படி விட்டுவிடுகிறேன். இவை தீரமும், துணிவும் வாய்ந்த திட்டங்களாகும். இதுவரை பிரிடனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் திரட்டி வைத்த படைகளை எவ்வளவு அதிகமாக எதிரிகளுக்கு விரோதமாக உபயோகிக்க முடியுமோ அவ்வளவு அதிகமாக உபயோகிக்கிறோம். கடற்போக்குவரத்து சாதனங்கள், கடல், நிலப்போர் நிலைமைகள், யுத்த ஆரம்பமுதல் நம் வசமுள்ள படைகளுக்குக் கிடைத்துள்ள பயிற்சி அவற்றின் தன்மை இவையே நம் படைகளின் உபயோகத்திற்கு வரையறையை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. நான் என் சம்பந்தப்பட்ட மட்டில் 2-ம் போர்முனையை மட்டுமின்றி 3-ம் போர்முனையையும் ஏற்படுத்துவது பற்றி சதா ஆலோசித்து வந்திருக்கிறேன். மேற்கிலுள்ள ஜனநாயக நாடுகள் ஒரு கையால் போராடாமல் குத்துச் சண்டைக்காரரைப்போல இரண்டு கைகளாலும் போராட வேண்டும் என்று நான் எப்போதும் நினைத்து வந்திருக்கிறேன். ரூஸ்வெல்ட்டும் பிரிடிஷ் ஸர்க்காரின் பிரதம ஏஜெண்டான நானும் வட ஆபிரிக்காவில் பக்கவாட்டில் துவக்கவிட்டபோர் உத்தரவு ஜெர்மானியரால் உக்ரமாகத் தாக்கப்படும் ருஷ்யருக்கு மட்டுமின்றி நேச நாட்டினரது பொது முயற்சிக்கும் மிக்க முக்கியமான போர்முனையை உண்டாக்கியதென்பது பிற்காலத்தில் கருதப்படும் என்று நான் நம்புகிறேன்.

ஆபிரிக்காவில் எதிரியின் பூண்டே இல்லை. ஆபிரிக்காவிலிருந்த ஜெர்மன் துருப்புகளும், இதாலியத் துருப்புகளும் அழிக்கப்பட்டன. 5 லக்ஷம் துருப்புகளை நாம் கைதி செய்திருக்கிறோம். ஸிஸிலியில் நடைபெற்ற போரில் 38 நாட்களுக்குள்ளாக 4 லக்ஷம் அச்சுத்துருப்புகளை முறியடித்து ஸிஸிலியைக் கைப்பற்றிவிட்டோம். முஸோலினி தன்னுடைய பதவியைத் துறந்துவிட்டான்.

இதாலியின் துர்தசை.

இதாலியின் யுத்த உணர்ச்சி அழிக்கப்பட்டுவிட்டது. பொய்யர்களையும், குற்றவாளிகளையும் வழிகாட்டியாகக்கொண்டதால் அந்தத் துர்திஷ்டம் வாய்ந்த நாடு கடும் தண்டனையை அனுபவித்து வருகிறது. கெட்டவர்களுடன் சேருவது சுலபம். அவர்களை ஒதுக்குவது சுலபமல்ல. இதாலிய மக்களை அடக்கி இதாலியைப் போர்க்களமாக்கி, யுத்தத்தை ஜெர்மனியிலிருந்து எவ்வளவு தூரத்தில், எவ்வளவு காலம் தள்ளிவைக்க முடியுமோ அவ்வளவு தூரத்தில் அவ்வளவு காலம் தள்ளிவைப்பதற்காக பிரான்ஸிலிருந்து ஏராளமாக ஜெர்மன் படைகள் இதாலிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

ருஷ்யாவிலிருந்து ஏராளமாக ஜெர்மன் விமானப்படை இதாலிக்குத் திருப்பப்பட்டுவிட்டது. அவைகளை இராப் பகலாக அதிகரித்துவரும் பிரிடிஷார், அமெரிக்க, கனேடிய விமானங்கள் எதிர்த்து வருகின்றன.

இதைத் தவிர அட்லாண்டிக்கடலிலும் மத்தியதரைக்கடலிலும் நாம் பலமான படைகளைத் தயாரித்து வருகிறோம். தாக்குதலின் பலத்தையோ அல்லது தாக்குதல் ஏற்படும் சமயத்தையோ எதிரி அறிந்துவிடமுடியாது.

மத்தியதரைக்கடலிலும் ஜெர்மனியை விமானங்கள் மூலம் தாக்குவதிலும் யுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது. நேசதேச விமானத் தாக்குதலால் ஹிட்லரின் யுத்த சக்தி குறைந்து வருகிறது. இனி ஒவ்வொரு மாதமும் நமது விமானத் தாக்குதலின் சக்தியும், குறிதவறாத தன்மையுடன் கூடிய குண்டு வீச்சும் அதிகரிக்கும்.

[சர்ச்சில் இந்த வாக்கியத்தை மெதுவாக, ஆனால் உறுதியுடன் எடுத்துரைத்தார்].

கெட்டண்ணத்துடனும், அக்கிரமமாகவும், தாக்கப்பட்ட ருஷ்ய தேசத்தை ருஷ்யப் படைகள் இன்றியமையாத தீரத்துடனும், ஏராளமான மனித நஷ்டத்துடனும் சமாளித்து மகத்தான வெற்றிகளைப்பெற்றதினால் நமக்குக் கிடைத்திருக்கும் ஓரளவு வெற்றிகள் சாத்தியமாயிற்று.

ருஷ்யாவில் ஹிட்லர் உண்டாக்கியதுபோன்ற பெருஞ் சேதத்தை விளைவித்திருந்தால் வேறெந்த நாட்டிலும், எந்த ஸர்க்காரும் உயிர்தப்பி நிலைத்திருக்க முடியாது. ஸ்டாலினின் தலைமையாலும், தனித்து நின்ற பிரிடிஷார் உறுதியாக நின்று போராடியதாலும், பிரிடனும், அமெரிக்காவும், ருஷ்யாவுக்கு ஏராளமாக எல்லாவித தளவாடங்களையும் அனுப்பியதாலும், ருஷ்யா உலகில் மற்றெந்தப் படையும் விளைவிக்க முடியாத சேதத்தை ஜெர்மன் யுத்த யந்திரத்திற்கு உண்டாக்கிவிட்டது.

பால்கன் நிலைமை.

ருஷ்ய வெற்றியாலும், இதாலி மீது ஆங்கிலோ அமெரிக்கர் எடுத்த போர் நடவடிக்கையாலும் பால்கன் பிரதேசத்தில் முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்துவருகின்றன. ருஷ்யரின் உதவியால் விடுதலை பெற்ற பல்கேரியர் சென்ற 30 வருஷங்களில் தங்களது நலத்திற்கு மாறாக ருஷ்யரை 2 முறை காட்டிக்கொடுத்திருக்கிறார்கள். பல்கேரியாவின் கெட்ட மன்னர்கள் மக்களின் விருப்பத்திற்கு மாறாக நாட்டை நாச வழியில் ஈடுபடுத்தியிருக்கின்றனர்.

பாவத்தின்பலன் மரணமே என்பதை மற்ற விஷமிகளுக்கு எடுத்துக் காட்டக்கூடியபடி போரிஸ் அரசரது மரணமிருக்கிறது.

யூகோஸ்லாவியர்களும், கிரேக்கர்களும் மாண்டிநீக்ரோவின் தீரம் பொருந்திய மலைவாசிகள் என்று மிஸ்ட்டர் கிளாட்ஸ்டன் சொன்ன மக்களும் தங்கள் நாட்டை ஆக்கிரமித்தவர்களைத் தாக்கி வந்திருக்கிறார்களென்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

பால்கன் பிரதேச முழுவதும் கொதித்தெழுந்திருக்கிறது. இதாலி போர்க்களத்திலிருந்து நீங்கியவுடன் யூகோஸ்லாவியர், கிரேக்கர், மாண்டிநீக்ரோ வாசிகளுக்கு எதிர்ப்புக் குறைந்து உதவி கிடைக்கும். யூகோஸ்லாவியாவும், கிரீஸும் மீண்டும் இஷ்டப்படி வாழ்ந்து தமது கதியை நிர்ணயித்துக்கொள்ளக்கூடிய சுயேச்சையுடன் வாழும்நாளைக்காண முடியுமென்று நம்புகிறோம்.

இந்த ஜனங்களுக்கும், அவர்களுடைய நிர்வாகங்களுக்கும் தங்கள் கடமையில் தவறாதும் விடுதலைபெற்ற மக்கள் சுயேச்சையாக தங்களை சிம்மாசனத்தில் ஏற்றிவைக்கப்போவதுமான கிரேக்க, யூகோஸ்லாவிய மன்னர்களுக்கும் தைரியம் ஊட்டும்படியான என்னுடைய பாராட்டைத் தெரிவிக்கிறேன்.

நாம் தனிப்பட்ட முறையிலும், ஒன்றுபட்ட முறையிலும், நம்மாலியன்றதைச் செய்துவருவோமாக. நமது தேசீய வாழ்க்கைக்கும், மானிட வர்க்கத்தின் எதிர்கால க்ஷேமத்திற்கும் தீங்கிழைத்தவர்களைத்தாக்கி அடிக்கும் ஒரே நோக்கத்துடன் நம்மிடமுள்ள சகலவிதமான பலத்தையும் உபயோகப்படுத்தி நாம் வேலை செய்துவருவோமாக.

ஐரோப்பாவில் கிளர்ச்சி.

ஜெர்மானியர் இவ்வருஷம் தோல்வியடைவார்கள் என்று நினைக்கிறீர்களா அல்லது அவர்கள் அடுத்த வருஷம் வரை தாக்குப்பிடித்து நிற்பர் என்று நினைக்கிறீர்களா என்றும் என்னை இங்கு பலர் கேட்கின்றனர். போர் அடுத்த வருஷம் வரை நீடித்தால் அது ஜெர்மனிக்கு அதிக கஷ்டமாக முடியும். சிலர் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். ஹிட்லர் கொடுமையை எதிர்த்து ஐரோப்பாவே கிளம்புவதை நாம் எல்லோரும் பார்க்கிறோம். டென்மார்க் நிகழ்ச்சி மற்றொரு உதாரணமாகும்.

ஜெர்மானியரை துவேஷிப்பதுபோல உலகில் இதுவரை எந்த ஜாதியுமே துவேஷிக்கப்பட்டதில்லை. இதற்கு நல்ல உதாரணங்களிருக்கின்றன. சந்தோஷமாகவும், சுயேச்சையாகவும் வாழ்ந்துவந்த 12 தேசங்களை அவர்கள் பாழ்படுத்தியிருக்கின்றனா. இந்த வடுக்கள் ஒருபோதும் மறையா.

நாஸி கொடுமையும், பிரஷ்ய ராணுவமும், தமது அந்தியகாலம் நெருங்குவதைக்கண்டு அஞ்சுகின்றன.

ருஷ்யத் தாக்குதலின் சக்தியையும், இனி அவர்கள் நடத்தக்கூடிய தாக்குதலின் சக்தியையும் நாம் பூர்ணமாக அளந்தறியமுடியாது. நூறு வருஷங்களாக யுத்தத்தையே அறியாத ஜெர்மனியில் யுத்தக்கொடுமையை உணரும்படி நமது குண்டுவீச்சு செய்துவருகிறது. இதனால் ஏற்படும் பலனையும் பிற நாடுகளில் போரைக்கிளப்புவதன் மூலமே வாழ்ந்துவந்த ஜெர்மன் மக்களுக்கு இதனால் ஏற்படும் பலனையும் நாம் பூர்ணமாக அளந்தறியமுடியாது. மத்தியதரைக்கடல் போரினாலும், ஸப்மரீன் போரின் தோலவியாலும் ஏற்படும் பலாபலன்களை நாம் இன்னும் பூரணமாக அறியமுடியாது. இப்பொழுதுதான் நாம் மனித சமூகத்தின் மனோ நிலைமையை அளந்தறிய முயற்சிக்கிறோம். இந்த நவீன யுத்தத்தில் அந்த ஆராய்ச்சிதான் முக்கியமானது.

வீணான ஊகம்.

நமக்குச் சாதகமான நிலைமையை தினந்தோறும் பத்திரிகைகளும், ரேடியோக்களும் உடனுக்குடன் விளக்கமாக எடுத்துரைக்கின்றன. இவற்றையே அளவு கடந்து சிந்தனை செய்து கொண்டிருப்பதில் அபாயமிருப்பதாக நான் நினைக்கிறேன். எப்பொழுது யுத்தம் முடியுமென்ற ஹேஷ்யத்தில் தற்போது ஈடுபடுவது வீணான காரியமென்றும், லாபமற்ற காரியமென்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன். எவ்வளவு பணம் செலவாகும், எவ்வளவு நாள் யுத்தம் நடக்கும் என்பதை கவனமாகக் கணக்கிட்டு இந்த யுத்தத்தில் நாம் இறங்கவில்லை.

கடமை, கௌரவம் இவற்றின் காரணமாகவே இப்போரில் இறங்கியிருக்கிறோம். இது தீரும் வரை நாம் போராடுவோம்.

கடவுள் எங்கள் சிரமத்தையும், மானிட வர்க்கத்தின் கஷ்டங்களையும் குறைத்தால் நாங்கள் நன்றியறிதலுள்ளவர்களாக இருப்போம். எவ்வளவு காலம் இக்கஷ்டம் நீடித்தாலும் கிடைக்கும் பலத்தைக்கொண்டு சற்றும் சலியாமல் எங்களது கடமையைச் செய்வோம். நேச தேசங்கள் தனிப்பட்ட ஸமஸ்தானங்கள் என்ற முறையிலும், மிலியன் கணக்கான மக்களின் சார்பிலும் தங்கள் கடமையைச் செய்யவேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

வார யுத்தச் செய்திகள்.

28—8—43-லிருந்து 3—9—43-வரை.

இதாலி.—இதாலியை விமானங்கள் இடைவிடாது தாக்கி வருகின்றன. முக்கியமாக இருப்புப்பாதைகளும், போக்குவரவு ரஸ்தாக்களும் தாக்கப்படுகின்றன. தெற்கு இதாலியிலுள்ள இருப்புப்பாதைகளும் நேபிள்ஸுக்கும், ஸல்மோனுவுக்கும் பாக்கியாவுக்கும் செல்லும் இருப்புப்பாதைகளும், துண்டிக்கப்பட்டுவிட்டன. பாசகியாவிலுள்ள ரஸ்தாவின் மத்தியிலுள்ள விமானக்கூடத்தை ஆகஸ்டு 25-ம் தேதியன்று நமது விமானங்கள் தாக்கி 147 எதிரி விமானங்களை நாசமாக்கிவிட்டன. கீழ்கண்ட இடங்களிலுள்ள இருப்புப் பாதைகள் தாக்கப்பட்டன. கான்ஸெல்லோ, ஆவெர்ஸா, டெர்னி, லாமிஸியா, காட்ரொடாரி, அனன்ஷியாடா, லாமெஸியா, கொஸென்ஸா, ரெக்கியோஸான், கியோவானி, ரோமுக்கு சமீபத்திலுள்ள ஓர்டி, விடாபோ, வாக்கியா, ஏட்ரியாடிக் கடலிலுள்ள பாரி, டாரண்டோ, கலாப்ரியாவிலுள்ள கோட்ரோன். இதாலியின் குதிகால் கட்டைவிரலிலிருக்கும் ஸல்லாரோமுனைக்கு சமீபத்திலுள்ள எதிரியின் பீரங்கி நிலயங்களை ஒரு பிரிடிஷ் சஞ்சாரியும், நாசகாரியும் வெடிகுண்டுகளால் தகர்த்தன.

இதாலியின் குதிகால் பாகத்தில் ஸெப்டம்பர் 3-ம் தேதியன்று நேசதேசப் படைகள் இறங்கின.

ருஷ்யா.—ருஷ்ய வேனிர்கால முன்னேறித்தாக்கும் யுத்தம் எல்லாப் பகுதிகளிலும், எல்லா முனைகளிலும் பலமாக நடைபெற்றுவருகின்றது.

கார்கோவ் பகுதியில் செம்படை லின்போடினைப் பிடித்தபின் லெபெடின், ஸென்கோவைத்தாண்டி மேற்குப் பக்கத்தில் 100 மைல்கள் முன்னேறியிருக்கின்றன.

டானட்ஸ் பகுதியில் ஸ்டாலினோவுக்குக் கிழக்கேயுள்ள கேந்திர ஸ்தானங்களிலிருந்து ஜெர்மானியர்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். கார்கோவுக்கு வடமேற்கிலுள்ள இருப்புப் பாதை, ரஸ்தா மத்திய ஸ்தலமான சூமி பிடிபட்டுவிட்டது.

பிரியான்ஸ்க் பகுதியில் பிரியான்ஸ்க்குக்கு ஆபத்து அதிகரித்துவிட்டது.

ஆகஸ்டு மாதம் 25-ம் தேதியன்று டாகன்ராக் விழுந்தது. ராஸ்டாவ் பகுதிக்கு ஆபத்துண்டாகிவிட்டது. ஜெர்மனியின் வலது விலாப்பக்கம் துளைக்கப்பட்டுவிட்டது. டாகன்ராக் இருக்கும் ம்யூஸ் நதி பிரதேசத்தில் ருஷ்யர்களின் பலமான தாக்குதலும், ஸ்டாலினோவுக்கு ஏற்பட்டிருக்கும் அபாயமும், போல்டாவை நோக்கி ருஷ்யப் படையின் முன்னேற்றமும் சேர்ந்து ஜெர்மானியர்களைப் பின்வாங்கும்படி செய்துவிட்டது. டானட்ஸ் பகுதியிலும், கிரிமியாவிலும், குபான் பிரதேசத்திலுமுள்ள ஜெர்மன் ஸ்தானங்களுக்கு ஆபத்து அதிகரித்துவிட்டது.

ஸ்மாலன்ஸ்க் போர்முனையில் யெல்னியா விழுந்துவிட்டது. செம்படை ஸ்மாலென்ஸ்க்குக்கு 45 மைலுக்குள் வந்துவிட்டது.

செம்படை குர்ஸ்க் முனையிலுள்ள செவ்ஸ்க் பிராந்தியத்திலுள்ள க்லுகாவ், ரைல்ஸ்க் முதலிய நகரங்களைப் பிடித்துக்கொண்டு வடக்கு யூக்ரேனுக்குள் புகுந்துவிட்டதென்று ருஷ்ய அறிக்கை வெளியிடுகிறது.

ஆக்கிரமிப்பு ஐரோப்பா மீதும், ஜெர்மனி மீதும் விமான நடவடிக்கை.—ஆகஸ்டு 25-ம் தேதியன்று பெர்லின் மிகவும் பலமான தாக்குதலுக்குட்பட்டது. ஸீமென்ஸ் தொழிற்சாலையின்மேல் குண்டுகள் நேராடி விழுந்தன. சார்லாட்டென்பர்க் இருப்புப்பாதை ஜங்ஷன் தரைமட்டமாகிவிட்டது. ஹிட்லரின் தலைமை காரியாலய கட்டடத்துக்கு நாசம் உண்டாகி

விட்டது. ஆபீஸ்களும், கடைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிட்டன. பெர்லின் பாழாகிவிட்டது.

ஆகஸ்டு 27-ம் தேதியன்று இருப்புப்பாதை மத்திய நிலையமான ந்யூரம்பர்க் தாக்கப்பட்டது.

ஆகஸ்டு 30-ம் தேதியன்று கீழேகண்ட நிலயங்கள் குண்டுவீச்சுக்குட்பட்டன.

ரைன்லாந்திலுள்ள மஞ்சள்—கிளாட்பாக்—ரெவ்ட் பிரதேசத்திலுள்ள, தொழிற்சாலைகள், வெண்டவில்லியிலுள்ள விமான தளங்கள், மாஸிங்கார்பிலுள்ள ரஸாயனசாலைகளும் மின்சார உற்பத்தி நிலயங்களும் ஸெயின்ட்போல் பிரதேசம், பிரியாஸ் விமானதளம், கடைசி மூன்று பிரதேசங்களும் பிரான்ஸிலிருக்கின்றன.

பசிபிக் யுத்தம்.—100 நேசதேச விமானங்கள் ஹன்ஸா விரிகுடாவைத் தாக்கி, 180 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளைப் பொழிந்தன. பெரிய அக்னி ஜ்வாலைகள் கிளம்பின. ஒரு சாமான் கப்பல் மூழ்கிவிட்டது. 45 சிறிய கலங்கள் நாசமாக்கப்பட்டன அல்லது பழுதுபட்டன.

ஸலாமூவாவில் கோரமான யுத்தம் நடைபெறுகிறது. எதிரியின் பதில் தாக்குதல்கள் பயன்படவில்லை. லே பிரதேசத்தில் 20 சிறிய படகுகள் நாசமாக்கப்பட்டன. லேக்கும், மாடாங்குக்கும் மத்தியில் 2 கப்பல்களும், 31 படகுகளும் மூழ்கடிக்கப்பட்டன. வேவாக் தீவில் குண்டு வீசப்பட்டபொழுது 37 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன. போர்ச்சுகீஸ் டிமோரிலுள்ள டில்லி என்னும் தீவை வெடி விமானங்கள் தாக்கின. தீ பிடித்துக்கொண்டது. தீ ஜ்வாலை 45 மைல்களுக்கப்பாலிலிருந்தும் தென்பட்டது. மாடாங்கைத் தாக்கிய பொழுது 20 படகுகள் மூழ்கின.

ஸாலமன்ஸிலுள்ள அருண்டேல் தீவில் அமெரிக்கப்படை ஒருவித எதிர்ப்புமின்றி இறங்கினர்.

டோக்கியோவிற்கு 1,200 மைல்கள் தென்கிழக்கிலும், வேக் தீவுக்கு 900 மைல்கள் வடமேற்கிலும் உள்ள மார்கஸ் தீவை ஆகஸ்ட் 25-ந் தேதி அமெரிக்க விமானங்களும், கப்பற்படையும் தாக்கின. இத்தீவு மத்திய பஸிபிக்கிலே ஜப்பானியர்களுக்கு மிகவும் முக்கியமான இடமாகும்.

சைனு.—நேசதேச விமானங்கள் ஹாங்கௌ, காண்டன், ஹாங்காங் முதலிய இடங்களைத் தாக்கி ஏராளமான நஷ்டத்தை விளைவித்தன.

சீனப்படைகள் பூயாங்க், டெக்ட்ஸிங்க், ஹாங்சௌ முதலிய இடங்களில் ஊடுருவிச் சென்றனர்.

ஜப்பானியர்கள் மேற்கு யூனன் மாகாணத்தில் புதிய தாக்குதலை ஆரம்பித்து கின்வா மீது வெடிகுண்டுகளைப் பொழிந்தனர்.

கிராண்டு கால்வாயில் உப்பு ஏற்றிக்கொண்டிருந்த ஜப்பானியப் படகுகளை நாம் கபடமாகத் தாக்கி அழித்துவிட்டோம்.

பர்மா—கீழ்க்கண்ட இடங்களில் வெடிகுண்டுகள் வீசப்பட்டன. ஐராவதி, சிண்ட்வின், காலடான் நதிகளிலுள்ள படகுகள், பாகுனு, கான்பாலு, திடியாபின், யாமிதின், ஸ்தயாட்மியோ, அக்யாப், டாங்கப், தாழி, மியட்கினு, கியாக்ப்யூ, ராம்ராத்தீவு, கியாங்கின், பூதேடாங்கு.

சத்துருவினுடையவும், சத்துருவினுல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

23—8—43. (திங்கட்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே தளங்கள்.—செயிண்ட் (St. Omer).

தாக்குதல்கள்.—பெதூயூன் (Bethune) பிரதேசம்.—(1 எதிரி விமானம் சுட்டுத் தள்ளப்பட்டது).

எதிரி துணைக்காவலோடுகூடிய கப்பல்கள்.—டச்சுக் கடற்கரை (Dutch Coast).

இரவு.—(59 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை)—ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் (Berlin) மேல் கொடுமையான தாக்குதல்கள் நடைபெற்றது.

சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

போக்குவரத்துகள், ரஸ்தாக்கள்.—தெற்கு இதாலி (South Italy).

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமானநிலயம்.—கைத்தீவிலுள்ள லாங்கோயர் (Langgoer).

எதிரி கிராமங்கள்.—டானிம்பர்த் தீவிலுள்ள கெல்ஸிர் (Kelseer), டோயெலா (Doela), லாரட் (Larat), அடோடோ (Adodo), ஸேலாரு (Selaru), மிடாக் (Mitak), மாங் லோஸி (Manglossi), வாட்மோரி (Watmoari), லாம்பொடஸ்பாரட் (Lambdessbarat).

விமான நிலயம், பட்ணம்.—டச்சு ஸெலிபஸி லுள்ள கெண்டாரி (Kendari).

சாமான் போக்குவரத்து.—நியூ ஹனோவரி லுள்ள மாட்டான்லெம் (Maatanlem) முனைக்கு மேற்கில்.

விமான நிலயம், சாமான் குவியல் பிரதேசம்.—நியூ பிரிடனிலுள்ள காஸ்மாடா (Gasmata), நியூ கினியிலுள்ள பின்ஸ்ஷாபன் (Finschhafen), மார்வாஸி (Marwasi), ஸேலாமாட்டா (Selamata), ரூக் (Rooke) தீவு.

பர்மா (Burma).

டின்டா (Htindaw).

இலக்குகள்.—ஸாண்டோவே (Sandoway).

எதிரிப் போக்குவரத்துகள்.—பர்மாவில் பல பாகங்களில்.

24—8—43. (செவ்வாய்க்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமானங்கள்—பிரான்ஸிலுள்ள போர்டோ (Bordeaux).

எதிரி விமான நிலயங்கள்.—வில்லா கப்லி (Villa Coubley), காஞ்சஸ் (Conches), எவரெக்ஸ் பாவில்லி (Evruex Fauville).

இரவு.—3 விமான நிலயங்கள்—பிரான்ஸ் (France).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

யுத்த தளவாடங்கள், சைனியங்கள் தயார் செய்து சேகரிக்கும் இடங்கள்.—குரோடோன் (Crotone).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (Southern Italy).

ருஷ்யா (Russia).

(98 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

விமான நிலயம்.—வீவாக் (Wewak), நியூ ஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகோ (Bairoko).

துறைமுகம்.—சைனாவிலுள்ள ஹாங்கௌ (Hankow) பிரதேசம்.—(19 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

பர்மா (Burma).

ஸப்ளைக் கப்பல்கள்.—ஐராவதி (Irrawaddy), சிண்ட்வின் (Chindwin).

படகுகள்.—தாழி (Thazi).

ஸப்ளை டேப்போக்கள்.—பாகுனு (Baguna).

ரயில்வே பாதைகள், ரயில்வே இலக்குகள்.—கான்பாலு (Kanbalu), திட்யாபினி (Thityabini), யமாதின் (Yamethin).

25—8—43. (புதன்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

இரவு.—இலக்குகள்—ஜெர்மனியின் தலை நகரான பேர்லின் (Berlin).

சுரங்க வெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

எதிரி விமான நிலயங்கள்.—போகியா (Foggia).—(19 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

எதிரி மோட்டார் போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (Southern Italy).

ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள டாரண்டோ (Taranto).

யுத்த தளவாடங்கள், சைனியங்கள் தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—இதாலியிலுள்ள போகியோ (Foggia).

ருஷ்யா (Russia).

(38 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன.)

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானியச் சைனியங்கள், விமானநிலங்கள்.—நியூகினியிலுள்ள ஸலாமூவா (Salamaua). டாங்குப் (Taungup) பிரதேசம்.

பர்மா (Burma).

கிராமங்கள்.—அக்யாப் (Akyab) தீவு.

26—8—43. (வியாழக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—விமான நிலயம்—கேயன் (Caen).

தாக்குதல்கள்.—வடக்கு பிரான்ஸ் (Northern-France).

(2 எதிரி விமானங்கள் நாசமாக்கப்பட்டன).

மாலை.—மின்சார நிலயங்கள்—பிரிடனிலுள்ள கூயர்லெடான் (Guerledan).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

விமான நிலயம்.—நேபிள்ஸிற்கருகிலுள்ள காபு (Capu).

2 விமான நிலயங்கள்.—கிராஸ்ஸனிஸ் (Grazzanise). (15 விமானங்கள் சுட்டுத் தள்ளப்பட்டன).

இலக்குகள்.—ஸார்டினியாவிலுள்ள கார்லோ போர்ட் (Carlo Forte), குஸ்பினி (Guspini).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—தெற்கு இதாலி (Southern Italy).

ரயில்வே தளங்கள்.—இதாலியிலுள்ள பாக்னோலியா (Bagnolia).

ஜெர்மன் சைனியங்கள்.—ரெஜியோ (Reggio) பிரதேசம்.

ருஷ்யா (Russia).

(61 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப் பட்டன.

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய இலக்குகள்—நியூ கினியிலுள்ள ஹன்ஸாபே (Hansa Bay).

நியூ ஜார்ஜியாவிலுள்ள பேய்ரோகோ (Bairoko) துறைமுகம்.

பர்மா (Burma).

படகுகள்.—ஐராவதியில் புரோமிற்கும் (Prome), மாக்வி (Magwe)க்கு மிடையில்.

தொழிற்சாலைக் கட்டடங்கள்.—தாயிட்டிமியோ (Thayetmyo).

படகுகள்.—அக்யாபிற்கும் (Akyab) கா (Gwa) கடலுக்கும் இடையில்.

27—8—43. (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.-எதிரி விமான நிலயங்கள்-பாய் (Poix).

தாக்குதல்கள்.-வடக்கு பிரான்ஸ் (Northern France).

விமானச் சண்டைகள்.—ஆக்கிரமித்த தேசங்கள். (18 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன). (12 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இரவு.—ரயில்வே, தொழிற்சாலை ஸ்தலங்கள்.—ஜெர்மனியிலுள்ள நூரம்பர்க் (Nuremburg).

ராணுவ லக்ஷியங்கள் (Ruhr).

ரயில்வே இலக்குகள், எதிரி விமான நிலயங்கள்—பிரான்ஸ் (France), லோகண்ட்ரீஸ் (Low Countries). (33 நேசதேச விமானங்கள் காணப்படவில்லை).

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வே தளங்கள்—இதாலியிலுள்ள ஸுல்மோனு (Sulmona), பெனிவெண்டோ (Benevento), கஸெர்ட்டோ (Caserto). (20 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ரஸ்தா, ரேயில் போக்கு வரத்துகள்—தெற்கு இதாலி (Southern Italy).

டாங்கி ஸாதனங்கள்—ரெஜியோ (Reggio).

யுத்த தளவாடங்கள் சைனியங்கள் தயார் செய்து சேமித்துமிடங்கள்—ஸாலெர்னோ (Salerno).

ருஷ்யா (Russia).

(75 எதிரி விமானங்கள் சுட்டுத் தள்ளப் பட்டன).

விமானச் சண்டைகளும், தரைமீதுள்ள விமானங்களும்.-ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—போல்ட்டாவா (Poltaua), வால்னேவாகா (Volnovakha) ரோஸலாவி (Roslavi).

தூரக்கிழக்கு (Far East).

விமானச் சண்டைகள்.—கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila) நியு ஜார்ஜியாவிலுள்ள பெய்ரோகோ (Bairoko) துறைமுகம், சைனுவிலுள்ள காண்டானிலுள்ள டியேன் ஹோ (Tienho) விமான நிலயம்.

பர்மா (Burma).

ரயில்வே ஸ்தாபனங்கள்.—தாழி (Thazi).

படகுகள்.—ஐராவதி (Irrawady).

28—8—43. (சனிக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—கால்வாய், ரயில்வேப் போக்குவரத்துகள். பெல்ஜியம் (Belgium), பிரான்ஸ் (France).

விமானச் சண்டைகள்.—ஆக்கிரமித்த பிரதேசங்களில். (2 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

இரவு.—சுரங்கவெடி பாவுதல்.—எதிரி ஜலப்பிராந்தியங்களில்.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

ரயில்வேதளங்கள்.—இதாலியிலுள்ள கான்ஸெல்லோ (Cancello), அவெர்ஸா (Aversa).

ரயில்வே தளங்கள்.—டெர்னி (Terni).

ரயில்வே போக்குவரத்துகள்.—லாமெஸியா (Lamezia).

ரயில்வே இலக்குகள்.—தெற்கு இதாலி (Southern Italy).

கம்பியில்லாத் தந்தி நிலயம். — யுன்டோலென் (Uentolene) தீவு.

தாக்குதல்கள்.—ஸார்டீனியா (Sardinia), கப்பல்கள் இதாலியிலுள்ள டாரெண்டோ (Taranto).

ருஷ்யா (Russia).

(82 அச்சு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமானச் சண்டைகளும் தரைமீதுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

தூரக்கிழக்கு (Far East).

(14 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

விமான நிலயம்.—கொலம்பங்காராவிலுள்ள விலா (Vila), பொகெய்ன்வில்லி (Bougainville) தீவு.

பர்மா (Burma).

அக்யாப் (Akyab) பட்டணம்,

படகுகள்.—ஐராவதியின்மேலுள்ள பொகோக்கு (Pokokku).

எதிரி சைனியங்கள்.-கலடான்நதி (Kaladan).

படகுகள்.—ஐராவதி (Irrawady), கலடான் (Kaladan) நதிகள்.

29—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா (Europe).

பகல்.—ரயில்வே கால்வாய் இலக்குகள்—பிரான்ஸ் (France); வடமேற்கு ஜெர்மனி (North-west Germany). (1 நேசதேச விமானம் காணப்படவில்லை; 1 எதிரி விமானம் நாசமாக்கப்பட்டது).

இரவு.—ஒரு தகவலும் கிடைக்கவில்லை.

இதாலி (Italy),
மத்தியதரைக்கடல் (Mediterranean).

யுத்த தளவாடங்கள், சேனைகள் தயார் செய்து சேகரிக்குமிடங்கள்.—இதாலி ஆர்ட்டி (Orte), டார்ரி (Torre), அனன்ஷியாதா (Annunziata). (17 அச்சுநாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ரஸ்தா, ரயில் போக்குவரத்துகள்.—கொஸென்ஸா (Cosenza).

கப்பல்கள்.—இதாலியின் கடற்கரை.

யுத்தத் தளவாடங்கள், சேனைகள் தயார் செய்து சேமிக்குமிடங்கள்.—லெமெஸியா.

ருஷ்யா (Russia).

(59 அச்சு நாட்டு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)

விமானச் சண்டைகளும், தரையிலுள்ள விமானங்களும்.—ருஷ்ய யுத்த அரங்கம் முழுவதும்.

ரயில்வே ஜங்ஷன்கள்.—பிரையான்ஸ்க் (Bryansk).

தூரக்கிழக்கு (Far East).

ஜப்பானிய விமான நிலயங்கள்.—பொகெய்ன்வில்லித் தீவிலுள்ள பூயின் (Buin). (14 ஜப்பானிய விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன).

ஸாந்தா இஸ்பெல்த் தீவிலுள்ள ரெகாதாபே (Rekatabay).

எதிரிப் படகுகள்.—கொலம்பங்காரா (Kolombangara).

படகுகள்.—கொனுங்கா (Gononggа).

எதிரி வியாபாரக் கப்பல்கள்.—காவியங் (Kavieng).

ஜப்பானியப் படகுகள்—நியூ பிரிடனிலுள்ள ஜாக்குவினட்பே.

படகுகள் தங்கியிருக்குமிடங்கள்.—மாபோ (Ma Po) நதி, பின்ஸ்ஷாபன் பிரதேசம்.

பர்மா (Burma).

கட்டடங்கள்.—மிதிக்யினு (Myitkyina).

ராணுவ நிலயங்கள்.—கியாக்புயூ (Kyaukryu) ராம்ரீத் (Ramree) தீவுகள், அக்யாப் (Akyab) பட்டணம்.

ரயில்வேக் கட்டடங்கள்.—கியாங்கின் (Kyaungin).

ஜப்பானிய சேனை குடிசைகள்.—காலிமியோ (Kalemyo) ஜில்லாக்கள்.

விரோதிகளின் விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

24—8—43. (செவ்வாய்க்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்.—டான் பாஸ் (Donbas) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

நாஸாபே (Nassau bay) பிரதேசம்.

25—8—43. (புதன்கிழமை).

பிரிடன் (Britain), ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

26—8—43. (வியாழக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

வட ஆபிரிக்கா (North Africa).

அல்ஜியர்ஸ் (Algiers). (3 எதிரி விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டன.)

ருஷ்யா (Russia).

ருஷ்யச்சைனியங்கள்.—கார்க்கோவ் (Karkov).

27—8—43. (வெள்ளிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia), தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

28—8—43. (சனிக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

விமானச் சண்டைகள்—பிரையான்ஸ் (Bryansk), போல்டோவா (Poltova) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

29—8—43. (ஞாயிற்றுக்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).
தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

30—8—43. (திங்கட்கிழமை).

பிரிடன் (Britain).

எதிரி விமான நடவடிக்கை இல்லை.

ருஷ்யா (Russia).

கிராஸ்னோகிராட் (Krasnograd) பிரதேசம்.

தூரக்கிழக்கு (Far East).

ஒரு தகவலும் இல்லை.

யுத்தக் குறிப்புகள்.

ஐந்தாவது வருஷ யுத்தப்போக்கு. ஐந்தாம் வருஷ யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. முன்பு இருந்ததைவிட இப்பொழுது நேசதேசத்தாருக்கு வெற்றி கிடைக்கும் சின்னங்கள் அதிகமாயிருக்கின்றன. சென்ற வருஷங்களில் யுத்தப் போக்கை கவனித்தால் அபாயமான நிலைமையும், கோரமான தோற்றங்களும் உண்டாகியிருந்தன. நாம் மகத்தான பிரயத்தனங்களைச் செய்து அவைகளைத் தடுத்துவிட்டோம். யுத்தம் ஆரம்பமானபொழுது சிறந்த வலிமைகொண்ட ஜெர்மனி, ஐரோப்பா பூராவையும் கைப்பற்றிக் கொண்டு ஆபிரிக்காவையும், ஆசியாவையும் விழுங்கிவிடும்போலிருந்தது. பிரிடன் கடலில் மட்டும் ஆதிக்கம் பெற்றிருந்தது. தரையில் வலிமையுள்ள ருஷ்யாவும், மகத்தான ஐச்வர்யமுள்ள அமெரிக்காவும் அப்பொழுது யுத்தத்தில் ஈடுபடவில்லை. சோதனைகாலம் ஏற்பட்டபொழுது தீரமும் வெளிக்காட்டப்பட்டது. பொருமையுடன் பிரிடன் நேசநாடுகளை ஒன்றன்பின் ஒன்ருய் சேர்த்துக்கொண்டு, பலமான படைகளைத் திரட்டிற்று. அந்தப் படைகள் தான் ஆபிரிக்காவிலிருந்து எதிரியை அப்புறப்படுத்தியிருக்கிறது. எதிரியின் தாய்நாடான ஜெர்மனியையும் நொருக்கிவருகிறது. டங்கர்க்கில் பட்ட கடனை பான் யுத்தத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டோம். இதுமட்டுமில்லாமல் ராட்டர்டாம், வார்ஸா, பெல்கிரேட் முதலிய இடங்களை எதிரி அழித்ததற்குப் பழிவாங்கும் முறையில் கொலோனையும், ஹாம்பர்க்கையும், பெர்லினையும் இன்னும் அநேக நகரங்களையும் தவிடுபொடி செய்திருக்கிருேம்.

நான்கு வருஷமாக நாம் செய்துவந்த விடாமுயற்சியும், திட்டங்களும், நமக்குக் கடைசியில் பலனளித்துவிட்டன. இதாலி முறியடிக்கப்பட்டுவிட்டது. யுத்தத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதென்றே சொல்லாம். ஜெர்மனியும், ஜப்பானும் இப்பொழுது முன்னேறித் தாக்கமுடியவில்லை. எல்லைச் சரகங்களிலிருந்து அவர்கள் துறத்தியடிக்கப்பட்டு, அவர்களுக்கு கண்ணுக்குக்கண்ணுகயிருந்த அநேக ஸ்தானங்களைவிட்டு அவர்கள் பின்வாங்கி வருகிருர்கள். பாக்கியிருப்பவைகளையாவது காப்பாற்றிவிடலாமென்று தப்பெண்ணம் கொண்டு தங்களுடைய அரண்களுக்குள் பிரவேசிக்கிருர்கள். எதிரிகளின் சேனைகள் சிதைவுபட்டு பலஹீனமடைந்துவிட்டன. அவர்கள் அடிமைப்படுத்தியிருக்கும் மக்கள் ஆங்காங்கு அவர்களைப் பழிவாங்க கலகம் செய்துவருகிருர்கள். இரவிலிருந்த பயங்கரமான அந்தகாரம் நீங்கிவிட்டது. வானத்தில் சூர்ய கிரணங்களின் ஒளி தோன்விட்டது.

வி வி வி வி வி

இரண்டு முக்கியமான சொற்பொழிவுகள். ஒட்டாவாவில் ஜனுதிபதி செய்த பிரசங்கமும், கியூபெக்கில் மிஸ்ட்டர் சர்ச்சில் செய்த பிரசங்கமும் அர்த்தபுஷ்டியுள்ளவை. சாதாரண மனிதர்களைப்போல் யுத்தத்தின் உயர்வான நோக்கங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவதில் ரூஸ்வெல்ட் சலிப்படைவதில்லை. எவ்வளவு சொல்லியிருந்தாலும், ஜனங்களை இடைவிடாது முயற்சிசெய்யத் தூண்டுவதற்கு இம்மாதிரியான புனருக்தி அவசியமாகும். ஜனங்களுக்கும், அவர்கள் எதற்காகச் சண்டைபோடுகிருர்கள், உயிர் துறக்கிருர்கள் என்றவைகளையும் அடிக்கடி ஞாபகம் மூட்டவேண்டும். இல்லாவிடில் அவைகளை அவர்கள் மறந்துவிடக்கூடும். அச்சு நாடுகளின் கொள்கையானது கொள்ளைக்கூட்டத்தாரின் அக்கிரமமென்றும், ஜனுதிபதி ரூஸ்வெல்டு திரும்பவும் சொன்ஞர். ஏற்கனவே சிறந்த வாழ்க்கையுள்ள காலமென்று நினைத்திருந்த நிலைமையை அடைய நாம் முயலக்கூடாது. புதிதான சிறந்த வாழ்க்கையை நிறுவுவதற்கு நாம் பிரயத்தனம் செய்யவேண்டுமாம். நான்கு ஸ்வதந்திரங்களை அடைந்துவிடவேண்டும் என்ற பேச்சும், அட்லாண்டிக் சாஸனமும் உடன்காலத்திலேயே அவைகளைப் பூர்த்திசெய்ய முடியாததால் வியர்த்தமான பேச்சல்ல. அமெரிக்க சுய ஆக்ஷி அறிக்கையும், பிரிடிஷ் மாக்ஞ கார்டாவும் போல அவைகள் மானிட வர்க்கத்தின் முற்போக்குக்கு மைல் கற்கள் போன்றவை.

சர்ச்சில் தன்னுடைய பிரசங்கத்தில் யுத்த விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசினுர். பிரான்ஸ் மறுபடியும் விடுதலை பெற்று, ஒற்றுமையும், ஸ்வதந்திரமும் அடைந்துவிடுமென்று அவர் சொன்ஞர். கனடாவின் மனித ஒத்தாசையும், யுத்த தளவாட உற்பத்தியும், அபரிமிதமானவை. இதாலியர்கள் குற்றத்தொழிற் செய்பவர்களுடைய சகவாசத்திஞல் கஷ்டப்படுகிருர்கள். பாபம் செய்தவர்களுக்குக் கதி இதுதான் என்று போரிஸ் மன்னரின் மரணம் நிரூபிக்கிறது.

நிலைமையை அறியும் சக்தி அவருக்கு அபாரமானதால் முக்கியமான பிரச்னைகளைப் பற்றிப் பேசி அவைகளுக்கு தன்னுடைய புத்தி சாதுர்யப்படி பதிலுரைத்தார். கியுபெக் மகாநாட்டிற்கு ஸ்டாலின் வராததைப் பற்றி பேசும்பொழுது ஸ்டாலின் சேனுதிபதியாகவும்

அரசாங்க நிர்வாகியாகவும் இரண்டு அலுவல்களை கவனித்துவந்ததால் வரக்கூடவில்லையென்று சொன்னார். வெற்றிகரமாக யுத்தம் நடைபெறும் பொழுது யுத்த அரங்கத்தைவிட்டு சேனாதிபதி வந்துவிடுவதும், ஜப்பானும், ருஷ்யாவும் சிநேகபாவத்துடனிருக்கும்பொழுது ஜப்பானின் வீழ்ச்சிக்காக நடைபெறும் யோசனைகளில் ஜப்பானுடைய எதிரிகளுடன் ருஷ்ய நிர்வாகி கலந்துகொள்ளுவதும் அபாயகரமான நடவடிக்கைகள்.

மற்றொரு முக்கியமான பிரச்னை இரண்டாம் போர்முனை. ருஷ்யர்கள் இரண்டாம் போர்முனையை ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தயாரானபின்தான் அது நடைபெறக்கூடும். புதிதாக ஒரு போர் முனையை உண்டுபண்ணுவதைவிட ஏற்கனவே உள்ள போர்முனையை சின்னாபின்னப்படுத்துவதுதான் சுலபமானது. நேசநாடுகளுக்கு பிரான்ஸில் சிறந்த போர்முனையிருந்தது. ஆகிலும், அது தூள்தூளாகக் கிழிபட்டுவிட்டது.

யுத்தம் எப்பொழுது முடிவடையும் என்ற கேள்விக்கும், அவர் சரியான பதிலுரைத்தார். இதைப்பற்றி ஆலோசனை செய்வது முட்டாள்தனம். "கடவுள் எங்கள் சிரமத்தையும், மானிட வர்க்கத்தின் கஷ்டங்களையும் குறைத்தால் நாங்கள் நன்றியறிவுள்ளவர்களாக இருப்போம்" என்று அவர் சொன்னார்.

வி வி வி வி வி

ஐரோப்பாவுக்காக யுத்தம் கூடிய சீக்கிரம் நடைபெறும். ஆறு வாரங்களுக்குள்ளாக ஸிஸிலியை நாம் கைப்பற்றியது ஒரு புகழக்கூடிய நடவடிக்கையாகும். ஸிஸியைப் பிடித்ததிலிருந்து மத்தியதரைக்கடல் மார்க்கமும், ஐரோப்பாவுக்குப் போகும் வழியும் திறக்கப்பட்டுவிட்டன. **டைம்ஸ்** பத்திரிகை சொல்லுகிறபடி ஸிஸிலியிலிருந்து எல்லா பக்கங்களுக்கும் செல்லக்கூடும். ஸிஸிலி யுத்தத்தில் அமெரிக்காவிலிருந்து வந்த துருப்புகள் நல்ல பயிற்சியும், தரையிலும், கடலிலும் சென்று யுத்தம் புரியும் அனுபவமும் பெற்றுவிட்டார்கள். ஸிஸிலியின் குன்றுகள் உள்ள பிரதேசங்களில் தரைப்படைகள் தாக்குவதற்கும், முன்னேறுவதற்கும் பயிற்சிபெற்றுவிட்டன. ஜெர்மனியை, சரணடையும்படி செய்வதற்கு இந்த நடவடிக்கைகள் முற்போக்கானவைகள். இதாலியில் படையெடுப்பு ஆரம்பமாகிவிட்டது. 8-ம்படை இதாலியன் கால் கட்டைவிரல் போன்ற பாசத்தில் இறங்கிவிட்டன.

வி வி வி வி வி

யுத்தமுனையின் சுருக்கம். ஜெர்மனிக்கு இவ்வருஷ ஆரம்பத்தில் மகத்தான சீர்கேடு ஏற்பட்டுவிட்டது. ஒன்றன்பின் ஒன்றாக, ஸிஸிலியிலிருந்து துரத்தியடிக்கப்பட்டதும், ஓரல், கார்கோவ், டாகன்ராக் போன்ற இடங்களில் தோல்வியுமாக அவனுக்கு இகழ்ச்சி ஏற்பட்டது. அவைகள் ஓய்ந்தபாடில்லை. அவன் பின் வாங்கிவரும்பொழுது அவனை நாம் பின்துரத்துகிறோம். ஹிட்லருக்கு ஏற்படும் தோல்விகள் பிரிடனுக்கு யுத்த ஆரம்பத்தில் ஏற்பட்டவைகளைப்போல் இருக்கவில்லை. அப்பொழுது யுத்தம் ஆரம்பித்தபொழுது ஜெர்மனியின் வலிமை உன்னத ஸ்திதியிலிருந்தது. அப்படியிருந்தும் அதனால் வெற்றிபெற முடியவில்லை. பிரிடன் பலஹீனமாகயிருந்தபொழுதும் தனக்கு வந்த அபாயத்தை சமாளித்துவிட்டது. இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. ஜெர்மனி பலஹீனமடைந்துவிட்டது. நேசநாடுகளின் பலம் ஓங்கிவிட்டது.

மேலும் நவீன யுத்தமுறையில் பின்வாங்குவது, யுத்த முனைகளைக் குறுக்குவது என்ற ஜெர்மனியின் யுத்த தந்திரம் தற்கொலை செய்துகொண்டதுபோலாகும். அரண்கள் சிறியதாக ஆகிவிட்டால் அதில் ஜன நெருக்கமுண்டாகிவிடும். அவைகள் விமானங்களின் குண்டு வீச்சுக்கு சிறந்த லக்ஷியங்களாகிவிடும். ஸீக்பிரட் அரண் முதலான எந்தப் பிரதேசத்துக்கு எதிரி ஓடினாலும் அங்கே அவனை விமானங்கள் துரத்தியடிக்க வல்லமையுள்ளவைகள். கீழ்ப்படியாத தேசங்களின் திமிறை அடக்குவதற்கு விமான யுத்தம்தான் சிறந்தது. இதுதான் யுத்த தந்திரமும், யுத்த நடவடிக்கையும். நகரங்களை நொருக்குவதுடன் அவைகள் ஜனங்களின் மனோதிடத்தையும் நிலைகுலைத்துவிடும். படோக்ளியோவின் மனோதிடம் குன்றிவருகிறது. ஹிட்லருக்குக் கெட்ட காலத்தைக் குறிப்பிடுகிறது.

வி வி வி வி வி

ஹிட்லரின் ஐரோப்பிய கோட்டைக்குள் பால்கன் நாடுகள் ஹிட்லரின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளின் நிலைமை திருப்திகரமாகயில்லை. பால்கன் நாடுகளில் சில இதாலியத் துருப்புகள் கொரில்லாப்படைகளுடன் சேர்ந்துவிட்டன. சிலர் தாய்நாட்டிற்குத் தப்பி ஓடிவிட்டார்கள். மற்றவர்கள் ஜெர்மனியின் பாதுகாப்பிலிருந்து வருகிறார்கள். ஜெர்மனியிலிருந்த ரிஸர்வ் படைகளில் பாதிபாகம் அமைதியை நிலைநாட்டுவதற்காக இங்கு வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

பல்கேரியா. ஹிட்லரின் கூட்டாளியான பல்கேரிய மன்னரான போரிஸ் சந்தேகப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் இறந்துவிட்டார். அவருக்குப்பதிலாக அவருடைய வாலிபமுள்ள குமாரன் பட்டத்துக்கு வந்திருக்கிறார். பல்கேரியா ஜெர்மனியின் தெற்கு அரண். அதனுடைய துருப்புகள் யூகோஸ்லாவியாவிலும், கிரீஸிலும் காபந்து வேலைசெய்து வருகிறார்கள்.

டென்மார்க்கின் மன்னருக்கும், ராணியும், இளவரசர்களும் மந்திரிகளும், உத்தியோகஸ்தர்களும் கைதி செய்யப்பட்டார்கள். டென்மார்க்கில் ராணுவச் சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. ஆறு டேனிஷ் யுத்தக் கப்பல்கள் ஸ்வீடனுக்குத் தப்பி ஓடிவிட்டன. 35 கப்பல்கள் தற்கொலை செய்துகொண்டன. ஒரு ஜெர்மன் சஞ்சாரியும், மற்ற 5 ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் கோபன்ஹேகனுக்கு வந்துவிட்டன.

வி வி வி வி வி

பிரான்ஸ். நேசதேசப் படையெடுப்பு ஏற்பட்டவுடன் ஆயுதம் பூண்ட 2½ லக்ஷம் பிரெஞ்சுக்காரர்கள் நேசக்கக்ஷியில் சேர்ந்துவிடத் தயாராகயிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பு பிரான்ஸிலுள்ள ஜெர்மன் சேனாதிபதியும், விஷி அரசாங்கமும் வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையின் பிரகாரம் பிரான்ஸ் பூராவிலும் நேசதேச விமானங்கள் ஏராளமான ஆயுதக் குவியல்களைப் போட்டிருக்கின்றவென்று தெரிய வருகிறது. லையான்ஸில் ஒரு சச்சரவு நடந்தபொழுது ஆயுதக் குவியல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. ஆயுதங்கள் ஒப்புவிக்காதவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படுமென்று பிரெஞ்சு ஸ்வதந்திர மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. நைஸிலும், கானஸ்ஸிலும் ஜெர்மன் துருப்புகள் ஆக்கிரமித்து விட்டார்கள். பாரிஸில் அரண்கள் அமைக்கப்படுகிறது.

வி வி வி வி வி

ஹிம்லரின் ஆக்ஷி. கார்கோவ் விழுந்த சிறிது நேரத்திற்குப்பின், ரகசியப் போலீஸாரின் தலைவரான ஹிம்லர் உள்நாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டுவிட்டார். உள்நாட்டில் ஏற்படும் கலவரத்தைத் தடுக்கும் உத்தேசத்துடன்போலிருக்கிறது. பிரசாரம் பிரயோஜனப்படாதபொழுது பலாத்காரம் பிரயோகிக்கப்படுகிறது. ஐரோப்பிய கொலையாளி என்று காரணப்பெயர் கொண்ட ஹிம்லர் இன்றைய ஐரோப்பாவில் மிகவும் கொடூரமானவன். இந்த நியமனம் நாஸிகளின் சமீப காலத்திய கொள்கைகளுக்கு அனுகுணமானது. பூரா நிர்வாகமும் ஹிம்லரின் ரகசியப் போலீஸாரின் ஆளுகைக்குட்படவேண்டியதுதான், அதன் கொள்கை. ஹிம்லரின் துருப்புகள் ஏற்கனவே தொழில், நியாய இலாகா, பொதுஜன சுகாதாரம், தொழில் முறைகள், ராஜதந்திர இலாகா முதலிய ஸ்தாபனங்களை அடக்கி ஆண்டுவருகின்றன. சிறந்த S. S. படைகளும், ஆயுதம் பூண்ட வாப்பன் துருப்புகளும் உள்நாட்டுக் கலகம் உண்டாகும்பொழுது உபயோகப்படக்கூடியவைகள். ஹிட்லர் பத்திரிகைகளை அடக்கியாண்டுவருகிறான். ஒலி பரப்பு நிலயத்தின் வாயைப் பூட்டிவிட்டான். ஹிம்லரை உள்நாட்டு இலாகா மந்திரியாக நியமனம் செய்தபின் துருப்புகளின் சேஷ்டைகள் எல்லா பாகங்களுக்கும் பரவிவிடும். ஜெர்மன் மக்களுக்கு இரண்டு மார்க்கங்கள்தானிருக்கின்றன. ஒன்று நேசதேசத்தார்களின் மூவகைப்பட்ட படைகளின் தாக்குதலைச் சகிக்கவேண்டும், அல்லது ஹிட்லரின் துருப்புகளின் குண்டுவீச்சுக்கும், தடியடிக்கும் உட்பட்டு பலமான சிக்ஷையனுபவிக்க வேண்டும்.

வி வி வி வி வி

பேர்லின். ஆகஸ்டு 23, 25 தேதிகளில் பெர்லினை இதுவரையில் நடைபெறுதபடி மிகவும் பலமாக நேசதேச விமானங்கள் தாக்கின. 23-ம் தேதியன்று சண்டை விமானங்களின் துணைகொண்ட 700 வெடி விமானங்கள் 2,000 டன்கள் எடைமானமுள்ள குண்டுகளைப் பொழிந்தன. 25-ம் தேதி நடைபெற்ற விமானத்தாக்குதலுக்குப்பின் பெர்லினிலிருந்த ஆபீஸ்களும், கடைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிட்டன. பெர்லின் பாழாகிவிட்டது. பெர்லின் ஜெர்மனியின் தலைநகரம், தொழிற்சாலைகளுக்கு மத்தியப்பிரதேசம், ஆக்கிரமிப்பு ஐரோப்பிய நாடுகளுக்கும் அதுதான் தலைமை காரியாலயம். பெர்லின் வீழ்ச்சியிலிருந்து இதர நாடுகளின் மனோபாவத்தில் ஏற்படக்கூடிய மாறுதல்கள் அபாரமானவை.

வி வி வி வி வி

இதாலி. இப்பொழுது நடைபெற்றுவரும் இதாலிக்காக யுத்தமானது 1940-ம் வருஷத்தில் பிரிடனுக்காக நடைபெற்ற யுத்தத்தின் மாறுபாடாகும். 1940ம் வருஷத்தில் தாக்குதலுக்குட்பட்ட நாட்டைவிட

ஜெர்மனிக்கு விமான நஷ்டம் அதிகமாகயிருந்தது. இப்பொழுது இதாலியிலிருக்கும் ஜெர்மனிக்கும் நேசநாடுகளைவிட அதிக விமான நஷ்டம் ஏற்பட்டுவருகிறது. கெஸ்ஸல் ரிங்கில் நடைபெற்ற மூன்று நாள் யுத்தத்தில் ஜெர்மானியர்களுக்கு 100 விமானங்கள் நஷ்டமாகி விட்டன. 12 விமானங்கள் பழுதுபட்டுவிட்டன. நேசதேசங்களுக்கு 35 விமானங்கள்தான் நஷ்டம். மேற்குக்கடற்கரையிலுள்ள நேபிள்ஸுக்கும், பாக்கியாவுக்கும் மத்தியிலுள்ள ஒவ்வொரு இருப்புப்பாதையும் நொருங்கி விட்டது. ஆகையால் தெற்கே யிருக்கும் ஜெர்மன் துருப்புகள் 300 மைல்கள் சிரமப்பட்டுச் சென்று போ நதிக்கரையில் குவிந்து கொண்டிருக்கும் ஜெர்மன் துருப்புகளுடன் சேர்ந்து கொள்ளவேண்டும். இதாலியிலுள்ள இருப்புப்பாதைகளை நேசதேச விமானங்கள் திட்டப்படி தாக்கிவருகின்றன. முதலில் பாக்கியாவிலுள்ள ஜங்ஷன். அதற்குபின் நேபிள்ஸுக்கும், பாக்கியாவுக்கும் மத்தியிலுள்ள பெனவெண்டோ, பிறகு ஆவெர்ஸா, விலா, லிடர்னே, கான்ஸெலோ, டோரா அனன் சியாடா.

வி வி வி வி வி

பிரெஞ்சு தேசீய விடுதலைக்கமிட்டி. வெகு நாட்களுக்குப்பின் பிரிடிஷ், அமெரிக்க அரசாங்கங்கள் இந்தக் கமிட்டியை அங்கிகாரம் செய்துவிட்டார்கள். ஆகிலும், ஒரு குறிப்பிடப்பட்ட அளவுக்குத்தான் அந்த அங்கிகாரம் பொருந்தும். அந்தக்கமிட்டி பிரான்ஸ் அல்லது அதன் சாம்ராஜ்யத்தின் நிர்வாகமாக மதிக்கப்படமாட்டாது. நேசதேசத்தாரின் யுத்த முயற்சிகளுக்கு ஒத்தாசை செய்யும் நிர்வாகக் கமிட்டியென்றுதான் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரிடன், அமெரிக்காவுக்கும், பிரான்ஸுக்கும் உள்ள சம்பந்தங்களில் சிரமமாகயிருந்த ஒரு அத்யாயம் இப்பொழுது முடிவடைந்து விட்டது. டைம்ஸ் பத்திரிகையில் சொல்லியிருக்கிறபடி விஷி நிர்வாகத்தைத் துறத்தி அழித்துவிட இது முற்போக்கான நடவடிக்கையாகும்.

வி வி வி வி வி

குத்தகைக்கடன் திட்டம். 1943-ம் வருஷம் ஜுலை மாதம் முடிய அனுப்பப்பட்ட தளவாடங்கள் 14,000 மிலியன் டாலர்கள் பொருமான முள்ளவை. அவைகளில் செம்பாதி வெடிமருந்து சாமான்கள். இந்தக் கணக்குகளை வெளியிடும் பொழுது அமெரிக்க காங்கிரஸுக்கு ஜனாதிபதி பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"அமெரிக்கா யுத்தக் கடனைத் திரும்பிக் கேட்கவில்லை. வெற்றியும், நிரந்தரமான சமாதானம் உண்டாக வேண்டுமென்பதுதான் அதன் லக்ஷியங்கள். எதிரி நிபந்தனையற்ற சரணகதி செய்யும் வரையில் அவனைத் தாக்குவோம்."

வி வி வி வி வி

தென்கிழக்கு ஆசியாவின் சேனாதிபத்தியம். ஜப்பானை இந்தியாவிலிருந்தும், ஸிலோனிலிருந்தும் தாக்குவதற்காக தென்கிழக்கு ஆசியாவுக்கு தனிப்பட்ட சேனாதிபதியை நியமனம் செய்திருப்பது கியுபெக் மகாநாட்டின் முதல் நடவடிக்கையாகும். உதவி கடற்தளபதியும், லெப்டினெண்ட் ஜெனரலும், விமானப் படையின் உதவி மார்ஷலும், வாக்ஸோ, ப்ருனிவால், டிப்பி முதலிய இடங்களில் கம்மாண்டோ விமானப்படைகள் மூலம் தாக்குதல் செய்ததுமான லூயி மௌண்ட் பிடேன் பிரபு சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதன் நோக்கங்கள் ஸ்பஷ்டமானவை. இந்தியாவிலிருந்து, பர்மாவுக்குள் முன்னேறுவதில், பூப்பிரதேச அமைப்பினாலும், சீதோஷ்ண ஸ்திதியினாலும், போக்குவரவு மார்க்கங்களினாலும், அநேக சிரமங்கள் ஏற்படக்கூடும். தென்மேற்கு பஸிபிக் வழியாகச் சென்றாலும் அங்கேயும் ஆயிரக்கணக்கான தீவுகளைத் தாண்டிச் செல்லவேண்டியிருக்கிறது. அவைகளில் எதிரி ஒளிந்துகொண்டுவிடுவான். சிங்கப்பூரிலிருந்து ஜாவாவதிக்குப்போவதற்கும் குறைந்த பக்ஷம் ஆயிரம் மைல்கள் தாண்டிச் செல்லவேண்டும். ரெங்கூன் வழியாக தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் முன்னேறுவதுதான் சுலமான மார்க்கம். மௌண்ட் பிடேன் பிரபு சொல்லுகிறபடி பிரிடிஷ் 1-வது படைக்கும், 8-ம் படைக்கும் வேறு அலுவல் கிடையாது. ஒருக்கால் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் ஏற்படும்பொழுது அவர்கள் பங்கெடுத்துக்கொள்ளலாம். அவர்கள் போர் புரிய துடித்துக்கொண்டிருக்கிறார்கள். மத்தியதரைக்கடலில் கிடைத்த வெற்றிகளுக்குப் பின் பிரிடிஷ் கடற்படையின் ஒரு பாகம் வேலையில்லாமலிருக்கிறது. ஆகையால் தனிப்பட்ட சேனைத்தலைவரை நியமித்து மகத்தான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது அவசியமாகும். ஒரு வருஷத்துக்குமுன் இந்தியா தற்காப்புச் செய்துவந்தது. இப்பொழுது அது முன்னேறித் தாக்கப்போகிறது. மகத்தான நிகழ்ச்சிகள் சம்பவிக்கப்போகும் தருணம் கிட்டிவிட்டது.

இந்திய விமானிகள் பயிற்சி நிலயம். மதராஸ் சர்வ கலாசாலையில் விமானப் பயிற்சி, மோட்டார் இஞ்ஜினியர் பயிற்சி என்ற இரண்டு புதிய போதனைகளை அமைத்திருப்பது முற்போக்கான நடவடிக்கையாகும். ஆகஸ்டு 26-ம் தேதி முதல் முதலாக விமானப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்தபொழுது மதராஸ் கவர்னர் அவர்கள் பின்வருமாறு மாணுக்கர்களுக்கு உறுதிகூறினர். யுத்தத்துக்குப்பின் அவர்களுடைய சேவை தேவையில்லையென்று நினைக்கவேண்டாமென்று சொன்னர். இந்தியாவில் நிரந்தரமாக இந்திய விமானப்படை இருந்துவரும். இந்தியாவில் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகம் வெகு தூரத்திலிருப்பதால் பொதுஜன சேவைக்காக விமானப்படை தேவைப்படும். அதில் விமானங்களின் பயிற்சியில் அபிருசியுள்ளவர்களுக்குத் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்துவிடும். சென்ற சில மாதங்களில் கட்டப்பட்டிருக்கும் விமானத் தளங்களை பொதுஜனங்களின் சேவைகளுக்காகச் செல்லும் விமானங்களுக்கு தளமாகவும் உபயோகப்படுத்தலாம். இந்தியப் படையானது நவீன இந்தியாவினுடையவும் வருங்காலத்திய இந்தியாவினுடையவும் அடையாளமாகும். "ஜாதி மத பேதமில்லாமல் இந்தியாவின் ஐக்ய பத்யத்தைக் காட்டக்கூடிய படை இதுதான்" என்று ஸர் கை காராட் என்பவர் சொன்னர்.

வி வி வி வி வி

புதுக்கோட்டையில் யுத்த சம்பந்தமான சட்ட திட்டங்கள். (1) 1943-ம் வருஷத்திய ஜவுளித் துணி விற்பனை அனுமதி உத்தரவின்படி புதுக்கோட்டை ா-தர்பார் அவர்கள் நெசவாளைக்காரர்கள், அல்லது தனிப்பட்டவர்கள், அல்லது ஒரு குடும்பத்தார்கள் உற்பத்தி செய்யக்கூடிய துணிகளைத் தவிர மற்றெவரும் லைசென்ஸின் ஷரத்துக்குட்படாமல் துணிகளை விற்கக்கூடாதென்றும், விற்பனைக்காக துணிகளைச் சேமித்து வைக்கக்கூடாதென்றும் தடை செய்யப்பட்டிருக்கிறர்கள்.

(2) புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய வெல்லம் வகையரா அடக்குமுறை உத்தரவின் பிரகாரம் ஸமஸ்தானத்திய உத்தியோகப்பற்றற்ற கண்ட்ரோலரும், இந்திய அரசாங்கத்தின் வெல்லம் வகையரா உற்பத்தி கண்ட்ரோலருமான உத்தியோகஸ்தர்கள், வெல்லம் வகையராவின் விலைவாசியையும், அளவையும், ரகங்களையும், தரங்களையும், ஸப்ளை அளவையும் நிர்த்தாரணம் செய்வார். கரும்பு வியாபாரத்தையும், வெல்லம் வகையரா உற்பத்தியையும் அவர் தீர்மானம் செய்வார்.

கனடா பார்லிமெண்டில் ரூஸ்வெல்ட் பிரசங்கம்.

சென்ற புதன்கிழமைக்கு 5 வருஷங்களுக்கு முன்பு நான் கனடாவுக்குச் சர்வகலாசாலைப் பட்டமொன்றைப் பெறுவதற்காக வந்தேன். அதாவது போலந்து படையெடுப்புக்கு ஒரு வருஷத்திற்கு முன்பும் பெர்ல் துறைமுகத் தாக்குதலுக்கு 3 வருஷங்களுக்கு முன்பும் நான் கனடா வந்தேன். அப்போது நான் அமெரிக்காவிலுள்ள நாம் கடலுக்கு அப்பால் நடைபெறும் விவாதச் சுழலால் பாதிக்கப்படாதவர்களாக இல்லையென்று தெரிவித்தேன். கடலுக்கு அப்பாலுள்ள ஒவ்வொரு பிரசார ஆபீஸூம், ஒவ்வொரு ராணுவ நிர்வாகி ஆபீஸூம் அமெரிக்காவிலுள்ள நம்மை மதித்துக் காரியம் செய்யவேண்டிய நிலைக்கு வந்துவிட்டதாக நான் அப்போது கூறினேன். நாம் இஷ்டப்பட்டாலும் சரி, இஷ்டப்படாவிட்டாலும் சரி, நமது ஏராளமான மூலபலத்தினுலும், நமது வியாபார பலத்தினுலும், நமது ஆட்களின் பலத்தினுலும் உலக சமாதானத்திற்கு நாம் முக்கிய சக்தியாகிவிட்டோம் என்று தெரிவித்தோம். இந்த யுத்தத்தை நாமாக மேற்கொள்ளவில்லை. 'நாம்' என்ற பதத்தின் மூலம் நேசநாடுகளது கோஷ்டியில் சேர்ந்த ஒவ்வொருவரையும் சேர்த்தே குறிப்பிடுகின்றேன்.

தங்களுடைய அக்கம் பக்கத்தில் வாழுகின்றவர்களை எவ்வளவு தூரம் கொன்று அழிக்க முடியுமோ, அவ்வளவு தூரம் தங்களது ஒழுக்கத்தரம் உயர்ந்திருப்பதாகக் கருதுகின்ற அதிக்கிரமமான ஆக்கிரமிப்புக்காரர்களே இந்த யுத்தத்தை நம்மீது பலாத்காரமான முறையில் சுமத்தியிருக்கிறர்கள்.

சந்தோஷகரமான, சமாதான காலத்தில் நமது ஆண், பெண்பாலர்கள் சேர்ந்து வேலை செய்து விளையாடியது போலவே இந்த யுத்தத்தில் கனடியரும் அமெரிக்கருமாகிய நமது மக்கள் தோளோடுதோள் நின்று போராடி வருகிறர்கள்.

இன்று நாம் ஸிஸிலியில் பிரிடிஷ், கனடியா, அமெரிக்க வீரர்கள் போராடி அடைந்த மகத்தான வெற்றியைக் கொண்டாடுகிறோம். ஒரு வருஷத்திற்கு முன்பு, ஜப்பான் பசிபிக்

மகா சமுத்திரத்தில் நமது கரைக்கருகிலுள்ள அலூஷியன் தீவுகளில் பலவற்றை வசப்படுத்திக் கொண்டது. அது அமெரிக்கா கண்டத்தின்மீது படையெடுப்பதுபற்றி பெரிய ஆர்ப்பாட்டம் செய்தது.

சில அமெரிக்கரும், சில கனடியரும் தங்களது சர்க்கார்கள் அட்லாண்டிக் மத்தியதரைக் கடற்பிரதேசப் போர்களிலிருந்து வாபீஸாக வேண்டுமென்றும் வட பசிபிக்கிலுள்ள மலைப் பாங்கான சிறிய தீவுகள் சிலவற்றிலிருந்து ஜப்பானியரைத் துறத்துவதில் நமது பெரிய கூட்டு பலமனைத்தையும் செலவிட வேண்டுமென்றும் விரும்பினர், என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தற்காலம் நம்முள் உள்ள விவேகிகள் அட்லாண்டிக்கிலும், மத்திய தரைக்கடலிலும், சீனக் கடலிலும் தென்மேற்கு பசிபிக்கிலும் அதிகமாக உதவிசெய்து தங்களது முயற்சியைப் பராமரித்து வருவதுடன் வடமேற்கு பஸிபிக்கில் சிறிய யுத்தத்தை நடத்தி வருகிறார்கள்.

அட்டு, கிஸ்கா தீவிலிருந்து எல்லா ஜப்பானியரையும் ஒழிப்பதற்கு ஜப்பானியரே நமக்கு உதவி செய்கிறார்கள். ஜப்பானியர் ஒரு போதும் சரணடையமாட்டார்களென்று நமக்குச் சொல்லிவரப்பட்டிருக்கிறது. அவர்கள் சரணடைந்தால் எவ்வளவு திருப்தி ஏற்படுமோ அவ்வளவ திருப்தி அவர்கள் ஒரே ஓட்டமாகப் பின் வாங்குவதாலும் நமக்கு ஏற்படுகிறது. (நகைப்பும், கரகோஷமும்).

கியூபெக் முடிவுகள்.

கியூபெக்கில் சென்ற சில தினங்களில் 3 தேசப்படை நிர்வாகிகளும், ஒரே மேஜையைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு நண்பர்களைப்போலவும், பங்காளிகளைப் போலவும் ஒரே—குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்போல என்றுகூடச் சொல்லுவேன்—விவாதித்தார்கள். (பலத்த கரகோஷம்). இந்த யுத்தத்தில் எமது பொதுக் காரியங்களைப்பற்றி நிர்மாண முறையில் பேசினோம். குறுகிய காலத்திற்குள் வெற்றியை அடையத் திடச்சித்தங் கொண்டிருப்பதுபற்றியும், நமது பெரிய தோழர்களோடு முக்கியாம்சங்களில் ஒத்துழைப்பதுபற்றியும் பேசினோம்.

முடிவுகளை அச்சு நாடுகளுக்கு போர் மூலம் தெரிவிப்போம்.

நாங்கள் சமரஸமான முறையில் சில திட்டமான முடிவுகளைச் செய்தோம். இந்த முடிவுகள் யாதென்பதைத் தெரிவிக்க :எனக்கு ஸ்வதந்திரமில்லை. ஆனால் கியூபெக் மகாநாட்டின் ரகசிய தகவல்களைக் கா்லாகாலத்தில் ஜெர்மனிக்கும், இதாலிக்கும், ஜப்பானுக்கும் தெரிவிப்போம். (பலத்த கரகோஷம்). நமது விரோதிகளுக்கு அவர்களது மமதை பிடித்த மனம் புரிந்துகொள்ளக்கூடிய தென்று தோன்றும் ஒரே வழியில் இத்தகவலைத் தெரிவிப்போம். அதாவது போர் நடவடிகை மூலம் தெரிவிப்போம். (கரகோஷம்).

கியூபெக் மகாநாட்டில், அந்தராத்மா சொல்லுகிறபடி நடப்பதாகச் சொல்லிவரும் நாஸித் தலைவரின் (ஹிட்லரின்) ஆத்மா பிரசன்னமாக இருந்திருக்க வேண்டுமென்று நான் சில சமயங்களில் விரும்பினேன். ஹிட்லர் கியூபெக் மகாநாட்டில் நேரில் பிரசன்னமாக இல்லாததுபற்றி நான் முற்றிலும் சந்தோஷிக்கிறேன். (நகைப்பும், கரகோஷமும்). அவரும், அவரது ஜெனரல்களும் நமது பிளான்களை அறிந்திருந்தால் வெறும் தீரத்தைவிட விவேகமாக நடந்துகொள்ளுவதே சிறந்ததென்பதை உணர்ந்து பின்னால் சரணாகதியடைவதை விடத் தற்போது சரணாகதியடைவதே தஙகளுக்கு அதிக லாபகரமாக இருக்குமென்பதை அறிந்திருப்பார்கள்.

நாஸிகளது முறை.

நாஸிகளின் விசேஷ அம்சம் என்னவெனில் பிறரது உரிமைகளையும், தன்மைகளையும் உணர முடியாதிருப்பதும் அதனால் அவற்றை மதிக்கமுடியாதிருப்பதும்தான்.

நாஸிகள் தங்களது அக்கம்பக்கத்தில் வாழுகிறவர்களை முதலில் பொய்யால் ஏமாற்றி, பிறகு துரோகமான முறையில் தாக்கி, வீழ்த்தி, அவர்களை மிதித்து, அவர்களை சிறைக்கோ அன்றி அடிமைப்படுத்துகிறார்கள். இதுதான் நாஸிகள் கையாளும் முறையாகும். ஜப்பானிலுள்ள வெறிபிடித்த ராணுவ அதிகாரிகளும் இதே முறையைத்தான் கையாளுகிறார்கள்.

நமது விரோதிகள் இயற்கையாகவே ஜீவகாருண்ய மற்றவர்கள். இதனால் அவர்கள் கண்ணியமும், விவேகமும் வாய்ந்தவர்கள். எப்படி ஒருங்கு சேர்ந்து சௌஜன்யமாக வாழ்கிறார்கள் என்பதை அறிய முடியவில்லை.

இதனால்தான் அவர்கள் கியூபெக் மகாநாட்டின் நோக்கஙகளையும், இதன் முடிவுகளையும் திருத்திக் கூறப் பெரு முயற்சி செய்கிறார்கள். அவர்கள், இன்னும் நேசநாட்டினரைப் பிரித்து ஜயிக்க முயலுகின்றனர். நேசநாட்டினரோவெனில் பிரிந்துபோகவும் ஜயிக்கப்

படுவதற்குட்படவும் மறுக்கின்றனர். மானிடரின் கண்ணியமான நடத்தையின் மூலதத்துவங்களை அங்கீகரிக்கக் கொள்ளைக்கார கோஷ்டி மறப்பதால் நாம் நமது ஊக்கத்தையும், மூலாதாரங்களையும் நமது சிறுவர் சிறுமிகள் உயிரையும் செலவிட்டுத் தியாகஞ் செய்து வருகிறோம்.

இந்தக் கொள்ளைக் கூட்டத்தைக் குலைத்து அடியோடு ஒழிப்பதற்காக நாம் சகல சக்தியையும் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இம்முறை இவர்களுக்கு நல்ல பாடம் கற்பித்து அவர்களை ஒழிப்பதென்று தீர்மானித்திருக்கிறோம்.

சமாதானம் நிச்சயமாய் நிலவும்.

இம்முறை அவர்களுக்கு நாம் கற்பிக்கும் படிப்பினால், அங்குள்ள ஒவ்வொருவரும் முடிவாய் நம் பலத்தை தெரிந்துகொள்வார்கள் என்று நாம் திடமாய் நம்புகிறோம்.

நேசநாட்டிலுள்ள ஒவ்வொருவரும் உண்மையான நிரந்தரமான சமாதானத்தில் நம்பிக்கைகொண்டிருக்கின்றனர். இதற்காக நாம் செய்யும் தியாகம் நியாயமானதென்பதையும் நம்புகின்றனர். இந்த லக்ஷியத்தை அடையமுடியுமென்று நம்பிக்கையில் நாங்கள் ஒரு மனத்தினராக இருக்கிறோம். கியூபெக்கில் யுத்தத்திற்குப்பின் ஏற்படவேண்டிய உலக ஏற்பாட்டைப் பற்றி வெகுவாகச் சம்பாஷணை நடந்ததென்பதில் ரகசியமெதுவுமில்லை.

இதுபற்றி ஏககாலத்தில் நூற்றுக்கணக்கான நகரங்களிலும், லக்ஷக்கணக்கான மக்களிடையிலும் விவாதம் நடந்திருக்கிறது.

பழைய நற்காலத்திற்குத் திரும்பிச் செல்லவேண்டுமென்ற விருப்பமில்லை. நாம் அதைவிட நல்ல நாளைப் புதிதாக ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்று நம்புகிறேன்.

இந்த யுத்தத்தில் பூரண வெற்றி ஏற்பட்டால், அது உலகிற்குப் பெரிய சந்தர்ப்பங்களை அளிக்கும். ஏனெனில், யுத்த வெற்றியே ஒருமித்த முயற்சியால் எதையும் சாதிக்க முடியுமென்பதை நிரூபிக்கக்கூடினவாக இருக்கின்றன.

நமக்கு இதுகாறுமிருந்ததைவிடத் தேவை அதிகக் குறைவாக இருக்கும்படி செய்ய முடியும். ஒருமித்த செயல்களால் கொள்ளைக்காரர்களைத் துரத்தி அவர்களை எப்போதும் அடக்கி வைப்பதால் நாம், பயம் யுத்தம் இவற்றிலிருந்து விடுதலையைப்பெற முடியும்.

4 ஸ்வதந்திரங்களும், அட்லாண்டிக் சாசனமும் அர்த்தமற்ற பேச்சு என்று கூச்சலிட்டு வருகிறவர்களிடம் எனக்கு நிரந்தரமான கோபமேற்படுகிறது. 150 வருஷங்களுக்கு முன்பிருந்தால் இவர்கள் ஸ்வதந்திர சாசனத்தை வெறும் பேச்சு என்று கூறியிருப்பார்கள். இவர்கள் 1,000 வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்திருந்தால் மாக்னகார்டா என்ற பிரிடிஷ் ஸ்வதந்திர சாசனத்தைப்பற்றி எள்ளி நகையாடியிருப்பார்கள். நாம் நமது மனக்கோட்டையை ஒரே நாளில் அடையமுடியாது. நான் நாசகாரியாக இருப்பதைவிட நிர்மாணிகனாகவே இருப்பேன். வாழ்க்கை முறை அழியாமல் வளர்ந்து வருகிறதென்ற நம்பிக்கையுடனிருந்து வருவேன். நமது விரோதிகளைப்போன்ற நாசகாரிகள் மானிட தர்மத்தை ஏற்பதற்கு வெகுகாலமாகும். ஆனால், அவர்கள் எல்லோரும் "உன்னைப்போல உன் அயலாரையும் நேசி" என்பதை ஞாபகத்தில் வைக்கும்படியான நாள் ஏற்படுவது நிச்சயம்.

இந்தியத் துருப்புகளுக்கு மேன்மை தங்கிய வைஸிராய் அவர்களின் பிரசங்கம்.

இச்சமயத்தில் நீங்கள் செய்யவேண்டிய கடமை தெளிவானது. ஒவ்வொருவரும் அவருடைய அலுவலை சிறந்த முறையில் செய்துவரவேண்டும். அதன் மூலமாக ஒவ்வொரு படையின் யுத்தத் திறமையை அதிகரிப்பதற்கும், படைகளுக்குள் ஒத்துழைப்பு பலமாக ஏற்படுவதற்கும் நீங்கள் முயற்சி செய்யவேண்டும். சாரமற்ற வேலைகளிலீடுபடாதீர்கள்.

யுத்தப் போக்கு மாறிவிட்டது. எங்கு பார்த்தாலும் நிலைமை நமக்கு சாதகமாக மாறிவிட்டது. இப்பொழுதுதான் நம்முடைய முயற்சிகளை இரட்டிக்கவேண்டும். நமக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுது பலமான யுத்தத்தை நடத்தி வெற்றிபெறவேண்டும்.

ஆயுதங்களின் பயிற்சியிலும், தேகாப்பியாசத்திலும், யுத்த தந்திர பயிற்சியிலும் நீங்கள் மேன்மையை அடையவேண்டும். உங்களுடைய திறமைக்குப் பரிக்ஷை காலமேற்படும்பொழுது உங்களுடைய முயற்சி திருவினையாக்கும். இது நிச்சயம் என்று நம்புங்கள். எந்த பிரதேசத்திற்கு நீங்கள் சென்றாலும், எவ்வகைப்பட்ட அலுவல்களை நீங்கள் செய்யவேண்டி ஏற்பட்டாலும், உங்கள் எல்லோருக்கும் வெற்றி கிடைக்கவேண்டுமென்று நான் ஆசி கூறுகிறேன்.

லூயி மௌண்ட்பேடன் பிரபு.

வாக்ஸோ, ப்ரூனிவால், ஸெயிண்ட் நாஸேர், டிப்பி முதலிய நடவடிக்கைகளிலீடுபட்டவரும், ஹிட்லரின் கடற்கரை காவல் படைகளுக்கு இராத் தூக்கமில்லாமல் செய்தவருமான பிரிடிவ்ஷ் கம்மாண்டோ படையைச் சேர்ந்தவருமான மௌண்ட் பேடன் தென் கிழக்கு ஆசியாவிலுள்ள நேசதேசப்படைகளின் தளகர்த்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். கடற்படையைச் சேர்ந்த ஒருவரை யுத்த அரங்கத்தில் உயர்தர சேனாதிபதியாக நியமனம் செய்தது இதுதான் முதல் தடவையாகும். மற்ற இருவகைப்பட்ட படைகளில் லூயி மௌண்ட் பேடன் பிரபுவுக்கு கௌரவ ஸ்தானங்களிருந்த போதிலும் அவர் கடற்படையைச் சேர்ந்த முதல்தரமான உத்தியோகஸ்தர்தான். அவர் கடற்படையைச் சேர்ந்தவர். அவரும், கடற்படையும் இணை பிரியாதவை. அவர் உயர்தர மாலுமி. அவருடைய முன்னோர்களும் கப்பற் படையில் கியாதி பெற்றவர்கள். ஆகிலும் பலவகைப்பட்ட படைகளின் ஒன்றுபட்ட யுத்தத்தை நடத்துவதில் புத்தி கூர்மையுள்ளவர். நூதனமான நடவடிக்கை ஆரம்பிக்க தனக்குக் கிடைக்கக்கூடிய எந்த சந்தர்ப்பத்தையும் அவர் நழுவ விடுவதில்லை. பிரிடிவ்ஷ் கடற்படையின் வெயர்லஸ் போக்குவரத்து முறைகளை பரிஷ்காரமாக அமைத்த கியாதி இவருடையது.

லூயி பிரபு 1900-ம் வருஷத்தில் பிறந்தார். விக்டோரியா மகாராணியின் பேரப்பிள்ளை. பாட்டன் வர்க்கத்தைச் சேர்ந்த ஜெர்மன் ராஜ குமாரரான லூயிக்கும், விக்டோரியா ராஜ குமாரத்திக்கும் ஜனித்தவர். 1868-ம் வருஷம் முதல் இவர் தகப்பனார் பிரிடனில் குடியேறி பிரிடிவ்ஷ் மக்களில் ஒருவராக ஆனார். பிரிடிவ்ஷ் கடற்படையில் அநேக வருஷங்கள் வேலை பார்த்தார். முதல் உலக யுத்தம் நடைபெற்றபொழுது அவர் கடற்படையில் முதல் கடற் பிரபு உத்தியோகத்தை வகித்தார். அவருடைய 12-வது வயதில் அவர் கப்பலில் வேலை கற்றுக்கொள்ளச் சென்றார். நான்கு வருஷங்களுக்குப்பின் அவர் முதல் உலக யுத்தத்தில் ஈடுபட்டார். 1916-ம் வருஷத்தில் கடற் தளபதி பீயட்டியின் "லையன்" என்ற துவஜம் தாங்கியக் கப்பலில் மிட்ஷிப்மான் வேலையிலமர்ந்து கொண்டார். அதுமுதல் தான் அவருடைய திறமைவாய்ந்த தொண்டு ஆரம்பித்தது. அவருக்கு மேன்மேலும் அநேக பதவிகள் கிடைத்ததுடன் அவருடைய ஜீவிய சரித்திரம் முடிந்துவிடவில்லை. ஜன சமூகத்திலும் அவர் உல்லாஸமுள்ள புருஷர்.

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானபொழுது லூயி பிரபு போர் புரிய ஆரம்பித்தார். அவர் ஐந்தாவது நாசகாரி கடற்படையின் தலைவராகயிருந்தார். மூன்று மாதங்களுக்குப் பின் அவருடைய துவஜம் தாங்கிய கப்பலான கெல்லி என்னும் புதிய நாசகாரிக் கப்பல் வடக்குக் கடலில் ஒரு சுரங்க வெடியின் பேரில் மோதி பழுதடைந்தது. லூயி பிரபு அதைப்பழுது பார்க்கும் கப்பல் தளத்துக்கு பத்திரமாகக் கொண்டுபோனார். அடுத்த வேனிற் காலத்தில் நார்வே கடல்களுக்கு அப்பால், நாலு நாட்கள் வரையில் குண்டு வீச்சுக்குட்பட்ட இந்தக் கப்பலில் ஒரு மீன் வெடி விழுந்தது. அப்பொழுதும் லூயி பிரபு அந்தக் கப்பலை துறைமுகத்துக்கு இட்டுக்கொண்டு போனார். 1941-ம் வருஷம் மேமீ 23-ம் தேதியன்று கிரீட் யுத்தத்தில் கெல்லி என்ற அந்தக் கப்பல் மூழ்கிற்று. 1941-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இல்லஸ்ட்ரியஸ் என்ற விமானம் தாங்கிக் கப்பலின் கம்மாண்டராக அவர் நியமிக்கப்பட்டார். அந்தக் கப்பல் அப்பொழுது அமெரிக்கத் துறைமுகத்தில் பழுதுபார்க்கப் பட்டு வந்தது. ஆகிலும், அவருடைய கடற்படை சேவை கூடிய சீக்கிரம் முடிவடைந்தது. இருவகைப்பட்ட படைகளின் ஒன்றுபட்ட நடவடிக்கைகளுக்கு அவர் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த ஹோதாவில் அவர் கம்மாண்டோ துருப்புகளின் ஏராளமான நடவடிக்கைகளை நடத்தியிருக்கிறார். மேலும் பிரிடனுடைய உயர்தரப்படைகளின் பிரயாசையிலும், கியாதியிலும், தியாகத்திலும் பங்கெடுத்துக்கொண்டிருக்கும் கடல் விமானப் படைகளையும் திறமையுடன் நடத்தியிருக்கிறார். ஆகையால், தரைப்படையிலும், விமானப்படையிலும், அவருக்கு கௌரவ ஸ்தானங்கள் வழங்கப்பட்டன. ஆகிலும், அவர் எப்பொழுதும் உதவி கடற் தளபதியின் உடுப்புகளைத்தான் போட்டுக்கொண்டிருப்பார். லபாடன் தீவுகளிலும், போலோலினிலும், வாக்ஸோ தீவுகளிலும், ஸெயிண்ட் நாஸரியிலும், டிப்பியிலும் நடந்த ஒன்றுபட்ட படைகளின் தாக்குதல்களை நடத்தியவரும் லூயி பிரபுதான்.

கம்மாண்டோ விமானப்படைகள் அநேக தடவைகளில் பிரான்ஸ், நார்வே, நெதர்லாந்து கடற்கரையிலும், இதாலியிலும், ஆபிரிக்காவிலும் குண்டுகளைப் பொழிந்திருக்கின்றன. ஆகிலும், அவைகள் வெளிவரவில்லை. பெரும்பாலும் அந்தத் தாக்குதல்களில் அவர்கள் சில ஜெர்மன் ஸோல்ஜர்களையும், ஆபீஸர்களையும் அழித்திருக்கிறார்கள். சிறிய நாஸி தற்காப்பு

முகாம்களை நாசம் செய்திருக்கிறார்கள். இருட்டில் அவர்களுடைய வேகம் பொருந்திய அபாரத் தீங்கிழைக்கக்கூடிய விமானத் தாக்குதலிலிருந்து நாஸிகளின் மனோ நிலைக்கு சோர்வு ஏற்பட்டதுமுண்டு. பிரிடிஷ் மக்களின் மனோ நிலைமையை ஒப்பிட்டுப்பார்த்தால் கம்மாண்டோப் படையின் தாக்குதல்கள் விசேஷமான பிரயோஜனமுள்ளவை. நாஸிகளின் மனோபாவம் நிலை குலைந்ததற்கும், ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள பொது மக்களிடம் நம்பிக்கையை உண்டுபண்ணுவதற்கும் கம்மாண்டோ தாக்குதல்கள் பயன்பட்டன. நாஸிகளின் கடற்கிரைப் பிரதேச தற்காப்புகளின் அமைப்பைப்பற்றி அவைகள் உபயோகமுள்ள தகவல்களைக் கொடுத்திருக்கின்றன. படையெடுப்பு ஏற்படும்பொழுது இந்தத் தகவல்கள் உபயோகமுள்ளதாகவிருக்கும். எல்லாவற்றையும்விட மற்ற நேசதேசத் துருப்புகளைவிட அதிகமாக, படையெடுப்பு தந்திரத்தில் கம்மாண்டோ படைகள் அனுபவம் வாய்ந்தவைகள்.

எல்லா மார்க்கங்களும், ஜெர்மனியைத் தாக்க உபயோகமுள்ளவை.

(பியரி ஹஸ்).

(நியூ யார்க்கிலுள்ள "யுத்தத்தில் ஈடுபட்ட உலகம்" என்ற பத்திரிகையின் சுருக்கம்).

மற்ற இரண்டு இடங்களுக்குச் செல்லுவதற்கும் ரஸ்தாக்களிருக்கின்றன. பெர்லினுக்குச் செல்லுவதற்கு முன்னதாகவே ஒரு இடத்தை நாம் அடைந்து விடுவோம். அதற்குப்பின் கூடிய சீக்கிரத்தில் மற்றொன்றும் நமது வசமாகிவிடும். ஐரோப்பாவிலும், தூரக்கிழக்கிலும் அச்சு நாடுகள் நிபந்தனையற்ற சரணாகதி செய்யவேண்டுமென்பதுதான் நேசதேசத்தாரின் தற்போதய திட்டமான லக்ஷியம்.

ஹிட்லரை நசுக்குவதற்கு குறைவான மார்க்கம் யாதென்றும், ஐரோப்பாவில் பிரவேசிப்பதற்கு எது சிறந்த வழியென்றும் நேசதேச ராணுவ நிபுணர்கள் ஆலோசித்து வருகிறார்கள்.

தேசப்படத்தைக் கவனித்துப் பார்த்து, ஏககாலத்தில் பல இடங்களில் பலமான தாக்குதல்கள் ஆரம்பமாகுமென்று ஜனாதிபதி ரூஸ்வெல்டு முன் கூட்டிச்சொல்லியிருப்பதையும் நாம் யோசித்துப்பார்த்தால் நேசதேசத்தார்கள் தாக்குதல் செய்வதற்கு ஐந்து மார்க்கங்களிருக்கின்றன என்பது தெளிவாகும்.

ஹிட்லரை பலமாகத் தாக்கி, அவனைத் தலையிலடிப்பதற்கு ஒன்று அல்லது பல மார்க்கங்களை நாம் தேர்ந்தெடுக்கலாம். அதே சமயத்தில் அவனுடைய சரீரத்தைத் தொளைக்கும் முறைகளையும் நாம் மற்ற பகுதிகளில் கையாளவேண்டும்.

படையெடுப்பு மூலம் தாக்குதல் நடைபெறும்பொழுது அச்சு நாடுகளின் நகரங்களையும், தற்காப்பு ஸ்தலங்களையும், ஆயிரக்கணக்கான டன்கள் எடைமானமுள்ள எரிவெடிகளையும் வெடிகுண்டுகளையும் பொழிந்து அவைகளைத் தீக்கிரையாக்கியும், நொருக்கியும்விடுமென்பதையும் உள்ளத்தில் இறுத்திவைக்கவேண்டும். இதேசமயத்தில் ஆக்கிரமிப்பு நாடுகளிலுள்ள ஆக்ரோஷமடைந்த ஜனங்கள் தங்களை ஹிம்சை செய்தவர்களை ஒழிக்கப் பலமாக கலவரம் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். இவ்விதமாக அச்சுநாட்டாரின் தற்காப்பு பலத்தை அவர்கள் பின்பக்கத்திலிருந்து சிதைத்துவிடுவார்கள்.

பலமான அரண்.

ஆகிலும், ஹிட்லரை இறுதியில் முறியடிப்பதற்கு பெர்லினுக்குச் செல்லுவதற்கு நேசதேசத்தார்கள் ஐந்து பெரிய மார்க்கங்கள் வழியாகத்தான் செல்லவேண்டும். எல்லா மார்க்கங்களையும் தாண்டி ஹிட்லர் பத்திரமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். இதுவரையில் மனிதர்கள் நிர்மாணம் செய்திராத நவீனமுறையில் அமைக்கப்பட்ட அரண்கள் அவனைப் பாதுகார்த்து வருகின்றன. மேலும் நாஸிகளிடமுள்ள பூரா பலத்தையும் படையெடுப்பு மூலம் ஏற்படும் தாக்குதல்களை எதிர்க்க அவர்கள் உபயோகிக்கக்கூடுமென்றும் நாம் எதிர்பார்க்கவேண்டும்.

இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டி பிரான்ஸிலும், ஹாலந்திலும் துருப்புக்களை இறக்கலாம். நார்வே வழியாகவும், ஸ்வீடன் வழியாகவும் சென்று அவனை அடிக்கலாம். ஒரே மூச்சாக இதாலி வழியாகச் சென்றும், அல்லது அச்சுநாடுகளின் பலஹீனமான அடி வயிறு போன்ற கிரீஸ், பால்கன் நாடுகள் மூலமாகச் சென்றும் அவனைத் தாக்கலாம். கடைசியாக, ருஷ்யாவிலிருந்து, ருஷ்யர்களுடன் ஒத்துழைத்தோ, அல்லது நேசதேசத்தார்கள் மட்டுமோ, பலமாகத் தாக்கி அவனை முறியடித்துவிடலாம்.

ஹிட்லரைத் தாக்க லாயக்குள்ள இந்த மார்க்கங்களெல்லாம் நன்ருய் தற்காப்பு செய்யப்பட்டிருக்கின்றன. ஆகிலும், ஒவ்வொன்றும் ஊடுருவிச் செல்லக்கூடியவை.

பிரெஞ்சுக் கடற்கரையிலும், நெதர்லாந்து கடற்கரையிலுமுள்ள பலமான அரண்களுக்குப் பின்னுல் அவனும், நாஸிகளும் பத்திரமாக இருக்கிருேமென்று ஹிட்லர் நினைத்திருக்கிருன்.

இந்த யுத்தத்தில் ஒன்றும் முடியாத காரியமில்லையென்றும் நவீன முறையில் அமைக்கப்பட்ட அரண்கள் உடைபடக்கூடியவையென்றும் வெளியாகிவிட்டது.

ஆகையால், மூவகைப்பட்ட படைகளின் தாக்குதல் ஏற்பட்டால் பிரிடிஷ் கால்வாயைத் தாண்டியிருக்கும் கடற்கரை தற்காப்புகள் நிலைத்துநிற்க முடியாது.

குறுக்கான வழி.

நெதர்லாந்திலும், பிரான்ஸிலும் படையெடுப்பு ஆரம்பிப்பதென்று நேசதேச ராணுவ அதிகாரிகள் முடிவு செய்யும் பக்ஷத்தில் இது லாபகரமாகயிருக்கும். ஏனெனில், இங்கிலீஷ் கால்வாய் சில இடங்களில் 20 மைல்கள்தான் அகலமாயிருப்பதால் ஸப்ளை தளங்களிலிருந்தும் விமான தளஙகளிலிருந்தும் அவைகள் சமீப தூரத்திலிருக்கின்றன. மேலும், லக்ஷியத்துக்கு சமீபதூரத்திலுள்ள கடல், தரை, விமானப்படைகளின் பூரா பலத்தையும் உபயோகிக்க வசதி ஏற்படும். இவ்விதமாக லக்ஷியத்துக்கு சிறிது தூரத்திலுள்ள மூவகைப்பட்ட படைகளின் ஒன்றுபட்ட தாக்குதல் அபரிமிதமாகவும், பலமாகவுமிருக்கும்.

கால்வாய் தாண்டி கடற்கரையோரமாக நெதர்லாந்திலிருந்து பிரான்ஸ் வரைக்கும் ஹிட்லர் கட்டியிருக்கும் தற்காப்பு அரண்களை நான் பார்வையிட்டிருக்கிறேன்.

ஏராளமான தற்காப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு இடையில் பலவகைப்பட்ட டாஙகிகளும், இதர யுத்த எதிர்ப்பு சாதனஙகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விதமான தற்காப்புகளுள்ள பிராந்தியம் 10 அல்லது 30 மைல்கள் குறுக்களவில் பரவியிருக்கிறது. படையெடுப்புப் படைகளின் பலத்தை முற்றிலும் அழித்து கடைசியில் சக்தியற்றதாகச் செய்து விடுவதென்பதுதான் இந்த அமைப்புகளின் அபிப்பிராயம்.

நடவடிக்கை தெளிவுபடுத்தும்.

இப்பேர்ப்பட்ட விரிவான தற்காப்பு ஏற்பாடுகள், உயர்தரமான 25 டிவிஷன் துருப்புகளுடையவும் அவைகளுக்கு உபபலமான ஏராளமான சலனப்படையினுடையவும் பலத்துடனுமிருக்கும்பொழுது பிளக்க முடியாதவையென்று நாஸிகள் நம்பியிருக்கிருர்கள்.

ஆகிலும், வருங்காலத்தில் கூடிய சீக்கிரத்தில் விமான மூலமாகவும், தரை மூலமாகவும் பலமான தாக்குதல்கள் செய்வதாக நேசதேசத்தார்கள் திட்டம் போட்டு அதன் பிரகாரம் நடைபெறும்பொழுது, இந்தத் தற்காப்பு அரண்கள் நிலைநிற்குமாவென்று தெரிந்து கொள்ளலாம்.

மாகினே அரண் விழுந்ததுபோல், இந்த அரண்களும் ஹிட்லரின் கண் முன்னுலேயே விழுந்துவிடும். அந்த வீழ்ச்சிக்குப்பின் ஹிட்லருக்கு வெகு சீக்கிரத்தில் அதோகதி ஏற்பட்டுவிடும்.

மேற்குப்பக்கத்தில் பலஹீனம் ஏற்படாமலிருப்பதற்காக நாஸிகள் 1918-வருஷத்தில் வான்ஹிண்டன்பர்க் கட்டிமுடித்த அரணை மறுபடியும் திருத்தி அமைத்திருக்கிருர்கள். மாகினே அரணையும், திருத்தியமைத்து, குறைவுபாடுகளைச் சரிப்படுத்தி அதிலிருந்த பீரங்கிகளை மேற்குப் பக்கம் நோக்கி வைத்திருக்கிருர்கள். ஜெர்மனியிலும், ஸீக்பிரிட் அரணிருக்கிறது. பிரிடிஷ்—பிரெஞ்சுக்காரர்கள் படையெடுக்காமல் தடுப்பதற்காக யுத்தத்துக்குமுன் இந்த அரணை ஹிட்லரின் தொழிலாளர்கள் ஏராளமான பொருள் செலவிட்டு பலமாகக் கட்டியிருக்கிருர்கள். நான் இந்த அரண்களையெல்லாம் பார்த்திருக்கிறேன். இவைகள் மிகவும் பலமானவை. விமான மூலமாகவும், தரை மூலமாகவும் இவைகளைத்தாக்கி நொருக்கி விடலாமென்று எனக்கு நம்பிக்கையிருந்தாலும் மற்ற நான்கு திசைகளில் ஒன்று அல்லது பல மார்க்கங்கள் மூலமாக மகத்தான படையெடுப்பு ஏற்பட்டால் நேசதேசங்களுக்கு மனித நஷ்டமும், பொருள் நஷ்டமும், குறைவுபடுமென்று எனக்குத் தோன்றுகிறது.

இதாலி வழியாகப் பாய்ச்சல்.

இதாலிக்குக் குறுக்கே திடுக்கிடும்படியாகப் பாய்ந்து டால்மேஷியாவின் கடற்கரையை நாம் அடைந்துவிட்டால் நாஸி கவசத்தில் மிகவும் பலஹீனமான பாகத்தில் பிளவு ஏற்பட்டுவிடும்.

இதாலியின் குதிபாகமே பலஹீனமானதுதான். நேசநாடுகள் அங்கே துருப்புகளை இறக்கிவிட்டால் அந்நாட்டில் பலமான புரட்சி உண்டாகிவிடும். தெற்கு ஐரோப்பாவிலும் அரண்களை அமைக்க நாஸிகள் விசேஷப் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். ஆனால், அவகாசம் குறைச்சலாகயிருக்கிறது. நாஸிகள் இந்தப் பந்தயத்தில் தோல்வி பெற்றுவிடுவார்கள். தெற்கு பிரான்ஸ் வழியாகத் துருப்புகள் சென்றால், அட்லாண்டிக்கடல் ஓரத்திலும், பிரிடிஷ் கால்வாய் ஓரமாகயுள்ள பிரெஞ்சுக் கடற்கரை ஓரத்திலுமுள்ள ஜெர்மன் அரண்களுக்குப் பின் நேசதேசப்படைகள் வந்துவிடும். அதே சமயத்தில் டால்மேஷியா கரையிலிருந்து வடக்கு முகமாக மற்றொரு சேனை முன்னேற ஆரம்பித்தால் ஜெர்மனிக்குச் செல்லுவதற்கு அச்சுநாடுகளுக்கு விரோதிகளாகயிருக்கும் தேசங்கள் வழியாக ஒரு விசாலமான மார்க்கத்தை கற்பித்து விடலாம்.

நாஸிகளின் அடிவயிறு பக்கத்தில் தாக்குவது.

மத்தியதரைக்கடலிலுள்ள கேந்திர ஸ்தானங்களிலிருந்து அச்சுநாடுகளின் அடிவயிறு போலிருக்கும் நாடுகளை நாம் பலமாகத் தாக்கினால் பால்கன் நாடுகளில் நேசதேசத்தாருடன் ஒத்துழைப்பும், அவர்களுக்கு வரவேற்பும் நிச்சயமாக ஏற்பட்டுவிடும். ஹிட்லரை கிரேக்கர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு எதிர்க்கக் காலத்தை பிரதீக்ஷித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கிளம்பிவிட்டால் யூகோஸ்லாவியாவிலும் அங்கிருந்து ஸெகோஸ்லாவோகியாவிலுமுள்ள நாடுகளிலும் புகைந்துகொண்டிருக்கும் கிளர்ச்சி ஜ்வலிக்க ஆரம்பித்துவிடும். தெற்கு ஐரோப்பாவிலிருந்து நேசதேசத்தாரின் பலமான தாக்குதல் ஏற்படும்பொழுது ஹிட்லரை எதிர்த்து நிற்கக்கூடிய அநேக கொரில்லாப்படைகள் கிளம்பிவிடும்.

மத்தியதரைக்கடலிலிருந்து வடக்குமுகமாக ஜெர்மனிக்குச் செல்லக்கூடிய மார்க்கங்களையெல்லாம் தாண்டி ஹிட்லர் பத்திரமாக ஊன்றிக்கொண்டிருக்கிறான். 1941-ம் வருஷத்தில் அமெரிக்கப் பத்திரிகை நிருபர் என்ற முறையில் நான் பால்கன் நாடுகள் வழியாக ஆதென்ஸுக்குச் சென்ற ஜெர்மன் துருப்புகளுடன் சென்றேன். கிரேக்கக் கடற்கரையிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்லக்கூடிய படையெடுப்பு சேனைகள் 14 கணவாய்களைத் தாண்டிச் செல்லவேண்டும். ஒவ்வொரு கணவாயிலும் ஹிட்லர், பலமான அரண்களை அமைத்திருக்கிறான். இந்த மார்க்கத்தில் மிகவும் வலிமையுள்ள அரண்கள் பல்கேரியா—கிரீஸ் எல்லைச்சரகத்தில் பழைய மடாக்ஸாஸ் பிராந்தியத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகிலும், கிரேக்கத் துறைமுகமான ஸலோனிகா வழியாகச் சென்று அந்த அரண்களைச் சுற்றிக் கொண்டுபோய்விடலாம்.

டான்யூப் நதிப் பள்ளத்தாக்கு வழியாகத்தான் மத்திய ஐரோப்பாவுக்கும் இதர நாடுகளுக்கும், வியாபாரமும், ராணுவமும் செல்லவேண்டும். 1941-ம் வருஷம் நடைபெற்ற யுத்தத்தில் யூகோஸ்லாவியர்கள் விசாலமான டான்யூப் நதியில் கட்டப்பட்டிருந்த ஒவ்வொரு பாலத்தையும் வெடிகுண்டுகளை உபயோகப்படுத்தி தகர்த்துவிட்டார்கள். ஜெர்மானியர்கள் அவைகளுக்குப் பதிலாக படகு பாலங்களைக் கட்டி அவைகளை உபயோகித்து வந்தார்கள்.

சிரமசாத்யமான நடவடிக்கை.

பால்கன் நாடுகளிலிறங்கி முன்னேறித் தாக்குவதென்றால் நேசதேச இஞ்சினியரிங் படைகள் அவர்கள் இதுவரையில் அனுபவித்திராத மிகவும் கஷ்டசாத்தியமான வேலையிலீடுபடவேண்டும். டான்யூப் நதி வழியாக வரும் மார்க்கத்தை ரக்ஷிப்பதற்காக ஜெர்மானியர்கள் அங்கேயும் பலமாக கோட்டைகளைக் கட்டி அமைத்திருக்கிறார்கள்.

துருக்கிக்கு பிரதம மந்திரி சர்ச்சில் விஜயம் செய்தபின் அச்சுநாடுகளைத் தாக்குவதற்கு இன்னும் சில மார்க்கங்கள் தோன்றியிருக்கின்றன. துருக்கி நேசநாடுகள் கக்ஷியில் சேர்ந்துவிடுவதாக தீர்மானித்துவிட்டால் பால்கன் நாடுகள் வழியாக அச்சுநாடுகளைத் தாக்கும் திட்டத்துக்கு அதிக ஆதரவு கிடைத்துவிடும். கிரீஸ் வழியாக தாக்குதல் செய்வதுடன் ருமேனியா வழியாக மற்றொரு தாக்குதலையும் செய்யக்கூடும். இந்த மார்க்கத்தின் வழியாக ஏற்படக்கூடிய தாக்குதல், ஹிட்லருக்கு எண்ணெய் பெரும்பாலும் ஸப்ளை செய்யும் போலஸ்தி எண்ணெய் பிரதேசங்களுக்கு ஆபத்து விளைவித்துவிடும்.

இயற்கையான ரஸ்தா.

ஜெர்மனிக்கு, ருமேனியா, ஹங்கேரி, ஆஸ்திரேலியா வழியாகச் செல்லுவதுதான் பூகோள அமைப்பிலும், ராணுவ முறையிலும் இயற்கையான மார்க்கம். கிரீஸ் வழியாகவும், ருமேனியா வழியாகவும் ஒன்றுபட்ட நேசதேசத் தாக்குதல் ஏற்பட்டால் குறைவான அவகாசத்துக்குள்ளாகவே அச்சு நாடுகளுக்கு அதோகதி ஏற்பட்டுவிடும்.

ஜெர்மன் சேனைகளுடன் நான் சென்றபொழுது தெரிந்துகொண்டமட்டில் பால்கன் நாடுகள் மூலமாகச் சென்று அச்சுநாடுகளைத் தாக்கவேண்டுமானால் நேசதேசத்தாருக்கு

ஆகாய ஆதிக்கம் அத்யாவசியமானது. விமான பலத்தின் உதவிகொண்டுதான் ஜெர்மானியர்கள் பால்கன் நாடுகளில் முன்னேற முடிந்தது. அதே விதமாகத்தான் நேசதேசங்கள் ஐரோப்பாவுக்குள் நுழைய முடியும்.

தெற்குப் பக்கத்திலும், வடக்குப்பக்கத்திலும் படையெடுப்பதற்கு நேசதேசத்தார்கள் திட்டங்கள் போட்டால் அது உயர்வான ராணுவ யுத்த தந்திரமாகும். அவ்விதம் செய்தால், ஹிட்லருக்குப் பிடித்தமானதான, மகத்தான இடுக்கித் தாக்குதலை நேசதேசத்தார்கள் செய்ததாகும்.

வடக்கேயிருந்து தாக்குதல்.

வடக்கேயிருந்து தாக்குதல் செய்வதென்பது நார்வே வழியாகவும், ஸ்வீடன் வழியாகவும் நடைபெறக்கூடியது. விரிவாகக் கோட்டைகளை அமைத்து நார்வே கடற்கரையை நாஸிகள் தற்காப்பு செய்திருக்கிறார்கள். ஆகிலும், நேசதேசத்தார்களின் பலமான தாக்குதலும், உள்நாட்டில் ஏற்படக்கூடிய கலகமும் சேர்ந்துவிட்டால் நாஸிகளின் காலை வெட்டியது போலாகிவிடும். அதன் மூலம் ஜெர்மனிக்குத் தோல்வி நிச்சயமாய் ஏற்பட்டுவிடும்.

நார்வே வழியாக முன்னேறும் துருப்புகள் பூப் பிரதேசத்தினுடையவும், போக்குவரவு மார்க்கங்களுடையவும் அபரிமிதமான கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும். இந்த மார்க்கத்தில் ஜெர்மானியர்கள் இடைவிடாது கோரமான யுத்தம் செய்வார்கள். ஏனென்றால் நேசதேசப்படைகள் நார்வே மூலமாக டென்மார்க்குக்கும், பால்டிக் கடலுக்கும் முன்னேறிவிட்டால், கியல், வில்ஹெம்ஷாவனிலுள்ள மகத்தான கப்பல் கட்டும் தளங்களுக்கு அபாயம் நேரிட்டுவிடும். மேலும், அவ்விதம் நேசதேசப்படைகள் முன்னேறிவிட்டால் பால்டிக் நாடுகளிலிருந்து ஜெர்மானியர்கள் பின்வாங்க நேரிடும். அப்பொழுது செம்படை பலமாகத் தாக்கி ஜெர்மானியர்களை அழிக்கக்கூடிய நிலைமை உண்டாகிவிடும்.

இதுவரையில் விவரித்த எந்த மார்க்கத்தின் வழியாகச் சென்றபோதிலும், கிழக்குப் பக்கத்திலுள்ள போர்முனையிலிருந்து வலையான படையெடுப்பும் நடைபெறக்கூடும். நேசதேசப்படையெடுப்புகள் திடீரென்று ஏற்பட்டுவிட்டால் கிழக்குப் பக்கத்திலிருந்தும் ஹிட்லரைத் தாக்கக்கூடிய நிலைமை உண்டாகிவிடும்.

ஆகையினால்தான் மத்தியக் கிழக்கிலுள்ள நேசதேசப்படைகள் நாஸிகளைப் பின்வாங்கும்படி செய்வதற்காக செம்படையுடன் சேர்ந்துகொண்டு போர்புரியக்கூடும்.

கிழக்குப் பக்கத்திய அரண்.

இந்தச் சங்கடத்தை நிவர்த்திப்பதற்காக, இரண்டு வருஷங்களுக்கு முன்னரே ஹிட்லர் கிழக்குப் பக்கத்திய அரண் என்று சொல்லக்கூடியதும், கிழக்குப் போலந்து வழியாக கிழக்கு பிரஷியா வரையிலும் செல்லும் பலமான கோட்டைகளுள்ள தற்காப்புகளைக் கட்டி முடித்திருக்கிறான். இந்த இடங்களில் அடைபட்டுவிட்டால் நாஸிகள் ஒவ்வொரு அங்குலப் பிரதேசத்தையும் பாதுகாக்கப் பலமாகச் சண்டை போடுவார்கள்.

எனவே, ஹிட்லரைத் தாக்குவதற்கு ஐந்து தெளிவான மார்க்கங்களிருக்கின்றன. ரூஸ்வெல்டும், சர்ச்சிலும் வெளியிட்ட அபிப்பிராயங்களின் நுட்பமான பாகங்களையும் ஹேஷ்யங்களையும் மதித்துப் பார்த்தால், படையெடுப்புச் செய்யப்போகும் நேசதேசப் படைகள் மேலே சொல்லிய ஒன்று அல்லது அநேக மார்க்கங்களையும் உபயோகிக்கக் கூடுமென்று தோன்றுகிறது.

நாஸிகளின் கொடுங்கோன்மையின் கீழ் தவித்துக்கொண்டிருக்கும் ஐரோப்பிய நாடுகளெல்லாம் ஹிட்லர் சாம்ராஜ்யத்தின் உள்நாட்டுக் கோட்டை நொருக்கப்படும்பொழுது கலவரம் செய்யத் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உலக ஆதிக்கம் பெறவேண்டுமென்று அடிக்கடி கனவு கண்டுகொண்டிருக்கும் ஜெர்மனியை அழிப்பதற்கு கிளர்ச்சிகள்தான் பொங்கிவரும் அலைகள் போன்றவை. எந்த மார்க்கத்தின் சிரமங்களையும் பொருட்படுத்தாமலும், மனிதர் நஷ்டத்தையும், பொருள் நஷ்டத்தையும் லக்ஷியம் செய்யாமலும் கடைசியாக ஜெர்மனியைத் தாக்கும் மார்க்கம் நிச்சயமாய்த் தோன்றிவிடும்.

நேசதேசப் படையெடுப்பைத் தவிர்க்க ஹிட்லர் எல்லா அரண்களையும் பலப்படுத்திவைக்கமுடியாது. அவன் சாத்தியமான வரையில் முயற்சி செய்தே தீருவான். கிழக்கிலோ, மேற்கிலோ, வடக்கிலோ, தெற்கிலோயிருக்கும் மார்க்கத்தில் ஒன்றின் வழியாக ஏற்படும் படையெடுப்பின் மூலமாக ஹிட்லர் வீழ்ச்சிபெறுவான்.

ஐரோப்பாவில் நேசதேசத்தாருக்கு மகத்தான வெற்றி கிடைப்பதற்கு ஜெர்மனியைத் தாக்க ஹிட்லர் விசாலமான மார்க்கத்தையும் திறந்துவிடுவான்.

நேசதேசத்தார்களுக்குப் பூர்ணமான வெற்றி சமீபித்துவிட்டது.

(விக்ஹாம் ஸ்டீட்.)

ஸிஸிலியில் இறங்கின 39 நாட்களுக்குப்பின் நேசதேசத் துருப்புகள் ஸிஸிலி பூராவையும் கைப்பற்றி விட்டார்கள். மெஸ்ஸினாவும் விழுந்துவிட்டது. இதாலியானது நேசதேசத்தாரின் பீரங்கிக் குண்டுவீச்சுக்குள் வந்துவிட்டது. இதாலியில் சமீபத்தில் படையெடுப்பு ஏற்படலாம். சரணடைவதா அல்லது நேசதேசப்படையினாலும், உள்நாட்டு நடவடிக்கைகளினாலும் அபரிமிதமான நஷ்டத்தை அனுபவிப்பதா என்பதை தீர்க்காலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது இதாலியின் பொறுப்பாகும்.

ரோம் நகரத்தை ராணுவ ரக்ஷணையற்ற நகரம் என்று மார்ஷல் படோக்ளியோ சொல்லி வருவது மூன்றாவது நடவடிக்கையென்று கருதினால் அதை நேசதேச நிர்வாகங்கள் அங்கீகாரம் செய்ய மாட்டார்கள். ரக்ஷணை வல்லரசுகளின் மேன்பார்வைக்குட்பட்டு ரோமில் உள்ள ராணுவத்தை பூராவாக அப்புறப்படுத்துவதற்குக் காலதாமதம் ஏற்படும். அரசாங்க காரியாலயங்களும் இதாலிய, ஜெர்மானிய ராணுவ ஸ்தாபனங்களும் எல்லாம் வெளியேறவேண்டும். அதேசமயத்தில் யுத்தமும் இடைவிடாது நடைபெற்றுவரும்.

படோக்ளியோவின் யோசனையை, இதாலிய அரசாங்கத்துக்கும் இதாலியிலிருக்கும் ஜெர்மன் சேனைகளுக்கும் அவகாசம் சம்பாதித்துக்கொள்ள தந்திரமான முறையென்றும், அல்லது பூர்ணமான சரணாகதி செய்வதற்கு ஒரு உபாயமென்றும் பிரிடிஷார்கள் நினைக்கிறார்கள்.

இதாலிக்கு இப்பொழுது நேசநாடுகளும் யாதொரு அவகாசமும் கொடுக்ககூடாது. இதாலி, இப்பொழுது சரண் புகுறவேண்டும். அல்லது படோக்ளியோவின் ஆலஸ்யத்தினால் மிலானும், டூரினும் அழிவுபெற்றதுபோல யுத்த முயற்சியிலீடுபட்ட தொழிற்சாலைகளையும் ராணுவ போக்குவரவு மார்க்கங்களையும் ஆபத்துக்குள்ளாக்கி விடவேண்டும்.

இதாலியர்கள் தாமதமன்னியில் சரண்புகுந்தால்தான் ஜெர்மன் ராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து தப்பித்து விடலாம். ஜெர்மானியருக்கு எல்லா பக்கங்களிலும் ஆபத்துண்டாகி விட்டது. ருஷ்யர், வேனிர்கால முன்னேற்ற யுத்தத்தில் ஜெர்மனி 1941-ம் வருஷம் முதல் பாதுகாத்துவந்த பிரதேசங்களையெல்லாம் மீட்டுக்கொண்டு வருகிறது. மூன்று மாதங்களுக்குள் 90 ஜெர்மன் யூ படகுகளை நேசதேச விமானங்களும், யுத்தக் கப்பல்களும் மூழ்கடித்திருக்கின்றன.

ருமேனியாவில் போலஸ்தியிலுள்ள எண்ணெய் சுத்திகரிக்கும் ஸ்தாபனங்களை அழித்த அமெரிக்க வெடிவிமானங்கள் பவேரியாவில் ரெகென்ஸ்பர்க்கிலுள்ள விமான உற்பத்தி தொழிற்சாலையையும், வியன்னாவுக்கு சமீபத்திலுள்ள வீனர் ந்யூஸ்டாட்டையும் நாசம் செய்துவிட்டன. ஹாம்பர்க், கொலோன், ரூர் முதலிய பிரதேசங்களை அழித்தபின் பிரிடிஷ் விமானங்கள் ந்யூரம்பர்க்கை நொருக்கிவிட்டன. ஸிஸிலியில் நேசதேசத்தார் வசமுள்ள விமான தளங்களிலிருந்தும் இதாலியில் இப்பொழுதிருக்கும் விமான தளங்களிலிருந்தும் பல்கேரியா, ஹங்கேரி, ஆஸ்திரியாவிலுள்ள அச்சு நாட்டு சாமான் நிலயங்களும், தற்காப்புஸ்தலங்களும் விமானங்களின் குண்டுவீச்சுக்குட்பட்டுவிடும். ஜெர்மன் நகரங்களைவிட்டு ஓடிக்கொண்டிருக்கும் மிலியன்கணக்கான பொதுமக்களிடம், ஜெர்மானியத் துருப்புகள் ஜெர்மனிக்கு அப்பால் ஆயிரக்கணக்கான கிலோமீடர்கள் தாண்டிப் போர்புரிந்து வருகின்றன என்பது ஜெர்மனியின் பாக்கியம் என்று சொல்லி அவர்களை ஆச்வாசப்படுத்த ஜெர்மன் பிரசாரர்கள் முயன்று வருகிறார்கள். ஹாம்பர்க், கொலோன், பெர்லின் முதலிய இடங்களில் வசித்த ஜனங்கள் இந்த வாதத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

ஸிஸிலியைப் பிடித்த சந்தோஷத்துடன் கியூபெக்கில், நடைபெறும் ராணுவ, ராஜீய மகாநாட்டின் முடிவுகளைப்பற்றி அறிந்து கொள்ளவும், பிரிடிஷ் மக்கள் ஆவலுள்ளவர்களாகயிருக்கிறார்கள். ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டும் கியூபெக் மகாநாட்டில் கலந்துகொண்டு விட்டபடியால், பொதுப்படையான ஒரு அறிக்கை வெளிவரக்கூடும். ஆகிலும், அந்த முடிவுகள் நேசதேசத்தாரின் நடவடிக்கை மூலம்தான் வெளிப்படுமென்றும் வீண்பேச்சைவிட காரியாம்சையில் தான் அவைகள் காண்பிக்கப்படுமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

நேசநாடுகளின் தாக்குதலை மதித்தும், எந்த இடத்தில் தாக்குதல்கள் ஏற்படக்கூடுமென்று திடமான தோற்றமேற்படாததாலும் ஜெர்மனியின் மனித பலமும், தளவாட உற்பத்தியும் பலமாக அதிகரிக்கப்படும்.

பூர்ணமான தோல்வி உண்டாகிவிடுமென்று ஏற்பட்டுவிட்டதால் ஜெர்மன் துருப்புகளின் கடைசிப் பிரயத்தனமாகப் போர்புரியக்கூடிய ஊக்கத்தையும் அல்லது ஜெர்மன் வலிமையையும் குறைவாக மதிப்பதாக பிரிடனுக்கும், அமெரிக்காவுக்கும், ருஷ்யாவுக்கும் உத்தேசமில்லை. ஆகிலும் ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ஸிஸிலித் தோல்வியை ஜெர்மனிக்கு மகத்தான வெற்றியென்று சொல்லுவதைக்கண்டு ஜனங்கள் ஆச்சரியமடைகிறார்கள். தோல்வியை ஒப்புக்கொண்டால் தேசமக்களின் மனோநிலை குன்றிவிடுமாதலால் அவ்விதம் சொல்லுவதற்கும் ஞாயமிருக்கிறது.

நேசதேசத் துருப்புகள், ஸிஸிலிய யுத்தம் நீடித்து நடக்குமென்றும் நடைபெற்றதற்கு மாறாக மிகவும் சிரமசாத்தியமாகயிருக்கக்கூடுமென்றும் எதிர் பார்த்தார்கள்.

வருங்காலத்திய யுத்த தந்திரத்தில் வெகுதூரம் சென்று வெடிகுண்டுகளை வீசுவதின் இலாக்கியத்தையும் புரக்கணித்துவிட முடியாது. பிரிடனிலுள்ள தளங்களிலிருந்து புறப்பட்டு பிரிடிஷ் விமானங்கள் டேரின், மிலான் போன்ற நகரங்களையும், மத்தியக் கிழக்கிலும், வட ஆபிரிக்காவிலும் உள்ள தளங்களிலிருந்து புறப்பட்டு அமெரிக்க விமானங்கள் ருமேனியா, ஆஸ்திரியா போன்ற தேசங்களையும் பஸிபிக் மகா சமுத்திரத்தில் ஆஸ்திரேலிய தளங்களிலிருந்து புறப்பட்டு 2,500 மைல்கள் சென்று போர்னியாவையும், தாக்கிவிட்டுத் திரும்பி வரக்கூடுமென்று ஏற்பட்டுவிட்டபொழுது ஐரோப்பாவிலும், தூரக்கிழக்கிலுமுள்ள எந்த அச்சுநாடு நிலயமும் விமானத் தாக்குதல்களிலிருந்து நாசத்தை அடையாமலிருக்க முடியாது.

வெகுதூரம் சென்று தாக்குவதென்பது தனிப்பட்ட நடவடிக்கையல்ல. அல்லது ஆடம்பரத்துக்காகவும் நடைபெறவில்லை. இவைகள் ஒன்றுபட்ட யுத்த தந்திர முறையை அவலம்பித்திருக்கின்றன. விமானப்படையின் உயர்வு அதிகரித்து வருவதால் இந்த அம்சமும் நேசதேச யுத்த முறைகளின் நிரந்தரமான நடவடிக்கையாகிவிடும். இந்தத் தாக்குதல்கள் இனிமேல் நடைபெறப்போகும் நடவடிக்கைகளுக்கு முற்போக்கானவை. ஏராளமான விமானங்கள்மூலம் தாக்குதல் செய்வதற்கு பர்த்தியானவையல்ல. உண்மையில் வெகுதூரம் செல்லும் விமானங்களும் கூட்டமாகச்சென்று தாக்கும் என்பதை இவைகள் சூசிப்பிக்கின்றன. அட்லாண்டிக்கடலில் ஜெர்மன் நீர்மூழ்கிகளுக்குப் பெருந்தோல்வி ஏற்பட்டுவிட்டதுடன் இவ்வகைப்பட்ட விமானத்தாக்குதல்களும் சேர்ந்து ஜெர்மனிக்கு உண்டாகியிருக்கும் கஷ்டங்களை அதிகப்படுத்திவிட்டன. மகத்தான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் போகும் சமயம் வந்துவிட்டதென்று ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொல்லியிருக்கிறார். தற்போதிய நிலைமையையும், வருங்காலத்திய சம்பாவிதங்களையும் மதித்துப் பார்த்தால் இந்த ஜோஸியம் நிஜமென்றுதான் உறுதிகூறவேண்டும். நேசநாடுகளுக்குப் பூராவாக வெற்றி கிடைத்துவிடவில்லை. ஆகிலும் ஸிஸிலிய யுத்தம் ஆரம்பித்தபொழுது அமைதியுள்ள மக்கள் எதிர்பார்த்ததற்கு அதிகமாகவே அச்சு நாடுகளுக்குப் பெருந்தோல்வி கிட்டிவிட்டதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

ஸிஸிலி வெற்றியின் விளைவுகள்.

ஸிஸிலி யுத்தம் முடிவடைந்துவிட்டதால் லண்டனிலுள்ள வியாக்யானிகள் பின்கண்ட விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார்கள் :—

(1) ஸிஸிலி யுத்தத்தின் முடிவு ஐரோப்பிய அரணின் ஒரு பகுதியில் நடைபெற்ற யுத்தத்தின் முடிவைக் குறிப்பிடுகிறது.

(2) வருங்காலத்திய சண்டைகளுக்கு அந்த யுத்தம் அடையாளம் காட்டக்கூடியதில்லை. ஸிஸிலியின் பூப்பிரதேசத்தின் அமைப்பினால் இருதரப்பாரும் விசேஷமாக டாங்கிகளை உபயோகப்படுத்தக்கூடவில்லை. ஸிஸிலியில் இரண்டு பயிற்சிபெற்ற காலாட்படைகள் துவந்துவ யுத்தம் செய்தன. நேசதேசப் படைகளின் உயர்வு இந்த யுத்தத்தின் விளைவாக மறுமுறை வெளியிடப்பட்டது. காலதாமதம் ஏற்படுவதற்காக ஜெர்மானியர் போர் புரியும் முறைகள் மற்றொரு முறை பலிக்காமல் போய்விட்டன.

(3) மகத்தான சைனியங்களின் சலனம் நடைபெற முடியாதென்று நினைத்த பிரதேசத்தில் வெற்றி சீக்கிரம் கிடைத்துவிட்டதென்பது புகழத்தக்கது.

ஸிஸிலி யுத்தத்தின் பயனாக வருங்கால யுத்த கால நடவடிக்கைகளுக்கு மூன்று படிப்பினைகள் உண்டாகியிருக்கின்றனவென்று லண்டனிலிருக்கும் வியாக்யானிகள் சொல்லுகிறார்கள்.

1. **பொதுப்படையானது**.—நேசதேசத்தாரிடம் கடல் பலம் அதிகமாயிருக்கிறதென்றும், ராணுவ அதிகாரிகளின் அபிப்பிராயப்படி எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் துருப்புகளை இறக்க முடியுமென்றும் புலப்பட்டுவிட்டது. அதேவிதமாக எதிரிகளுடையதைவிட நேசதேச விமானப்படை அதிக உயர்வானதென்றும், எதிரியின் ஏராளமான விமான தளங்களிலிருந்து போர்புரியும் விமானங்களின் வட்டாரத்துக்குட்பட்ட பிரதேசத்திலும் துருப்புகளை இறக்க அவைகள் தற்காப்பு செய்ய முடியுமென்றும் வெளியாகிவிட்டது. எதிர்ப்பு யுத்தம் துவக்கமாகுமுன் அச்சு நாடுகளின் விமான தளங்களை நேசதேச விமானப்படை தவிடுபொடியாக்கியிருக்கின்றன என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக, ஸிஸிலியையும், இதாலியையும் விமானப்படை துண்டித்துவிட்டு பெரிய கப்பல்கள் நடமாட முடியாமலும் துறைமுகங்களையும், கப்பல்களையும் தகர்த்துமிருக்கின்றன.

2. **யுத்த தந்திரம்**.—முதல்முதலாக ஸிஸிலிய யுத்தத்தில்தான் நேசதேச குடைப்படைகள் உபயோகப்படுத்தப்பட்டன. அவைகளை வ்யூகரசனை செய்யும் முறைகளும் இங்குதான் கற்றுக்கொள்ளப்பட்டன.

வசதிக் குறைவு ஏற்பட்டிருந்தபோதிலும், சகலவிதமான யுத்த முஸ்தீப்புகளுடனும் ஒரு பெரிய தரைப்படையை படகுகள் மூலமாக எதிரியின் நாட்டில் இறக்கிவிடலாமென்பதும் ஸிஸிலி யுத்தம் நிரூபித்துவிட்டது. படையெடுப்பு சமயத்தில் காற்று பலமாக அடித்துக்கொண்டிருந்ததென்றும், கடல் பொங்கிக்கொண்டிருந்ததென்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

ஸிஸிலியைக் கைப்பற்றியதிலிருந்து ராணுவ முறையிலும், சில முக்கியமான, பலன்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்று லண்டனிலுள்ள வியாக்யானிகள் எழுதியிருக்கிறார்கள்.

(1) டூனிஸியாவைப் பிடித்தபொழுது மத்தியக் கிழக்குக்கும், தூரக்கிழக்குக்கும் செல்லும் மத்தியதரைக்கடல் மார்க்கத்தின் ஒரு விலாப்பக்கம் ரக்ஷிக்கப்பட்டுவிட்டதென்று நினைத்தோம். மற்றொரு விலாப்பக்கமும் இப்பொழுது பலமாகக் காப்பாற்றப்பட்டுவிட்டது.

(2) பிரிடனுடைய மூழ்கடிக்கமுடியாத நிரந்தரமான விமானம் தாங்கிக் கப்பல்கள் போன்ற பிரதேசங்கள் அதிகரித்துவிட்டன. மால்டாவும், பிரிடனும் இப்பேர்ப்பட்ட ஸ்தலங்கள். ஸிஸிலி மூன்றாவது விமானந்தாங்கி நிலயம்.

மத்திய, வடக்கு இதாலியிலுள்ள லக்ஷியங்களுக்கு முன்னிருந்ததைவிட சிறிது சமீபத்தில்தான் நேசதேச விமானப்படை வந்திருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. ஸிஸிலிய தளங்களிலிருந்து புறப்படும் விமானங்கள் பாரி, பிரிண்டிஸி, டாரண்டோ போன்ற தெற்கு இதாலிய நகரங்களுக்கு மால்டாவிலிருந்து வரக்கூடிய விமானங்களைவிட 140 மைல்கள் சமீபத்திலும் பிஸர்ட்டாவிலிருந்து வரக்கூடிய விமானங்களைவிட 250 மைல்கள் சமீபத்திலும் இருக்கின்றன. அதேவிதமாக நேசநாடுகளிடமிருந்து மேற்கு பால்கன நாடுகளுக்கும் அபாயம் அதிகரித்துவிட்டது.

(3) இதாலிக்குச் சமீபத்தில் நேசதேசப் படைகள் குவிந்திருப்பதின் முக்யத்வத்தைப் பற்றி எதிரி பின்வருமாறு சொல்லியிருக்கிறான். மெஸ்ஸாகெரோ என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "இதாலிக்கும், ஐரோப்பா கண்டத்துக்கும் பலமான தற்காப்பு நிலயமாக இருப்பதுதான் ஸிஸிலியின் முக்கியமான பிரயோஜனம்". ட்ரான்ஸ் ஓஷன் என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது. "பிரிடிஷ், அமெரிக்க வெற்றி கிடைக்கவேண்டுமானால் ஸிஸிலியின் ஆக்கிரமணம் மிகவும் அத்தியாவசியமானது." இதாலியை இப்பொழுது நேசநாடுகள் நிச்சயமாய் தாக்குவார்களென்று எதிரி எதிர்பார்க்கக்கூடும்.

கடைசியாக ஸிஸிலி வெற்றியிலிருந்து ராஜீய முறையில் இரண்டு பலன்கள் கிடைத்துவிட்டன.

(1) ஐரோப்பிய அரணில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் ஜனங்கள் நேசதேசத் துருப்புகளை வரவேற்கத் தயாராயிருக்கிறார்களென்பது ஸ்பஷ்டமாகிவிட்டது.

(2) ஜெர்மனியுடன், முஸோலினி ஏற்படுத்திக்கொண்ட நட்பை படோக்ளியோவும் தொடர்ச்சியாக நடத்திவருவதால் இதாலிக்கு இடைவிடாது மேன்மேலும் அதிக ஆபத்துகளை வரவழைத்துக்கொள்ளுகிறனென்று லண்டனிலுள்ள வியாக்யானிகள் சொல்லுகிறார்கள். ஸிஸிலி போய்விட்டது. இதாலிய தேசத்தை நேர்முகமாகத் தாக்கக்கூடிய வசதி நேசநாடுகளுக்கு ஏற்பட்டுவிட்டது. விமானங்களிலிருந்து பலமான குண்டு வீச்சுகளும் நடைபெறுகின்றன. படோக்ளியோ நிர்வாகம் இதாலியின் ஐச்வர்ய நிலைமை, பொருளாதார நிலைமையில் நெருக்கடியை உண்டுபண்ணிவிட்டது. யுத்தக் கொடுமைகளை அனுபவிக்காமல் இதாலிய மக்கள் தப்பித்துக்கொள்ளவேண்டுமானால் படோக்ளியோ நிர்வாகத்தைச் சரணடையும்படி செய்வதுதான் சிறந்த முறையென்று லண்டனிலுள்ளவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

யூ-படகு நஷ்டங்களைக்கண்டு வியசனம்.

5,000 ஜெர்மன் குடும்பங்கள் துக்கிக்கிறார்கள்.

(*A. J.* மாக்வின்னி.)

யூ படகுகளின் பிரயோஜனமின்மையின் உண்மையையும் யூ படகுகளின் நஷ்ட விவரங்களையும் ஜெர்மானியர்கள் நன்கு அறிந்துவிட்டார்களென்று நிச்சயமாய் புலப்படுகிறது.

யூ படகுகளின் நிலைமையைப்பற்றி ஜெர்மனி பூராவிலும் வியசனம் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் ஹிட்லரின் கடைசி யுத்த முஸ்தீப்பான யூ படகுகள் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகளில் தோல்விபெற்றது ஒன்று. சென்ற சில வாரங்களில் யூ படகுகளிலிருந்து அநேக வாலிபர்கள் உயிர் துறந்தார்களென்பது மற்றொன்று.

யூ படகுகளின் நஷ்டத்தைவிட மனிதர்களின் நஷ்டம்தான் முக்கியமானது. ஹாம்பர்க் நொறுக்கப்பட்டுவிட்டாலும் ஹிட்லரும் அவனுடைய கடற்தளபதிகளும் மற்ற ஒரு இடத்தில் ஏராளமான தளவாடங்களை உற்பத்திசெய்து நஷ்ட ஈடு செய்துவிடலாம். ஆகிலும், இறந்தவர்களுக்குப் பதிலாக புத்திகூர்மையும், பயிற்சியும் அனுபவமுமுள்ள மாலுமிகளைத் தயாரிப்பது சிரமசாத்யமான வேலை.

பிரிடிஷ், அமெரிக்க அதிகார வர்க்கத்தார் சொல்லுகிறபடி, மே, ஜூன், ஜூலை மாதங்களில் 90 யூ படகுகள் நஷ்டமாகிவிட்டனவென்று சொல்லும்பொழுது, யூ படகு நஷ்டத்துடன் 4,000 தேர்ச்சிபெற்ற மனிதர்களும், உயிர் துறந்தார்களென்பதையும் நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

புதிய சிரமங்கள் உண்டாகிவிட்டன.

ஒரு யூ படகில் சராசரி 45 பேர்களிருப்பார்கள். இந்த அளவில் கணக்கிட்டால் 90 யூ படகுகளிலும், 4,000-க்கு மேற்பட்ட மனிதர்களிருக்கவேண்டும். ஆகிலும், 90-க்கு மேற்பட்ட யூ படகுகள் மூழ்கியிருக்கக்கூடுமென்று உத்தியோக முறையில் வெளியிடப்பட்டிருப்பதால் யூ படகுகளிலிருந்த வேலைக்காரர்களின் நஷ்டம் 5,000-க்கு எட்டிவிடுமென்பதில் சந்தேகமில்லை.

ஜெர்மனி பூராவிலுமுள்ள 5,000 குடும்பங்கள் இறந்துபோன யூ படகு மாலுமிகளைக் குறித்து துக்கம் கொண்டாடுகிறார்களென்று இதிலிருந்து சொல்லலாம். இவ்விதமான அவகேடுகளை ஜனங்களிடமிருந்து மறைத்துவைக்க முடியாததால் ஜெர்மன் பிரசாரர்கள் இதுவரையில்லாதபடி உண்மையை உறைக்க ஆரம்பித்து ஜெர்மானியர்கள், புதிய ஆயுதங்களையும், புதிய யுத்த தந்திரங்களையும், புதிய கடல் விமான பலத்தையும் எதிர்த்துச் சண்டைபோடவேண்டியிருக்கிறதென்று சொல்லிவருகிறார்கள்.

யூ படகுகளின் வேலைக்காரர்களின் மனோதிடம் நிலைகுலைந்துவிட்டதென்பதற்கு அத்தாக்ஷி ஏற்பட்டுவிட்டதென்று நான் சொல்லவில்லை. யூ படகுகளின் வேலைக்காரர்கள் வாலிபமுள்ளவர்கள். அவர்கள் ஹிட்லர் வாலிபச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால், நாஸிகளைப்போல் வெறிபிடித்தவர்களாகப் பயிற்சியளிக்கப் பெற்றிருக்கிறார்கள்.

முதல் மூன்று வருஷ யுத்தத்தில் யூ படகுகளில் வேலை செய்துவந்த மனிதர்களுடன் இப்பொழுது வேலை செய்து வருகிறவர்களை ஒப்பிட்டால் சாதுர்யத்திலும், அனுபவத்திலும்

இன்றைய வேலைக்காரர்கள் இழிவானவர்களென்றுதான் முதல்தரமான அனுபவத்தை ஒட்டி நான் சொல்லுகிறேன். மேலும், அவர்கள் எவ்வளவு வெறிபிடித்தவர்களாயிருந்த போதிலும் அவர்களுடைய நம்பிக்கைக்கு பங்கம் ஏற்பட்டிருக்கக்கூடும்.

சமீபகாலத்தில் நேசதேசக்கடல் இலாகா அறிக்கையை கவனித்தால் யூ படகுகள் சமுத்திர மார்க்கங்களில் வெகுதூரத்தில் பரவலாக நடமாடிக்கொண்டிருக்கின்றனவென்று தோன்றுகிறது. அட்லாண்டிக்கின் தெற்கு வெளிகளிலும், ஆபிரிக்காவின் மேற்குக் கரைக்கு அப்பாலிலும், பிரேஸில் கடற்கரைக்குச் சமீபத்திலும், நன்னம்பிக்கை முனையைச்சுற்றிலும் இந்துமகா சமுத்திரத்திலும் யூ படகுகளின் நடவடிக்கைகள் அதிகரிக்கும் என்று நான் வெகு காலமாகச் சொல்லிவந்திருக்கிறேன்.

அவ்விடங்களில் வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் உண்டாகக்கூடிய அபாரமான அபாயங்கள் நேரிடாது என்று நினைத்து சுலபமாக வெற்றிபெற்று விடலாமென்று யூ படகுக்காரர்கள் நினைத்து வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட தூரமான கடல்களிலும், நேசதேச சாமான் கப்பல் கூட்டங்களுடன் செல்லும் துணைக்காவல் கப்பல்களுக்கு உப பலமாக ரக்ஷணைப்படைகள் அனுப்பப்படும் என்று நான் நினைக்கிறேன். வடக்கு அட்லாண்டிக்கிலும், மத்தியதரைக்கடலுக்குப் போகும் மார்க்கங்களிலும் பலமான கடல் யுத்தம் நடைபெற வேண்டுமென்றும், இந்தக் கடல் மார்க்கங்களில் ஏற்படக்கூடிய எவ்விதமான அபாயங்களையும் எதிர்க்க கடற்படை தயாராகவிருக்க வேண்டுமென்றும் பிரிடிஷ் கடற்படை இலாகா நிச்சயம் செய்துவிட்டது.

ஜெர்மன் யுத்தக் கப்பல்களின் சோம்பேறித்தனம்.

யூ படகுகளின் நிலைமையைவிட கடற்படையின் விவரணம் மகத்தானது. ஜெர்மனியின் பெரிய யுத்தக் கப்பல்கள் அட்லாண்டிக் சமுத்திரத்துக்கு வந்துகொண்டிருக்கின்றனவென்று நடுநிலைமை வகிக்கும் நாடுகளில் ஜெர்மனி பொய் வதந்திகளைக் கிளப்பிவிட்டிருக்கிறது. ஒன்றுபட்டு எல்லாக் கப்பல்களும் கூட்டமாக சமுத்திரத்தில் சலித்துக்கொண்டிருக்கின்றன என்பதை நான் நம்பவில்லை. ஆகிலும், தனிப்பட்ட கொள்ளைக் கப்பல்கள் நடமாடக்கூடு மென்பதை நாம் மறுக்கமுடியாது.

ஆகிலும், திருத்தியமைப்பதற்காக ஜெர்மன் யுத்தக் கப்பல்கள் பால்டிக் கடலுக்குச் செல்லக்கூடுமென்று எதிர் பார்க்கலாம். இதை ஆதாரமாகக்கொண்டு கப்பல்களைச் சேர்ந்த வேலைக்காரர்கள் இனிமேலாவது போர்புரிய தங்களுக்கு சந்தர்ப்பம் வாய்த்துவிடுமென்று நினைத்திருக்கலாம். ஜெர்மன் கடற்தளபதிகள் இந்த மனோபீஷ்டத்தை அறிந்திருக்கக் கூடும். துறைமுகத்தில் யுத்தக் கப்பல்களை நிறுத்தி வைத்திருந்தால் கலகமும், சச்சரவும் தான் ஏற்படுமென்பதை பழைய சரித்திரக்கதைகள் அவர்களுக்கு வெளிப்படுத்தி யிருக்கின்றன.

நேசதேசத்தாரின் கப்பலாதிக்கம்.

இச்சமயத்தில் இரு தரப்பாரின் கடற்படையின் நிலைமை பின்வருமாறு.

1. யூ படகுகள் மற்றொரு தடவை தோல்வியடைந்து விட்டதால், மறுபடியும் போர் புரிய தங்களாலியன்றதை அவைகள் செய்யக்கூடும்.

2. கடல் மார்க்கமாக ஏற்பட்ட படையெடுப்புகளைத் தடுப்பதற்கு ஜெர்மன் கடல் தளபதிகள் யாதொரு உபாயத்தையும் கண்டுபிடித்துவிடவில்லை. ஸிஸிலியின்பேரில் படையெடுத்தபொழுது நேசநாடுகளுக்கு மிகவும் குறைவான நஷ்டங்கள் ஏற்பட்டதைக் கண்டு அவர்கள் நடுக்கமடைந்துவிட்டார்கள்.

3. மூன்று மாதங்களாக யூ படகுகளின் அழிவும், மத்தியதரைக்கடலில் நேசதேசத் தாரின் நடமாட்டமும் சேர்ந்து போர்புரிவதற்கு அவசியமான ஏராளமான நேசதேசக் கப்பல்கள் தயாராக இருக்கும் நிலைமையை உண்டுபண்ணிவிட்டன.

4. யுத்தம் ஆரம்பித்தது முதல் இப்பொழுதுதான் ஜெர்மனியின் கடலாதிக்கம் பலஹீனமடைந்தும் நேசதேசங்களின் கடலாதிக்கம் அதிக வலுவடைந்துமிருக்கிறது.

ஆகிலும், இறுதி வெற்றிபெற நாம் கடுமையான போர் நடத்தவேண்டும். எதிரிகளை முடிவாக முறியடிப்பதற்காக நேசதேசத்தார்கள் இப்பொழுது யுத்தம் நடத்திவருகிறார்கள்.

கொலை பாதகர்களுக்கு சாபம்.

(A. காமிலேவ்).

முஸ்லீம் ஜாதியார்.

கெர்ச்சைப் பிடித்துக்கொண்ட தினத்தன்றே ஜெர்மானியர்கள் பலமாகக் கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். என்வசமிருந்த 50 கிலோகிராம் உள்ள மாவையும், இரண்டு சாக்கு உருளைக்கிழங்கையும், ஆறு கோழிக் குஞ்சுகளையும், வெண்ணெயையும், என்னுடைய பையனுடைய ஆடைகளையும் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். இதுதான் ஆரம்பம்.

மறுநாள் ஜெர்மானியர்கள் நாங்கள் குடியிருந்த விடுதிகளைச் சட்டி பீரங்கிக்குண்டுகளால் தகர்த்தனர். பிறகு எங்கள் குடிசைகளுக்கு இரண்டு பக்கத்திலும் நெருப்பு வைத்தார்கள். வீட்டிலிருந்தவர்களைத் துரத்தியடித்தார்கள். நாஸிக் கக்ஷிக்காரர்கள் என்னையும், என்னுடைய 18 வயதுப் பையனையும் கைதிசெய்தார்கள். எங்களை ஒரு பள்ளத்தில் அடைத்து வைத்தார்கள். பிறகு மறுநாள் வரையில் ஸ்திரீகளும், குழந்தைகளும் விடுதலை செய்யப்பட்டார்கள். பாக்கியிருந்த எங்களையும், 12 வயதுள்ள சிறுவர்களையும் ஜெர்மானியர்கள் காமிஷ்பர்னுக்கும் பிறகு கெர்ச்சுக்கும் அழைத்துச் சென்றார்கள். கெர்ச்சில் ரகஸியப் போலீஸின் கட்டடத்தின் கூடத்தில் எங்களை அடைத்துவைத்தார்கள். அங்கு ஒரு ஜெர்மானியர் வந்து ருஷ்ய பாஷையில் பேசினார். "நீங்கள் எல்லோரும் காவல் முகாமுக்குச் செல்லவேண்டும். தப்பியோட முயற்சிக்கிறவர்களைச் சுட்டுவிடுவோம்" என்று சொன்னார்.

பிறகு எங்களை ஜெயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். போகும்வழியில் நடுத்தெருவில் எங்களைப் பரிசோதனை செய்து எங்களிடமுள்ள பணம், கத்திகள், பொருமானமுள்ள சாமான்கள், பெல்டுகள் எல்லாவற்றையும் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு எங்களில் 62 பேர்களை ஒரு அறையில் அடைத்துவைத்தார்கள். மறுநாள் காலையில் 7-மணிக்கு எங்கள் அறையிலிருந்த 30 பேர்கள் வெளியே கொண்டுபோகப்பட்டார்கள். நானும், என்னுடைய மகனும் அந்த கோஷ்டியிலிருந்தோம். நாஸிகள் எங்களை மோட்டார் லாரியில் ஏற்றி நாங்கள் தலை குனிந்த மாதிரியாகவேயிருக்கவேண்டுமென்றும், தலையைத் தூக்கி வெளியே நோக்கினால் சுட்டுவிடுவோமென்றும் உத்தரவிட்டனர். எங்களுக்குக் காவலாக இரு போலீஸ்காரர்கள் டாமி துப்பாக்கியுடன் தயாராகயிருந்தனர். விமானதளத்தைத் தாண்டி நாங்கள் சென்ற பொழுது மோட்டார் ஓட்டுகிறவர் வண்டியை நிறுத்தினார். ஒரு அகிழிக்குச் சமீபத்தில் ஜெர்மானியர்கள் ஜனங்களைச் சுட்டுக்கொல்லுவதை நாங்கள் கண்ணுற்றோம். லாரியிலிருந்து எங்களை இறங்கச்சொல்லி பத்துப்பேர்களாகக் குழிக்குக்கொண்டுபோனார்கள். நானும், என் மகனும் முதல் கோஷ்டியில் சேர்ந்திருந்தோம். நாங்கள் அகிழை நோக்கி நின்றுகொண்டிருந்தோம். ஜெர்மானியர்கள் எஙகளைப் பின்புறமிருந்து சுடத்தயாராகயிருந்தனர். என்னுடைய குமாரன் திரும்பிப் பார்த்து பின்வருமாறு உரக்கக் கத்தினான். "நீங்கள் ஏன் பொது மக்களைச் சுட்டுக்கொல்லுகிறீர்கள்"? ஆகிலும், வேட்டுச் சப்தம் கேட்க ஆரம்பித்தது. என் மகன் குழிக்குள் விழுந்தான். அவன் இறந்துவிட்டானென்று நினைத்து நானும் குழிக்குள் குதித்தேன். அதன் பிறகு அநேக சவங்கள் என்பேரில் விழுந்தன.

அன்று மூன்று மணி சுமாருக்கு ஒரு சிறுவன் எழுந்திருந்து "உயிருடனிருப்பவர்கள் எழுந்திருங்கள்; ஜெர்மானியர்கள் போய்விட்டார்கள்" என்று உரக்கக் கத்தினான். போலீஸ்காரர்களின் உத்தரவின்பேரில் அப்பையன் அவ்விதம் கத்துகிறானென்று நினைத்து நான் தலை தூக்கப் பயப்பட்டேன். மறுபடியும் அச்சிறுவன் கத்தினான். இதன்பின் என்னுடைய பையன் எழுந்திருந்தான். நான் உயிருடன் இருக்கிறேனா என்று என் மகன் கேட்டான். எனக்கு ஒன்றும் சொல்ல நாவெழவில்லை. தலையை மட்டும் அசக்கினேன். என்னுடைய மகனும், அச்சிறுவனும் என்னைச் சவங்களின் மத்தியிலிருந்து தூக்கினார்கள். இன்னும் அநேகர் உயிருடனிருந்தார்கள். அவர்களும் உதவி செய்யுங்கள் என்று கத்தினார்கள். சிலர் காயம்பட்டிருந்தார்கள். சவங்களுக்கடியில் நான் கிடந்தபொழுது ஸ்திரீகளும், குழந்தைகளும் அழுவதைக் கேட்டேன். எங்களை ஒழித்தபின் ஜெர்மானியர்கள் விருத்தாப்பியமுள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும சுட்டுக்கொன்றார்கள். அகிழிலிருந்து எட்டுப்பேர் வெளியேறினோம். எங்கள் தேகம் பூராவிலும் ரத்தம் சிதறிக்கிடந்தது. எங்களுடைய ஆடைகளிலும், ஜோடுகளிலும் ரத்தம் தோய்ந்திருந்தது. நாங்கள் பல பகுதிகளாகப் பிரிந்து சென்றோம். நானும், என்னுடைய பையனும், மருமகனுமான ஆல்லிமான் அலிமாவும், டாடார்ஸ்கி சர்ஸ்பாஷ் என்னும் கிராமத்துக்குச் சென்று இரவைக் கழித்தோம்.

ஜெர்மன் கொலை பாதகர்கள் எங்கள் கிராமத்திலுள்ள 400 பேர்களைக் கொலை செய்திருக்கிறார்கள். ஜெர்மன் நாஸிக் காட்டுமிராண்டிகள் செய்த அக்ரமங்களையும், விளைவித்த கொடுமைகளையும் நான் ஒருபொழுதும் மறக்கமாட்டேன்.

என்னுடைய மகன் செம்படையில் சேர்ந்துவிட்டான். எங்களில் கொலையுண்ட பந்துக்களுக்கும், அண்டை வீட்டுக்காரர்களும், கொர்ச் ஜனங்களுக்கும் எங்களுக்கு அவர்கள் விளைவித்த சகலவிதமான துன்பங்களுக்கும் ஜெர்மானியர்களைப் பழிக்குப் பழி வாங்கி வட்டியுடன் அவர்களுக்கு என் மகன் பதில் செய்துவிடுவான்.

இந்தியாவின் முதல்தரமான மாலுமிகள்.

ஸிஸிலிய யுத்தத்தில் இந்தியக் கடற்படையின் திறமை.

பிரிடனிலுள்ள கடற்படையை மாக்ஷிமை தங்கிய மன்னர்பிரான் பார்வையிட்டபொழுது இந்தியக் கடற்படையைச் சேர்ந்த கோதாவரி என்ற கப்பலையும் பார்வையிட்டு, அநேக யுத்த அரங்கங்களில் இந்தியக் கடற்படை செய்திருக்கும் தீரச்செய்கைகளைப் பாராட்டி கௌரவமளித்தார். கடற்படையின் ஒத்திகைகள் நடக்கும்பொழுது அவைகளுக்குத் தலைமை வகிக்கும்படியாக கோதாவரிக் கப்பலுக்குக் கட்டளையிட்டு கௌரவமளித்தது மூலம் இந்தியக் கடற்படைக்கே விசேஷ கௌரவம் உண்டாகியிருக்கிறது. ஸிஸிலிய யுத்த நடவடிக்கைகளில் இந்தியக் கடற்படை விசேஷப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது.

ஸிஸிலிய நடவடிக்கையின் ஆரம்பத்தில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள் கடல்தாண்டி ஸிஸிலிக்குச் சென்ற 8-ம் படையை ஏற்றிச் சென்ற கப்பல்களுக்குத் துணையாகவும், துருப்புகள் இறங்கும்பொழுது ஆகாயத்திலிருந்தும், கடலிலிருந்தும் அவைகளுக்கு அபாயம் ஏற்படாமலும் தற்காப்பு செய்வதற்கும் சென்றிருக்கிறது. பத்திரமாக துருப்புகளும், சாமான்களும் இறங்கியபின் துருப்பேற்றிச் சென்ற கப்பல்களை அபாயமுள்ள பிராந்தியங்களிலிருந்து வெளியேற்றும் வேலையிலும் துணைக்கப்பல்களாகவும் சேவை புரிந்தன.

அதற்குப்பின் மற்ற தேசங்களின் கடற்படையுடன் கலந்துகொண்டு ஸிஸிலியத் துறைமுகங்களுக்கு ஏராளமான கப்பல்களை பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கின்றன. சமீபத்தில் கிடைத்த தகவல்களிலிருந்து, ஸிஸிலியத் துறைமுகத்திலிருந்த கப்பல்களின் பேரில் எதிரி விமானங்கள் குண்டுகளைப் பொழிய பிரயத்தனம் செய்தபொழுது இந்தியக் கப்பல்கள் போர் புரிய ஆரம்பித்தனவென்று இந்தியக் கடற்படை அப்ஸர்வர் சொல்லியிருக்கிறார். எதிரிகள் சந்தராஸ்தமன சமயத்தில் தாக்க ஆரம்பித்தார்கள். காலை 4-மணி முதல் விடியற்காலம் வரையில் இந்தியக் கடற்படையைச் சேர்ந்த பீரங்கிப் படையினர் நூற்றுக்கணக்கான குண்டுகளைப் போட்டார்கள்.

ஆபீஸர்களும், கப்பல் வேலைக்காரர்களும் நல்ல ஸ்திதியிலிருக்கிறார்கள். முதல்தரமான அனுபவம் பெற்றிருப்பதால் எதிரியை மென்மேலும் பலமாகத் தாக்கிவருகிறார்கள். அவர்கள் அதிக ஊக்கமுள்ளவர்கள். தாங்கள் ஈடுபட்டிருக்கும் வேலையை இடைவிடாது நடத்த வேண்டுமென்பதுதான் அவர்களுடைய கோரிக்கை.

டெயிஹாங்க்ஷான் யுத்தம்.

ஜெனரல் பாங்க் பிங்க்ஸன் சரணடைந்து விட்டானென்பதாகப் பொருள்படும்படியாக ஜப்பானியர்கள் ஏராளமான பிரசாரம் செய்துவருகிறார்கள். முக்கியமாக அந்த ஜெனரல் தன்னுடைய பூரா சேனையுடன் வந்து சரணடைந்தானென்று சொல்லப்படுகிறது. பலமாகக் கீழே விழுந்து அடிபட்டதால் நடக்கமுடியாமலிருந்தபொழுது ஜெனரல் பாங்க் பிடிபட்டாரென்றும், ஜப்பானிய முற்றுகையைப் பிளந்துகொண்டு துருப்புக்களின் பெரும் பாகம் வெளியேறிவிட்டனவென்றும் சீனர்கள் உத்தியோக முறையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

டெயிஹாங்க்ஷான் தேசமானது கரடுமுரடான வரக்ஷயான பூமி. அங்கே உணவுப் பொருள்களின் விளைவு அதிகம் கிடையாது. சென்ற $5\frac{1}{2}$ வருஷகாலமாக அங்காட்டிலுள்ளவர்கள் வறுமையினால் அதிகக் கஷ்டப்பட்டார்கள். ஹோபேயிலும், ஹோனானிலும்

சென்ற வருஷம் மழை பெய்யாததால் நிலைமை அதிகக் கேவலமாகிவிட்டது. 40-வது படையின் தளகர்த்தரும் ஜெனரல் பாங்குக்குப்பின் ஹோபேயின் தாத்காலிக கவர்னராக வேலைபார்த்துவரும் ஜெனரல் மாபாவுவின் அபிப்பிராயப்படி டெயிஹாங் போரில் யுத்தத்தின் நிலைமை பாதகமாகிவிட்டதற்கு உணவுப்பொருள் குறைவுதான் முக்கிய காரணமென்று புலப்படுகிறது.

எதிரி ஏப்ரல் மாதக் கடைசியில் தாக்க ஆரம்பித்தான். ஜப்பானியத் துருப்புகள், விமானங்களின் தாக்குதல்களை 10 நாட்கள் வரையில் முற்றுகைக்குட்பட்டவர்கள் சமாளித்து வந்தார்கள். 10 நாட்கள் கோரமான யுத்தம் நடைபெற்றபின் ஜப்பானியப் படை வரிசைகளைப் பிளந்துகொண்டு எதிரிக்குப்பின்புறம் சென்று யுத்தம் செய்யவேண்டு மென்று ஜெனரல் பாங்க் தீர்மானம் செய்துவிட்டான்.

ஜெனரல் பாங்கின் தலைமைக் காரியாலயத்திலுள்ள ஹோபே மாகாண சர்க்காரைச் சேர்ந்த பொதுமக்களையும் அதிகார வர்க்கத்தாரையும் நகரத்தைவிட்டு வெளியேற்றுவதில் சங்கடம் ஏற்பட்டது. அச்சமயத்தில் ஜப்பானிய வேவு பார்க்கும் விமானங்கள் ஆகாயத்தில் வட்டாரமிட்டுக்கொண்டிருந்தன.

“சூரியனைவிட அதிகமான விமானங்களை நாங்கள் கண்ணுற்றோம்” என்று ஜெனரல் மா சொன்னார். இராக்காலங்களில்தான் ஜனங்கள் நடமாட முடிந்தது. மலைப் பிராந்தியங்களி லுள்ள பாதைகள் வழியாக ஏராளமான ஜனங்கள் செல்லவேண்டியிருந்ததால் ஒரு இரவில் தினசரி சராசரி ஐந்து மைல்கள்தான் செல்ல முடிந்தது.

சைனு மக்களுக்கு இன்னும் உணவு பிரச்னை கவலையை உண்டாக்கிற்று. நல்ல தண்ணீர் கிடைப்பதும் கஷ்டமாகி விட்டது. கடைசியில் சீனர்கள் குதிரைகளையும், கழுதைகளையும் கொன்று அவைகளை உட்கொள்ளும்படி நேரிட்டது. ஜப்பானிய வெடிகுண்டுகளால் கொல்லப்பட்ட மிருகங்களை அவர்கள் துண்டாடி பக்குவப்படுத்தி ஆகாரத்திற்கு உபயோகப் படுத்தினார்கள்.

டங்க்சுவான்ஸோவில் ஒரு பலமான சண்டை நடந்தது. அதில் ஈடுபட்ட ஹோபே மாகாண நிர்வாகத்தைச் சேர்ந்த தற்காப்புப் பட்டாளம் பூராவும் அழிவு பெற்றது. ஜப் பானியர்கள் போய்க்கொண்டிருக்கும் படைகளைப் பின்பற்றிச் சென்றார்கள். எதிரியின் குண்டுவீச்சிலிருந்து தப்பித்துக்கொள்ளுவதற்காக ஜெனரல் பாங்க் துருப்புகளை ஒரு உன்னத மான பர்வத சிகரத்தை நோக்கிக்கொண்டு போனான்.

துரதிருஷ்டவசமாக அவர்கள் வழிதப்பி வந்துவிட்டார்கள். அன்று இருட்டு அதிகம். மலைச்சரிவு செங்குத்தானது. கைப்பற்றுதலாக சீனர்கள் கீழே இறங்க ஆரம்பித்தார்கள். அங்கேயும் மலைக்குன்றுகள் குறுக்கிட்டன. குறுகலான மலைப்பாதையை விட்டு சீனர்கள் தடுமாறி விட்டார்கள். உடனே அநேக சீனர்கள் மலையிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள்.

ஏற்கனவே, ஒரு காயம் ஏற்பட்டு அதிலிருந்து ஒரு கால் முடமாகி விட்டதால் ஜெனரல் பாங்கை “முடமான ஜெனரல்” என்று அழைப்பார்கள். இப்பொழுது மலையிலிருந்து விழுந்தபின் அவரால் சலிக்க முடியவில்லை. ஆகையால், அவனுடைய மெய்க்காப்பாளர்கள் ஒரு குகையைக் கண்டுபிடித்து, கால்பட்டிகளைச்சேர்த்து ஒரு கயிர் தயார் செய்து, ஜெனரலை யும், அவருடைய குமாரரையும் அவருடைய மெய்க்காப்பாளரையும் குகைக்குள் தூக்கி விட்டார்கள். அவர் கடைசியாகத் துருப்புகளுக்கு உத்தரவிட்டார். “என்னுடைய நஷ் டத்தை மறந்து விடுங்கள். யுத்தத்தை விடாமுயற்சியுடன் நடத்துங்கள். சென்ற ஆறு வருஷங்களாக கியாதியுடன் போர்புரிந்து வந்த சேனையின் புகழை நிலைநாட்டுங்கள்” என்று சொன்னார்.

ஜெனரல் மாவும், அவருடைய துருப்புகளும் ஜப்பானிய முற்றுகையைத் தாண்டி இறுதியில் வெளியே சென்றனர். ஜப்பானியப் படை வரிசைகளுக்குப்பின் சென்று அவர்கள் ஜப்பானியர்களைத் தாக்கினார்கள். முற்றுகைக்குட்பட்ட டெயிஹாங்க் மலைப்பிராந்தியத்தி லிருந்து வெளியேறிய சீனப்படைகள் இரண்டு வாரங்களுக்குள் ஜப்பானியப்படைகளை ஒன்றன்பின் ஒன்றாகத் துரத்தியடித்தனர். ஆனால், வயது முதிர்ந்த சீன தளகர்த்தர் ஜப்பானியர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, கைதி செய்யப்பட்டார்.

ஏப்ரல், மே மாதங்களில் வெற்றிகரமாக முடிவு பெற்றது என்று சொன்ன யுத்தத்துக்கு இரண்டு மாதங்களுக்குப்பின் டெயிஹாங்க் மலைப் பிரதேசத்தை மறுமுறை ஜப்பானியர்கள் தாக்கியதிலிருந்து, அங்கிருக்கும் சீனர்களின் தைரியமும், ஊக்கமும், சிறந்த யுத்த முறை களும் புகழ் பெற்றுவிட்டன.

(A)

1943-ம் வருஷத்திய ஜவுளித்துணி, நூல் சம்பந்தமாக உற்பத்தி செய்பவர்கள் போடவேண்டிய அடையாளங்கள்.

1. ஜவுளித்துணி முத்திரை :—(*a*) ஒவ்வொரு பீஸின் இரு தலைப்பிலிருந்தும் ஒரு கெஜத்துக்கு மேல் போகாத ஸ்தலத்தில் ஒவ்வொரு உற்பத்தி செய்பவரும் கீழே குறிப்பிடப் பட்டிருக்கும் முத்திரையைப் போடவேண்டும்.



(*b*) இந்த முத்திரையின் ஆத்யந்த குறுக்களவு $1\frac{1}{2}$ அங்குலத்துக்குக் குறைவுபடக்கூடாது.

(*c*) இந்த முத்திரையிலுள்ள எண்கள் $\frac{1}{4}$ அங்குலத்துக்குக் குறையாத கனமுள்ளதாகவும் எழுத்துக்கள் $\frac{1}{8}$ அங்குலத்துக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

(*d*) அந்த முத்திரைக்குள் **XXX** என்று அடையாளமிட்ட ஸ்தலத்தில் உற்பத்தி செய்பவன் நம்பர் அச்சிடப்படவேண்டும்.

(*e*) துணியை மூட்டைகட்டும் மாதமும், வருஷமும் $\frac{1}{2}$ இஞ்சு கனத்துக்குக் குறையாத எழுத்துக்களிலோ அல்லது எண்களிலோ முத்திரைக்கடியில் எழுதப்படவேண்டும்.

2. (*a*) **நெசவு நூல் உற்பத்தி :**—நெசவு நூல்களை மூட்டைகளாகக் கட்டியபின் ஒவ்வொரு மூட்டையின் மத்தியிலும் 4 அங்குலத்துக்குக் குறையாத குறுக்களவுள்ள மேலே சொல்லப்பட்ட முத்திரையுள்ள காகித லேபிள் ஒட்டப்பட வேண்டும்.

(*b*) அதிலிருக்கும் எண்களும், எழுத்துக்களும் $\frac{1}{2}$ இஞ்சு கனத்துக்குக் குறையக் கூடாது

(*c*) முத்திரைக்குள் XXX என்று அடையாளமிட்ட இடத்தில் உற்பத்தி செய்பவன் தனிப்பட்ட நம்பர் போடப்பட வேண்டும்.

(*d*) முத்திரைக் கட்டில் பாக் செய்யப்படும் மாதமும், தேதியும் $\frac{1}{2}$ இஞ்சு கனமுள்ள எண்களிலோ அல்லது எழுத்துக்களிலோ அச்சிடப்பட வேண்டும்.

(B)

அதிகப்பக்ஷ விலை.

No.	துணி விவரம்.	அகலம்-அங்குலம்.	நீளம்-கெஜம்.	எடை-ராத்தல்.	நூலின் நம்பர்.				மில் டெலிவரிக்கான அதிகப்பக்ஷ விலை.			
									ரூ.	அ.	ப.	
1	சலவை மல் ...	43	20	...	40	50	52	44	12	7	0	(1 பீஸ்)
2	காரிக்கம் லாங்க்லாத் ...	43	38	...	30	40	64	64	27	4	9	,,
3	காரிக்கம் வியபாட் க்ளாத்.	43	38	$11\frac{1}{2}$	20	22	48	48	25	5	6	(1 பீஸ் அல்லது ரூ. 2–3–0 ரா.)
4	காரிக்கம் வேஷ்டி ...	44	10	...	70	90	64	56	7	12	9	(1 பீஸ்)
5	சலவை லாங்க்ளாத் ...	33	40	...	20	30	56	48	21	7	3	,,
6	கலர் பாப்ளின் ...	29	20	...	40	40	80	48	12	10	9	,,
7	சலவை நெக்ஷி வேஸ்டி...	46	8	...	70	90	64	52	6	7	3	,,
8	கலர் சேலைகள் ...	42	5	...	20	30	40	32	3	2	9	,,
9	சலவை மல் ...	48	20	...	32	36	64	44	13	2	6	,,
10	காரிக்கம் டிரில் ...	27	40	$14\frac{3}{4}$	12	10	75	42	24	6	0	(1 பீஸ் அல்லது ரூ.1–10–9 ரா.)
11	காரிக்சம் லாங்க்ளாத் (மார்க்கின் இதர அளவுகள்).	43	38	11	22	22	48	44	24	6	0	(1 பீஸ் அல்லது ரூ. 2–3–0 ரா.)
12	னாடின் ...	44 /45	$22\frac{1}{2}$	8	14	14	40	36	14	10	0	,,

No.		நூலின் விவரம்.		மில் டெலிவரிக்கான விலை 10 ரா. கொண்ட கட்டு 1-க்கு			
1	10s	மார்க்கெட்		ரூ	13	10	6
2	20s	,,		,,	17	8	9
3	30s	,,		,,	21	7	3
4	40s	,,	(இந்திய நூல்)	,,	25	5	6

(உற்பத்தி விபரங்கள் உற்பத்திக்காரர்களின் அறிவுக்காக எழுதப்பட்டிருக்கிறது).

குறிப்பு :—ஒவ்வொரு ரகத்திலும் முதல் தரமான நூலுக்குத்தான் இந்த விலை நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. உள்நாட்டு வியாபாரத்திற்காகத்தான் இந்த விலையும் தீர் மானிக்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்துக்குப்பின் உன்னுடைய லக்ஷியங்கள் என்ன ?

யுத்தம் முடிந்தபின் கடைகளிலெல்லாம் நியாயமான விலையுள்ள ஏராளமான சாமான்கள் குவிந்துகிடக்கும். யுத்த காலத்தில் தாராளமாகச் செலவு செய்தவர்களெல்லாம் அப்பொழுது வருத்தமடைவார்கள். ஏனென்றால் யுத்த காலத்தில் சாமான்களை வாங்குவதில் பொருளை உபயோகப்படுவது உபயோகமற்ற விநியோகம். யுத்தத்துக்குப்பின் உன்னுடைய சொந்த காரியங்களைப் பூர்த்திசெய்துகொள்ளுவதற்காக இன்று முதலே நீங்கள் பொருளைச் சேமித்து வைக்கவேண்டும். அத்தியாவசியமான செலவுகளைத் தவிர அனாவசியமான செலவுகளை நிறுத்திவிடவேண்டும். விலைவாசிகள் குறைவாக ஏற்படப் போகும் நாளை உத்தேசித்து பொருள் சேமிக்கவேண்டும்.

வருங்காலத்துக்காக மீதப்படுத்துங்கள்.

அநியாய லாபம் சம்பாதிக்கிறவர்களின் உபயோகத்துக்குப் பொருளை விநியோகம் செய்யாதீர்கள். யுத்தம் முடிவடையும் வரையில் பத்திரமாகயிருப்பதற்காகக் கூட்டுறவு சங்கங்களிலோ, அல்லது இன்ஸ்யூரன்ஸ் பத்திரங்களிலோ, பாங்கியில் ஸேவிங்க்ஸ் பாங்கு கணக்கிலோ, அல்லது போஸ்ட் ஆபீஸ் ஸேவிங்க்ஸ் பாங்கிலோ, அல்லது எல்லாவற்றிலும் சிறந்ததான அரசாங்கக் கடன் பத்திரங்களிலோ அல்லது சேமிப்புப் பத்திரங்களிலோ உங்கள் மீதத்தைப் போட்டுவிடுங்கள்.

தங்கம், வெள்ளி, நகைகள் அல்லது சாமான்களின் தற்போதிய விலைவாசியை உத்தேசித்து அவைகளில் பணத்தைப்போட்டு விடாதீர்கள். வெற்றி கிடைத்து வரும்பொழுது திடீரென்று விலைவாசிகள் இறங்கிவிடக்கூடியவை.

ஒரு நாளைக்கு, ஒரு ரூபாய் மீதப்படுத்தவேண்டும்.

உன்னுடைய பிராசீனமான உண்டியல் கலயத்தை மறுபடியும் ஏற்பாடு செய்யுங்கள். ஒரு நாளைக்கு ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட ரூபாயை மீதப்படுத்துங்கள். பிறகு மொத்த சேமிப்புத் தொகையைப் பத்திரமாக வட்டி கிடைக்கக்கூடிய மேலே சொல்லிய விநியோகங்களில் போட்டுவையுங்கள்.

குறிப்பு.

அஸ்ஸாமிலிருக்கும் புதுக்கோட்டை தொழிலாளர்களுக்கு கீழ்கண்ட விலாசத்துக்குக் கடிதங்கள் அனுப்பவேண்டும்.

"புதுக்கோட்டை ஸமஸ்தானத் தொழிலாளர் பகுதி No. 1,
c/o No. 6, முன்னணி பேஸ் போஸ்ட் ஆபீஸ்."

'வி' டயரி-1944.

(குறிப்பு புஸ்தகம்).

(அக்டோபரில் வெளிவரும்).

லினன் ரூ. 1—4—0 ; ஷீப்ஸ்கின் ரூ. 1—8—0 ; மொராக்கோ ரூ. 2—0—0.

தபால் செலவு (பிரத்தியேகம்) :—ரிஜிஸ்தர் புக் போஸ்ட்டில் முதல் காபிக்கு ரூ. 0—4—3 அத்துடன் சேர்த்து அனுப்பும் ஒவ்வொரு காபிக்கும் ஒவ்வொரு அணு.

காபிகளுக்கு முந்துங்கள்!

கீழ்க் கண்ட விலாசத்திலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.—

காரியதரிசி,

தேசீய யுத்த முன்னணி நிலயம்,

புதுக்கோட்டை (தென் இந்தியா).

புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் 162. (2-வது பிரிவு).

6- 9-43	திருவரங்குளம்	... மாலை	7.00
,,	வம்பன்	... ,,	7.30
7- 9-43	மழையூர்	... ,,	7.00
,,	கரம்பக்குடி	... ,,	7.30
8 -9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
,,	காலேஜ் A இங்கிலீஷ்	... ,,	10.45
8- 9-43	காலேஜ் B தமிழ்	... காலை	10.45
,,	ராமச்சந்திரபுரம்	... மாலை	7.00
,,	ராயவரம்	... ,,	7.30
9- 9-43	விராலிமலை	... ,,	7.00
,,	பொருவாய்	... ,,	7.30
10- 9-43	வாளரமாணிக்கம்	... ,,	7.00
,,	ஏம்பல்	... ,,	7.30

பிரஸங்கம் 163. (1-வது பிரிவு).

11- 9-43	முனிஸிபல் ஆபீஸ்	... மாலை	6.00
12- 9-43	நீர்ப்பழனி	... ,,	7.00
,,	ஆலூர்	... ,,	7.30
13- 9-43	காரையூர்	... ,,	7.00
,,	இடையாத்தூர்	... ,,	7.30
14- 9-43	வடவாளம்	... ,,	7.00
,,	செம்மட்டிவிடுதி	... ,,	7.30
15- 9-43	C. S. M. பள்ளிக்கூடம்	... காலை	10.00
,,	ராணி பெண் பாடசாலை	... ,,	10.45
15- 9-43	காலேஜ் A இங்கிலீஷ்	... காலை	10.45
,,	காலேஜ் B தமிழ்	... ,,	10.45
,,	நார்த்தாமலை	... மாலை	7.00
,,	உப்பிலியக்குடி	... ,,	7.30
16- 9-43	அண்டக்குளம்	... ,,	7.00
,,	கிள்ளனூர்	... ,,	7.30
17- 9-43	கொடும்பாளூர்	... ,,	7.00
,,	விராலூர்	... ,,	7.30

யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

4— 9—43	வெட்டம்விடுதி.
5— 9—43	ஏம்பல்.
6— 9—43	கீரனூர்.
7— 9—43	குடுமியாமலை.
8— 9—43	ராயவரம்.
9— 9—43	குழிபிரை.
10— 9—43	புதுக்கோட்டை.
11— 9—43	பொன்னமராவதி.
12— 9—43	கொடும்பாளூர்.
13— 9—43	விராலிமலை.
14— 9—43	வடகாடு.
15— 9—43	கீழாநிலை—புதுப்பட்டி.
16— 9—43	ஆலங்குடி.
17— 9—43	புதுக்கோட்டை.

யுத்தப்பாட்டு ந. 6.

நான்காம் ஆண்டு பிரார்த்தனை விழா.

By A. Ramaswami Ayyar (Member, N. W. F. B).

ஆனந்தக்களிப்பு.

காவடிப்பாட்டு மெட்டு.

1. இறைவனே யுனையேநாம் தொழுவோம்—யின்று
    குறைவின்றி யளித்திட்ட வெற்றிக்குத் தினமே
நிறைவான வாகை யருள்வாய்—மிக்க
    விரைவிலே முடிவான ஜெயமே தருவாய்.

2. நாஸிகள் மூட்டிய போரின்—நான்காம்
    ஆண்டைக் கொண்டாடவே கூடினோ மிங்கு
பாஸிக ளொழிந்திட்ட பின்னே—அவரே
    நாச மடைவதை நன்றா யுணர்ந்தார்.

3. ஆதியிற் பலதேசங் கூடி—சர்வ
    தேச மெனவொரு சங்கத்தைக் கூட்டி
நேசமாய் வாழவே நினைத்தார்—பின்பு
    அமைதி யெனவெண்ணி அயர்ந்தாரே சற்று.

4. சமய மிதுவெனக் கண்ட—துரோகி
    நாடுகள் **ஜெர்மனி ஜப்பா னித்தாலி**
மெள்ள மெள்ளப் பலநாளில்—மிக்கக்
    கள்ளத் தனமாய்க் கருவிகள் சேர்த்து.

5. பாய்ந்தாரே பலபக்க நாட்டில்—அதிலே
    பெற்ற வெற்றியினாலே பெருமையே பூண்டு
பாரினை முற்றுஞ் ஜெயிக்க—எண்ணிச்
    சுற்றம்போல் மூவரும் அச்சே திரட்டி.

6. மூட்டினா ரிப்போ ரதனை—உடனே
    சட்டுப் பட்டென்று சடுதியில் தாக்கி
பெற்றாரேப் பலவிட வெற்றி—இந்த
    ஆரம்ப வெற்றியா லடைந்தாரே மகிழ்வு.

7. மகிழ்வெல்லா மிகழ்வாகப் போச்சே—இன்று
    நேசக் கக்ஷியார் நெருங்கியே தாக்கி
தேசம் பலவற்றை மீட்டு—யின்னும்
    நாசம் செய்துவரும் வேலையைக் கண்டே.

8. ஓட்டம் பிடித்தானே **சோனி**—யிப்போ
    மாட்டிக் கொண்டல்லோ மயங்குறான் **ஹிட்லர்**
ஆட்டங்கொண் டலைகிறான் **டோஜோ**—விரைவில்
    காட்டுவோ மவனுக்குச் சரியான பாடம்.

9. ஜெய மெம தென்பது நிஜமே—அதிலே
    இனிநமக் கெவ்வித யைய்யமே வேண்டாம்
புரிவோமே பலவேலை போரில்—அதனால்
    அறிவோமே யுயர்தொழில் ஆருவத் துடனே.

10. யுத்தப் பயிற்சிப் பெறுவோம்—மேலும்
    கடற்போரே கற்றிட கப்பலி லமர்வோம்
ஆகாயப் போரிட அஞ்சோம்—எல்லாம்
    கற்குமித் தருணத்தைக் கைவிட மாட்டோம்.

11. தேச நன்மையை அடைவோம்—என்றும்
    நேசக் கக்ஷியுடன் நட்புடன் வாழ்வோம்
வீண்வாத மெல்லாமே விடுவோம்—தேசம்
    முன்னேற்ற மடையவே தொழிலெல்லாம் கற்போம்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,800—8-9-43.